வெளியீடு 26–3–1992

Issued 26–3–1992

# தமிழ்நாடு
## சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
### செயலக வெளியீடு

# TAMIL NADU
## LEGISLATIVE ASSEMBLY DEBATES

### OFFICIAL REPORT

திங்கட்கிழமை, செப்டம்பர் 16, 1991 - தொகுதி 7 - எண் 1

Monday the 16th September, 1991 - Volume 7 - No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Fort St. George
Madras-600 009

விலை ரு. 3.00]

[Price Rs. 3-00

வெளியீடு - ௨௬.௩.199௨

# தமிழ் நாடு சட்ட மன்றப் பேரவை நடவடிக்கைகள் செயலக வெளியீடு

தொகுதி - 7 எண் - 1

16.9.1991

D
V211,31 N91
1591.7.1
161492

## உள்ளடக்கம்

16—9—1991.


| | பக்கங்கள். |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | iii—viii |
| Personnel of the Government of Tamil Nadu | viii—x |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள், | xi— |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பட்டியல் (அகர வரிசைப்படி) | xiv—xxv |
| **1. வினாக்கள்-விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1—27 |
| **2. ஒத்திவைப்புத் தீர்மானம்—** | |
| 15—9—1991 அன்று தி.மு. கழகம் நடத்திய ஊர்வலம் மற்றும் பொதுக்கூட்டத்தின் போது நடைபெற்ற விரும்பத்தகாத சம்பவங்கள் குறித்து : | 27—36 |
| **3. கவன ஈர்ப்பு—** | |
| தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை, பேராவூரணி மின் கோட்டத்தில் தெரு விளக்குகள் எரியாதது குறித்து. | 36—40 |
| **4. மானியக் கோரிக்கைகள், 1991-92—விவாதமும், வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.** | |
| (அ) கோரிக்கை எண் 18—மருத்துவம். (ஆ) கோரிக்கை எண் 19—பொதுச் சுகாதாரம் | 40—149 |
| 1. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி | 40—42, 115—147 |
| 2. திரு. மா. சுந்தரதாஸ். | 42—50 |
| 3. *டாக்டர் (திருமதி) வெ. சரோஜா | 50—53 |
| 4. டாக்டர் தே. குமாரதாஸ் | 53—60 |
| 5. *திரு. கே. ஆர். ராஜு | 63—64 |
| 6. *திரு. பி. கலியபெருமாள் | 64—67 |
| 7. திரு. சி. சுவாமிநாதன் | 68—72 |

161492



பக்கங்கள்

உள்ளடக்கம்—தொடர்ச்சி


8. *திரு. வி. தம்புசாமி 72—76
9. செல்வி பி. நிர்மலா 76—79
10. டாக்டர் எம். கருப்புசாமி 80—84
11. திரு. நா. சா. பழனிசாமி 84—88
12. திருமதி ஜீனத் ஷெர்புதீன் 88—94
13. டாக்டர் சா. சுந்தரராஜ் 95—98
14. *டாக்டர் அ. ஸ்ரீதரன் 98—101
15. திரு. எஸ். திருநாவுக்கரசு 101—105
16. டாக்டர் அ. செல்லக்குமார் 105—114

(இ) கோரிக்கை எண். 29—

தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் 149—247
1. மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் 149—150, 225—246
2. *திரு. ஜி. கானன் 150—163
3. திரு. வெ. பழனிசாமி 163—170
4. திரு. செ. கு. தமிழரசன் 170—176
5. திரு. என். ஜி. வேணுகோபால் 176—179
6. திரு. ச. இராமச்சந்திரன் 180—185
7. திரு. கே. ஏ. மனோகரன் 186—188
8. திரு. சிங்கை கோவிந்தராசு 188—191
9. *திரு. ஏ. ரவிக்குமார் 192—194
10. டாக்டர் தே. குமாரதாஸ் 194—199
11. திரு. எஸ். எஸ். ராமசுப்பு 200—205
12. திரு. கே. குப்பன் 205—208
13. திரு. வி. தம்புசாமி 208—217
14. *திரு. சி. ஞானசேகரன் 217—224

5. அறிவிப்புகள்—

(அ) உறுப்பினர்களுக்கு '' டாம்கோ '' ஹேர் டானிக் மற்றும் முக '' கிரீம் '' வழங்குதல் குறித்து 61—62

(ஆ). பேரவையின் அலுவல்கள் 218

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள். 247—249

7. இணைப்புகள் 250—436




## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

ஆளுநர்— திரு. பீஷ்ம நாராயண் சிங்

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. முதலமைச்சர் .. மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா :

பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், இந்திய காவல் பணியாளர் மற்றும் அனைத்திந்தியப் பணியாளர்கள், மாவட்ட வருவாய் அதிகாரிகள், காவல், இலஞ்ச ஒழிப்பு, தொழில்கள், வணிக வரிகள், மதுவிலக்கு மற்றும் ஆயத் துறை, சர்க்கரைப் பாகு கழிவு, பிற்பட்டோர் நலம், சிறுபான்மையினர் நலம், அறநிலையத் துறை, செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்ப வியல், திரைப்படச் சட்டம், சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சுரங்கம் மற்றும் கனிம வளம்.

2. நிதி அமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

நிதி, திட்டம், தேர்தல்கள், சட்டமன்றம்.

3. சட்ட அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :

சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள்—அளவைகள் பற்றி சட்டம் இயற்றுதல், கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு நிதி இவை பற்றிய சட்டம் இயற்றுதல் உட்பட), கம்பெனிகள் பதிவு.

4. வருவாய்த் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :

வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளர்கள், மாவட்டத் துணை ஆட்சியாளர்கள், ஆவணப் பதிவுத் துறை, முத்திரைச் சட்டம், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப் பட்டவர்கள், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம் மற்றும் கிராமதானம் பயண இசைவுச் சீட்டு.

5. கல்வி அமைச்சர் .. மாண்புமிகு திரு. ஆராம வீரப்பன் :

கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் நலம், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, தொல் பொருளியல், முன்னாள் இராணுவத்தினர் நலம்.

6. உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. க. இராசாராம் :

உணவு, கூட்டுறவு, நுகர் பொருள் வழங்கல், விலைவாசிக் கட்டுப்பாடு, புள்ளி விவரங்கள்.

7. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் :

தொழிலாளர், வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர்ப்புற மற்றும் கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டங்கள், மக்கள் தொகைக் கணக்கு.



8. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி, குடும்ப நலம், சுற்றுச் சூழல் மாசு கட்டுப்படுத்தல், மின்னணுவியல், இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, அச்சுக் காகிதக் கட்டுப்பாடு.

9. போக்குவரத்துத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :

போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள்

10. கைத்தறி மற்றும் நெசவாலைகள் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்:

கைத்தறி மற்றும் நெசவாலைகள்.

11. பொதுப்பணித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :

பொதுப் பணிகள், பாசனம் (சிறு பாசனம் உட்பட), நெடுஞ்சாலைகள், மின்சாரம், மரபுசாரா எரி சக்தி வளர்ச்சி.

12. உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு :

நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், கிராமப்புறக் கடன் சம்பந்தப்பட்டவை.

13. வேளாண்மைத் துறை அமைச்சர் — மாண்புமிகு திரு. கு. பா. கிருஷ்ணன் :
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை மற்றும் சர்க்கரை.

14. வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் — மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி :
வீட்டு வசதி, குடிசை மாற்றுத் திட்டம், ஊரக வீட்டு வசதி வளர்ச்சி, இடவசதிக் கட்டுப்பாடு, நகர அமைப்பு, நகர்ப்புற வளர்ச்சி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், நகர்ப்புற மற்றும் கிராமப்புறக் குடிநீர் வழங்கல்.

15. ஊரகத் தொழில் துறை அமைச்சர் — மாண்புமிகு திரு. முகமது ஆசிப்:
சிறு தொழில்கள், ஊரகத் தொழில்கள் (குடிசைத் தொழில்கள் உட்பட), கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியம், வக்ஃப்.

16. சமூக நலத் துறை அமைச்சர் — மாண்புமிகு திருமதி ஆர். இந்திர குமாரி :
சமூக நலம் (மகளிர் மற்றும் குழந்தைகள் நலம் உட்பட), சத்துணவு, பிச்சைக்காரர் விடுதிகள், அனாதை விடுதிகள், சீர்திருத்த நிர்வாகம்.

17. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் — மாண்புமிகு திரு. மு. ஆனந்தன்:
ஆதிதிராவிடர் நலம், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர்.

18. வனம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் — மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:
கால்நடை பராமரிப்பு, பால், பால் பெருக்குத் திட்டம், மீனளம், வனங்கள் மற்றும் சின்கோனா.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR OF TAMIL NADU

**Thiru BHISHMA NARAIN SINGH**

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. Chief Minister—THE HON. SELVI J. JAYALALITHA :

   Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service and other All India Services, District Revenue Officers, Police, Prevention of Corruption, Industries, Commercial Taxes, Prohibition and Excise, Molasses, Backward Classes, Minorities, Hindu Religious and Chartiable Endowments, Information and Publicity, Film Technology, Cinematograph Act, Tourism and Tourism Development Corporation, Mines and Minerals.

2. Minister for Finance—THE HON. DR. V.R. NEDUNCHEZHIAN :

   Finance, Planning, Elections and Legislature.

3. Minister for Law—THE HON. THIRU K.A. KRISHNASAMY :

   Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Debt relief including Legislation on Money lending, Chits and Registration of Companies.

4. Minister for Revenue—THE HON. THIRU S.D. SOMA SUNDARAM :

   Revenue, District Revenue Establishment. Deputy Collectors, Registration, Stamp Act, Indians Overseas, Refugees and Evacuees, Stationery and Printing, Government Press, Bhoodan and Gramdan and Passports.

5. Minister for Education—THE HON. THIRU ERAAMA VEERAPPAN :

   Education, Technical Education, Science and Technology, Sports and Youth Welfare, Tamil Development and Tamil Culture, Archaeology and Welfare of Ex-servicemen.



6. Minister for Food and Co-operation—THE HON. THIRU K. RAJARAM :

   Food, Co-operation, Civil Supplies, Price Control and Statistics.

7. Minister for Labour—THE HON. DR. C. ARANGANAYAGAM :

   Labour, Employment and Training, Urban and Rural Employment Programmes and Census.

8. Minister for Health—THE HON. THIRU. S. MUTHUSAMY :

   Health, Medical Education, Family Welfare, Environmental Pollution Control, Electronics, Iron and Steel Control and Newsprint Control.

9. Minister for Transport—THE HON. THIRU K.A. SENGOTTAYAN :

   Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

10. Minister for Handlooms and Textiles—THE HON. THIRU E. MADHUSUDHANAN :

    Handlooms and Textiles.

11. Minister for Public Works—THE HON. THIRU S. KANNAPPAN:

    Public Works, Irrigation including Minor Irrigation, Highways, Electricity and Non-conventional Energy Development.

12. Minister for Local Administration—THE HON. THIRU ALAGU THIRUNAVUKKARASU :

    Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes and Rural indebtedness.

13. Minister for Agriculture—THE HON. THIRU KU. PA. KRISHNAN :

    Agriculture, Agricultural Engineering, Agro-Service Co-operatives, Horticulture and Sugar.

14. Minister for Housing and Urban Development—THE HON. THIR
T. M. SELVAGANAPATHI :

Housing, Slum Clearance, Rural Housing Development, Accomm dation Control, Town Planning, Urban Development, Madr Metropolitan Development Authority and Urban and Ru Water Supply.

15. Minister for Rural Industries—The Hon. THIRU MOHAMED ASIF :

Small-scale Industries, Rural Industries including Cottage Industri Khadi and Village Industries Board and Wakf.

16. Minister for Social Welfare—THE HON. TMT. R. INDIRA KUMARI :

Social Welfare including Women's and Children's Welfare, Nut tious Noon Meals, Beggar Homes, Orphanages and Correctior Administration.

17. Minister for Adi Dravidar Welfare—THE HON. THIRU M. ANANDAN

Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour.

18. Minister for Forests and Fisheries—THE HON. THIRU D. JAYAKUMAR :

Animal Husbandry, Milk, Dairy Development, Fisheries, Forests and Cinchona.



தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. இரா. முத்தையா

பேரவைத் துணைத் தலைவர்

பேராசிரியர் க. பொன்னுசாமி

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

1 திரு. க. அர்ச்சுனன்

2. திரு. வ. சத்தியமூர்த்தி

3. திருமதி. ரமணி நல்லதம்பி

4. டாக்டர் தே. குமாரதாஸ்

செயலாளர்.

திரு. செ. சு. ஜானகிராமன்,

## பேரவையின் முக்கிய அலுவலர்கள் (அகர வரிசைப்படி)

| | |
|---|---|
| இராமச்சந்திரன், திரு. ஆர். கே., பி.ஏ., பி.எல். | இணைச் செயலாளர் |
| சுந்தரராஜன், திரு. கா. செ., பி.ஏ., பி.ஜி.எல்., | இணைச் செயலாளர் |
| இராசமாணிக்கம், திரு. பெ., பி.ஏ., பி.எல்., | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| சண்முகநாதன், திரு. கோ., பி.காம்., | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| சந்திரசேகரன், திரு. ஆர்., பி.ஏ., | துணைச் செயலாளர் |
| சாலமன் ஜெயபால், திரு. டி., பி.எஸ்ஸி., பி.எல். | துணைச் செயலாளர் |
| ஜேக்கப் ஆர்தர், திரு. தா., பி.ஏ., பி.எல்.டி.பி. & பி.ஏ. | துணைச் செயலாளர் |
| கிருஷ்ணமூர்த்தி, திரு. எஸ்., பி.எஸ்ஸி. | குழு அலுவலர் |
| வெங்கட்டராமன், திரு. ப.சீ., பி.காம். | குழு அலுவலர் |
| அப்துல் சத்தார், திரு. ஜெ., பி.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர் |
| இராசாராமன், திரு. வி., பி.எஸ்ஸி., பி.எல். | சார்புச் செயலாளர் |
| உமா, திருமதி. வி. நா., பி.ஏ. | சார்புச் செயலாளர் |
| கண்ணன், திரு. கே., பி.எஸ்ஸி., பி.எல். | சார்புச் செயலாளர் |
| சாயிநாதன், திரு. கி., பி.ஏ., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர் |
| பவானி சுப்பையா, திருமதி, பி.ஏ., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர் |



| (1) | (2) |
|---|---|
| பானுமதி அனந்தராஜன், திருமதி. பி.எஸ்,ஸி., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர் |
| முடிகோபதி, திரு. நா. எம்.ஏ., | சார்புச் செயலாளர் |
| முனிர் உன்னிசா, திருமதி. பி.எஸ்ஸி., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர் |
| ராஜன், திரு. கே. பி. டி. ஆர். எஸ். | சார்புச் செயலாளர் |
| ராஜேந்திரன், திரு. பி. சி. பி.ஏ. | சார்புச் செயலாளர் |
| வெங்கட்டராமன், திரு. கோ. | பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர் |
| சுந்தரராஜுலு, திரு. துரை. எம்.ஏ. | தலைமை நிருபர் |
| துரைபாண்டியன், திரு. செ.ஏ. பி.ஏ. | தலைமை நிருபர் |
| ஜெயதேவ், திரு. பி.சி. | தலைமை நிருபர் |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

| | தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும் (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 1 | அண்ணாமலை, திரு. எஸ். | ஆலந்தூர் |
| 2 | அபரான்ஜி, திரு. பெ. | அரூர் (செ. வ.) |
| 3. | அபுல்ஹசன், திரு. எம்.எம். எஸ். | மயிலாடுதுறை |
| 4 | அமர்நாத், திரு. ஓ.எஸ். | மதுரை கிழக்கு |
| 5 | அம்மமுத்து பிள்ளை, டாக்டர் மு. | கன்னியாகுமரி |
| 6 | அரங்கநாதன், திரு. ஆர்.டி. | விருத்தாசலம் |
| 7 | அரங்கநாயகம், டாக்டர் செ. | தொண்டாமுத்தூர் |
| 8 | அர்ச்சுனன், திரு. க. | வீரபாண்டி |
| 9 | அழகிரி, திரு. ச. | சிதம்பரம் |
| 10 | அழகு திருநாவுக்கரசு, திரு. | ஒரத்தநாடு |
| 11 | அறிவழகன், திரு. ஆ. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 12 | அன்பழகன், திரு. எஸ். | நாமக்கல் (செ.வ.) |
| 13 | ஆசைமணி, திரு. எஸ். | குத்தாலம் |
| 14 | ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம் |
| 15 | ஆண்டித் தேவர், திரு. எஸ். | திருப்பரங்குன்றம் |
| 16 | ஆரோக்கியசாமி, டாக்டர் ச. | திருச்சிராப்பள்ளி-1 |
| 17 | ஆறுமுகம், திரு. செ. | வானூர் (செ.வ.) |
| 18 | ஆனந்தன், திரு. எம். | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |



| | தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 19 | இந்திர குமாரி, திருமதி. இரா. | நாட்ராம்பள்ளி |
| 20 | இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. | மேலூர் |
| 21 | இராசாராமன், திரு. சோ. | பாபநாசம் |
| 22 | இராசாராம், திரு. க. | பனமரத்துப்பட்டி |
| 23 | இராதாகிருஷ்ணன், திரு. த.க. | திருமங்கலம் |
| 24 | இராமகிருஷ்ணன், டாக்டர் இ. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 25 | இராமசாமி அம்பலம், திரு. கே. ஆர். | திருவாடானை |
| 26 | இராமசுவாமி, திரு. சி. | சங்கராபுரம் |
| 27 | இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். | கம்பம் |
| 28 | இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். | சாத்தூர் |
| 29 | இராமச்சந்திரன், திரு. ச. | பண்ருட்டி |
| 30 | இராமச்சந்திரன், திரு மா.சா.மா. | இளையாங்குடி |
| 31 | இராமதாஸ், திரு. எஸ்.எஸ். ஆர். | செஞ்சி |
| 32 | இராமநாதன், திரு. இராம. | கும்பகோணம் |
| 33 | இராம வீரப்பன், திரு. | காங்கேயம் |
| 34 | இராஜமன்னார், திரு. சூ. செ. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 35 | இராஜன்பாபு (எ) தணிகைபாபு, திரு. கி. | திருத்தணி |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| | (1) | (2) |
| 36 | இராஜேந்திரன், திரு. பி.வி. | வேதாரண்யம் |
| 37 | இலதா பிரியகுமார், திருமதி. | அரக்கோணம் (செ.வ.) |
| 38 | இளம்வழுதி, திரு. | எழும்பூர் (செ.வ.) |
| 39 | ஈஸ்வரமூர்த்தி, திரு. பி. | தாராபுரம் (செ.வ.) |
| 40 | ஈஸ்வரன், திரு. ஆர். | வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| 41 | ஏகாம்பர ரெட்டி, திரு. எ. | பள்ளிப்பட்டு |
| 42 | கண்ணப்பன், திரு. எஸ். | திருப்பத்தூர் |
| 43 | கண்ணன், திரு. வே. | திருவண்ணாமலை |
| 44 | கந்தசாமி, திரு. கா. | தலைவாசல் (செ.வ.) |
| 45 | கருப்புசாமி, டாக்டர் எம். | குன்னூர் (செ.வ.) |
| 46 | கலியபெருமாள், திரு. ப. | திருவையாறு |
| 47 | கலைச்செல்வி, திருமதி கே.எம். | காட்பாடி |
| 48 | கவிநிலவு தர்மராஜ், பேராசிரியர் (திருமதி) | மொடக்குறிச்சி |
| 49 | கற்பகம் இளங்கோ, பேராசிரியர் (திருமதி) | காரைக்குடி |
| 50 | கனகவல்லி, திருமதி என்.சி. | விளாத்திகுளம் |
| 51 | காஞ்சி பன்னீர்செல்வம் திரு. | உத்திரமேரூர் |
| 52 | காந்திராஜன், திரு. ச. | வேடசந்தூர் |
| 53 | காளன், திரு. கோ. | வில்லிவாக்கம் |
| 54 | காளிராஜன், டாக்டர் மு. | சமயநல்லூர் (செ.வ.) |
| 55 | கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. | ஆயிரம்விளக்கு |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| | (1) | (2) |
| 56 | கிருஷ்ணன், திரு. எஸ். எம். | தாம்பரம் |
| 57 | கிருஷ்ணன், திரு. கு.ப. | ஸ்ரீரங்கம் |
| 58 | கிருஷ்ணன், திரு. சி. | ஓமலூர் |
| 59 | குப்பன், திரு. க. | திருவொற்றியூர் |
| 60 | குமரி அனந்தன், திரு. | சாத்தான்குளம் |
| 61 | குமாரதாஸ், டாக்டர் தே. | கிள்ளியூர் |
| 62 | குழந்தைவேலு, திரு. சி. | குளத்தூர் (செ.வ.) |
| 63 | கோடிமாரி, திரு. ஆர். | நாகப்பட்டினம் |
| 64 | கோபால கிருஷ்ணன், திரு. வே. | சங்கரநயினார்கோவில் (செ.வ.) |
| 65 | கோபால், திரு. க. | நன்னிலம் (செ.வ.) |
| 66 | கோவிந்தராசு, திரு. மா. | ரிஷிவந்தியம் |
| 67 | சக்குபாய், திருமதி ரா. | கும்மிடிப்பூண்டி |
| 68 | சக்குபாய் தேவராஜ் திருமதி டி. | திருவள்ளூர் |
| 69 | சஞ்சய் ராமசாமி, திரு. | விருதுநகர் |
| 70 | சண்முகநாதன், திரு. எஸ். | ஆலங்குடி |
| 71 | சண்முகம், திரு. எஸ். வி. | மதுரை மேற்கு |
| 72 | சத்தியமூர்த்தி, திரு. வ. | கடலாடி |
| 73 | சந்திரசேகர், திரு. வி.பி. | பொள்ளாச்சி |
| 74 | சம்பத், திரு. எ. | வாணியம்பாடி |
| 75 | சரஸ்வதி, திருமதி அ.தி. | சத்தியமங்கலம் |
| 76 | சரஸ்வதி, திருமதி ப. | கபிலர்மலை |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 77 சரோஜா, டாக்டர் (திருமதி) வெ. | சங்கரி (செ.வ.) |
| 78 சாத்தையா, திரு. தி. | இராஜபாளையம் (செ.வ.) |
| 79 சாவித்திரி அம்மாள், திருமதி ஆர். | முகையூர் |
| 80 சிங்காரம், திரு. ஆர். | பேராவூரணி |
| 81 சிங்காரம், திரு. கே. | மொரப்பூர் |
| 82 சிங்கை கோவிந்தராசு, திரு. | சிங்காநல்லூர் |
| 83 சியாமளா, திருமதி ரெ. | கோவில்பட்டி |
| 84 சிவசுப்பிரமணியன், திரு. கு. | குறிஞ்சிப்பாடி |
| 85 சிவபதி, திரு. என். ஆர். | தொட்டியம் |
| 86 சின்னசாமி, திரு. கா. | சேந்தமங்கலம் (ம.ப.) |
| 87 சின்னசாமி, திரு. ம. | கரூர் |
| 88 சின்னசாமி, திரு. வி. கே. | பவானிசாகர் |
| 89 சின்னப்பன், திரு. கே. கே. | ஜெயங்கொண்டம் |
| 90 சீனியம்மாள், டாக்டர் (திருமதி) மு. | அவினாசி (செ.வ.) |
| 91 சீனிவாசன், திரு. ஆ.கு. | பெரணமல்லூர் |
| 92 சீனிவாசன், திரு. கு. | மன்னார்குடி |
| 93 சுதர்சனம், திரு. டி. | பூந்தமல்லி |
| 94 சுந்தரசாமி, திரு. எம். | கலசப்பாக்கம் |
| 95 சுந்தரதாஸ், திரு. மா. | விளவன்கோடு |
| 96 சுந்தரம், திரு. எம். கே. | தண்டராம்பட்டு |
| 97 சுந்தரராஜ், டாக்டர் ச. | பரமக்குடி, (செ.வ.) |
| 98 சுந்தரவேல், திரு. ஏ. கே. சி. | திருப்பத்தூர் |
| 99 சுந்தராம்பாள், திருமதி செ. | மேட்டூர் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 100 சுப்பிரமணியன், திரு. வ. மு. | மானாமதுரை (செ.வ.) |
| 101 சுப்பிரமணியன், திரு. வி.என். | பெருந்துறை |
| 102 சுப்பிரமணியன், திரு. வீ. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 103 சுப்புரத்தினம், திரு. ஆ. | பழனி (செ.வ.) |
| 104 சுலோசனா, செல்வி எல். | மேட்டுப்பாளையம் |
| 105 சுவாமிநாதன், திரு. சி. | புதுக்கோட்டை |
| 106 செங்கோட்டையன், திரு. கே.ஏ. | கோபிசெட்டிபாளையம் |
| 107 செல்லக்குமார், டாக்டர் அ. | அண்ணா நகர் |
| 108 செல்லச்சாமி, திரு. ஏ. டி. | ஒட்டன்சத்திரம் |
| 109 செல்லத்துரை, திரு. ஆ. | திருச்செந்தூர் |
| 110 செல்வகணபதி, திரு, டி.எம். | திருச்செங்கோடு |
| 111 செல்வராசன், திரு. அ. | துறைமுகம் |
| 112 செல்வராஜ், திரு. கே. | கோயம்புத்தூர் மேற்கு |
| 113 செழியன், திரு. தா. | பெரம்பலூர் (செ.வ.) |
| 114 சேகர், டாக்டர் எம்.பி. | பெரம்பூர் (செ.வ.) |
| 115 சேகர், திரு. எம். ஜி. | பாலக்கோடு |
| 116 சொக்கலிங்கம், திரு. பி. | மதுராந்தகம் |
| 117 சோமசுந்தரம், திரு. எஸ். டி. | தஞ்சாவூர் |
| 118 ஞானசேகரன், திரு. சி. | வேலூர் |
| 119 டேனியல்ராஜ், திரு. எஸ். | ஸ்ரீவைகுண்டம் |
| 120 தங்கமுத்து, திரு. கு. | திருவோணம் |
| 121 தங்கராஜ், திரு. ஆர். | ஆண்டிமடம் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 168 பாலன், திரு. எம். கே. | சைதாப்பேட்டை |
| 169 பாலையா, திரு. ஆ. | குளச்சல் |
| 170 பியாட்ரிக்ஸ் டிசோசா டாக்டர் (திருமதி) | நியமனம் |
| 171 பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். | தென்காசி |
| 172 புதுநயினார் ஆதித்தன், திரு. இரா. | சேரன்மகாதேவி |
| 173 புரட்சிமணி, திரு. ச. | மங்களூர் (செ.வ.) |
| 174 புருஷோத்தமன், டாக்டர் வெ. | பெண்ணாகரம் |
| 175 பூராசாமி, திரு. எம். | பூம்புகார் |
| 176 பெரியசாமி, திரு. வே. | அந்தியூர் (செ.வ.) |
| 177 பெரியவீரன், திரு. எம். | பெரியகுளம் |
| 178 பெருமாள், திரு. செ. | ஏற்காடு (ம.ப.) |
| 179 பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | நிலக்கோட்டை (செ.வ.) |
| 180 பொன்னுசாமி, பேராசிரியர் க. | மருங்காபுரி |
| 181 பொன்னுசாமி, திரு. பெ. | தருமபுரி |
| 182 பொன்னுவேலு, திரு. எ. தா. | வரகூர் (செ.வ.) |
| 183 போளூர் வரதன், திரு. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 184 மணிமேகலை, டாக்டர் (திருமதி) சு. | அரியலூர் |
| 185 மணிமேகலை, திருமதி வி. ஜி. | அருப்புக்கோட்டை |
| 186 மணிவாசகம், திரு. கே. பி. | உடுமலைப்பேட்டை |
| 187 மதுசூதனன், திரு. இ. | டாக்டர் இராதா கிருஷ்ணன் நகர் |
| 188 மரியமுல் ஆசியா, திருமதி | அரவக்குறிச்சி |
| 189 மல்லிகா, செல்வி ஜி. | புவனகிரி |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 190 மனோகரன், திரு. கே. ஏ. | ஓசூர் |
| 191 மாணிக்கம், திரு. சி. | ஈரோடு |
| 192 மாலா, டாக்டர் (செல்வி) ஜி. ஆர். | திருச்சிராப்பள்ளி-2 |
| 193 முத்துசாமி, திரு. சு. | பவானி |
| 194 முத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி |
| 195 முருகானந்தம், திரு. கே. ஆர். | சிவகங்கை |
| 196 முருகையா பாண்டியன், திரு. ஆர். | அம்பாசமுத்திரம் |
| 197 முனிரத்தினம், திரு. ஏ. எம். | சோளிங்கர் |
| 198 முனிவெங்கடப்பன், திரு. கே. | கிருஷ்ணகிரி |
| 199 முஹமது ஆசிப், திரு. | திருவல்லிக்கேணி |
| 200 முனுசாமி, திரு. கா. பூ. | காவேரிப்பட்டிணம் |
| 201 மூர்த்தி, திரு. து. | சீர்காழி (செ.வ.) |
| 202 மோசஸ், டாக்டர் எம். | நாகர்கோவில் |
| 203 ரகுபதி, திரு. செ. | திருமயம் |
| 204 ரங்கநாதன், திரு. ப. | புரசைவாக்கம் |
| 205 ரங்கராஜன், திரு. டி. எம். | மயிலாப்பூர் |
| 206 ரத்தினவேல், திரு. த. | திருவெறும்பூர் |
| 207 ரமணி நல்லதம்பி, திருமதி | ராதாபுரம் |
| 208 ரமேஷ், திரு. வி. பி. ஆர். | தூத்துக்குடி |
| 209 ரவிக்குமார், திரு. ஏ. | பொன்னேரி (செ.வ.) |
| 210 ரவிச்சந்திரன், திரு. வி. | உப்பிலியாபுரம் (ம.ப.) |
| 211 ராமசுப்பு, திரு. எஸ். எஸ். | ஆலங்குளம் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 122 தங்கவேல், திரு. எம். | முசிறி |
| 123 தண்டாயுதபாணி, திரு. வி. | குடியாத்தம் |
| 124 தமிழரசன், திரு. செ. கு. | வந்தவாசி (செ.வ.) |
| 125 தமிழரசு, திரு. வெ. | ஆம்பூர் |
| 126 தம்புசாமி, திரு. ஒ. | திருவாரூர் (செ.வ.) |
| 127 தருமலிங்கம், திரு. கி. | அணைக்கட்டு |
| 128 தர்மலிங்கம், திரு. பே. | பாளையங்கோட்டை |
| 129 தவசி, திரு. கே. | ஆண்டிப்பட்டி |
| 130 தனபால், திரு. ம. | திருப்போரூர் (செ.வ.) |
| 131 தாமரைக்கனி, திரு. இரா. | ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 132 தாமோதரன், திரு. சி. | நெல்லிக்குப்பம் |
| 133 திருநாவுக்கரசு, திரு. எஸ். | அறந்தாங்கி |
| 134 துரை. திரு. எஸ். எம். | ஆத்தூர் |
| 135 துரைமுருகன், திரு. கு. சு. | பல்லடம் |
| 136 துரை ராமசாமி, திரு. | வெள்ளக்கோவில் |
| 137 தெய்வநாயகம், திரு. எ. | மதுரை மத்தி |
| 138 தென்னவன், திரு. மு. | இராமநாதபுரம் |
| 139 தேவராஜ், திரு. அ. | செய்யாறு |
| 140 தேனி பன்னீர்செல்வம், திரு. | போடி நாயக்கனூர் |
| 141 நடேசன், திரு. இரா. | திருவட்டாறு |
| 142 நடேசன், திரு. மு. | சேலம்-2 |
| 143 நடேசன் பால்ராஜ் திரு. வெ. | நாங்குனேரி |
| 144 நாகூர் மீரான், திரு. எஸ். | கடையநல்லூர் |
| 145 நிர்மலா, செல்வி பி. | திண்டுக்கல் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 146 நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | தேனி |
| 147 பஞ்சவர்ணம், திருமதி கே. | வலங்கைமான் (செ.வ.) |
| 148 பட்டாபிராமன், திரு. கா. ப. | காஞ்சிபுரம் |
| 149 பரந்தாமன் டாக்டர். ஜெ. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 150 பரமசிவம், திரு. ஆர். பி. | சின்னசேலம் |
| 151 பரமசிவன், திரு. ஏ. எம். | சோழவந்தான் |
| 152 பலராமன், திரு. உ. | பூங்காநகர் |
| 153 பழனிசாமி, திரு. இரா. | தாரமங்கலம் |
| 154 பழனிசாமி, திரு. க. | எடப்பாடி |
| 155 பழனிசாமி, திரு. நா. சா. | கிணத்துக்கடவு |
| 156 பழனிசாமி, திரு. வெ. | திருப்பூர் |
| 157 பழனிசாமி, திரு. ஜி. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 158 பழனியம்மாள், திருமதி க. | ராசிபுரம் |
| 159 பன்னீர்செல்வம், திரு. என். | திருவிடைமருதூர் |
| 160 பன்னீர்செல்வம், திரு. சா. | திண்டிவனம் |
| 161 பன்னீர்செல்வம், திரு. ஜெ. | திருநாவலூர் |
| 162 பாண்டியம்மாள், திருமதி இரா. | உசிலம்பட்டி |
| 163 பாப்பா சுந்தரம், திரு. அ. | குளித்தலை |
| 164 பாலகங்காதரன், திரு. ஜெ. | சிவகாசி |
| 165 பாலகிருஷ்ணன், திரு. சோ. | முதுகுளத்தூர் |
| 166 பாலசுப்பிரமணியன், திரு. எஸ். ஆர். | பொங்கலூர். |
| 167 பாலசுப்பிரமணியன், திரு. கி. | பட்டுக்கோட்டை |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 212 | ராஜு, திரு. எச். எம். | உதகமண்டலம் |
| 213 | ராஜு, திரு. கே. ஆர். | கூடலூர் |
| 214 | ராஜு, திரு. கே. பி. | பேரூர் |
| 215 | ராஜேந்திரன், திரு. என். ஆர். | காட்டுமன்னார் கோவில் (செ.வ.) |
| 216 | லட்சுமணன், திரு. வி. கே. | கோயம்புத்தூர் (கிழக்கு) |
| 217 | லாரன்ஸ், திரு. கு. | பத்மநாபபுரம் |
| 218 | லோகாம்பாள், திருமதி ஜெ. | லால்குடி |
| 219 | வரதராஜன், திரு. செ. து. | செங்கல்பட்டு |
| 220 | விசுவநாதன், திரு. ஜி. | ஆற்காடு |
| 221 | வீரபாண்டியன், டாக்டர் பெ. | செங்கம் (செ.வ.) |
| 222 | வெங்கடராம ரெட்டி, திரு. மு. | தளி |
| 223 | வெங்கடேசன், திரு. பி. ஆர். எஸ். | கடலூர் |
| 224 | வேடியப்பன், திரு. தா. | போளூர் |
| 225 | வேணுகோபால், திரு. என். ஜி. | ராணிப்பேட்டை |
| 226 | வேலையா, திரு. டி. | திருநெல்வேலி |
| 227 | ஜனார்த்தனன், திரு. தே. | விழுப்புரம் |
| 228 | ஜானகிராமன், திரு. கோ. | மேல்மலையனூர் |
| 229 | ஜீனத் ஷெர்புதீன், திருமதி | சேப்பாக்கம் |
| 230 | ஜெயக்குமார், திரு. எஸ். | தியாகராய நகர் |
| 231 | ஜெயகுமார், திரு. டி. | ராயபுரம் |
| 232 | ஜெயராமன், திரு. எஸ். ஆர். | சேலம்-1 |
| 233 | ஜெயலலிதா, செல்வி ஜெ. | பர்கூர் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 234 | ஜெய்சன் ஜேக்கப், டாக்டர் | ஆரணி |
| 235 | ஸ்ரீதரன், டாக்டர் அ. | வால்பாறை (செ.வ.) |

பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்

| | |
|---|---|
| சுப்பிரமணியன், திரு. கே. | தலைமை வழக்கறிஞர். |

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

ஆவணி 31, பிரஜோற்பத்தி— திருவள்ளுவர் ஆண்டு, 2022

1991 செப்டம்பர் 16, திங்கட்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் 9—30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ''உற்றவன் தீர்ப்பான் மருந்துஉழைச் செல்வானென்று அப்பால்நாற் கூற்றே மருந்து.''

நோயுற்றவன், நோய் தீர்க்கும் மருத்துவன், மருந்து, மருந்தை அருகிருந்து கொடுப்பவன் என்று மருத்துவ முறை அந்த நான்குவகைப் பாகுபாடு உடையது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட—வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் விடைகள். வினா எண். 33, திரு. சோ. இராசாராமன். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

திருவள்ளுவர் விரைவுப் பேருந்து.

33—

*126—திரு. சோ. இராசாராமன் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர்—சென்னை, தடம் எண். 328, திருவள்ளுவர் விரைவுப் பேருந்து தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், மீண்டும் விட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

[1991 செப்டம்பர் 16

திரு. அ. பாப்பா சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பேரூராட்சியிலிருந்து நகராட்சியாக மாற்றப் படுகின்ற நிலையிலே, அந்தப் பேரூராட்சியினுடைய வசதிகள் மிகவும் குறைவாக இரண்டாம் கட்ட நிலையாக இருந்துக் கொண் டிருக்கிறது, ஆகவே, அந்தப் பேரூராட்சியில் பேருந்து நிலையம் கூட ஏற்பட முடியாத நிலையிருப்பதால், கூடிய விரைவில் அதை நகராட்சியாக ஆக்கித்தர வேண்டுமென்று உங்கள் மூலமாக கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை பேரூராட்சியில் இருக்கின்ற பல்வேறு வசதிகளைப் பற்றி ஆய்வு செய்து, அதை நகராட்சியாக ஆக்குவதற்கு முன்பாக, பேருந்து நிலையம் போன்ற வசதியைச் செய்வதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ம. சின்னசாமி.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பேரூராட்சியை நகராட்சியாக உயர்த்துகின்ற போது அதற்கு அரசு என்ன அளவுகோல் வைத்து அதை நகராட்சியாக உயர்த்துகின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பேரூராட்சியை நகராட்சியாக மாற்றுவதற்கு அதனுடைய மக்கட்தொகைக் கணக்கையும், அதில் நான்கு ஆண்டு காலத்திற்குள்ள வருமானத்தையும் கணக்கிட்டுத்தான் அதை நகராட்சியாக மாற்றுவதற்கான அளவுகோலாகக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல ஆண்டுகளாக செலக்ஷன் கிரேடு நிலையில் இருக்கக் கூடிய பேரூராட்சிகளை நகராட்சிகளாக ஆக்குகிற விதத்தில் தமிழ்நாட்டிலே எத்தனை பேரூராட்சிகள் நகராட்சிகளாக மாற்றப்படுகிற விதத்தில் அரசினிடம் திட்டம் எதுவும் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.



1991 செப்டம்பர் 16]

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் 29 பேரூராட்சிகளை நகராட்சிகளாக மாற்றுவதற்கான ஆய்வு நடந்து கொண்டிருக்கிறது என்பதை இந்தப் பேரவையிலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. டி. சுதர்சனம்.

திரு. டி. சுதர்சனம்: தலைவர் அவர்களே, ஒன்றரை இலட்சம் பேர்கள் வாழ்கின்ற நகரியங்களை நகராட்சிகளாக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரியங்களை, நகராட்சிகளாக மாற்றுகிற திட்டத்தை அரசு பரிசீலித்து முடிவு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். எக்ஸ். இராஜமன்னார்.

முற்பகல் 9-40

திரு. எஸ். எக்ஸ். இராஜமன்னார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் எத்தனையோ பஞ்சாயத்துக்கள் அதாவது கிரேட் I பஞ்சாயத்துக்கள் எல்லாம் டவுன் பஞ்சாயத்துக்களாக ஆக்கப்படுவதற்குரிய 'இன்க்ரெடியன்ட்ஸ் அன்ட் க்வாலிஃபிக்கேஷன்ஸ்' இருந்தும் அவை டவுன் பஞ்சாயத்துகளாக ஆக்கப்படாமல் இன்னும் காலதாமதம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட பஞ்சாயத்துக்களை....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது டவுன் பஞ்சாயத்துக்களை நகராட்சியாக ஆக்குகிற கேள்வி. ஆனால் நீங்கள் பஞ்சாயத்தை டவுன் பஞ்சாயத்தாக ஆக்குவது பற்றிக் கேட்கிறீர்கள். இது துணைக் கேள்வியாக வராது. திரு. என். பன்னீர்செல்வம்.

திரு. என். பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூராட்சிகளை நகராட்சிகளாக ஆக்கும் திட்டத்தின் அடிப்படையில் என்னுடைய தொகுதியில் உள்ள தேர்வு நிலை பேரூராட்சிகளை....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் தொகுதியிலே உள்ளது பற்றிப் பதில் வராது. பொதுவாகக் கேளுங்கள்.

தெரிவித்தார்கள். 1,300 பேருந்துகள் இருக்கின்ற போக்குவரத்துக் கழகம் இருக்கிறது. அது அமைச்சர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். அப்படிப்பட்ட போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரிக்கின்ற உத்தேசம் அரசுக்கு உள்ளதா என்பதை அறிய விரும்பு கிறேன்.

முற்பகல் 9-35

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் சேரன் போக்குவரத்துக் கழகத்தைக் குறிப்பிட்டுக் காட்டுகிறார். சேரன் போக்குவரத்துக் கழகத்தில், நீலகிரி மாவட்டத்தை ஒன்றாக இணைத்து, மலைப் பகுதியில் அந்தப் பேருந்துகளை இயக்குகின்ற பொழுது பெரும் நஷ்டம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே, அதைப் பிரிப்பதற்குச் சாத்தியக்கூறு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தா. வேடியப்பன்.

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஸ் போக்குவரத்துப் பணிமனை என்பதை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது போன்ற சாத்தியக்கூறு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 35, திரு. சி. ஞானசேகரன், திரு. ஆர். ஈஸ்வரன். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

பேருந்துகளை தேசியமயமாக்குதல்.

35—

*427—திரு. சி. ஞானசேகரன் :
திரு. ஆர். ஈஸ்வரன்:

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகம் முழுமையும் அரசு பேருந்துகள் விட தமிழக அரசு அனைத்துப் பேருந்துகளையும் தேசியமயமாக்கும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?



மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இப்பொருள், அரசின் கொள்கை குறித்த ஒன்றாகும். இதனை அரசு பரிசீலித்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 36. திரு. அ. பாப்பா சுந்தரம். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்

பேரூராட்சியை நகராட்சியாக்கும் திட்டம்.

36—

*319—திரு. அ. பாப்பா சுந்தரம் :

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா;—

குளித்தலை பேரூராட்சியை நகராட்சியாக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்.

திரு. அ. பாப்பா சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம் என்று அமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கின்றார்கள். 15 ஆண்டுகளுக்கு முன்பே குளித்தலைப் பேரூராட்சியை நகராட்சியாக ஆக்க வேண்டுமென்ற ஒரு திட்டம் இருந்தது. இந்தப் பதினைந்து ஆண்டு காலமாக அது நடைபெறாமல் இருப்பதால், அது எப்பொழுது நகராட்சியாக ஆக்கப்படும் என்று உங்கள் மூலமாக அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, குளித்தலைப் பேரூராட்சியை மூன்றாம் நிலை நகராட்சியாக மாற்றுவது சம்பந்தமாக உள்ளாட்சி நிதிக் கணக்கு ஆய்வாளரிடம், மக்கட் தொகையையும், வருமானத்தையும் கணக்கிடக் கோரப்பட்டிருக்கிறது. அது வந்தவுடன், அரசு பரிசிலனை செய்து, நகராட்சியாக மாற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1991 செப்டம்பர் 16

திரு. என். பன்னீர்செல்வம் : தலைவர் அவர்களே, பேரூராட்சிகளாக இருப்பவைகளை நகராட்சிகளாக ஆக்கும் திட்டம் உள்ளபோது தேர்வுநிலைப் பேரூராட்சிகள் நகராட்சிகளாக ஆக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி அரசு பரிசீலித்து முடிவு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் (செல்வி) ஜி. ஆர். மாலா.

டாக்டர் (செல்வி) ஜி. ஆர். மாலா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி நகராட்சியோடு அபிஷேகபுரம் பேரூராட்சியையும் இணைப்பது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தனிக் கேள்வி போடவும். இதில் அதற்கு பதில் வராது. இது செலக்ஷன் கிரேடு பேரூராட்சியை நகராட்சியாக ஆக்குகிற கேள்வி. நகராட்சியோடு எதை, எதைச் சேர்க்கப் போகிறீர்கள் என்ற கேள்விக்குப் பதில் வராது. வினா எண். 37. திரு. ஏ. டி. செல்லசாமி. மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

சத்துணவுத் திட்டத்தில் பால் வழங்குதல்.

37—

* 162—திரு. ஏ. டி. செல்லசாமி :

மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

சத்துணவுத் திட்டத்தில் முட்டை வழங்குவதற்குப் பதிலாக பால் வழங்கிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.



1991 செப்டம்பர் 16]

திரு. ஏ. டி. செல்லசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுக் கூடங்களில் முன்னாள் அரசு முட்டை வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தியபோது பல முறைகேடுகள் நடைபெற்றுள்ளன. வியாபாரிகளிடமிருந்து தேங்கிய முட்டைகளை வாங்கியதாலும், சத்துணவுக் கூடங்களுக்கு முட்டை வந்து சேர்வதற்குள்ளாக சேதங்கள் ஏற்பட்டதாலும், குழந்தைகளுக்கு முறையாகச் சென்றடையவில்லை. எனவே, ஆங்காங்கே உள்ள பால் ஒன்றியத்திலிருந்து அந்தச் சத்துணவுக்கூட குழந்தைகளுக்கு பால் வழங்க ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது வழங்கப்படுகிற முட்டைகளில் எந்தவிதமான நிர்வாகச் சீர்கேடுகளும் நடைபெறவில்லை. எனவே அவ்வாறு நடைபெறுகிற சீர்கேடுகளை ஆங்காங்கே களைவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலம் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. முதல்வர் அவர்கள் அறிவுறுத்தியதன்பேரில் அந்த நடவடிக்கைகள் இன்றைக்கு எடுக்கப்பட்டு வருகின்றன என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் திரு. நா. சா. பழனிசாமி.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவில் உண்மையாக சத்து இருப்பதற்காகத் தான் முட்டை போடப்படுகிறது. ஆனால் கெட்டுப்போன முட்டைகளைக் கூட கொண்டு வந்து போடுகிற சூழ்நிலை இருக்கிறபோது அதற்காக பாலைக் கொடுப்பது என்று வருமேயானால் முட்டையை விட பாலில் கலப்படம் செய்யக்கூடிய வாய்ப்பு மிக அதிகமாக இருக்கிறது. சத்துணவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில்—சத்துணவு என்றால் அதில் என்ன வகையில் சத்து இருக்கவேண்டும் என்று கோவையில் உள்ள அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரியினைச் சேர்ந்த டாக்டர் ராஜம்மாள் தேவதாஸ் அவர்கள் கூறியிருக்கிறார்கள். சத்துணவு எப்படி இருக்க வேண்டும், என்னென்ன பொருட்கள் அந்தச் சத்துணவில் இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதன்படி அதாவது அந்தச் சத்துணவுத் திட்டத்தின்படி காய்கறிகள், பருப்பு, எண்ணெய் போன்றவை எல்லாம் முறையாக வழங்கப்படுகிறதா என்பதை நான் அமைச்சர் அவர்களிடமிருந்து அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது சத்

துணவுத் திட்டத்தில் சத்தோடு என்னென்ன வகையான காய் கறிகள், கீரைகள் வழங்கப்பட்டதோ அவை தொடர்ந்து வழங்கப்பட்டுக் கொண்டிருப்பதால் அதில் கேள்விக்கு இடம் இல்லை. ஏதாவது அதிலே தவறு நடைபெறும் என்று சொன்னால், கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் (திருமதி) பியாட்ரிக் டி. சோசா.,

DR. (THIRUMATHI) BEATRIX D' SOUZA : Honourable Speaker Sir, I am in favour of the egg. There is always the danger of milk being diluted. You cannot dilute an egg. My point is that sometimes children are allergic to eggs. In that case, they may be given milk.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சில நேரங்களில் குழந்தைகளுக்கு முட்டை காரணமாக அலர்ஜி ஏற்படுகிற வாய்ப்பு இருக்கிறது. எனவே அதைப் பரிசீலித்து இந்தத் திட்டம் பற்றி மறு பரிசீலனை செய்யப்படுமா என்று கேட்கிறார்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : பேரவைத் தலைவர் அவர்களே, முட்டை சாப்பிடாத குழந்தைகளுக்கு ஊட்டச் சத்து வழங்க வேண்டும் என்று சொல்லியிருக்கிற காரணத்தால் இந்தக் கேள்விக்கு இடம் இல்லை.

முற்பகல் 9–45

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம்.

திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சபையிலே நமது முதலமைச்சர் அவர்கள் குழந்தைகளுக்கு மூன்று கிலோகிராம் அளவுக்கு சமையல் எண்ணெய் வழங்கப்படும் என்று கூறினார்கள். ஆனால் இதுவரை அவ்வாறு வழங்கப்படவில்லை, அது எப்போது வழங்கப்படும் என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர், புரட்சித் தலைவி அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்றவுடன் எண்ணெய் அளவை உயர்த்த வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அது எந்த அளவுக்கு உயர்த்தவேண்டுமென்பது வல்லுநர்களுடைய பரிசீலனையில் இருக்கின்றது. அது வந்ததற்குப் பின்னால் முடிவெடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தேனி பன்னீர் செல்வம்.

திரு. தேனி பன்னீர் செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டம் தொடங்கப்பட்ட போது மாண்புமிகு முதல்வர், புரட்சித் தலைவர் அவர்கள், பண்டிகை நாளில் அந்த பண்டிகை நாளை குறிப்பிடுகின்ற வகையில் ஏதாவது இனிப்புப் பலகாரம் போன்றவை செய்து கொடுக்க வேண்டும் என்றும், அதுவும் முதல் நாளே செய்து கொடுக்க வேண்டும் என்று முன்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தற்போது அது அமலில் இருப்பதாகத் தெரியவில்லை. அது குறித்து உரிய நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி. இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது அப்படியே அமலில்தான் இருக்கிறது. இப்போதும் முதல் நாளே அப்படி வழங்கப்படுகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எச். எம். ராஜு.

திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டத்தில் நம் நாட்டில் பல ஜாதிகளைச் சேர்ந்த குழந்தைகள் முட்டை சாப்பிடுவதில்லை என்பதைத் தாங்கள் அறிவீர்கள். அந்த மாதிரி முட்டை வேண்டாம் என்னும் குழந்தைகளுக்கு பால் வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முட்டை சாப்பிடாத குழந்தைகளுக்கு ஊட்டச் சத்துணவு உருண்டை இப்போது வழங்கப்பட்டுக்கொண்டு இருக்கின்றது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. காஞ்சி பன்னீர் செல்வம்.

திரு. காஞ்சி பன்னீர் செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'டாப்கோ' விலே வழங்கப்படுகிற முட்டைகள் ஒழுங்காக 15 நாட்களுக்கு ஒரு முறை வழங்கப்படுவதில்லை என்ற புகார் நாங்கள் நன்றி சொல்கின்ற நேரத்திலே மக்களாகச் சொன்னார்கள். அந்த நிலையிலே புகார்கள் வந்திருக்கின்றன. அதிலே குறிப்பாக மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் மாவட்ட அளவிலே நடத்திய ஆய்வுக்

[1991 செப்டம்பர் 16

கூட்டத்திலேயே இந்த புகாரைப் பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலே பலவேறாகப் புகார் கொடுத்தார்கள். அதன் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ' டாப்கோ ' நிறுவனத்திடமிருந்து வாங்கக்கூடிய முட்டைகளைப் பற்றி கொடுத்திருக்கின்ற குறைகள் முதல்வர் அவர்களுடைய பரிசீலனைக்கு கொடுக்கப்பட்டு அவை மீது நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது வழங்கப்படுகின்ற முட்டை பெட்டைக் கோழி முட்டையா அல்லது வாத்துக் கோழி முட்டையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது வழங்கப்படுகின்ற முட்டை கோழி முட்டைதான் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. கே. சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சத்துணவு மையத்திலே பொறுப்பாளர்களாக நியமிக்கும்போது அந்தந்த பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கே முன்னுரிமை கொடுத்து பதவியில் அமர்த்த வேண்டுமென்று..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இங்கே கேளுங்கள். இது முட்டை போடுகிற கேள்வி. இதிலே நீங்கள் பணியாளர்கள் அமர்த்துகிற கேள்வி கேட்கிறீர்கள். திரு. வி. கே. சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு அமைச்சர் அவர்களிடம் பதில்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சத்துணவு அமைச்சர் அவர்கள் கிட்டே எல்லாம் உண்டு. அவர் சத்துணவு அமைச்சர்தான். அதற்காக நீங்கள் எல்லாமே டிஸ்கசன் மாதிரி ஆரம்பிக்கக்கூடாது. அடுத்து திரு. ஞானசேகரன்.



1991 செப்டம்பர் 16]

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியது போல கோழி முட்டைகள் தான் போடப்படுகிறது என்று சொல்கிறார்கள். அதை நிரூபிக்கும் வகையிலே 'டாப்கோ' சப்ளை செய்கின்ற கோழி முட்டைகள், சில இடங்களிலே முட்டைகளில் கோழிக் குஞ்சே வந்து தோன்றுகிறதாக சொல்கிறார்கள். இதைத் தவிர்க்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப் போன்று கோழிக் குஞ்சுகள் வெளி வருகின்ற முட்டைகளை இதுவரை எங்கும் கொடுக்கப்பட்டதாகத் தகவல் இல்லை. அப்படி இருந்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். அன்பழகன்.

திரு. எஸ். அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முட்டை வழங்கும்போது ஒப்பந்த அடிப்படையிலே சில கம்பெனிகளிடமிருந்து வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். அப்படி வாங்கும்போது, வாங்குவதற்கான காலம் இன்னும் ஒரு சில மாதங்களில் முடிவடைய இருக்கிறது. மீண்டும் கம்பெனிகளுக்கே அந்த வாய்ப்பு கொடுக்கப்படுகிறதா அல்லது அரசே எடுத்துக் கொள்ளுமா என்பதையும் அல்லது அதற்குக் பதிலாக பன், பிஸ்கேட் அல்லது பழ வகைகள் கொடுப்பதற்கான உத்தேசம் அரசிடம் உள்ளதா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 9-50

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை எப்படி செய்ய வேண்டும் என்பதை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் முடிவு செய்வார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு ஆர். முருகையா பாண்டியன்.

திரு. ஆர். முருகையா பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முட்டைகள் எல்லாம் பல லாரிகள் மூலமாக கொண்டுவரப்பட்டு ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் தனி அறைகளில் வைக்கப்படுகின்றன. அங்கிருந்து அந்த முட்டைகள் அந்தந்த சத்துணவு மைய பொறுப்பாளர்களால் எடுத்துச் செல்வதற்கு முன்பு, இரவு நேரங்

களில் பாம்புகள் படம் எடுத்து ஆடி முட்டைகள் அல்லோகலப் படுகின்றன. இந்நிலை தவிர்க்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை அப்படி பாம்புகள் படம் எடுத்து ஆடியதாக தகவல் இல்லை. (சிரிப்பு) அப்படி வந்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. பி. சொக்கலிங்கம்.

**திரு. பி. சொக்கலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முட்டைகள் வறுத்து வழங்கப்படுவதால் ஏமாற்றப்படுகின்றன. அதற்குப் பதில் முட்டைகளை அவித்து வழங்கினால் சரியாக இருக்கும் என்பதை உங்களுக்கு சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. சொக்கலிங்கம், முட்டைகள் அவித்துத்தான் வழங்கப்படுகின்றன. (சிரிப்பு) டாக்டர் வெ. புருஷோத்தமன்.

**டாக்டர் வெ. புருஷோத்தமன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது முட்டைகள் தனியார் பண்ணைகளிலிருந்து நாமக்கல் பகுதியிலிருந்து மிகவும் குறைந்த விலையில் அரசாங்கத்திற்கு வழங்கப்படுவதால், முட்டை உற்பத்தியாளர்களுக்கு நஷ்டம் ஏற்படுகிறது என்று தெரிவித்துள்ளதால் அந்த முட்டையினுடைய விலையை ஏற்ற மாண்புமிகு அமைச்சர் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முட்டையை அவர்களிடமிருந்து முதலில் வாங்கியபோது முட்டையின் விலையை ஏற்றி கான்ட்ராக்ட் வாங்கியிருக்கிறார்கள். ஆகவே, அரசாங்கத்துக்கு கான்ட்ராக்ட் முடியும்வரை, கடைசிவரை அவர்கள் முட்டை கொடுத்துத்தான் ஆக வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் சத்





துணவு போடப்பட்டது. பிறகு வந்தவர்கள் அதை விட அதிகமாகப் போடுகிறோம் என்று சொல்லி முட்டை கொடுக்கிறோம் என்று சொல்லி, பல இடங்களில் $\frac{1}{2}$ முட்டை, $\frac{1}{4}$ முட்டை என்று போடப்படுகிறதே, அதை நீக்குகின்ற வகையில் 'சத்துணவு உருண்டை' யாக வழங்கினால் அதை விட அதிகமாக சத்துணவாக இருக்குமே. அந்த வகையில் 'சத்துணவு உருண்டைகள்' வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் எங்கேயும் $\frac{1}{2}$ முட்டை, $\frac{1}{4}$ முட்டை என்று வழங்கப்படுவது கிடையாது. எல்லா இடங்களிலும் முழு முட்டை தான் வழங்கப்படுகிறது. சைவ உணவு சாப்பிடுகிறவர்களுக்கு 'சத்துணவு உருண்டை' ஏற்கெனவே வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஆர். இராமநாதன்.

**திரு. ஆர். இராமநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய ஆட்சிக்காரர்கள் காலத்தில் இந்த சத்துணவு மையங்களுக்குச் சென்று பார்க்கும்போது, அந்த முட்டைகளை கையில் எடுத்துப் பார்க்கும்போது, முட்டைகள் எடையே இல்லாமல் 'கூமுட்டைகள்' ஆக இருந்தன. அதை நாங்கள் எல்லாம் நேரிலேயே பார்த்திருக்கிறோம். பார்ப்பதற்கு முட்டை போல இருக்குமே தவிர உள்ளே முட்டையின் அம்சங்கள் இருக்காது. அந்த ஆட்சி ஒழிக்கப்பட்டிருக்கிற நிலையில், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் 'கூமுட்டைகள்' இல்லாத வகையில் நல்ல முட்டைகளாக வழங்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. இராமநாதன், அனுபவபூர்வமாகத்தானே கேட்கிறீர்கள் (சிரிப்பு).

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் எல்லா முட்டைகளும் சரிபார்த்து வழங்கப்படுகிறது. 'முட்டை ஓடுகளாக' இருக்

தால் உடனே திருப்பி அனுப்புகிறார்கள். அந்த முட்டைகளுக்குப் பதிலாக நல்ல முட்டைகளாக உடனடியாக வழங்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. செ. ஆறுமுகம்.

திரு. செ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியத்திலிருந்து முட்டைகள் எடுத்துச் செல்கிறபோது பஸ்ஸிலே ஏற்ற மறுக்கிறார்கள். அப்படியும் எப்படியாவது முட்டைகள் எடுத்துச் செல்லப்படும்போது முட்டைகளுக்கு வழியில் சேதாரம் ஏற்படுகிறது. அது தவிர்க்க முடியாமல் ஏற்பட்டு விடுகிறது. ஆகவே, அதைத் தவிர்க்க அந்தந்த மையங்களுக்குச் சென்று முட்டைகளை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தந்த மையங்களில் முட்டைகளை வழங்குவதற்குரிய ஆலோசனையை அரசு இன்றைக்கு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 38. திரு. ம. சின்னசாமி, திரு. கி. செல்வராஜ், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

சத்துணவுத் திட்டத்திற்கு தனித் துறை.

38—

*220 திரு. ம. சின்னசாமி :

திரு. கி. செல்வராஜ் :

மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்துணவுத் திட்டத்திற்கு தனித்துறை (இலாகா) ஏற்படுத்தும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) சத்துணவுத் திட்டத்திற்கு மத்திய அரசின் நிதி உதவியை மாநில அரசு கோரியுள்ளதா?

(இ) சத்துணவு உண்ணும் குழந்தைகளுக்கு மருத்துவ வசதி அளிக்கப்படுகின்றதா?





முற்பகல் 10-55

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இல்லை.

(இ) ஆம்.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டம் என்பது வரலாற்றுச் சிறப்பு மிக்க திட்டம். இதற்குக் கோடிக்கணக்கான ரூபாய்களை அரசு செலவு செய்து வருகிறது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களால் துவக்கப்பட்டு, இன்றைக்கு நம்முடைய முதல்வர் புரட்சித் தலைவி அவர்களால் தீவிரமாக நடத்த வேண்டுமென்று இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில், தனியாக ஆர்வம் கொண்டிருக்கிறார்கள். ஆகவே தனியாக இதற்கென்று ஒரு துறை இல்லையென்று சொன்னால் அந்தத் திட்டத்தைச் சிறப்பாக நடத்த முடியாது. இத்திட்டம் கல்வித் துறை, உள்ளாட்சித் துறைகளால் தொங்க வேண்டிய நிலையில் உள்ளது. சுருக்கமாகச் சொல்லப்போனால் ஒரு தாயில்லாத பிள்ளை போல் இருக்கிறது ஆகவே கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்யும் இந்தத் திட்டம் சிறப்பாக நடைபெற வேண்டுமென்று சொன்னால், இந்தத் துறையை தனியாகப் பிரித்து, இதற்கென்று தனி அதிகாரிகளை நியமித்தால்தான் சிறப்பாக இந்தத் திட்டம் இயங்கும். ஆகவே மாண்புமிகு அமைச்சரவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்து, இது பற்றி மறுபரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தற்சமயம் பள்ளி சத்துணவு மையங்கள் ஊரக வளர்ச்சித் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. குழந்தைகள் நல மையங்கள் சமூக நல இயக்குநரின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. ஆகவே மேற்படி கோரிக்கையை பரிசீலித்தால் கூடுதல் பணியாளர்கள் நியமனம், தளவாடங்கள், வாகனங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட இனங்களை வாங்குவதற்கு செலவாகும் தொகை அரசுக்குப் பெரிய நிதி இழப்பை ஏற்படுத்துமென்று அரசு கருதுகிற காரணத்தால், ஏற்கெனவே இருக்கின்ற நிதி நெருக்கடி நிலைமையில், இது பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள்

சத்துணவுத் திட்டத்தில் நேரடி கண்காணிப்பும், சத்துணவுத் திட்டத்தில் அக்கறையோடும் இருக்கிற காரணத்தால், இதற்கென்று ஒரு இலாகா தனியாக வேண்டிய அவசியமில்லை என்று கருதப்படுகிறது.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குழந்தைகளுக்கு மருத்துவ வசதி அளிக்கப்படுகிறதென்று இந்தத் திட்டத்திலே இருக்கிறது. ஆனால் அந்த மையங்களுக்குப் போய் பார்க்கிறபோது மருத்துவர்கள் வந்து அந்தக் குழந்தைகளைப் பார்த்தார்களா என்றால் பல இடங்களில் இல்லை என்று சொல்லுகிறார்கள். ஆகவே எல்லாக் குழந்தைகளையும் பரிசோதித்ததற்கு அடையாளமாக அங்கே ஒவ்வொருவருக்கும் அட்டை போட்டு, மையங்களில் தொங்கவிடப்படுமா? அடுத்து இது ஒரு மிகப் பெரிய சமூக நலத் திட்டமாக இருப்பதன் காரணமாக மத்திய அரசு இதற்கு நிதி உதவி செய்ய வேண்டும். ஆகவே மாநில அரசு, மத்திய அரசை வற்புறுத்தி இதற்கு நிதி உதவி செய்தாக வேண்டுமென்று கட்டாயப்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களால் கொண்டுவரப்பட்ட இந்தச் சத்துணவுத் திட்டம் முழுக்க முழுக்க மாநிலத் திட்டமாகக் கருதப்படுவதால், இதற்கு மத்திய அரசினுடைய நிதி உதவி எதையும் கோரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்ததாக 3 முதல் 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு, வைட்டமின்-ஏ கேப்சூல்கள், 2 இலட்சம் இண்டர் நேஷனல் யூனிட்ஸ், 6 வாரங்களுக்கு ஒரு முறை வழங்கப்பட்டு வருகிறது. பொதுச் சுகாதாரத் துறையினர் குழந்தைகளின் உடல்நலத்தைப் பேணி வருகின்றனர். சுகாதாரத் துறை அதை சரிவர கவனிக்கவில்லை என்ற புகார்கள் வந்தால், மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய அனுமதியோடு அதைப் பரிசீலித்து, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இ. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு உண்ணும் குழந்தைகளுக்கு மருத்துவ வசதி செய்யும்போது, வாரம் ஒரு முறை ஆரம்ப சுகாதார



மருத்துவமனை மருத்துவர்கள் மூலம் குழந்தைகளைப் பரிசோதனை செய்து, மருத்துவ வசதி செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு தலைவர் அவர்களே, வாரத்திற்கு ஒரு முறை செய்வதன் மூலமாக அரசாங்கத்தின் நிதி நெருக்கடி நிலையில் மிகுந்த சிரமத்திற்கு இடையில்தான் அந்தத் திட்டம் இருக்கும். ஆகவே 6 வாரங்களுக்கு ஒரு முறை என்று இப்போது வழங்கப்படுகிற மருத்துவ வசதிகளை தொடர்ந்து அப்படியே செய்ய வேண்டுமென்பதுதான் அரசின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது.

திரு. இ. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6 வாரங்களுக்கு ஒரு முறை மருத்துவ வசதி செய்கின்றபோது, குழந்தைகள் பாதிக்கப்பட்டு, 6 வாரங்களுக்கு அந்த நோயைத் தாங்கிக் கொண்டிருக்க வேண்டுமென்பது சரியாக இராதென்ற காரணத்தால் 3 வாரங்களுக்கு ஒரு முறை மருத்துவ வசதி செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடல்நிலை சரியில்லாமல் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகளை, 3 வாரங்கள்கூட அல்ல, அப்போதே கவனிப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மு. நடேசன்.

திரு. மு. நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சத்துணவுத் திட்டம் தமிழ்நாட்டைத் தவிர மற்ற மாநிலங்களில் செயல்படுத்தப்படுகிறதா, உலக நாடுகளில் வேறு எங்காவது செயல்படுத்தப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் கொண்டு வந்த சத்துணவுத் திட்டம் தமிழ்நாட்டிலேதான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரியப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. எம். ரங்கராஜன்.

திரு. டி. எம். ரங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய ஒப்பற்ற தலைவி புரட்சித் தலைவி இப்போது சத்துணவுத் திட்டத்தின் பெயர் மாற்றப்பட்டதை அறிவித்தார்கள். அவை புரட்சித் தலைவர் பெயரால் அழைக்கப்படும் என்றும் கூறினார்கள். ஆனால் பல சத்துணவுக் கூடங்களில் பெயர் இன்றும் மாற்றப்படாமல் இருக்கிறது. இது பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல மாவட்டங்களில் மாற்றப்பட்டு விட்டது. மாற்றப்படாத இடங்களில் இருக்கிற சத்துணவுக் கூடங்களில் உடனடியாக பெயர்ப் பலகையும், மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் படத்தையும், புரட்சித் தலைவர் அவர்களின் படத்தையும் உடனடியாக மாட்ட வேண்டுமென்றும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. தவசி.

திரு. கே. தவசி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலத்துறையுடன் ஊராட்சி ஒன்றியத்தின் கீழ் இயங்கி வந்த சத்துணவுப் பொறுப்பாளர்களை அந்த ஊராட்சி ஒன்றியத்திலிருந்து சமூக நலத் துறைக்கு மாற்றப்பட்டபோது, சமையலர்களாக வேலை பார்த்தவர்களில் 2 பேர்களில் ஒருவரை நீக்கிவிட்டு ஒருவரைத்தான் நியமித்திருக்கிறார்கள். அவர்களுக்கு மீண்டும் சமூக நலத்துறையில் அந்த சமையல் வேலை கிடைக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே அப்படிப்பட்ட கோரிக்கைகள் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். ஆர். ஜெயராமன்.

திரு. எஸ். ஆர். ஜெயராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய புரட்சித் தலைவர் ஆட்சியிலே சத்துணவுக் கூடங்களிலே பணியாற்றிக் கொண்டிருந்த பணியாளர்கள் முந்தைய அரசு குடும்பக் கட்டுப்பாடு பணிகளில் அமர்த்தப்பட்டது. அவர்களை மீண்டும் இந்தப் பணிக்கே கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டப் பணியாளர்கள் முழுக்க முழுக்க சத்துணவுத் திட்ட பணிகளில்தான் பயன்படுத்தப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ரமணி நல்லதம்பி.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டம் குழந்தைகளுக்கு ஒரு நல்ல அம்சமாக செயல்பட்டு வருகிற திட்டம். நல்ல குழந்தைகளாக அவர்கள் வளர வேண்டுமென்பதற்காக செயல்படுத்தப்படுகிறது. அதே மாதிரி, தாய்மார்களுக்கும் பிரசவத்திற்கு முன்பாக 4 மாதங்களுக்கும் பிரசவத்திற்குப் பின்புள்ள காலத்தில் 4 மாதங்களுக்கும் ஆக 8 மாதங்களுக்கு அரசின் உதவித் தொகை எப்படி அவர்களுக்குக் கொடுக்கிறார்களோ அதேபோல, இந்த சத்துணவு மையங்களில் உள்ள ஊழியர்களுக்கும் கொடுக்கப்படுமா? குறைந்த சம்பளம் அவர்கள் வாங்குவதால் அவர்களுக்கும் சத்தில்லை என்று சொன்னால் எப்படி அவர்கள் குழந்தைகளுக்கு சேவை செய்ய முடியும்? ஆகவே இந்தத் திட்டத்தில் அவர்களுக்கு ஏதாவது செய்ய முடியுமா? அல்லது மற்ற துறைகளில் அவர்களை நியமனம் செய்யும் போது, சத்துணவுத் திட்டத்தில் இருந்தவர்கள் என்பதால் முன்னுரிமை கொடுத்து அவர்களுக்கு வேலை வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்ட ஊழியர்களின் ஊதிய உயர்வு பற்றிய கோரிக்கை இப்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை பேரவைத் தலைவர் மூலமாக உறுப்பினருக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துணைக் கேள்விகள் எப்படியும் மூலக் கேள்விக்கு சம்பந்தம் உடையதாக இருக்க வேண்டும். அந்த அளவுக்கு உறுப்பினர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும். திரு. என். ஜி. வேணுகோபால்.

திரு. என். ஜி. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டத்திற்கு, தனித் துறை ஏற்படுத்துவதற்கு சாத்தியக் கூறுகள் இல்லை என்று சொல்லப்பட்டது. அப்படியானால் சத்துணவு அமைப்பாளர்களிடையே இன்று கொடுக்கப்பட்டுள்ள பெரும் பொறுப்புகள், அதாவது வந்து இறங்குகின்ற பொருட்கள், அரிசி போன்றவைகள் கண்காணிக்க சத்துணவுக் கூடங்களில் இருக்கிற தலைமையாசிரியர்

களுக்கு பொறுப்பு கொடுக்கப்பட்டால் ஊழியர்களுக்கு இருக்கிற சுமை குறையும். காம்பன்சேட் என்று சொல்கிற அளவிலே அந்த இலாக்காவுக்கு....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. என். ஜி. வேணுகோபால்: பொறுப்பாளராக நியமிக்க அரசிடம் உத்தேசம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வராக புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னால், சத்துணவுத் திட்டம் சீரோடும் சிறப்போடும் செயல்படுவதற்காக பொறுப்புகள் அனைத்தும் பகிர்ந்து கொடுக்கப்பட்டுள்ளது என்பதை பேரவைத் தலைவர் அவர்களின் மூலமாக உறுப்பினருக்கு தெரியப்படுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. பெரியசாமி.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில மாவட்டங்களில் புதிதாக ஆரம்பப் பள்ளிக் கூடங்கள் திறந்திருக்கிறார்கள். அந்தப் பள்ளிக் கூடங்களில் சத்துணவு மையங்கள் ஆரம்பிக்கப்படாமல் இருக்கின்றன....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வே. பெரியசாமி, தொடர்புடைய துணைக் கேள்வியாக இருக்கவேண்டும். புதிதாக மையங்கள் ஆரம்பிப்பது பற்றி இந்தக் கேள்வியில் கேட்டால் எப்படியும் பதில் வராது. டாக்டர் பரந்தாமன்.

டாக்டர் ஜெ. பரந்தாமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு கூடங்களில் சமையலர், உதவியாளர்கள் போன்றவர்கள் 6 மாதத்திற்கு ஒருமுறை கட்டாய மருத்துவப் பரிசோதனைக்கு உள்ளாக வேண்டும். குறிப்பாக தொற்று நோய்தள் தடுக்கும் வகையில் அவர்களுக்கு மருத்துவ பரிசோதனைகள் செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அப்படி மருத்துவ பரிசோதனை செய்யப்படவேண்டுமென்று எழுத்து மூலமாக தகவல் அனுப்பப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.





திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : இப்போது பல குழந்தைகளுக்கு போலியோ நோய் வந்து சிரமப்படுகிறார்கள் ஆகவே இண்டகிரேடட் சைல்டு டெவலப்மென்ட் ஸ்கீம் என்ற திட்டத்தின்கீழ் சமூக நலத் துறையிலிருந்து பல யூனியன்களை எடுத்து எல்லா ஊர்களிலும் பால்வாடிகளை ஆரம்பித்து இந்தத் திட்டத்தை செயல்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் முடிவு செய்து அறிவிப்பார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த கேள்விக்கு மட்டும் 12 துணைக் கேள்விகள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 39. திரு. எஸ். எஸ். ராமசுப்பு, மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

### சத்துணவு ஊழியர்களுக்கு விடுமுறை.

39—

*1146— திரு. எஸ். எஸ். ராமசுப்பு :

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சத்துணவு ஊழியர்களுக்கு வாரத்தில் ஒரு நாள் விடுமுறை அளிக்கப்படுமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இது அரசின் பர்சீலனையில் உள்ளது என்று சொன்னது மிகவும் மகிழ்ச்சியான செய்தியாகும். ஏனென்றால் வாரத்திற்கு ஒருமுறை ஞாயிற்றுக் கிழமைகளில் விடுமுறை விடப்பட்டால் சத்துணவுக் கூடங்களில் உள்ள குழந்தைகள் எல்லாம் ஞாயிற்றுக்கிழமைகளில் பொதுவாக வருவதில்லை என்பதால் வரமாட்டார்கள். அப்படி வராமல் இருப்பதால் பொருள் மிச்சப்படுவது மட்டுமல்லாமல் அங்கே வேலை செய்பவர்களுக்கு லீவும் வழங்கப்படுவதால் ஓய்வு கிடைப்பதோடு மட்டுமல்லாமல், ஊழல்களைத் தவிர்ப்பதற்கும் இது ஒரு

வாய்ப்பாக இருக்கும். ஆகவே இந்தத் திட்டத்தை விரைவாக கொண்டுவந்து விடுமுறை அளிப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். கொண்டு வந்த இந்த சத்துணவுத் திட்டத்தை ஒருநாள் கூட நிறுத்துவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் விரும்பவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் அதே நேரத்தில் சத்துணவுப் பொறுப்பாளர்களுக்கு எந்த வகையில் வாரத்தில் ஒரு நாள் விடுமுறை கொடுக்கலாம் என்ற கருத்து, எண்ணம், மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய பரிசீலனையில் இருந்து கொண்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இந்த சத்துணவுத் திட்டத்தை ஒருநாள் கூட நிறுத்த மாட்டார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். மிகவும் மகிழ்ச்சியான ஒரு செய்தியாகும். அதே சமயத்தில் சத்துணவு ஊழியர்களுக்கு ரொட்டேஷன் முறையில் விடுமுறை அளிக்கப்படுமா, அதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் பரிசீலனையில் இந்தத் திட்டம் இருந்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஏ. சுப்புரத்தினம்.

திரு. ஏ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுக் கூடங்கள் பல இடங்களிலும், பல ஊர்களிலும் பாதுகாப்பற்ற நிலையிலே இருக்கின்ற காரணத்தாலும், கதவுகள் போன்றவை சரியான முறையில் இல்லாததாலும் சத்துணவுக் கூடங்களுக்கு வரக்கூடிய உணவுப் பொருட்கள் 'ஸ்டாக்' தனியாருடைய வீடுகளில் இறக்கப் படுவதால், அதை வைத்து பல முறைகேடுகள் நடைபெறு





வதை அரசு அறியுமா? அப்படி ஏதும் இருந்தால் அதைத் தடுப்பதற்கு அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது மூலக் கேள்வியோடு தொடர்புடையதாக இருக்க வேண்டும். அதுமாதிரி இருந்தால்தான் பதில் கிடைக்கும். திரு. ஜி. காளன்.

திரு. ஜி. காளன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுக் கூடங்களில் எல்லா நாட்களிலும் சத்துணவு போட வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் கூறி இருக்கிறார்கள். இரண்டு நாட்களுக்கு முன்பு விநாயகர் சதுர்த்தி அன்று குழந்தைகள் எல்லாம் வீடுகளிலேயே உணவு உட்கொண்டிருக்கிறார்கள். ஆனால் சத்துணவு மையங்களிலே உணவு போட்டதாகக் கணக்கு எழுதி வைத்து இருக்கிறார்கள். இதுபோன்ற அநாவசியமான விரயம் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காவது குறிப்பிட்ட நாட்களில் சத்துணவை நிறுத்துவதுதான் அரசுக்குச் சாலச் சிறந்ததாகும். அந்த வகையிலே மிச்சமாகக்கூடிய பணத்தைக் குறைந்த ஊதியத்தில் பணியாற்றக்கூடிய ஊழியர்களுக்காவது அதை சேமித்து சம்பளத்தை உயர்த்த அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஞாயிற்றுக்கிழமை, சனிக்கிழமை, தீபாவளி, பொங்கல், விநாயகர் சதுர்த்தி போன்ற விசேஷ காலங்களில் குழந்தைகள் எந்த அளவிற்கு சத்துணவுக் கூடங்களுக்கு வருகிறார்கள் என்பதை சராசரியாக எடுக்கச் சொல்லி அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுறுத்தப்பட்டு இருக்கிறது. அதற்குப் பின்னால் அதைப் பற்றி மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் முடிவு செய்வார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி கே. மரியமுல் ஆசியா.

திருமதி கே. மரியமுல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுக் கூடங்களில் வேலை செய்யும் பெண் அமைப்பாளர் திருமணம் ஆவதற்கு முன்பு வேலை செய்த இடத்திலேயே, திருமணத்திற்குப் பின்னும் வேலை செய்ய வேண்டி இருப்பதால் அந்த அமைப்பாளருக்கு பணி இடம் மாற்றம் ஏற்படுத்தித் தர நமது அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1991 செப்டம்பர் 16

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி, வாரம் ஒரு முறை விடுமுறை விடப்படுமா என்கிற மூலக் கேள்வி பற்றியது. பணியாளர்களுடைய பிரச்சினை இதிலே வராது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகிறபொழுது மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு இந்த மதிய உணவை ஒரு நாளைக்குக் கூட நிறுத்தக்கூடிய எண்ணம் இல்லை என்று குறிப்பிட்டார்கள். அதே நேரத்தில் வாரத்திற்கு ஒரு நாள் விடுமுறை விடக்கூடிய ஒரு நிலை பரிசீலனையில் இருப்பதாகவும் கூறுகிறார்கள். இது நேருக்கு மாறாக இருக்கிறது. ஆகவே இது குறித்து என்ன திட்டத்தை அரசு வைத்து இருக்கிறது; அமைச்சர் வைத்து இருக்கிறார்கள் என்பதை அவர்கள் சொல்ல விரும்புவார்களா?

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவியினுடைய வாயாலேயே அதைத் தெரிவிப்பார்கள். அதுவரை பொறுத்து இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்மிகு பேரவைத் தலைவர் :** திரு. என். பன்னீர்செல்வம்.

**திரு. என். பன்னீர்செல்வம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பசி வந்திட பத்தும் பறந்து போகும்' என்று பெருந்தலைவர் காமராசர் அவர்கள் கூறினார்கள். ஒரு நாள் சத்துணவை நிறுத்தினால் குழந்தைகள் எங்கு போய் சாப்பிடும்? ஆகையினால் இதை எந்தவகையிலும் நிறுத்தக் கூடாது என்ற அறிவிப்பை (மேசையைத் தட்டும் ஒலி), இதை எந்த விதத்திலும் நிறுத்தக் கூடாது என்ற அறிவிப்பை அதிகாரப்பூர்வமாக உடன் அரசு அறிவிக்குமா என்பதைக் கேட்க ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினருக்கு இந்தத் திட்டத்திலே இருக்கிற அக்கறையைவிட மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவிக்கு அதிகமான அக்கறை இருக்கிறது என்கிற காரணத்தினால் (மேசையைத் தட்டும் ஒலி) அதை நிறுத்துவதைப் பற்றிய பேச்சுக்கே இடம் இல்லாதபொழுது, அதற்கான அறிக்கைகள் எதுவும் தேவை இல்லை என்று கருதுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** செல்வி ஜி. மல்லிகா.



1991 செப்டம்பர் 16]

**செல்வி ஜி. மல்லிகா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு ஊழியர்கள் பகுதி நேரப் பணியாளர்களாக இருப்பதால் அவர்களை முழு நேர அலுவலர்களாகப் பணியாற்றும் வகையில், அவர்களை சமூகநலத் துறை தொடர்புடைய பணிகளில் பயன்படுத்திக்கொள்ள அரசு முன்வருமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் ஏற்கெனவே முன்பு அதுபற்றிச் சொன்னேன். பணியாளர்களை நிரந்தரமாக்குவது போன்ற பிரச்சினைகள் எல்லாம் இதிலே வராது. கேள்வி, வாரம் ஒருமுறை விடுமுறை விடுவது பற்றி.

வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

**15—9—1991 அன்று தி. மு. கழகம் நடத்திய ஊர்வலம் மற்றும் பொதுக் கூட்டத்தின்போது நடைபெற்ற விரும்பத்தகாத சம்பவங்கள் குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் திருவாளர்கள் வி. தண்டாயுதபாணி, சி. சுவாமிநாதன், பெ. பொன்னுசாமி, எஸ். பீட்டர் அல்போன்ஸ் மற்றும் ஆர். சிங்காரம் ஆகியோர் 15-9-1991 அன்று தி.மு.க. நடத்திய ஊர்வலம் மற்றும் பொதுக் கூட்டம் ஆகிய நிகழ்ச்சிகளின்போது நடைபெற்ற விரும்பத்தகாத நிகழ்ச்சிகளைக் குறித்து பேரவையின் இன்றைய இதர நிகழ்ச்சிகளை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று அறிவிப்புகளைக் கொடுத்துள்ளார்கள். இது எவ்வாறு அவையை ஒத்திவைத்து விவாதிக்கும் அளவுக்கு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்று சுருக்கமாக விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

***திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம், செப்டம்பர் 15, அண்ணாவினுடைய 83-வது பிறந்த நாள். தமிழகத்தினுடைய பல்வேறு பகுதிகளிலேயும் அவருடைய பிறந்த நாள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு இருக்கிறது.

முதலமைச்சர், காவல் துறையினருக்கு பதக்கம் வழங்கும் விழாவில், தாங்களும் கலந்துகொண்ட அந்த விழாவில் நானும் கலந்து கொண்டேன். விழா சிறப்பாக, அமைதியாக நடைபெற்றது.

முற்பகல் 10-15

அதைப்போலவே தமிழகத்திலும், சென்னை நகரத்தினுடைய பல்வேறு பகுதிகளிலும் பல்வேறு விழாக்கள் நேற்றையதினம் நடைபெற்று இருக்கிறது. வெற்றி பெற்றால் அண்ணா வழி என்று அறிவித்திருந்த திராவிட முன்னேற்றக் கழகமும் நேற்றைய தினம் சென்னை நகரத்தில் ஊர்வலத்திற்கும், பொதுக் கூட்டத்திற்கும் ஏற்பாடு செய்திருந்தார்கள். அறைகூவல் விடுத்து கூட்டத்தைச் சேர்த்து இருந்தார்கள். அறைகூவல் விடுத்திருந்த காரணத்தால் தானோ என்னவோ போர் குணத்தைப் பெற்ற கூட்டமாக அந்தக் கூட்டம் மாறி இருந்தது. நேற்றையதினம் அண்ணா சாலையில் துவங்கிய அந்த ஊர்வலம் பல்வேறு பகுதிகளிலும் வன்முறைகளில் ஈடுபட்டிருக்கிறது. குறிப்பாக பெரியார் சாலையில் உள்ள தென்சென்னை மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவருடைய வீடு—பெரியார் சாலையில்—இருக்கிறது. கக்கன் காலனிக்கு அருகில் இருக்கிறது. அவருடைய இல்லத்தில் தென் சென்னை மாவட்டத்திற்குச் சொந்தமான ஜீப் கார் முன்னாலே நிறுத்தப்பட்டிருந்தது. அவருடைய வீட்டுக்கு முன்னால் இருந்த கொடி மரம் ஊர்வலத்தினராலே வெட்டி சாய்க்கப்பட்டது. எந்தவிதமான கோபமான, ஆத்திரமூட்டும் செயலும் அங்கே கிடையாது. யாரும் ஆத்திரமூட்டவில்லை, ஆத்திரமூட்டப்படவும் இல்லை. என்றாலும் கூட கொடி மரம் வெட்டி சாய்க்கப்பட்டது. தென் சென்னை மாவட்ட காங்கிரஸ் கமிட்டிக்குச் சொந்தமான ஜீப் கார் அடித்து நொறுக்கப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்லாமல் நாராயணன் என்பவருக்குச் சொந்தமான அம்பாசிடர் காரும் அடித்து நொறுக்கப்பட்டிருக்கிறது. அவருடைய இல்லத்தின் மீது கல் வீசி தாக்கியிருக்கிறார்கள். அவருடைய வீட்டுக்கு முன்னால் போடப்பட்டிருந்த சிமெண்ட் தொட்டிகள் எல்லாம் அடித்து நொறுக்கப்பட்டிருக்கின்றன. அதைப்போல அவருடைய வீட்டுக்குப் பக்கத்திலே அவருடைய தமையனார் கன்னியப்ப உடையார் வீடு இருக்கிறது. அவரும் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவராக பணியாற்றி இருக்கிறார். அவர் மட்பாண்டம் செய்து பிழைப்பவர். மிகுந்த பின்தங்கிய சமுதாயத்தில் பிறந்தவர். அவருடைய வீட்டுக்கு முன்னால் உள்ள காங்கிரஸ் கொடிமரம் வெட்டி சாய்க்கப்பட்டிருக்கிறது. இதுதாண்டா காங்கிரஸ் கன்னியப்ப உடையார் வீடு என்று சொல்லி





தாக்குதல் நடத்தி இருக்கிறார்கள். அவருடைய இல்லத்திற்கு முன்னால் நிறுத்தப்பட்டிருந்த மூன்று டெம்போ வேன்கள் தாக்கப்பட்டு பலத்த சேதத்திற்கு உள்ளாகியிருக்கிறது. அவருக்குச் சொந்தமான அம்பாசிடர் நோவா கார் தாக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டிருக்கிறது. அவருடைய இல்லத்தின் மீது கல்வீசி தாக்குதல் நடத்தி, இல்லத்தில் இருந்தவர்கள் எல்லாம் பயந்து கொண்டு, கதவுகளை எல்லாம் மூடிக்கொண்டு உள்ளே இருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதற்கு பக்கத்தில் எங்கள் தங்கம் எம்.ஜி.ஆர். மன்றம் என்ற மன்றம் இருக்கிறது. அந்த மன்றம் தாக்குதலுக்கு ஆளாகியிருக்கிறது. அது மட்டுமல்லாமல் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொடி மரங்கள் வெட்டி சாய்க்கப்பட்டிருக்கின்றன. அவருடைய இல்லத்திற்கு எதிரில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தால் அமைக்கப்பட்டு, இன்னும் திறக்கப்படாமல் இருக்கிற அண்ணா அவர்களுடைய சிலையை சேதப்படுத்த முயற்சி நடைபெற்றிருக்கிறது. ஆனால் அங்கேயிருந்த சிலர் அது அண்ணா சிலை. இன்று அண்ணாவின் பிறந்தநாள் அண்ணாவின் சிலையப்பா அது என்று கூறிய காரணத்தால் பெருமளவில் சிலை சேதப்படுத்தப்படவில்லை. அவர்களுக்கு அண்ணாவின் மீது என்ன கோபம் என்று தெரியவில்லை. அண்ணாவின் சிலையை சேதப்படுத்த, அண்ணா பிறந்த நாளில் முயற்சித்து இருக்கிறார்கள். பக்கத்தில் இருந்த கொடிமரங்கள், அன்னை ஆர்ட்ஸ்க்கு முன்னால் இருந்த கொடி மரம் வெட்டி சாய்க்கப்பட்டிருக்கின்றன.

அதைப்போல கக்கன் காலனி முழுவதும் குடிசைப் பகுதி. அந்த குடிசைப் பகுதியில் உள்ளே நுழைந்து குடிசைகள் தாக்கப்பட்டு சேதப் படுத்தப்பட்டிருக்கின்றன. குடிசை வாசிகள் மிகவும் பின்தங்கிய சமுதாயத்தை சேர்ந்த மக்களும், தாழ்த்தப்பட்ட மக்களும் வசிக்கும் அந்தப் பகுதியில் தண்ணீர் பிடிக்க வெளியில் அவர்கள் வைத்திருந்த பாத்திரங்கள் அனைத்தும் அடித்து நொறுக்கப்பட்டிருக்கின்றன. சில பாத்திரங்களை தூக்கிக் கொண்டு சென்று விட்டார்கள். எவர்சில்வர் போன்ற பாத்திரங்களை எல்லாம் தூக்கிச் சென்று விட்டதாக அந்த குடிசை வாசிகள் என்னிடத்தில் நேற்றைய தினம் சொன்னார்கள். நேற்று நான் அங்கே போய் இருந்தேன். அவர்கள் எல்லாம்—தாய்மார்கள் குறிப்பாக கல்லடி தாக்குதலுக்கும், தடிவீச்சு தாக்குதலுக்கும் இலக்காகி, பலருடைய தலையில் காயம் ஏற்பட்டு, ரத்த காயத்தோடு நின்று இருந்தார்கள், இந்த அளவுக்கு அந்தப் பகுதியில் சம்பவங்கள் நடைபெற்று இருக்கின்றன.

இந்தத் தாக்குதலுக்கு ஏதாவது காரணம் இருக்கிறதா என்றால் அவர்களிடத்தில் வந்திருக்கிற புதிய போர் குணத்தைத் தவிர வேறு காரணம் இருக்க முடியும் என்று எனக்குத்

தெரியவில்லை. மாலையில் 5½ மணிக்கு அந்தத் தாக்குதல்கள் அங்கே நடைபெற்று இருக்கின்றன. எனக்கு 6½ மணிக்கு தகவல் கிடைத்தவுடன் நான் காவல் துறை ஆணையாளர் அவர்களை தொடர்பு கொள்ள முயற்சித்தேன். அவர் எனக்கு கிடைக்கவில்லை, என்றாலும் தொலைபேசி மூலமாக தொடர்பு கொள்ள பலமுறை முயற்சிகளை மேற்கொண்டோம். அத்தோடு அந்தப் பிரச்சினைகள் முடிந்துள்ளன. அதற்கு பக்கத்தில் தான் கழகத்தினுடைய தலைவரும், பொதுச் செயலாளரும்-இந்தச் சம்பவங்கள் நடைபெற்ற இடத்திற்கு மிக அருகில் இருந்த பகுதியில் நின்று கொண்டு தான் ஊர்வலத்தை பார்வையிட்டு இருக்கிறார்கள். அந்த ஊர்வலம் முடிகிற இடத்தில் உஸ்மான் ரோடும், துரைசாமி ரோடும் சந்திக்கிற இடத்தில் வேறு பல்வேறு தாக்குதல்கள் நடைபெற்றதாக பத்திரிகைகளில் கூட இன்றையதினம் செய்தி வந்திருக்கிறது. குறிப்பாக அங்கே பவார் ஒயின்ஸ் என்கிற ஒரு சீமை மதுக்கடை அங்கே இருக்கிறது. அந்தச் சீமை மதுக்கடையிலே பலர் புகுந்து, சீமை மதுவை வாங்கியதாகவும், வாங்கிய மதுவிற்குப் பணம் கொடுக்காத காரணத்தாலே, உள்ளே இருந்த 6 பேர்களோடு அந்தக் கடையினுடைய சொந்தக்காரர் கடையினுடைய கதவுகளை மூடியதாகவும், அதனைத் தொடர்ந்து அந்தப் பகுதி முழுவதும் அனைத்துக் கடைகளும் சூறையாடப்பட்டதாகவும் செய்திகள் வந்து கொண்டு இருக்கின்றன. அந்தக் கடைகளுக்கு முன்னாலே, பக்கத்தில் நிறுத்தப்பட்டு இருந்த தனியாருக்குச் சொந்தமான வாகனங்கள், ஸ்கூட்டர்கள், கார்கள், காவல்துறைக்குச் சொந்தமான வாகனங்கள் அனைத்தும் தாக்குதலுக்கு இலக்காகி இருக்கின்றன. அதேபோன்று காவல்துறையினர் பல பேர்கள் தாக்கப்பட்டு இருக்கிறார்கள். செம்பியம் பகுதியைச் சேர்ந்த அசிஸ்டண்ட் கமிஷனர் தாக்கப்பட்டு, தலையிலே காயம் ஏற்பட்டு, அவர் இன்றைய தினம் மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டு இருப்பதாக செய்திகள் வந்து கொண்டு இருக்கின்றன. இப்படி பல்வேறு பகுதிகளிலேயும் தாக்குதல்களை நடத்தியிருக்கிறார்கள். குறிப்பாக தாய்மார்கள் பல பகுதிகளிலே தாக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் சொல்வது, இவர்களுக்கு நாங்கள் ஓட்டுப் போடவில்லை என்ற காரணத்தாலே எங்களைத் தாக்கியிருக்கிறார்கள் என்று பலரும் அங்கே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

முற்பகல் 10-20

இந்தக் கக்கன் காலனித் தாக்கப்பட்டவுடனே, 6-30 மணிக்குப் பின்னாலே நாங்கள் பலமுறை தொடர்பு கொண்டோம், இரவு 8-45 மணிக்கு காவல் நிலையத்திற்கு நேரடியாகச் சென்று புகார் தாக்கல் செய்யப்பட்டு இருக்கிறது.





அதற்கு இடையிலே அவர்களால் செல்ல முடியவில்லை. என்னை அங்கே வரவேண்டாம் என்றுதான் தொலைபேசியிலே தொடர்பு கொண்டபோது கூட, இன்னும் அங்கே பதட்டம் நிலவிக் கொண்டு இருக்கிறது. எனவே அங்கே வராதீர்கள் சிறிது நேரம் கழித்து வாருங்கள் என்று சொன்னார்கள். இருந்தாலும் நான் 8 மணிக்கே சென்று, 9-30 மணி வரை அங்கே இருந்தேன். நான் அங்கே இருக்கும்போதே, சில நேரங்களில் பதட்டம் நிலவியது. கற்களும் வீசப்பட்டன.

அதேபோல் நம்முடைய சட்டப் பேரவை உறுப்பினர் திருமதி ஜீனத் ஷெர்புதீன் அவர்கள் அங்கே 9 மணிக்குப் பின்னாலே போனபோது, அவர்களுடைய கார் மீதும் இரண்டு சோடா புட்டிகள் வீசப்பட்டதாகவும் எல்லோரும் சொல்கிறார்கள். காவல் துறையினர் உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்காதது ஒரு மனக்குறை. அவர்கள் உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்கவில்லை. நான் 9-45 மணிக்கு டெலிபோன் செய்தபோது, ஏற்கனவே காவலர்கள் அங்கே போயிருக்கிறார்கள் என்று கமிஷனர் என்னிடத்திலே சொல்லியிருக்கிறார்கள். அங்கே பெரிய பாதுகாப்பு போட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால் பாதுகாப்பு அங்கே இல்லை. 9-45-க்கு அல்ல, 10-15-க்கு நான் கேட்டபோது, 10-30-க்கு கேட்டபோது கூட, பாதுகாப்பு இல்லை. பிறகு இரவு 12 மணிக்கு ஒரு வேனும் ஜீப்பும் அங்கே சென்று பார்த்து விட்டு வந்தது. 2, 3 காவலர்களை அங்கே விட்டுவிட்டு வந்திருக்கிறார்கள்.

எனவே இதுபோன்ற ஊர்வலங்கள் நடைபெறுகின்ற நேரத்திலே இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாமல் இருக்க வேண்டும் என்று சொன்னால், பிரமுகர்கள், வீடுகள், நலிந்த பிரிவினர் வாழ்கின்ற பகுதிகள் அனைத்திற்கும் காவல்துறை பாதுகாப்பு அளித்தாகவேண்டும். இந்தச் சம்பவங்களுக்குப் பின்னாலே வேறு ஏதேனும் சதி இருக்கிறதா என்பதைப் பற்றியும் அரசு கவனம் செலுத்தவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அப்படி ஏதாவது இருக்குமானால், கண்டிப்பாக கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும். காரணம் வெற்றி பெற்றால் அண்ணா வழி என்று சொன்னவர்கள், அண்ணாவினுடைய பிறந்த நாள் விழாவன்று, வேறு வழியைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். நிச்சயமாக அண்ணா ஒரு போதும் வன்முறையை ஏற்றுக் கொண்டதில்லை. எனவே அண்ணாவின் பிறந்த நாள் அன்று வன்முறையில் ஈடுபட்டிருக்கின்ற அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நான் அறிந்தவரையில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் பிரமுகர்கள் அங்கே நின்றுகொண்டு, சில பேர்கள் அங்கே நின்று கொண்டு, இவர்களைத் தூண்டிவிட்டதாக செய்திகள்

வந்து கொண்டு இருக்கின்றது. எனவே தொடர்ந்து இது போன்ற சம்பவங்கள் நடைபெறாமல் இருக்கவேண்டும். தொடர்ந்து இம்மாதிரி சம்பவங்கள் நடைபெறுவதைத் தடுத்து நிறுத்தியாக வேண்டும். இப்போது அங்கே மக்கள் மத்தியில் பீதி நிலவிக் கொண்டிருக்கிறது. பதட்டம் நிலவுகிறது. இப்படிப் பதட்டம் நிலவிக் கொண்டிருக்கிற காரணத்தாலே, இது குறித்து விரிவாக விவாதிக்க வேண்டும் என்று நான் உங்களிடத்திலே கேட்டுக் கொள்கிறேன். இந்தப் பிரச்சினை குறித்து விரிவாக விவாதிக்க சபையினுடைய இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க அனுமதி வேண்டும் என்று நான் தங்களை வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மாண்புமிகு அவை முன்னவர்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்து, நேற்று, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக அவர்கள் நடத்திய முப்பெரும் விழாவையொட்டி, நடத்திய ஊர்வலத்தின்போது, ஏற்பட்ட அசம்பாவிதங்களைப் பற்றி இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். இது பற்றி அரசுக்குக் கிடைத்த தகவல்களினுடைய அடிப்படையில் சில கருத்துக்களை இந்த அவைக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

திராவிட முன்னேற்றக் கழகம் முப்பெரும் விழாவைக் கொண்டாடுவதற்கான முறையில், சென்னை அண்ணா சாலையிலுள்ள சிம்சன் சந்திப்பிலிருந்து தொடங்கி, பனகல் பார்க் வரையிலும் இந்த ஊர்வலம் செல்லும் என்றும் பனகல் பார்க்கிலே விழா கொண்டாடுகின்ற பொதுக்கூட்டம் நடைபெறும் என்றும் அறிவித்திருந்தார்கள். நேற்று மாலை 3.30 மணி அளவிலேயே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் சிம்சன் கம்பெனிக்கு அருகிலே கூடி ஊர்வலத்தை நடத்துவதற்கு, அது தொடங்குகின்றதற்கு முன்பே, அந்தப் பகுதியிலே வந்த பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளைத் தாக்கியிருக்கிறார்கள். ஆக அந்தப் பகுதி வேறு ஒரு பக்கம் வருகின்றது. பாதுகாப்பாகத் தான் இடம் ஒதுக்கப்பட்டிருந்தாலும்கூட, அந்தப் பேருந்துகள் எதுவும் வரக் கூடாது என்று தடுத்து நிறுத்தி அதனுடைய கண்ணாடிகளை எல்லாம் உடைத்து, சேதப்படுத்தியதற்குப் பிறகு, போலீசார் தலையிட்டு அந்த பல்லவன் போக்குவரத்துப் பேருந்துகளை வேறு வழித் தடங்களிலே மாற்றுவதற்கு ஏற்பாடுகளைச் செய்த பிறகு, அங்கிருந்து மாலை 4.15 மணிக்கு ஊர்வலம் தொடங்கிற்று. ஊர்வலம் தொடங்கி 5.15 மணி அளவிலே செல்கின்றபோது





பல்லவன் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த ஏ24 டி.என். 01 எண். 1355 என்கின்ற பல்லவன் போக்குவரத்துப் பேருந்து ஒன்றும் தாக்கப்பட்டிருக்கிறது. அது பீட்டர்ஸ் ரோடு அருகில். அதற்குப் பிறகும் இந்த ஊர்வலம் தொடர்ந்து சென்று கொண்டிருக்கும் பொழுது கோடம்பாக்கத்திற்கு அருகிலே உள்ள பாம்குரோ ஓட்டலுக்கு அருகில் அங்கே இருக்கின்ற அந்த ஓட்டலைச் சேர்ந்த அண்ணா தொழிலாளர் சங்கப் பேரவையினர் கொடி மரத்தை நட்டு அந்தச் சங்கத்தினை அமைத்திருக்கிறார்கள். அந்தக் கொடி மரத்தையும் வெட்டி அந்த சங்கத்தையும் சேதப்படுத்தியது மட்டுமல்லாமல் அந்த பாம்குரோ ஓட்டலுக்குள்ளே நுழைந்து, அந்த ஓட்டலினுடைய பல ஒளி விளக்குகளை எல்லாம் உடைத்தது மட்டுமல்லாமல் அதற்குள்ளே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்ற சில வண்டிகளையும் சேதப்படுத்தியிருக்கிறார்கள். அதன் காரணமாக பாம்குரோ ஓட்டலைச் சேர்ந்த அண்ணா தொழிலாளர் சங்கத்தினுடைய தலைவர் வி. கண்ணன் என்பவர் ஈ3. தேனாம்பேட்டை காவல் நிலையத்தில் ஒரு வழக்கை, புகார் மனு கொடுத்திருக்கிறார்கள். அது ஈ3 காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகும் அந்த ஊர்வலத்தினர் சென்று கொண்டிருக்கும்பொழுது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டது மாதிரி கன்னியப்ப உடையார், அவருடைய சகோதரர் நாராயணன் ஆகியோர் இருவரும் குடியிருக்கிற பகுதிக்குச் செல்கின்றபோது அவர்கள் கூறிய மாதிரி அங்கே இருந்த காங்கிரஸ் கொடி மரத்தையும் வெட்டி வீழ்த்தியது மட்டுமல்லாமல் அங்கே நாராயணன் வீட்டில் இருந்த ஒரு ஜீப் காரையும் ஒரு காரையும் அவர்கள் சேதப்படுத்தியிருக்கிறார்கள். அதைப் போன்றே கன்னியப்ப உடையாருக்குச் சொந்தமான அம்பாசிடர் கார் ஒன்றையும் இரண்டு வேன்களையும் ஒரு டயோடா காரையும் அங்கே சேதப்படுத்தியிருக்கின்றார்கள்.

அது மட்டுமல்லாமல் இது தொடர்பாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன கலவரங்கள் அதனால் ஏற்பட்ட சேதங்கள், அதனுடைய முழு விவரத்தையும் அடிப்படையாக வைத்து அங்கே திருமதி ஜானகி கன்னியப்ப உடையார் அவரும், திரு. நாராயணன் அவரும் எப். 3 நுங்கம்பாக்கம் காவல் நிலையத்தில் புகார் மனு ஒன்றை கொடுத்திருக்கிறார்கள். அங்கே மேலும் அந்த ஊர்வலம் செல்லுகின்றபோது அது கிட்டத்தட்ட பனகல் பார்க்கை நெருங்குகின்றபோது அத்தகைய நேரத்தில் அங்கே ஆட்டோ ரிக்ஷா ஒன்றிலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கொடியிலே உள்ள வண்ணங்கள் தீட்டிய ஆட்டோ ரிக்ஷா ஒன்று செல்கின்றபோது அந்த ஆட்டோ ரிக்ஷாவையும் மடக்கி, அதனுடைய ஓட்டுநரையும் அடித்தது மட்டுமல்லாமல் அவன் ஆட்டோவை விட்டுவிட்டு ஓடிவிட்டான். அந்த ஆட்டோ

விற்கு நெருப்பு வைக்க முயற்சி செய்தபோது காவல் துறையினர் அதைத் தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள். அதற்கு மேலும் ஊர்வலம் செல்கின்றபோது பனகல் பார்க் அருகில் நெருங்குகின்றபோது மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டது மாதிரி பவார் ஒயின் ஷாப் என்கின்ற ஒரு ஒயின் ஷாப்பிற்குள்ளே சில பேர் புகுந்து அங்கே குடித்திருக்கிறார்கள். குடித்தது மட்டுமல்லாமல் காசு கொடுக்காமலே அவ்வளவு பேரும் வெளியேறி இருக்கிறார்கள். ஆகையால் அதன் காரணமாக அந்த ஒயின் ஷாப்காரர் அதனுடைய கதவுகளையெல்லாம் மூடியிருக்கிறார்கள். மூடியதற்குப் பிறகு எல்லோரும் கல்லை எடுத்து எறிந்து, அந்த ஒயின் ஷாப்பைத் திறக்க வேண்டுமென்றும், ஆக மூடியதற்கு ஆத்திரப்பட்டும் கலகம் விளைவித்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு பக்கத்தில் இருந்த கடைகள், மற்றவைகளையும் அடித்து நொறுக்கி அதிலே இருக்கின்ற கண்ணாடிக் கதவுகள், கண்ணாடி ஜன்னல்கள் ஆகியவற்றையெல்லாம் நொறுக்கியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு அங்கே வந்த இரண்டு மோட்டார் சைக்கிள்களையும், ஒரு ஸ்கூட்டரையும் சேதப்படுத்தித் தள்ளியிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் பனகல் பார்க் பக்கத்தில் இரண்டு ஜவுளிக் கடைகள் எல்லாம் இருக்கின்றன. அதற்குள்ளே புகுவதற்கு ஒரு பெரும் கூட்டம் வந்தபோது அதைத் தடுத்து நிறுத்துவதற்கான முயற்சிகளிலே காவல் துறையினர் ஈடுபட்டு, மேலும் கலகம் விளைவிக்காமல் இருப்பதற்கு கலைந்து போகும்படி கூறியும், கலைந்து போகாமல் அவர்கள் அங்கே கூடிக் கொண்டு கலகம் விளைவித்ததன் காரணமாக ஆறு ரவுண்டு அங்கே கண்ணீர்ப் புகைக் குண்டுகளை அவர்கள் வீச வேண்டிய அவசியம் ஏற்பட்டு, அதற்குப் பிறகு அங்கே கூடியிருந்த கூட்டங்களை ஓரளவிற்குக் கலைத்து, அங்கே ஒரு அமைதியை ஏற்படுத்துகின்ற சூழ்நிலையை உருவாக்கினார்கள். அதன் சார்பாக பல்வேறு வழக்குகள், புகார்கள் பதிவு செய்யப்பட்டு, காவல் துறையினர் அது பற்றிய விசாரணையிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். அது பற்றிய முழு விவரங்களையும் கேட்டறிந்து கொள்கின்ற சூழ்நிலையில் விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

*முற்பகல் 10-30*

ஆனால் அதையெல்லாம் தெரிந்து அவர்கள் எடுத்துச் சொன்ன மாதிரி இந்த ஊர்வலம் நடத்துவார்களேயானால். அதிலே பல்வேறு சேதங்கள், கலவரங்கள் இப்படிப்பட்ட குழப்பங்கள் எல்லாம் ஏற்படும் என்று முன் கூட்டியே கருதியிருக்க வேண்டும். ஏனென்றால் அவரே சொன்ன மாதிரி வெற்றி பெற்றால் அண்ணா வழி என்றால் வெற்றி பெறாவிட்டால் வேறு வழி என்று தானே அதற்குப் பொருள்படும். ஆகவே வேறு வழியை தழுவி இருப்பார்களோ என்று எண்ணித் தான் அங்கே காவல் துறையைச் சேர்ந்த 3 டெபுடி கமிஷனர்





களும், 2 போலீஸ் சூப்பிரண்டென்டுகளும், ஒரு கம்மான்டென்டும் 10 அசிஸ்டென்ட் கமிஷனர்களும், 27 இன்ஸ்பெக்டர்களும், 90 ஹெட்கான்ஸ்டபிள்களும், 255 போலீஸ் கான்ஸ்டபிள்களும், 35 செக்ஷன் ஆப் ஆர்ம்ட் ரிசர்வ் பெர்சனல்களும் பாதுகாப்பிற்காக நெடுக இருந்து கொண்டு அதிக சேதம் ஏற்படாத அளவுக்கு பாதுகாக்கின்ற பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இந்த அளவுக்குப் பாதுகாப்பு இல்லாவிட்டால் இன்னும் அதிக சேதம் ஏற்படுமோ என்று கூட எண்ணும் அளவிற்கு அவர்களுடைய ஆத்திரம் இருந்திருக்கிறது. இருந்தாலும் இவற்றை எல்லாம் மீறி ஆங்காங்கே இந்தக் கூட்டத்தினர் சேதம் விளைவித்ததன் காரணமாக, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சுட்டிக்காட்டிய விரும்பத்தகாத அசம்பாவிதங்கள் வழி நெடுக நடைபெற்றிருக்கிறது. அது மட்டும் அல்லாமல் ஊர்வலத்தோடு சேர்ந்து போகிற அளவுக்கு, பாதுகாப்பைத் தருவதற்காக நான் மேலே குறிப்பிட்ட காவல் துறை அதிகாரிகள் எல்லாம் ஈடுபட்டிருந்தார்கள் என்பது மட்டுமல்லாமல் வழி நெடுக ஆங்காங்கே நிறுத்தி சேதம் ஏதும் ஏற்பட்டுவிடாமல் தடுப்பதற்கு பிக்கெட்டிங் என்று சொல்லப்படுகிற அளவுக்கு ஆங்காங்கே 3 உதவி கமிஷனர்களையும், 10 இன்ஸ்பெக்டர்களையும், 35 சப்-இன்ஸ்பெக்டர்களையும், 35 ஹெட்கான்ஸ்டபிள்களையும், 100 போலீஸ்காரர்களையும் நிறுத்தியதோடு மட்டுமல்லாமல் 20 செக்ஷன் ஆர்ம்ட் ரிசர்வ்வும் ஆங்காங்கே நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தனர்.

ஆனால் அவர்கள் எடுத்துச் சொன்ன மாதிரி விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன. ஆங்காங்கே பாதிக்கப்பட்டவர்களும் புகார்களைக் கொடுத்திருக்கிறார்கள். காவல் துறையினர் மேலும் புலன் விசாரணை செய்துக் கொண்டிருக்கிறார்கள். இதுபற்றி தீவிர நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று எடுத்துச் சொன்னார்கள். அந்த விசாரணையின் அடிப்படையில் அதிலே யார் யார் ஈடுபட்டு அடையாளம் காட்டும் அளவுக்கும், தெரிகின்ற அளவுக்கும் இருக்கிறார்களோ அவர்களைக் கைது செய்வதற்கான முயற்சிகளிலே காவல் துறையினர் ஈடுபட்டிருக்கிறார்கள். அதன் விவரங்கள் பின்னால் வரக்கூடும். ஆனால் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதில் மட்டும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிற அளவிலேயும் மற்றவர்கள் எண்ணி இருக்கிற அளவிலேயும் இந்த அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளும். எப்படியிருந்தாலும் எந்த ஊர்வலங்கள் நடைபெற்றாலும் ஊர்வலத்தினுடைய நோக்கம் நிறைவேறுகிற அத்தகைய தன்மைகளில் ஈடுபடவேண்டுமே தவிர, இத்தகைய சேதங்கள் ஆகியவற்றை ஏற்படுத்துகிறபோது பொது மக்களையும், பொது மக்களுடைய சொத்துக்களும் மற்றவைகளுக்கும் சேதம் ஏற்படுகிறபோது கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியம்தான் வருகிறது. அந்த வகையில் இந்த அரசு கடுமையான நடவடிக்கை

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1991 செப்டம்பர் 16

எடுக்கும், மாண்புமிகு உறுப்பினர்களுடைய உணர்வை அடிப்படையாகக் கொண்டு, அது மட்டும் அல்லாமல் சட்டம் ஒழுங்கை காப்பாற்ற வேண்டிய அவசியம் இருப்பதன் காரணமாகவும் எதிர் காலத்தில் இப்படிப்பட்ட அசம்பாவிதங்கள் ஏற்படாத அளவுக்கு திட்டத்தை நிறைவேற்றுவதற்கான முயற்களிலே எந்த அளவுக்கு ஈடுபடுத்தவேண்டுமோ அதை ஈடுபடுத்துவதற்கும் இந்த அரசு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும். புலன் விசாரணை முடிந்த அளவிலே எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை தீவிரமாகவும் கடுமையாகவும் இந்த அரசு எடுக்கும் என்பதை நான் கூறியதன் காரணமாக இது குறித்து அவையை ஒத்தி வைத்து மேலும் விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதை மட்டும் இந்த அவையிலே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒத்திவைப்புத் தீர்மானத்தில் வேறு விளக்கம் வேண்டாம். ஒத்திவைப்பு தீர்மானத்தில் இது போன்று அலவ் பண்ணுவது இல்லை. (குறுக்கீடு) நீங்கள் ஸ்பெஷல் மென்ஷன் என்று கேட்பது வேறு, இது வேறு.

மாண்புமிகு அவை முன்னவரின் விளக்கத்திற்குப் . பின், அவையை ஒத்தி வைத்து இது குறித்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

## 3. கவன ஈர்ப்பு.

### தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை, பேராவூரணி மின் கோட்டத்தில் தெரு விளக்குகள் எரியாதது குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளைக் குறித்து கவன ஈர்ப்பு. திரு.ஆர் சிங்காரம் அவர்கள் அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

**திரு. ஆர் சிங்காரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை பேராவூரணி மின் கோட்டத்தில் எல்லா தெரு விளக்குகளும் எரியாததால் அந்தப் பேராவூரணி தொகுதி பொதுமக்கள் மத்தியில்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதிலே இருப்பதைத் தான் படிக்க வேண்டும். அஜெண்டாவிலே கொடுத்து இருப்பதை மட்டும் படிக்க வேண்டும். கவன ஈர்ப்பு தீர்மானத்திலே. நீங்கள் எழுதிக் கொடுத்ததைப் படிக்கக் கூடாது.



1991 செப்டம்பர் 16]

**திரு. ஆர். சிங்காரம் :** தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை பேராவூரணி மின் கோட்டத்தில் தெரு விளக்குகள் எரியாதது குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தை உள்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் அறிக்கை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

### விளக்கக் குறிப்பு

பேராவூரணி சட்டமன்ற தொகுதியில் பட்டுக்கோட்டை, சேதுபாவாசத்திரம், பேராவூரணி, திருவோணம் ஆகிய நான்கு ஊராட்சி ஒன்றியங்களும் மற்றும் பேராவூரணி, பெருமகளூர் ஆகிய இரு பேரூராட்சிகளும் அடங்கி உள்ளன. மேற்படி நான்கு ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 82 ஊராட்சிகளிலும் (கிராமப் பஞ்சாயத்துக்கள்) மொத்த தெரு விளக்குகள் 5,748-ல் 1,391 தெரு விளக்குகள் எரியவில்லை. மீதி 4,357 தெரு விளக்குகள் எரிந்து கொண்டிருக்கின்றன. பேராவூரணி பேரூராட்சியில் உள்ள மொத்தம் 890-ல் அனைத்துத் தெரு விளக்குகளும் எரிகின்றன. ஆனால் பெருமகளூர் பேரூராட்சியில் மொத்தமுள்ள 284 தெரு விளக்குகளில் 12 மட்டுமே எரியாதவையாகும். மேற்படி 12 தெரு விளக்குகளையும் உடன் எரியவிட பேரூராட்சி நிர்வாக அலுவலர் தக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

2. பேராவூரணி சட்டமன்ற தொகுதியில் உள்ள கிராமங்களில் சில தெருக்களில் இடையிடையே உள்ள ஒரு சில தெரு விளக்குகள் மட்டும் பல்புகள் மற்றும் மின் சாதனங்கள் பழுது அடைந்துள்ள நிலையில் எரியாமல் உள்ளன. ஊராட்சியிலும் ஊராட்சி ஒன்றியத்திலும் போதிய நிதி வசதி இல்லாமையால் புதிய பல்புகள் மற்றும் இதர உபகரணங்கள் வாங்கிப் பொறுத்துவதில் காலதாமதம் ஏற்பட்டது. தற்சமயம் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கும், தலவரி, மேல்வரி, ஈட்டு மான்யம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கூறிய நிதியிலிருந்து புதிய பல்புகள் இதர உபகரணங்கள் வாங்கிப் பொருத்தி அனைத்துத் தெரு விளக்குகளையும் எரியவைக்க தக்க நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது.

3. எனவே, பேராவூரணி சட்டமன்றத் தொகுதியில் உள்ள கிராமங்களில் உள்ள அனைத்துத் தெரு விளக்குகளும் எரியவில்லை என்பது சரி அல்ல.

**திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு இங்கே வைத்திருந்த அறிக்கையைப் பார்த்தேன். இந்த அறிக்கையில் பெரும்பாலான தெரு விளக்குகள் எரி

[திரு. ஆர். சிங்காரம்] [1991 செப்டம்பர் 16

வதாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் பெரும்பாலான தெரு விளக்குகள் எரியாமல் இருப்பது குறித்துத்தான் என்னுடைய கோரிக்கையாகும்; அப்படித்தான் நடைமுறையில் இருக்கிறது. இந்த தெரு விளக்குகள் எல்லாம் உடனே எரிவதற்கு அரசு முயற்சி எடுக்குமா, நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–35

**மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு :** பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு ஆண்டுக் காலமாக இருண்ட கண்டமாக இருந்த தமிழகத்தை ஒளிவிளக்கை மாற்ற வேண்டும்; அத்தகைய செயல்களைச் செய்வார் என்ற நம்பிக்கையில் தான் $5\frac{1}{2}$ கோடி தமிழ் மக்களும் எங்கள் இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுக்கு வாக்களித்திருக்கிறார்கள். தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சி பொறுப்பை ஏற்றவுடன் முதற் கட்டமாக உள்ளாட்சித் துறையில் இருக்கின்ற அதிகாரிகளை எல்லாம் கூப்பிட்டு தமிழகத்திலே விளக்குகள் எல்லாம் எரிய வேண்டும் என்று 3 கோடி ரூபாய் பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாது நிதி வசதிகள் இல்லாத ஊராட்சி ஒன்றியங்களுக்கு மின் கட்டணமாக 1 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். விரைவிலே நல்ல தரமான பல்புகளும் மின் சாதனங்களும் வாங்குவதற்காக ஒரு உயர்மட்ட குழு ஒன்றையும் தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் அமைப்பதற்கு ஆணையிட்டிருக்கிறார்கள். அந்தக் குழு பரிசீலித்ததற்குப் பிறகு தமிழகத்தில் இருக்கின்ற எல்லா தெரு விளக்குகளையும் எரிய வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஆர். சிங்காரம்.

**திரு. ஆர். சிங்காரம் :** இந்தத் தெரு விளக்குகளைப் பொறுத்தவரையில்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கொடுத்துள்ள அறிக்கையிலே நீங்கள் ஒரு விளக்கம் கேட்கலாம்.

**திரு. ஆர். சிங்காரம் :** தலைவர் அவர்களே, அதைத்தான் சொல்ல வருகிறேன். வேறு ஒன்றும் நான் லெக்சர் அடிக்கவில்லை. தெரு விளக்கை பொறுத்தவரையில் பெரும்பாலும் என்னுடைய தொகுதி மட்டுமல்லாமல் தமிழகத்திலே எல்லா தெருவிளக்குகளும் எரியவில்லை. அதற்கு இந்த அரசு காரணம் அல்ல. நான் அதை தெளிவாக்க் குறிப்பிட விரும்புகிறேன்.



1991 செப்டம்பர் 16]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே ஒரு அறிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையின் மீது ஏதாவது குறிப்பிட்ட விளக்கங்களைக் கேட்க வேண்டும். இல்லையென்றால் அமைச்சரும் உங்களுக்கு விரிவான விளக்கம் கொடுக்க வேண்டியதாகப் போய்விடுகிறது.

**திரு. ஆர். சிங்காரம் :** தலைவர் அவர்களே, ஊராட்சிகளில் நிதி பற்றாக்குறை காரணமாக தமிழக அரசு 3 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, அதற்கான ஏற்பாட்டையும் செய்வதாக அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதற்கான குழுவையும் நியமித்து பரிசீலிப்பதாக அறிவித்திருக்கிறார்கள். நான் மகிழ்ச்சியுடன் அதை ஏற்றுக்கொள்கிறேன். தெரு விளக்கு பொறுத்தவரையில் கடந்த ஆட்சிக் காலத்தில் ஒரு தெரு விளக்குக்கு ஒரு போஸ்ட் நடுவதற்கு ஊராட்சியிலிருந்து 20 ரூபாய் கட்ட வேண்டும் என்ற விதி இருந்தது. அந்த ஆட்சி காலத்திலே கடைசி நேரத்திலே அது 300 ஆக உயர்த்தப்பட்டது. இன்று ஒரு ஊராட்சியில் 10 போஸ்ட் நட வேண்டுமென்று சொன்னால் 3,000 ரூபாய் பணம் கட்ட வேண்டிய ஒரு துர்ப்பாக்கியமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்தத் தொகையை தயவு செய்து குறைக்க வேண்டும். ஏனென்றால் நிதி இல்லாத ஊராட்சி ஒன்றியங்கள் திண்டாடிக்கொண்டிருக்கின்றன. ஆகவே அதையும் பரிசீலிக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்டு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் விவாதத்திலே பேசுவது மாதிரி, பொது விவாதத்திலே பேசுவது மாதிரி எல்லா அமைச்சர்களுக்கும் கோரிக்கை வைத்துக்கொண்டு இருக்கக் கூடாது. உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கம் வைத்திருக்கிறார். அந்தத் தொகையைக் குறைப்பதற்கு முயற்சி எடுக்கப்படுமா என்று, அவ்வளவுதான் கேள்வி, அதிலே வரலாம்.

**திரு. ஆர். சிங்காரம் ;** பேரவைத் தலைவர் அவர்களே, தெரு விளக்குப் பிரச்சினை வருவதால் அதில் உள்ள கஷ்டங்களை சொல்ல நினைத்தேன். இன்னொரு வாய்ப்பு எனக்குக் கிடைக்காது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கஷ்டங்களை எல்லாம் இதில் வராது. கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே கேள்விதான் கேட்க வேண்டும். இரண்டு கேள்விகள் கேட்கலாம்.

**திரு. ஆர். சிங்காரம் :** ஆகவே தமிழகத்தில் உள்ள தெரு விளக்குகள் எல்லாம் எரிவதற்கான முயற்சியை அரசு விரைந்து எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்,

[1991 செப்டம்பர் 16

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, உறுதியாக தமிழகத்தில் இருக்கின்ற தெரு விளக்குகளை எல்லாம் எரிய வைப்பதற்கு தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 4. மானியக் கோரிக்கைகள் 1991–92—விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 18—மருத்துவம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளின் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 18—மருத்துவம். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''மருத்துவம் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 249,40,36,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்'' என்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 224. திரு. மா. சுந்தரதாஸ்.

THIRU M. SUNDARADOSS : Mr. Speaker Sir, to discuss the need to operate Mobile Health Clinics in important Cities and Towns, I move..

"that the allotment of Rs. 249,40,36,000 under Demand No. 18 be reduced by Rs. 100."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 196. டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

மருத்துவம் பற்றிய 18ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 249,40,36,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் ''



---- செப்டம்பர் 16]

(ஆ) கோரிக்கை எண் 19—பொதுச் சுகாதாரம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 19—பொதுச் சுகாதாரம். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை எண் 19—

''பொதுச் சுகாதாரம் பற்றிய 19ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 161,43,53,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'' என்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண். 273 திரு. ஆர். சிங்காரம்

முற்பகல் 10-40

திரு. ஆர். சிங்காரம் : மாண்மிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுச் சுகாதாரத்துறை ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு சம்பளத்தை உயர்த்துவதன் அவசியம் குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

" பொதுச் சுகாதாரம் பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 161,43,53,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 235 டாக்டர் தே. ஏ. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ' கொள்கை பற்றி ' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

" பொதுச் சுகாதாரம் பற்றிய 19 ஆம் எண். மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 161,43,53,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் முன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை விளக்கக் குறிப்புகள் இங்கே அவையின் முன் வைக்கப்பட்டிருக்கின்றன. அதை நான் படித்த தாக ஏற்று, அவைக் குறிப்பில் ஏற்றிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். * மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் கருத்துக்களைச் சொன்ன பின்னால் என்னுடைய பதிலுரையாக கடைசியில் கருத்துக்களை நான் வெளியிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மீது காங்கிரஸ் கட்சி யின் சார்பாக என்னுடைய கருத்துக்களை சொல்ல முன் வந்திருக் கிறேன்.

மருத்துவத் துறை தமிழகத்திலே மிகச் சிறப்பான முறையிலே நடந்து கொண்டிருக்கிறது. ஆனாலும் கூட குறைபாடுகளைச் சொல்லாமல் இருக்க முடியாது. குறிப்பாகச் சொன்னால் தமிழ கத்தைப் பொறுத்த வரையில் பெண் குழந்தைகளைக் கொல்லு கின்ற நிகழ்ச்சி தமிழகத்திலே நடந்து கொண்டிருக்கிறது. இப் போது ஸ்கேனிங் என்று சொல்லுகின்ற மிஷின் வந்ததற்குப் பின்னால் அது நல்ல எண்ணத்தில் உருவாக்கப்பட்டது. அந்த மிஷினுடைய விளைவாக கருவுற்று இருக்கின்ற பெண்ணுக்கு ஆண் குழந்தையா, பெண் குழந்தையா என்று பார்த்து பெண் குழந்தை என்று சொன்னால் அதை கொல்லுகின்ற ஒரு அவல நிலை இருந்து கொண்டிருக்கிறது. அதை Indian Council of Child Welfare என்ற நிறுவனம் கூட ஏற்றுக்கொண்டி ருக்கிறது. ஆகவே நான் இந்த மாமன்றத்தைக் கேட்டுக் கொள்ளுவது தயவு செய்து இத்தகைய நிகழ்ச்சி வராமல் இருப் பதற்கு ஒரு சட்டத்தை கொண்டு வந்து இதை மாற்ற வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் உயிர் காக்கின்ற மருந்துகள் தமிழகத்தில் இல்லை என்று சொல்லுகின்ற அவல நிலை இருக்கிறது. குறிப்பாக பெரிய மருத்துவமனையான ஜி.எச். என்று சொன்னாலும் கூட, தனி யார் மருந்துகடைகளிலும் கூட உயிர் காக்கின்ற மருந்துகள் இல்லை என்று சொல்லுகின்ற அவல நிலை சென்னையிலும் மற்றும் எல்லாப்பகுதிகளிலும் இருக்கிறது. குறிப்பாக காலரா, டைபாய்டு போன்ற நோய்களுக்கு மருந்துகள் இல்லை என்று சொல்லு கின்ற நிலைமை இருக்கிறது. நிச்சயமாக இந்த அரசு அத்தகைய

---

*250–326 ஆம் பக்கங்களில் இணைப்புகள் 1 மற்றும் 2 ஆக அச்சிடப்பெற்றுள்ளன.



நிலைமைகளை மாற்றி அதிகமான மருந்துகளை உருவாக்குகின்ற எண்ணத்தை உருவாக்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் போலி டாக்டர்கள் தமிழகத்திலே அதிகமாக வந்து கொண்டிருக்கிறார்கள். போலி மருத்துவ மனைகளும் வந்து கொண்டிருக்கின்றன. இங்கே படித்த மருத்துவர்கள் திறமையாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள். எங்கே பார்த்தாலும் டாக்டர் என்ற போர்டை வைத்துக் கொண்டு பல்வேறு மோசமான செயல்களை செய்துகொண்டிருக்கிறார்கள்.

என்னுடைய தொகுதியில் கூட கொல்லங்கோடு என்ற பகுதி யில் அன்பின் ஆஸ்பத்திரி என்று வைத்திருக்கிறார் ஒருவர். அவர் எந்த மருத்துவ படிப்பும் படிக்கவில்லை. என்ன நடக்கிறது என்று சொன்னால் மிகப்பெரிய மோசமான முறையில் விபச்சாரத் தொழில் போன்ற தொழில்களை எல்லாம் நடத்திக்கொண்டி ருக்கிறார். ரௌடிசம் காட்டிக்கொண்டிருக்கிறார். சாராயம் போன்ற பொருட்கள் விற்பனையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார். போர்டைப் பார்த்தால் டாக்டர் என்ற போர்டை வைத்திருக் கிறார். இத்தகைய நிலையை நான் அங்கே இருக்கிற மாவட்ட மருத்துவ Joint Director இடம் சொன்னால் அதிகாரம் இல்லை என்று அவர்கள் சொல்லுகிறார்கள். ஆகவே இந்த மாமன்றத்தைக் கேட்டுக் கொள்ளுவதெல்லாம் போலி டாக்டர்கள் போலியாக நடத்துகின்ற மருத்துவமனைகளை மூடு வதற்குண்டான சட்டத்தை கொண்டுவந்து இத்தகைய மருத்து வர்களை விலக்கி வைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் மோசமான மருந்துகளைக் கொடுத்து நாட்டு மக்களை ஏமாற்றுகின்ற வகையில் இருக்கிறார்கள். அதை தடுக்க நட வடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த அவையில் கேட்டுகொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் பேசிக் அமெனிட்டிஸ் எதுவும் மருத்துவமனை களில் இல்லை. ஜி.எச்-ஐ எடுத்துக்கொண்டாலும் சரி, எந்த சின்ன மருத்துவமனையை எடுத்துக்கொண்டாலும் சரி, பிரைமரி ஹெல்த் சென்டர்களை எடுத்துக்கொண்டாலும் சரி எங்கும் மருந்துகள் இல்லை. பிரைமரி ஹெல்த் சென்டர்களுக்கு 30 ஆயிரம் ரூபாயிலிருந்து இப்போது 40 ஆயிரம் ரூபாய்க கொடுக் கிறோம். ஆனால் அந்த அளவுக்கு மருந்துகள் இருக்கிறதா என்று கேட்டால் அங்கே மருந்துகள் இல்லை என்றநிலை தான்இருந்துக் கொண்டிருக்கிறது. நீங்கள் ஜி.எச். போன்ற மருத்துவமனைக்கு சென்றால் கூட அங்கே ஹைஜீன் இல்லை. நாம் நோயாளிகளைப் பார்க்க உள்ளே போக முடியாத அளவுக்கு இருந்து கொண்டிருக் கிறது. இதை தம்முடைய டாக்டர்கள் பார்க்கவில்லையா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. மா. சுந்தரதாஸ்] [1991 செப்டம்பர் 16

அதேபோல் நமமுடைய மருத்துவமனைகளில் ஜி.எச். போன்ற
பெரிய மருத்துவமனைகளில் நிறைய மிஷின்கள் வாங்கிப்போட்டு
வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால் பல மிஷின்களை
அவர்கள் இயக்கி வைக்காமல் இருக்கிறார்கள். அதற்குப்பதிலாக
அப்போலோ போன்ற பிரைவேட் மருத்துவமனைகளுக்கு கையை
காட்டி விடுகிற நிலைமை இருக்கிறது. நாம் பல கோடி ரூபாயை
ஒதுக்கி பல கோடி ரூபாய்க்கு வாங்கி வைத்திருக்கிற மருந்து
களை, மிஷன்களை எல்லாம் பயன்படுத்தாமல் உதாரணமாக
சொன்னால் இந்த டயாலிசிஸ் செய்வதற்கு மிஷின்களை வாங்கி
வைத்து இருக்கிறோம். அதை எல்லாம் நம்முடைய மருத்துவர்கள்
சரியான முறையில் உபயோகம் செய்யவேண்டுமென்று இந்த
நேரத்தில் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

கிராமங்களில் நாம் அதிகமாக வாழ்கிறோம் பிரைமரி ஹெல்த்
செண்டர்களைப் பொறுத்த வரையில் நிச்சயமாக அங்கே டாக்டர்
கள் வருவது இல்லை. எங்கேயும் 3 டாக்டர்கள் இருக்க வேண்டும்.
ஒரு பெண் டாக்டர், 2 ஆண் டாக்டர்கள் இருக்க வேண்டும்.
பகுதிகளில் 2 பெண்கள் இருக்கிறார்கள். சில பகுதிகளில் ஆண்
களாக இருக்கிறார்கள். ரெக்கார்டு தான் அப்படி. அவர்களைக்
கேட்டால் அவர்கள் பிராக்டீஸ்க்காக ஊட்டியிலோ அல்லது
எங்கோ இருப்பார்கள். குறிப்பாக போனமுறை எஸ்டிமேட்
கமிட்டியில் கூட ஊட்டியில் சொல்லிவிட்டு போனதற்கு பிறகு
கூட; மறுபடியும் கமிட்டி சேர்மன், உறுப்பினர்கள் எல்லாம்
போன பிறகும் கூட அந்த டாக்டர்கள் அங்கே இல்லை. என்ன
வென்று கேட்டால் தகவல் கொடுக்கின்ற தூரத்திற்கு மேல் அவர்
கள் இருக்கிறார்கள். கேட்டால் அவர்கள் ஏதோ மதுரைக்குப்
பக்கத்தில் டாக்டர் போயிருப்பதாகச் சொல்லுகிறார்கள்.

முற்பகல் 10-45

இந்த நிலைமைகளையெல்லாம் நிச்சயம் மாற்றியாக வேண்டும்
பல கோடி ரூபாயை நாம் ஒதுக்கிக் கொடுத்திருந்தாலும்
கூட நிச்சயமாக டாக்டர்கள் வருவதில்லை என்று சொன்னால்
அந்த அப்பாவி மக்கள், ஏழை மக்கள் என்ன செய்வார்கள்.
இந்த மாதிரி நிலைமைகளையெல்லாம் நிச்சயமாகப் போக்க
வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள்
மூலமாகக் கேட்டுக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். குறிப்
பாக சொல்ல வேண்டுமென்றால், ஒரு டாக்டர் கூட வருவதற்குத்
தயாராக இல்லை. அவர்கள் வேண்டுமென்றே அங்கே பணியில்
சேர்ந்துவிட்டு பிரைவேட்டிலே பிராக்டீஸ் செய்கிறார்கள்.
பிரைவேட் பிராக்டீஸை நான் வேண்டாம் என்று சொல்ல
வில்லை. ஆனால் பிரைவேட் பிராக்டீஸ் செய்வதை மத்திய
அரசு விலக்கி இருக்கிறது நீங்கள் ஊதியம் கூட்டிக் கொடுங்
கள். சென்னையிலே இருக்கிற ரயில்வே ஆஸ்பிடலைப் போய்
பார்த்தால் அது நன்றாக இருக்கிறது என்று சொல்கிறார்கள்
கவர்மெண்ட் ஆஸ்பிடலிலேயே ரயில்வே ஆஸ்பிடல் நன்றாக
இருக்கிறது என்று சொல்கிறார்கள். அதேபோன்று, இங்கே



1991 செப்டம்பர் 16] [திரு. மா. சுந்தரதாஸ்]

யிருக்கிற போர்ட் டிரஸ்ட் ஆஸ்பிடல் நன்றாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். இதற்கு என்ன காரணம் என்று சொன்னால், அவர்கள் பிரைவேட்டாக பிராக்டீஸ் பண்ணக்கூடாது என்று விதியிருக்கிறது. நாமும் மத்திய அரசுக்கு இணையாக சம்பளம் கொடுக்கிறோம். ஏன் அவர்கள் பிரைவேட்டாக பிராக்டீஸ் கிளீனிக்குக்கு செல்ல வேண்டும்; அங்கே மருத்துவம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறதே தவிர, நாம் சம்பளம் வாங்குகிறோமே, அதற்காக வேலை செய்ய வேண்டுமென்ற எண்ணம் இல்லை. காலையிலே 7 மணிக்கு வரவேண்டுமென்று சொன்னால் $10\frac{1}{2}$-க்குத்தான் வருவார்கள். 10 மணிக்கோ, 1 மணிக்கோ வீட்டிற்குச் சென்று விடுவார்கள். மாலையில் பார்த்தால் அவர்கள் தனியார் கிளினிக்குகளிலே உட்கார்ந்து கொண்டு இருக்கிறார்கள். இத்தகைய நிகழ்ச்சிகளை தமிழகத்திலே மாற்றவில்லை என்று சொன்னால் நிச்சயமாக நாம் எத்தனை கோடி ரூபாய் ஒதுக்கினாலும், ஏழையெளிய மக்களுக்கு நாம் செயல்படுத்த நினைக்கின்ற திட்டங்கள், நம்முடைய எண்ணங்கள் சென்று சேராது என்பதைத் தெளிவாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று பிரைமரி ஹெல்த் சென்டர்களைப் பொறுத்த வரையில், அங்கே எந்தவிதமான இன்ஃபிராஸ்டக்சரும், எந்த விதமான அடிப்படை வசதியும் இல்லாத சூழ்நிலையைப் பார்க்கிறோம். அங்கே ஒரு காம்பௌன்ட் சுவர்கூட இருக்காது. டாக்டர்கள் வரமுடியாத, வந்தாலும் தங்கமுடியாத ஒரு நிலை இருக்கிறது. டாக்டர்களையும் குறைசொல்ல முடியாது. ஆகையால் டாக்டர்களுக்குத் தேவையான வீட்டு வசதிகளையெல்லாம் செய்து கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் நீங்கள் 30 ஆயிரம் ரூபாயிலிருந்து 40 ஆயிரம் ரூபாய் வரையில் ஒதுக்கியிருக்கிறீர்கள். நிச்சயமாக அந்தத் தொகை போதாது என்று தெரிவித்துக் கொள்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரைக்கும் உங்களுக்கு நன்றாகத் தெரியும். ஒரு செண்ட் நிலம் வாங்க வேண்டுமென்று சொன்னால், ஆயிரம், 2 ஆயிரம் ரூபாய் விற்கும். 3 ஏக்கர் நிலம் வேண்டுமென்று சொல்லியிருக்கின்றீர்கள். 10 ஆயிரம் ரூபாய் கட்டவேண்டுமென்று சொல்லியிருக்கிறீர்கள். 3 ஏக்கர் நிலமும் 10 ஆயிரம் ரூபாய் கொடுத்ததற்குப் பின்னால்கூட அங்கே கட்டடங்கள் கட்டிக்கொடுக்கப்படவில்லை என்பதை மிகுந்த வருத்தத்தோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக என்னுடைய பகுதியிலே தூத்தூர் என்ற ஊரிலே ஒரு பிரைமரி ஹெல்த் சென்டர் இருக்கிறது. 1940-ல் கேரள மாநிலத்தினுடைய ஆளுகையில் இருந்தபோது கட்டப்பட்ட ஒரு ஆஸ்பிடல் அது. 1 இலட்சம் மக்கள் வாழ்கின்ற பகுதி அது. அந்தப் பகுதியிலே இருக்கின்ற ஒரே ஒரு மருத்துவமனை அது. ஏறத்தாழ 3 ஏக்கர் நிலத்தை அவர்கள் இனாமாகக் கொடுத்திருக்கிறார்கள். 10 ஆயிரம ரூபாயும் கட்டியிருக்கிறார்கள்.

இதற்குப் பின்னாலும்கூட அந்த மருத்துவ மனையைக் கட்டுங்கள், கிரேடு-1 ஆக்குங்கள் என்று கேட்டால் எதையும் செய்து தர தயாராக இல்லை. டாக்டர்கள் வருவதே கிடையாது. அந்தப் பகுதி மக்களுக்காக, மீனவ மக்கள் வாழ்கின்ற தூத்தூர் என்ற அந்த இடத்திற்கு, நாங்கள் எஸ்டிமேட் கமிட்டியிலே சென்ற ஆண்டு, போனபோது அந்த இடத்தைப் பார்த்தோம். அதற்குப் பின்னாலும் எந்தப் பிரயோஜனமும் ஏற்படவில்லை. எந்தப் பலனும் இல்லை. இதே போன்று இலக்கியோடு என்ற கிராமமும் என்னுடைய தொகுதியிலே இருக்கிறது. அங்குள்ள மருத்துவ மனையிலும் இதே நிலைமைதான். டாக்டர்கள் வருவதில்லை. மருந்தே அங்கு வருவதாகத் தெரியவில்லை. அங்குள்ள மக்களுக்கு எந்தப் பிரயோஜனமும் இல்லாமல் அந்த மருத்துவமனை இயங்கி வருகிறது. கன்னியாகுமரி மாவட்டத்திற்கென்று புதிதாக பிரைமரி ஹெல்த் சென்டர்களைக் கேட்டால், 3 ஏக்கர் நிலம் கொடுங்கள் என்று சொல்கிறார்கள். நிச்சயமாக, 3 ஏக்கர் நிலம் கொடுக்க முடியாது. அங்கு இருக்கின்ற ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பிடலுக்கே 3 ஏக்கர் நிலம் கிடையாது. தாலுகா மருத்துவ மனைக்குக்கூட 3 ஏக்கர் நிலம் கிடையாது. ஆனால் பிரைமரி ஹெல்த் சென்டர் வேண்டுமென்று கேட்டால், 3 ஏக்கர் நிலம் கேட்கிறார்கள். மற்ற மாவட்டங்களில் வேண்டுமானால் 3 ஏக்கர் நிலம் கேட்கலாம். குமரி மாவட்டத்திற்காக, அங்கே ஏற்படுத்துகின்ற பிரைமரி ஹெல்த் சென்டர்களுக்கு 3 ஏக்கர் நிலம் கொடுக்க முடியாத ஒரு நிலை இருக்கின்ற காரணத்தினால் அதற்காகவாவது விதிவிலக்கு கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். மேலும், விளவன்கோட்டிலே இருக்கக்கூடிய தாலுகா மருத்துவ மனையில் எந்தவொரு வசதியும் இல்லாமல் இருக்கிறது. எக்ஸ்ரே வசதிகூட கிடையாது. கேரளா மாநிலத்தினுடைய ஆளுகையில் இருந்தபோது, மகாராஜாவுடைய கெஸ்ட் ஹவுஸாக இருந்த ஒரு இடத்திலே அந்த மருத்துவ மனையை வைத்திருக்கிறார்கள். அங்கே ஏறத்தாழ 2 இலட்சம் நோயாளிகள், உள்நோயாளிகள், வெளிநோயாளிகள் வருகிறார்கள். 2 இலட்சம் பேர் வருகின்ற இடத்திலே எக்ஸ் ரே வசதி கிடையாது. கழிவறை வசதி கிடையாது. ஒரு மாதத்திற்கு முன்னால் கழிவறை இல்லாத காரணத்தினால், ஒரு நோயாளி வெளியேறியபோது, மின்சாரம் தாக்கி அந்த நோயாளி அந்த இடத்திலேயே இறக்க நேரிட்டது. இத்தகைய துயரச் செய்திகளெல்லாம் அந்தப் பகுதியிலே நடந்துகொண்டிருக்கின்றன. அந்த ஆஸ்பிடலுக்குள்ளே நாம் போகிறோம் என்று சொன்னால், உள்ளே போகவே முடியாது. அந்த அளவிற்குப் பராமரிப்பு மோசமாக இருக்கிறது. எந்தவொரு பேஸிக் அமனெட்டீஸும் இல்லை. There is no infrastructural facilities. There is no hygine. There is no Basic amenities. எந்தவொரு வசதியும் இல்லாமல் ஏதோ ஒரு பெயருக்காக தாலுகா மருத்துவ மனையை நடத்திக்கொண்டு இருக்கிறார்கள்.





பக்கத்திலேயே கேரளா எல்லை இருக்கிறது. பக்கத்திலே கேரளாவிலே இருக்கிற பாரசாலை என்று சொல்லப்படுகின்ற இடத்திலே மிக நல்லமுறையிலே அவர்கள் மருத்துவ மனையை நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். அவர்கள், தமிழ்நாடு மருத்துவமனைகள் என்று சொன்னால், அதைப்பற்றி மிக மோசமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். நான் தங்கள் மூலமாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, விளவன்கோடு தொகுதி, குழித்துறையிலுள்ள மருத்துவ மனைக்கு தயவு செய்து தாலுகா மருத்துவ மனைக்கு உள்ள இன்ஃபிராஸ்டக்சர் கொடுத்தால் போதும். அதிகமாக நான் கேட்கவில்லை. ஒரு தாலுகா மருந்துவ மனைக்கு எந்தெந்த வசதிகளையெல்லாம் செய்ய வேண்டுமோ அதை செய்து கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், ஜி.எச்.-ஐ எடுத்துக்கொண்டாலும் சரி, எந்த ஆஸ்பிடலுக்குச் சென்றாலும் அங்கேயிருக்கின்ற படுக்கைகள் மோசமான நிலையிலே இருக்கின்றன. அதற்கு ஒரு நார்ம்ஸ் வைக்க வேண்டும் ஒரு பெட்-ஐ இத்தனை வருடங்கள்தான் உபயோகிக்க வேண்டுமென்று பிரைவேட் மருத்துவ மனைகளிலே எவ்வளவோ வசதிகளைச் செய்து கொடுக்கிறார்கள். அரசாங்க மருத்துவ மனைகளிலே பில்லோவைக்கூட மாற்றுவது இல்லை. எத்தனை வருடமானாலும் சரி அதேநிலையில்தான் இருந்துகொண்டு இருக்கிறது. லைட் வசதி கிடையாது. ஃபேன் வசதி கிடையாது. பெரிய மருத்துவ மனைகளிலும் சரி, சிறிய மருந்துவ மனைகளிலும் சரி, இந்த நிலைமைதான் இருக்கிறது. இதையெல்லாம் சரிசெய்வதற்கு தேவையான அளவுக்கு நிதி ஒதுக்கித்தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10–50

அதேபோன்று, மெடிகல் எஜுகேஷனைப் பொறுத்த வரையிலும் நமக்குத் தெரியும். நேர்மையாக நல்லமுறையிலே நடந்து கொண்டு இருக்கிறது. முன்னாலெல்லாம் பல 'ரிட்'கள் வரும். இந்த முறை ஒரு ரிட் கூட ஃபைல் செய்ததாகத் தெரியவில்லை. ஏனென்றால், அந்த அளவிற்கு நியாயமாக இந்த அரசு நடந்து கொண்டிருக்கிறது. எந்த ஒரு பத்திரிக்கையும் மோசமாக எழுத முடியாத அளவிற்கு நியாயமாக நடத்திக் கொண்டிருக்கிறோம்.

ஆனால், அதிகமான மக்கள் படிக்க ஆசைப்படுகின்ற காரணத்தால், நம்முடைய எண்ணிக்கையைக் கூட்டினால் என்ன என்று கேட்கிறேன். எல்லோருக்கும் வேலை கொடுக்க முடியாது தான். நிறைய '' அன்-எம்ப்ளாய்ட் '' இருக்கிறார்கள். எனவே, டாக்டர் படிப்புக்கு மட்டும் கட்டுப்பாடு வைக்க வேண்டியதன்

[திரு. மா. சுந்தரதாஸ்] [1991 செப்டம்பர் 16

அவசியம் என்ன? எனவே, அதிகமான மருத்துவக் கல்லூரிகளை உருவாக்குவதைத் தவறு என்று சொல்ல முடியாது. ஏனென்றால், அந்த அளவிற்கு மக்கள் ஆசைப்படுகிறார்கள். அவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றாவது தங்களுடைய வாழ்க்கையை நடத்திக் கொள்வார்கள். அந்த வகையில், கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மருத்துவக் கல்லூரி ஒன்று வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எந்த அரசாங்க கல்லூரியும் கிடையாது எங்கள் மாவட்டத்திலே. நல்ல இடம் இல்லை என்று சொன்னாலும்கூட, 100 ஏக்கர்களுக்கு மேலாக அங்கே இருக்கின்ற டி.பி. ஆஸ்பத்திரி, ஆசாரிப்பள்ளம் என்ற இடத்தில் ஒரு ஆஸ்பத்திரி இருக்கிறது, அந்த நாகர்கோவிலிலே. அந்த 100 ஏக்கர் இருக்கிறது. அந்த இடத்திலே நிறையக் கட்டிடங்கள் இருக்கின்றன. வெள்ளையன் காலத்திலே கட்டப்பட்ட கட்டிடங்களெல்லாம் இருக்கின்றன. எனவே, கொஞ்சம் கட்டடம் கட்டினால்கூடப் போதும். நிச்சயமாக அங்கே ஒரு மருத்துவக் கல்லூரியை உருவாக்கித் தர வேண்டுமென்று தங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அந்தப் பகுதியைப் பொறுத்த வரையிலே, டி.பி. ஆஸ்பத்திரி, சவுத் இந்தியாவிலேயே மிக முக்கியமான ஹாஸ்பிடல். இன்று அங்கே மருத்துவர்கள் இல்லை.

The quality of the hospital goes down எந்த வசதியும் இல்லாமல், டி.பி. ஹாஸ்பிடல் மிக மோசமான இருக்கிறது. இதை ஒரு மருத்துவக் கல்லூரியாக மாற்றித் தர வேண்டுமென்று தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று நம்முடைய கீழ்ப்பாக்கத்திலே இருக்கின்ற மென்டல் ஹாஸ்பிடல். போன வாரம் கூட பத்திரிக்கையிலே பார்த்தேன். மிக மோசமான நிலையிலே அங்கே எந்த வசதியும் இல்லாமல் மிகமிக கீழ்த்தரமாகப் போய்கொண்டிருப்பதாகப் பத்திரிக்கையில் படித்தேன். அந்த மருத்துவ மனையைக் கூட நல்லமுறையிலே கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோன்று, வேக்சின் என்று சொல்லுகின்ற குன்னூரிலே இருக்கின்ற அந்த நிறுவனத்திலேகூட, அதனுடைய குவாலிட்டி—நம்முடைய ஆண்டி பயாடிக்ஸ், அதாவது காலரா போன்ற நோய்களுக்குக் குத்தி வைக்கின்ற மெடிசன்—அது உலக நாடுகளிலே பல முறையிலே முன்னேறியிருந்தாலும்கூட நம்முடைய குன்னூரிலேஇருக்கின்ற வேக்சின் சென்டரைப் பொறுத்தவரையில் இதுவரையில் நல்லமுறையிலே டெவலப்மெண்ட் இல்லை என்று சொல்கிறார்கள்.



1991 செப்டம்பர் 16] [திரு. மா. சுந்தரதாஸ்]

அதேபோல, கிங் இன்ஸ்டிடியூட்டினுடைய நிலைமை மிக மிக மோசமாகிக் கொண்டிருக்கிறது. இதையெல்லாம் மறைய வைத்து, அதிகமான பணத்தை ஒதுக்கித் தந்து நல்லமுறையிலே கொண்டு வர வேண்டுமென்று தங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், பொல்யூஷன் கன்ட்ரோலைப் பொறுத்தவரையில், இந்த டிபார்ட்மெண்ட் இருக்கிறதா என்பதுகூட சந்தேகமாக இருக்கிறது. பொல்யூஷன் கன்ட்ரோலைப் பொறுத்தவரையில் நம்முடைய சென்னை மாநகரத்திலே குடி தண்ணீரிலே சாக்கடை நீர் கலக்கின்ற கேடு வந்து கொண்டிருக்கிறது. அந்த பொல்யூஷன் கன்ட்ரோல் போர்டு ஏதாவது பார்க்கிறதா, ஏதாவது செய்கிறார்களா என்றால் எனக்குத் தெரியவில்லை. எங்கே பார்த்தாலும், ஹவுசிங் ஏரியாவிலே இன்ட்ஸ்ட்ரீஸ் வைக்கிறார்கள். அதை இந்த பொல்யூஷன் கன்ட்ரோல் போர்டு தடுக்கக் கூடாதா? இன்டஸ்ட்ரீ வைக்க வேண்டுமென்றுதான் இன்டஸ்ட்ரியல் ஏரியா என்று ஒதுக்கிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், ஹவுசிங் ஏரியாவிலே தான் இன்டஸ்ட்ரியை வைக்கிறார்கள். அதுபற்றி பொல்யூஷன் கன்ட்ரோல் போர்டைக் கேட்டால், ஏனென்றால் அவர்கள் நோ அப்ஜெக்ஷன் கொடுத்தால் தான் அந்த நிறுவனத்தை அங்கே நிறுவ முடியும். ஆனால் பொல்யூஷன் கன்ட்ரோல் போர்டு கண்ணை மூடிக்கொண்டு கையெழுத்துப் போட்டுக் கொடுக்கக் கூடிய நிலைமை இருந்து கொண்டிருக்கிறது.

அதேபோல, ஏர் பொல்யூஷன். குறிப்பாகச் சொல்கிறேன், என்னுடைய பகுதியிலே ஏ.வி.எம். சேனல் என்று ஒரு இடம் இருக்கிறது. அது மிகமிக மோசமாக இருந்து கொண்டிருக்கிறது. பல்வேறு இன்டஸ்ட்ரியினுடைய கழிவு நீர் வந்து சேர்கிறது. ஆனால் அதை பொல்யூஷன் கன்ட்ரோல் போர்டு பார்ப்பதாக இல்லை. இன்று பார்த்தால், நம்முடைய தாமிரபரணி ஆற்றிலேயும் சரி, காவேரியிலேயும் கூட சரி, பல்வேறு இன்டஸ்ட்ரியினுடைய கழிவு நீர் அந்த நதிகளிலே சேர்கிறது. இதையெல்லாம் நம்முடைய பொல்யூஷன் கன்ட்ரோல் போர்டு ஏதாவது செய்கிறதா என்று பார்த்தால் செய்வதாகத் தெரியவில்லை. அந்த டிபார்ட்மெண்ட் இருப்பதாக, நாம் பொல்யூஷன் கன்ட்ரோல் போர்டு என்று நம் டிமான்டிலே பார்ப்பதைத் தவிர, அந்த டிபார்ட்மெண்ட் ஆபீஸ் இருக்கிறதா என்று எங்களுக்குத் தெரியவில்லை. மாண்புமிகு அமைச்சரவர்களுடைய வீட்டுக்குப் பக்கத்திலே இருக்கிறது. நல்ல காரியம் செய்கிறார்களா என்று கேட்டால், இல்லை. அதற்கு, நோ அப்ஜெக்ஷன் என்று கேட்டால் பொல்யூஷன் கன்ட்ரோல் போர்டு நோ அப்ஜெக்ஷன் கொடுத்து விட்டார்கள் The Pullution Control Board has already given the No. Objection certificate.

எனவே, இந்த அளவிற்கு அதையும் மாற்ற வேண்டுமென்று கேட்டு, எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் (திருமதி) வெ. சரோஜா.

டாக்டர் திருமதி வே. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆத்திரம் காட்டுவோர் முன் அடக்கத்தைக் காட்டி, சாத்திரம் காட்டுவோர்முன் தமிழ் மறை நூலைக் காட்டி, நாத்திறன் காட்டி, நாடு நலம் பெற பல வழிகள் காட்டி, மூத்தோர் பலரை வென்ற மாண்புமிகு தமிழக முதல்வரவர்களே நீங்கள் வாழ வேண்டும் பல்லாண்டு.

'' பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம் '' என்ற பாரதி கண்ட கனவை நனவாக்கிய தமிழ்த் தெய்வமே, எங்கள் காவல் தெய்வமே, பத்தாவது சட்டமன்றமாகிய இந்த சட்டமன்றத்தைச் சரித்திரப் புகழ் வாய்ந்த சட்ட மன்றமாக்கி, இந்தச் சட்டமன்றத்தில் என்னையும் உறுப்பினராக்கி, எனக்கு இந்த மருத்துவம் மற்றும் பொதுச் சுகாதாரத்தில் பேச வாய்ப்பும் அளித்த மாண்புமிகு முதல்வரவர்களுக்கும், எனது தொகுதிவாழ் மக்களுக்கும் நன்றி யைக் கூறி எனது கன்னி உரையைத் தொடங்குகின்றேன்.

முற்பகல் 10-55

கன்னி உரை என்பதால், நான் என் தொகுதியில் இருக்கின்ற அனைத்துக் குறைகளையும் சொல்ல எனக்கு உரிமை உண்டு என்றாலும், நான் எடுத்துக் கொண்ட, குறிப்பாக நேரத்தின் அருமை கருதி, என்னுடைய ஒருசில கருத்துக்களை மட்டும் தெரிவிக்க ஆசைப்படுகிறேன். பொதுவாக, குடும்ப நலத் திட்டத்தில் இதுவரை இருந்த ' இரு குழந்தைகள் ' என்ற முறையை மாற்றி, இனி Onc child ncrms என்பதை திறம்பட செயல்படுத்த அரசு முன்வர வேண்டும். அப்போது தான், நம்முடைய பொருளாதாரத் தட்டுப்பாடு நீங்கும். அதற்கு, அரசு அனைத்து முயற்சிகளையும் எடுத்து, மைய அரசுடன் சுமூகமான உரை நடத்தினால், இதில் நாம் ஒரு நல்ல முடிவு காண முடியும். ஜனத்தொகை பெருகும்வரை, நம்முடைய திட்டங்கள் சரிவர செயல்படாது என்பதை, மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் மூலமாக இந்த அவைக் குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இதற்குமுன் பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள், ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவர்கள் சரியாக செயல்படுவதில்லை என்று. உண்மை



தான். அந்த மருத்துவர்கள் சரிவர செயல்பட முடியாமல் இருப்பதற்கு, ' Practical Problems ' அவர்களுக்கு இருக்கிறது. அதைச் சரிசெய்ய, அந்தந்த மாவட்டத்திலுள்ள மருத்துவர் களை, அந்தந்த மாவட்டத்திலேயே ' போஸ்டிங்ஸ் ' கொடுத்தால், இந்த நிலைமை ஓரளவுக்கு சீரடையும் என்பதே என்னுடைய தாழ்மையானக் கருத்து.

தொழுநோய், குறிப்பாக பள்ளி மாணவர்களிடையே அதிக மாகப் பரவிக் கொண்டு வருவதை நாம் அன்றாடம் செய்தித் தாள்களிலே படிக்கிறோம். ஆங்காங்கு நான் செல்லும் போது, பள்ளிக்கூடங்களிலும், மருத்துவமனை ஏடுகளைப் புரட்டும்போதும் அந்த உண்மைகள் எனக்குத் தெரிகின்றன. குறிப்பாக, முஸ்லீம்கள் அதிகமாக இருக்கும் இடங்களில் தொழுநோய் அறிகுறிகளைக் கண்டறியக்கூட ஆண் இன்ஸ் பெக்டர்கள் மட்டுமே ' போஸ்டிங் ' செய்யப்பட்டிருக்கிறார் கள். அதைத் தவிர்ப்பதற்கு, பெண் இன்ஸ்பெக்டர்களையும் ' போஸ்டிங் ' செய்ய அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உயிரைக் குடிக்கும் ' எய்ட்ஸ் ' நோயை அறியவும், அதற்கு வைத்தியம் செய்யவும் கட்டுக்கடங்காத செலவாகும் என்றாலும் அந்த நோயைக் கண்டறிய நமது அரசு ஒரு குழுவை ஏற்படுத்தி, அதன்மூலம் சுகாதாரத்தை வெகுவாக வற்புறுத்தி, ' Preventions is better than cure ' என்பதால்—கிட்டத்தட்ட ஒரு லட்சம் ரூபாய் ஒரு நோயாளிக்குச் செலவாகும் என்பதால், நாம் அந்த உயிரைக் காப்பாற்றப் போவதில்லை—இப்படிப்பட்ட முக்கியமான ஒரு நோயைக் கருத்தில் கொண்டு எல்லா மாவட்ட மருத்துவ மனைகளிலும், ' எய்ட்ஸ் ' நோயைக் கண்டுபிடிப்பதற்கான ' இம்யூனாலஜி லேப் ' ஏற்படுத்துவதற்கு, நிதி நெருக்கடி நிலைமை என்றாலும் இதைச் செயல்படுத்த அரசு முன்வர வேண்டுமென்று அன்புடன் கேட்டுக் கொள் கிறேன்.

மெடிகல் கல்லூரியிலே படிக்கும் மாணவர்களுக்கு அனைத்துத் தேர்வுகளும் காலங்கடத்தி நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அது மாணவ சமுதாயத்திற்கு மிகவும் சிரமமான நிலையைக் காட்டுகிறது. குறிப்பாக, அனைத்துத் தேர்வுகளும் — ' Under graduates ' and post graduates தேர்வுகள், குறித்த வண்ணம் மார்ச்சிலிருந்து ஏப்ரல் வரை நடந்தால், ஜூன் மாதம், மறுபடியும் தேர்வு முடிந்து, மாணவர்களுக்கு வகுப்பு ஆரம்பித்தால்தான், அந்த மார்ச் மாதம் முடிவதற்குள், நாம் மீண்டும் பாடத்தை ஆரம்பிக்க முடியும் என்பதை நான் தெரி

வித்துக் கொள்கிறேன். இப்படிப்பட்ட பொதுக் கருத்துக்களை நான் அவை முன் வைத்த பிறகு, என்னுடைய தொகுதியின் சொந்தப் பிரச்சனைக்குச் செல்கிறேன்.

என்னுடைய தொகுதி சங்ககிரி மருத்துவமனை மிகவும் பழமையானக் கட்டிடத்தில் — ஏறத்தாழ 40 ஆண்டுகள் அதே கட்டிடத்தில் — புற நோயாளிகளும், அக நோயாளிகளும் ஒரே அறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். இதைத் தவிர்ப்பதற்கு, இரண்டடுக்குக் கட்டிடம் கட்டி, புற நோயாளிகள், அக நோயாளிகள் இருவரையும் தனித்தனியாக, ஆண் பெண் இருவரையும் தனித்தனியாகப் பிரித்து, அந்த மருத்துவமனை சீரிய முறையில் செயல்பட அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சங்ககிரி நெடுஞ்சாலையில் அருகேயுள்ளதால், அங்கே அதிகமான விபத்துகள் ஏற்படுவதால், நான் அங்கே தங்கியிருந்த மூன்று மாதங்களில் கிட்டத்தட்ட 6 உயிர்களை இழந்து விட்டோம்.

முற்பகல் 11.00

அங்கு ஒரு ஆக்ஸிடெண்ட் அல்லது எமர்ஜென்சி யூனிட் அவசியம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அத்துடன், அங்கே, வாகன நெருக்கடி இருப்பதாலும், ஒரு போலீஸ் பீட்டும் தேவைப்படும் என்று கூறிக் கொள்கிறேன். அதற்கு முன், அங்கே தண்ணீர் பிரச்சினை இருக்கிறது. அந்தத் தண்ணீர்ப் பிரச்சினையை சரி செய்ய வேண்டும் காவிரி நீரை அங்கே மருத்துவ மனைக்கு கொண்டு வர முடியவில்லை. காரணம், அங்கு வரும் தண்ணீர் first and for most பள்ளிப்பாளையம், சங்ககிரியில் உள்ள பம்பிங் ஸ்டேஷனில் வேலை செய்யும் அதிகாரிகள் T chinically n t qu lifi d தண்ணீர் சுத்தம் செய்யும் மெஷின் ou t order அங்கே வேலை செய்யும் ஆட்களுக்கும் மெஷினை இயக்கத் தெரியாது என்கிறார்கள். அரசு இதில் உடனடியாக கவனம் செலுத்தி, சுத்தமான தண்ணீரை, குடிநீருக்கும் சரி, மருத்துவமனைக்கும் சரி அனுப்பினால்தான், அங்கே அறுவை சிகிச்சை செய்ய முடியும். மருத்துவர்களுடைய பிராக்டிகல் ப்ராப்ளம்ஸை சால்வ் பண்ண முடியும் என்பதையும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சங்ககிரி மருத்துவமனை 52 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை என்றாலும், அங்கே குடும்ப நலத் திட்டத்திற்கு என்று தனியான அறுவை அரங்கமோ, தனி அறையோ எதுவும் இல்லை. அங்கே அறுவை சிகிச்சைகள் குறைந்து கொண்டு வருகிறது என்பது எனக்குத் தெரியும். ஏனென்றால் அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் பூர்த்தி செய்யப்படவில்லை என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.



என்னுடைய தொகுதிக்குட்பட்ட வடுகப்பட்டி பி. எச். சி. ஐ. மேல்நிலை பி.எச்சி.யாக மாற்றி அங்கே அறுவை அரங்கம் பூட்டிக் கிடப்பதை மீண்டும் திறக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மல்லசமுத்திரம் பி.எச்.சி.யில் நிறைய அறுவை சிகிச்சைகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால், அங்கே உயிர் காக்கும் மருந்துகள்குறைவாக உள்ளது. குறிப்பாக, I. V. Fluid சில சமயங்களில் out of stock என்று சொல்லுகிறார்கள். குறிப்பாக, அரசு இதில் தீவிர கவனம் செலுத்தி, பரிசீலித்து, இது எல்லா மருத்துவ மனைகளிலும் I. V. Fluid எப்போதும் இருக்கின்ற ஒரு நிலையை உருவாக்க வேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்கனவே, மாவட்ட மருத்துவ மனைகளில், ஹாஸ்பிடல் பார்மசி என்ற ஒன்று இருந்தது. அது தற்போது நடைமுறைக்கு வந்தால், அந்தந்த மாவட்டங்களுக்குத் தேவையான I. V. Fluid தயார் செய்து, அந்தந்த மாவட்டங்களிலே கவனித்துக் கொள்ள ஏதுவாக இருக்கும் என்று அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சங்ககிரி ஒன்றியத்தில் பள்ளக்குழி என்ற கிராமத்தில் கிட்டத்தட்ட 1500 தாழ்த்தப்பட்ட மக்கள் உள்ள ஒரு ஊரில், சாலை வசதி கிடையாது. ஒரு பெண் தன் பிரசவ வலியோடு கண்டிப்பாக ஆறு கிலோ மீட்டர் சங்ககிரிக்கு வந்தால்தான் பிரசவம் பார்த்துக் கொள்ள முடியும் என்ற நிலை இருக்கிறது. எனவே, அங்கு ஒரு அடிஷனல் பி.எச்.சி.யாவது அல்லது மினி பி.எச்.சி.யாவது ஏற்படுத்திக் கொடுத்து அங்கு மருத்துவ வசதியை மேம்படுத்த வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொண்டு நன்றி கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய கோரிக்கைக் குறிப்பின் அடிப்படையில் எனக்கு பேசுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தமைக்காக முதலில் என்னுடைய பணிவான வணக்கத்தைக் கூறிக் கொண்டு, சில கருத்துக்களை உங்களிடம் நான் பகிர்ந்து கொள்ளலாம் என்று கருதுகிறேன்.

இன்றைய தினம் மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் தந்திருக்கின்ற மானியக் கோரிக்கைக் குறிப்புகளைப் பார்க்கும்பொழுது, கிட்டத்தட்ட 259 கோடி ரூபாய்க்கான வரவு-செலவுகளையும், மருத்துவக் கல்லூரிகளிலே பயிலுகின்ற

மாணவர்களுடைய விகிதாச்சாரத்தையும் தந்திருக்கின்றார்கள். எல்லாவற்றையும் பாராட்டினாலும், மருத்துவக் கல்லூரியில் பயிலுகின்ற மாணவர்களுக்கு, அதாவது தியாகிகளுடைய குழந்தைகளுக்கு என்று ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதைப் பொறுத்த வரைக்கும், தியாகிகளுடைய குழந்தைகள் என்று சொல்லுகிறார்கள். தியாகிகளுடைய குழந்தைகள் என்று பார்க்கும்போது அவர்களுக்கு இப்போது 50 அல்லது 60 வயதாகியிருக்கும். எனவே, தியாகிகளுடைய பேரக் குழந்தைகளுக்கு என்கிற விதத்திலே அந்தச் சட்டத்தை மாற் றித் தருவீர்கள் என்று சொன்னால், தியாகிகளுக்கு நாம் ஆற்று கின்ற தொண்டு செவ்வனே செயல்படும் என்று கருதுகிறேன்.

தனியார் துறையைப் பொறுத்தவரைக்கும் நம்முடைய சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தியாகிகளு டைய பேரக் குழந்தைகளுக்கென்று ஒதுக்கீடு செய்திருக்கிறார் கள். அது பயனுடையதாக இருக்கின்றது. எனவே, அதை உங்கள் கருத்திலே கொண்டு அவ்வாறு அதை ஒதுக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல, அர சாங்க ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு இப்போது ஆண் டொன்றுக்கு ரூபாய் முப்பதாயிரம் வரைக்கான மருந்துகள் வழங்க வேண்டுமென்றிருப்பதை நாற்பதாயிரமாக உயர்த்தியிருக் கின்றீர்கள். அதை நாற்பதாயிரமாக உயர்த்தினாலும், அதிலே வேண்டிய மருந்துகளை வாங்கிக் கொள்ள சங்கடம் இருக்காது என்று நம்புகிறேன். எனவே அதை இன்னும் அதிகரித்துத் தர வேண்டும் என்றுநான் கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11—05

இனி ஒரு முக்கியமான செய்தியை உங்கள் முன்னாலே நான் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். வெள்ளைக் காரன் ஆட்சிக் காலத்தில் ஒரு போஸ்ட் மார்ட்டம் என்று சொன் னால் மாலை 5 மணிக்குப் பின்னர் போஸ்ட் மார்ட்டம் பண்ணக் கூடாது என்று ஒரு உத்தரவு வைத்திருந்தார்கள். அப்போது மண்ணெண்ணெய் விளக்கோ, அல்லது மெழுகு வர்த்தியோ வைத்துப் பிரேதப் பரிசோதனை செய்தால் அதைச் சரியாகச் செய்ய முடியாது என்பதற்காகத்தான் அந்த உத்தரவை அன் றைக்குப் போட்டார்கள். ஆனால் இன்றைக்கு ஆண்டுகள் பல கடந்து இரவு நேரம் தான் மேஜர் ஆப்பரேஷன்கள் எல்லாம் நடக்கக்கூடிய காலக்கட்டத்தில் அதே சட்டத்தை நீங்கள் வைத்துக் கொண்டிருப்பது மிக வேதனைக்குரியது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே போஸ்ட் மார்ட்டம் இரவு நேரத்திலும் நடத்தப்பட வேண்டும் என்றும் உத்தரவு வரவேண்டும்.



ஒரு விபத்திலோ அல்லது வேறு வகையிலோ துன்பங்கள் ஏற்படுகிற நேரத்தில் அந்தப் பிணத்தை அங்கே வைத்துக் கொண்டு உற்றார் உறவினர் கதறி அழுகிற சூழ்நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த நிலை தொடர்ச்சியாக இருந்து கொண்டு இருக்கிறது. ஆகவே இவைகளை நிவர்த்தி செய்வதற் காகவாவது அந்த போஸ்ட் மார்ட்டத்தை, எத்தனை மணி நேரம் ஆனாலும் பாடி வந்தவுடன் போஸ்ட் மார்ட்டம் செய்து அனுப்பவேண்டும் என்கிற ஒரு உத்தரவை நீங்கள் அளிக்கவேண் டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் மீனவ சகோதரர்கள், பனை ஏறுகிற தொழி லாளர்கள், கட்டிடத்தொழிலாளர்கள் போன்றவர்கள் எல்லாம் —இது உங்களுடைய துறையில் வராது என்றாலும் நீங்கள் பரிந்துரை செய்ய வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன்.— விபத்தில் மரணம் ஏற்படுகிற நேரத்தில் அவர்களுடைய பாடி யையும் போஸ்ட்மார்ட்டம் செய்யக் கூடிய சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. அப்படி அவர்களை போஸ்ட் மார்ட்டம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால் கண் முன்னாலே தெரிகிறது. பனையில் இருந்து விழுந்து இறக் கிறான். கடலில் போகிறபோது இறக்கிறான், இதிலே வந்து யாராவது சந்தேகம் கிளப்பி பிரச்சினைகள் ஏற்படுத்தினால் மாத்திரம் போஸ்ட் மார்ட்டம் செய்தால் போதும் என்கிற விதத்தில் நீங்கள் உங்களுடைய சட்டத்தைத் திருத்தித் தர வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இந்த மானியத்தைப் பொறுத்தவரையில் நான் ஒரு சித்த மருத்துவ டாக்டர் என்கிற விதத்தில் — மற்றவற்றை எல்லாம் மற்ற டாக்டர்கள் கவனித்துக் கொள்வார்கள் — நான் சித்த மருத்துவத்தைக் கொஞ்சம் கவனிக்க வேண்டிய காரணத் தால் அதற்குச் செல்லலாம் என்று கருதுகிறேன். இருந்தாலும் அதற்கு முன்பு ஒரு கருத்தை நான் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய மாவட்டத்தில் கருங்கல், மூஞ்சிரை, தேங்காய்ப் பட்டணம் ஆகிய பகுதிகளில் ஆரம்பச் சுகாதார நிலையம் இருக் கிறது. அது பல ஆண்டுகளாக இருக்கிறது. பெருந்தலை வர் காமராஜர் அவர்கள் தமிழகத்தினுடைய முதல்வராக இருந்த காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஆரம்பச் சுகாதார நிலையம் அந்த கருங்கல் ஆரம்பச் சுகாதார நிலையம். அது அப்கிரேட் பண்ணப்பட்டு அதிலே படுக்கை வசதிகள் ஏற்படுத்தவில்லை. நான் இதற்கு முன்பும் ஒரு முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்தேன். அப்போதும் சட்டமன்றத்தில் எடுத்து உரைத்து இருக்கிறேன். அப்கிரேட் செய்து உங்களுக்கு வேண்டிய உதவிகள் செய்து தரப்படும் என்று சொன்னதற்குப் பிறகு கூட செய்யவில்லை. இப்போது நீங்கள் அரசினுடைய கொள்கையாக 22 படுக்கை வசதி உடையதாக

அமைக்கப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். பாராட்டுகள். அங்கே படுக்கை வசதிகளை அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு அங்கே குடிதண்ணீர் கூட மிகக் குறைவாக இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் நம்முடைய சென்னை மாநகரத்தில் அதாவது தலைநகரில் இருக்கின்ற ஆஸ்பத்திரிகளுக்கு நீங்கள் செல்கிற நேரத்தில் கூட ஆஸ்பத்திரி கேம்பஸ் உள்ளே போனவுடனே அடிக்கக்கூடிய ஸ்மெல் தாங்க முடியாத அளவுக்கு இருக்கிறது. அங்கே நோய் குணம் அடைய வேண்டும் என்பதற்காகச் செல்கிற நேரத்தில், அங்கேயுள்ள துர்நாற்றத்தில் நோயே வந்து விடும் என்கின்ற சூழ்நிலை இருக்கிறது. எனவே அங்கெல்லாம் கொஞ்சம் கூடுதலாக டாய்லெட் கட்டி கன்வீனியன்ஸைக் கொஞ்சம் அதிகமாக ஏற்படுத்தினால் அதைத் தவிர்த்துவிட முடியும் என்று நான் கருதுகிறேன்.

அடுத்து இனி என்னுடைய பிரச்சினைக்கு வருகிறேன். கிள்ளியூர், இணையம் ஆகிய பகுதிகளில் புதிதாக ஆரம்பச் சுகாதார நிலையம் ஆரம்பிப்பதற்காக இடங்கள் எல்லாம் கைவசப்படுத்தப்பட்டுவிட்டன. ஆனால் இன்னும் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை. எனவே அதையும் நீங்கள் ஆரம்பித்துத் தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அடுத்து நம்முடைய மத்திய சர்க்காரும், மாநில சர்க்காரும் சேர்ந்து நேஷனல் இன்ஸ்டிட்யூட்-ஆக ஒரு கல்லூரியை சித்த மருத்துவத்திற்காக ஆரம்பிக்கவேண்டும் என்று ஒரு திட்டம் இருக்கிறது. அதற்கு மொத்தம் 36 கோடி ரூபாய் செலவாகிறது. இதிலே 24 கோடி ரூபாய் மத்திய அரசு தருகிறது. மீதியுள்ள 12 கோடி ரூபாயை நாம் செலுத்த வேண்டும். அதை நாம் பணமாகக் கூட செலுத்தவேண்டாம். அதற்கான ஒரு இடம் பக்கத்து மாவட்டத்திலே தேர்ந்தெடுத்து இருக்கிறார்கள். அதாவது பக்கத்து மாவட்டத்தில் பணப்பாக்கம் என்ற பகுதியில் இடம் தேர்வு செய்திருக்கிறார்கள். அந்தப் பகுதியை நீங்கள் தேர்ந்தெடுப்பதைவிட அரும்பாக்கத்தில் இருக்கக்கூடிய அண்ணா மருத்துவமனையோடு சேர்த்து ஒரு 10 ஏக்கர் நிலம் இருக்கிறது. அதற்கு மூலிகைத் தோட்டம் என்று பெயர் வைத்து இருக்கிறார்கள். பெயர்ப்பலகை இருக்கிறது, ஆனால் மூலிகை இல்லை என்றுதான் கருதுகிறேன். அந்த இடத்தையும் அந்த அண்ணா மருத்துவமனையும் சேர்த்துப் பார்க்கிறபோது கிட்டத்தட்ட 12 கோடி ரூபாய் பெறுமானம் உடையதாக அமைகிறதாம். எனவே அங்கே நேஷனல் இன்ஸ்டிட்யூட் வைக்கலாம் என்று சொல்லி இதைக் கொடுப்பீர்களானால் பண முதலீட்டில் உங்களுக்குச் சிரமம் இருக்காது. அந்த 12 கோடி ரூபாய்க்காக அதை எடுத்துக் கொண்டு மத்திய அரசு தருகிற 24 கோடி ரூபாயையும் சேர்த்து அந்த நேஷனல் இன்ஸ்டிட்யூட் அங்கே வருவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தவேண்டும். இதை உங்கள் கருத்தில்



கொண்டு செய்யவேண்டும். ஏனென்றால் பல ஆண்டுகளாக இந்தப் பிரச்சினை இருந்துகொண்டு இருக்கிறது. இதற்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்கிற விதத்தில் மாண்புமிகு மரியாதைக்குரிய முதலமைச்சர் அவர்களுடைய ஆட்சியில் மிகவும் செயல்திறன் படைத்த, மிகவும் துரிதமாகச் சித்த மருத்துவத்தை வளர்க்கவேண்டும் என்ற ஆவலோடு இருக்கக் கூடிய மரியாதைக்குரிய அமைச்சர் முத்துசாமி அவர்கள் இதில் தனிக் கவனம் செலுத்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-10

அதே போல, சித்த மருத்துவக் கல்லூரியினுடைய மாணவர்கள் தொடர்ச்சியாக போராட்டங்கள் நடத்தி வருகின்றனர். முன்னாள் முதலமைச்சர் மரியாதைக்குரிய எம். ஜி. ஆர். அவர்கள் ஒரே நேரத்திலே 200 பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுத்தார்கள். அதற்குப் பிறகு எந்த விதமான வேலைவாய்ப்பும் சித்த வைத்திய கல்லூரி மாணவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை என்ற குறை இருக்கிறது. 450 டாக்டர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். பட்டம் பெற்ற பிறகு வேலையில்லாமல் இருக்கிறார்கள். எண்ணிக்கையில் குறைவுதான். எனவே நீங்கள் அவர்களைப் பரிவுடன் கவனித்து, அவர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்தித் தருகின்ற விதத்தில் உத்தரவுகளை இட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக சென்னை, கோயம்புத்தூர் போன்ற பகுதிகளில் ஈ. எஸ். ஐ. மருத்துவ மனைகளிலே சித்த மருத்துவ டாக்டர்களை நீங்கள் நியமித்திருக்கிறீர்கள். அதுபோல தமிழகம் முழுவதும் உள்ள ஈ. எஸ். ஐ. மருத்துவ மனைகளிலே அதிகமான சித்த மருத்துவப் பிரிவினை நீங்கள் இணைப்பீர்கள் என்று சொன்னால் அதிகமான டாக்டர்களுக்கு வேலை கொடுக்க முடியும். அதே போல ஆரம்ப சுகாதார நிலையங்களிலே பொதுவாக சித்த மருத்துவத்தில் பட்டம் பெற்ற டாக்டர்களை பணியிலே அமர்த்துகின்ற விதத்தில் ஆணைகள் பிறப்பிப்பீர்கள் என்று சொன்னால் அவர்களுக்கும் வேலை வாய்ப்பு ஏற்படுத்த முடியும்.

இன்னும் சொல்லவேண்டுமென்று சொன்னால், ஆங்கில
முறை மருத்துவத்திற்கும் சித்த முறை மருத்துவத்திற்கும்
பார்க்கும்போது பெருவாரியான பகுதி ஒன்று என்று சொல்ல
லாம் ஆங்கிலத்திலே சில ஸ்பெஷலிஸ்ட் ஐட்டம்கள் இருக்
கின்றன. அதே போல சித்த மருத்துவத்திலே சில குறிப்பிட்ட
நோயாளிகளுக்கு சித்த மருத்துவம்தான் சிறந்தது என்று இருக்
இன்றது. உதாரணத்திற்கு வாத நோய் சம்பந்தப்பட்டவர்,

[டாக்டர் தே. குமாரதாஸ்] [1991 செப்டம்பர் 16

களுக்கானாலும் சரி, ஸ்கின் டிசீஸ் இதைப் போல, வர்மம் இப்படிப்பட்ட கலைகளுக்கு சிறந்த மருத்துவம் சித்த மருத்துவத்திலே உண்டு. எனவே அதை ஊக்கப்படுத்துகின்ற விதத்தில் பல நல்ல திட்டங்களைத் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே போல பாளையங்கோட்டையிலே இருக்கின்ற சித்த மருத்துவக் கல்லூரியிலே மாணவிகள் விடுதி கட்டப்பட்டிருக்கின்றது. அங்கே 4 லட்சம் ரூபாய்க்கு செலவு செய்து ஒரு வாட்டர் டேங்க், அவர்களின் குடிதண்ணீர் திட்டத்திற்காக செலவழித்துக் கட்டப்பட்டிருக்கிறது. 4 ஆண்டுகளாக அது கட்டப்பட்டு முடிக்கப்பட்ட நிலையிலேதான் இருக்கிறதே தவிர இதுவரைக்கும் ஒரு டிராப் தண்ணீர் கூட பம்ப் பண்ணி அந்த டேங்கிலே ஏற்றப்படவில்லை என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

ஆனால் நீங்கள் சித்த மருத்துவத்திற்காக நல்ல எண்ணத்துடன் செய்கின்ற திட்டங்கள் கூட, முடிக்கப்பட்டிருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருந்தும்கூட, அதை செய்யவில்லை. இதைப் பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் உடனடியாக அதை கேட்க வேண்டும். அந்த மாணவிகள் அங்கேயிருந்து கடிதங்கள் போட்டிருக்கிறார்கள். நாங்கள் குழாய் அடியில் நகராட்சியின் நடைப்பிலே சென்று தண்ணீர் எடுக்கக்கூடிய சூழ்நிலைகள் இருக்கின்றன. நாங்களும் மருத்துவப் பட்டம் பெற்று டாக்டர்களாக பணியாற்றுபவர்கள். பட்டம் பெற்று பணியாற்றப் போகிறவர்களாக இருக்கிறோம். எங்களுக்கு அங்கேயே தண்ணீர் கிடைக்க வழிசெய்யவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். எனவே அதை நீங்கள் கருத்திலே கொண்டு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல நாங்கள் கூட சித்த மருத்துவக் கல்லூரியிலே படிக்கின்றபோது அங்கே ஒரு பஸ் இருந்தது. இப்போது அந்த பஸ்-ஸையே காணவில்லை. அந்த பஸ் என்னவாயிற்று என்றே தெரியவில்லை. அந்த மாணவர்களுக்கு ஸ்டடி டூர் ஒரு வருடத்திற்கு 2, 3 தடவைகள் போவார்கள். அவர்களுக்கெல்லாம் இந்த பேருந்து வசதி இல்லாத காரணத்தினாலேயே ஸ்டடி டூர் தடைப்பட்டுக்கொண்டிருக்கிறது. எனவே அவர்களுக்கு அந்த பேருந்து வசதியை செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, சித்த மருத்துவத் துறையில் மரியாதைக்குரிய முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் இருக்கும் போது இதனுடைய வளர்ச்சிக்கு என்று சொல்லி தனியாக ஒரு குழுவை நியமித்திருந்தார்கள். அந்தக் குழு, நம்முடைய ஜனாதிபதி ஆட்சியின்போது கலைக்கப்பட்டு இருக்கிறது. அந்தக் குழு, சித்த மேம்பாட்டுக் குழு என்பதாகும். மீண்டும் அந்த குழுவை நீங்கள் நியமிக்கவேண்டும். அந்தக் குழு



1991 செப்டம்பர் 16] [டாக்டர் தே. குமாரதாஸ்]

விலே எங்களுக்கு ஆசிரியராக இருந்து, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பாராளுமன்ற உறுப்பினராக இருந்த, கனகசபாபதி அல்லது 'சம்படி' அவர் பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். சிவகங்கை தொகுதியிலே இருந்து வந்தவர். அவருக்கும் ஆசிரியராகப் பணியாற்றிய மதிப்பிற்குரிய டாக்டர் குமாரசாமி என்பவர் செயலாளராக இருந்து பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அந்த நேரத்திலே நல்ல பல திட்டங்களை அரசுக்கு தந்திருக்கிறார். அவரையே செயலாளராக வைத்து நடத்துவதில் எனக்கு ஆட்சேபணையில்லை. நல்ல திட்டங்கள வருகின்ற விதத்திலே செயல்படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு ரூ. 150 உதவித் தொகை மானியமாக நீங்கள் ஆண்டாண்டு தோறும் வழங்கி வருவதாகக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஆனால் இந்த 150 ரூபாய் வருமானம் வைத்து செய்யமுடியுமா என்பதை உங்களுடைய கவனத்திற்கு கொண்டு வந்து அதை குறைந்த பட்சம் ரூ. 300 கொடுக்கவேண்டும். அந்த ரூ. 150 என்று கொடுப்பதை ரூ. 300 ஆக அறிவிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-15

60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கொடுக்கும் பென்ஷன் பற்றி சொல்கிறேன். அதைத்தான் ரூ. 300 ஆகக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே போல, எங்களுடைய மாவட்டத்திலே ஒரு முக்கிய நிகழ்ச்சி ஒன்று. அதாவது இது கேரளா 'செட்-அப்' உடன் இருந்தது திருவாங்கூர். அப்போதே நம்முடைய மாவட்டத்திலே இன்றைக்கு இணைந்து இருக்கின்ற திருக்குச்சியினுடைய பகுதியில் பெரும் பகுதியாக இங்கே இணைந்திருக்கிறார்கள். அதனுடைய பகுதியைச் சேர்ந்தவர் அங்கே சித்த மருத்துவமானாலும் சரி ஆயுர்வேத மருத்துவமானாலும் சரி, யூனானி மருத்துவமானாலும் சரி, ரிஜிஸ்ட்ரேஷன் அங்கே கேரளாவிலே பண்ணியிருக்கிறார்கள். ஆனால் அந்த ரெஜிஸ்ரேஷனைத் தமிழ் நாட்டில் ஏற்றுக் கொள்ளவில்லை. ரெஜிஸ்ட்ரேஷனை இந்திய நாட்டினுடைய சட்டதிட்டங்களுக்குட்பட்டு செய்தால் போதும் என்று இருக்கிறது. எனவே, கேரளாவில் அவர்கள் ரெஜிஸ்ட்ரேஷன் செய்திருந்தாலும், இங்கே வாழ்கின்ற அவர்களுடைய ரெஜிஸ்ட்ரேஷனையும் ஏற்று, அவர்களுக்கு வேண்டிய எல்லாவிதமான ஆணைகளையும், தமிழ் நாட்டில் ஒரு பட்டதாரி அல்லது தமிழ்நாட்டில் ரெஜிஸ்ட்

ரேஷன் செய்திருக்கிற ஒரு ஆர்.ஐ. எம்.பி.-க்கு என்ன விதங்களில் எல்லாம் அரசு சலுகைகள் வழங்கப்படுகிறதோ அதுபோல் எல்லாவிதமான வசதிகளையும் ஏற்படுத்தித் தர வேண்டும்.

அதுபோல பெரிய அளவில் பழனி, திருச்செந்தூர் போன்ற இடங்களில் இருக்கின்ற கோயில்களில் எல்லாம் சித்தா மருத்துவ டாக்டர்கள் நியமிக்கப்பட வேண்டும். அங்கே அவர்களுக்கெல்லாம் அரசு ஆணைப்பிறப்பித்தால் அவர்களை நியமிக்கலாம் என்று கருதிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, பெரிய வருமானம் வரக்கூடிய கோயில்களில் எல்லாம் சித்தா மருத்துவத்தினுடைய பிரிவை ஏற்படுத்த வேண்டும்.

அதுபோல மருந்தாளுநர்கள் என்று இருக்கிறார்கள். பல ஆண்டுகளாக சித்தா டாக்டர்களைத்தான் நியமிக்கிறார்களே தவிர மருந்தாளுநர்களை நியமிப்பதில்லை. ஆகவே சித்தா டாக்டர்களை நியமிக்கும்போதே மருந்தாளுநர்களையும் நியமிப்பதற்கான ஆணைகளைப் பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாகச் சொல்ல வேண்டுமென்றால், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். காலத்திற்குப் பிறகு உங்களைத்தான் அதிகமாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் செய்யக்கூடிய துணிச்சல் மிக்கவர்கள். பக்குவம் படைத்தவர்கள். ஆகவே, இந்த ஆட்சியில் சித்தா மருத்துவர்களை கைதூக்கி விடுவீர்கள் என்று நான் கருதுகிறேன்.

அதுபோல, வர்மக் கலை பற்றி சொல்கிற நேரத்தில் உலகத்திலேயே இன்றைக்கு வர்மக் கலை வாழ்ந்துக் கொண்டிருக்கிற ஒரே ஒரு மாவட்டம் கன்னியாகுமரிதான். அதை நீங்கள் பெருவாரியாக பயன்படுத்த வேண்டும். முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு எம். ஜி. ஆர். அவர்களிடத்தில் பணியாற்றிய டாக்டர் ஒருவர் கூட என்னுடைய தகப்பனாரிடத்திலிருந்து சர்ட்டிபிகேட் வாங்கி வந்திருக்கிறார். நான் இன்னாரிடமிருந்து வர்மம் கற்றேன் என்று வாங்கினார். அந்த வர்மக் கலை இப்பொழுது அழிந்து கொண்டிருக்கிறது. இன்றைக்கு அந்தந்த மாவட்டங்களில் சித்தா மருத்துவ அதிகாரிகள் இருக்கிறார்கள். வர்மக் கலை படித்தவர்கள் யார் யார் என்று அவர்களை வைத்து, அந்தந்தப் பகுதியிலே யார் யார் இதிலே ஸ்பெஷலிஸ்ட்டாக இருக்கிறார்களோ அவர்களை நீங்கள் தேர்ந்தெடுத்து, ஊக்கப்படுத்தி, அந்தக் கலையை வளர்ப்பதற்கான முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.



## 5. அறிவிப்புகள்.

### (அ) உறுப்பினர்களுக்கு "டாம்ப்கோ" ஹேர் டானிக் மற்றும் முக "கிரீம்" வழங்குதல் குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஏதோ 'பற்பசையை' உறுப்பினர்களுக்கு வழங்குவதுபற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் என்னிடம் சொன்னார்கள். இப்போது சொன்னால் வாங்குவார்கள். சித்த மருத்துவத் துறையிலிருந்து புதிதாக ஒரு பற்பசை கண்டு பிடித்திருக்கிறார்கள். அது உறுப்பினர்களுக்கு, நூலகப் பிரிவு-2 அறையிலிருந்து கொடுக்கப்படுகிறது. அதை உறுப்பினர்கள் பெற்றுக்கொள்ளலாம் என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை பதிலுரையின்போது சேர்த்துக் கொள்ளலாம் என்று இருந்தேன். 'டாம்ப்கோ' என்ற ஒரு ஹேர் டானிக் தயாரிக்கிறார்கள். அதைப்பற்றி விரிவாக பின்னால் சொல்கிறேன். அது மிக அருமையாக, முடி கொட்டாமல், நரைக்காமல் (சிரிப்பு) இன்னும் சொல்லப் போனால்.. (திரு. திருநாவுக்கரசு எழுந்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லட்டும். தங்களுக்கு முடி இருக்கிறது. (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** நான் சொல்லி முடிக்கிறேன். (குறுக்கீடு) அவர் என்ன கேட்க வருகிறார் என்று தெரிகிறது. (சிரிப்பு)

**திரு. எஸ். திருநாவுக்கரசு :** பேரவைத் தலைவர் அவர்களே ... ..... ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தங்களுக்கு முடி இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** அவர் என்ன கேட்பதற்கு முயற்சிக்கிறார் என்பது எனக்குத் தெரியும் (சிரிப்பு) நல்ல வேளையாக அதை நான் கொஞ்சம் நாளைக்கு முன்னால்....

**திரு. எஸ். திருநாவுக்கரசு :** பேரவைத் தலைவர் அவர்களே.. ..

5-அறிவிப்புகள்—தொடர்ச்சி

[1991 செப்டம்பர் 16

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்கு முடி இருக்கிறது. உங்களுக்கு அந்தக் கவலை வேண்டாம். (பலத்த சிரிப்பு). திரு. எஸ். திருநாவுக்கரசு.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவருக்குத் தான் முன்புறம் முடி இல்லாமல் இருக்கிறது. ஆகவே, அவரும் இதைப் பயன்படுத்தலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : அதைத்தான் நான் சொல்ல வருகிறேன். அவர் முதலிலே எங்களோடு இருந்தபோது சில யோசனைகளைச் சொல்லி எனக்கு இப்படி ஆகிவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப்பின்னால்தான், நான் அதைக்கூட எழுதி வைத்திருக்கிறேன். உரிய நேரத்தில் இந்த ஆயிலை, எண்ணெயை ஒருவர் என்னுடைய கையில் கொடுத்ததால் இருப்பதையாவது காப்பாற்றிக்கொள்ள முடிந்தது. எனவே, அதை அவர் கூட பயன்படுத்திக்கொள்ளலாம். இப்போது அவர் நிலைமை வேறு விதமாக இருப்பதால் இனிமேல் நிலைமைகள் வேறு விதமாக இருக்கும் என்கிற காரணத்தினால், கொஞ்சம் காப்பாற்றிக்கொள்வது சிரமமாக இருக்கும். (சிரிப்பு) எனவே, அவர்கூட அதை பயன்படுத்தலாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல ' டாம்ப்கோ 'வில் முகத்திற்கு ஒரு கிரீம் தயாரிக்கிறார்கள். அதைப் பயன்படுத்தினால் — அது குறிப்பாக பெண்கள் பயன்படுத்துவது. ஆனால் ஆண்கள் கூட பயன்படுத்துவதில் தவறு இல்லையென்று கருதுகிறேன் — முகம் பொலிவுடையதாக இருப்பதற்கு சிறப்பாக இருக்கும். அதைப் பற்றி கடைசியில் சொல்கிறேன்.

இப்போது மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் மற்ற அத்தனை பேருக்கும், இங்கே இருக்கின்ற அத்தனை பேருக்கும் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். அதைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுது 'ஃப்ரி' தான். இனிமேல் காசுகொடுத்து வாங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவை நூலகப் பிரிவு 2-ல் வழங்கப்படுகிறது. உறுப்பினர்கள் அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1991 செப்டம்பர் 16]

4. மானியக் கோரிக்கைகள்.

1991–92— விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. கே. ஆர். ராஜு.

முற்பகல் 11.20

*திரு. கே. ஆர். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பேரவையில் உரையாற்ற வாய்ப்பினை வழங்கிய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கும் கூடலூர் சட்டமன்றத் தொகுதி வாக்காளர்களுக்கும், இக்கன்னி உரையாற்ற வாய்ப்பளித்த தங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மருத்துவம்-பொதுச் சுகாதாரம் ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது தமிழ்நாடு அரசின் சார்பில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கோரியுள்ள தொகையை நான் வரவேற்கிறேன். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்ற பொன்மொழிக்கு ஏற்ப மக்களின் முதல் அடிப்படைத் தேவையான மருத்துவத் துறையின் பணிகள் மேன் மேலும் வளரவும், புதிய சாதனைகள் படைத்திடவும் நான் உளமாற வாழ்த்துகிறேன்.

நீலகிரி மாவட்டத்திலுள்ள கூடலூர் தொகுதி, தமிழகம், கேரளம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களின் எல்லைப் பகுதி, தமிழகத்திலேயே பரப்பளவிலும், மக்கள் தொகையிலும் மிகப் பெரிய தொகுதி இது. கூடலூர் மருத்துவ மனையில் போதிய மருத்துவர்கள் இல்லை. பெண் மருத்துவர்கள் யாருமே இல்லை. இதனால் தாய்மார்கள் மிகுந்த அளவில் சிரமப்படுகிறார்கள். எனவே பெண் மருத்துவர்கள் உடனடியாக நியமனம் செய்ய அரசு ஆவன செய்ய வேண்டும். அதிகமான மழை, கடுமையான மழை, கடுமையான குளிர் என அடிக்கடி சீதோஷ்ண நிலை மாறுவதால், வெளியூர் மருத்துவர்கள் கூடலூர் தொகுதி மருத்துவ மனைகளில் தொடர்ந்து பணி புரிவதில்லை. நியமிக்கப்பட்ட ஓரிரு மாதங்களில் மாறுதல் வாங்கிச் சென்றுவிடுகிறார்கள். இப்பகுதி மருத்துவ மனைகளில் நியமனம் செய்யப்படும் மருத்துவர்கள் தொடர்ந்து பணியாற்ற அரசு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். குறிப்பாக உள்ளூர் மருத்துவர்களையும், அதிகாரிகளையும் அதிக அளவில் நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மருத்துவர்களுக்கான பல பணியிடங்கள் இன்னும் காலியாக உள்ளன. இவ்விடங்களை நிரப்ப அரசு ஆவன செய்ய வேண்டும்.

[திரு. கே. ஆர். ராஜு] [1991 செப்டம்பர் 16

(மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் தலைமை.)

கூடலூர், அதனைச் சார்ந்த பகுதிகளான பந்தலூர், சேரம்பாடி மற்றும் இதர கிராமப் பகுதி மக்கள் அவசர சிகிச்சைக்காக மாவட்டப் பொது மருத்துவ மனை உள்ள உதகைக்கு சுமார் 120 கிலோமீட்டர் தூரம் மலைச் சாலையில் சுமார் மூன்று மணி நேரம் பயணம் செய்ய வேண்டிய கட்டாயம் உள்ளது. இதனால் இப்பகுதி மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். இந்நிலை மாற மாவட்ட பொது மருத்துவ மனையில் உள்ள நவீன மருத்துவ வசதிகள் அனைத்தையும், கூடலூர் மருத்துவ மனைக்கு விஸ்தரிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். மேலும் நவீன மருத்துவக் கருவிகள் வாங்கிடவும், உயிர் காக்கும் மருந்துப் பொருட்கள் வாங்கிடவும் அதிக அளவில் அரசு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமெனவும் கேட்டுக் கொள்கிறேன்.

சேரம்பாடி பகுதியில் உள்ள தமிழ்நாடு தேயிலை தோட்டக் கழகம் அமைக்கப்பட்டு சுமார் 20 ஆண்டுகளாகின்றன. இருப்பினும் மருத்துவ மனை அமைக்கவில்லை. தேயிலைத் தொழிலாளர்களின் நலன் காக்க இப்பகுதியில் புதிய மருத்துவ மனை அமைத்திட வேண்டுமெனவும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாண்டை தாய்மை நல ஆண்டாக அறிவித்துள்ளதை வரவேற்கிறேன். குன்னூரில் பத்து படுக்கை வசதிகள் கொண்ட குழந்தைகள் நலப் பிரிவு கட்டிடம் கட்ட ஏற்பளித்த புரட்சித் தலைவி அரசுக்கு மிக்க நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாண்டில் அமைக்கவிருக்கும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் மூன்றாவது கூடலூர் தொகுதியில் அமைக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உதகை மார்க்கெட்டின் சுகாதார சீர்கேட்டை நிரந்தரமாக அகற்றி இதனால் நோய் பரவாமல் தடுக்க அரசு தேவையான நடவடிக்கைகளை, எடுக்க வேண்டுமென்று கேட்டு, உரையாற்ற வாய்ப்பு தந்தமைக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. பி. கலியபெருமாள்.**

*திரு. பி. கலியபெருமாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடும் தவமிருந்து பக்தியோடு வணங்கி வந்தால், கடவுளின் அருள் கிடைக்குமென்பதைப் போல, இயக்கத்தில் உண்மையாகவும், விசுவாசமாகவும் நடந்துகொண்டால், அப்படி நடந்து கொள்ளும் தொண்டர்களுக்கு வரம்



1991 செப்டம்பர் 16] [திரு. பி. கலியபெருமாள்]

தரும் தெய்வமாக, தூற்றியவர்களையும் அரவணைத்து அருள் பாலிக்கும் அன்னையாக, வீணர்களை வீழ்த்தி தமிழகத்தைக் காப்பாற்றிய புறநானூற்று வீராங்கனையாக, குப்பையில் கிடந்த மாணிக்கத்தைக் கழுவி, மெருகூட்டி, ஒளி பெறச் செய்வது போல, என்னையும், என் போன்றோரையும் மக்கள் மன்றத்தில் மரியாதைக்குரியவர்களான கற்றறிந்த சான்றோர்கள், ஆன்றோர்கள் மக்கள் நலன் குறித்து பணியாற்றிய இந்த மாமன்றத்தில் மக்கள் நல்வாழ்வுத் துறை மானியத்தில் கருத்துக்கள் கூற எனக்கு வாய்ப்பு அளித்த என் காவல் தெய்வம், புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதங்கள் தொட்டு வணங்கி, பேரறிஞர் பெருந்தகை, அறிஞர் அண்ணா அவர்களின் கொள்கையையும், புகழையும் நிலை நிறுத்த, பொன்மனச் செம்மல் ஆட்சியை உருவாக்கி, இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் வேண்டுகோளை நிறைவேற்ற, என்னை வெற்றி பெறச் செய்த வாக்காளப் பெருமக்களுக்கும் வெற்றிக்கு ஊக்கத்தோடும் உழைத்த எங்களது அத்தனை தொண்டர்களுக்கும் தோழமை இயக்கமான இந்திரா காங்கிரசுக்கும், பிராமணர் சங்கம், கிருஸ்தவ முன்னணி, ஆதி திராவிடர்கள், குறிப்பாக தாய்மார்களுக்கும் எனது நன்றியை காணிக்கையாக்கி, இந்தப் பேரவையில் எனது கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன். நிதி நெருக்கடி நிறைந்த இந்த நேரத்தில் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு ஏறத்தாழ 343 கோடியை ஒதுக்கி, பல்வேறு சுகாதார நிலையங்களை அமைக்க இருப்பதையறிந்து இதை நான் வரவேற்கிறேன். 30 ஆயிரம் மக்கள் தொகை கொண்ட பகுதிக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டுமென்ற நிலையை மாற்றி, 15 ஆயிரம், 20 ஆயிரம் மக்கள் தொகை கொண்ட பகுதிக்கு ஒரு பொது சுகாதார நிலையம் ஆரம்பிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-25

என்னுடைய தொகுதியில் இரண்டு மருத்துவமனைகள், திருக்காட்டுப் பள்ளியிலும், திருவையாறு ஒன்றியத்திலும் அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்த மருத்துவமனைகள் மருந்தகம் போல் செயல்படுகின்றனவே தவிர வசதியற்ற நிலையில் டாக்டர்கள் உட்காரக் கூட வசதியில்லாமல் இருக்கிறார்கள். அந்த மருத்துவமனையை விரிவு படுத்தி, எக்ஸ்ரே, அறுவை சிகிச்சை வசதி, பரிசோதனைக் கூடம் எல்லாம் அமைத்து, அதை 50 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனையாக ஆக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். திருக்காட்டுப் பள்ளி மருத்துவமனையோடு தாய்-சேய் நல மருத்துவமனையும் இணைக்கப்பட்டிருக்கிறது. அங்கே இருக்கிற பல அவலங்களையும் சங்கடங்களையும் மாற்றி, அவர்களுக்கு வேண்டிய வசதிகலளையும் செய்து தர வேண்டுகிறேன். அதற்காக அரசு ஆஸ்பத்திரியாக விரிவாக்குவதற்கான நிலங்களையும் ஆர்ஜிதம் செய்

வதற்கு முயற்சி எடுப்பதாக இப்போது தெரிகிறது. அவைகளை
விரைவு படுத்தி அங்கே சிறந்த மருத்துவமனையாக விரிவு
படுத்தித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன். அங்கே அவசர
சிகிச்சைக்கு எந்த வசதியும் செய்யப்படவில்லை. அங்கே
நோயாளிகள் சென்றால், 30, 35 மைல்களுக்கு அப்பால்
இருக்கிற தஞ்சை, திருச்சி மருத்துவமனைகளுக்குச் செல்லுங்கள்
என்று கூறுகிறார்கள். அப்படிப்பட்ட அவல நிலையை மாற்றி
அங்கே எல்லா வசதிகளையும் செய்து, ஏழை எளிய நடுத்தர
மக்களுக்கு வேண்டிய வசதிகளை செய்து கொடுக்க வேண்டு
மென்று நான் வேண்டுகிறேன். மருந்துகளுக்கு ஒதுக்கப்பட்
டிருக்கிற தொகை போதாது. மருந்துகளுக்கு கோட்டாவை
அதிகப்படுத்த வேண்டும். அங்குள்ள ஜீப்களுக்கு பெட்ரோல்,
டீசல் கோட்டாவை அதிகப்படுத்தி அங்கேயிருக்கிற ஊர்தி
களுக்கு கோட்டாவை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். மருத்துவமனையில் இருப்பவர்கள் வெளியூரில்
இருந்து பேருந்தில் வருவதால் தாமதமாக வருகிறார்கள்.
இதனால் மக்களுக்கு பாதிப்பு ஏற்படுவதைத் தடுக்க அவர்களுக்கு
குடியிருப்பு வசதிகளைச் செய்து தர வேண்டும். எனது தொகுதி
யில் செங்கிப்பட்டி, தாற்றிப்பட்டி, கோவிலடி, நடுக்காவேரி,
பூதலூர் போன்ற இடங்களில் ஆரம்ப சுகாதார மையங்கள் இருக்
கின்றன. அங்கேயுள்ள மருத்துவர்கள், நர்சுகள் தங்கு
வதற்கு வசதியில்லாத நிலையில் இருக்கிறார்கள். அவர்கள்
தங்க வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன். அவர்களில் சிலர் வாடகை வீடுகளில் இருக்கிறார்
கள். அப்படிப்பட்ட நிலையை மாற்றி நல்ல வசதிகளை
செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-30

திருப்பூந்துருத்தி ஒரு பேரூராட்சியாகும். அங்கேயும் இந்த
ஊர் என்ற இடத்திலும் எந்த வசதியும் பெறாத ஒரு தீவு போல்
உள்ளன. பல்லாயிரக்கணக்கான மக்கள் வாழ்கிற அந்த
பகுதியிலும் சுகாதார மையங்கள் ஏற்படுத்தித் தர வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்காக அரசு சொல்லும்
நிபந்தனைகளை ஏற்று, அதற்குண்டான பணமும், நிலமும்
கொடுக்க அந்தப் பகுதி மக்கள் தயாராக இருக்கிறார்கள்.
அதற்கு வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன். திருவையாறு பேரூராட்சியில் சாக்கடை வசதி
இல்லாத காரணத்தால் யானைக்கால் நோய் பரவுவதற்கு ஏது
வாக இருக்கிறது. அதற்கு தடுப்பு ஊசி போடும் திட்டத்தை
அங்கே கொண்டு வர வேண்டும். கிராமப் பகுதிகளில் உள்ள
பெண்களும் ஆண்களும் கழிப்பறை வசதியில்லாமல் சங்கட
மான நிலையில் இருக்கிறார்கள். அந்தப் பகுதியில் சுகாதாரக்
கேடு விளைவிக்கிற நிலைமை இருக்கிறது. இந்தத் துறைக்கு
சம்பந்தம் இல்லாவிட்டாலும் அங்கே கழிப்பிடம் கட்டி தண்
ணீர் வசதியும், பணியாளர்கள் வசதியும்



மென்று கேட்டுக் கொள்கிறேன். மாவட்ட மருத்துவமனை
களில் சென்றால் சரிவர கவனிப்பதில்லை. தஞ்சையில் இருக்கும்
மெடிக்கல் காலேஜுக்கு சென்றால் அங்கே நோயாளிகளுக்காக
இருக்கிற பகுதிகள் பரிசோதனை செய்கிற மருத்துவக் கல்லூரி
யாக இருப்பதால் அங்கே நோயாளிகள் யாரும் சென்று மருத்
துவம் பார்த்துக் கொள்ள முடியாத நிலையிருக்கிறது. பார்க்க
வசதியில்லை. அங்கே பணியாற்றுகிற மருத்துவர்கள் வைத்
திருக்கிற கிளினிக்கில் தான் சேர்க்கப்பட வேண்டும். அப்படிப்
பட்ட சூழ்நிலையை மாற்றி ஏழை எளியவர்களுக்கு உதவுகிற
நிலையில் அந்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் எல்லா
வசதிகளும் செய்து அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று கேட்டு
கொள்கிறேன். அதே நேரத்தில் எனது தொகுதியில் 1951லே
மகாத்மா காந்தி நினைவாக ஆரம்பிக்கப்பட்ட காச நோய்
மருத்துவமனை இன்று நலிந்த நிலையில் இருக்கிறது. அங்கே
உள்ள மருத்துவர்கள் எல்லாம் நலிந்த நிலையில் வாழ்கிறார்கள்.
அந்தப் பகுதியில் உள்ள மக்கள் எல்லாம் இந்த அரசு அந்த
மருத்துவமனையை எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற கோரிக்
கையை வைத்து இருக்கிறார்கள். அந்த செயற் குறிப்பு இந்த
அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்று நான் நினைக்கிறேன்.
அதைத் துரிதப்படுத்தி அந்த மருத்துவமனையினை அரசே
எடுத்துக் கொண்டு அரசு மருத்துவமனையோடு இணைத்துக்
கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு திருவையாற்றில் சப்தஸ்தானம் என்ற பெருவிழா
7 நாட்களுக்கு நடக்கும். அதையடுத்து இசை மேதை தியாக
ராஜர் ஆராதனை 5 நாட்களுக்கு நடக்கும். ஆகவே அங்கே
அந்த சமயங்களில் விழாக்கால மருத்துவமனையை ஏற்படுத்தி,
ஆயிரக்கணக்கில் அங்கே வரும் மக்களுக்கு மருத்துவ வசதி
செய்து தர வேண்டுகிறேன். அதே போல் கல்லணை சுற்றுலா
மையமாக்கப்பட்டு இருப்பதால் சுற்றுலாப் பயணிகள் ஏராள
மான பேர், வருகிறார்கள். அந்த சுற்றுலாப் பயணிகள் வசதிக்
காகவும், சுற்றுப்புற கிராம மக்களின் வசதிக்காகவும் கல்லணை
யில் சுகாதார மையம் ஒன்றை ஆரம்பித்துத் தர வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் கிராமப் பகுதியில் பொது
நல செவிலியர் என்று பணியாற்றுகிறார்கள். அவர்கள் 4 பஞ்
சாயத்துக்கு 3 பஞ்சாயத்துக்கு பணியாற்ற வேண்டுமென்று பணி
கொடுத்து, சொட்டு மருந்து கொடுப்பது, தடுப்பு ஊசி போடு
வது, ஜுரத்திற்கு மருந்து கொடுப்பதுபோன்ற பணிகளை அவர்
களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கு சொந்த வீடுகள்
இல்லாததாலும், ஊதியம் குறைத்துக் கொடுக்கப்படுவதாலும்,
வாடகை வீடுகளில் இருந்து கொண்டு சிறப்பாக பணியாற்ற
முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆகவே பொது நல
செவிலியர்களுக்கு வீட்டுவசதி செய்து கொடுப்பதோடு 2 பஞ்
சாயத்துக்கு ஒருவர் என்ற நிலையையும் உருவாக்க வேண்
மென்று கேட்டுக் கொள்கிறேன்.
டு

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. சி. சுவாமி
நாதன்.

திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இங்கே எனக்கு பேச வாய்ப்பளித்தமைக்கு
என்னுடைய நன்றியறிதலை முதலிலே தெரிவித்துக் கொள்கி
றேன். இங்கு நானும் புரட்சித் தலைவியின் ஆட்சியில் மருத்
துவம் மக்கள் நல்வாழ்வு பற்றிய கொள்கைக் குறிப்பில் பேச
ஆசைப்படுகிறேன். ஏறத்தாழ 411 கோடி ரூபாய் ஒதுக்கி,
இங்கே பல்வேறு சிறப்புத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக
இந்தக் கொள்கைக் குறிப்பில் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இருந்
தாலும் அரசு கொடுத்திருக்கிற புள்ளி விவரப்படி உள் நோயாளி
கள் ஏறத்தாழ 10,200 பேரும், வெளி நோயாளிகள் ஏறத்
தாழ 46,000 பேர்களும் தினந்தோறும் மருத்துவமனைகளுக்கு
வந்து மருத்துவம் பார்க்கிற சூழ்நிலை இருக்கிறது என்பதை
தெளிவுபட எடுத்துரைத்திருக்கிறார்கள். அப்படிப் பார்க்கிற
போது ஒரு ஆண்டுக்கு ஏறத்தாழ 2 கோடி பேர் மருத்துவமனை
களுக்கு வந்து மருத்துவம் பார்க்கிற சூழ்நிலை உருவாகியிருக்
கிறது.

முற்பகல் 11-35

படுக்கை வசதிகளைப் பொறுத்தவரையில், 17 ஆயிரத்து
95 படுக்கை வசதிகள் தான் இப்போது இருக்கிற அரசு மருத்துவ
மனைகளில் இங்கே வசதி செய்யப்பட்டு இருக்கிறது. ஆனாலும்
இதை கணக்கிட்டுப் பார்க்கிற போது, உள் நோயாளிகள் என்று
கணக்கில் எடுத்துக் கொண்டால் 36 இலட்சத்துக்கு மேற்பட்டவர்
கள் உள்நோயாளிகளாக மருத்துமனைகளுக்கு வருகிறார்கள்.
இப்போது இருக்கிற இந்த 17 ஆயிரத்து 95 படுக்கை வசதிகளை
ஒப்பிட்டுப் பார்க்கிற போது 12 இலட்சம் பேருக்குத் தான்
உள்நோயாளிகளாக மருத்துவமனையில் அனுமதித்து அவர்களுக்கு
மருத்துவ வசதி செய்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்றது. இன்
றைக்கு அரசு கொள்கை அளவில் பல்வேறு கோரிக்கைகளுக்கு
புதிய அரசு மருத்துவமனைகளை, ஆரம்ப சுகாதார நிலையங்
களை நீங்கள் ஆரம்பிப்பதாக இருந்தாலும் கூட இந்த எண்ணிக்
கையை எட்டிப் பார்க்க முடியுமா என்கிற சூழ்நிலை மிக மெது
வாக நாம் சந்தேகப்படுகின்ற ஒரு சூழ்நிலையில் தான் இன்றைக்கு
இருக்கிறது. இதை நான் எதற்காக குறிப்பிடுகிறேன் என்று
சொன்னால் இன்றைக்கு குடும்பநலத் திட்டத்தைப் பொறுத்த
வரையில் அரசு பல்வேறு திட்டங்களை மேற்கொண்டு இருந்
தாலும்கூட குடும்பநலத் திட்டம் இன்றைக்கு கடுமையாக்கப்
பட்டு, இங்கே ஒரு குடும்பத்திற்கு ஒருவர் தான் என்கிற நிலை
கொள்கையளவிலே ஒப்புக்கொள்ளப்பட்டு இருந்தாலும், ஒரு
குழந்தை பெற்றவர்களுக்கு என்ன வசதியைச் செய்து கொடுக்
கப் போகிறோம் என்கிற அறிவிப்பை அரசு அறிவிக்குமேயானால்,





அப்படி ஒரு குடும்பத்திற்கு ஒருவர் பெற்றுக்கொள்கிறபொழுது
அவர்களுக்கு அனைத்து படுக்கை வசதிகள், கல்வி வசதிகள்
மற்றும் அவர்கள் வேலை வாய்ப்புப் பெறுகிற வகையில் அரசு
அத்தனை பொறுப்புகளையும் ஏற்றுக்கொள்ளும் என்கிற அறி
விப்பை இங்கே மரியாதைக்குரிய முதல்வர் புரட்சித் தலைவியார்
அவர்கள் துணிவோடு அறிவிப்பார்களேயானால், இந்தத் திட்டம்
ஓரளவிற்கு உண்மையான திட்டமாக மாறும்.

இன்றைக்கு அறுவைச் சிகிச்சை என்கிற பேரில் 60 வயது,
70 வயதைத் தாண்டியவர்களைக் கூட அறுவைச் சிகிச்சைக்குக்
கணக்கிலே எடுத்துக் கொண்டு, புள்ளிவிவரங்களை உங்களுக்குச்
சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். இதை நான் எதற்காகக்
குறிப்பிடுகிறேன் என்றால் இன்றைக்கு நாம் எவ்வளவு அதிக
மாக மருத்துவமனைகளைக் கட்டினாலும், எவ்வளவு அதிகமாக
இங்கே மருத்துவர்களை நாம் நியமனம் செய்தாலும் கூட அவர்
கள் இங்கே தமிழகத்தினுடைய மக்கள் பெருக்கத்திற்கு ஈடாக
இதைச் செய்ய முடியுமா என்கிற எண்ணம் நிச்சயமாக நமக்கு
சந்தேகத்தை உருவாக்கித் தருகிறது. ஒரு குதிரையில் சவாரி
செய்கின்ற ஒருவனும், மாட்டு வண்டியிலே, கட்டை வண்டியிலே
சவாரி செய்கின்ற ஒருவனும் எட்டிப் பிடிக்க முடியாத சூழ்நிலை
எப்படி இருக்கிறதோ அது போலத் தான் மக்கள் தொகைப்
பெருக்கம் மிக அதிகமாகப் போய்க் கொண்டிருக்கிறது. எந்த
அளவிற்கு ஈடு கட்ட வேண்டுமென்று சொன்னால், தமிழகத்தில்
மக்கள் தொகை பெருக்கம் கட்டுப்படுத்துவதற்கு ஒரு சிறப்புத்
திட்டத்தை புரட்சித் தலைவியார் அவர்கள் அறிவித்தால்,
பொருளாதார ரீதியாகச் சிந்திக்கிறவர்கள், படித்தவர்கள் இன்று
சிந்திக்க வந்து குறைந்தபட்சம் ஒரு குடும்பத்திற்கு அது ஆணாக
இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும் ஒன்றையே பெற்றுக்
கொண்டால் போதும் என்கிற நிலை வருகிறபோது இந்தக் குறி
யீடுகளை, இலக்கங்களை நாம் நிச்சயமாகப் பெற முடியும்.

அதுபோல அனைத்து மாவட்ட மருத்துவமனைகளைப்
பொறுத்தவரையில்—சில மாவட்ட மருத்துவமனைகளில்
ஸ்பெஷலிஸ்ட் என்று சொல்லக் கூடிய அனைத்து டாக்டர்களும்
இருப்பது இல்லை. ஒரு மருத்துவமனையிலே கார்டியாலிஸ்ட்
ஸ்பெஷலிஸ்ட் இருக்கிறார் ; இன்னொரு மருத்துவமனையில் பல்
வைத்தியத்திலே நிபுணத்துவம் பெற்றவர் இருக்கிறார் ; இன்
னொரு மருத்துவமனையில் இருதயச் சிகிச்சையில் சிறப்புப்
படிப்பைப் பெற்றவர் இருக்கிறார். குறைந்தபட்சம் ஒரு
மாவட்டத்துக்கு அனைத்து சிறப்பு மருத்துவத்தையும் பெற்று
இருக்கக் கூடிய மருத்துவர் அடங்கிய, ஒருவராவது நிச்சயமாக
இருந்தால் தான் அந்த மாவட்டத்துக்கு வருகை தரக்கூடியவர்

கள்—புறநோயாளிகள் அல்லது உள் நோயாளிகள் சிறப்பான வசதிகளைப் பெற முடியும் என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கின்றேன்.

இங்கே ஆம்புலன்ஸை பொறுத்தவரையில் நான் ஒரு நிகழ்ச்சி யைக் குறிப்பிட விரும்புகிறேன். நான் சென்னையிலிருந்து புதுக்கோட்டைக்கு சென்றபோது ஒருவர் ஹார்ட் அட்டாக் காரணமாக விழுப்புரத்தில் இறந்து விட்டார். அவரை அங்கே உள்ள மருத்துவமனைக்கு எடுத்துச் சென்று அட்மிட் செய்து, அவரை புதுக்கோட்டைக்கு எடுத்துச் செல்ல வேண்டுமென்று சொன்னபோது அங்கே இருக்கிற மருத்துவர்கள், அந்த ஆம்பு லன்ஸ் அந்த மாவட்டத்திற்குள் தான் செல்லுமேயொழிய வெளி மாவட்டங்களுக்கு செல்லாது என்கிற ஒரு நிலை அங்கே இருப்ப தாகத் தெரிவித்தார்கள். அப்படி போக்குவரத்திலே செல்கிற போது ஒரு நோயாளி இறந்து விடுவாரேயானால் அவரை ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு, ஊருக்கு எடுத்துச் செல்ல வேண்டு மென்று சொன்னால் அதற்கு நீங்கள் சட்டத் திருத்தம் செய்ய வேண்டும். அது போல 218 ஆம்புலன்ஸ் இங்கே இருப்பதாகச் சொன்னார்கள். பல ஆம்புலன்ஸ்களில் ஒயர்-லெஸ் கருவிகள், சிறப்பு மருத்துவர்கள் மற்றும் ஃபர்ஸ்ட்-எய்டு என்று சொல்லக் கூடிய அனைத்து வசதிகளும் செய்யப்பட்டு இருக்கின்றது. மற்ற ஆம்புலன்ஸ்களில் எந்தவொரு சிறப்பு வசதித் திட்டங்களும் செய்யப்படாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது.

முற்பகல் 11-40

ஆரம்ப சுகாதார நிலையத்தைப் பொறுத்த வரையில் ரூ. 30,000-லிருந்து ரூ. 40,000 என்ற அளவுக்கு உயர்த்தி மருந்துகள் வாங்க நிதி கொடுத்திருக்கிறீர்கள். அதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய பாராட்டு தல்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

30,000 ஜனத் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்பதை 15,000 ஜனத் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்று மாற்றினால் தான் உள்ளபடியே கிராமப்புறங் களில் வாழ்கிற மக்கள் பயனடைகிற நல்ல சூழ்நிலை உருவாகும் என்பதை மெத்தப் பணிவோடு தெரிவித்துக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

புதுக்கோட்டையை பொறுத்தவரையில் அரசு மருத்துவ மனையில் ஒரு ஆபரேஷன் தியேட்டர் இருக்கிறது. அதில் ஒரு ஜெனரேட்டரை வைத்திருக்கிறார்கள். அதை பழுதுபார்ப்ப தற்கு கூட இயலாத சூழ்நிலை இருக்கிறது. சில நேரங்களில் மின்சார கோளாறு ஏற்படுகிற போது ஆபரேஷன் தியேட்டர்





செயல்பட முடியாத நிலை ஏற்படுகிறது. புதுக்கோட்டை நகரைப் பொறுத்தவரையில் மகளிருக்கு என்று இருக்கிற ஒரே மருத்துவமனை இராணியர் அரசு மருத்துவமனையாகும். அது பல நூறு ஆண்டுகளுக்கு முன்னால் நிறுவப்பட்டது என்றாலும், அதை மேலும் விரிவுபடுத்த முடியாத சூழ்நிலை இருக்கிறது. மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்தும் அங்கே வருகிற மகளிர் மகப்பேறு சிகிச்சை செய்து கொள்ள இயலாமல், தாய்மார்கள் பலர் தனியார்களிடம் சென்று அவதிப்படுகிறார்கள்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் கந்தர்வ கோட்டையில் தச்சன்குறிச்சி பகுதியில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அதைப்போல கறம்பக்குடியில் சென்ற ஆண்டு ஒரு ஆரம்ப சுகாதார நிலை யத்தை ஆரம்பித்து இருக்கிறார்கள். கருக்காகுறிச்சி என்ற கிராமத்திலும், வானகங்காடி என்ற கிராமத்திலும் பணம் கட்டியிருந்தாலும்கூட சென்ற ஆட்சியாளர்கள் அதை மாற்றி விட்டு, வேறு ஒரு ஊருக்கு, பணம் கட்டாத கிராமத்திற்கு அதற்கு அனுமதி கொடுத்திருக்கிறார்கள். அதை எல்லாம் நீங்கள் நிவர்த்தி செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும். சுந்தம் பட்டியில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் கட்டப்பட்டு 15 ஆண்டுக் காலமாக திறக்கப்படாமல், இன்றும் அது செயல்படாமல் இருக்கிறது. அதை துரிதப்படுத்தி, அதிலே என்ன கோளாறு இருக்கிறது என்பதை ஆய்வு செய்து, அதனை உடனடியாகத் திறப்பதற்கு முறையான நடவடிக்கை மேற்கோள்ள வேண்டும்.

டெல்லி, சண்டிகார் போன்ற பெரிய நகரங்களில், மாநில தலைநகரங்களில் மத்திய அரசால் சிறப்பு நிதி ஒதுக்கப்பட்டு, பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டு, இப்போது உலகத்தில் கிடைக் கிற அத்தனை நவீன கருவிகளையும் வாங்கி வைத்து சிறப்பான மருத்துவ வசதிகளை அளிக்கிறார்கள். இதற்காக மத்திய அரசு சிறப்பு நிதி ஒதுக்கியிருக்கிறது. அதைப் போல தமிழகத்திற்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் மத்திய அரசிலிருந்து சிறப்பு நிதியைப் பெற்று, சென்னை மாநகரில் அல்லல்பட்டுக் கொண்டிருக்கிற பல லட்சக்கணக்கான நோயாளிகளுக்கு நல்ல வசதி செய்து கொடுக்கிற ஒரு சிறப்பு நிதித் திட்டத்தை உரு வாக்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் பத்திரிகை யாளர்களுக்கு சிறப்பு வி.ஐ.பி. பாஸ் கொடுக்கப்பட்டு, அவர் களுக்கு சிறப்பு மருத்துவ வசதிகளை கொடுப்பதற்கு ஒரு சூழ் நிலையை உருவாக்குவதற்காக திட்டம் தீட்டி இருந்தார்கள். ஆனால் அது பின்னால் நிறுத்தப்பட்டு, இப்போது அது பரிசீலனையில் இருக்கிறதா, இல்லையா என்று தெரியாத நிலை

இருக்கிறது. அவர்களுக்கு வி.ஐ.பி. பாஸ் கொடுத்து, சிறப்பு மருத்துவ வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு.வி. தம்புசாமி.

*திரு. வி. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மருத்துவத் துறை பற்றிய மானியக் கோரிக்கையில் ஒருசில கருத்துக்களை கூற அனுமதித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவாரூர் நகரத்தில் ஏறத்தாழ 11 ஆண்டுக்காலமாக, திறக்கப்பட்ட நாள் முதல் இன்றுவரையில் செயல்படாமல் இருந்து வந்த மகப்பேறு மருத்துவமனையை குறித்து நான் நமது தமிழக முதல்வர் அவர்களுக்கு எடுத்துக் கூறியதும், அவர்களும் அந்தக் கோரிக்கையை ஏற்று, விரைவாக நடவடிக்கை எடுக்க மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்குச் சொல்லி, அது இயங்குவதற்காக விரைவான நடவடிக்கையெடுத்து, ஆணை பிறப்பித்த தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் முதலில் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மருத்துவத் துறை என்பது மிக முக்கியமான துறையாகும். அது உயிரோடு போராடுகிற ஒரு துறையாகும். அந்த முக்கியமான துறைக்கு ஒதுக்கியிருக்கின்ற நிதி போதுமானதாக இல்லை என்பது என்னுடைய கருத்தாகும். காரணம் உயிரைப் பாதுகாக்க வேண்டிய ஒரு கட்டாயத்தில் இன்றையத் தினம் நாம் இருக்கிறோம். ஏன் என்றால், உயிருக்கு ஸ்டெப்னி கிடையாது என்பதை நாம் அனைவரும் அறிவோம். அந்த வகையிலே உயிரைப் பாதுகாக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இந்தத் துறைக்கு அதிகமாக இருக்கிறது. எனவேதான், இந்த மருத்துவமனைகளிலே உயிர் காக்கும் மருந்துகள், சலைன் பாட்டில்கள் போன்ற சில மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு இருக்கிறது. இந்தக் குறையை விரைவாகப் போக்குவதற்கு தமிழக அரசும், இந்தத் துறையும் கடுமையாக முயற்சிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-45

பொதுவாக முக்கியமான மருந்துகள் என்பது மருத்துவமனைகளில் இல்லாத காரணத்தால், வெளியிலிருந்து டாக்டர்கள் வாங்கிக் கொள்வதற்கு எழுதிக் கொடுக்கின்றபோது, ஏழை





எளிய மக்கள், அதை வாங்க முடியாமல் சிரமப்படுகிறார்கள். அத்தகைய சிரமங்களைத் தவிர்க்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் மருத்துவமனைகளுக்கு ஒப்பந்தத்தின் மூலம் மருந்துகள் பெறப்படுகின்றன. அப்படி ஒப்பந்தத்தின் மூலமாக மருந்துகள் பெறப்படுகின்ற காரணத்தால், தரமான மருந்துகளை நாம் பெற முடியாத ஒரு சூழ்நிலையில் இருக்கிறோம். எனவே, அத்தகைய முறையைக் கைவிட்டு, அரசுத் துறையிலே உயிரைக் காக்கக்கூடிய மருந்துகளைத் தயாரிக்கின்ற தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்கு அரசு முன்னுக்கு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் எல்லா மருத்துவமனைகளிலும், சித்த மருத்துவத்தை விஸ்தரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்றையத்தினம் சித்த மருத்துவம் என்பது நல்ல முறையில் செயல்பட்டு வரக்கூடிய மருத்துவமாக இருக்கிறது. இன்றையத் தினம் கல்லுப்பட்டியிலே சித்த மருந்துகளைத் தயாரிக்கின்ற ஒரு தொழிற்சாலை ஏற்படுத்தப்பட்டு, அதன் மூலமாக மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன. அதேபோல் அரசும் இதுபோன்ற தொழிற்சாலைகளை ஏற்படுத்தி. சித்த மருந்துகளைத் தயாரித்து எல்லா மருத்துவமனைகளிலும் சித்த மருத்துவத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு பரம்பரையாக சித்த வைத்தியத்தை கிராமப்புறங்களிலே செய்து வந்தார்கள். அவர்களுடைய தொழிலும் இன்றைக்கு நசிந்து, அவர்களும் நசிந்து கொண்டு இருக்கிறார்கள். காரணம் இந்த நாட்டு மருந்துகளினுடைய விலை அதிகரித்து இருப்பதால், அதை வாங்கி அவர்களால் மருந்துகளைச் செய்து, கிராமப்புறங்களிலே ஏற்படக்கூடிய அவசரத் தேவைகளுக்கு மருந்துகளைக் கொடுக்க முடியாத நிலைமையிருக்கின்றது. ஆகவே, அவர்களை அரசு கவனத்தில் எடுத்து, அவர்களுக்கு கடன் உதவி செய்து, அந்த கிராமப்புறத்தில் பரம்பரையாக சித்த வைத்தியம் செய்து கொண்டு இருப்பவர்களைப் பாதுகாத்து வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் கிராம மக்களுக்கு உடனடியாக மருந்துகள் கிடைப்பதற்கு, அவர்களுடைய தேவைகளை நிறைவேற்றுவதற்கு அரசு முன்வர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் ஹோமியோபதி மருந்துவத்தை விஸ்தரிப்பதற்கான சகல முயற்சிகளையும் அரசு மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இன்று ஹோமியோபதியில் சிறப்பான மருந்துகள் எல்லாம் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இந்த முறையில் உடனடியாக வியாதிகளைப் போக்குவதில் கொஞ்சம் காலதாமதம் ஆகுமே தவிர, நிரந்தரமாக குணம் பெறுவதற்காக உள்ள சிறப்பான வைத்திய முறையாகும் இது. இதையும் அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், மருத்துவமனைக் கட்டடங்களை மருத்துவத் துறையே கண்காணிக்கின்ற ஒரு பொறுப்பை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். பொதுவாக, மருத்துவமனைகள் நம்முடைய துறையின் கீழே இருந்தாலும் கூட, அந்த கட்டடங்களைப் பராமரிக்கின்ற பொறுப்பு, பொதுப்பணித் துறையிடம்தான் இருக்கிறது. பொதுப்பணித் துறையிடம் இருப்பதால், என்ன சொன்னாலும் கூட, பொதுப்பணித்துறையினர், அதில் ஏற்படக்கூடிய பழுதுகளையோ அல்லது குறைபாடுகளையோ சுகாதார வசதிகளையோ செய்து கொடுப்பதில்லை. உதாரணத்திற்குச் சொல்லவேண்டும் என்றால், சென்ற ஆண்டு திருவாரூரில் தொடர்ந்து நடைபெற்ற திருவிழாக் காலங்களில் மருத்துவமனைகளைச் சீர் செய்யவேண்டும் என்பதற்கு, நான் பல முறை சொல்லி, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் நேரிலே 3 முறைகள் பொதுப்பணித்துறையினரிடம் சொல்லியும், அதைச் சீர் செய்ய முடியாமல் ....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சென்ற ஆண்டு நடந்ததைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். இந்த ஆண்டு, அந்த மாதிரி பிரச்சினை வருமேயானால், அதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவாரேயானால், உடனடியாக எங்களுடைய புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில், அந்தக் குறைகள் களையப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-50

**திரு. வி. தம்புசாமி :** சென்ற ஆண்டு குறையைத் தான் சொல்கிறேன். ஆகவே, பழுதுகளையும் மருத்துவத் துறையே செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். திருவாரூரில் ஒரு பெரிய மருத்துவமனை இருக்கிறது. அதில் காம்பவுண்ட் சுவர் இல்லாத காரணத்தால் .... (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் ஒன்றைக் கவனிக்க வேண்டும். பொதுப்பணித்துறையும் அரசுத்துறை தான். தொடர்ந்து பேசுங்கள்.





**திரு. வி. தம்புசாமி :** மருத்துவத் துறையும் சேர்ந்து செய்யவேண்டும். கட்டடப் பராமரிப்பினை மருத்துவத் துறையே கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதுதான். கட்டடம் கட்டுவது என்பது அல்ல. ஆகவே, இந்த மருத்துவ மனைகளுக்கு வேன்கள் வாங்குவதற்கு நாம் அனுமதித்திருக்கிறோம். ஆனால் அந்த வேன் ரூபாய் 2, 3 இலட்சத்திற்கு வாங்கப்பட்டு, அதைப் பாதுகாப்பதற்கு ஒரு கொட்டகை கூட கட்டுவதற்கு மருத்துவ மனைக்கு அனுமதி கிடையாது. ஆகவே, அது வெய்யிலிலே கிடந்து வீணாகி விரைவாகக் கெட்டுவிடுகின்றது. ஆகவே அந்த மருத்துவத்துறையே அதுமாதிரி கொட்டகை கட்டியாவது பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றையதினம் திருவாரூரிலே இருக்கின்ற மருத்துவ மனைக்கு காம்பவுண்ட் சுவர் இல்லாத காரணத்தினால் ஆடு, மாடுகள், பன்றிகள் பூராவும் மருத்துவ மனையைச் சுற்றி வருகின்றன. அதனால் அங்கே சுகாதாரக் கேடுகளை விளைவிக்கக் கூடிய சூழ்நிலைமை இருக்கிறது. ஆகவே, அரசு அதைக் கவனத்தில் எடுத்துக் கொண்டு விரைவாக அந்த காம்பவுண்ட் சுவர் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்களும் விரைவாக முடிக்கவேண்டும்.

**திரு. வி. தம்புசாமி :** இதோ முடித்துவிடுகிறேன். பேரூராட்சி போன்று விளங்கக் கூடிய அம்மையப்பனில் இருக்கக் கூடிய ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று ஆரம்ப சுகாதார நிலையத்திலே மருத்துவர்கள் நிரந்தரமாகத் தங்குவதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இன்றையதினம் மருத்துவர்கள் அங்கே தங்குவது கிடையாது. அதனால் நோயாளிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அந்த மருத்துவர்கள் தங்குவதற்கான வீடுகளை அரசு சார்பிலே கட்டிக் கொடுத்து, தங்கவைப்பதற்கான ஒரு நிலைமையை ஏற்படுத்திக் கொடுப்பதோடு, கிராமப்புறங்களில் அந்த சுகாதார நிலையங்களிலே பணி புரிந்தால், ஏதாவது கூடுதல் வசதி செய்து கொடுக்க முடியுமா என்று அரசு பரிசீலித்து, அந்தச் சலுகையை வழங்கினால், நிச்சயமாக அங்கே அவர்கள் தங்க முடியும். அதுமாதிரி ஆரம்ப சுகாதார நிலையங்களை குறைந்தபட்சம் 10 படுக்கைகளைக் கொண்டதாக மாற்றவேண்டும். சுகாதார நிலையத்திற்கு நன்கொடை நிலம் பெற்றுத்தான் கட்ட வேண்டுமென்ற நிலையினை மாற்றவேண்டும். அப்படி இருப்பதால் பல கிராமங்களிலே

அந்த சுகாதார நிலையத்தை ஏற்படுத்த முடியவில்லை. ஆகவே அப்படி அதைக் கைவிட வேண்டும். 10,000 மக்கட் தொகை கொண்ட ஒரு பகுதிக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தை ஏற்படுத்த வேண்டும். அந்தந்த மாவட்டத்தில் உள்ள மருத்துவர்களை அந்தந்த மாவட்டத்தில் இருக்கக் கூடிய மருத்துவ மனைகளில், சுகாதார நிலையங்களில் பணியாற்றுவதற்கு வகை செய்ய அரசு எதிர்காலத்தில் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அது மாதிரி கணவன்-மனைவி ஒரே மருத்துவமனையில் பணியாற்ற அரசு பரிசீலிக்க வேண்டும்.

அடுத்து கீவளூர், கொறடாச்சேரி, தேலூர், குளிக்கரை, அத்திக்கடை போன்ற பெரிய அரசு சுகாதார நிலையங்களை அரசு மருத்துவமனைகளாக மாற்ற ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வலிவலத்திலே ஒரு டிரஸ்டின் மூலம் மருத்துவமனை இயங்குகின்றது. அந்த டிரஸ்டிற்குச் சொந்தமாக 11 ஏக்கர் நிலம் இருக்கிறது. அந்த நிலத்தையும், மருத்துவமனையையும் அரசிடம் ஒப்படைப்பதற்கு அவர்கள் தயாராக இருக்கிறார்கள். அந்த மருத்துவமனையை அரசு எடுத்து நல்ல முறையில் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது) (குறுக்கீடு).

ஒரேயொரு விஷயம். வைப்பூர் என்ற பகுதி ஏழையெளிய மக்களைக் கொண்ட ஒரு பகுதி. அங்கே ஒரு மருத்துவமனையை ஏற்படுத்துவதற்கு அரசு பரிசீலிக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்தக் கருத்துக்களைச் சொல்ல அனுமதித்த தங்களுக்கு மீண்டும் நன்றி சொல்லி அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் செல்வி நிர்மலா அவர்கள்.

செல்வி பி. நிர்மலா : மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என் சொல், செயல், சிந்தனை அனைத்திலுமே நிறைந்திருக்கின்ற எனது அன்புத் தாய், அன்பு தெய்வம், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற் பாதங்களை, எனது சிரசைத் தாழ்த்தி, எனது நன்றியை சமர்ப்பித்துக்கொண்டு, இந்த மருத்துவ, பொதுச் சுகாதாரம் என்ற மானியக் கோரிக்கைகளிலே எனது கன்னி உரையை ஆரம்பிக்கின்றேன்.

நான் வேட்பாளராக இருந்த சமயத்தில், நான் வேட்பாளராக அறிவிக்கப்பட்டபோது, சிலர், வேண்டாதவர்கள் ஒன்றுமே அறியாத தலைவி அறிவித்த ஒன்றுமே தெரியாத வேட்பாளர் என்ற விமர்சனத்திற்கு ஆளானேன். நான் உண்மையிலேயே அதை ஒத்துக்கொள்கிறேன். நமது தலைவி ஒன்றுமே அறியாத





தலைவிதான். அநாகரீகம், அராஜகம், அக்கிரமம் போன்ற அரசியலில் ஒன்றுமே அறியாத தலைவி அறிவித்த ஒன்றுமே தெரியாத வேட்பாளர் என்ற முறையிலே நான் உண்மையிலே பெருமைப்பட்டுக் கொள்கின்றேன்.

முற்பகல் 11-55

மாண்புமிகு மறைந்த முதல்வர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் உதார குணத்திற்கு பல உதாரணங்களைச் சொன்னார்கள். எங்கோ ஒரு ஏழைத்தாய் மாற்றுச் சேலை இல்லாமல் இருந்ததைக் கண்டு, இலவச சேலைத் திட்டம் என்பதை அறிவித்தார்கள் என்பதைக் கேட்டு சந்தோஷப்படுகிறேன். ஆனால் நான் அறிந்த ஒரே தலைவி என் அன்புத் தாய் அவர்களின் இரக்கக் குணத்திற்கு எங்கோ அல்ல, இங்கேயே நான் ஒரு உதாரணத்தை அறிவிக்க விரும்புகிறேன். சட்டம், சட்டமன்றம், அரசியல் என்பதை அறியாமல் இருந்த என்னை தாய் தந்தையற்ற ஒரு அனாதையை, கிராமப் பெண்ணை, அரசியல், சட்டம், சட்டமன்றம் என்பதை அறிய வைத்து, இன்று தங்கள் முன் நானும் ஒரு உறுப்பினராக என்னை அமர வைத்த என்னுடைய அன்புத் தாய், அன்புத் தெய்வத்தின் உதார குணத்திற்கு ஈடு இணையே கிடையாது. நான் ஒரு டாக்டராகவோ, என்ஜினியராகவோ, ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரியாகவோ வரவேண்டும், வந்து என்னைப் பெற்ற பெற்றோர்களுக்கு பெருமைத் தேடி தரவேண்டும் என்று நினைத்திருந்தேன். எனது இயலாமையால் சந்தர்ப்ப சூழ்நிலையினால் நான் டாக்டராகவோ, என்ஜினியராகவோ, ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரியாகவோ வந்து என்னைப் பெற்றவர்களுக்கு பெருமைத் தேடி தர இயலவில்லை. அதை நினைத்து தினம் தினம் வேதனைப் பட்டுக்கொண்டிருந்தேன். எனது வேதனையை என் அன்புத் தாய் அவர்கள் தீர்த்து வைத்து, இன்று திண்டுக்கல் சட்டமன்ற உறுப்பினருடைய பெற்றோர்கள் என்ற பெருமையை மறைந்த என் பெற்றோர்களுக்கு தேடித் தந்த என் அன்புத் தெய்வத்தின் பொற்பாதங்களுக்கு மறைந்த என் பெற்றோர்களின் சார்பாக மறுபடியும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மருத்துவம்-பொதுச் சுகாதாரம் என்கிற மானியக் கோரிக்கையில் திண்டுக்கல் மருத்துவமனையில் குளுகோஸ் மற்றும் மருந்துகள் பற்றாக்குறை இருக்கிறது. பொதுவாகவே அரசாங்க மருத்துவமனைகளிலே நடுத்தர குடும்பத்தினரும் ஏழைகளும் தான் அதிகமாக வருகின்றனர். அங்கே உடல் நிலை காரணமாக அட்மிட் செய்யப்படுகிறபோது, குளுகோஸ், சில மருந்துகள் இல்லை என்று மருத்துவர் எழுதிக் கொடுப்பதை வெளியே சென்று வாங்கி வந்துதான் போடவேண்டும் என்கிற நிலைமைக்கு ஆளாகிறபோது அவர்கள் இயலாமையால் மிகவும் வருந்துகின்

டாக்டர் எம். கருப்புசாமி : பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு கழக காவல் தெய்வம், 5½ கோடி
மக்களின் சரித்திர நாயகி தமிழக முதல்வர் அவர்களே, மாண்பு
மிகு புரட்சித் தலைவி அவர்களால் சுட்டிக்காட்டப்பட்டவன்
என்ற ஒரே காரணத்திற்காக இதுவரை குன்னூர் சட்டமன்ற
தொகுதியில் யாருமே பெற்றிடாத அளவு அதிக வாக்கு வித்தி
யாசத்தில் வெற்றிபெறச் செய்து தங்கள் உள்ளத்து உணர்ச்சி
களையெல்லாம் ஒருங்கே குவித்து, ஒரே குரலாக சட்டமன்றத்
தில் ஒலிக்கவேண்டும் என்பதற்காக இங்கே என்னை அனுப்பி
வைத்து, இந்த என் கன்னி உரையை மானிய கோரிக்கை சம்
பந்தமாக பேச வைத்த குன்னூர் சட்டமன்றத் தொகுதி வாக்
காளப் பெருமக்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றி
யைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கள்ளச் சாராயத்தை ஒழிக்க அன்னை அவர்கள் இட்ட முதல்
ஆணையை அன்னையின் ஆணையை நிறைவேற்றியே தீருவோம்
என்று ஆயிரம் ஆயிரம் தொண்டர்கள் தயாராக இருக்கிறார்
கள். ஆனால் கைப்பற்றப்படும் கள்ளச் சாராயங்கள் அனைத்
தும் சில இடங்களில் ஏதோ ஒரு வழியில் மீண்டும் கள்ளச் சாரா
யம் விற்பவர்களையே சென்று அடைந்து வருவதாக பலதரப்
பட்ட புகார்கள் கூறப்பட்டுள்ளன. ஆகவே, கைப்பற்றப்பட்ட
கள்ளச் சாராயங்கள் பொறுப்பான அதிகாரிகள் முன்னிலையில்
அழிக்க அம்மா அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு
உறுப்பினர் எதைப்பற்றி பேச வேண்டுமோ அதைப்பற்றிப்
பேச வேண்டும். இதை நீங்கள் காவல்துறை மானியத்திலே
பேசலாம். இப்போது மருத்துவத் துறையைப் பற்றி பேசுங்
கள்.

டாக்டர் எம். கருப்புசாமி : துணைத் தலைவர் அவர்களே,
கள்ளச்சாராயம் குடிப்பதால் உடம்பு கெடும். அது சுகாதாரக்
கேடு. அதனால் அதைத் தடுக்க வேண்டும் என்று சொன்னேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே,
அப்படி ஆரம்பத்திலேயிருந்து ஆரம்பித்துக்கொண்டு வந்
தால் முடிப்பதற்கு நேரம் இல்லாமல் போய்விடும். எனவே
நேரடியாகவே பிரச்சினைக்கு போய்விடலாம். அதை எப்படிக்
காய்ச்சுகிறார்கள் என்பதையெல்லாம் விளக்கி, அது எங்கே
போகிறது, எங்கே வருகிறது என்றெல்லாம் சொன்னால் நாள்
கணக்கிலே எடுக்கும் என்ற காரணத்தினால்தான் நேரடியாகப்
பிரச்சினைக்கு வரச் சொல்கிறோம்.



டாக்டர் எம். கருப்புசாமி : பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, கள்ளச் சாராயத்தில் மித்தைல் ஆல்கஹால் என்று
சொல்லக்கூடிய நச்சுப் பொருள் இருப்பதால் அது கண் நரம்பு
களைப் பாதித்து பெரிபெரல் நியூரைட்டீஸ் என்ற நோயையும்
உண்டாக்கி கண் நரம்புகளை பாதித்து கண் குருடாவதற்கான
சாத்தியக்கூறுகள் இருப்பதால் இது மருத்துவத்தில் இணையப்
பட்டு இருக்கிறது என்பதற்காக இதை கூறுகின்றேன். தவறு
இருந்தால் மன்னிக்கவும்.

என்னுடைய குன்னூர் சட்டமன்றத் தொகுதி கிட்டத்தட்ட
120 கிலோ மீட்டர் நீளம் உள்ள மிகப் பெரிய தொகுதியாகும்.
பெரும்பாலும் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்கிற
வர்களையும், சிறு விவசாயிகளையும் கொண்டு பெரும்
லாபத்தை ஈட்டித் தரக்கூடிய தேயிலைத் தோட்டங்கள்
நிறைந்த தொகுதியாக விளங்குகின்றது.

நீலகிரி மாவட்டத்தில் தேயிலை பயிருக்கு மருந்து தெளிக்
கும்போது, தொடர்ச்சியாக அதே வேலையை ஒரு தொழிலாளி
வருஷக் கணக்கில் செய்து வந்தால் அவருக்கு நுரையீரல் சம்
பந்தப்பட்ட நோய்களும் பலதரப்பட்ட நோய்களும் ஏற்பட்டு
அவரது உயிருக்கு ஆபத்து ஏற்படுகின்ற நிலைமை ஏற்படுகிறது.
ஆகவே தனியார் தோட்டங்களில் மருந்து தெளிக்கும் தொழி
லாளிகளுக்கு பாதுகாப்பு வழங்கக்கூடிய முகமூடிகள் வழங்கப்
பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ரொட்டேஷன்
முறையில் தொழிலாளர்கள் அனைவரும் பணியாற்றும் வகை
யில் மாற்றித் தர வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக்
கொள்கிறேன்.

பிற்பகல் 12—05

நீலகிரி மாவட்ட மக்களின் வாழ்வில் ஒளி ஊட்டுவது
தேயிலை ஆகும். அவர்களின் வாழ்வுக்கும், வாழ்வின் நலத்
திற்கும் ஒன்றி இருப்பது இலை. அந்த இலை வாடினால் அவர்
கள் வாழ்வும் வாடி விடும். அந்த இலை வளம் பெற்றால் வாழ்
வும் வளம் பெறும். அது வளர்ச்சி அடைந்தால் அவர்கள் வாழ்
வும் வளர்ச்சி அடைந்துவிடும். இவ்வாறு தேயிலையோடும்
நமது சின்னமான இரட்டை இலையோடும் தங்கள் வாழ்க்கை
யில் இரண்டறக் கலந்து விட்ட மக்களுக்கு பச்சை தேயிலைக்கு
நியாயமான விலை கிடைப்பது இல்லை. ஆகவே பச்சை
தேயிலைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலமாக
விலை நிர்ணயம் செய்து மாவட்ட அனைத்து விவசாயிகளும்
பயன்பெறும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டத்திலுள்ள குளிராலும், கொடும் மழையாலும் கீழ் தேசத்திலிருந்து மலைப் பகுதிக்கு மருத்துவர்கள் யாரும் பணி புரிய வருவதில்லை. அப்படி வந்தாலும் சந்தோஷமாக பணிபுரிவது இல்லை. ஆகவே 10(ஏ) (1) என்ற முறைப்படி நீலகிரி மாவட்டத்துக்கு அங்குள்ளவர்களையே மருத்துவர்களாக நியமித்து நீலகிரி மாவட்டத்து மக்கள் நல்ல முறையில் மருத்துவ வசதி பெற ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உரிக்கல் பஞ்சாயத்து என்பது கிட்டத்தட்ட 29 ஆயிரம் மக்களைக் கொண்ட மிகப்பெரிய பஞ்சாயத்து ஆகும். அது குன்னூர் தொகுதியில்தான் இருக்கிறது. அங்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்து அங்குள்ள மக்களுக்கு ஒரு நல்ல மருத்துவ சிகிச்சைக் கிடைக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குன்னூருக்கும் கோத்தகிரிக்கும் இடையில் ஒரு அரசு கலைக் கல்லூரியை அமைத்தால் படிப்பதற்கு வேறு மாவட்டத்திற்கு தேடி செல்லும் நிலை மாறும். மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்திலே பரிசீலனையில் இருந்த கோட நாடு, வண்டிச்சாலை பகுதியில் அமைக்க இருந்த எலக்ட்ரானிக் தொழிற்சாலையை நமது புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்திலே அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தோட்டத் தொழிலாளர்களைக் கொண்டுள்ள இந்தப் பகுதியில் இருக்கின்ற 2 சிறு நகரங்கள் குன்னூர், கோத்தகிரி மார்க்கெட்டுகளை விரிவுபடுத்தி அவர்களுக்கு நல்ல சுகாதார நிலையில் மார்க்கெட் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த 20 ஆண்டு காலமாக மிகவும் லாபத்தோடு இயங்கி வருகின்ற 'டான்டீ' என்று சொல்லப்படுகின்ற தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தில் கடந்த ஆண்டு வரை 2 வருடம் பணியாற்றிய பகுதி நேர மருத்துவர் என்ற முறையில் கூறிக் கொள்கிறேன். அந்த நிறுவனத்தில் பணியாற்றும்போது ஊசி போடுவதற்குக் கூட தேவையான அடிப்படை வசதிகள் செய்து தரப்படவில்லை. சுகாதாரத்தைப் பொறுத்தவரையில் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தில் உள்ள மக்கள் இதுவரை ஏமாற்றப்பட்டு வந்திருக்கிறார்கள். அங்கு முறையாக ஒரு டிஸ்பென்சரி கிடையாது. ஆகவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதில் தக்கக் கவனம் செலுத்தி நமக்கு லாபம் ஈட்டித் தரக்கூடிய அந்த டான்டீக்கு ஒரு நல்ல ஆஸ்பத்திரியை நிரந்தரமாக அமைத்துத் தரவேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.





நீலகிரி மாவட்டம் மேற்கு மலை தொடர்ச்சியில் சந்தன மரங்கள் அதிகமாக கிடைக்கின்றன. அதை சோப் செய்வதற்கு கேரளாவுக்கும் கர்நாடகத்திற்கும் கொண்டு செல்கிறார்கள். ஆகவே குன்னூரில் சந்தன சோப் செய்வதற்கான தொழிற்சாலை ஒன்றை நமது அரசு அமைத்தால் நமக்கு சுகாதார முறையில் உடல் நலம் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது) என்னுடைய நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் சொல்வதற்கு நிறைய இருக்கின்றன. ஆகவே, 3 நிமிடங்கள் அதிகமாக கொடுக்கவேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விரைவில் முடிக்கவும்.

**டாக்டர் எம். கருப்புசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாயகம் திரும்பியோருக்கு தேயிலைத் தோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த நிதிநிலை அறிக்கையில் 7,500 ஏக்கர் பரப்பளவில் 60 கோடி ரூபாய் செலவில் தேயிலைத் தோட்டங்கள் அமைக்கப்படும் என்று கூறியிருப்பதில் தாயகத்திலுள்ள தமிழர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் அனுமதி வழங்க வேண்டுமென்று தாழ்மையோடு வேண்டுகோளாக விடுக்கிறேன்.

சத்துணவு சாப்பிடும் குழந்தைகளுக்கு அதாவது நிறைய டாக்டர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள், ஒரு தாலுக்காவுக்கு ஒரு மருத்துவமனை அமைத்து சத்துணவு மருத்துவர் என்ற முறையில் அவர்கள் இயங்க வேண்டும். குழந்தைகள் சத்துணவு சாப்பிடும்போது டானிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதில் மிகவும் கொடுமையானது என்னவென்றால் நீலகிரி மாவட்ட மக்கள் தண்ணீர் ஒலியை காதால் கேட்கலாம். அருவியாக கொட்டுவதை கண் குளிர பார்க்கலாம். ஆனால் சிலயிடங்களில் தண்ணீர் குடிக்க முடிவதில்லை. ஏன் என்றால் முறையான குடிநீர் திட்டங்கள் இன்னும் சரியாக செயல்படுத்தப்படவில்லை. பலயிடங்களில் கிணறுகள் வெட்டப்பட்டிருக்கின்றன; மோட்டார்கள் உள்ளன; குழாய்கள் உள்ளன, ஆனால் மின்சார இணைப்புக் கொடுக்காத காரணத்தால் கிட்டத்தட்ட 50-க்கும் மேற்பட்ட கிராமங்களில் நீர் கிடைக்கவில்லை. ஆகவே உடனடியாக மின் இணைப்புக் கொடுத்து அந்த கிராம மக்கள் எல்லாம் நல்ல குடிநீர் குடிக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டத்தில் காட்டு மரங்கள் கண்டபடி வெட்டப்பட்டு திருட்டுத்தனமாக கடத்தப்படுகின்றன. ஆகவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நமது காட்டுச் செல்வத்தைக் காப்

பதற்கு இதில் தீவிரமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மிக தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன். நம் சுற்றுலா மையங்களை அழகுபடுத்தி நீலகிரி மாவட்டத்தை விரிவுபடுத்தினால் அதிக நிதி கிடைக்கும் என்று கூறி நேரம் இல்லாத காரணத்தால் இத்தோடு முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 12–10*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. நா. சா. பழனிசாமி.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மருத்துவம், பொதுச் சுகாதாரம் இவற்றுக்கான மானியக் கோரிக்கையின் மீது எனக்கு பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, 'Prevention is better than cure' என்று சொல்லுவார்கள். நோயை, வரும் முன்னே காப்பது சுகாதாரம். அந்த வகையிலே, கிராமப்புற மக்களுக்கு, ஏழையெளிய மக்களுக்கு, சுகாதாரக்கேடு ஏற்படாத வண்ணம் கிராமப் பகுதிகளிலே இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையங்களில் நல்ல டாக்டர்களையும் இட வசதிகளையும் ஏற்படுத்தி அங்கேயிருக்கின்ற மக்கள் அங்கேயே மருத்துவ வசதியைப் பெறுவதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். பெரும்பாலும் ஆரம்பச் சுகாதார நிலையங்களில், டாக்டர்கள் நகர்ப்புறத்திலேயிருந்து அங்கே வருவதால் அந்த ஆரம்பச் சுகாதார நிலையங்களிலேயே கட்டப்படுகின்ற டாக்டர்கள் தங்குவதற்கான வீடுகள் பயன்படுத்தப்படாமல் பல இடங்களிலே பாழடைந்துதான் கிடக்கின்றன. ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு நியமிக்கப்படுகின்ற டாக்டர்கள் அங்கேயே தங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அத்தோடு எம்.பி.பி.எஸ். போன்ற பட்டத்தைப் பெற்று அவர்களில் பட்ட மேற்படிப்புக்குச் செல்பவர்களுக்கு ஆரம்பச் சுகாதார நிலையங்களிலே 280 நாட்கள் பணியாற்றினால் அவர்களுக்கு 2 மார்க் கொடுத்து அவர்கள் ஊக்குவிக்கப்படுவார்கள் என்று கொள்கை விளக்கக்குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆரம்பச் சுகாதார நிலையங்களிலே பட்டப்படிப்பு படித்து, டாக்டர்கள் குறைந்தது 5 ஆண்டுகளாவது அவர்களை அங்கேயே தங்கவைத்து அவர்கள் பட்ட மேற்படிப்பு படிப்பதற்கான சிறப்புச் சலுகையைச் செய்து தரவேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, கிராமப் பகுதிகளிலே விவசாயப் பெரு மக்கள் தங்கள் தொழிலிலே ஈடுபடுகின்ற நேரத்தில் பாம்புக்கடிக்கு ஆளாக வேண்டியிருக்கிறது. நாய்க்கடிக்கு ஆளாக வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் அவர்கள் இன்னும் பழைய காலப் பாடத்தைப் போட்டுக்கொண்டுதான் இருக்கிறார்களே



யல்லாமல் இன்னும் அவர்கள் மருத்துவமனைக்கு செல்கின்ற நிலை ஏற்படவில்லை. ஆரம்பச் சுகாதார நிலையங்களிலேயே பாம்புகடிக்கும், நாய்க்கடிக்கும் உடனடி சிகிச்சை அளிக்கின்ற மருந்துகளை, அங்கேயே வைக்கப்பட்டு, அந்த மருந்துகள் குளிர்பதன அறைகளில் வைக்கப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும். அந்த ஏற்பாட்டை இந்த அரசு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். ஆரம்பச் சுகாதார நிலையங்களிலே இருக்கின்ற ஊர்திகளை அவர்கள் பஸ் ஸ்டாப்பிலேயிருந்து நோயாளிகளை அழைத்து வருவதற்கு குறைந்த கட்டணத்திலே பயன்படுத்தப்படலாம் என்று இருக்கிறது. ஆனால் எந்த இடத்திலும் அப்படி பயன்படுத்துவதாகத் தெரியவில்லை. அந்த ஊர்திகளை கிராமப் பகுதிகளிலே உள்ள பல்வேறு ஊர்களுக்கு அனுப்பி, நோயாளிகளை அழைத்து வருவதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். இந்த ஆண்டை அதாவது 1991–92 ஆம் ஆண்டை, ''தாய்மார்கள் பாதுகாப்பு ஆண்டு'' என்று மருத்துவத்துறை அறிவித்து இருக்கிறது. தாய்க்குலத்தின் தவப்புதல்வி, புரட்சித் தலைவியினுடைய ஆட்சி வந்திருக்கின்ற இந்த நேரத்திலே தாய்மார்களுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டியது அவசியம் இல்லை என்று நினைக்கின்றேன். ஆனால் தாயினுடைய கருவிலே சிதைக்கப்படுகின்ற பெண் குழந்தைக்கும் பிறந்தபின்பு கொல்லப்படுகின்ற பெண் குழந்தைக்கும் புரட்சித் தலைவியின் ஆட்சியில் பாதுகாப்பு கொடுத்தாகவேண்டும். இன்று விஞ்ஞானத்திலே ஸ்கேனர் கருவிகள் வந்த பின்பு, கருவிலே பெண் குழந்தைகள் இருந்தால் அதைச் சிதைத்து விடுகின்ற நிலை இருக்கிறது. தென் மாவட்டங்களிலும், உசிலம்பட்டி போன்ற பகுதிகளிலும் நான் பத்திரிகைகளிலே படித்திருக்கிறேன். பிறந்த பெண் குழந்தைகளுக்கு பாலிலே நெல்லைப்போட்டுக் கொடுத்து அந்தக் குழந்தையைக் கொன்று விடுகிற நிலையும் இன்று ஏற்பட்டிருக்கிறது. பெண் குழந்தை இருந்தால் அவர்கள் பாரம் என்று மக்கள் இன்று நினைக்கின்ற நிலை உருவாகியிருக்கிறது. இந்த நிலைக்கு வரதட்சணைக் கொடுமையும் ஒரு காரணம். திருமணம் செய்கின்ற பெண்களை ஆண்கள் கொடுமைப்படுத்தி விரட்டி விடுகின்ற நிலை ஒரு காரணம். இதற்கு புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே ஒரு முடிவு கண்டாக வேண்டும். ஆஸ்திக்கு ஒரு ஆணும், ஆசைக்கு ஒரு பெண்ணும் என்ற பத்தாம் பசலிக் கொள்கையை இனியும் கடைபிடிக்கக் கூடாது. புரட்சித் தலைவி அவர்கள், தன்னுடைய சந்தியா தாய்க்கு பெண் குழந்தையாகப் பிறந்தும், ஒரு சகோதரன் இருந்தும்கூட, அந்தச் சகோதரன் யார் என்று இன்று நாட்டுக்குத் தெரியவில்லை. ஆனால் புரட்சித் தலைவி அவர்கள் இன்று உலகத்திற்கே, 'புரட்சித் தலைவி' என்று அறிமுகமாகி இருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. நா. சா. பழனிசாமி] [1991 செப்டம்பர் 16

பிற்பகல் 12-15

பாரதப் பிரதமர் நேரு அவர்களுக்கு ஒரேயொரு இந்திரா காந்தி பிறந்துதான், இந்த இந்தியத் திருநாட்டை ஆண்டு, உலகத்திற்கே பெருமைப்படுத்தினார்கள். ஆனால், மகாத்மா காந்திக்கு நான்கு ஆண் குழந்தைகள் பிறந்தும்கூட, நாட்டு மக்களுக்கு யார் என்று தெரியவில்லை. எனவே, ஒருவர் தன்னுடைய அறிவாற்றலால்தான் புகழடைய முடியும், பெருமையடைய முடியுமே தவிர, ஏதோ ஆணாக, பெண்ணாகப் பிறந்ததால் அந்தப் பெருமை வந்து விடுவதில்லை. அந்த வகையிலே, இந்தப் பெண் குழந்தையைப் பாதுகாக்கின்ற ஆண்டாக புரட்சித் தலைவியின் ஆட்சியிலே இந்த ஆண்டு இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று மருந்துகள் மற்றும் மாயமந்திர சிகிச்சை (ஆட்சேபகரமான விளம்பரங்கள்) சட்டம் என்ற ஒரு சட்டம் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், இந்தச் சட்டம் சரியாகச் செயல்படுகிறதா என்று பார்க்க வேண்டும். இன்றும் பல பத்திரிகைகளில் அனுதினமும் விளம்பரங்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஆண்மை இல்லையா? சிட்டுக் குருவி லேகியம் சாப்பிடுங்கள் ; பில்லி சூனியமா? இதற்கு வைத்திய முறை இருக்கிறது என்று இந்த லாட்ஜிலே, இந்த இந்த மணி நேரத்திற்கு, இந்த டாக்டர்கள் வந்து தங்குகிறார்கள் என்று, அறியாமையைப் பயன்படுத்தி மக்களை ஏமாற்றிக் கொண்டு வருகின்ற அந்த விளம்பரங்கள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன. அந்த விளம்பரங்களைத் தடை செய்ய வேண்டும்.

அதேபோல, உணவுப் பொருட்களிலே கலப்படம். குறிப்பாக, பாலிலே கலப்படத்தை—பாலிலே தண்ணீர் கலந்து வருவதை, சுகாதார அதிகாரிகள் அதை எடுத்து அதைத் தடுக்க வேண்டும். ஆனால், பல நகரங்களில் சுகாதார அதிகாரிகள் என்ன செய்கிறார்கள் என்றால், ஆயிரக்கணக்கான பால் வியாபாரிகள் சைக்கிளிலே வருபவர்களுக்கு, இவர்களே கையூட்டு வாங்கிக்கொண்டு, ஒரு அடையாள அட்டையைக் கொடுத்து அவர்கள் பாலிலே தண்ணீர் கலந்து வந்தால் அனுமதிப்பதும், அவர்களுக்கு லஞ்சம் கொடுக்காமல், நல்ல சுத்தமான பாலை ஒருவன் கொண்டு வந்தால் அதை சேம்பிள் எடுத்து தண்ணீரைக் கலந்து அனுப்பி அவனுக்குத் தண்டனை கொடுப்பதும்தான் நடைமுறையிலே இருந்து வருகிறது. திருப்பூர் போன்ற நகரங்களிலே இது கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இதை நானே கண்கூடாகக் கண்டிருக்கிறேன். எனவே, இப்படி உணவுப் பொருட்களில் கலப்படம் செய்கின்றவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1991 செப்டம்பர் 16] [திரு. நா. சா. பழனிசாமி]

கிராமப் பகுதிகளிலே இருந்து, போஸ்ட் மார்ட்டம் போன்ற காரியங்களுக்குச் சென்று, நகரிலே இருந்து அந்தப் பிணத்தைத் திருப்பி எடுத்து வருகிறபொழுது பிண ஊர்திகள் பெரும்பாலான மருத்துவ மனைகளில் இருப்பதில்லை. ஆனால் தனியார் சில வாகனங்களை அதற்காக வைத்திருக்கிறார்கள். ஒரு பத்து கிலோ மீட்டர் என்றாலும் அதற்கு 500-ம், 1000-மும் வாடகை கேட்டு அவர்கள் ஏழை எளியவர்களை வாட்டுகிறார்கள்.

இந்த பொல்யூஷன்—சுற்றுப் புறச் சூழல் மாசுத்தடுப்பு வாரியம் என்பதெல்லாம் இருந்தாலும்கூட அவைகளால் மக்களுக்குப் பாதுகாப்பு என்பது மிகக் குறைவாகவே இருக்கிறது. கோவை மாவட்டத்திலே மதுக்கரை சிமெண்ட் பேக்டரி மூலமாகவும், கல் அரைக்கும் இயந்திரப் பகுதி மூலமாகவும் திருப்பூரில் இருக்கின்ற சாயச் சலவை பட்டறைகள் மூலமாகவும் அங்கே பொதுச் சுகாதாரம், சுற்றுப்புற சூழல் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றது. இந்தப் பொதுச் சுகாதாரத்தை, நிச்சயமாக, இந்தச் சுற்றுப்புறச் சூழல் மாசுத் தடுப்பைச் சரியாகக்கண்காணிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, என்னுடைய சட்டமன்றத் தொகுதியிலே, கிணத்துக்கடவு சட்டமன்றத் தொகுதியிலே, ராமபட்டினம், நெகமம் ஆகிய இரண்டு ஊர்களில் மூன்று ஏக்கர் நிலமும், அதற்கு 10,000 ரூபாய் நன்கொடையும் கொடுத்தும்கூட, மருத்துவமனைக்கான கட்டிடம் கட்டப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. வெ. பழனிசாமி.

திரு. வெ. பழனிசாமி : துணைத் தலைவரவர்களே, . . ...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : என்ன பாயின்ட் ஆப் ஆர்டரா?

திரு. வெ. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கடந்த 15, 20 ஆண்டுக்காலமாக திருப்பூர் நகரத்தினுடைய சுற்றுச் சூழலைப் பாதிக்கிற வகையில் டையிங் பேக்டரி, பிளீச்சிங் பேக்டரியினுடைய செயல்களால் தண்ணீர் கெட்டது என்பது உண்மைதான். ஆனால், இவ்வாண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களினுடைய வேண்டுகோளின்படி சுற்றுப்புறச் சூழல் பாதிப்பை முறியடிக்கிற வகையில், அங்கே ப்ராஜக்டை சுமார் நான்கைந்து ஊர்களில் சுமார் 18 கோடி ரூபாய் அளவிலே இன்றைக்குச் செயல் வடிவம் கொடுத்திருக்கிறார்கள் என்பதை நான் பேரவை

உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொண்டு, நீண்ட நாட்களாக இருந்த எங்களுடைய கோரிக்கை மாண்புமிகு முதல்வரவர்களுடைய காலத்திலே தீர்க்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. நா. சா. பழனிசாமி : நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய கிணத்துக்கடவு சட்டமன்றத் தொகுதியிலே ராமபட்டினம், நெகமம் என்ற இரண்டு ஊர்களிலே மூன்று ஏக்கர் நிலமும், பத்தாயிரம் ரூபாய் பணமும் கொடுக்கப்பட்டும்கூட, ராமபட்டினத்தில் அந்த ஊரினுடைய ஜமீன்தாரினுடைய வீட்டிலே அந்த ஊரினுடைய மருத்துவமனை நடந்து கொண்டிருக்கிறது. ஆனால், நெகமத்திலே, அப்படிக் கொடுக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகியும்கூட, எந்த மருத்துவமனையும் செயல்படுவதில்லை. எனவே, இந்த இரண்டு இடங்களிலும் ஆரம்ப சுகாதார மருத்துவமனையைக் கட்டித் தர வேண்டுமென்ற வேண்டுகோளை மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரவர்களுக்கு வைக்கின்றேன்.

பிற்பகல் 12-20

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சீக்கிரம் முடியுங்கள்.

திரு. நா. சா. பழனிசாமி : அதோடு, சிறுநீரகங்கள் மற்றும் 'ஹார்ட்' அறுவைச் சிகிச்சைக்காக பல ஏழை மக்களை, பல மருத்துவ மனைகளுக்கு, அறியாமையின் காரணமாக, அவர்களை பணம் கொடுத்து அழைத்துச் சென்று, அவர்களுடைய சிறுநீரகத்தில் ஒன்றை எடுப்பதற்குப் பதிலாக, இரண்டைக் கூட எடுத்து விடுகின்ற நிலைமைகளெல்லாம் நடந்து வருவதாக, பல பத்திரிகைகளில் செய்தியாக வந்து கொண்டிருக்கிறது. அதையெல்லாம் உரிய முறையில், சட்டப்படி தடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருமதி ஜீனத் ஷெர்புதீன்.

திருமதி ஜீனத் ஷெர்புதீன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாதர்குல மணி விளக்கு, மங்கையரின் மணி மகுடம், நமது புரட்சித் தலைவி அவர்கள் பதவியேற்று இன்றோடு 84 நாட்கள் தான் ஆகிறது. அவர்கள் பதவி ஏற்கும்போது, இதற்கு முன்னாலிருந்த அரசு அவ்வளவு நல்ல முறையில் நிதிநிலையை வைத்து விட்டுப்





போகவில்லை. அதற்கு மேலும், இப்போதுள்ள உலக அரங்கை எடுத்துக் கொண்டால், அங்கும் நெருக்கடியாகத் தான் இருக்கிறது. அதன் காரணமாகத்தான், மத்திய அரசால் மாநிலங்கள் கேட்கும் தொகையை சரியாகக் கொடுக்க முடியவில்லை. இந்தக் காலக் கட்டத்திலும் கூட, இப்படியான ஒரு நெருக்கடியான சந்தர்ப்பத்திலேயும் கூட, ஏழைகளின் வயிற்றில் பாலை வார்க்கும் அளவுக்கு நல்ல ஒரு நிதிநிலை அறிக்கையை வெளியிட்ட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், ஆற்றல் மிக்க நம்முடைய நிதியமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் 411 கோடி ரூபாய் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதில் 343.17 கோடி நம்முடைய தமிழக அரசாங்கத்தைச் சேர்ந்தது. மற்றது மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்தது. இந்த நிதிநிலை அறிக்கையில் 80 சதவிகித மக்கள் வாழ்கின்ற கிராமப்புறங்களுக்கு 40 சதவிகிதம், 20 சதவிகித மக்கள் வாழ்கின்ற நகர்ப்புறங்களுக்கு 60 சதவிகிதமும் என கொடுத்திருக்கிறீர்கள். அதேபோல், உங்களுடைய திட்டத்தில்கூட ரூ. 114 கோடி ஒதுக்கியிருக்கிறீர்கள். அதையும் 80 சதவிகிதம் வாழ்கிற கிராமப்புறங்களுக்கு 40 சதவிகிதமும், 20 சதவிகிதம் வாழ்கிற நகர்ப்புறங்களுக்கு 60 சதவிகிதமும் கொடுத்திருக்கிறீர்கள். இதை நான் தவறு என்று சொல்லவில்லை. ஆனால், வருங்காலத்தில் நீங்கள் இதை கொஞ்சம் அதிகமாக்க வேண்டுமென்று நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கிறபோது, என்ன சொல்வார் என்றால், நகர்ப்புறங்களில் தான் மருத்துவக் கல்லூரிகள், 'ஹெட் குவார்ட்டர்ஸ் ஹாஸ்பிடல்ஸ்' எல்லாம் இருக்கின்றன ; ஆகையினால், நாங்கள் இப்படி ஒதுக்கியிருக்கிறோம் என்று சொல்வார். அதுவும் எனக்குத் தெரியும். ஆனாலும், கிராமங்களுக்கு அதிகத் தொகை ஒதுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, 'பிரைமரி ஹெல்த் சென்டர்ஸ்-ஐ எடுத்துக் கொள்வோமென்றால், நீங்கள், இந்த வருடம் 76 அதிகமாகக் கொடுத்திருக்கிறீர்கள். அதற்கு என் நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஆக, இந்த 76-ஐயும் சேர்த்து, நம்முடைய தமிழகத்தில் 1,505 'பிரைமரி ஹெல்த் சென்டர்' கள் மொத்தம் இருக்கின்றன. ஆனால், இத்தனை 'ஹெல்த் சென்டர்' கள் இருந்தும், 300 'ஹெல்த் சென்டர்'களில், மருத்துவர்கள் தங்குவதற்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவில்லை. மருத்துவர்கள், அதாவது டாக்டர்கள் வசதியாகப் படித்தவர்கள் ; ஓரளவு வசதியாக இருந்தவர்கள் ; அப்படிப்

[திருமதி ஜீனத் ஷெர்புதீன்] [1991 செப்டம்பர் 16

பட்டவர்கள் கிராமங்களுக்குச் செல்லும்போது, வீடுகள் இல்லாமல் போய் விடுகிறது. சில கிராமப்புறங்களில், வாடகைக்குக் கூட வீடுகள் கிடைக்காது. அந்தச் சந்தர்ப்பங்களில் 20 மைலோ. அல்லது 30 மைலோ தூரமுள்ள கட்டிடங்களில் தான் அவர்கள் வாழ்வார்கள். அப்படி வாழ்ந்து கொண்டிருக்கும்போது, கிராமத்தில் திடீரென்று ஒருவருக்கு ஒரு விஷ ஜுரமோ, அல்லது ஒரு ' எமர்ஜன்சி 'யோ ஏதாவது வந்து விட்டால், அப்போது டாக்டருக்காக அந்தக் கிராம மக்கள் எங்கே செல்வார்கள் ? ஆகையினால், கொஞ்சம் கொஞ்சமாக நம்முடைய நிதிநிலைக்குத் தக்கவாறு எல்லா ' பிரைமரி ஹெல்த் சென்டர் 'களிலேயும் நீங்கள் வீடுகளைக் கட்டிக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஒவ்வொரு ' பிரைமரி ஹெல்த் சென்டரிலும்', லேடி டாக்டரும் ஒரு ஆண் டாக்டரும் இருக்கிறார்கள். அது போதுமானது என்று கருதுகிறேன். ஆனால் மற்றவர்கள்—அதாவது பார்மஸிஸ்ட், நர்ஸ், ஆயா இவர்கள் எல்லாம் ஒருவர் தான் இருக்கிறார்கள். அவர்கள் யாருக்காவது ஜுரமோ, அல்லது கேஷுவல் லீவிலோ போய் விட்டால், அன்று அந்த வேலையை யார் செய்வது ? டாக்டர் தான் போய் மருந்து கலக்க வேண்டும். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில், ஒரு ஆறு, ஏழு ' ஹெல்த் சென்டர் ' களுக்கு ஒரு ' ரிசர்வ் ' வைத்துக் கொள்வோமேயானால், அவர்கள் லீவில் போகும்போது, அல்லது அவர்கள் ஜுரத்தில் படுத்து விட்டாலோ, அதைச் சரி செய்ய முடியும் என்பது என்னுடைய கருத்து.

அடுத்தபடியாக, மருத்துவக் கல்லூரியை எடுத்துக் கொண்டோமென்றால், நம்முடைய தமிழகத்தில் 13 மருத்துவக் கல்லூரிகள் இருக்கின்றன. அவற்றில் 10 அரசாங்கத்தைச் சேர்ந்தவை ; 3 பிரைவேட் மெடிகல் கல்லூரிகள். இந்த மருத்துவக் கல்லூரிகள் சரியாக இயங்கப்படுகின்றனவா என்பதற்காக சில விதிமுறைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. இந்த விதிமுறைகளை ' சூபர்வைஸ் ' செய்து, அதற்கு அங்கீகாரம் கொடுப்பதற்கு 'All India Medical Council' என்று மத்திய அரசாங்கத்தால் அங்கீகாரம் பெற்ற ஒரு நிறுவனம் இருக்கிறது. ஆனால் அந்த ஆல் இண்டியா மெடிகல் கௌன்சில் சொல்லும் அத்தனை நிபந்தனைகளும் இந்த மருத்துவக் கல்லூரிகளிலே இல்லையென்பதை நான் ஆணித்தரமாக அடித்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1991 செப்டம்பர் 16] [திருமதி ஜீனத் ஷெர்புதீன்]

ஒரே ஒரு உதாரணத்தை மட்டும் சொல்கிறேன். அந்த ஆல் இண்டியா மெடிகல் கௌன்சிலின் விதிகளின்படி, மருத்துவ மாணவர்கள் கண்டிப்பாகப் பிரைமரி ஹெல்த் சென்டருக்குச் சென்று அங்கு மூன்று மாதங்கள் தங்கியிருந்து அவர்கள் எப்படி மருத்துவம் செய்ய வேண்டும், கிராம மக்களிடம் எப்படிப் பழக வேண்டும் என்பதை அறிந்து கொள்ள வேண்டுமென்பதுதான் அதனுடைய கருத்து. ஆனால், எந்த மருத்துவக் கல்லூரியிலிருந்தும் பிரைமரி ஹெல்த் சென்ட்டருக்குப் போவதே கிடையாது. எல்லாம் டவுன் தான். அதுவும் மெட்ராஸ் சிடியைத் தான் சுற்றி வருவார்கள்.

பிற்பகல் 12.25

அடுத்தபடியாக, ஒரு டாக்டர் புதிதாக அரசாங்கத்தில் வேலைக்குச் சேரும்போது கண்டிப்பாக இரண்டு வருடம் பிரைமரி ஹெல்த் சென்ட்டரிலே பணியாற்ற வேண்டும் என்று நம்முடைய தமிழக அரசு ஒரு சட்டத்தை விதித்திருக்கிறது. அதையும் யாரும் கடைப்பிடிப்பது கிடையாது. எல்லாருக்கும் சிட்டிதான் வேண்டும். அதே மாதிரி மாடர்ன் டெக்னாலஜி என்ற பெயரில் பெரிய பெரிய எக்யுப்மெண்ட்ஸ் எல்லாம், அமெரிக்கா, ஜப்பான் ஆகிய இடங்களிலிருந்து எல்லாம் வாங்குகிறீர்கள். ஒரு ஆறு வருடத்திற்கு முன்னால் எக்யுப்மெண்ட் ஒன்று வந்தது. அது வந்த உடனே, அதை நியுராலஜி டிபார்ட்மெண்ட் வைத்துக்கொள்வதா அல்லது ரேடியாலஜி டிபார்ட்மெண்ட் வைத்துக்கொள்வதா என்ற ஒரு பிரச்சினை வந்தது. அதிலே ஒரு ஆறு மாதம் போயிருக்கும். அதற்குப் பிறகு தான் அந்த எக்யுப்மெண்டை பயன்படுத்தினார்கள். இப்படிப் பல கோடி ரூபாய் போட்டு வாங்குகிறீர்கள். அந்த எக்யுப்மெண்ட் ரிப்பேர் ஆனால் அமெரிக்காவிற்கோ, ஜப்பானிற்கோ எழுதித் தான் நாம் ஸ்பேர் பார்ட்ஸ் வாங்க வேண்டும். தவிர, அங்கிருந்து யாரையாவது டெக்னீசியன்ஸை வரவழைத்து ரிப்பேர் செய்ய வேண்டும். நம்மிடம் அவ்வளவு மாடர்ன் டெக்னாஜி இல்லை. இதையெல்லாம் நாம் நிவர்த்தி செய்தால்—இருக்கிற எக்யுப்மெண்ட் அப்படியே இருக்கட்டும். இனிமேல் புதிதாக வாங்கி அதையெல்லாம் உபயோகிப்பதற்கு நம்மிடம் நிதி வசதியில்லை என்பதால் குறிப்பிடுகிறேனேயொழிய அவ்வாறெல்லாம் வாங்கக் கூடாது என்பதற்காக அல்ல.

அடுத்து, ஹானரரி சர்ஜென்ஸ். இதிலே நமக்குப் பணம்
மிச்சம் ஏற்படும் என்ற ஒரு எண்ணம் உண்டு. ஹானரரி
சர்ஜென்ஸ், அவர்களுக்குக் குறிப்பிட்ட நேரம்தான் தொழி
லேயொழிய நாம் கூப்பிடுகிற நேரத்திற்கெல்லாம் வரமாட்
டார்கள். ஆனால், அரசாங்கத்தில் வேலை செய்பவர்கள்,
அவர்கள் வீட்டுக்குப் போய் விட்டால், ஹானரரி சர்ஜென்
ஸுக்குப் போன் செய்தோ, அல்லது கூப்பிட்டாலோ கண்டிப்
பாக அவர்கள் வருவார்கள். இந்த ஹானரரி சர்ஜென்ஸுக்கு
முன்பு மூன்று வருடத்திற்கு ஒரு முறை என்பதை மாற்றி
வைக்க வேண்டும் என்று ஒரு சட்டம் இருந்தது. நம்முடைய
மதிப்பிற்குரிய மாண்புமிகு முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள்
இந்த ஹானரரி சர்ஜன் சிஸ்டத்தையே ஒழிப்பது என்ற ஒரு
கருத்தைத் தெரிவித்தார்கள். ஆனால், ஏனோ அது அமலுக்கு
வரவில்லை. எனக்குத் தெரியாது. இந்த ஹானரரி சர்
ஜென்ஸ் என்ன செய்கிறார்கள் என்றால், தனியார் ஒரு
இடத்திலே சீப் ஆக இருப்பார். அவர் வீட்டுக்குப் போகிற
நோயாளிகளிடம் பணம் வாங்கிக்கொண்டு இங்கு அட்மிஷன்
பண்ணி விடுவார்கள். ஆனால், உண்மையிலேயே நமக்கு,
நம்முடைய ஏழை மக்கள் எல்லாம் அங்கே அட்மிஷன் பண்ண
முடியாது போய்விடும். அவர்கள் நன்றாகச் சம்பாதிக்
கிறார்கள். நம் அரசுக்கு நஷ்டம் தான்.

அடுத்தபடியாக, P.cvension is b.tter than cure என்று
சொல்வார்கள். மருத்துவத்தை இரண்டு விதமாகப்
பிரிக்கலாம். ஒன்று க்யூரிடிவ் மெடிசன். இன்னொன்று, பிரி
வென்டிவ் மெடிசன், இந்த ப்ரிவென்டிவ்மெடிசனுக்கு யாருமே
முக்கியத்துவம் கொடுப்பது கிடையாது.முன் காலத்திலே
எடுத்துக் கொண்டால் கூட, அந்த ப்ரிவென்டிவ் டிபார்ட்
மெண்ட் ப்ரொபசருக்கும் மரியாதை கிடையாது. அங்கு
படிக்கின்றவர்களுக்கும் மரியாதை கிடையாது. அந்த டிபார்ட்டு
மெண்டுக்கே மரியாதை கிடையாது. நம் ஜனங்களும் மதிப்பது
கிடையாது. ஆனால் ப்ரிவென்சன் மூலமாக நிறையப் பணத்
தை லாபப் படுத்தலாம். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்லிக்
கொள்கிறேன். கர்ப்பிணியாக இருக்கும் பெண்ணுக்குச் சோகை
அல்லது ரத்தக் குறைவாக இருந்தால், ஒன்று பாவர்ட்டியின்
காரணமாக இருக்கலாம். இல்லையென்றால், கொக்கிப்பூச்சியின்
காரணமாக வரலாம். இப்படி கொக்கிப்பூச்சிக்கு இரண்டு வே
ளை மருந்து கொடுத்தால் சரியாகப் போய்விடும். ஆனால் நாம்
அதை நீட்டிக்க விட்டுவிட்டால், அந்தப் பெண் பிரசவத்திற்கு
வரும்போது ஹார்ட் சரியாக இருக்கிறதா? இரத்தம் ஏத்தனுமா?
குளுகோஸ் ஏத்தனுமா? சலைன் ஏத்தனுமா என்று வரும்.
இதெல்லாம் அரசாங்கத்திற்கு நஷ்டம்தான். அதனால், ப்ரி
வென்டிங் மெடிசன் சைடையும் கொஞ்சம் நல்ல முறையில்
கவனிக்க வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்
கொள்கிறேன்.





அடுத்தபடியாக, நம் மக்களும் ஒத்துழைக்க வேண்டும்.
சாதாரணமாக ஆஸ்பத்திரியில் என்ன செய்கின்றார்கள்? மக்கள்
வந்து,—அதாவது இப்போது தண்ணீர்ப் பிரச்சினை. அந்தப்
பிரச்சினையிலே பேஷண்டுக்கு வைத்திருக்கிற தண்ணீரை
முகம் கழுவுவதற்கும் மற்றவற்றிற்கும் உபயோகப்படுத்து
வதினால் தண்ணீர் இல்லாமல் போய் விடுகிறது. உதா
ரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். இராமேஸ்வரம் தீவிலே
இதற்கு முன்னாலே வண்டி போவதற்குப் பாதை இல்லை. பஸ்
போவதற்கு ரோடு கிடையாது. இப்பொழுதுதான் ரோடு
போட்டிருக்கிறார்கள். அந்தக் காலத்திலே எங்கள் ஊரிலே
உள்ள பெண்கள் என்ன செய்வார்கள் என்றால் யாரை
யாவது அட்மிட் பண்ண வேண்டுமென்றால், இராமநாதபுரத்
திலே போய்தான் அட்மிட் பண்ணுவார்கள். ஒரு ஐந்து, ஆறு
பெண்கள் சேர்ந்து, ஒரு ஆண்பிள்ளையைத் துணைக்கு வைத்துக்
கொள்வார்கள். கார்டியனாகக் கூட்டிப் போவதில்லை. டீ
வாங்க, காப்பி வாங்க, வெற்றிலை வாங்க வைத்துக் கொள்
வார்கள். அந்தப் பேஷண்டைப் பார்க்கப் போவார்கள்.
பேஷண்டைப் பார்ப்பதற்கு இரண்டு நிமிடம்தான் ஆகும்.
அடுத்தாற்போல், சினிமாக் கொட்டகைதான். சினிமாப்
பார்த்துவிட்டு இரவு ஆஸ்பத்திரியில் தங்கிவிட்டு, மறுநாள்
காலையில் ஊருக்கு வருவார்கள். நான் கூட 10 வயது ஆக இருக்
கையிலே என் அத்தையுடன் போயிருக்கிறேன். அதனாலே
நம்முடைய மக்களும் ஓரளவுக்கு ஒத்தாசை பண்ண வேண்டும்
என்று சொல்லிக்கொண்டு அடுத்து என்னுடைய தொகுதிக்கு
வருகிறேன்.

பிற்பகல் 12-30

என்னுடைய தொகுதியிலே கஸ்தூர்பா காந்தி ஹாஸ்
பிட்டல் அமைந்திருக்கிறது. அது ஒரு டீச்சிங் இன்ஸ்டிட்யூ
ஷன். அங்கே மகப்பேறு மட்டும்தான் டீச் பண்ணுகிறார்கள்.
அங்கே 655 பெட்ஸ் இருக்கின்றன. ஒரு நாளைக்கு 40 பிரசவம்
நடக்கிறது. அந்த 40 பிரசவத்தில் வருகிற ப்ளசன்டா—
எனக்கு தமிழில் தெரியவில்லை—மற்றும் கழிவுப் பொருட்
களை எல்லாம் அங்கேயே குழிதோண்டிப் புதைக்கிறார்கள்.
அப்படி தினமும் குழிதோண்டிப் புதைத்துக்கொண்டிருந்தால்
என்ன ஆகிறது என்றால் சூப்பிரண்டெண்டெண்ட் ரூமுக்குப்
போனால் அங்கே மூக்கிலே துணி வைத்தால் கூட முடியவில்லை.
ஏனென்றால் நான் போய்ப் பார்த்தேன். எனவே மாண்புமிகு
தாயுள்ளம் கொண்ட எங்களுடைய முதலமைச்சர் அவர்கள்
கார்ப்பரேஷனிடம் சொல்லி அவர்களுக்கு இரண்டு கன்டெய்
னர் கொடுக்கவேண்டும். ஒரு கன்டெய்னரிலே இவர்கள் எல்லா
வற்றையும் போட்டு வைத்திருப்பார்கள். ஒரு கன்டெய்னரிலே

இருந்து எடுத்துக்கொண்டுபோன பிறகு அடுத்த கன்டெய்னர் இருக்கும். அப்படியே நிரப்பிக் கொடுத்துக் கொண்டிருக்கலாம். இப்படிச் செய்தால் கொஞ்சம் நல்லபடியாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

அடுத்தபடியாக அங்கே நர்ஸஸ் குவாட்டர்ஸ் எல்லாம் தலையில் இடிந்துவிழுகிற மாதிரி இருக்கிறது. அதையும் கொஞ்சம் ரிப்பேர் பண்ண வேண்டும். அதை உங்களுடைய நிதிநிலைக்குத் தகுந்தபடி கொஞ்சம் கொஞ்சமாக ரிப்பேர் செய்தால் போதும். அடுத்தபடியாக எக்ஸ்-ரே டிப்பார்ட்மென்டிலே கூட சரியான அளவுக்கு ஸ்டாப் இல்லை. ஆகவே எல்லாவற்றையும் நீங்கள் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக பொலுஷன் பற்றிச் சொன்னார்கள். பொல்லுஷன் என்கிறபோது வாட்டர் பொலுஷன், லேண்ட் பொலுஷன், அட்மாஸ்பியர் பொலுஷன் என்று மூன்று வகையாகப் பிரிக்கலாம். இந்த மூன்று பொலுஷனுமே லெதர் பேக்டரியால்தான் உண்டாகக்கூடியது. குறிப்பாக வேலூர் மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் தோல் பதனிடும் தொழிற்சாலை அங்கே வைத்திருக்கிறார்கள். அந்தத் தொழிற்சாலைகளில் தோலைச் சுத்தம் செய்யும்போது அந்தத் தண்ணீரோடு கெமிக்கல்ஸ் சேர்ந்து வருகிறது. அந்தக் கெமிக்கல் சிங்க் ஆகும்போது அந்த பூமியும் கெட்டு விடுகிறது. சிங்க் ஆகி தண்ணீரின் அடித்தளத்திற்குப் போகும்போது தண்ணீரும் கெட்டுவிடுகிறது. அதே போல் அட்மாஸ்பியரும் கெட்டுவிடுகிறது. இந்தத் தண்ணீரைக் குடிக்கும்போது சாதாரண ஏழை மக்களுக்கு வாந்திபேதி எல்லாம் வருகிறது. கடைசியில் அவர்கள் எங்கே வருகிறார்கள் என்றால் நம்முடைய கவர்ன்மெண்ட் ஹாஸ்பிட்டலுக்குதான் வருகிறார்கள். அதனால் நமக்குத்தான் நஷ்டம். அதேமாதிரி விவசாயி பயிரிடுகிறபோது நஷ்டம் வருகிறது. அவனும் கடைசியில் நம்மிடம்தான் லோன் கேட்பான். ஆகவே அந்தத் தண்ணீரை ட்ரீட் பண்ணி அனுப்பவேண்டும். நாம் ட்ரீட் பண்ணவேண்டாம். அரசாங்கம் ட்ரீட் பண்ணவேண்டாம். பண்ணினால் நஷ்டம் வரும். ஆனால் அந்தத் தோல் மண்டி அதிபர்கள் எல்லாம் பெரிய கோடீஸ்வரர்கள். பணக்காரர்கள். ஏ.சி. பேக்டரி வைத்திருக்கிறார்கள். அதனாலே அவர்களே அதை ட்ரீட் பண்ணித்தான் வெளியே அனுப்பவேண்டும் என்று அம்மையார் அவர்கள் ஒரு சட்டத்தைப் போட்டால் நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன். எப்படியும் ஒளிமயமான ஒரு எதிர்காலம் இருக்கிறது என்பது எனக்கு நன்றாகத் தெரிகிறது என்று சொல்லி விடைபெறுகிறேன். வணக்கம் (மேசையைத் தட்டும் ஒலி).





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** டாக்டர் சா. சுந்தரராஜ்.

**டாக்டர் சா. சுந்தரராஜ் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மருத்துவம் மற்றும் பொதுச் சுகாதாரம் ஆகியவற்றுக்கான மானியக் கோரிக்கையின் மீது எனக்கு பேச வாய்ப்பளித்த உங்களுக்கு முதலில் நன்றியை நான் கூறிக்கொள்கிறேன். மருத்துவம் மற்றும் பொதுச் சுகாதாரத்திற்காக 1991-92 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் கிட்டத்தட்ட ஏழில் ஒரு பங்கு அதாவது 411 கோடி ரூபாய் அளவுக்கு ஒதுக்கித் தந்த பெருமை நமது முதலமைச்சரைச் சாரும். இது வரையில் யாரும் கொடுக்காத ஒரு தொகையை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் அதைக் கூட புரிந்து கொள்ளாமல் மரியாதைக்குரிய திரு. தம்புசாமி அவர்கள் பணம் மிகவும் குறைவாகக் கொடுத்து இருக்கிறார்கள் என்று கூறி இருக்கிறார்கள். கடந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையைப் பார்த்தால் அவருக்கு நன்றாகத் தெரியும். கடந்த ஆண்டு 219 கோடி ரூபாய்தான் கொடுத்திருந்தார்கள். இப்போது கிட்டத்தட்ட இரண்டு மடங்காகக் கொடுத்திருந்தும் அவருக்கு மட்டும், ஏதோ எதிர்க்கட்சி வரிசையில் இருப்பதால் புரியவில்லை என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மற்றொன்றையும் கூறினார்கள். திரு. தம்புசாமி அவர்கள் பேசும்போது உயிருக்கு ஸ்டெப்னி இல்லை என்று சொன்னார்கள். ஆனால் அந்தக் கருத்தை உண்மையிலேயே நான் ஒத்துக் கொள்கிறேன். ஆனால் உலகில் எங்கேயாவது உயிருக்கு ஸ்டெப்னி கிடைக்கும் என்றால் அதற்கும் இந்த நிதிநிலை அறிக்கையில் நிதி ஒதுக்கி அதையும் வாங்கித் தருவதற்கு நம்முடைய தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் கட்டாயம் உரியவற்றைச் செய்வார்கள் என்ற கருத்தை உங்களுக்கு தெரியப்படுத்திக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இவ்வாறு இருக்கும்போது மருத்துவத் துறையைப்பொறுத்த வரையில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அனைவருக்கும் மருத்துவ வசதி கொடுக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் மருத்துவ மனைகளில் பெட்டையும், மருத்துவமனைகளையும் அதிகரித்திருக்கிறார்கள். அவ்வாறு கொடுக்கிறபோது அந்த மருத்துவ வசதியும், மற்றும் மருந்துகளும் கிராம மக்களுக்குப் போய்ச் சேர வேண்டும் என்ற வகையில் கிராம மக்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள்.

பிற்பகல் 12—35

குடும்ப நலத் துறையில் எப்போதுமே தமிழகம் பின்தங்கிய நிலையிலே முதலிடத்தை வகித்து வருகிறது. அதையெல் லாம் எதிர்க் கட்சி உறுப்பினர்கள் சுட்டிக் காட்ட மறந்து விட் டார்கள். 1991-92ஆம் ஆண்டில் தூய்மை நல ஆண்டாக அறிவிக்கப்பட்டு, பேறுகால இறப்பைத் தடுத்தல் மற்றும் குழந்தை இறப்பைத் தடுத்தல், பாதுகாப்பான பிள்ளை பெற மற்றும் குழந்தைகளுக்கு இடையிலே நீண்ட இடைவெளி, உரிய வயது வந்ததற்கு பின்னர் திருமணம் என்று பல்வேறு நல்ல கருத்துக்கள் இந்த திட்டத்தில் இடம் பெற்று இருக்கிறது. அதையெல்லாம் திரு. தம்புசாமி அவர்கள் மறந்து விட்டார்கள். இங்கே ஒன்றே ஒன்று மட்டும் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டி ருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மற்ற உறுப்பினர்களைக் குறை சொல்லி இங்கே பேசவேண்டாம்.

டாக்டர் சா. சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே இருக்கின்ற 20 மருத்துவப் பட்ட தாரிகள் சார்பில் திருமதி ஜீனத் ஷெர்புதீன் அவர்களை பாராட்ட இந்த நேரத்தை நான் எடுத்துக்கொள்கிறேன். பிராக்டிக்கலாக ஒரு மருத்துவருக்கு என்னென்ன கஷ்டங்கள் இருக்கின்றன. மருத்துவத்திற்கு என்னென்ன நல்ல திட் டங்கள் வேண்டும் என்று உள்ளது உள்ளபடியே சொன்ன தற்காக எங்களுடைய மருத்துவ பட்டதாரிகள் சார்பில் அவர் களுக்கு நன்றி கூறிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தக் கருத்துக்களை நான் கூறினால் வெளியிலே இருக்கின்ற ஒரு சில மருத்துவர்கள், ஒரு சில போல மருத்துவர்களும் எங்களை தரக்குறைவாக திட்டுகின்ற காரணத்தினால், அவர் அவ்வாறு இல்லாவிட்டாலும், மருத்துவர்களுக்கு இருக்கின்ற உரிய கடமைகளை ஆற்ற வேண்டும். அவருக்கிருக்கின்ற கஷ்டங் களை உணர வேண்டும் என்று நன்றாகத் தெள்ளத் தெளிவாக இந்த அவையில் எடுத்து உரைத்ததற்காக நான் எனது சார்பில் மீண்டும் அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இதே மருத்துவத் துறை பல்வேறு தகுதிகளைக் கொண்டிருந்தாலும், அதிலே ஒரு சில காரணங்களை நான் இந்த நேரத்தில் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலை நாடுகளிலெல் லாம் நியூக்ளியர் மெடிசினை மருத்துவத்திலே இவ்வா றெல்லாம் பயன்படுத்தமுடியும் என்று போட்டிப் போட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இந்த கால கட்டத்தில் நாம் மருத் துவத் துறையில் நாம் இன்னும் 10,15 ஆண்டுகளுக்கு பின் னாலேதான் தள்ளப்பட்டு இருக்கிறோம். ஆகவே அந்த





மருத்துவத் துறையினை, மாண்புமிகு மருத்துவத் துறை அமைச் சர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் திறம்பட, திறமையாக நடத்தி வேலை செய்வதனால், இன்னும் 5 ஆண்டுக் காலத்திற்குள் இந்தியாவிலேயே முதலிடம் பெற்ற மருத்துவ துறையாக்குவார். அந்த இடத்தை பிடிப்பதற்கு அவர் பாடு படுவார். அதை கட்டாயம் செய்து காட்டுவார் என்று நான் இந்த அவையிலே கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஒரு மருத்துவத் துறை முன்னேறவேண்டுமென்றால் அதிக மான மெடிகல் காலேஜ் ஏற்படுத்தினாலும், அதிகமாக டாக்டர் களை உற்பத்தி பண்ணினாலும், ரிசர்ச்சுக்கு முக்கியத்துவம் கொடுத்து ஒவ்வொரு வியாதியையும் கட்டுப் படுத்துகின்ற ஒரு துறையாக அது செயல் படுவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும். இன்னும் சர்க்கரை வியாதி, ரத்தக் கொதிப்பு போன்ற வியாதிகளை கண்ட்ரோல் தான் பண்ணு கிறார்களே ஒழிய அதை முற்றிலுமாக குணப்படுத்துவதற்கு எந்தவித மருத்துவமும் இல்லை. மேலும் உயிரையே கொல்லு கின்ற கேன்சர் போன்ற வியாதிகளுக்கு இன்னும் நிரந்தரமான முறையைக் கண்டுபிடிககவில்லை.

இந்த நேரத்தில் தனியார் மருத்துவ மனைகள் தான் நன்றாகப் பெயர் பெற்று வருகின்றன. ஒரு மருத்துவக் கல்லூ ரியிலே வேலை பார்க்கின்ற ஒரு ஆசிரியர் பிரைவேட்டில் போய் ஒரு ஆப்பரேஷன் செய்தால் அவர் நல்ல பெயர் வாங்குகிறார். அதே ஆப்பரேஷன் 10, 15 ஆப்பரேஷன்கள் மருத்துவக் கல்லூரி யில் செய்தால் கூட அவர் பெயர் வெளியிலே தெரியாமல் இருக்கிறது. இது ஏனென்றால் மருத்துவக் கல்லூரியில் அவர் கள் செய்கின்ற சேவை வெளியிலே உலகிற்குத் தெரியாமல் மறைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அவர்கள் முக்கியத்துவம் கொடுத்து, அந்த மருத்துவக் கல்லூரியிலே அவர்கள் செய்கிற சேவையை வெளியுலகிற்கு பத்திரிகை வாயிலாகவோ அல்லது டி. வி. வாயிலாகவோ கட்டாயம் தெரிவிப்பீர்களானால் இப் போது இருக்கின்ற சூழ்நிலையில் பிரேவேட் கிளினிக்கைக் காட்டி லும் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகள் நன்றாக செயல் பட்டுடிருக்கிறது என்பது தெரியும். அவர்களுடைய செயல் திறனை விளக்குவதற்கு நீங்கள் வாய்ப்பளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது எங்கே பார்த்தாலும் அப்பல்லோ மருத்துவமனைக்குப் போங்கள், விஜயா மருத்துவ மனைக்கு போங்கள் என்று சொல்கின்றார்கள். அங்கேதான் இருதய ஆப்பரேஷன் செய்கிறார்கள் என்று சொல்கின்றார்கள். ஆனால் அதே இருதய ஆப்பரேஷன் கல்லூரியிலே வேலை செய்கின்ற மருத்துவர்கள்தான் செய்கின்றார்களே தவிர வேறு யாரும்

இல்லை. ஆகவே நீங்கள் அந்த மருத்துவக் கல்லூரியிலே வேலை செய்கின்ற மருத்துவர்களுக்கு நல்ல பாராட்டைக் கொண்டு வரும் அளவுக்கு தக்க நடவடிக்கைகளை கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆனரரி போஸ்ட்டை பற்றி திருமதி ஜனத்ஷெர்புதீன் அவர்கள் இங்கே எடுத்துக் கூறினார்கள். அவர்கள் பிரைவேட் கிளினிக் வைத்துக் கொண்டு, பிரைவேட்டாக அவர்களிடம் வருகின்ற நோயாளிகளை மருத்துவ மனையில் சேர்த்து சிகிச்சை அளிக்கின்றார்கள்.

ஆகவே மருத்துவ மனையில் வேலை செய்கின்ற மருத்துவர்களுக்கு வருடக் கணக்கில் கூட பதவி உயர்வு கிடைக்கவில்லை. ஆகவே நீங்கள் ஆனரரி போஸ்ட்டை ரத்து செய்து விட்டு மருத்துவக் கல்லூரியிலே வேலை பார்க்கின்றவர்களுக்கு நீங்கள் பதவி உயர்வு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

'பேரா' மெடிக்கல் கரப்ஷன் அதிகமாக இருக்கிறது. அந்த பேரா மெடிக்கல் கரப்ஷனை நீங்கள் தடுத்து நிறுத்துவதற்கு பல்வேறு குழுக்களை நயமித்து அதைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

மெடிக்கல் போலீஸ் என்று சொல்லி இந்த துறைக்கு நீங்கள் அதிகமான தொகை ஒதுக்கியிருக்கிறீர்கள். ஆனால் மெடிகல் போலீஸ் இதுவரையிலே எந்த மருத்துவ மனையிலேயும், எந்த பகுதியிலேயும் நடந்த திருட்டு எதையாவது கண்டுபிடித்தார்களா என்றால் இல்லவே இல்லை. அவர்களுக்கு அந்த டிபார்ட்மெண்ட் தேவைதானா என்ற நிலை இப்போது இருக்கிறது.

பிற்பகல் 12-40

ஆகவே, மருந்துத் திருட்டைத் தடுப்பதற்கு கடுமையான சட்டங்கள் போடவேண்டும். அரசு வழங்கக் கூடிய மருந்துகள் பிரைவேட்டில், வெளி மார்க்கெட்டில் வராத வகையில் அரசு மருத்துவ மனைகளில் கொடுக்கப்படுகிற மருந்துகளுக்குத் தனியாக ஒரு லேபல் சேர்த்தால் வெளி மார்க்கெட்டில் விற்கவும் முடியாது. மருந்துத் திருட்டைத் தடுப்பதற்கும் ஏதுவாக இருக்கும்.. (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : டாக்டர் அ. ஸ்ரீதரன்.

*டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மருத்துவத் துறையின் மானியக் கோரிக்கை மீது என்னுடைய கருத்துக்களைக் கூற வாய்ப்பளித்த தங்க



ளுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.. இந்தியாவிலும் சரி, ஏன் அகில உலகத்திலும் சரி, எந்த ஒரு சட்டமன்றத்திலும் நமது சட்டமன்றத்தைப் போல இல்லாத அளவுக்கு சட்டமன்ற உறுப்பினர்களாக டாக்டர்கள் அதிக அளவில் நமது தமிழக சட்டமன்றத்தில் இடம் பெற்றிருக்கிறது என்ற பெருமையோடு இந்தியநாட்டினுடைய அனைத்து டாக்டர்கள் சார்பாகவும்; தமிழகத்தில் உள்ள அனைத்து டாக்டர்கள் சார்பாகவும் ஏன், உலகத்தில் உள்ள அனைத்து டாக்டர்கள் சார்பாகவும் நம்முடைய மாண்புமிகு இதயத் தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மருத்துவத் துறைக்கு ரூ. 343.17 கோடி ரூபாய் இந்த மானியத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த கடுமையான நிதி நெருக்கடி இருக்கின்ற நிலையிலும், நாடு நலம் பெறவேண்டும். 'Service to the Patient is Service to the God' என்கிற கோட்பாட்டின்படி எல்லோரும் நன்றாக இருக்கவேண்டுமென்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய ஒவ்வொரு இதயத் துடிப்பும் 'லப், டப்' ''லப்-டப்'' என்று அடிப்பது மக்கள் நல்லா இருக்கணும் ; இருக்க வேண்டும் என்று தான் அவர்களுடைய இதயத் துடிப்பு அடித்துக்கொண்டிருக்கிறது. பல சோதனைகளை சாதனையாக மாற்றி, இந்தியாவினுடைய பெண் நெல்சன் மாண்டேலாவாக திகழ்ந்து, நல்ல பல திட்டங்களை தமிழகத்திற்காக அறிவித்திருக்கிறார்கள். அதுபற்றி ஒரு சில கருத்துக்களை இங்கே நான் சொல்ல ஆசைப்படுகிறேன்.

மருத்துவக் கல்லூரிகள், வெகுவாக தனியார் மருத்துவக் கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கிறது இன்றைய சூழ்நிலையில் Because of the dilution in the medical standard இனிமேல் மருத்துவக் கல்லூரிகளை தமிழகத்தில் தனியார் மூலம் ஆரம்பிக்கக் கூடாது என்பது என்னுடைய தாழ்மையான கருத்தாகும். காரணம், எத்தனையோ டாக்டர்கள் இப்போது வேலையில்லாமல் இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, மருத்துவர்களுடைய ஸ்டாண்டர்டும், தனியார் மருத்துவக் கல்லூரிகள் அமைப்பதன் வாயிலாக குறைந்து கொண்டே வருகிறது.

அதுமட்டுமல்லாமல், Quacks போலி டாக்டர்கள் இப்பொழுது தமிழகத்தில் அதிகமாக பெருகிக் கொண்டிருக்கிறார்கள். ஈரோட்டில் Quacks eradication Drive என்ற ஒன்றை ஈரோடு I.M.A. ஏற்பாடு செய்து Quacks eradication என்கிற வகையில் ரெய்ட் ஒன்றை நடத்தி இப்போது போலி டாக்டர்கள் முழுமையாக அகற்றப்பட நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்

கிறார்கள். அவர்களுக்கு தமிழக அரசின் சார்பாக அனைத்து உதவிகளையும், ஒத்துழைப்பையும் நல்க வேண்டுமென்று இந்த நேரத்தில் தாழ்மையாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல Allopathy Doctors should prescribe only Allopathy medicines, Homeopathy Doctors should prescribe only Homeopathy medicines and the Siddha Doctors should prescribe only Siddha medicines. அந்த ஒரு முறையை ஏற்படுத்தி, தேர்ந்த அந்தந்த மருத்துவக் கடைகளில் இருந்து மருந்துகளைப் பெற்றுக் கொள்ளும் வகையில் உரிய ஆணை புதுப்பிக்கப்பட வேண்டும். அப்படியும், விதியை மீறுபவர்களுக்கு கடுமையான தண்டனை விதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், According to our Medical ethics the Medical Students should wear neat and tidy dress. இந்த 'nobls profession'' னை மேம்படுத்தி, நம் மருத்துவக் கல்லூரி மாணவர்க்கு ஒரு முறையான ஆடைகளை அணிவித்து, பேஷண்ட்ஸ் டாக்டர்களைப் பார்க்கும்போது ஒரு 'அப்பீலிங்'ஆக இருக்க வேண்டும். அவர்கள் எந்தக் கோணத்திலும் மருத்துவக் கல்லூரி மாணவர்களாக, டாக்டர்களாக காட்சியளிக்க வேண்டுமென்ற ஒரு முறையை அவசியம் கொண்டு வர வேண்டுமென்று மீண்டும், மீண்டும் நான் வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு இந்த சட்டமன்றத்தில் 19 டாக்டர் எம். எல். ஏக்கள் இருக்கிறார்கள். இந்த புரட்சிகரமான திட்டத்தை அனைத்து சட்டமன்ற டாக்டர் எம்.எல். ஏக்களையும் ஒன்றாக இணைத்து ஒரு கோவார்டினேஷன்,—அட்வைசரி கமிட்டி ஒன்றை அமைத்து, தமிழகத்திலுள்ள எல்லா மருத்துவமனைகளுக்கும் சென்று பார்த்து, அங்குள்ள பணிகளையும், அங்குள்ள குறைபாடுகளையும் கண்டறிந்து ஆக்கப்பூர்வமாக அவற்றை நிவர்த்தி செய்தால் நன்றாக இருக்கும். அந்த வகையில் இந்த கமிட்டியை அமைத்தால் நன்றாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் என்னுடைய கருத்தாக தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 12–45

அதுபோல் சுமார் 3.5 கோடி ரூபாயில் sophisticated electro medical equipment வாங்குவதற்காக நம்முடைய தமிழக அரசு நிதியை ஒதுக்கி இருக்கிறது. இது மிகவும் பாராட்டத்தக்க செயல் என்றாலும், இந்த 3- 1/2 கோடி ரூபாய் செலவில் வாங்கப்படும் electro medical equipment -ஐ எப்படிப் பராமரிப்பது, அது ஒரு வேளை ரிப்பேரானால் எப்படி ரிப்பேர் செய்வது என்ற ஒரு குறை இருக்கிற காரணத்தால், sophisticated electromedical Equipment-ஐ சரி செய்கின்ற டெக்னிஷியன்களை



161492

உருவாக்க வேண்டுமென்ற கட்டாயத்தில் நாம் இப்போது இருக்கிறோம். அதுமட்டுமல்ல, நகர்ப்புறங்களில் உள்ள மருத்துவ மனையில் படுக்கைகள் மிகவும் தரம் குறைந்தவையாக இருப்பதை நாம் காண முடிகிறது. நம்முடைய நிதிநிலைமையைக் கருத்தில் கொண்டு, Hospital Maintenance Revolving Fund என்ற ஒரு நிதியை ஏற்படுத்தி, நகரத்தில் பணக்கார டாக்டர்கள் இருக்கிறார்கள், மிகவும் செல்வாக்கு உள்ள டாக்டர்கள் இருக்கிறார்கள், அவர்களுடைய உதவியை மனிதாபிமான அடிப்படையில் பெற்று, ஒரு fund ஐ ஏற்படுத்தி, Philontropic mind டுடன் ஒரு fund-ஐ ஏற்படுத்தி, maintenance, of the buildings maintenance of the hospital, maintenance of the beds and maintenance of the valuable machines ஆகியவற்றுக்கு உபயோகப் படுத்தினால் அரசுக்கும் சிக்கனமாக இருக்கும் அதே சமயத்தில் அரசு மருத்துவ மனைகளும் மிகவும் சிறப்பாக இருக்கும் என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. அதைப்போல, for every thing there should be solidaritg among the Doctors. Unless there is solidarity we seldom achieve surgical என்ற அடிப்படையில் எந்த ஒரு செயலைச் செய்தாலும் மருத்துவர்கள் முனைப்போடும், ஒற்றுமை யோடும், அரசுக்கு ஒத்துழைப்பு தந்து, மக்களின் நலனை மேம்படுத்துவதற்கு ஆவன செய்ய வேண்டும். அதற்கு ஒத்துழைப்போமென்று சொல்லிக் கொள்கிறேன்.

கடைசியாக வால்பாறை தொகுதி பற்றி ஒரே ஒரு குறை. வால்பாறை தாலுகா மருத்துவமனையில் 33 படுக்கைகள் இருக்கின்றன. அங்கே ஒரு சர்ஜனோ அல்லது அனஸ்தசிஸ்டோ இல்லாத காரணத்தால் ஒரு ஹெட் இன்ஜுரி ஆகும்போது அடிபட்டவர்களை கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லும்போது, வழியிலேயே இறந்துவிடுகிறார்கள். இந்த அவல நிலையை மாற்றுவதற்கு வால்பாறை தாலுகா மருத்துவமனையிலேயே அவசியம் ஒரு சர்ஜன் மற்றும் அனஸ்தசிஸ்டை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் என்னுடைய வால்பாறை தொகுதியில் டி. பார்ம். கல்லூரி ஒன்றை தனியார் அல்லது அரசு மூலம் அமைத்தால் அங்கேயுள்ள ஏழைப் பெண்கள், மாணவர்கள் படிப்பதற்கு வாய்ப்பு கிடைக்கும் என்பதைக் கருத்திற் கொண்டு, அதை அமைக்க அருள்கூர்ந்து ஆவன செய்ய வேண்டுமென்று தமிழக முதல்வரவர்களைக் கேட்டுக் கொண்டு, எனக்கு பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி, முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. எஸ். திருநாவுக்கரசு

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நேரம் கருதி ஒன்றிரண்டு கருத்துக்களை மட்டும் அரசினுடைய பரிசீலனைக்கு வைத்து,

அமர விரும்புகிறேன். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பார்கள். சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு மருத்துவம் மற்றும் பொதுச் சுகாதாரம் ஆகியவற்றுக்கு நிதி ஒதுக்கம் அதிக மென்றாலும்கூட, மொத்தம் 6,250 கோடியில் சுமார் 411 கோடி மருத்துவம் மற்றும் பொதுச் சுகாதாரம் ஆகியவற்றுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பது மொத்தத்திலே சுமார் 7 சத விகிதம்தான் வருகிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இந்த 7 சதவிகிதத்தை அதிகரிப்பதற்கு அரசு முயற்சிக்க வேண்டுமென்று நான் அரசைக் கேட்டுக் கொள்கிறேன். எனக்கு முன்னால் பேசியவர்கள் குறிப்பிட்டதுபோல மருத்துவக் கல்லூரி கள் 10 அரசு சார்பிலும், 2 தனியார் சார்பிலும் இருக்கின்றன. பல் மருத்துவக் கல்லூரி ஒன்றே ஒன்றுதான் இருக்கிறது. பல ஆண்டுகளாக பல் மருத்துவக் கல்லூரி என்பது சென்னையிலே மட்டும்தான் ஒன்றே ஒன்று உள்ளது. மாண்புமிகு முதலமைச்ச ரவர்கள் வருகின்ற ஆண்டுகளிலாவது இன்னொரு கல்லூரியை— ஒன்றே ஒன்று சென்னையிலே இருக்கிற காரணத்தால் — திருச்சி யிலோ, மதுரையிலோ அல்லது தமிழகத்திலே மத்தியப் பகுதி யிலோ இன்னொரு பல் மருத்துவக் கல்லூரியை ஆரம்பிப்பது நல்லது என்கின்ற என்னுடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, மருத்துவமனைக்கு வருகிறபோது, இலவச சிகிச் சைக்கு இன்கம்-சீலிங் என்று இருக்கிறது. ஒவ்வொரு மருத்துவ மனையிலும் அசெசர்கள் என்று இருக்கிறார்கள். எனவே இலவசமாக சிகிச்சை பெற வேண்டுமென்று வருகிற ஏழை எளிய மக்களுக்கு, மாத வருமான அளவை அதிகப்படுத்த வேண்டுமென்று அரசை நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் ஆங்காங்கே இருக்கிற அசெசர் மூலமாக பொதுமக்களுக்கு பெரிதும் தொல்லைகள் ஏற்படுகின்றன.

பிற்பகல் 12-50

அதைப்போல சில மருத்துவமனைகளிலே பொதுவாக சர்ஜரிக்குத் தேவையான அத்தியாவசியமான பொருள்கள் மற்றும் 'ஹார்ட் அட்டாக்' போன்ற மிக முக்கியமான நோய் களுக்கான உயிர் காக்கும் மருந்துகள் கூட இருப்பு இல்லாமல் இருக்கின்றன. அதை அரசு கவனிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல ஒவ்வொரு மருத்துவ மனையிலும் 'எமர் ஜென்சி வார்டு' இருக்கிறது. அந்த எமர்ஜென்சி வார்டிலே தேவையான ஆப்பரேஷன் தியேட்டர் மற்றும் அனைத்து வசதி



களும் இருக்க வேண்டுமென்று அங்கே பணியாற்றுகின்ற டாக் டர்கள் விரும்புகிறார்கள். உதாரணமாக ஆப்பரேஷன் தியேட்டர், வெண்டிலேட்டர், மற்றுமுள்ள உபகரணங்கள், எக்விப்மென்ட்ஸ் எல்லாம் எமர்ஜென்சி வார்டிலே வைப்பதற்கு, முதற்கட்டமாக பெரிய மருத்துவமனைகளிலேயாவது வைப்ப தற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும் போது 'எய்ட்ஸ்' நோய் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதிலே பொதுவாக, 'டிஸ்போஸபிள் சிரிஞ்சை'ப் பயன்படுத்தி னால்— வெளிநாடுகளிலே டிஸ்போஸபிள் சிரிஞ்சை பயன்படுத்து வது பரவலாகிவருகிறது — இந்த நோய் பரவுவதை குறைக்க முடியும் என்று சொல்கிறார்கள். நம்முடைய மருத்துவ மனைகளிலே பார்த்தால் ஒரே ஊசியை கழுவிக் கழுவி 30 நோயாளிகளுக்குப் பயன்படுத்துகிறார்கள். சமீபத்தில் 'ரிசர்ச்' மூலமாகச் சொல்வது என்னவென்றால், டிஸ்போஸ பிள் சிரிஞ்சைப் பயன்படுத்தினால் பொதுவாக 'எய்ட்ஸ்' போன்ற நோகளை அதிகமாக பரவாமல் தடுக்க முடியும் என்பது. ஆகவே, அரசு அதிலே கவனம் செலுத்த வேண்டு மென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, எமர்ஜென்சி கேஸ்களிலே கூட 'ஸ்கிரீன்ட் பிளட்டை'ப் பயன்படுத்தினால், அதன் காரணமாக எய்ட்ஸ் போன்ற நோய்கள் பரவாமல் தடுக்க முடியும் என்பது மருத்துவர் களின் அபிப்பிராயம். அதிலேயும் கவனம் செலுத்த வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இருதய நோய்க்குப் பொருத்தப்படுகின்ற 'வால்வ்ஸ்' பொறுத்தவரை மாண்புமிகு உறுப்பினர் சுந்தர ராஜ் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். பல தனியார் மருத்துவ மனைகளிலேதான் பெரும்பாலும் வால்வ் பொருத்தும் இருதய அறுவை சிகிச்சை நடைபெறுகிறது. அதற்குக் காரணம் அந்த வால்வ்ஸ் ஒவ்வொன்றும் 10,000 ரூபாய், 15,000 ரூபாய் விலை ஆகிறது. அது அரசாங்க மருத்துவ மனைகளில் அதிகமாக கையிருப்பு இருப்பதில்லை. ஏனென் றால் லோக்கல் மானுஃபாக்சரிங் கிடையாது. வெளிநாடுகளி லிருந்து இறக்குமதி செய்கிறார்கள். அப்படி இறக்குமதி செய் கிற காரணத்தால், கையிருப்பு அதிகமாக இல்லாத காரணத்தி னாலே உடனடியாக ஆப்பரேஷன் செய்ய வேண்டிய நோயாளி கூட பல மாதங்கள், 3 மாதம், 4 மாதம் காத்திருக்க வேண்டி யிருக்கிறது; 'வெயிட்டிங் லிஸ்ட்டில்' வைத்துவிடுகிறார்கள். அதையும் அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

அதைப்போல மாவட்ட தலைமை மருத்துவமனைகளிலே
பார்த்தால் பெட்ஸ் — படுக்கை வசதி மிகவும் குறைவாக இருக்
கிறது. இது இந்த ஆண்டிலே ஏற்பட்ட குறை அல்ல. 45
ஆண்டுகாலமாக இருக்கிற ஒரு குறைபாடுதான். பல அரசாங்
கங்கள் வந்திருக்கின்றன. எந்த அரசாங்கம் வந்தாலும்
தலைமை மருத்துவமனைகளுக்கு முன்னுரிமை கொடுத்து அதிக
மான நிதியை ஒதுக்கவில்லை ; நிதி ஒதுக்கம் போதவில்லை.
உதாரணமாக எடுத்துக்கொண்டால் சில மாவட்ட தலைமை
மருத்துவ மனைகளிலே கூட மிகக் குறைந்த பெட்களே இருக்
கின்றன. ஒரு மாவட்ட தலைமை மருத்துவமனையில் 500
படுக்கைகளுக்குக் குறையாமல் இருக்க வேண்டும். ஒரே
ஆண்டில் இதைச் செய்ய முடியாவிட்டாலும் வருகிற ஐந்தாண்டு
களில் படிப்படியாக ஒவ்வோராண்டிலும் ஓரளவுக்கு நிதியை
கூடுதலாக ஒதுக்கி, அந்த எண்ணிக்கையைப் பூர்த்தி செய்ய
வேண்டும். இதிலே அரசு முன்னுரிமை கொடுத்து, கவனம்
செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று மாவட்ட தலைமை மருத்துவமனையில்
குறைந்த பட்சம் எல்லாவிதமான 'ஸ்பெஷலிஸ்ட்' களும்
இருக்க வேண்டும். டிஸ்ட்ரிக்ட் ஹெட்குவார்ட்டர்ஸ் ஹாஸ்பிட்
டலில் இந்த வசதி கூட இல்லை என்றால் மிகவும் கஷ்டம்.
அரசு அதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

தாலுகா தலைமை மருத்துவமனைகளை எடுத்துக்கொண்
டால், 171 தாலுகா மருத்துவமனைகள் இருக்கின்றன. 100
படுக்கைகளுக்கும் குறைவாக உள்ள மருத்துவமனைகள் சுமார்
100 இருக்கின்றன. 32 படுக்கைகள் கொண்ட தாலுகா
மருத்துவமனைகள் 22 இருக்கின்றன. அதைப்போல 32-
லிருந்து 49 படுக்கைகள் கொண்ட தாலுகா மருத்துவமனைகள்
— சுமார் 50 படுக்கைகளுக்கும் குறைவாக உள்ள மருத்துவ
மனைகள் 28 இருக்கின்றன. மொத்தத்தில் பார்த்தால் 100
படுக்கைகளுக்கும் குறைவாக உள்ள தாலுகா தலைமை
மருத்துவமனைகள் சுமார் 100 இருக்கின்றன. ஆனால் ஒவ்
வொரு தாலுகாவினுடைய மக்கள் தொகையைப் பார்த்தால்
ஏறத்தாழ ஒரு இலட்சத்திற்குமேல் வாழ்கிறார்கள். ஒரு இலட்
சம் மக்கள் தொகை இருக்கிற ஒரு தாலுகாவில் தாலுகா
தலைமை மருத்துவமனையில் 100 படுக்கைகள் கூட
இல்லாமல் இருந்தால் எப்படி மருத்துவ வசதி அளிக்க
முடியும் ? இது மிக மிக குறைவானது. வருகிற ஆண்டுகளிலா
வது இந்த படுக்கை வசதிகளைப் பெருக்குவதற்கு அரசு தேவை
யான நிதியை ஒதுக்கி தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.



அதேமாதிரி 'பிரைமரி ஹெல்த் சென்டர்ஸ்' இருக்கின்றன.
ஆரம்ப சுகாதார நிலையங்களைப் பொறுத்தவரையில் சுமார்
30.000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம்
என்று இருக்கிறது. அதற்கு ஒதுக்கப்படுகிற பணம் எவ்வளவு
என்றால் ஏறத்தாழ 40,000 ரூபாய்தான். அப்படி பார்த்தால்
சராசரியாக ஒரு ஆளுக்கு ஒன்றேகால் ரூபாய் வருகிறது. இது
வும் போதாது. சென்ற ஆண்டு 30,000 ரூபாய் என்றிருந்ததை
இந்த ஆண்டில் 40,000 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள்.
வருகிற ஆண்டுகளில் இந்தத் தொகையை இன்னும் அதிகப்படுத்த
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, நான் பட்ஜெட் பொது விவாதத்திலே
பேசும்போது ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறேன். அதாவது
ஒன்றாவது வகுப்பு முதல் ஐந்தாவது வகுப்பு வரையில் படிக்கிற
மாணவர்களுக்கு 'ஹெல்த்' பரிசோதனை செய்வதற்கும்
அவர்களுக்கு மருந்துகள் வழங்குவதற்கும் ஏற்கெனவே 77
இலட்சம் குடும்ப அட்டைகள் அச்சடிக்கப்பட்டு, இதற்காக
50 இலட்சம் ரூபாய் பணமும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மருந்துகள்
வாங்க 35 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதாகவும் அறிவிக்கப்
பட்டிருக்கிறது. வருகிற ஆண்டுகளில் இந்தப் பணத்தை
அதிகரித்து ஒவ்வொரு ஆண்டும் எலிமெண்டரி ஸ்கூல், மிடில்
ஸ்கூல்களில் படிக்கிற மாணவர்களையும் பரிசோதித்து மருந்து
களை அங்கேயே கொடுக்கிற வாய்ப்பையும், தேவையானால்
மருத்துவமனைகளில் வழங்குகிற வாய்ப்பையும் ஏற்படுத்தி,
அதற்கு சிபாரிசு பண்ணினால் இதுபோன்ற நடைமுறைகளைப்
பின்பற்றினால் வருகிற காலங்களில் இளம் தலைமுறையினர்
திடகாத்திரமாகவும், வியாதியில்லாமல் வளரும் சூழ்நிலையும்
ஏற்படும். அதிலும் அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று
நான் கேட்டுக் கொள்கிறேன். அதேபோல, ஆரம்ப சுகாதார
நிலையங்கள் ஆரம்பிப்பதில், 30 ஆயிரம் மக்கள் தொகை
இருந்தால் ஒரு நிலையம் ஆரம்பிக்கப்படும் என்ற அளவிலே,
ஆல் இந்தியா ஆவரேஜ் வைக்கப்பட்டிருக்கிறது. அதையும்
குறைத்து, சுமார் பத்தாயிரம், 15 ஆயிரம் மக்கள் தொகை
இருந்தாலே அங்கேயும் ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்கப்
படும் என்ற அளவில் திட்டமிட்டு, கிராமப் புறங்களில் அவை
களை துவக்க வேண்டுமென்ற வேண்டுகோளையும் வைத்து அமை
கிறேன். வணக்கம்.

பிற்பகல் 12-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் அ. செல்லக்
குமார்.

டாக்டர் அ. செல்லக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மருத்துவம் மற்றும் பொது சுகாதாரம் பற்றிய
மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்

பளித்ததற்கு முதலிலே நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆண்டு நிதிநிலை எந்த அளவுக்கு வீழ்ச்சியுற்ற நிலையில் இதைக் கொண்டு வந்திருக்கிறது என்பதை நல்ல முறையில் நாங்கள் உணர்ந்திருக்கிற காரணத்தால் அதைப் பாராட்டுகிற கடமை எங்களுக்கு இருக்கிறது என்பதால் மனமாரப் பாராட்டு கின்றேன். ஏழை எளிய மக்களுடைய நிலையை மனதிலே கொண்டு உயிர் காக்கிற மருந்துகளுக்கு வரிவிலக்கு அளித்திருப் பதை மனமாரப் பாராட்டுகிறேன். லட்சோப லட்சம் தாய் மார்களை மனதில் கொண்டு மகப்பேறு மற்றும் குழந்தைகளின் நலத்திற்காக கடந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட ரூ. 26.15 லட்சத் திற்குப் பதிலாக இந்த ஆண்டு 2.66 கோடி ரூபாயை இந்த நிதிநிலை அறிக்கையில் உயர்த்தியிருப்பதையும் நான் பாராட்டு கிறேன். தமிழகத்தின் முதல்வர் அவர்களின் தாயுள்ளத்திற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். குழந்தைகள் மற்றும் தாய் சேய் நல மருத்துவத்திற்காக நல்ல உதவிகளைச் செய்கிற போது என்னுடைய டி. வி. சத்திரம் பகுதியில் 25 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் வாழ்கிற பகுதிக்கு நிரந்தரமான உதவிகள் செய்ய வேண்டுமென்று கேட்டு அங்கே ஒரு மகப்பேறு மருத்துவ மனையும், அதேபோல், அரும்பாக்கம் எம். எம்.டி.ஏ. காலனியில் வாழ்கிற 40 ஆயிரம் மக்கள் வசிக்கும் பகுதியிலும் ஒரு மகப்பேறு மருத்துவ மனையும் இந்த நிதி ஆண்டில் கட்டித் தர வேண்டு மென்று நான் உங்களைப் பணிவோடு வேண்டிக் கொள் கிறேன்.

இந்த நிதியாண்டில் 76 ஆரம்ப சுகாதார நிலையங்களை அரசு உருவாக்கும் என்று அறிவித்திருக்கிறீர்கள். இதை நான் பாராட்டுகிற போது 30 ஆயிரம் மக்கள் தொகைக்கு மேற்பட்ட இடங்களில்தான் ஆரம்ப சுகாதார மையங்கள் ஆரம்பிக்கப் படும் என்று சொல்வதை விட அதை 10 ஆயிரம் மக்கள் வாழ்கிற பகுதிக்கு ஒரு நிலையம் என்று ஆரம்பித்து தருவோம் என்ற கொள்கை அறிவிப்பை அறிவிக்க வேண்டுமென்று நான் பணி வோடு கேட்டுக் கொள்கிறேன். புதிதாகத் தோற்றுவிக்கிற போது, 68 பஞ்சாயத்து யூனியன்களுடைய மருத்துவமனைகள் நிதிநிலை பற்றாக்குறை காரணமாக சரியாக பராமரிக்கப் படாமல் இருப்பதால் அந்த 68 பஞ்சாயத்து யூனியன் மருத்துவ மனைகளையும் அரசு ஏற்று நடத்த வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில் அண்ணா நகரில் உள்ள நகர்ப்புற மருத்துவமனையில் உணவு தயாரிக்கும் பகுதிக்கு கட்டிடம் கட்டுவதற்காக ரூ. 25 லட்சம் ஒதுக்கியிருப்பதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஒவ்வொரு ஆரம்ப சுகாதார மையத்திற்கு மருந்துகள் வாங்குவதற்காக நிதி ஒதுக்கீடு ஆண்டொன்றுக்கு ரூ. 30 ஆயிரத்திலிருந்து ரூ. 40 ஆயிரம் ஆக உயர்த்தியிருப்பதை நான் பாராட்டுகிறபோது, இந்த நாட்டின் பொருளாதாரச் சூழ்நிலை, விலையேற்றத்தை மனதில்





வைத்துப் பார்த்தால், 40 ஆயிரத்திற்கும் 30 ஆயிரத்திற்கும் எந்தவிதமான வேறுபாடும் இருப்பதாகத் தோன்றவில்லை. எனவே தயவு செய்து, ஆரம்ப சுகாதார நிலையங்களின் நிலைமைகளை மனதில் கொண்டு கிராம மக்களுக்கு நோயற்ற வாழ்வை உருவாக்கித் தர வேண்டுமென்பதை மனதில் கொண்டு இதனை ஒரு லட்சம் ரூபாயாக உயர்த்திக் கொடுத்து, கிராமங் களில் வாழ்கிற கோடானு கோடி மக்களுடைய வாழ்வில் ஒளி யேற்றி வைக்கும்படி உள்ளபடியே நான் கேட்டுக் கொள்கிறேன். ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு வேண்டிய நிதி ஒதுக்கீடு 1989–90ல் இருந்ததை விட இந்த ஆண்டு மிகக் குறைவாகத் தான் ஒதுக்கப்பட்டு இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். 1989–90ல் ரூ. 14.57 கோடியாக இருந்தது இந்த ஆண்டு நீங்கள் அதை 7.99 கோடி ரூபாய்க்குக் குறைத் திருப்பதைப் பார்க்கிறபோது அரசு அதைப் பரிசீலித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். Prevention is better than cure என்று சொல்வதைப் போல நாளைய சமுதாயம் ஒரு நோயற்ற சமுதாயமாக வாழ்வதற்கு இந்த அரசு நல்ல எண்ணத்தோடு பள்ளி மாணவர்களையும் பரிசோதித்து ஆவன செய்வதற்கு நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 1–00

ஆனால் இதற்காக 1989-90-ல் ஒதுக்கப்பட்ட 65 லட்ச ரூபாயில் இருந்து இந்த ஆண்டு அதை 7 லட்சமாக குறைக்கப் பட்டிருப்பதை வேதனையோடு சுட்டிக் காட்டுகிற அதே நேரத் தில், தயவுசெய்து மீண்டும் அதைப் பரிசீலனை செய்து நாளைய தலைமுறையை, நாட்டை ஆள்கிற தலைமுறையை, நோயற்ற தலைமுறையாக, நோயற்ற சமுதாயமாக உருவாக்கிடுவதற்கு அரசு ஆவன செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன்.

சித்த மருத்துவத்தைப் பொறுத்தவரையில் அரசு இந்த துறையை மறந்து விட்டதோ என்று நினைக்கிற அளவுக்கு இந்த ஆண்டு ஒதுக்கிய நிதி மிக மிகக் குறைவு என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன். 1989–90-ல் 3 கோடி 18 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது இந்தத் துறைக்கு இந்த நிதியாண்டில் அது 45 லட்சம் ரூபாயாக குறைத்திருப்பது ஏனென்று தெரியவில்லை. அண்ணா நகர் சட்ட மன்றத் தொகுதியில், பெயரும் புகழும் பெற்ற அறிஞர் அண்ணா இந்திய மருத்துவமனையை அமல்படுத்துவதற்காக இந்த நிதி யாண்டில் இந்த அரசு சுத்தமாக கவனிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாட்டில் இருக்கிற அனைத்து ஆரம்ப சுகாதார மையங்களிலும் அரசாங்க மருத்துவ மனை களிலும் மூன்றாவது மருத்துவராக சித்த மருத்துவர்களை பணி அமர்த்த வேண்டுமென்று அரசு ஆணையே இருக்கிறது. ஆனால் இதுவரை 980 ஆரம்ப சுகாதார நிலையங்களில் இதுபோன்ற சித்த மருத்துவப் பிரிவை ஏற்படுத்தவில்லை என்பதை உங்

களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நாள்தோறும் விபத்துக்கள் பெருகி வருகிற இந்தக் காலக் கட்டத்தில் ஒவ்வொரு அரசாங்க மருத்துவ மனையிலும் செப்பரேட்டாக எமர்ஜென்சி தோமா வார்டுகள் சரியான முறையில் இல்லை. தயவுசெய்து அதை சிந்தித்துப் பார்த்து நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அறுவை சிகிச்சை அரங்குகளில் Intrac pt Monito:ing Equipment சரிவர இல்லை என்பதைச் சுட்டிக் காட்டி, குறிப்பாக சென்னை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையைப் பொறுத்தவரையில் அறுவைச் சிகிச்சைப் பிரிவில் இருக்கிற 6 அரங்குகளும் சரிவர இல்லை. அறுவை சிகிச்சைக்குக் கொண்டு வருகிறபோது வேறு ஒரு அறுவை சிகிச்சை அரங்கிலிருந்து உபகரணங்களைக் கொண்டு வந்துதான் அங்கே அறுவை சிகிச்சை செய்கிற நிலை இருக்கிறது. அதைத் தவிர்க்க வேண்டுமென்பதால் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

எனக்கு முன்னாலே பேசியவர்கள் அரசு மருத்துவ மனைகளில் ஊசி போடுவதற்கு பழைய சிரிஞ்சுகளையே பயன்படுத்துகிறார்கள் என்றார்கள். டிஸ்போசல் சிரிஞ் பயன்படுத்தினால் நோய்கள் தடுப்பதற்கு ஏதுவாக இருக்கும். இதன் மூலம் ஏழை எளிய மக்கள் பெரும்பாலும் அரசு மருத்துவமனைகளையே நாடி வருவதால் கிராஸ் இன்பெக்ஷன் ஏற்படாமல் தடுக்கலாம். இந்த ஆண்டு இன்னும் பத்து நாட்களில் அக்டோபர் 1ம் தேதி உலக ரத்த தான நாளாகக் கொண்டாடப்படப் போகிறது. இந்த வேளையில் ரத்த தானத்தின் முக்கியத்துவத்தை அரசு உணர்ந்து விளம்பரங்களிலும் ரத்த தானத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி சேர்க்க, அதை ஒரு பகுதியாக சேர்த்து அதன் மூலம் ஏழை எளிய மக்களுக்கும், கற்றறிந்தவர்களுக்கும் ரத்த தானத்தின் முக்கியத்துவத்தை அரசு உணர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைய அளவில் சென்னை நகர மக்களை நேருக்கு நேர் சவால் விடுகிற அளவுக்கு, அச்சுறுத்துகிற அளவுக்கு இருக்கிற கொசுக்களை முற்றிலுமாக அழித்து சென்னை நகர மக்களை கொசுக்களின் கோரப் பிடியிலிருந்து மீட்க அவசர கால வேகத்தில் நடவடிக்கை எடுத்து ராக கீதம் இசைக்கிற கொசுக்களைக் கண்டு சோககீதம் பாடுகிற சென்னை வாழ் மக்களின் சார்பாக தமிழகத்தின் முதல்வர் அவர்களுக்கு கருணை மனுவை சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

பிற்பகல் 1-05

நோயைத் தடுக்கும் முன், நோய்க்கான காரணங்களைத் தடுக்க வேண்டும் என்ற வகையில், பெரும்பாலான நோய்களை இலவசமாகத் தருகின்ற கொசுக்களைக் கட்டுப்படுத்துவதற்கு ஒரு விரிவான திட்டத்தை அரசு நிச்சயமாகக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சென்னை மாநகராட்சி இது குறித்து ஒரு விரிவான திட்டத்தை கடந்த 6 அல்லது 7





மாதங்களுக்கு முன்னால் தமிழக அரசுக்கு சமர்ப்பித்து இருக்கின்றது. இன்றைக்கு ஒரு மிக வேதனைக்குரிய செய்தி என்னவென்று சொன்னால் தமிழகத்தில் இருக்கின்ற மலேரியா நோயினுடைய எண்ணிக்கையைப் பார்க்கும்போது, 60 சதவீதத்திற்கு மேற்பட்டவர்கள் சென்னை நகரத்தில் தான் இருக்கிறார்கள் என்பது இன்றைக்கு ஸ்டேட்டிஸ்டிக்ஸ் ரீதியாகக் கணக்கை பார்க்கின்றோம். இந்தியத் திருநாட்டில் ஏனைய பெருநகராட்சி மன்றங்களைவிட, ஏனைய மாநகராட்சிகளைவிட சென்னை மாநகராட்சியில் தான் கொசுக்களினுடைய எண்ணிக்கை, அதனால் பாதிக்கப்பட்ட மலேரியா நோயினுடைய எண்ணிக்கை, அந்த நோயாளிகளினுடைய எண்ணிக்கை மிக அதிகமாக இருக்கின்றது. கடந்த ஆண்டில் 54 ஆயிரம் பேர் அந்த நோயினால் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அதுபற்றி அரசினுடைய கணக்கு இருக்கின்றது. எனவே இதனைத் தடுப்பதற்கு தயவுசெய்து, குறிப்பாக மூளைக் காய்ச்சல் உருவாக்குகின்ற விதத்திலே செயல்படுகின்ற மலேரியா கொசுக்களை ஒழிப்பதற்கு நீங்கள் ஆவன செய்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒன்றை முதலமைச்சர் புரிந்துகொள்ளுவார்கள் என்று நினைக்கின்றேன். ***முதல்வருடைய இல்லத்தைச் சுற்றி கட்டிடங்கள் கட்டிக்கொண்டு இருக்கிறார்கள்; அங்கே நீர் தேங்கி இருக்கின்ற காரணத்தினாலேதான் கொசுக்கள் அதிகமாக வந்துகொண்டிருக்கின்றது. ***அந்த கார்ப்பரேஷன் 6, 7 மாதங்களுக்கு முன்னால் அரசுக்கு ஒரு பரிந்துரையை செய்து இருக்கிறது. அந்த பரிந்துரையை செயல்படுத்துவதன் மூலம் 3 மாத காலத்திற்குள்ளாக சென்னையில் இருக்கிற கொசுக்களை நிச்சயமாக ஒழிக்க முடியும் என்று கார்ப்பரேஷனின் சுகாதார அதிகாரிகள் சுட்டிக் காட்டி இருக்கிறார்கள். . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ***என்று ஒரு உறுப்பினர் சொல்வது அவைக் குறிப்பில் இருப்பது நல்லது அல்ல.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய இல்லத்தின் அருகில் எந்தக் கட்டிடமும் இப்போது கட்டப்படவில்லை; அண்மைக் காலமாகவும் கட்டப்படவில்லை. அங்கே தண்ணீர் தேங்கவும் இல்லை.*** ஆதாரம் இல்லாமல் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இத்தகைய தகவல்களை அவைக்குத் தரக் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1991 செப்டம்பர் 1C

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ***என்று சொல்வது சரியல்ல. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

டாக்டர் அ. செல்லக்குமார் : தகவல் தவறாக இருக்குமேயானால் நான் அதைத் திரும்பப் பெற்றுக்கொள்வதில் பெருமை அடைகின்றேன். ஆனால் எனக்குக் கிடைக்கப்பெற்ற செய்தியை நான் இங்கே சொன்னேன். கொசுக்களினுடைய தொல்லையால் அந்த அளவிற்கு நாம் பாதிக்கப்பட்டு இருக்கின்ற காரணத்தினாலே நான் அதைச் சுட்டிக்காட்டுவதற்காகத் தெரியப்படுத்தினேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கொசுத் தொல்லை என்று சொல்லி அவர்கள் தெரியப்படுத்தவில்லை.

டாக்டர் அ. செல்லக்குமார் : சென்னை மாநகராட்சி 2, 3 திட்டங்களை தமிழக அரசுக்கு அனுப்பி இருக்கின்றது. அதன் மூலம் சுற்றுப்புற சுகாதாரத்தைப் பேணிக் காக்கின்ற விதத்தில் அவர்கள் சில திட்டங்களைத் தெரிவித்து இருக்கிறார்கள். இந்த கொசுக்கள் உருவாவதற்குக் காரணமாக இருக்கிற 'லோலையிங் ஏரியாஸ்'—இவைகளை நிரப்பி அதன் மூலம் கொசுக்களைத் தடுக்கலாம் என்பதோடு, 'பயோலாஜிகல் கன்ட்ரோல்' மூலமாக குறிப்பாக கம்பூஷியா என்கின்ற இனத்தைச் சார்ந்த மீன்களை வளர்ப்பதன் மூலம் அந்த மீன் இனம் இந்த கொசுகளை உணவாக உட்கொண்டு வாழ்வதாலே அந்த முறையை நீங்கள் இங்கு அறிமுகப்படுத்துவீர்களேயானால், அதன்மூலம் இங்கே இருக்கின்ற கொசுக்களை ஒழிப்பதற்கு 3 மாத காலத்திற்குள் அவைகளை தமிழகத்திலே ஒழித்துவிட முடியும் என்று அரசு அதிகாரிகள் கருதுகிறார்கள். அந்தத் திட்டத்தை அவர்கள் தமிழக அரசுக்கு செய்து இருக்கிறார்கள். தயவுசெய்து நீங்கள் அதன் மீது உடனடியாக நடவடிக்கை எடுத்து, அந்தத் திட்டத்தை அமல்படுத்துவதன் மூலம் தமிழகத்தில் குறிப்பாக சென்னைவாழ் மக்களை கொசுத் தொல்லையிலிருந்து காப்பாற்ற வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த சுற்றுப்புற சுகாதாரத் துறைக்கு அரசு 6 போஸ்ட்டுகளை தந்து இருக்கிறது. இதுவரை ஒரே ஒரு பதவி மட்டும்தான் நிரப்பப்பட்டு இருக்கிறது. ஏனைய 5 பதவிகள் இதுவரை நிரப்பப்படாமல் இருக்கின்ற ஒரு வேதனை இன்றைக்கு சென்னையிலே இருக்கிறது. தயவுசெய்து அதை நீங்கள் கவனத்தில் கொண்டு, அதை உடனடியாக நிரப்புவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

---

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1991 செப்டம்பர் 16] [டாக்டர். அ. செல்லக்குமார்]

இன்றைக்கு காலையில் கூட மணலியில் ஒரு உண்ணாவிரதப் போராட்டத்தைத் துவக்கி வைத்து வரவேண்டிய சூழ்நிலை எனக்கு ஏற்பட்டது. மணலியில் வங்கக் கடலை எந்த அளவுக்கு கழிவுநீர் மூலமாக, ரசாயன கழிவுநீர் மூலமாக பாதிக்கப்படவைக்க முடியுமோ அந்த அளவுக்கு இன்றைக்கு அங்கு தொழிற்சாலைகளில் இருக்கிற ரசாயன கழிவுநீரை கடலில் கலந்துகொண்டிருக்கிறார்கள். தொழிற்சாலைகள் வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. ஆனால் தொழிற்சாலைகள் மூலமாக இன்றைக்கு ஒரு இனத்தின் மக்கள் கடுமையாகப் பாதிக்கின்ற விதத்திலே, அவர்களுடைய தொழில்களைப் பாதிக்கின்ற விதத்திலே, தொழிற்சாலைகள் இருந்துவிடக்கூடாது. அந்த மீன்களை உண்கின்ற மக்கள் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதற்காக நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

பிற்பகல் 1-10

அவர்கள் வெளியில் அனுப்புகிற இரசாயன கழிவு நீரிலிருந்து வருகிற இரசாயன பொருள்கள் கடலில் கலக்கிறபோது அங்கே நீரில் இருக்கிற ஆக்சிஜனை அவை உறிஞ்சிவிடுகின்றன. அதனால் ஆக்சிஜன் இல்லாத நீராக இருக்கிறது. அங்கே மீன்கள் வாழ முடியாது. அங்கே வாழ்கிற மீன்கள் இரசாயன கழிவுப் பொருள்களைச் சேர்த்து நீருடன் அருந்துகிற காரணத்தால், அந்த மீன்களை உண்கிற மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். இதனை நீங்கள் உணர்ந்து தொழிற்சாலைகள் தங்கள் ட்ரீட்மெண்ட் பிளான்ட்டுகளை சரியாக வைத்துக்கொள்ளவில்லை என்றால் அரசு தகுந்த நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கங்கையை சுத்தப்படுத்துகிறோம் என்று அருமைத் தலைவர் ராஜீவ்காந்தி அவர்கள் இந்த நாட்டினுடைய பிரதமராக இருந்தபோது ஒரு அறிவிப்பை கொடுத்திருக்கிறார்கள். கங்கையை சுத்தப்படுத்துவோம் என்று சொல்வது புனித நீரை சுத்தப்படுத்துவது என்ற எண்ணத்தில். (சொல்லவில்லை மாறாக கான்பூர், லக்னோ போன்ற நகரங்களில் வாழ்கிற மக்கள் அங்கேயுள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகள் தங்கள் கழிவுநீரை கங்கை ஆற்றில் கலப்பதால் பெரும் அளவுக்கு பாதிக்கப்படுகிறார்கள் என்பதால் தான் அன்றைக்கு கங்கையை புனிதப்படுத்துவோம் என்ற திட்டத்தை அறிவித்தார்கள். அன்றைக்கு அந்தப் பகுதி வாழ் மக்கள் உச்சநீதி மன்றம் வரையில் சென்று கங்கை நீரில் கழிவு நீர் கலப்பதை அங்கேயுள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகள் நிறுத்த வேண்டுமென்று வாதாடினார்கள். அப்போது நம்முடைய தமிழகத்தைச் சேர்ந்த முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி பெரியவர் பகவதி அவர்கள் தீர்ப்பு வழங்குகிற போது we carnct drcp the future cf cur pecple by pcllutirg the ervircnment என்ற தீர்ப்பை வழங்கி, இந்த நாட்டில் தொழிற்சாலைகள் வருவதை நாங்கள் தடுக்கவில்லை, அந்தத் தொழிற்சாலைகள்

[டாக்டர். அ. செல்லக்குமார்] [1991 செப்டம்பர் 16

மூலமாக புதுப்புது நோய்கள் சமுதாயத்தில் உருவாகக் கூடாது என்று தெரிவித்து இருக்கிறார்கள். அதற்கு பிறகு பொலூஷன் கன்ட்ரோல் போர்டுக்கு ஆலோசனைகளை வழங்கி கங்கையை சுத்தப்படுத்துகிற அந்தப் புனிதத் திட்டத்தை அறிவித்தார்கள். அதைப்போல வங்கக் கடலையும் சுத்தப்படுத்துகிற நல்ல திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இன்றைக்கு நகராட்சியில் இருக்கிற பொது சுகா தாரத் துறையில் பணியாற்றுகிற சுகாதாரப் பணியாளர்கள் நகராட்சி சுகாதார அதிகாரிகளின் கட்டுப்பாட்டில் இருப்பதற்கு பதிலாக இன்றைக்கு நகராட்சியின் கட்டுப்பாட்டில் இருந்து கொண்டிருக்கிறார்கள். கடந்த ஆட்சியில் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்துள்ளார்கள். எண். 25/91 என்பதை நீங்கள் தயவு செய்து வாபஸ் பெற்றுக்கொள்ள, மீண்டும் ஒரு அவசர சட்டத் தைக் கொண்டு வரவேண்டும். நகராட்சியில் இருக்கிற, பொது சுகாதாரத் துறையில் பணியாற்றுகிற சுகாதாரப் பணியாளர்கள் அந்த சுகாதாரத் துறை அதிகாரிகளின் கன்ட்ரோலில் இருந்தால் தான் அவர்களை சரியான முறையில் பராமரித்து வேலை வாங்க முடியும் என்பதை மனதில் கொண்டு உடனடியாக அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு தஞ்சை மாவட்டத்தில் செங்கிப்பட்டியில் இருக் கிற எம். ஜி. எம். காசநோய் மருத்துவமனை என்பது மகாத்மா காந்தி அடிகள் அவர்கள் பெயரில் 1954 ஆம் ஆண்டு தொற்றுவிக்கப்பட்டது. அந்தத் தொண்டு நிறுவனம் கடந்த சில ஆண்டுகளாக ஒரு பின்தங்கிய நிலையில் இருந்து கொண்டிருக் கிறது. அதனை குறித்து இந்த அரசு தயவுசெய்து பரிசிலனை செய்ய வேண்டும். அந்த மருத்துவமனையை அரசு மருத்துவ மனையாக ஏற்றுக்கொண்டால் அதன் மூலம் 491.03 ஏக்கர் நிலம் அரசுக்குச் சொந்தமாகும். அந்த மருத்துவமனைக்கு 491.03 ஏக்கர் நிலம் இருக்கிறது. அதனால் அரசு எந்தவிதமான நஷ்ட ஈடும் கொடுக்க வேண்டிய தேவையில்லை. மாறாக அந்த நிலத்தையெடுத்து, அந்த மருத்துவமனையை ஏற்று நடத்துவோ மானால், இந்தியத் திருநாட்டின் தந்தையான அண்ணல் காந்தி யடிகள் அவர்கள் பெயரில் நல்ல மருத்துவ ரிசர்ச் இன்ஸ்டி டியூட் தாமரை நிறுவனம் இன்றைக்கு இருப்பதை போல தோற்றுவிப்பதற்கு வழிவகை செய்யும். அந்த மருத்துவ மனைக்கு ஏறத்தாழ ரூ. 6,38,825 ரொக்கமாக, வைப்பு நிதியாக வைத்திருக்கிறார்கள். இந்த மருத்துவமனையை ஏற்றுக் கொள்வதன் காரணமாக அரசுக்கு எந்தவிதமான நஷ்டமும் ஏற்படாது என்று தெரியவில்லை. (மணியடிக்கப் பெற்றது) ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன். 40 ஆண்டுக்காலமாக காச



1991 செப்டம்பர் 16] [டாக்டர். அ. செல்லக்குமார்]

நோயாளிகளுடைய நலனைக் கருதி பணியாற்றிக் கொண்டிருக் கின்ற அந்த ஊழியர்களையும் அவ்வாறே அரசு ஏற்றுக்கொள்ளு மானால் அவர்களுடைய வாழ்வில் ஒளியேற்றி வைத்ததாகவும் இருக்கும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஒரு முக்கியமான கருத்தை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும். இன்றைக்கு கோவை மாவட்டம் போன்ற பல பகுதி களில் பார்த்தீனியம் விஷச்செடி எந்த அளவுக்கு பரவி வருகிறது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். இதைப் பொறுத்தவரை யில் சிலர் சொல்கிறபோது இது ஏதோ ஏகாதிபத்திய நாடுகள் எல்லாம், இந்திய நாட்டை, இந்தியச் சமுதாயத்தை சீரழிக்க வேண்டும் என்பதற்காக அவர்கள் விதைகளைத் தூவி இந்தச் செடிகளை இங்கே பரப்புகிறார்கள் என்று சொல்கிறார்கள். அந்த செடியின் மூலமாக அலர்ஜி ஏற்பட்டால் எந்த அளவுக்கு மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை மனதில்கொண்டு, அந்தச் செடிகளை அழிக்கிற விதத்தில் போர்க்கால நடவடிக்கைகளை எடுத்து, தமிழ்நாட்டு மக்களை காப்பாற்ற முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல். 1-15

அதோடு இன்றையதினம் மனித உயிரினைப் பழி வாங்கக் கூடிய அளவுக்கு இருக்கின்ற போதை மருந்துகள் இந்த நாட்டிலே எந்த அளவிற்கு தலை தூக்கி நிற்கிறது என்பதை நீங்கள் உணர் வீர்கள். எந்த அளவிற்கு கள்ளச் சாராயத்தைக் கட்டுப்படுத்து வதற்கு, அதனை அடக்குவதற்கு, ஒரு போர்க்கால நடவடிக் கையினை நீங்கள் எடுத்து, அதைக் கட்டுப்பாட்டிலே கொண்டு வந்திருக்கிறீர்களோ—அதைப் பாராட்டுகின்ற நாங்கள்—தயவு செய்து இந்த போதை மருந்தைக் கட்டுப்படுத்துவதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும். அதன் மூலம் இன்றைக்கு வளர்ந்து வருகின்ற இளைய சமுதாயம் எந்த அளவிற்கு பாதிக்கப்பட்டு இருக்கிறதோ, அவற்றைத் திருத்தி, அவர்கள் மூலம் ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்குவதற்காக, படித்துக் கொண்டிருக்கிற மாணவர் சமுதாயம் நல்ல ஒரு சமுதாயமாக தங்களை அமைத் துக் கொள்வதற்கு, நடவடிக்கைகளை நீங்கள் எடுத்து, அதற்கு ஒரு போர்க்கால நடவடிக்கைகளை எடுத்து, ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கள்ளச் சாராயத்தைக் கட்டுப்படுத்துவதற்கு நீங்கள் எந்த அளவிற்கு திட்டத்தைக் கொண்டு வந்தீர்களோ, அதே அளவிற்கு இதற்கும் ஒரு திட்டத் தைக் கொண்டுவரவேண்டும் என்று உங்களை பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லவேண்டும். மாலையிலேயும் அவை கூடவிருக்கிறது. சீக்கிரம் முடிக்கவேண்டும்.

டாக்டர் அ. செல்லக்குமார் : இன்றைக்கு நான் ஒன்றை இங்கே குறிப்பிட்டாக வேண்டும். ''வேட்பன சொல்லி வினையில எஞ்ஞான்றும் கேட்பினும் சொல்லாவிடல்'' என்று வள்ளுவப் பெருந்தகை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். பெரும் பயன் தருகிற செயல்களை அரசன் கேட்காதபோதும் சொல்லவேண்டும். அது பயனற்ற சொல்லாக இருந்தால், அதை அரசன் கேட்டாலும் சொல்லக்கூடாது'' என்று வள்ளுவப் பெருந்தகை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்த முறையில் இந்த அரசுக்கு எந்த அவப் பெயரும் வந்துவிடக் கூடாது என்ற காரணத்தாலே—அரிசி விலை உயர்வின் காரணமாக, இந்த நாட்டு மக்களிடையே, அவப்பெயர் வந்துவிடும் என்ற காரணத்தால் இந்த அரசு, இங்கே இருக்கின்ற அரசன், ஆம். இங்கே முடிசூடா மன்னனாக இருக்கின்ற தமிழக முதல்வர் அவர்களுக்கு அவப்பெயர் வந்துவிடக் கூடாது என்ற காரணத்தால், மருந்து கசந்தாலும் அது உடம்புக்கு நல்லது என்ற காரணத்தால், இந்த அவைக்கு வெளியிலே சில கருத்துக்களை, கசப்பான வார்த்தைகளைச் சொல்லியிருந்தாலும், அவைகள் எல்லாம் அரசுக்கு நல்ல பெயர் வரவேண்டும் என்ற காரணத்திற்காகத்தான் அதை நான் சுட்டிக்காட்டி இருக்கின்றேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அரசு நல்ல ஒரு அரசாக வரவேண்டும் என்பதற்காக, இங்கே வீற்றிருக்கின்ற முதலமைச்சர் அவர்கள், தமிழகத்தினுடைய முதலமைச்சராக வரவேண்டும் என்பதற்காக பாடுபட்டவர்களிலே நாங்களும் உண்டு என்பதோடு மட்டுமல்லாமல், இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலே, தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் பாதிக்கப்படுகின்ற விதத்திலே அவமானப் படுத்துகின்ற விதத்திலே சிலர் சதித் திட்டங்களைத் தீட்டிய போது அன்றைக்கு இந்த மாமன்றத்தின் முன்னாலே, இந்தக் கோட்டைக்கு முன்னாலே, தமிழக மாணவர் காங்கிரஸ் சார்பாக மறியலை நடத்தியதோடு அல்லாமல், அன்றைக்கு தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்த கலைஞர் கருணாநிதி அவர்களுடைய இல்லத்தின் முன்னாலே மறியல் நடத்தி, கைது செய்யப்பட்டு, அதைப்பற்றி இந்த மன்றத்திலே கவன ஈர்ப்புத் தீர்மானமாகக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த முறையில், இந்தத் தவறினைச் சுட்டிக்காட்டுவது என்பது இந்த அரசை விமர்சனம் செய்வதற்காக அல்ல. இந்த அரசு நல்ல முறையில் மக்கள் மத்தியில் நல்ல பெயரை வாங்கவேண்டும் என்பதற்காகத் தான் இதை நான் சுட்டிக்காட்டுகிறேன் என்பதைக் கூறி, பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.



மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய நன்றியைச் சொல்ல, நான் இங்கே விவாதத்திற்கான பதிலை வைக்க விரும்புகிறேன்.

இங்கே 15 சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் பேசிய அத்துணை கருத்துக்களுக்கும், கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானங்கள் மற்றும் பொதுவான கருத்துக்கள், அத்தனைக்கும், பதில் சொல்ல வேண்டும் என்று நான் முதலிலே கருதியிருந்தேன். ஆனால் ஏறத்தாழ 1.20 மணி வரை விவாதமே நீட்டித்துப் போகும் என்று கொஞ்சம்கூட எதிர்பார்க்கவில்லை. எனவே, நேரத்தின் அருமையைக் கருதி, மாலையிலே மீண்டும் சட்டமன்றம் கூடவேண்டியிருக்கிற காரணத்தால், எவ்வளவு சுருக்கமாகச் சொல்ல முடியுமோ அவ்வளவு சுருக்கமாக நான் சொல்ல வேண்டியதைச் சொல்லி முடிக்கிறேன்.

இங்கே 82 உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களை கொடுத்திருக்கிறார்கள். அதிலே 7 உறுப்பினர்கள் கொள்கை பற்றி விவாதிக்க வேண்டும் என்று கொடுத்திருக்கிறார்கள். 46 சட்டமன்ற உறுப்பினர்கள் மருத்துவமனைகளிலே இருக்கின்ற வசதிகளை அதிகப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை வைத்து இங்கே கொடுத்து இருக்கிறார்கள். மற்ற அத்தனை பேர்களும், தனித்தனியாக சில பிரச்சினைகளைக் குறித்து இங்கே வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். என்னுடைய மொத்த பதிலிலே அந்த வெட்டுத் தீர்மானத்திற்கு, பெரும் பகுதியான வெட்டுத் தீர்மானத்திற்கு பதில் கிடைத்துவிடும் என்று நான் கருதுகிறேன். இல்லை என்றாலும், நீங்கள் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களும், இங்கே பேசியிருக்கின்ற கருத்துக்களும் குறிப்பேட்டிலே இருக்கின்ற காரணத்தால், அதை வைத்து, தேவையான நடவடிக்கையை இந்த அரசாங்கம் துரிதமாக எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1-20

இங்கே மாண்புமிகு உறுப்பினர் சுந்தரதாஸ் அவர்கள் பேசிய போது பல்வேறு கருத்துக்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர் பேசியதையும் முழுமையாக சொல்ல முடியாது என்றாலும், இரண்டொரு கருத்துக்களைச் சொல்கிறேன். பொதுக் கருத்துக்களைச் சொல்கிற போது பல பேருக்கு பதில் கிடைக்கும்,

குறிப்பாக அவர் சொன்னபோது போலி டாக்டர்களைப் பற்றி தெரிவித்திருக்கிறார்கள். ஏற்கெனவே ஒரு வினாவிற்கு விடை அளித்தபோது அதிலே கடுமையான நடவடிக்கையை அரசாங்கம்

மேற்கொள்ளும்.. யார் அப்படி போலித்தனமாக மருத்துவராக இருக்கிறார் என்பதைக் கண்டுபிடித்து, தேவையான நடவடிக்கை எடுக்கும் என்று நான் ஏற்கெனவே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அதைத் தொடர்ந்து இந்த அரசாங்கம் செய்யும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று பெண் குழந்தைகள் கொல்லப்படுகிறார்கள் என்ற கருத்தை பல்வேறு நிலைகளிலே சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே தெரிவித்திருக்கிறார்கள். அது இந்தத் துறையிலே மட்டுமல்ல, பலவிதமாக அதை அணுக வேண்டிய அவசியம் இருக்கிறது. அது தடுக்கப்பட வேண்டிய ஒன்று என்பதிலே யாருக்கும் எந்த சந்தேகமும் இருக்க வேண்டிய அவசியமில்லை. நிச்சயமாக இதிலே இந்த அரசாங்கம் தெளிவாக இருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் மாசு கட்டுப்பாடு வாரியத்தைப் பற்றி அவர்கள் தெரிவித்திருந்தார்கள். அதைப் பற்றி நிச்சயமாக நான் இங்கே சொல்கிற பதிலிலிருந்து அவர் திருப்தி அடைவார் என்று கருதுகிறேன்.

அதேபோன்று நம்முடைய டாக்டர் குமாரதாஸ் அவர்கள் பேசுகிறபோது தியாகிகளுடைய குழந்தைகளுக்கு மருத்துவக் கல்லூரியிலே ஒரு குறிப்பிட்ட சதவீதம் இடம் ஒதுக்கப்படுகிறது, அது அவ்வளவு பொருத்தமாக இருக்காது. அது பேரக் குழந்தைகளுக்கு என்று மாற்றப்பட வேண்டுமென்று நல்ல யோசனையை சொல்லியிருக்கிறார்கள். அந்த யோசனைக்கு என்னுடைய நன்றியை நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அவரே இன்னொரு கோரிக்கையைக் கூட சொல்லி இருக்கிறார்கள். இரவு நேரத்திலே போஸ்ட் மார்ட்டம் செய்யப்பட வேண்டும். அது இப்போது இல்லை என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதைப் பொறுத்து ஏற்கெனவே நாங்கள் ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம். காலையிலிருந்து மாலை 5-00 மணிக்குள்ளாக செய்து முடிக்கப்பட வேண்டும். இரவு நேரத்திலே செய்யக் கூடாது என்ற ஒரு விதி இருக்கிறது. எனவே அதை மாற்றுவதற்கான சாத்தியக்கூறுகள் என்னவென்று நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அருகிலுள்ள கேரள மாநிலத்தில் மாற்றியிருக்கிறார்கள் என்கிற தகவல் கிடைத்து, அதைப்பற்றி விசாரித்துக் கொண்டிருக்கிறோம். எனவே அதன் மீது முறையான, சட்டத்திற்கு உட்பட்டும் பிரச்சினைகள் எதுவும் ஏற்படாத வகையிலே நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.





இன்னொன்றை அவர்கள் தெரிவிக்கின்றபோது மீனவர்கள், பனையேறும் தொழிலாளர்கள் அவர்களாகவே தவறி வழுந்து இறந்துவிட்டால், அவர்கள் அங்கேயிருந்து தான் விழுந்திருக்கிறார்கள், கடலுக்குப் போய்தான் இறந்திருக்கிறார்கள் என்று கண்ணுக்கு எதிராகத் தெரிகிறபோது, அவர்களுடைய உடலை பரிசோதிக்க வேண்டுமா, போஸ்ட் மார்ட்டம் செய்ய வேண்டுமா என்ற ஒரு கருத்தை இங்கே எடுத்து வைத்திருக்கிறார்கள். அது அப்படி தேவையில்லை என்று நாம் கருதினாலும் கூட, அதிலே இருக்கின்ற சிக்கல், இந்தக் காரியங்கள் எல்லாம் முடிந்து, அடக்கம் முடிந்து 10 நாட்களுக்குப் பின்னாலே பிரச்சினைகள் ஏதாவது எழுமேயானால், பல சங்கடங்கள் ஏற்பட்டு விடுகிறது. உண்மைகளை அப்போது தெரிந்து கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டு விடுகிறது. எனவே சிலவற்றை நாம் பொறுத்துத்தான் ஆகவேண்டும். சூழ்நிலைக்ளைக் கருதி என்பதை நா்ன் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் படுக்கை வசதிகளைப் பற்றி இங்கே தெரிவித்தார்கள். படுக்கை வசதிகளைப் பொறுத்தவரையில் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்ற உடனேயே நிறைய இடங்களில் படுக்கைகள் அதிகப்படுத்தப்பட வேண்டுமென்று சொல்லி அதற்கான நடவடிக்கைகளை நாங்கள் தொடர்ந்து விரைவாக எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக இங்கே பல பேர் பேசுகிறபோது இன்றைக்கு அரசாங்க மருத்துவமனைகள் இயங்குகிற நிலையைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். சுத்தமாக வைத்துக்கொள்ளப்பட வேண்டுமென்பதைப் பற்றியெல்லாம் இங்கே தெரிவித்திருக்கிறார்கள். நான் இங்கே குறிப்பாக திருமதி ஜீனத் சர்புதீன் அவர்கள் பேசுகிறபோது அவர் ஒருவர் மட்டும் தான் பொது மக்கள் எந்த அளவிற்கு ஒத்துழைப்பு கொடுக்கவேண்டுமென்ற கருத்தையும் இங்கே தெரிவித்தார்கள். மற்றவர்கள் அத்தனை பேரும் தெரிவிப்பார்கள் என்று நான் எதிர்பார்த்தேன். ஒருவருமே இங்கே குறிப்பிடவில்லை. அரசாங்கம் என்ன செய்ய வேண்டும், என்ன குறைபாடு இருந்து கொண்டிருக்கிறது. நாம அதை எப்படி களைந்து எறியவேண்டும் என்பதைப் பற்றி எல்லாம் சொன்னவர்கள் பொதுமக்களுக்குச் சொல்லாமல் விட்டுவிட்டார்கள். அவர் ஒரே ஒருவர் மட்டும் தான் பொதுமக்கள் எப்படி அதற்கு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். சில பேர் வேகமாகப் பேசி கடுமையாகச் சொல்ல, அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவருவார்கள். ஆனால் அமைதியாக எல்லோரும் கூர்ந்து கவனிக்கின்ற வகையிலே எல்லோரும் இன்னமும் அனுதாபப்படும் வகையிலே செல்வி நிர்மலா அவர்கள் அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு பல்வேறு கருத்துக்களை இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள்.

பிற்பகல் 1.25 [திரு. சு. முத்துசாமி]

அந்தக் கருத்தைப் பொறுத்தவரையில் திண்டுக்கல்லிலே மாசு கட்டுப்பாடு வாரியத்தின் வாயிலாக அங்கே வருகின்ற கழிவு நீரை சுத்தப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுப்பதற்கு பணம் ஒதுக்கப்பட்டு அதற்கான ஆய்வுகள் நடந்துக் கொண்டிருக்கின்றன என்பதை நான் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதேபோனறு நம்முடைய ஜனாப் ஷெர்புதீன் அவர்கள் பேசுகிறபோது ஒரு நோய் வருவதற்கு முன்னாலேயே தடுக்கப்பட வேண்டும். அதற்குண்டான மருந்துகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. அப்படி கொடுக்க வேண்டும் என்று அவர்கள் தெரிவித்தார்கள். புரட்சித் தலைவி அவர்களின் தேர்தல் அறிக்கையிலேயே இதைக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். நோய் வருவதற்கு முன்னாலே தடுப்பதுதான் மிக ஒரு நல்ல திட்டமாக இருக்க முடியும். ஆரம்பத்திலே சிரமமாக இருந்தாலும் அதிகமான செலவுகள் ஏற்பட்டாலும் கூட, எதிர்காலத்திலே பல வகையிலே அது மிகுந்த பயன் உடையதாக, செலவினங்களைக் குறைக்கக் கூடியதாக இருக்கும் என்பதை உணர்ந்து அதை எங்களுடைய தேர்தல் அறிக்கையிலேயே கூட அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். எனவே, நிச்சயமாக அதிலே ஒரு நல்ல முடிவை இந்த அரசாங்கம் மேற்கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன் அதேபோல எய்ட்ஸ் பற்றியெல்லாம் இங்கே குறிப்பிட்டார்கள். ஒவ்வொன்றிற்கும் நான் இங்கே பதில் சொல்லாவிட்டாலும் நேரத்தைக் கருதி— என்னால் முடிந்த அளவுக்கு இங்கே கருத்துக்களை சொல்ல விழைகின்றேன்.

மாசுக் கட்டுப்பாடு வாரியத்தை புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள்தான் 27—2—1982 ஆம் ஆண்டிலே இங்கே தமிழகத்திலே அதை துவக்கினார்கள். அது இன்றைக்கு மிக சிறப்பாக, இந்தியாவிலேயே நம்முடைய மாநிலத்திலே தான் சிறப்பாக இயங்குகிறது என்று சொல்லுகிற அளவுக்கு அது சிறப்பாக இன்று இயங்கிக் கொண்டிருக்கிறது. சென்னையிலே கூட மிக நவீனமாக ஒரு ஆய்வு கூடத்தை வைத்திருக்கிறார்கள். பக்கத்து மாநிலத்திலேயிருந்து எல்லாம் இங்கே வந்து அந்த ஆய்வுகளை பெற்றுச் செல்லுகிற வகையிலே அது அமைந்திருக்கிறது. இந்த ஆண்டு கூட இரண்டு இடங்களிலே ஆய்வகங்களை அமைப்பதற்கு புரட்சித் தலைவி அவர்கள் 20 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். அது ஓசூரிலும் தூத்துக்குடியிலேயும் அமைக்கப்படவிருக்கிறது. ஏதாவது ஒரு புகார் வந்தால்கூட 24 மணி நேரத்தில் அந்த புகாரை ஆய்வு செய்து என்ன என்று சுட்டிக்காட்டுகிற வழி வகைகளை இந்த மாசு கட்டுப்பாடு வாரியத்திலே செய்திருக்கிறார்கள். குறிப்பாக இங்கிலாந்து அரசாங்கமே அதைப் பாராட்டி 60 லட்சம்





ரூபாய் மதிப்புள்ள கருவிகளை இந்த ஆய்வுக் கூடத்திற்கு கொடுத்திருக்கிறார்கள். எனவே நான் இங்கே கேட்டுக் கொள்வதெல்லாம் பொது மக்கள் இதிலே மிகப் பெரிய அளவில் ஒத்துழைப்பைக் கொடுக்க வேண்டியதன் அவசியம் இருக்கிறது. குறிப்பாக தொழிற்சாலைகளை ஆரம்பிக்கக் கூடியவர்கள். இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்திய துணைக் கண்டத்திலேயே தொழில் துறையில் முதல் இடமாகத் தமிழகம் பெற வேண்டும் என்ற ஆர்வத்திலே பல்வேறு திட்டங்கள் தீட்டியிருக்கிறார்கள். மாசு கட்டுப்பாடு வாரியத்தைப் பொறுத்தவரையிலும் வருகிற கழிவு நீரை கட்டுப்படுத்துகிற அல்லது புகைகளை கட்டுப்படுத்துகிற ஒரு நிறுவனமாக அது இருககிறது.

சில பேர் நினைக்கிறார்கள் தொழில் துறையை நசுக்குவதற்காகவே அல்லது தொழில் துறை வளராமல் போவதற்கு கூட மாசு கட்டுப்பாடு வாரியம் காரணமாக போய்விடுகிறது என்று கூட பல பேர் வெளியிலே பேசுகிற நிலைமை ஏற்படுகிறது. ஒவ்வொரு துறையும் வருகிறபோது அதிலே அதற்குத் தகுந்தாற்போல பேசுகிற நிலைமை கூட ஏற்படுகிறது. இன்றைக்கு சொல்லுகிறபோது மாசு கட்டுப்பாடு வாரியம் பணியாற்றுகிறதா இல்லையா என்ற சந்தேகத்தைக் கூட நீங்கள் கிளப்பினீர்கள். நாளைய தினம் தொழில்துறை மானியம் வருகிறபோது, மாசு கட்டுப்பாடு வாரியம் இருப்பதனாலே கூட புது தொழிற்சாலைகள் ஆரம்பிக்க முடியவில்லை என்று கூட பல பேர் சொல்லக்கூடும். எனவே இதைப் பொறுத்தவரையில் என்ன நாங்கள் செய்திருக்கிறோம் என்று சொன்னால், எந்தக் காரணத்தைக் கொண்டும் தொழிற்சாலைகளை துவங்கக்கூடியவர்களுக்கு பயமுறுத்தக்கூடிய ஒரு நிறுவனமாக அது இருக்கக் கூடாது. அவர்களுக்கு உற்ற தோழனாக இருக்க வேண்டும். அவர்களை வழி நடத்தக்கூடியவர்களாக, அதை எப்படி செய்து முடிக்க வேண்டும் என்று அவர்களுக்கு சொல்லி கொடுக்கக்கூடிய ஒரு நிறுவனமாக அது அமைய வேண்டும் என்று சொல்லி அதற்குத் தகுந்த நடவடிக்கைகளையும் நாங்கள் எடுத்திருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக தொழில் துறையிலிருந்து வருகிற கழிவு நீரை சுத்தப்படுத்த வேண்டும் என்பதிலே இங்கே பல பேர் வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். பல இடங்களிலே நாம் நேரிடையாகக் கூடப் பார்த்திருக்கிறோம். குறிப்பாக சாயத் தொழிற்சாலை, தோல் தொழிற்சாலைகளில் ஈடுபட்டிருக்கக் கூடிய இடங்களில் அதிகமான எண்ணிக்கையில் இப்படிப்பட்ட பாதிப்பு ஏற்படுகிறது. அதைப் போக்குகின்ற வகையிலே மிகத் தீவிரமாக நடவடிக்கைகளை நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக 20 இடங்களிலே ஒரு புது சுத்தகரிப்பு நிலையத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது

என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதற்கு தமிழக அரசு ஒரு 25 சதவீதம் மானியத்தைக் கொடுக்கிறது. மத்திய அரசு ஒரு 25 சதவீதம் மானியம் கொடுக்கிறது. மீதம் இருக்கிற 50 சதவீதத்தை தொழிற்துறையைச் சார்ந்தவர்கள் தரவேண்டும் என்ற ஏற்பாட்டைச் செய்து, அந்த அடிப்படையிலே சில இடங்களில் வெற்றிகரமாக அது துவங்கப்படவிருக்கிறது. எனவே மிக விரைவிலேயே அந்தக் குறைபாடுகள் நீக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் முன் அனுமதியோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

பிற்பகல் 1.30.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : அடுத்து இந்த மாசு கட்டுப்பாடு வாரியத்தைப் பொறுத்தவரையில் நீங்கள் எதிர்பார்க்கிறபடி நல்ல முன்னேற்றங்களைச் செய்து கொடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். வெட்டுத் தீர்மானங்களை சில உறுப்பினர்கள் கொடுத்திருக்கிறார்கள். சென்னை மாநகரில் பக்கிங்காம், அடையாறு, கூவம், ஓட்டேரி நல்லா என்று ஓடுகிற இந்த நான்கு ஆறுகளிலும் இருக்கிற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இங்கிலாந்து நாட்டிலிருந்து வந்த நிபுணர் குழு ஒன்று ஆய்வு செய்து ஆய்வு அறிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள். புரட்சித் தலைவி அவர்கள் சென்னை மாநகரத்தின் வளர்ச்சிக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் நடவடிக்கைகளை எடுக்கிறபோது, நிச்சயமாக இந்த ஆய்வு அறிக்கையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு அந்த பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

கருவிலே உள்ள குழந்தைகள் ஆணா, பெண்ணா என்று கண்டறியப்படுகிற காரணத்தால்தான் அழிக்கும் பிரச்சினை ஏற்படுகிறதென்பதை நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் உணர்ந்த காரணத்தால் இப்போதே அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள் இந்த சோதனையைத் தடுப்பதற்கான நடவடிக்கையை அரசாங்கம் எடுக்கும் என்பதை அவர்கள் இங்கே தெரிவித்திருக்கிறார்கள் என்பதை நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து மிக அத்தியாவசியமான மருந்துகள்— உயிர் காக்கும் மருந்துகள் கிடைப்பதில் சில பிரச்சினைகள் இருப்பதாக உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே மருந்துகள் வாங்குவதற்காக ரூ. 30 ஆயிரம் ஒதுக்கிய இடத்தில் இப்போது ரூ. 40,000 ஆக புரட்சித் தலைவி அவர்கள்



கொடுத்திருக்கிறார்கள். இதுவும் போதாது என்று சில பேர் கூறியிருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு இருக்கிற அரசின் நிதி நிலையில் இந்த அளவுக்குத்தான் செய்ய முடியும் என்பதை நிச்சயமாக நீங்கள் ஒத்துக்கொண்டுதான் இந்த அளவுக்கு வலியுறுத்தியிருக்கிறீர்கள் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. காரணம் கட்டிடம் கட்ட வேண்டுமென்று சொல்லியிருக்கிறீர்கள். புதிய மருத்துவக் கருவிகள் வாங்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறீர்கள். ஒரு நல்ல கருவி வாங்க வேண்டுமானால் கோடிக்கணக்கில்தான் சொல்கிறார்களே தவிர சாதாரணமாக சொல்வதில்லை. கட்டிடம் கட்ட வேண்டும் என்று சொன்னால் பெரிய பெரிய சுற்றுச்சுவர் கட்ட வேண்டும். ஏன் அப்படிக் கட்டப்படுவதில்லை என்பது உங்களுக்குத் தெரியும். 10 ஏக்கரில் ஒரு கட்டிடம் அமைகிறது என்றால் சுற்றுச் சுவர் போடுவதை விட 3 லட்சம் ரூபாய்க்கு சுற்றுச் சுவர் கட்டுவதை விட கிராமங்களில் பல கட்டிடங்கள் கட்டலாமே என்று சில நேரங்களில் முடிவெடுக்கப்படுகிறது. ஆனால் அதிலும் பல தொல்லைகள் வருகின்றன. எனவே தனியார் சிலர் மூலம் சில இடங்களில் சுற்றுச் சுவர் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு சில இடங்களில் அப்படி கட்டிக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளையும் எடுத்திருக்கிறார்கள். நிதிப் பிரச்சினை மிகக் கடுமையாக இருக்கிறது என்பதை நீங்கள் புரிந்து கொண்டிருக்கிறீர்கள். நேற்றைக்கு நம்முடைய போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருந்த மானியக் கோரிக்கையில் பேசுகிறபோது மாண்புமிகு பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். இந்த கட்டண உயர்வு வேண்டுமா என்ற கருத்தைத் தெரிவித்து பேருந்துக் கட்டணம் உயர்த்தப்படகூடாது என்று சொன்னார்கள். அவரிடம் நேரிலே கேட்டேன். நீங்கள் இங்கே அமைச்சராக இருந்தபோது பல முறை நிதிப்பற்றாக்குறை ஏற்பட்டபோது கட்டணத்தை உயர்த்தி அதற்கு நியாயங்களையும் சொல்லியிருக்கிறீர்களே, இப்போது கட்டணத்தை உயர்த்தியது தவறு என்று சொல்கிறீர்களே, அரசாங்கத்தின் நிதி நிலைமை இப்படி கடுமையாக இருக்கிறபோது இங்கே இந்தப் பக்கத்திலே இருந்து போக்குவரத்துத்துறை அமைச்சராக இருந்தபோது உயர்த்தியிருக்கிறீர்கள். அதன் பின்னாலே மின்துறை அமைச்சராக இருந்து கட்டணத்தை உயர்த்தியிருக்கிறீர்கள். எனவே கட்டணத்தை அன்றைக்கு உயர்த்துகிறபோது நியாயம் சொல்லி இன்றைக்கு உயர்த்துவது நியாயம் இல்லை என்று சொல்வது எந்த வகையில் பொருத்தமாக இருக்கும் ? எனவே பிரச்சினை ஒரே மாதிரியாகத் தான் இருக்கிறது. அங்கே இருப்பதால் அதையெல்லாம் சொல்வதை விட்டு நியாயமாகச் சொன்னால் நன்றாக இருக்கும் என்றேன். வரவு அதிகம் வந்தால் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வசதியாக இருக்கும் என்ற காரணத்தால் நீங்கள் அதற்கு ஒத்துழைப்புத் தருவீர்கள் என்ற நம்பிக்கையோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

[திரு. சு. முத்துசாமி] [1991 செப்டம்பர் 16

சென்னையில் கிங் இன்ஸ்டிடியூட் இருக்கிறது. அங்கே உயிர்
காக்கும் மருந்துகளை இப்போது தயார் செய்கிறார்கள். நாய்க்
கடிக்கு மருந்து, பாம்புக்கடிக்கு மருந்து என்ற 13 விதமான மருந்து
களை தயார் செய்கிறார்கள். இதைச் சிறப்பாக செயல்படுத்து
வதற்கு இன்னமும் விரிவாக்க என்னென்ன வழிகளை முயற்சி
களை மேற்கொள்ள முடியுமோ அரசு நடவடிக்கை எடுக்கும் என்
பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து சித்த மருத்துவத்தைப் பற்றி அதிகமாகச் சொல்லி
யிருக்கிறீர்கள். இந்த அரசைப் பொறுத்தவரையில் சித்த மருத்து
வத்திற்கு மிக முக்கியத்துவம் கொடுக்கப்படும் என்பதில் மிக
அக்கறையோடு இருக்கிறோம். குறிப்பாக புரட்சித் தலைவர்
எம்.ஜி.ஆர். ஆட்சி இருக்கிறபோது, டாக்டர் செல்லக்குமார்
சொன்னதைப் போல, ஒரே நேரத்தில் 200 பேருக்கு வேலை
கொடுத்தார்கள். காரணம் பல ஆண்டுகளாக தேக்கி வைக்கப்பட்டு
இருந்தது. ஆகவே ஒரே நேரத்தில் 200 பேருக்கு வேலை கொடுத்
தார்கள். படிப்படியாக இந்த அரசாங்கம் நிச்சயமாக செய்யும்
என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். எல்லா
வற்றையும் உடனே செய்ய முடியாது. நிதிப் பிரச்சினைத்தான்
எல்லா இடத்திலும் இருக்கிறது. செய்ய வேண்டுமென்ற ஆர்வ
மிருந்தாலும் நிதிப் பிரச்சினை காரணமாக உடனடியாகச் செய்ய
முடியாது. உடனடியாக வேலை கொடுக்க படிப்படியாக அதைச்
செய்வதற்கு நாங்கள் நடவடிக்கை மேற்கொள்வோம் என்பதைத்
தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1-35

400 பேர்கள் படித்துவிட்டு வேலை இல்லாமல் இருக்கிறார்
கள் என்ற இது போன்ற கோரிக்கையை வைத்து பாளையங்
கோட்டை மருத்துவ கல்லூரியிலே கூட ஒரு போராட்டத்தை
நடத்தினார்கள். அப்படிப்பட்ட போராட்டங்களை நாம்
நியாயப்படுத்திவிடக்கூடாது. அவர்களுக்கு இருக்கின்ற பிரச்
சினைகளை அரசாங்கத்திலே சொல்லி, அரசாங்கத்திற்கு இருக்
கின்ற பிரச்சினைகளை அவர்களும் பேசி ஒரு முடிவுக்கு வர
வேண்டுமே ஒழிய அப்படிப்பட்ட போராட்டம் நடத்தி 400 பேர்
கள் படித்துவிட்டு இருக்கிறோம். 400 பேரையும் வேலைக்கு
எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னால் அதை நிச்சய
யமாக ஏற்றுக்கொள்வது எந்தக்காலத்திலும் நல்லது அல்ல என்று
நான் கருதுகிறேன். என்ன தேவையோ, என்ன அவசியமோ அதற்
கேற்பத்தான் செயல்படுத்த முடியுமே ஒழிய படித்தவர்கள்
அத்தனை பேரையுமே எடுப்பது என்று சொன்னால் யாருமே
படிப்பதற்கு வர மாட்டார்கள். காரணம் வேலைக்காக படிக்க
வைப்பது அல்ல. அறிவை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்
காகத்தான் படிக்க வைக்கிறோம். எனவே வேலை கிடைக்காத
நேரத்திலே வெளியிலே தனிப்பட்ட முறையிலே அவர்கள் எப்படி



1991 செப்டம்பர் 16] [திரு. சு. முத்துசாமி]

யெல்லாம் தங்களுடைய அறிவைப் பயன்படுத்தி தாங்கள் மேலே
வரமுடியுமோ அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்
என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்பு
கிறேன். நாளைய தினம் கூட அவர்கள் என்னிடத்திலே பேச
வருகிறார்கள். எனவே, நிலைமைகளை விளக்கி, என்ன இந்த
அரசாங்கத்தால் செய்ய முடியுமோ அதைச் செய்வதற்கு நாங்கள்
தயாராக இருக்கிறோம். அதை நீங்களும் குறிப்பிட்டிருக்கிறீர்கள்.
எனவே சித்தாவிலே இந்த அரசாங்கம் தனி கவனம் செலுத்தும்
என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போன்று மருந்து கட்டுப்பாட்டை பொறுத்தவரை
குறிப்பாக மருந்துகள் தவறாகப் பயன்படுத்துப்படுகிறது, போலி
டாக்டர்கள் பயன்படுத்திவிடுகிறார்கள். அதே போன்று பல
இடங்களிலே மருந்துகளை எடுத்து தவறாக உபயோகப்படுத்து
கிறார்கள் என்றும், பெத்தடின் போன்ற மருந்துகளை அவர்கள்
எடுத்து தவறாகப் பயன்படுத்துகிறார்கள் என்றெல்லாம் சில
பேர் இங்கே சுட்டி காட்டியிருக்கிறார்கள். இந்த மருந்து கட்டுப்
பாட்டு துறையைப் பொறுத்தவரை இப்பொழுது மிகத் தீவிர
மாகச் செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது. அதிலே கடுமையான
நடவடிக்கை எடுப்பதற்கு அவர்கள் முயற்சிகளை மேற்கொண்டு
இருக்கிறார்கள். நிச்சயமாக இது கட்டுப்படுத்தப்படும் என்பதைத்
தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தவறாகப் பயன்படுத்தக்
கூடியவர்கள் யாராக இருக்கிறார்கள் என்பது முக்கியம் அல்ல.
அவர்கள் போலி டாக்டர்களா அல்லது உண்மையான டாக்டர்
களா என்பது பிரச்சினை அல்ல. எனவே மருந்தை யார் தவறாகப்
பயன்படுத்தினாலும் மருந்துக்குப் பக்கத்திலே இருப்பவர்களுக்கு
கொஞ்சம் வாய்ப்பு அதிகமாக போய்விடுகிற காரணத்தால் அதைத்
தவறாகப் பயன்படுத்துகிற சூழ்நிலை கூட ஏற்பட்டு விடுகிறது.
எனவே அதைத் தடுப்பதற்கு இந்த அரசாங்கம் நிச்சயமாக கடுமை
யான, முறையான நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதை
இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மருத்துவர்களைப் பொறுத்தவரை நம்முடைய தமிழகத்திலே
இன்றைக்குத் தேவையான அளவிற்கு என்று நான் சொல்லுவதை
விட தமிழகத்திலே தான் அதிகமான மருத்துவர்கள் இப்பொழுது
இருந்து கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக ஒரு புள்ளிவிவரத்தை
சொல்வோமேயானால், அனைந்திந்திய அளவிலே இன்றைக்கு
2066 பேர்களுக்கு ஒரு மருத்துவர் இருக்கிறார். ஆனால் தமிழகத்
திலே 1,002 பேர்களுக்கு ஒரு மருத்துவர் இருக்கிறார். அதே
போன்று ஆந்திர மாநிலத்திலே 3,130 பேர்களுக்கு ஒரு மருத்துவர்
இருக்கிறார். கர்நாடக மாநிலத்திலே 1,389 பேர்களுக்கு ஒரு
மருத்துவர், கேரளாவிலே 1,635 பேர்களுக்கு ஒரு மருத்துவர்
என்ற வகையிலே இன்றைக்கு மருத்துவர்கள் இருக்கிறார்கள்.
எனவே, தமிழகத்தை பொறுத்தவரை நமக்கு ஒரு நல்ல சிறப்

பான சூழ்நிலை இருக்கிறது. முறையாக இதையெல்லாம் பயன்
படுத்திக்கொண்டாலே பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்பதை
நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சில கட்டிடங்கள் பிரச்சினைகளை எல்லாம் நீங்கள் இங்கே
சொல்லியிருக்கிறீர்கள். இங்கே 2, 3 திட்டங்களை இந்த அர
சாங்கம் தொடர்ச்சியாக செயல்படுத்திக் கொண்டிருக்கிறது.
அதிலே ஒன்று நம்முடைய அரசாங்கத் துறை சார்பாக ஒதுக்கப்
படுகின்ற பணம் மற்றும் டானிடா போன்ற சில திட்டங்கள்
மூலமாக நீங்கள் கொடுத்திருக்கின்ற சில கோரிக்கைகளை நிறை
வேற்றுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே
நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே 'யானைக்கால் நோயைப் பற்றி நண்பர் குமாரதாஸ்
அவர்கள் பேச வேண்டுமென்று நான் கருதினேன். நேரம் இல்லாத
காரணத்தினால் பேசவில்லை என்று என்னிடத்திலே நேரிலே
அவர்கள் தெரிவித்தார்கள். அதே போன்று மூளைக்காய்ச்சல்
காலரா இது போன்ற நோய்களைத் தடுப்பதற்கு இப்பொழுது
வேகமாக நடவடிக்கையை இந்தத் துறையும், சம்பந்தப்பட்ட
துறைகளும் சேர்ந்து எடுத்துக்கொண்டிருக்கின்றன என்பதைத்
தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த நோய்கள் குறிப்பாக
கொசுக்கள் மூலமாக அதிகமாக பரவுகின்றது. எனவே அதைத்
தடுப்பதற்கு மிகக் கடுமையான நடவடிக்கைகளை நாம் மேற்
கொள்ள வேண்டிய அவசியம் வந்திருக்கிறது. ஆனால் இதற்கு
நல்ல ஒத்துழைப்பை பொது மக்கள் தர வேண்டும் என்பதை இந்த
மன்றத்தினுடைய வாயிலாக நான் இங்கே தெரிவித்துக்கொள்ள
விரும்புகிறேன். அதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை
பேர்களும் நீங்கள் வெளியிலே போகின்றபோது, பொதுக் கூட்டங்
களிலே பேசுகின்றபோது அரசியல் நிகழ்ச்சிகளை மட்டும் பேசி
விட்டு, அரசாங்கம் இந்த ஊருக்கு பணம் ஒதுக்கவில்லை, அதிக
பெட் கேட்டேன், அரசாங்கம் கொடுக்கவில்லை. சுற்றுப்புறச்
சுவர் கட்டவில்லை என்பதையெல்லாம் சொல்லிவிட்டு, இப்படிப்
பட்ட பிரச்சினைகளை நீங்கள் விட்டுவிட்டு வந்துவிட்டால்
என்றைக்குமே நாம் மக்களுக்கு நிலைமைகளைப் புரிய வைக்க
முடியாது. எனவே இந்தப் பிரச்சினைகள் வருவதற்கு என்ன
அடிப்படைக் காரணம்? கோடிக்கணக்கான ரூபாய்களை நாம்
செலவழிக்கின்றோம். அந்த ரூபாய்கள் செலவழிக்கப்படுகின்ற
போது அது முறையாக பயன்படுத்திக்கொள்ளப்படுகிறதா அந்த
மக்களால் என்று சொன்னால் நிச்சயமாக இல்லை. எவ்வளவு
விளம்பரங்கள் வருகின்றன. எனவே அந்த விளம்பரங்கள் எல்லாம்
வீணாகப் போகின்ற வகையிலே இருப்பதை நாம் பார்க்கின்ற
போது வேதனையாக இருக்கின்ற சூழ்நிலை ஏற்படுகின்றது. அந்த
கொசுக்களை ஒழிக்க வேண்டுமென்று சொன்னால், இப்போது



காலரா வருகிறது என்று சொன்னால், நாம் சொல்கிறோம்,
உடனடியாக மருத்துவமனைக்கு தெரிவியுங்கள் என்று சொல்
கிறோம், தெரிவிப்பது இல்லை.

பிற்பகல் 1-40

அதற்குப் பின்னால் இன்னொருவர் பயன்படுத்திய பொருட்
களை நீங்கள் பயன்படுத்த வேண்டாம் என்று சொல்கிறார்கள்.
அதை 'அவர்கள் கேட்டு அதன்படி செய்வது இல்லை. எனவே
பிரச்சினைகள் அவர்களால் அதிகப்படுத்தபடுகின்றன.
நீங்கள் வைத்து இருக்கின்ற நீர்த் தொட்டிகளை சுத்தமாக
வைத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னால் அவர்கள் சுத்தமாக
வைத்துக் கொள்ளுவது இல்லை. இதை எல்லாம் நான் எதற்
காகச் சொல்கிறேன் என்று சொன்னால் இன்றைக்கு யானைக்
கால் நோயை தடுப்பதற்கு மட்டும் ஏறத்தாழ 43 நகரங்களில்
மையங்கள் வைத்து நாம் அதை கட்டுப்படுத்த நடவடிக்கை
எடுத்து வருகிறோம். 21 தடுப்பு பிரிவுகள் செயல்படுகிறது.
41 இரவு சிகிச்சைப் பிரிவுகள் செயல்படுகின்றன. எனவே,
இவ்வளவும் செயல்படுகிறபோது மக்களிடத்திலே அதற்கு நல்ல
ஒத்துழைப்பு இருந்தால் தான் அதை நம்மால் செய்து முடிக்க
முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காலரா அதிகமாக வருகிறது என்று உணர்ந்த உடனே
ஏறத்தாழ 92,038 நீர்த் தேக்கங்களில் குளோரின் தூவப்பட்டு
தண்ணீர் பாதுகாக்கப்படுகிறது. அதேபோல் ஏறத்தாழ
12,49,522 பேருக்கு காலரா தடுப்பு ஊசி போடப்பட்டு இருக்
கிறது. இங்கே காலரா வருகிறது என்று தெரிந்த உடன் பக்
கத்துக் கிராமங்களிலே இருக்கின்ற குடிசைப்பகுதிகளிலே
போய் காலரா ஊசி போடவேண்டும் என்று சொல்லி அவர்கள்
போய் மருந்தை வைத்துக்கொண்டு இருந்தாலும் மக்கள்
வருவது கிடையாது. போலீசை வைத்து பிடித்துக் கொண்டு
வந்து தான் ஊசி போடவேண்டியிருக்கிறது. ஆனால் ஏதாவது
தப்பித் தவறி நடவடிக்கை எடுக்காமல் விட்டால் சட்டமன்ற
உறுப்பினர்கள் இங்கே பேசுகிறீர்கள்; அதற்காக கூட தீவிர
மாக வாதாடுகிறீர்கள். எனவே இந்த நிலைகளை எல்லாம்
மக்கள் இடத்திலே சொல்ல வேண்டும். சுத்தமாக வைத்துக்
கொள்ளவேண்டும் என்பதிலே மிக அக்கறையோடு நாம்
செயல்பட்டு ஆக வேண்டும். குறிப்பாக மருத்துவமனைகளில்
சுத்தமாக இல்லை என்று இங்கே சொன்னீர்கள். எனவே
அதுவும் அங்கே தான் வந்து நிற்கிறது. எனவே நான் சொன்
னேன். மாண்புமிகு உறுப்பினர் ஒரே ஒருவர் தான் பொது
மக்கள் எந்த அளவுக்கு இதை சுத்தமாக வைத்துக் கொள்தவற்கு
ஒத்துழைப்புத் தரவேண்டும் என்பதைப் பற்றி ஒரே ஒருவர் தான்
சொன்னார். எனவே நாமே கூட இங்கே கூட சொல்லவில்லை
என்று சொன்னால் நிச்சயமாக மக்களுக்குப் போய் சேராது.

[திரு. சு. முத்துசாமி] [1991 செப்டம்பர் 16

அவர்களுக்குத் தெரியாமல்தான் செய்கிறார்கள். எனவே, நம்
முடைய மருத்துவமனைகளிலே பல கோடி ரூபாய் செலவழிக்
கப்படுகிறது சுத்தம் செய்வதற்கு மட்டும். ஆனால் உள்ளே
போகக்கூடியவர்கள் (விசிட்டர்ஸ்) அங்கே இருக்கின்ற
நோயாளிகள் அசுத்தம் செய்தால் கூட நாம் அதை தாங்கிக்
கொண்டு நாம் சுத்தம் செய்து விடலாம். ஆனால் நன்கு இருக்
கக்கூடியவர்கள், நோயாளிகளைப் பார்க்கக்கூடிய விசிட்
டர்ஸ் தான் அதிகமான அளவிலே அங்கே அசுத்தம் செய்யக்
கூடிய நிலையை உருவாக்குகிறார்கள். எங்கே கழிப்பிடம்
இருக்கிறதோ அதைப்பற்றி எல்லாம் அவர்கள் கவலைப்படு
வதில்லை. எந்த இடத்தில் வேண்டுமானாலும் என்ன வேண்டு
மானாலும் செய்கிற அளவுக்கு அங்கே நிலைமைகள் மோசமாகப்
போய்விடுகிறது. எனவே இதையெல்லாம் எப்படி தடுக்க
முடியும். வருகிற ஒவ்வொரு விசிட்டருக்கும் 2 பேரை பக்கத்
திலே போட்டால்—ஒரு ஆளை—போட்டால் கூட அவர் போய்
விடுவார்—ஆகவே 2 பேரைப் போட்டால்தான் பாதுகாப்பாக
அவரை வெளியே கொண்டு வந்து விட முடியும் போல் இருக்
கிறது. இப்படிப்பட்ட நிலைமை இருப்பதால் தான் சுத்தமாக
வைப்பதில் பல்வேறு பிரச்சினைகள் உருவாகின்றன.

வசதிகள் வேண்டுமென்று கேட்கிறீர்கள். குடிப்பதற்குத்
தண்ணீர் வைக்கிறார்கள். நானே பார்க்கிறேன். மருத்துவ
மனைகளிலே குடிப்பதற்குத் தண்ணீர் வைத்து இருக்கிறார்கள்.
டம்ளர் வைத்தால் அந்த டம்ளர் காணாமல் போய்விடுகிறது.
அதற்கு ஒரு செயினைப் போட்டு கட்டி வைக்கிறார்கள்.
செயினோடு அது காணாமல் போய்விடுகிறது. எனவே இவ்
வளவு கோடி ரூபாய் போட்டு நாம் எப்படிச் செய்தாலும் கூட
பொதுமக்களுடைய ஒத்துழைப்பு இல்லாத வரை நிச்சயமாக
அது வெற்றி பெறாது என்ற காரணத்தால் அரசாங்கம் ஒதுக்கு
கின்ற இந்தப் பணத்தை வைத்துக் கொண்டு அரசாங்கம்
வைத்து இருக்கின்ற இன்றைக்கு இருக்கின்ற நபர்களை வைத்துக்
கொண்டு மக்களுடைய ஒத்துழைப்பு இன்றைக்கு இருப்பதை
விட ஒரு 25 சதவீதம் கூடுதலாகக் கிடைத்தால் மிகப்பெரிய
வெற்றியை இந்த துறையிலே நாம் பெற்று விட முடியும்
என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்பு
கிறேன். நாம் சொல்லுவதை விட ஏன் சுத்தமாக இல்லாமல்
போகிறது, ஏன் அசுத்தம் செய்யப்படுகிறது என்பதை
ஒரு கணம் நாம் இங்கே போய் பார்த்தால் நிலைமைகளை
நம்மால் புரிந்துக்கொள்ள முடியும். சுத்தம் செய்யக் கூடிய
ஒவ்வொரு தொழிலாளியும் எவ்வளவு சிரமப்படுகிறார் என்பதை
நான் கண்கூடாகப் போய்ப் பார்த்தேன். எனவே தான்
அதை எல்லாம் பார்த்த பின்னால் தான் அங்கே இருக்கின்ற
நிலைமைகளை எல்லாம் உங்களுக்கு நான் இங்கே தெளிவு
படுத்த விரும்புகிறேன்.



1991 செப்டம்பர் 16] [திரு. சு. முத்துசாமி]

அடுத்து தொழு நோயைப் பற்றி சொல்லியிருக்கிறீர்கள்.
தொழு நோயைப் பொறுத்தவரையில் இது நிச்சயமாக
குணமாகக்கூடிய ஒரு நோய் என்பதிலே யாருக்கும் எந்த
சந்தேகமும் இல்லாத அளவுக்கு இன்றைக்கு நல்ல விளம்பரம்
செய்யப்பட்டிருக்கிறது. தேவையான மருந்துகள் இப்போது
கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. அந்த குணமடைகின்ற
நிலைமைகளை அவர்கள் நிச்சயமாக எட்டிப்பிடித்துக் கொண்
டிருக்கிறார்கள். எனவே பல இடங்களிலே நமக்கு ஏற்படுகின்ற
சங்கடங்களே இந்தத் தொழு நோய் யாருக்காவது இருப்பது
தெரிந்து விட்டால் அவர்கள் வெளியே சொல்லக் கூடாது,
நமக்கு கேவலம் என்று கருதி அவர்கள் சொல்லாமல் வளர்த்துக்
கொள்கிறார்கள். சிறிய அளவிலே வருகிறபோது அவர்கள்
மருத்துவர்களை அணுகிவிட்டால் அந்தப் பிரச்சினை அதோடு
தீர்ந்துவிடும். நிச்சயமாக அது வளர்வதற்கான வாய்ப்பு
இருக்காது. எனவே அப்படிப்பட்ட ஒரு பிரச்சாரத்தை நாம் பல
வகைகளில் டி. வி. மூலம், ரேடியோ மூலம், பத்திரிகைகள்
வாயிலாகச் சொல்கிறோம். நோட்டீஸ் அடித்துக் கொடுக்
கிறோம். இருந்தாலும் கூட அதிலே வெற்றி என்பது மிகவும்
குறைவாக இருக்கிறது. அந்த நிலையில் பார்க்கும்போது
1983 ஆம் ஆண்டில் ஏறத்தாழ 5,80,381 பேருக்கு அந்த
நோய் இருப்பதாக கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால்
இன்றைக்கு 1,58,103 ஆக அது குறைந்து இருக்கிறது. எனவே
ஏறத்தாழ 7, 8 ஆண்டுக் காலத்திலே புரட்சித் தலைவர்
ஆட்சிக் காலத்தில் அதற்குப் பின்னால் அது வேகமாக குறைக்
கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் ஓரளவுக்கு இந்தத் துறை
நல்லபடியாக செய்திருக்கிறது என்று நாம் சொல்லலாம். எனவே
தொடர்ந்து அவர்கள் ஒத்துழைத்தால் இதை நிச்சயமாக, முழு
மையாக நாம் போக்கிவிட முடியும் என்று நான் கருதுகிறேன்.

பிற்பகல் 1—45

அடுத்து இந்த கண் சிகிச்சைப் பற்றி ஒருவருமே இங்கே
சொல்லாமல் விட்டது எனக்கே கூட கொஞ்சம் வேதனையாக
இருந்தது. கண் சிகிச்சை முகாம் அவசியமான ஒன்றாக
இன்றைக்கு இந்த அரசால் கருதப்படுகிறது. வெளியிலே பல
பேருக்கு இன்றைக்கு அந்த உதவியை அரசாங்கத்தின் மூலமாக
வும் தனியார் பலபேரும் செய்து கொண்டு இருக்கிறார்கள்,
எனவே கண் சிகிச்சை முகாம்களை நடத்துவதன் மூலமாகவும்,
அரசாங்கத்திலே அதற்கான தனி அக்கறை எடுத்துக் கொள்வதன்
மூலமாகவும் நிச்சயமாக பலபேருக்கு நல்ல எதிர்காலத்தை உரு
வாக்க முடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. நான்
இதை இங்கே குறிப்பிட்டுச் சொல்வதற்குக் காரணம், கண்
வங்கிகள் தமிழகத்திலே இப்போது அரசாங்கத்தினுடைய
சார்பாகவும், தனியார் துறையிலேயும் இருக்கின்றன. எனவே
உங்களையெல்லாம் நான் கேட்டுக்கொள்வது, இந்தக் கண்

[திரு. சு. முத்துசாமி] [1991 செப்டம்பர் 16

தானம் என்பதை ஒரு பெரிய பிரச்சாரமாக செய்யவேண்டிய
பொறுப்பை நம்மைப் போன்றவர்கள் மேற்கொள்ளவேண்டு
மென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். காரணம்,
ஒரு மனிதன் இறந்த பின்னாலே அவனுடைய கண் இன்னொரு
வனுக்குப் பயன்படும் என்று சொன்னால் அதை நாம் பெற்றுத்
தருவதற்கு முழு முயற்சியினை மேற்கொள்ளவேண்டிய கட
மையை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்
திலே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக,
1946-லே டாக்டர் முத்தையா என்ற ஒருவர்தான்
இன்னொருவருடைய கண்ணை மற்றொருவருக்கு
எடுத்துப் பொறுத்த முடியும் என்பதிலே வெற்றி கண்டிருக்
கிறார். அதுவும் தமிழகத்திலே அவர் செய்து முடித்
திருக்கிறார். அதற்குப்பின்னாலே 1950 இலே கண் வங்கி
துவக்கப்பட்டிருக்கிறது. 28 கண்கள் அன்றைக்கு தானமாகக்
கிடைத்திருக்கின்றன. அதற்குப்பின்னாலே ஏறத்தாழ இப்போது
பார்த்தால் 330 கண்கள் தானமாக இங்கே, சென்னை மாநகரத்
திலே கிடைத்திருப்பதாகக் கணக்கு சொல்கிறார்கள். ஆனால்
இன்றைக்கு கண் மாற்றிக் கொடுக்க வேண்டுமென்று வேண்டு
கோள் விட்டிருப்பவர்கள் ஏறத்தாழ 3022 பேர் இருக்கிறார்கள்.
எனவே, இதை நாடு முழுவதும் பார்த்தால் மிக அதிக
அளவிலே இருக்கிறது. எனவே, உங்களையெல்லாம் நான் கேட்
டுக் கொள்வது, இதற்கு அரசாங்கத்திற்கு உதவி செய்கிற அள
விலே நீங்கள் ஆயிரக்கணக்கான மக்களைச் சந்தித்து ஒவ்வொரு
நாளும் பிரச்சாரக் கூட்டங்களிலேயும், மற்ற கூட்டங்களிலேயும்
பேசக்கூடியவர்கள்; எனவே அதற்கு நீங்கள் ஒத்துழைப்பைத்
தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இந்
தக் கண் வங்கிகளினுடைய தொலைபேசி நம்பர்களைக்கூட உங்
களுக்கு வேண்டுமானால் நான் தருகிறேன். 869181, 869382.
இதை எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால், போகிற இடத்
திலே யாராவது கேட்டால் நீங்கள் அனுப்பி வைக்கலாமே
என்பதற்காக. இவ்வளவு பெரிய கூட்டத்தைக் கூட்டி, வெளி
யிலே போய் சொல்வதற்கு வாய்ப்பு இருக்காது. எனவே, உங்
களையெல்லாம் ஒட்டு மொத்தமாக இங்கே பார்க்கும்போது
சொல்கிறேன். நீங்கள் இதைச் சிறப்பாகச் செய்து கொடுக்க
முடியும் என்பதை உணர்ந்துதான் நான் இதைச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள்
அனைவரும் கண்தானம் வழங்க வேண்டும் என்று கேட்ட
மாண்புமிகு அமைச்சர் அவர்களே தன்னுடைய கண்களை தானம்
வழங்கியதாக, செய்தி வாயிலாக அறிந்தேன். அதற்காக அவை
உறுப்பினர்கள் சார்பில் அவருக்கு என் பாராட்டுக்களைத் தெரி
வித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).



1991 செப்டம்பர் 16]

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி** . மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, நான் மருத்துவமனையிலே நடைபெற்ற
ஒரு நிகழ்ச்சிக்காகப் போயிருந்தேன். அதுவரை நானும் யோசிக்க
வில்லை. நான் அங்கே போயிருந்தபோது அங்கே இருக்கின்ற
சாதாரண, அடிமட்டத்திலே பணியாற்றுக்கின்ற துப்புறவுத்
தொழிலாளிகள் அங்கே ஒரு நிகழ்ச்சியை வைத்திருந்தார்கள்.
அதிலே 350-க்கும் மேற்பட்ட அந்தத் தொழிலாளிகள் கண்
தானம் செய்திருந்ததைப் பார்த்த பின்னாலேதான் இவ்வளவு
காலமாக நாம் விட்டுவிட்டோமே என்ற உணர்விலேதான் நான்
கொடுத்தேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இப்
போதுகூட அவசரப்படத் தேவையில்லை. நாம் மெதுவாகக்கூடச்
செய்யலாம். ஆனால் மற்றவர்களுக்குச் சொல்வதை கொஞ்சம்
வேகமாக நாம் சொல்லிக்கொண்டு இருக்கலாமே என்பதைத்
தான் நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். பல
பேர் என்ன நினைக்கிறார்கள், கண்தானம் என்றால் முழுமை
யாகக் கண்ணை எடுத்துவிட்டால் கோரமாக இருக்கும் என்று
கருதுகிறார்கள். மருத்துவர்களிடத்திலே நான் இதைப்பற்றிக்
கேட்டபோது, அப்படியெல்லாம் இல்லை, அதை எடுத்த பின்
னாலே சுத்தமாகப் பிரச்சினை இல்லாத அளவிற்கு, பார்ப்
பதற்கு ஒன்றும் சிரமம் இல்லாத அளவிற்கு அந்தக் கண்ணை
அழகாக நாங்கள் தைத்துக் கொடுத்து விடுகிறோம் என்று சொன்
னார்கள். எடுப்பதற்குக்கூட 10-லேயிருந்து 15 நிமிடத்திற்கு
மேலே ஆகாது என்று சொல்கிறார்கள். இறந்த 6 மணி நேரத்
திற்குள்ளே எடுக்க வேண்டியிருக்கிறது. எனவே, இதையெல்
லாம் வெளியிலே, எனக்காக அல்ல, மக்களுக்காக நீங்கள்
கொஞ்சம் பேச வேண்டும், எங்களுடைய சார்பாக என்று இந்த
நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, குடும்பநலத் திட்டம். இது, குடும்பக் கட்டுப்பாட்டு
திட்டம், குடும்ப நலத் திட்டம் என்று சொல்லப்படுகிறது. இந்தத்
திட்டத்தைப் பொறுத்தவரை, குடும்பத்தைக் கட்டுப்படுத்து
வது என்பதல்ல. குடும்பத்திற்கு திட்டமிட்டு கொடுப்பது. அது
தான் நம்முடைய பணி. எனவே, ஒரு குடும்பத்தை எப்படி ஒரு
திட்டமாக வைத்துக்கொண்டால் சிறப்பாக அந்தக் குடும்பம்
வளர முடியும் என்பதை எடுத்துக் காட்டுவதற்காகவே இந்தத்
துறை செயல்பட வேண்டுமென்பது இந்த அரசாங்கத்தினுடைய
நோக்கமாகும். எனவே, அந்த வகையிலே, இந்தத் துறைக்கு,
குறிப்பாக இந்தப் பணிக்கு இந்த அரசு தனி முக்கியத்துவம்
கொடுப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறது என்
பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். புரட்சித்
தலைவருடைய அரசு காலத்திலே எப்போதுமே முதலிடத்திலே
குடும்பக் கட்டுப்பாட்டிலே நம்முடைய தமிழகம் இருந்து கொண்
டிருந்தது. அதற்குப்பின்னாலே கேரளாவுக்கு முதலிடம் போய்
நமக்கு இரண்டாவது இடம் வந்து விட்டது. எனவே, அந்த முத
லிடத்தை எட்டிப் பிடிப்பதற்கு இந்த அரசாங்கம் நிச்சயமாக

[திரு. சு. முத்துசாமி] [1991 செப்டம்பர் 16

முயற்சிகளை மேற்கொள்ளும்; முதலிடத்தை எட்டிப்பிடிக்கும்
என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்பு
கிறேன். குறிப்பாக, இங்கே சொல்கிறபொழுது, இந்தக் குடும்
பக் கட்டுப்பாடு என்பது பெண்கள் கல்வி, அவர்களுக்கு என்
னென்ன நன்மைகள், அதனால் என்ன பயன் பெறுகிறார்கள் என்
பதையெல்லாம் சொல்லிக் கொடுப்பதன் மூலமாக அவர்களாகவே
இதை ஏற்றுக்கொள்கிற அளவிற்கு இந்தத் திட்டத்தை நாங்கள்
சீர்படுத்தி, செயல்படுத்த இருக்கிறோம் என்பதையும் நான் தெரி
வித்துக்கொள்ள விரும்புகிறேன். இங்கே நம்முடைய சட்டமன்ற
உறுப்பினர் டாக்டர் சரோஜா அவர்கள் பேசுகிறபொழுதும், நம்
முடைய சட்டமன்ற உறுப்பினர், திரு சி. சுவாமிநாதன் அவர்கள்
பேசுகிற பொழுதும், இரண்டு குழந்தைகளேகூட வேண்டாம்;
ஒன்றே போதும் என்ற நிலையை உருவாக்க முடியுமா என்று அவர்
கள் கேட்டார்கள். நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வதெல்
லாம், இந்த இரண்டு என்று அரசாங்கம் சொல்வதற்கு ஒத்து
வந்துவிட்டாலே பல பிரச்சினைகள் தீர்ந்துவிடும்.

பிற்பகல் 1–50

அதற்கேகூட ஒத்துழைப்பு இல்லையே என்பதுதான் இருக்கின்ற
பிரச்சினை. எனக்குத் தெரிந்து, போகிற கூட்டங்களிலே
யெல்லாம் குடும்பக் கட்டுப்பாட்டைப் பற்றித் தெளிவாக,
பேசிவிட்டு வருகிற ஒரேயொரு அரசியல்வாதி என்று பார்த்
தால், நம்முடைய நிதியமைச்சராக மட்டும்தான் இருக்க முடி
யும். காரணம், நிதித் துறையை ஏற்றுக்கொண்டிருக்கின்ற
காரணத்தால் அவர்கள் சொல்கிறார்களா என்று பார்த்தால் அப்
படியும் நாம் எடுத்துக் கொள்ள முடியாது. அவர் எதிர்க்கட்சி
யிலே இருக்கின்ற பொழுதும் இதை விட மாட்டார், போகிற
பொழுதெல்லாம் சொல்லுவார்கள். அவர் ஒன்றைச் சொல்வார்.
எனக்கு மிகப் பிடித்த கருத்து. ''ஒவ்வொரு இடத்திலேயும்,
பத்திரிகையிலேயும், சுவற்றிலேயும், எங்கே பார்த்தாலும், 'சிறிய
குடும்பமே சிரான வாழ்வு'; அதேபோன்று 'ஒன்றிற்கு மேல் இப்
போது வேண்டாம்; இரண்டிற்கு மேல் எப்போதும் வேண்டாம்'
என்று இப்படியெல்லாம் எழுதி எழுதி வைக்கிறார்கள், நானும்
பார்த்துக்கொண்டே வருகிறேன், பெயின்ட்தான் வேஸ்டாகப்
போயிற்றே ஒழிய, ஒரு காரியமும் நடந்தமாதிரி தெரியவில்லை''
என்று அவர் போகிற இடங்களிலெல்லாம் சொல்லி விட்டு வரு
வார்கள். அதைப்போல, நாம் எல்லோருமே, இந்தக் குடும்பக்
கட்டுப்பாட்டுப் பிரச்சாரத்தைக் கொஞ்சம் அதிகமாகச் சொல்லி,
இருக்கின்ற நிலைமைகளைச் சொல்லி....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. எஸ். பீட்டர்
அல்போன்ஸ்.



1991 செப்டம்பர் 16]

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் :** பேரவைத் தலைவரவர்
களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கண்தானம் வழங்க
வேண்டுமென்று சட்டமன்ற உறுப்பினர்களைக் கேட்டுக்
கொண்டார்கள். அதைப்போல, குடும்பக் கட்டுப்பாட்டை
யும் பிரச்சாரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்
கொண்டார்கள். முதலிலே நாம் எல்லோரும் ஒரு
முன்மாதிரியாக இருந்து, ஒரு மாடல் செய்தால்தான் ஜனங்கள்
நம்மை ஃபாலோ செய்வார்கள். ஆகவே, இனிமேல் இப்படி
யெல்லாம் செய்து கொண்டவர்களுக்குத்தான் தேர்தலிலே
டிக்கெட் கொடுக்கப்படும் என்கிற ஓர் ஆலோசனையைச்
சொல்வார்கள் என்று சொன்னால், எல்லோருமே அந்த நல
வாழ்வுத் திட்டங்களைப் பின்பற்றுவார்கள். மக்களுக்கும்
முன்மாதிரியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.
(குறுக்கீடு) நான் அளவோடு இரண்டுதான் வைத்திருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத்
தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் நல்ல
வேளையாக '' இனிமேல் '' என்று சொன்னார்கள். இப்
பொழுது இருப்பவர்களுக்கு அதிகமாக இருந்தால் பதவி
போய்விடும் என்ற நிலையில் நல்லவேளையாக அவர்கள் சொல்ல
வில்லை என்பதிலே சந்தோஷம். எனவே, இது இப்படி
யெல்லாம் பிரச்சாரம் ஆக வேண்டும். நல்லபடியாகவோ
அல்லது இப்படிப் பேசுவதன் மூலமாகவோ மக்களுக்குத் தெரிய
வேண்டுமென்பதற்காகத்தான் இந்தக் கருத்துக்களை
யெல்லாம் இங்கே நான் சொல்ல விழைகிறேன். எனவே,
அதுவும்கூட நல்ல யோசனை. முதலிலே காங்கிரஸ் கட்சியிலே
கூட அதைத் துவக்கி வைக்கலாம். இது இந்தியத்
துணைக் கண்டத்திற்கே நல்லபடியாக வரும். எனவே,
அதைச் செய்வதற்குக்கூட அவர்கள் முயற்சியெடுக்கலாம் என்று
நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.
(குறுக்கீடு) என்னைப் பொறுத்தவரையிலே எனக்கு ஒரேயொரு
குழந்தைதான். அதனால் பிரச்சினை இல்லை என்பதை நான்
தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று, எய்ட்ஸ்ஸைப் பற்றி அதிகமாக இங்கே
கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு அதைப்
பற்றி நாம் பேசியே ஆக வேண்டிய கட்டாயம் இருக்கிறது.
இது மக்களைப் பயமுறுத்துவதற்காகவோ அல்லது ஏதாவது
பயந்த சூழ்நிலையை ஏற்படுத்துவதற்காகவோ நாம் பேச
வேண்டிய அவசியமில்லை. எப்படியும் கட்டுப்படுத்தி விட
முடியும் என்ற நம்பிக்கையிலே நான் இங்கே கருத்துக்களை
எடுத்து வைக்க விழைகிறேன்.

[திரு. சு. முத்துசாமி] [1991 செப்டம்பர் 16

உண்மையான நிலைமையைச் சொல்ல வேண்டுமேயானால்.
இன்றைக்கு இந்த எய்ட்ஸ் நோய் ஒரு ஐந்தாறு ஆண்டுக்
காலத்திலே பெரும் பிரச்சினையை உருவாக்கலாம் என்ற
சந்தேகத்தை மருத்துவர்களிடத்திலே ஏற்படுத்தியிருக்கிறது.
எனவே, அதற்கு மிகத் தீவிரமான திட்டங்களைச் செயல்
படுத்த வேண்டிய அவசியம் நமக்கு இருக்கிறது என்பதை நான்
தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழகத்திலே பல்வேறு இடங்களிலே இந்த நோயைக் கட்டுப்
படுத்துவதற்காக, வராமல் தடுப்பதற்கான நடவடிக்கையை
மேற்கொள்வதற்கு மையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.
இருந்தாலும்கூட, இதையும் பிரச்சாரத்தின் மூலமாகத்தான்
நாம் செய்ய வேண்டிய அவசியமிருக்கிறது என்பதையும் நான்
தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். காரணம், நம்முடைய
நோக்கம், நோய் வருவதற்கு முன்னாலே தடுக்க வேண்டுமென்று
சொன்னாலும், இன்றைக்கு இந்தியா போன்ற நாடுகளிலே நோய்
வந்தபின்னாலேகூட, நாளைக்குப் போகலாம், நாளைக்கு
மறுநாள் போகலாம் என்று நினைத்து, பல மாதங்கள் தள்ளிப்
போடுவதன் மூலமாக ஒரு நோய் மிக அதிகமாக வளர்ந்து,
பெரும் பிரச்சினைக்கு உள்ளாகிற நிலையை நாம் பலயிடங்
களிலே பார்க்கிறோம். ஆகவேதான், நோய் வருகின்ற
பொழுது அதைத் தடுப்பதற்காக நாம் திட்டம் தீட்ட வேண்டு
மென்று சொன்னால், அதை மக்களுக்குப் புரிய வைக்க வேண்டிய
அவசியம் நமக்கு ஏற்படுகிறது.

எனவே, எய்ட்ஸைப் பொறுத்த வரையில், பரவுகின்ற முறை
மிக மோசமான நிலையிலே இருக்கிறது. இப்பொழுது எவ்வளவு
பேருக்கு இருக்கிறது என்று ஒரு கணக்கெடுத்திருக்கிறார்கள்.
156 நாடுகளில் ஏறக்குறைய முப்பது இலட்சம் பேருக்கு மேலே
அந்த நோய் இப்பொழுது தாக்கியிருப்பதாகச் சொல்கிறார்கள்.
இந்த நோய் கடைசிவரை தெரியாமல் இருந்து, திடீரென்று
அது உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தி விடுகிறது என்று தெரிவிக்
கிறார்கள். எனவே, இதைக் கட்டுப்படுத்துவது மிக அவசிய
மான ஒன்றாக இருக்கிறது. இதைப்பற்றி நாட்டிலே இருக்
கின்ற மக்கள் அனைவரும் தெரிந்து கொள்வது கூட மிக
அவசியமாக இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான்
தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக, பெண்களுடைய கருப்பையிலே இருக்கின்ற அந்த
நுண் கிருமிகள்கூட அந்தப் பெண்ணினுடைய குழந்தையை
கருவிலே இருக்கிறபொழுதே பாதித்து விடுகிறது என்று சொல்
கிறார்கள். எனவே, இப்படிப்பட்ட நிலைமை கட்டுப்படுத்தப்
பட வேண்டும். இதற்குத் தகுந்த பிரச்சாரத்தைச் செய்



1991 செப்டம்பர் 16] [திரு. சு. முத்துசாமி]

வதற்கு அரசாங்கம் மிகத் தீவிரமான நடவடிக்கையை மேற்
கொண்டிருக்கிறது. நிச்சயமாகப் போர்க்கால நடவடிக்கை
யாக, இந்த எய்ட்ஸைப் பொறுத்தவரையில் இந்த அரசாங்கம்
முதன்மையாக வைத்து, தடுத்து, வரக்கூடிய மிகப் பெரிய
ஆபத்தைத் தடுத்து நிறுத்தும் என்பதை இந்த நேரத்திலே
நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1-55

அதேபோன்று, வாங்குகிற கருவிகளை சரியாகப் பயன்படுத்து
வதில்லை ; அந்தக் கருவிகள் பழுதுபட்டு விட்டால், அவற்றைச்
சீராகப் பழுதுபார்ப்பதற்கான வாய்ப்புகள் இல்லை என்பதை
யெல்லாம் இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். உண்மை
நிலைமை அப்படியிருக்கிறது என்பதிலே நிச்சயமாக எனக்கு
கருத்து வேறுபாடு இல்லை. இப்போது, இரண்டு பிரிவுகள்
தான் இரண்டு இடங்களிலே இந்த மருத்துவக் கருவிகளைச்
சரி செய்து கொடுப்பதற்காக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.
எனவே, இந்த மருத்துவக் கருவிகளைப் பொறுத்த வரையில்,
செயல்பாட்டிற்குக் கொண்டு வருவதற்கு, அதைச் சிறப்பாக
'ரிப்பேர்' செய்வதற்கு என்ன செய்யலாம் என்பதைப் பற்றி
நாங்கள் ஒரு ஏற்பாட்டைச் செய்து கொண்டிருக்கிறோம். பல
இடங்களில் மாணவர்கள் அந்தக் கருவிகளை 'ரிப்பேர்' செய்கிற
தொழிற் கல்வியைப் படிப்பதற்காக—ஒரே ஒரு இடத்திலே,
கோவையிலே செய்திருக்கிறார்கள்—மற்ற இடங்களிலும் அதை
ஆரம்பிப்பதற்கு ஏற்பாடு செய்து, அவர்கள் பயிற்சி பெறு
வதற்கு, அந்த மருத்துவ மனைகளைப் பயன்படுத்தச் சொல்லி
அவர்களே அந்த மருத்துவக் கருவிகளை நமக்கு செய்து கொடுக்
கிற ஒரு நிலைமையை உருவாக்க முடியும் என்று நாங்கள்
ஆலோசனை செய்து, அதற்காக இப்போது ஒரு திட்டம்
தீட்டப்படுகிறது. எனவே, இப்போது என்னென்ன
மருத்துவக் கருவிகள் எங்கெங்கு பயன்படுத்தப்படாமல் இருக்
கின்றன ; அவற்றினுடைய விலை என்ன ; அதை மீண்டும் பயன்
படுத்துவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்
என்பதைப் பற்றி தெளிவாக ஒரு அறிக்கையைக் கொடுப்பதற்கு,
சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு நாங்கள் சொல்லியிருக்கிறோம்.
அவர்கள், அதை கணக்கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அதேபோன்று, அதற்கான கட்டிடங்கள் என்னென்ன
தேவைப்படுகின்றன ; என்னென்ன கட்டிடங்கள் ரிப்பேர் செய்ய
வேண்டும் என்பதையெல்லாம் தனித்தனியாக அறிக்கையாக
எடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே சமர்ப்
பிக்க வேண்டுமென்று நாங்கள் ஏற்பாட்டைச் செய்து கொண்
டிருக்கிறோம். எனவே, இதைச் செய்கிறபோது, நிச்சயமாக
இந்த நிலைமை சீர் செய்யப்படும் என்பதை இந்த நேரத்திலே
நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று, மருத்துவர்களுக்கும், அங்கே இருக்கிற பணியாளர்களுக்கும் பல குறைபாடுகள் இருப்பதை என்னாலே நேரிலே பார்க்க முடிந்தது. எனவே, அந்தக் குறைபாடுகளை நீக்குவதற்காக இப்போது போர்க்கால நடவடிக்கையாக, ஒரு வாரமோ அல்லது 15 நாட்களோ அவர்களுக்கு அவகாசம் கொடுத்து, அந்த அவகாசத்திலே யார் யாருக்கு என்னென்ன குறைகள் இருக்கின்றன என்பதை அவர்கள் எழுதிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு, அந்த மனுக்களை மொத்தமாகப் பெற்று சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் மூலமாக வராமல், நேரடியாக அமைச்சர் அவர்களே அவற்றை எடுத்து, அதிலே இருக்கிற குறை, நிறைகளை ஆய்வு செய்து, அக்குறைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கையை நாங்கள் மேற்கொள்கிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பேசுகிறபோது பல பேர் சொன்னீர்கள். மாவட்ட அளவிலே, சொந்த மாவட்டத்திலே மருத்துவர்களை அந்தந்த மருத்துவ மனைகளிலே அமர்த்தி விட்டால், அவர்கள் அங்கேயே பணியாற்றுவதற்கு ஏதுவாக இருக்கும் என்று நீங்கள் தெரிவித்தீர்கள். சில நேரங்களிலே சொந்த ஊரிலேயே கேட்கிறார்கள். அதுதான் பிரச்சினையாகப் போய்விடுகிறது. சொந்த ஊருக்குப் போனால், அங்கே பல பிரச்சினைகள் உருவாகும். அதுமட்டுமல்ல; சில பேர் முக்கியமான துறையிலே— ஒரு குறிப்பிட்ட துறையிலே—அவர்கள் தேர்ச்சிப் பெற்றவர்களாக இருப்பார்கள். ஆனால், வேறு துறையிலே அவர்களுடைய பணி பயன்படுத்தப்படுகிறது. அந்தத் துறைக்கு வர வேண்டியவருக்கு வாய்ப்பு இல்லாமல் போய் விடுகிறது. இப்படிப்பட்ட குற்றச்சாட்டுக்கள் வந்து கொண்டிருக்கின்றன. சில கிராமங்களிலே இருக்கிற ஆரம்ப சுகாதார நிலையங்களை எடுத்துக் கொண்டால், ஒரு சுகாதார நிலையத்திலே இரண்டு மருத்துவர்கள் என்று சொன்னால், இரண்டு பேரும் ஆண்களாக இருக்கிறார்கள் அல்லது இரண்டு பேரும் பெண்களாக இருக்கிறார்கள். இதனால், அங்கே இருக்கிற பொது மக்களுக்கு, குறிப்பாக பெண்களுக்கு சில சிக்கல்கள் ஏற்படுகின்றன. எனவே, நடைமுறையிலே இருக்கிற அந்தச் சிக்கல்களையெல்லாம் தீர்ப்பதற்கு, ஒரு ஆய்வை நாங்கள் இப்போது செய்திருக்கிறோம். அப்படி செய்ததின்படி, ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்திலே, கண்டிப்பாக ஒரு ஆண் மருத்துவர், அதே போன்று ஒரு பெண் மருத்துவர் இருக்க வேண்டும். அந்த ஆண் மருத்துவர் இடத்தை பெண் மருத்துவர் மூலமாகவோ, அல்லது பெண் மருத்துவர் இடத்தை ஆண் மருத்துவர் மூலமாகவோ நிரப்ப முடியாது என்ற நிலையை உருவாக்க வேண்டுமென்று சொல்லி, ஒரு ஏற்பாட்டைச் செய்திருக்கிறோம். இங்கே கூட மாண்புமிகு உறுப்பினர் திரு. ஸ்ரீதரன் அவர்கள் பேசுகிறபோது, இங்கே இருக்கிற டாக்டர்களை





எல்லாம் சேர்த்து, ஒரு கமிட்டியைப் போட வேண்டுமென்று சொன்னார்கள். அதற்கு ஓய்வு பெற்ற மருத்துவர்கள், ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் போன்றவர்களை வைத்து, இதைச் சீர்படுத்துவதற்கு ஒரு கால அவகாசம்—மிகக் குறுகிய கால அவகாசம்—கொடுத்து, அறிக்கையைக் கொடுப்பதற்கு ஒரு ஏற்பாட்டைச் செய்யலாம் என்று நாங்கள் இப்போது ஒரு நடவடிக்கை எடுத்திருக்கிறோம். எனவே, ஒரு கமிட்டி என்று சொன்னால்—கமிட்டி போடுவது என்று சொன்னாலே—அரசாங்கத்தில் தள்ளிப் போய்விடும் என்ற ஒரு பயம் இருக்கிறது. எனவே, இதைச் சீர் செய்வதற்கு ஒரு மிகக் குறுகிய காலத்தைக் குறிப்பிட்டு, அந்தக் காலத்திற்குள்ளேயே அதைச் சீர் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

குடியிருப்புக் கட்டிடங்கள் அவர்களுக்கெல்லாம் கட்டிக் கொடுப்பதன் மூலம், அவர்கள் அங்கே போய் கிராமங்களிலே பணியாற்றுவதற்கான ஏற்பாட்டைச் செய்ய முடியும் என்று நான் கருதுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றவுடனேயே "கிராமங்களிலே போய், மருத்துவர்கள் இருந்து பணியாற்றுவதற்கு நடவடிக்கைகள் மூலமாக நாம் செயல்படுத்தி விட முடியாது. அவர்கள் மீது நீங்கள் ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதன் மூலமாக இதை வெற்றிகரமாகச் செய்து விட முடியும் என்று நான் நம்பவில்லை. ஏதோ அவர்களுக்குக் குறை இருக்கிறது. ஏதோ ஒரு பிரச்சினை இருக்கிற காரணத்தினால் அவர்கள் அங்கே போய் பணியாற்ற முடியவில்லை. எனவே, அந்த பிரச்சினை என்ன என்பதை முதலிலே அவர்களை அணுகி அதைத் தீர்க்க வேண்டும். அதற்கடுத்து, அவர்களுக்கு என்னென்ன 'இன்செண்டிவ்' கொடுத்தால், அவர்கள் அங்கே போவார்கள் என்பதை ஆய்வு செய்து கொடுங்கள்" என்று கேட்டிருக்கிறார்கள். ஏறத்தாழ அந்த ஆய்வு ஓரளவிற்கு இப்போது முடிகிற தருவாயிலே வந்திருக்கிறது. அது நிச்சயமாக மருத்துவர்கள் அங்கேயே இருந்து பணியாற்றுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நம்முடைய மருத்துவர்களைப் பொறுத்தவரை அவர்கள் சிறப்பாகச் செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள். குறைபாடுகளை நாம் சொன்னாலும் கூட, சில இடங்களிலே இருக்கிற குறைகளை நாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஆனால் நிறைகளை நாம் சொல்லுகின்றபோது, அவர்களுக்கு இன்னும் ஆர்வம் ஏற்படும். அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தர்ராஜ் அவர்கள் சொன்னார்கள் என்று கருதுகிறேன். அவர்களுக்குச் செய்கிற நல்ல காரியங்கள்,

[திரு. சு. முத்துசாமி] [1991 செப்டம்பர் 16
பிற்பகல் 2-00

இந்த நாட்டிற்குச் செய்ய வேண்டிய கடமைகள் நமக்கு
இருக்கிறது. மிகச் சிறப்பாகப் பணியாற்றக் கூடிய மருத்துவர்
கள் இருக்கிறார்கள். நான் கூட இப்போது மணி இரண்டு
ஆகிறது என்று சொன்னால், பல பேர் கடிகாரத்தைப்
பார்க்கிறார்கள். ஏன் ? நேரம் ஆக ஆக, நாமே கொஞ்சம்
பொறுமை இழந்து விடுகிறோம். அதே போன்று மருத்துவர்
களும் காலையில் ஏறத்தாழ 7½ மணிக்கு வந்தால்
1½ மணி வரை கூட—மேலே போகப் போக சில பேர் 3 அல்லது
4 மணி வரை கூட—இருக்கிறார்கள். சில பேர் 10 மணிக்கே
போய் விடுகிறார்கள். அது வேறு விஷயம். அதைத் தனியாகக்
கவனிப்போம். ஆனால், 3 மணியிலிருந்து 4 மணி வரை
பணியாற்றுகிறவர்களுக்குக் காலம் அதிகம் ஆக ஆக,
கொஞ்சம் நம்மைப் போல் அவர்களும் பொறுமையை இழந்து
விடுகின்றார்கள். ஏனென்றால், அவர்களும் மனிதர்கள்
தான் என்பதை நாம் பார்க்க வேண்டும். அதற்கேற்ப, அதை
நாம் ஏற்றுக் கொண்டு, அவர்களை அணுக வேண்டும்
என்பதை என்னுடைய உணர்வாக இருக்கிறதென்பதை இந்த
நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.
காரணம், இப்போது மக்களுக்கு இருக்கின்ற எதிர்பார்ப்பு
மருத்துவ மனைக்குப் போன உடனேயே அது எந்த நோயாக
இருந்தாலும் சரி, உடனேயே குணமாகி, அடுத்த நிமிடமே
வீட்டுக்கு வந்துவிட வேண்டுமென்று கருதுகிறார்கள். ஒரு
பதினைந்து நாட்கள் மருத்துவ மனையிலே இருக்க வேண்டு
மென்று கருதினால், அந்த மருத்துவர் சரியில்லை என்று
சொல்கிறார்கள். இரண்டு நாள் இரு போதும் என்று
சொன்னால், அந்த மருத்துவர் நல்ல மருத்துவர்
என்று சொல்கிறார்கள். எனவே, மக்களே கூட அப்படிப்
பட்ட எதிர்பார்ப்பிலே இருக்கின்ற காரணத்தால் சில
குறைபாடுகளை அவர்களாகக் கற்பனை செய்து கூடச்
சொல்லக் கூடிய நிலைமை ஏற்பட்டு விடுகிறது. எனவே,
அப்படிப்பட்ட குறைபாடுகளையெல்லாம் எடுத்துக்
கொள்ளாமல், உண்மையான குறைபாடுகளை, குற்றச்
சாட்டுக்களைப் பார்த்து, உடனடியாக நீக்குவதற்கு நிச்சய
மாக, ஒழுங்கான நடவடிக்கையை நாங்கள் மேற்கொள்
வோம் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள
விரும்புகிறேன்.

அறிஞர் அண்ணா அவர்கள் சொல்கிறபோது, நம்முடைய
மருத்துவர்களுக்கு வாய்ப்புக் கொடுத்தால் உலகத்திற்கே
வழி காட்டுவார்கள் என்று ஒரு முறை கூறியிருக்கிறார்.
எனவே, இந்த நிலைமைகளை எல்லாம் தெரிந்துதான்
அவர்க்ள் கூறியிருக்கிறார்கள் என்று நான் இந்த நேரத்திலே
இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நம்முடைய
மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்புசாமி அவர்கள் இங்கே



1991 செப்டம்பர் 16] [திரு. சு. முத்துசாமி]

பேச ஆரம்பிக்கிற போது நன்றியைத் தெரிவித்து, அதற்குப்
பின்னாலே இன்னமும் இருக்கிற சில குறைபாடுகளைத் தெரி
வித்திருக்கிறார்கள். குறிப்பாக புரட்சித் தலைவி அவர்களிடம்
கொடுத்த மனுவின் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க
வேண்டுமென்று உத்தரவிட்டு, இன்றைக்கு அந்த மருத்துவ
மனைக்கு மீண்டும் ஒரு 1½ இலட்சம் ரூபாய், அளிக்கப்
பட்டிருக்கிறது அங்கே கட்டிடம் கட்டி வைக்கப்
பட்டுப் பதினோரு ஆண்டு காலமாகப் பயன்படுத்தப்
படாமல் இருந்து இருக்கிறது. காரணம், அதற்குத் தேவை
யான மருத்துவர்கள், பணியாளர்கள் ஒதுக்கப்படவில்லை.
எனவே, இன்றைக்குப் புரட்சித் தலைவி அவர்கள், உத்தரவு
போட்டு, தேவையான அளவிற்கு மருத்துவர்கள், பணியாளர்
கள் ஒதுக்கி, 1½ இலட்சம் ரூபாய் பணமும் ஒதுக்கி அதை
உடனடியாகப் பயன்படுத்துகிற வகையிலே அவர்கள் உத்தர
விட்டிருக்கிறார்கள். இப்படி என்ன என்ன இருக்கிறது.
மருத்துவ மனைகளிலே கட்டடம் கட்டப்பட்டு ஏன் பயன்
படுத்தப்படாமல் இருக்கிறது; அதே போன்று, மருத்துவக்
கருவிகள் வாங்கி ஏன் அந்தக் கருவிகள் பயன்படுத்தப்படாமல்
இருக்கிறது என்ற ஒரு கணக்கை எடுக்கச் சொல்லியிருக்கிறார்
கள், எனவே, அதை எடுத்து முடிக்கிற போது, அனேகமாக,
இந்தச் சூழ்நிலை முழுமையாகத் தீர்க்கப்படும் என்பதிலே
எனக்கு முழுமையான நம்பிக்கை இருக்கிறது என்பதை
இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோன்று, சென்னையிலே நம்முடைய பொது
மருத்துவ மனையிலே, ஒரு ஸ்கேனர் வாங்க வேண்டுமென்ற
ஒரு குறிப்பு இருந்திருக்கிறது. இதுவரை அதற்கான பணம்
ஒதுக்கப்படவில்லை. ஏற்கனவே நாங்கள் பணம் தருகிறோம்
என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் நடைமுறையிலே
அது வரவில்லை. ஆனால், நம்முடைய முதல்வர் அவர்கள்
அன்றைக்குப் பார்ட்—2 ஸ்கீமிலே பேசும்போது,
நாங்கள் ஸ்கேனர் வாங்க வேண்டுமென்று ஆரம்
பிப்பதற்கு முன்னாலேயே அந்தத் துறையைப் பற்றிப் பேசு
வதற்கு ஆரம்பித்த உடனேயே—அங்கே ஸ்கேன் இருக்கிறதா
என்று கேட்டார்கள். புரட்சித் தலைவர் அவர்களுடைய
காலத்தில் ஒரு ஸ்கேனர் வாங்கப்பட்டது. அதுவும் ஒரு ஹெட்
ஸ்கேன் வாங்கப்பட்டது. இப்போது அது முழுமையாகப்
பழுதுபட்ட காரணத்தால் அதைப் பயன்படுத்த முடியவில்லை.
எனவே, வேறு மாற்ற வேண்டும், நீண்ட நாட்களாக,
மாற்றப்படாமல் இருக்கிறது என்று சொன்னவுடனேயே,
ஒரு கோடி ரூபாயை நேரிடையாக கொடுக்க
முடியாவிட்டாலும், முதலமைச்சர் பொது நிவாரண
நிதியிலிருந்து அந்த ஒரு கோடி ரூபாயை அதற்காக ஒதுக்கி
அவர்கள் அதை வாங்குவதற்காக இப்பொழுது உத்தரவு

[திரு. சு. முத்துசாமி] [1991 செப்டம்பர் 16

போட்டுள்ளார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அதே போல, மருத்துவ முகாம் ஒன்று நடத்த வேண்டும் என்று ஆரம்பத்திலேயே உத்தரவு போட்டு அதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் இப்போது செய்யப்பட்டு வருகிறது. சட்டமன்றக் கூட்டத் தொடர் நடப்பதற்கு முன்னாலேயே அதைச் செய்ய வேண்டுமென்று முயற்சிகள் எடுத்தோம். ஆனால் சட்டமன்றக் கூட்டத் தொடர் குறிப்பிட்ட காலத்திலே நடத்தி முடிக்கப்பட வேண்டுமென்ற நிலையிலே இந்தச் சட்டமன்றக் கூட்டம் முடிந்தவுடன் பின்னாலே அதைச் செய்யலாம் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். ஒரு 15 அல்லது 20 நாட்கள் தமிழகம் முழுவதும் முழுமையாக, ஒரு சின்னக் கிராமம் கூட விட்டுப் போகாத அளவிற்கு அந்த மருத்துவ முகாம் நடத்தப்பட வேண்டுமென்று நாங்கள் கருதுகிறோம். அதிலே அரசாங்க மருத்துவர்கள், தனியார் துறை மருத்துவர்கள், அரசாங்கத்திலே பணியாற்றுகிற செவிலியர்கள், அதே போன்று அரசுத் துறைகளினுடைய எந்த எந்தத் துறைகளிலிருந்து உதவி செய்ய முடியுமோ அந்தத் துறைகள், தனியார் தொண்டு நிறுவனங்கள், ஜேசீஸ், லயன்ஸ் போன்ற தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தி, மிகப் பெரிய அளவிலே ஒரு மருத்துவ முகாமைத் தமிழகம் முழுவதும், எல்லாக் கிராமங்களிலேயும் நடத்தி முடித்து விட வேண்டுமென்று நாங்கள் கருதுகிறோம்.. நான் இங்கே அதை விரிவாகச் சொல்வதற்கு காரணம் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதற்கு முழுமையான ஒத்துழைப்பைத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 2—05

20 நாட்களுக்குள்ளே அதை நடத்தி முடிக்க வேண்டும் என்றால் அது அவ்வளவு சாதாரணமாக முடிக்கக் கூடிய காரியம் அல்ல. எனவே சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தந்தத் தொகுதியிலே இருக்கின்ற கிராமங்களிலே இந்த நிலைமைகளைச் சொல்லி அவர்களை மோட்டிவேட் செய்யவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன். இந்தத் தேதியில் முகாம் அங்கே வருகிறது என்று சொன்னால் அங்கே இருக்கிற மக்கள் முகாம்களிலே கலந்துகொண்டு தங்களுக்கு என்னென்ன நோய் இருக்கிறது என்று பார்த்துக் கொள்ள வேண்டும். இது ஒரு குறிப்பிட்ட நோய்க்காக நடத்தக் கூடிய முகாம் அல்ல. தொழுநோய்க்கோ அல்லது கண் சிகிச்சைக்கோ நடத்தப்படக்கூடிய முகாம் அல்ல. இது மொத்தமாகப் பரிசோதிப்பதற்காக. நோய் இருந்தால்தான் வரவேண்டும் என்றில்லை. நோயே இல்லை என்று சொன்னால் கூட வந்து



1991 செப்டம்பர் 16] [திரு. சு. முத்துசாமி]

பரிசோதித்துக் கொள்வது நல்லது. ஏனென்றால் குறிப்பிட்ட வயதுக்கு மேலே மருத்துவரிடம் சென்று பரிசோதித்துக் கொள்வது நல்லது. அப்படிப் பரிசோதனை செய்து இவ்வொருவருக்கும் என்னென்ன நோய் இருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டு அந்த நோய்க்கு அவர்கள் எங்கே மருத்துவம் பெற்றுக்கொள்ள வேண்டுமோ அங்கே போக வேண்டும். பக்கத்தில் இருக்கிற ஆரம்பச் சுகாதார நிலையத்திற்குப் போனால் போதும் என்று சொன்னால் அங்கே அனுப்பப்படுவார்கள். அல்லது தாலுக்கா மருத்துவமனைக்குப் போனால் போதும் என்று சொன்னால் அங்கே அனுப்புவார்கள். அல்லது மாவட்டத் தலைமை மருத்துவ மனைக்குப் போக வேண்டுமென்றால் அங்கே அனுப்புவார்கள். சென்னைக்கு வரவேண்டிய அவசியம் வந்தால் அவர்கள் சென்னைக்கு வரவேண்டும். அப்படிப்பட்ட ஒரு அறிவுரையை அவர்கள் சொல்வார்கள். அதற்குப் பின்னாலே அவர்கள் தொடர்ந்து அந்த மருத்துவ சிகிச்சை பெற்றுக் கொள்கிறார்களா என்பதைக் கண்காணிக்க 5000 பேருக்கு ஒரு ஹெல்த் விசிட்டர் என்ற வகையில் இன்றைக்குப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொரு இடமாகப் போய் அந்தப் பட்டியலை வைத்துக்கொண்டு தொடர்ந்து சிகிச்சை பெற்றுக் கொள்கிறார்களா என்று கண்காணிக்கின்ற வகையில் ஒரு திட்டத்தை நாம் ஏற்பாடு செய்திருக்கிறோம். இதைச் சொல்கிறபோது இது நடைமுறைக்கு முடியுமா என்ற சந்தேகம் கூட ஏற்படலாம். மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தபோது கூட பலபேர் இங்கே பேசினார்கள். அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த முன்னாள் முதல்வர் கருணாநிதி அவர்கள் அங்கே அதை நடைமுறைப்படுத்த முடியுமா என்று பேசினார்கள். ஆனால் புரட்சித் தலைவர் அவர்கள் அதை நடைமுறைப் படுத்திக் காட்டினார்கள். மற்ற மாநிலங்கள் கூட முயற்சி எடுத்து முடியாமல் விட்ட அந்தத் திட்டத்தை நம்முடைய நிதிநிலைமை இவ்வளவு கடுமையாக உள்ள, சோதனைக்கிடையே உள்ள சூழ்நிலை இருந்தும் கூட புரட்சித் தலைவி அவர்கள் அதைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே இதையும் நிச்சயமாக நம்மாலே செய்ய முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அதற்கு மக்களுடைய ஒத்துழைப்பு முழுமையாகத் தேவை என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு இவ்வாறு எடுக்கப்படுகின்ற நடவடிக்கை என்ன நடவடிக்கை என்று சொன்னால் வரும் முன் காப்பதற்கான நடவடிக்கைதான். ஒரு நோயை ஆரம்பத்திலேயே தடுப்பதற்கு அல்லது அந்த நோய் எப்படி வருகிறது என்பதை

வரக்கூடியவர்களுக்குச் சொல்லித்தருவதற்கு இந்த முகாம்கள் பயன்படும் என்ற வகையில் நீங்கள் அந்தத் தேதி அறிவிக்கப் பட்டவுடனே தனிப்பட்ட முறையிலே உங்களிடத்திலே கேட்க வேண்டும் என்று நீங்கள் எதிர்பார்க்காமல் நீங்களாக அதில் பங்கு கொண்டு அதற்குச் சிறப்புச் செய்ய வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இங்கே நம்முடைய டாக்டர் கருப்பசாமி அவர்கள் பேசும்போது சாராயப் பிரச்சினை பற்றிச் சொன்னார்கள். கள்ளச் சாராயத்தின் மூலமாக பல நோய்கள் வருவதற்கான வாய்ப்பு இருக்கிறது. எனவே அதைத் தடுப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று சொன்னார்கள். கள்ளச் சராயத்தை அருந்துவது மூலமாக மட்டுமல்ல; நல்ல சாராயத்தை அருந்தினால் கூட அந்த நோய் வந்து விடுகிறது என்ற காரணத்தினால்தான் புரட்சித்தலைவி அவர்கள் இந்த சாராயத்தையே ஒழிக்க வேண்டும் என்று இன்றைக்கு மாபெரும் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி). எனவே அந்தப் பிரச்சினை நிச்சயமாகத் தீர்க்கப்படும் என்று இங்கே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து இன்றைக்கு எல்லோருக்கும் 'டாம்கால்' என்ற ஹேர் டானிக் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அதே போன்று முகத்திற்குப் போட்டு கொள்ளக்கூடிய ஒரு 'க்ரீம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை நீங்கள் ஒரு முறை பயன் படுத்திவிட்டால் அதற்குப் பின்னால் இது இல்லாமல் இருக்க முடியாது என்ற அளவுக்கு மிக அருமையாகத் தயாரித்திருக்கிறார்கள். எனவே நான் உங்களைக் கேட்டுக் கொள்வது, அதை நல்லடியாக நீங்கள் பயன்படுத்தி மற்றவர்களையும் அதை வாங்குவதற்கு ஊக்குவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். நான்கூட பலபேர்களிடத்திலே அதைப் பற்றி விசாரித்தேன். அது மிகவும் நல்ல க்வாலிட்டி என்று சொல்கிறார்கள். குறிப்பாக மஞ்சள் கரிசலாங்கண்ணி, கீழா நல்லி போன்றவற்றைப் பயன்படுத்தி, இன்னும் பல மூலிகைகளைப் பயன்படுத்தி ஏறத்தாழ 18 மூலிகைகளைப் பயன் படுத்தி இந்த ஆயில் தயாரிக்கப்படுகிறது. எனவே இவ்வளவு பெரிய விளம்பரம் எங்கே போனாலும் கிடைக்காது என்ற காரணத்தால் ஒரு 5 நிமிடம் எடுத்துக் கொண்டு சொல்ல வேண்டிய அவசியம் எனக்கு இருக்கிறது. (குறுக்கீடு) குறைந்த விலைதான். எனவே இதை நீங்கள் பயன்படுத்த வேண்டும். இது 18 மூலிகைகளை வைத்துத் தயாரிக்கப்பட்டது. இதை வெளியே நாம் தயாரிப்பதற்கு முடியுமா என்று தயவு செய்து யோசியுங்கள். எனவே, இதை நல்லபடியாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



இதிலே என்னென்ன நன்மைகள் என்பதைப்பற்றி காலையில் சொல்கிறபோது பிரச்சினை ஏற்பட்டது. இதனால் உடல் குளிர்ச்சியாக இருக்கும். இங்கே காரசாரமான விவாதத்திற்கு பிறகு இந்தப் போட்டால் கொஞ்சம் குளிர்ச்சியாக இருக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். முடி நல்ல படியாக வளரும். புதிதாக வளருமா, இருக்கிற முடி வளருமா என்ற ஆராய்ச்சி எல்லாம் வேண்டாம். எப்படியோ முடி வளரும். எனவே அதை நீங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பொடுகு நீங்கும்; அதேபோன்று முடி உதிர்வதைத் தடுக்கிறது. இது ஆண்களுக்கும், பெண்களுக்கும் எல்லோருக்கும் பொருந்தும் என்ற காரணத்தினாலே இதை சொல்லிக்கொண்டிருக்கிறேன். நானும்கூட காலையிலே சொன்னபடி, உரிய நேரத்திலே எனக்குக் கிடைத்த காரணத்தினால் ஓரளவுக்கு நிலைமை சீர்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 2-10

இதேபோன்று, அந்த கிரீம்-ஐ பொறுத்தவரையில் நான் காலையிலே சொன்னபடி பெண்கள்தான் அதிகமாகப் பயன் படுத்துவார்கள் என்று சொன்னாலும்கூட, அழகு என்பது ஆண்களுக்குக்கூட தேவையாக இருக்கின்ற காரணத்தினால் அவர்களும்கூட பயன்படுத்தலாம். பொதுமக்களுக்கும் அதை நாம் தெரிவிக்கலாம். காரணம் அரசாங்கம் செய்கின்ற எந்தத் தொழிலும் நஷ்டத்திலேதான் போய்விடுகிறது என்று ஒரு சூழ்நிலை வராமல் தடுக்க வேண்டுமென்பதற்காக இதை நீங்கள் செய்யவேண்டும். இதற்காக நல்ல விளம்பரங்கள் வெளியிலே செய்துதரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று, மருத்துவக் கல்லூரி அமைப்பதைப்பற்றி சில கருத்துக்களை இங்கே தெரிவித்தார்கள். குறிப்பாக இன்றைக்கு இருக்கின்ற நிலைமை, பக்கத்து மாநிலத்திலே போய் அதிகமான அளவிலே கேபிடேஷன் பீஸ் எல்லாம் கொடுத்து மருத்துவத்திற்காகப் படிக்கின்ற நிலைமையை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். எனவே மருத்துவர்களைப் பொறுத்தவரையில் நமக்கு எவ்வளவு தேவை என்பதை ஒரு ஆய்வு செய்து, அதற்கு இருக்கின்ற வசதிகள் என்ன என்பதை ஒரு அளவுக்கு ஆய்வுசெய்து, நம்முடைய மருத்துவர்களிடத்திலே, முக்கியமான மருத்துவர்களிடத்திலே அதைப் பற்றி கொஞ்சம் ஆலோசித்து தேவையான நடவடிக்கையை எடுப்போம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

[திரு. சு. முத்துசாமி] [1991 செப்டம்பர் 16

ஒவ்வொரு தொகுதிக்கும் ஒவ்வொரு மருத்துவக் கல்லூரி இருந்தாலும்கூட பரவாயில்லை என்ற எண்ணம் நமக்கு ஏற்படத்தான் செய்கிறது. நானே அந்த நிலைமைகளைப் பார்த்து அந்த நிலைமைகளுக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் எந்த காரணத்தைக்கொண்டும் தரம் இல்லாத அளவிலே நிச்சயமாக இந்த அரசாங்கம் மருத்துவர்களை உருவாக்காது என்பதை மட்டும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்பு கிறேன். தரமான மருத்துவர்களை உருவாக்குவதற்கு மிகப் பெரிய முயற்சிகளை நாங்கள் மேற்கொள்வோம் என் பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்பு கிறேன்.

குறிப்பாக திருச்சியிலே 21-12-1967 அன்று தமிழ் ஆராய்ச்சி மகாநாடு ஒன்று நடந்தது. அந்த ஆராய்ச்சி மகாநாட்டிற்கு நம்முடைய முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் சிறுசேமிப்புக் குழுவினுடைய துணைத் தலைவராக பொறுப் பிலே இருந்து அங்கே அன்றைக்கு தலைமை தாங்கியிருக்கிறார் கள். அன்றைக்கு நம்முடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு நாட்டிய நிகழ்ச்சி மூலமாக 'காவிரி தந்த கலைச் செல்வி' என்ற நாட்டிய நிகழ்ச்சி மூலமாக ஏறத்தாழ சுமார் ரூ. 25 லட்சம் அவர்களால் வசூல் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு அது ஏறத்தாழ ரூ. 43 லட்சமாக வளர்ந்திருக்கிறது. அதை வைத்து மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்கப்பட வேண்டும் என் பது தான் அந்த பகுதியிலே இருக்கின்ற மக்களுடைய நீண்ட நாளான கோரிக்கையாக இருந்து கொண்டிருக்கிறது. என வே அந்த கோரிக்கை மீண்டும் அதிகமான அளவில் வலி யுறுத்தப்படுகிறது. இங்கே வந்து சட்டமன்ற உறுப்பினர்கள் நேரிலேயே சொன்னார்கள். நாங்கள் அங்கே சென்றிருந்த போதும் சொன்னார்கள். இங்கே வருகின்றவர்களும் சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். எனவே அதைப்பற்றி ஆய்வு செய்து ஒரு நல்ல முடிவாக எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதே போன்று இங்கே பல்வேறு கோரிக்கைகள் வலியுறுத் தப்பட்டிருக்கின்றன. ஏறத்தாழ எல்லாவற்றிற்கும் நான் பதில் சொல்லியிருக்கிறேன் என்று கருதுகிறேன். குறிப்பாக இன் றைக்கு மருத்துவத் துறையிலே பணியாற்றிக் கொண்டிருக்கின்ற மருத்துவர்களுக்கும் அதிலே பணியாற்றிக் கொண்டிருக்கின்ற பணியாளர்கள் தொழிலாளர்கள் அத்தனை பேர்களுக்கும் இந்த சட்டமன்றத்தின் மூலமாக ஒரே ஒரு வேண்டுகோளை நான் விடுக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். பொதுமக்கள் மிக அதிக மாக இந்தத் துறையிலே எதிர்பார்க்கிறார்கள். நேரடியாக



1991 செப்டம்பர் 16] [திரு. சு. முத்துசாமி]

பொதுமக்கள் தினந்தோறும் நல்லது நடந்தால் சந் தோஷப்படுகிறார்கள், பிரச்சினை ஏற்பட்டால் சங்கடப்படு கிறார்கள். எனவே அவர்களிடத்திலே நான் கேட்டுக்கொள் வது நம்முடைய கடுமையான உழைப்பின் மூலமாக மிகப் பெரிய ஒரு மறுமலர்ச்சியை இந்தத் துறையிலே நாம் உருவாக்கிக் காட்ட வேண்டும் என்று என்னுடைய வேண்டுகோளை அந்தத் துறையிலே பணியாற்றுகின்ற அத்தனை பேர்களுக்கும் இந்த மன்றத்தின் மூலமாக நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்களுக்கு நான் தெரிவிப்பது எல்லாம் இன்றைக்கு இருக் கின்ற அரசாங்கம், புரட்சித் தலைவி அவர்கள், யார் எந்த பிரச்சினையைச் சொன்னாலும் உடனே அதைத் தீர்க்க வேண்டும் என்ற உணர்வோடு போர்க்கால நடவடிக்கையாக வேகமாக செயல்படுகிறார்கள். எந்த ஒரு திட்டம் தீட்டப்பட்டாலும் அது முறைப்படி தெளிவாக திட்டமிட்டபடி நடக்க வேண்டு மென்பதிலே அவர்கள் தெளிவாக இருந்து கொண்டு இருக்கிறார் கள். எனவே நிச்சயமாக அங்கே இருக்கின்ற மருத்துவர்கள், அதிலே பணியாற்றுகின்ற அத்தனை பேர்களுக்கும் நான் தெரிவித்து கொள்வது உங்களுக்கு எந்தப் பிரச்சினை இருந்தாலும் சரி, எந்தச் சங்கடங்கள் இருந்தாலும் சரி அதை எல்லாம் எழுதி எங்க ளுடைய கையிலே ஒப்படைத்து விட்டு பொதுமக்களுக்கு இருக் கின்ற பிரச்சினைகளை நீங்கள் பாருங்கள், உங்களுடைய பிரச் சினைகளை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக பல்வேறு நிலைகளிலே கோரிக்கைகள் வைக்கப் பட்டிருக்கின்றபோது, பணியாற்றுகின்றவர்கள் தங்களுடைய சர்வீஸ் கண்டிஷன், சம்பளம் இப்படிப்பட்ட பிரச்சினை களைச் சொல்லி, அவர்களைப்பற்றி மட்டும்தான் பேசிக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் இந்த அரசாங் கத்தைப் பொறுத்தவரையில் அவர்களைப்பற்றி மட்டுமல்லா மல் அவர்களுடைய குடும்பத்திலே இருக்கின்ற பிரச்சினையைக் கவனித்து அவர்களுடைய குழந்தைகளுக்குக்கூட நன்மையைச் செய்யவேண்டும் என்ற உணர்வோடு செயல்படுகிறது. எனவே அதை உணர்ந்து அவர்கள் நல்ல ஒத்துழைப்பை இந்த அரசாங்கத்திற்குத் தந்து இந்தத் துறையிலே நல்ல ஒரு முன்னேற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 2-15

இங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் 15 பேர் பேசியிருக்கிறார்கள். வெட்டுத் தீர்மானங்கள் 82 கொடுக்கப் பட்டிருக்கின்றன. ஏறத்தாழ அத்தனைக்கும் நான் பதில் சொல்லியிருக்கிறேன். எனவே, இதிலே பதில் சொல்லாதது பற்றிய விவரங்கள் குறிப்பிலே இருக்கின்றன. அதை எடுத்து

தேவையான நடவடிக்கைகளை நாங்கள் தொடர்ந்து எடுப்போம் என்று தெரிவித்து நீங்கள் அத்தனை பேரும், அத்தனை வெட்டுத் தீர்மானங்களையும் திரும்பப் பெற்று, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு விடைபெறுகின்றேன், நன்றி, வணக்கம். ( மேசையைத் தட்டும் ஒலி).

திரு. டி. சுதர்சனம்: பேரவைத் தலைவரவர் அவர்களே, குறுக்கீடுகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : போதும், போதும். நேரத்தைப் பாருங்கள். திரு. டி. சுதர்சனம்.

திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. கடுமையான நிதி நெருக்கடியிலே இருக்கின்ற காரணத்தினாலே, ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு ஒரு அட்வைசரி கமிட்டி போட்டு, அங்கே கல்வி இலாகாவிலே இருக்கின்ற மாதிரி, பெற்றோர் ஆசிரியர் சங்கம் மாதிரி, பொதுமக்களிடமிருந்து நன்கொடை வசூலித்து, ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்குத் தேவையான வசதிகளை செய்து கொள்ள இந்த அரசு முன் வருமா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இடையிலே சொன்னேன். ஆனால் விளக்கமாகச் சொல்லவில்லை. சில இடங்களில், சில பொது மக்கள், சில தனியார் நிறுவனங்கள் தாங்களாகவே முன்வந்து நாங்கள் கட்டிடங்களைக் கட்டிக் கொடுக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது அதற்கு எந்தத் தடையும் இல்லை. ஏற்கெனவே குறைபாடுகள், தடைகள் அதிலே இருந்தன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் தொகுதியிலே அத்தகைய ஒரு முறைக்கு தனியார் பணம் ஒதுக்கி செய்வதாக இருந்தால் அரசாங்கத்திற்கு அதைவிட சந்தோஷமான ஒரு காரியம், ஒரு செய்தி நிச்சயமாக வேறு எதுவும் இருக்கமுடியாது. ஆகவே, இது குறித்து உறுப்பினரின் தொகுதியில் அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. டேனியல் ராஜ்.

திரு. எஸ். டேனியல் ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அரசு மருத்துவமனைகளில் ஆண் எக்ஸ்ரே டெக்னிஷியன்களைதான் நியமிக்கிறார்கள். பெண்கள் எக்ஸ்ரே எடுக்கச் செல்கின்றபோது, அரசு மருத்துவமனைகளில் இவ்வாறு ஆண்கள் அங்கே பணியாற்றுவதால் பல்வேறு தர்ம சங்கடங்கள் ஏற்படுகின்றன. ஆகவே, அரசு மருத்துவமனை



களில், எக்ஸ்ரே எடுப்பதற்கு தனியாக பெண்களை எக்ஸ்ரே டெக்னிஷியன்களாக நியமிப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றி ஆலோசிக்கப்படும். இப்போது இருக்கின்ற நிலைமை பற்றி முழுமையாகத் தெரியவில்லை. பெண்கள் இருக்கின்றார்களா இல்லையா என்பதைப் பற்றி தெரியவில்லை. ஆனால் எக்ஸ்ரேயைப் பொறுத்தவரையில் பெண்கள் டெக்னிஷியன்களாக வருவதில் தடை ஒன்றும் இல்லை. யாராவது விரும்பி வருவார்களேயானால் நிச்சயமாக அது குறித்து நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம். ஏற்கனவே டாக்டர் சரோஜா அவர்கள் பேசும்போது ஒன்றைக் குறிப்பிட்டார்கள். அதாவது லெப்ரசி இன்ஸ்பெக்டர்களாக இருக்கின்றவர்கள் பெண்களாக இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதற்கான நடவடிக்கை ஏற்கனவே எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்கள் அளித்த பதிலில் ஏதாவது விளக்கம் கேட்கலாம். டாக்டர் (திருமதி) மு. சீனியம்மாள்.

டாக்டர் (திருமதி) மு. சீனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குடும்ப நலத் திட்டத்தைப் பற்றி பேசியபோது குறிப்பிட்டது மாதிரி நமது மாண்புமிகு புரட்சித் தலைவி அரசுக்கு முழு ஒத்துழைப்பையும் மருத்துவர்கள் கொடுப்பதாக இருந்தாலும், குடும்ப நலத் திட்ட கேம்ப்பை ஆர்கனைஸ் பண்ணுகிற உரிமை மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட குடும்ப நல அலுவலர், பி.டி.ஓ. போன்றவர்களிடம் இருக்கிறது. பொதுவாக, கிராமங்களில் வேலைப் பார்க்கின்ற டாக்டர்களை இப்பணியில் ஈடுபடுத்தி குடும்ப நலத் திட்டத்தை சிறப்போடு செய்திருக்கிறார்கள். அம்மா அவர்கள், நீதியே கிடைக்காத மருத்துவர்களுக்கு நீதியும், சமூக வாய்ப்பும் கிடைக்க செய்ய வேண்டும். கடந்த 1984 ஆம் ஆண்டு கோவையில் குடும்ப நல முகாம் ஒன்று நடந்தது.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் சீனியம்மாள், அமைச்சர் அவர்கள் கொடுத்த பதிலில் விளக்கத்தைக் கேட்கத் தான் இந்த நேரத்தை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்..... (குறுக்கீடு) கேளுங்கள்..... அவர்கள் கொடுத்திருக்கிற பதிலில் விளக்கம் கேட்கலாம்.

டாக்டர் (திருமதி) மு. சீனியம்மாள் : குடும்ப நலத் திட்டத்திற்கு சிறப்பு செய்ய வேண்டுமென்று நினைக்கிற மருத்துவர்கள் ஆதரவு கிடைக்கும்போது, அந்த மருத்துவர்களுக்கு

[டாக்டர் (திருமதி) மு. சீனியம்மாள்] [1991 செப்டம்பர் 16

கேஸ் கொண்டுவருவது ஒருவர், ஆபரேஷன் பண்ணுகிற டியூட்டி மட்டுமே டாக்டர்களுக்கு. ஆனால் அரசாலே ஆர்கனைஸ் பண்ணப்படும் கேம்ப்களில் அரசே தான் டாக்டர்களை நியமிக்கிறது. கடைசியில் குற்றம் கண்டுபிடித்து அந்த டாக்டர்களை விசாரணை செய்து அவர்களை சஸ்பெண்ட் செய்கிறார்கள். அந்த வகையில் 6 பேர் சஸ்பெண்ட் செய்யப்பட்டு இன்னும் அவர்கள் பாதிக்கப்பட்டிருப்பதால் தயவு செய்து அம்மா அவர்கள் . . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சர் கொடுத்த பதிலில் விளக்கம் கேட்கலாம். பொதுக் கோரிக்கை வைப்பதற்கு இந்த நேரத்தில் வாய்ப்பு இல்லை.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** உறுப்பினர் என்ன பிரச்சினை சொல்கிறார் என்று எனக்குப் புரிகிறது. ஆகவே, அந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் நிச்சயமாக ஆய்வு செய்யலாம். ஒவ்வொரு குடும்ப கட்டுப்பாட்டு முகாம்களை ஏற்பாடு செய்வது இன்றைக்கு மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் அதற்கான பொறுப்பு இருப்பதற்கு காரணம் மெஷினரீஸ் அவரிடம்தான் இருக்கிறது. எனவே, அவர்கள் தான் செய்ய முடியும். எனவே அதுதான் காரணம். ஆனால் அதில் குறைபாடு இருந்தால் என்னிடத்தில் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் சொல்லலாம். அதைச் சீர் செய்ய நடவடிக்கை எடுக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. தேனி பன்னீர் செல்வம்,

பிற்பகல் 2–20

**திரு. தேனி பன்னீர்செல்வம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பேசும்போது அமைச்சர் அவர்கள் 'ஊழியர்கள் எல்லாம் நல்லமுறையில் ஒத்துழைக்க வேண்டும்', என்று கேட்டார்கள். அந்த வகையிலே நான் அந்தக் கருத்துக்கு ஆதரவாக இருக்கக்கூடியவன். ஆனால் அரசுத் துறையிலே 1936 அரசு ஆணையின்படி, 1–10–1982 முதல் பொது சுகாதாரத்துறை ஆணையின்படி, ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து அரசு துறையில் ஈர்க்கப்பட்டவர்கள் இன்றுவரை அவர்களுடைய கோரிக்கைகளான, அரசு தரப்புக்கு ஈர்க்கப்பட்டதற்குப் பிறகு அவர்களுடைய பணி நியமனங்கள், சிறப்பு ஊதியம், தேர்வு நிலை ஊதியம் போன்றவை வழங்கப்படாமல் இருக்கின்ற காரணத்தால் அவர்கள் பணி செய்ய மறுக்கிறார்கள். அவர்களுக்கு ஜாப் சார்ட் என்று சொல்லக்கூடிய பணிப் பொறுப்புகள் வழங்கப்படாமல், ஒருதலைப் பட்சமாக இயக்குநர் அலுவலகம்



1991 செப்டம்பர் 16] [திரு. தேனி பன்னீர்செல்வம்]

காரணத்தால், பொதுச் சுகாதாரத்துறை
நடந்து கொண்ட சங்கத்தைச் சேர்ந்தவர்களுக்
இயக்குநருக்கும் ஒரு குறிப்பிட்ட கொண்டுவருகிறது. எனவே
கும் ஒரு பெரிய பிரச்சினை இருந்து நாள் குறைபாடுகள் தீர்க்கப்
அங்கே பணி புரிபவர்களின் நீண்ட பணியாற்றுகின்ற மனோ
பட்டால்தான் நல்ல முறையிலே எனவே உடனடியாக அரசு
நிலையை அவர்கள் பெற முடியும். கவனிக்குமா ?
அவர்களுடைய நியாயமான கோரிக்கையை

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத்
தலைவரவர்களே, நான் அதைத்தான் ஏற்கெனவே இடையிலே
சொன்னேன். பல குறைபாடுகள் இருக்கின்றன. தொழிலாளர்
களுக்கும், மருத்துவர்களுக்கும், அங்கே பணியாற்றும் செவிலி
யர்களுக்கும் பல்வேறு பிரச்சினைகள் இருப்பதாகக் கடிதங்கள்
வந்து கொண்டிருக்கின்றன. அதற்கு ஒரு வாரம் அல்லது 15
நாட்கள் நேரம் கொடுத்து, அந்த நேரத்திலே அவர்களிட
மிருந்து மனுக்களாகப் பெற்று, அவர்கள் பிரச்சினைகளைத்
தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும். நேரடியாக அமைச்சர்,
அளவிலே அதைப் பார்க்கலாமென்று நான் ஏற்கெனவே தெரிவித்
திருக்கிறேன். மனு கொடுத்தால் நடவடிக்கை எடுக்கப்
படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 18—மருத்துவம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மானியக் கோரிக்கை
எண் 18—மருத்துவம் பற்றிய வெட்டுத் தீர்மானங்கள் வலி
யுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. மா.
சுந்தரதாஸ்.

**திரு. மா. சுந்தரதாஸ் :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு மா. சுந்தரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றது.

டாக்டர் தே. குமாரதாஸ் தன்னுடைய வெட்டுத் தீர்மா
னத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என்று அறிய விரும்பு
கிறேன்.

**டாக்டர் தே. குமாரதாஸ் :** இல்லை.

[1991 செப்டம்பர் 16

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது.

''மருத்துவம் பற்றிய 18ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 249,40,35,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்'' என்ற மாண்புமிகு அமைச்சரவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க .. (ஆம்.).

மறுப்போர் 'இல்லை' என்க .. (இல்லை).

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரி தொகை வழங்கப்பெற்றது.

(ஆ) கோரிக்கை எண் 19—பொதுச் சுகாதாரம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 19—பொதுச் சுகாதாரம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். சிங்காரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது.

டாக்டர் தே. குமாரதாஸ் தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றது.



1991 செப்டம்பர் 16] [பேரவைத் தலைவர்]

''பொதுச் சுகாதாரம் பற்றிய 19ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 161,43,53,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'' என்ற மாண்புமிகு அமைச்சரவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க .. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க .. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி).

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெற்றது.

பேரவையின் இன்றைய காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. இப்போது நேரம் ஏறத்தாழ 2-23 ஆவதையொட்டி பேரவை மீண்டும் இன்று மாலை 4-00 மணிக்குக் கூடும் என்பதற்குப் பதிலாக 4-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-23 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

மாலை 4-30

பேரவை மீண்டும் மாலை 4-30 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் கூடியது.

4. மானியக் கோரிக்கைகள், 1991–92—விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(இ) கோரிக்கை எண் 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 29. தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும். மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய 29-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 42,19,41,000க்-கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'' என்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள் வெட்டுத் தீர்மானம் எண் 284. திரு. எச். எம். ராஜு.

திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்களுக்கு அரசின் சலுகைகள் முறையாகக் கிடைப்பதன் அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்'' பற்றிய 29ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 42,19,41,000-ல், ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 277. டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'' தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்'' பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 42,19,41,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும். ''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப் பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துறையினுடைய கொள்கைக் குறிப்பு* அவைமுன் வைக்கப்பட்டு இருக்கிறது. அதைப் படித்ததாகக் கருதி ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. காளன்.

திரு. ஜி. காளன் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இந்தச் சபை முன் தொழிலாளர் சம்பந்தப்பட்ட மசோதாவை

* 327–436ஆம் பக்கங்களில் இணைப்பு 3 அச்சிடப் பெற்றுள்ளது.



அமைச்சர் அவர்கள் பிரேரேபித்து இருக்கின்றார்கள். இந்த அவையிலே பிரேரேபிக்கப்பட்ட பல்வேறு மசோதாக்களிலேயே அநேகமாக மிகக் குறைவான பண ஒதுக்கீடு. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர், இது மசோதா இல்லை; மானியக் கோரிக்கை. மசோதா என்பது வேறு; மானியக் கோரிக்கை என்பது வேறு.

திரு. ஜி. காளன் : மானியக் கோரிக்கைகளில் மிகக் குறைவான பணம், இதற்குத்தான் ஒதுக்கப்பட்டு இருக்கிறது என்று கருதுகிறேன். இருந்தாலும் வள்ளுவர் அப்போதே சொல்லி இருக்கின்றார்கள். ''உழவர் பெருமக்கள் உலகத்தினுடைய அச்சாணி '' என்று. ஆனால் இன்றைக்குப் பார்க்கின்றபோது நவீன இந்தியாவிலே பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களால் நாட்டிலே விவசாயத் தொழில் மட்டுமல்லாமல் ஆலைத் தொழிலில் நவீன விஞ்ஞானத்தைப் புகுத்தினால்தான் நாடு முன்னேற முடியும் என்று கூறி, ஐந்தாண்டுத் திட்டங்களை வகுக்கும்போது 'ஆலைகள் எல்லாம் நவீன ஆலயங்கள் என்று சொன்னார்கள். அதிலே பணிபுரிகின்ற தொழிலாளர்கள் எல்லாம் நாட்டினுடைய முதுகெலும்பு என்று சொல்லி இருக்கின்றார்கள். ஆனால் நாட்டின் முதுகெலும்பாகத் திகழக் கூடிய தொழிலாளர்களுடைய வாழ்க்கைத் தரம் குறிப்பாக புரட்சித் தலைவி அவர்களுடைய தலைமையிலே அமைந்து இருக்கிற அரசு தொழிலாளர் நலனுக்காகப் பல்வேறு முற்போக்கான திட்டங்களைத் தீட்டி, தொழிலாளர்களுடைய நலனைப் பாதுகாப்பதிலேயும், வேலை வாய்ப்புக்களைப் பெருக்குவதிலேயும், அதிலும் குறிப்பாக பெண் தொழிலாளர் முன்னேற்றத்திற்காக அதிகப்படியான சமுதாயத்திலே 50 சதவீதமாக இருக்கக்கூடிய பெண்களுக்கு சரிசமமான வேலை வாய்ப்பை அளிக்கக்கூடிய வகையில் இரவு ஷிப்ட்டுகளிலும் பெண் தொழிலாளர்கள் வேலை செய்யக்கூடிய அந்த திட்டத்தை தயாரித்து இன்றைக்கு வேலை செய்வதற்கு அனுமதிக்கக்கூடிய ஒரு முறையைக் கொண்டுவருகின்றபோது, உண்மையிலேயே அது பாராட்டத்தக்கதாக அமைந்து இருக்கின்றது. அதே நேரத்தில் குறைந்த கூலி சட்டங்களை மாற்றி அமைப்பதற்காகவும், தொழிலாளர்களை நிரந்தரப்படுத்துவதற்காகவும் அமைச்சர் அவர்கள் பல்வேறு திட்டங்களைக் கொண்டுவந்து இருக்கின்றார்கள். அவையெல்லாம் உண்மையிலேயே வரவேற்கவேண்டிய ஒரு விஷயமாக இருந்தாலும்கூட, தொழிலாளர் துறையிலே பார்க்கின்றபோது பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன. அரசாங்கம் பல்வேறு முற்போக்கான திட்டங்களைக் கொண்டுவந்தாலும் கூட அதை அமல்படுத்தக் கூடிய அதிகாரிகள் சரிவர நிறைவேற்றுகிறார்களா என்று பார்த்தால் கிடையாது என்றுதான் நான் கூறவேண்டும்.

எனவே, எத்தகைய முறையில் எல்லாம் தொழிலாளர் நலன்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன, இந்த நாட்டினுடைய செல்வங்கள் பாழ்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதையெல்லாம் நான் நிச்சயமாகக் குறிப்பிட்டாக வேண்டும்.

மாலை 4-35

இன்றைக்கு தமிழகத்தில் மதிப்பிற்குரிய நிதியமைச்சர் அவர்கள் நாம் தொழிற் துறையில் எப்படியெல்லாம் முன்னேறி வந்திருக்கிறோம் என்பதற்கு பல புள்ளிவிவரங்களைச் சொன்னார்கள். அவை உண்மையாக இருந்தாலும் கூட, இன்றைக்கு நமது அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளதில் 32 அல்லது 33 லட்சம் பேர்கள் வேலை வாய்ப்புக் கோரி, இன்றைக்கு காத்திருக்கக் கூடியோர் பட்டியலில் இருக்கிறார்கள் என்பதைப் பார்க்கிறோம். இன்றைக்கு இந்த புள்ளிவிவரங்களைப் பார்க்கிறபோது ஆலைத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் 17,000 தொழிற்சாலைகளில் ஏறக்குறைய 8½ லட்சம் என்று குறிப்பிட்டிருந்தாலும்கூட, மொத்தமாக 10 லட்சம் பேர் வேலை செய்யலாம். ஆனால், இந்த 32 லட்சம் பேருக்கும் நாம் வேலை வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று சொன்னால் ஏறக்குறைய இப்போது இருக்கிற தொழிற்சாலைகளின் வசதி இன்னும் நான்கு மடங்கு பெருகினால்தான். இவ்வளவு பேருக்கும் வேலை வாய்ப்பினைத் தர முடியும். சாதாரணமாக வருடத்திற்கு 40 அல்லது 50 ஆயிரம் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு மையங்கள் மூலமாக வேலை வாய்ப்பு பெற்றுத் தரப்படுகிறது. அப்படிப்பட்ட புள்ளிவிவரங்களை ஒப்புநோக்கிப் பார்க்கிறபோது இன்றைக்கு நிலுவையில் உள்ள 32 லட்சம் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டுமென்றால் இன்னும் 64 வருடங்கள் பொறுமையாக இருக்க வேண்டும். அந்த நிலைமையில் பார்க்கிறபோது நிச்சயமாக ஒருவர் வேலைவாய்ப்பிற்காக அந்த அளவுக்கு பொறுமையாக இருக்கமாட்டார். அவர்களுக்கு எல்லாம் வேலை வாய்ப்பை உருவாக்கித் தர வேண்டுமென்று சொன்னால் இன்றைக்கு தொழிலாளர் நல அமைச்சகத்தில் மிக முக்கியமான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஒரு பக்கத்திலே தொழிலாளர் நலனும், இன்னொரு பக்கத்தில் தொழில் நலனும் காக்கப்பட வேண்டும். தொழில் நலன் என்று சொல்கிறபோது தொழிற் சங்கங்கள் எப்படி பணியாற்றுகின்றன? தொழிற் சங்கங்களுடைய பொறுப்புகள் என்னவென்று பார்க்கிறபோது அரசுக்கு நான் சொல்லியாக வேண்டும். ஒரு நிலையான தொழிற் கொள்கை தேவை. இந்த நிலையான தொழிற் கொள்கை பல்வேறு அரசுகள் பொறுப்பேற்கிற போது மாறி மாறி ஏற்பட்டதன் விளைவாக தொழில்கள் நலிந்து இருக்கின்றன. போட்டி சங்கங்கள் வளர்ந்து இருக்கின்றன. போட்டி சங்கங்கள் வளர்ச்சி காரணமாக தொழில் அடிதடிகள்





ஏற்பட்டு, பல்வேறு வன்முறைகள் அதிகரித்து, இதன் காரணமாக பல்வேறு தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. அவைகள் எல்லாவற்றையும் நான் கூறாவிட்டாலும், ஒருசில முக்கிய நிகழ்ச்சிகளை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். கடந்த ஆட்சிக் காலத்தில் கும்மிடிபூண்டியில் உள்ள ஒரு கோச் தயாரிக்கும் தொழிற்சாலையில், 600, 700 தொழிலாளர்கள் வேலை பார்க்கும் இடத்தில், ஆளும் கட்சியினுடைய தொழிற் சங்கத்தை நுழைக்க வேண்டுமென்று முயன்ற காரணத்தால், அங்கே அடியாட்களும், சமூக விரோதிகளும் புகுந்து அங்கேயிருக்கிற நிர்வாக அதிகாரிகளைத் தாக்கி, தொழிற்சாலையில் உள்ள பல்வேறு பொருள்களைச் சேதப்படுத்தி, அந்தத் தொழிற்சாலை 6, 7 மாதக் காலம் மூடப்படுகிற நிலைமை ஏற்பட்டது.

அதைப்போல கடந்த ஆட்சிக்காலத்தில் திருச்சியில், டால்மியாபுரத்தில் சிறப்பு வாய்ந்த ஒரு தொழிற்சாலையில் ஆளும் கட்சி தொழிற் சங்கத்தை நுழைக்க வேண்டுமென்ற காரணத்தால் அங்கே பதட்ட நிலை உருவாக்கப்பட்டு, வன்முறைகள் தோன்றி, அங்கே எப்படிப்பட்ட சூழ்நிலைகள் இருந்தன. அதனால் உற்பத்தி எவ்வளவு பாதிக்கப்பட்டது என்பதையெல்லாம் நாம் பார்த்தோம். சென்னை மாநகரில் இரண்டு பெரிய தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. அவற்றில் ஒன்று பின்னி தொழிற்சாலை. இன்னொன்று ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற்சாலை. இந்த இரண்டு தொழிற்சாலைகளும் ஏன் மூடப்பட்டிருக்கின்றன என்பதை ஆராய்ந்து பார்க்கிறபோது அநேகமாக அனைவருக்கும் தெரியும். பின்னி தொழிற்சாலை மூடப்பட்டதற்கு சில காரணங்களைச் சொன்னாலும், அதனுடைய புராசசிங் பிரிவை மாற்ற வேண்டுமென்ற நிர்ப்பந்தத்தில் இருந்தாலும் கூட, பின்னி தொழிற்சாலையினுடைய அதிபர்கள் ஒரு காலத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களுக்கு ஆதரவாக விளங்கினார்கள். அந்த ஆட்சிக்கு உதவிகரமாக இருந்தார்கள் என்ற ஒரே காரணத்தால் சென்ற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், அந்தத் தொழிற்சாலைக்கு, பல்வேறு கட்டங்களில் 10, 15 ஆண்டுகளுக்கு முன்பாக, மூடப்பட்டபோது, அரசாங்கம் மின் தடையின்றிச் செய்வதாக அளித்திருந்த வாக்குறுதியை அதை வாபஸ் பெற்றதன் விளைவாக, அங்கே மின் தட்டுப்பாடுகள் ஏற்பட்டு, தொழிற்சாலையில் சில பிரிவுகளை இயக்க முடியாத நிலைமை ஏற்பட்டது.

அதேபோன்று தமிழக அரசு மாணவர்களுக்கு சீருடை எடுப்பதற்கு, பின்னி தொழிற்சாலையை தேர்ந்தெடுத்திருந்தார்கள். அதையும் கடந்த அரசு வாபஸ் பெற்றதன்

[திரு.ஜி.காளன்] [1991 செப்டம்பர் 16

பிற்பகல் 4—40

விளைவாக, வேறு மில்களிலே வாங்க வேண்டுமென்று அல்லது வேறு இடத்திலே வாங்க வேண்டும் என்று கட்டாயத்தைப் புகுத்தியதினால், பல கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது. இதனுடைய காரணம் என்ன ? எப்படியாவது அந்தத் தொழிற்சாலையை மூடவைப்பதற்காக அந்த முதலாளிகளை சரணாகதி அடைய வைப்பதற்காக இப்படிப்பட்ட சூழ்நிலையை கடந்த அரசாங்கம் ஏற்படுத்தியிருக்கிறது. அதன் விளைவாக இன்றைக்கு பின்னி தொழிற்சாலை மூடப்பட்டு இருக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

அதேபோல் ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் தொழிற்சாலை. அங்கேயிருக்கக்கூடிய ஆலை அதிபர்கள் ஒருகாலத்திலே புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களுக்கு, அந்த அரசுக்கு ஆதரவாக விளங்கினார்கள் என்பதற்காக, அங்கேயிருக்கக் கூடிய முதலாளிகளுக்கு, நிர்வாகத்திற்கு தொல்லைகள் உருவாக்கவேண்டும் என்று, அன்றைக்கு இருந்த அந்த அரசாங்கத்திலே முக்கியமான அமைச்சருக்கு வேண்டியவருக்கு, உறவினர்களுக்கு அங்கே இருக்கக்கூடிய போர்ட் ஆப் டைரக்டர்ஸ்-சிலே ஒரு பதவி ஏற்படுத்தித் தரவேண்டும் என்றும், நிர்வாகத்திலே, பங்கு அளிக்கவேண்டும் என்றும் வற்புறுத்தியதன் வாயிலாக அந்த நிர்வாகம் அதை ஏற்க மறுத்ததை முன்னிட்டு, அவர்கள் தலைமை தாங்கக் கூடிய ஸ்பிக் தொழிற்சாலையினுடைய சேர்மன் பதவியிலிருந்து அகற்றினார்கள்.

அதேபோன்று ஸ்டேண்டர்டு மோட்டாரை மூடுவதற்கான முறையிலே பல்வேறு திட்டங்களைத் தீட்டினார்கள். இன்றைக்கு இதனால் அந்தத் தொழிற்சாலை மூடப்பட்டிருக்கிறது. இப்படி அரசியல் காரணங்களுக்காக இன்றைக்கு போட்டிச் சங்கங்கள் புகுத்தப்பட்டதன் விளைவாக, மற்றும் பல்வேறு காரணங்களினாலே சென்ற ஆட்சியின்போது, பெரிய பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

நான் ஏற்கனவே டால்மியாபுரத்தைப் பற்றிச் சொன்னேன். ஓசூரிலே இரு சக்கரத் தொழிற்சாலை, அதை மூடுவதற்கு எந்த அளவிற்கு வன்முறையைப் புகுத்தினார்கள், அங்கே தொழிலாளர்கள் வரக்கூடிய பேருந்துகளை எந்த அளவிற்குத் தாக்கி ஆசிட்களை வீசியிருக்கிறார்கள், அந்தத் தொழிற்சாலையை 3, 4 மாத காலம் மூடுவதற்கு எந்த அளவிற்கு ஆசி உறுதுணையாக இருந்தது என்பதை எல்லாம் இன்றைக் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இதை சரித்தி



1991 செப்டம்பர் 16] [திரு. ஜி. காளன்]

ஏடுகள் இன்றைக்கு நமக்குச் சுட்டிக்காட்டுகின்றது. எனவே தான் நான் குறிப்பிட விரும்புகிறேன். தமிழகத்திலே தொழில் வளர வேண்டும் என்று சொன்னால், தொழிலாளர்கள் வேலை வாய்ப்புப் பெற வேண்டும் என்று சொன்னால்—ஒரு காலத்திலே குஜராத் மாநிலம், பின்தங்கிய மாநிலமாக இருந்தது. அங்கே ஆட்சியாளர்கள் யார் மாறி மாறி வந்தாலும், தொழிற்துறையைச் சீர்குலைப்பதற்கான முயற்சியிலே யாரும் ஈடுபடவில்லை. ஒரு நிலையான தொழிலாளர் கொள்கையை வைத்திருக்கிறார்கள். தொழில் இயல் கொள் கையை ஏற்படுத்தி இருக்கிறார்கள். அதைப் போலத்தான் மராட்டிய மாநிலம், அதேபோல் தான் மற்ற மாநிலங்களையும் நாம் பார்க்கிறோம்.—அப்பட்டிப்பட்டதொழிற் கொள்கையை யார் கம்பெனியை நடத்துகிறார்கள் என்பதல்ல.—தமிழகத் திலே தொழில் வளர்ச்சி ஏற்பட வேண்டுமானால், இப்படிப்பட்ட அடிதடிகள் குறைய வேண்டும், வன்முறைப் போக்குகள் குறைய வேண்டும்.

ஒரு காலத்திலே சிம்சன் தொழிற்சாலை, தி.மு.க ஆட்சிக் காலத்திலே அவர்களுடைய தொழிற்சங்கத்தை நுழைக்க வேண்டும் என்பதற்காக, எந்த அளவிற்கு வன்முறைகள் ஏற்பட்டன. எத்தனை ஆண்டுக்காலம் மூடப்பட்டு இருந்தது, அதனால், எந்த அளவிற்கு அந்தத் தொழிற்சாலை நலிவுற்றது, சீர்கெட்டது என்பதை நாம் பார்க்கிறோம். எனவே தான் இன்றைக்குப் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு தமிழகத்திலே தொழிற்சாலைகளைப் பெருக்கி, தொழில் வளத்தில் இந்தியாவிலே முதன்மை பெற்ற மாநிலமாக தமிழ கத்தை உருவாக்க வேண்டும் என்று கனவு கண்டிருக்கிறது. அத்தகைய லட்சிய திட்டங்களைத் தீட்டி இருக்கிறார்கள். அந்தத் திட்டங்களை எல்லாம் உண்மையாக செயல்படுத்த வேண்டு மானால், தமிழகத்திலே இப்படிப்பட்ட வன்முறைகள், போட்டி சங்க ஆதிக்கங்கள் ஏற்படுவதை நாம் தவிர்த்தாக வேண்டும். அடுத்துக் கெடுக்கக்கூடிய மனப்பான்மை இல்லாமல், பழிவாங்கக் கூடிய மனப்பான்மை இல்லாமல், எந்தத் தொழில் அதிபரும் நிலையாக அவர்களுடைய தொழிற்சாலையை நடத்துவதற்கு அந்தத் தொழிற்சாலை சிறந்து விளங்கக் கூடிய வகையில், நம்முடைய ஆட்சி கண்ணுங்கருத்துமாக இருக்கவேண்டும் என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல், இன்றைக்கு வேலை வாய்ப்பினை நாம் பெருக்க வேண்டும் என்று சொல்கிறோம், நான் ஏற்கனவே குறிப்பிடப்பட்டிருப்பதைப் போல, ஆலைத் தொழில்களிலே 10 லட்சம் தொழிலாளர்கள் வேலை செய் கிறார்கள். பல பேர்கள் காத்திருப்போர் பட்டியலில்

இருக்கிறார்கள். மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். போக்குவரத்துத் துறையிலே நாம் 13 ஆயிரம் பஸ்களை இயக்குகிறோம். நமக்கு பெருத்த நஷ்டம் ஏற்படுகிறது, என்று சொல்கிறார்கள். அத்தகைய பஸு நமக்குத் தேவையில்லை. வேலை வாய்ப்பும் பெருக வேண்டும். இங்கே உள்ள பல உறுப்பினர்கள் பல இடங் களில் எங்கள் ஊர்களுக்கு பஸ் வசதி போதவில்லை. பஸ் வசதி வேண்டுமென்று, சொல்லியிருக்கிறார்கள். இந்த அரசு புதிய கொள்கையின் மூலம் லைசென்ஸ்களைத் தளர்த்தி, அரசாங்கம்தான் இதைச் செய்ய வேண்டும் என்பதற்குப் பதிலாக, தனியார் துறையிலே அதிகமான பஸ்களை மூலை முடுக்குகளுக்கு எல்லாம், எங்கெங்கே தேவையோ, அங்கெல்லாம் விடுவதற்கு நீங்கள் வசதி செய்து தருவீர்களேயானால், அதனால் லட்சக்கணக்கான தொழிலாளர் களுக்கு வேலை வாய்ப்பை அளிக்க முடியும் என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். அந்த வகையிலே அரசு தன்னுடைய கொள்கைகளை மறுபரிசீலனை செய்து புதிய போக்குவரத்துத் தடங்களில் அதிகமான பஸ்களை விடுவதன் மூலமாக ஒரு பக்கத்தில் தொழிலையும் நாம் வளர்க்கின்றோம்; மக்கள் தேவையையும் பூர்த்தி செய்கிறோம். அதே நேரத்திலே வேலை வாய்ப்புகளையும் பெருக்குகின்றோம். அந்த வகையிலே புதிய கவனத்தை நாம் செலுத்த வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாலை 4-45

அதேபோன்று தொழிலாளர் நல வாரியத்தைப் பொறுத்தமட்டில் இத் தொழிலாளர் நலத்துறை அதிகாரிகளில் மிக முக்கியமானவர்கள். கடந்த கால ஆட்சியில் மிகச் சிறந்த தொழிலாளர் நல அதிகாரிகளை இடம் விட்டு மாற்றியிருக் கின்றார்கள். பழி வாங்கியிருக்கின்றார்கள். அதற்குப் பதிலாக திறமை குறைந்த அதிகாரிகளை 'கன்சிலியேஷன்' ஆபீஸர் களாக நியமித்திருக்கின்றார்கள். அத்தகைய நிலைமை இருக் கக்கூடாது. தொழிற் துறையிலே அமைதி காண வேண்டுமென்று சொன்னால், தொழிற் தகராறுகளை உடனுக்குடன் நல்ல முறையில் முடிவுக்குக் கொண்டு வர வேண்டுமென்று சொன் னால், 'கன்சிலியேஷன்' ஆபீஸர்களுடைய முக்கியமான பணி சிறப்பாக இருக்க வேண்டும். அந்த வகையிலே கடந்த கால ஆட்சியில், தி.மு.க. ஆட்சியிலே பழி வாங்கப்பட்ட திறமையான அதிகாரிகளை மீண்டும் அவர் களுடைய பழைய பதவியில் கொண்டு வந்து அமர்த்துவது மட்டு மல்லாமல், தொழிலாளர் துறையிலே சமரச நடவடிக்கைகளை விரைவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்





இன்றைக்கு தொழிலாளர் சமரச அதிகாரிகளை போனஸ் பிரச்சினைகள் நெருங்கிக் கொண்டிருக்கின்ற நிலையில் நல்ல முறையில் செயல்பட முடியும். இன்றைக்கு போக்குவரத்துத் துறையில் இருப்பவர்கள் போனஸ் கோரி பேரணி நடத்து கிறார்கள். கோவை ஜில்லாவில் பஞ்சாலைத் தொழிலாளர்கள் போனசிற்காகவும், ஊதிய உயர்வு மாற்றத்திற்காகவும் இன் றைக்கு கோரிக்கைகளை எழுப்பியிருக்கிறார்கள். அவைகள் எல்லாம் பயமுறுத்திக் கொண்டிருக்கின்றன. அந்த பிரச்சினை களையெல்லாம் ஒரு சுமுகமான முடிவிற்குக் கொண்டு வர வேண்டுமென்று சொன்னால், தொழிற்துறையிலே கதவடைப்பு ஏற்படாமல் தடுக்க வேண்டுமென்று சொன்னால், லேபர் டிபார்ட்மெண்டினுடைய வேலை மிக மிக முக்கியமானதாக இருக்கின்றது. அந்த வகையிலே அமைச்சரவர்கள் கண்ணும் கருத்துமாக இருந்து பழி வாங்கப்பட்ட அதிகாரிகளை, புரட்சித் தலைவர் காலத்தில் அமர்த்தப்பட்ட அதிகாரிகளை மீண்டும் நீங்கள் பழி வாங்கலை நிறுத்தி, அவர்களை பழைய நிலைக்குக் கொண்டு வந்து, தொழிற் தகராறுகளை சுமுகமான முறை யிலே தீர்ப்பதற்கு வழிவகை காண வேண்டுமென்று நான் பணி வோடு கேட்டுக் கொள்கிறேன்.

அத்தோடு இன்றைக்கு தொழில் நீதிமன்றங்கள், லேபர் கோர்ட்டுகளாக இருந்தாலும் சரி, பிரின்சிபிள் கோர்ட்டாக இருந்தாலும் சரி, இண்டஸ்ட்ரியல் டிரிப்யூனலாக இருந்தாலும் சரி, சென்னை மாநகரத்தைப் பொறுத்த மட்டில் ஒரு இண்டஸ்ட் ரியல் டிரிப்யூனலும், 4 லேபர் கோர்ட்டுகளும், ஒரு பிரின்சிபிள் லேபர் கோர்ட்டும் இருக்கின்றன. இன்றைக்கு ஒப்பு நோக்கிப் பார்க்கின்றபோது, ஏறக்குறைய 10,000 வழக்குகள் அங்கே காத்துக் கொண்டிருக்கின்றன. மாதத்திற்கு 10 வழக்குகள் தான் அங்கே பைசல் செய்யப்படுகின்றது. இப்படிப்பட்ட நிலையினைப் பார்க்கின்ற பொழுது இந்த 10,000 வழக்குகளை ஒரு தீர்மானத்திற்கு, ஒரு முடிவிற்கு கொண்டு வர வேண்டு மென்று சொன்னால், இன்னும் பல்லாண்டுக் காலத்திற்கு தொழிலாளர்கள் காத்திருக்க வேண்டியிருக்கின்றது. அத்தகைய நிலைமை மாற்றப்பட வேண்டுமென்றால் அங்கே தொழில் கோர்ட்டுகளிலே தொழில் நீதிமன்றங்களாலே போடப்படக் கூடிய ஜட்ஜுகள் இன்றைக்கு ஜூரிஸ்ட்களாக, சிவில் வழக்கு களையும், கிரிமினல் வழக்குகளையும் நடத்துபவர்களாகவும் அங்கே பெரும்பாலும் நியமிக்கப்படுகிறார்கள். இப்படிப்பட்ட ஜட்ஜுகள் தொழில் வழக்குகளை, தொழிலாளர் பிரச்சினை களைப் புரிந்து கொள்வதற்கு பல மாதங்கள் ஏற்படுகின்றது. பல மாதங்கள் ஏற்பட்டு புரிந்து கொண்ட பிறகு, திடீரென்று அவர்களுக்கு வேலை மாற்றம் ஏற்படுகின்றது. அத்தகைய நிலைமையில்தான் இன்றைக்கு பெருவாரியான வழக்குகள் தொழில் நீதிமன்றங்களிலே தேக்க நிலையை அடைந்திருக்கின்றன

[திரு. ஜி. காளன்] [1991 செப்டம்பர் 16

எனவே அமைச்சரவர்கள் அதற்காக ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டுவந்து 'இண்டஸ்ட்ரியல் டிஸ்பியூட் ஆக்ட்டினுடைய' விதிமுறைகளை மாற்றி, இந்த லேபர் விஷயங் களிலே நன்றாக வாதாடக் கூடிய, சிறப்பு வாய்ந்த, திறமை வாய்ந்த வக்கீல்களையோ, அல்லது தொழிலாளர் பிரச்சினை களை புரிந்துக்கொள்ளக் கூடியவர்களாகவோ, அங்கே ஜட்ஜ்களாக நியமிப்பார்களேயானால், விரைவான முறையிலே, சிறந்த முறையிலே தீர்ப்பதற்கும், உடனுக்குடன தீர்ப்பு வழங்கக் கூடிய முறை ஏற்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அத்தோடு மட்டுமல்லாமல், அங்கே ஜட்ஜ்களாக வருகின்ற வர்கள் தங்களுக்கு பிரமோஷன ஆப்பர்ச்சுனிட்டீஸ் கெட்டுவிடு கின்றது என்று நினைக்கிறார்கள். மற்ற கோர்ட்டுகளிலே இருந்தால் தங்களுக்கு அதிகப்படியான வாய்ப்புகள் இருக்கும். இங்கே தொழில் நீதிமன்றங்களிடம் வருகின்றபோது தங்களை பாதிக்கின்றது என்று கருதுகின்றார்கள். எனவே நிச்சயமாக இந்த அரசு அப்படிப்பட்ட நிலைமை இல்லாமல் தொழில் நீதி மனறங்களில், தொழில் கோர்ட்டுகளில் தேங்கிக் கிடக்கக் கூடிய ஆயிரக்கணக்கான வழக்குகளை உடனடியாக ஒரு முடிவுக்குக் கொண்டு வரக்கூடிய வகையில் அங்கே திறமை வாய்ந்த, இந்தத் துறையிலே நல்ல தேர்ச்சி பெற்ற நல்ல வக்கீல்களை அல்லது அதற்குண்டான முறையிலே ஜட்ஜ்களாக நியமிப்ப தற்கு முவர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்கு தமிழக அரசாங்கம் தொழிலாளர் களை நிரந்தரப்படுத்துவதற்காக ஒரு சட்டம் கொண்டு வந் திருக்கிறது. அந்த சட்டத்தின்படி ஏறக்குறைய 41,000 தொழிலாளர்களுக்கு நிரந்தரமான வேலை வாய்ப்பு அளிப்ப தாகக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். இன்றைக்கு ஒவ்வொரு தொழிற்சாலையும் 50 சதவீதம் தொழிலாளர்களை நிரந்தர மாக வைத்துக் கொள்கிறது. பாக்கி 25 சதவீதம் டெம்பெரரி 'கேஷுவலாக' வைத்துக் கொள்கிறார்கள். பாக்கி 25 சதவீதத்தை 'கான்டிராக்ட்' தொழிலாளர்களாக வைத்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையில் தொழி லாளர்கள் சுரண்டப்படுகிறார்கள். இந்த நிலைமை தடுக்கப்பட வேண்டுமென்று சொன்னால், அந்தச் சட்டத்தை தொழிலாளர் அமைச்சகம் கண்டிப்பாக நிறைவேற்ற வேண்டும். அப்படி அந்த நிலைமைகளைப் பார்க்கிறபோது காண்டிராக்ட் கேஷு வல லேபர் என்று மட்டும் இல்லாமல் அப்பிரண்டிஸ் என்ற முறை யிலேயும் வருகிறபோது அவர்களுக்கு சட்டத்தின்படி சம்பளம் கொடுக்கிறார்களா என்று பார்த்தால் மிக மிக

1991 செப்டம்பர் 16] [திரு. ஜி. காளான்]



குறைந்த கூலி கொடுக்கிறார்கள். கோயம்புத்தூர் பஞ்சாலை யிலே பார்க்கிறபோது பதிலி என்ற முறையிலேயும், டெம்பாரி என்ற முறையிலேயும் ஒவ்வொரு மில்களின் கேட்டிலும் 100க் கணக்கான தொழிலாளர்கள் நின்று கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ரூபாய் 100 கொடுக்கிறார்கள். ஒரு மில்லிலே, 15 ரூபாய் கொடுக்கிறார்கள்; ஒரு மில்லிலே, 12 ரூபாய் கொடுக் கிறார்கள் இன்னொரு மில்லிலே. இப்படிப்பட்ட முறையிலே தொழிலாளர்களிடம் இன்றைக்கு நிர்வாகங்கள் அத்துமீறி நடந்துக் கொள்வது மட்டுமல்லாமல் அவர்களை சுரண்டக் கூடிய நிலைமையும் இன்றைக்கு இருந்துக் கொண்டிருக்கிறது. தொழி லாளர் நல அமைச்சகம் தொழிலாளர்களுக்கு நீதி கிடைக்க கூடிய வகையிலே எங்கெங்கே எல்லாம் தொழிற்சாலைகளிலே நிரந்தர வேலைகள் இருக்கின்றனவோ அங்கேயெல்லாம் நிரந்தர தொழிலாளர்களை போட வேண்டும் என்ற முறையிலே கண்டிப் பான உத்திரவுகளை போட்டு பின்பற்ற வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாலை 4–50

அதேபோல தொழிலாளர் நலன்களை பாதுகாப்பதற்கு, அவர்களுடைய சமூக நலன்களை நிறைவேற்றுவதற்கு இன்ஸ் பெக்டர்ஸ் ஆப் பேக்டரீஸ்களைப் போட்டிருக்கிறீர்கள். தொழிலாளர்களும், தொழிற்சங்கங்களும் குறைபாடுகளை அனுப்புகிறார்கள். விசாரணைக்கு செல்லக் கூடிய நிலையில் இன்ஸ்பெக்டர்ஸ் ஆப் பேக்டரீஸ் என்ன செய்கிறார்கள் என்றால் தொழிற்சங்கங்களை கலந்து ஆலோசிக்கிறாரா அல்லது அந்தப் புகார் மனுக்கள் கொடுத்தவர்களை அழைத்துப் பேசுகிறாரா என்று பார்த்தால் கிடையாது. நேராக நிர்வாகத்திடம் போகிறார்கள் அவர்கள் சொல்வதைக் கேட் கிறார்கள். அவர்கள் இஷ்டத்திற்குப் போய் விடுகிறார்கள். எந்தப் பிரச்சினையும் தீருவது இல்லை. இதனால் அது வேறு விதமான நிலைமைகளிலே தொழிலாளர்களை பழி வாங்கக் கூடிய நிலைமையிலே அது சென்றுக் கொண்டிருக்கிறது.

ஆகவே அப்படிப்பட்ட நிலைமை இல்லாமல் இன்ஸ்பெக்டர் ஆப் பேக்டரீஸ் ஆக இருப்பவர்கள் அந்த இலாகாவிற்கு உண் டான நிலைமைகளை காப்பவர்களாக இருப்பதற்கு கண்டிப் பான முறையிலே அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தி அவர் களுடைய கடமைகளை நிறைவேற்றிட வழி செய்ய வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோன்று தொழிலாளர் நல வாரியம் மூலமாக தொழி லாளர்களிடத்திலே இருந்து 2 ரூபாய் சந்தா வாங்குகிறார்கள். நிர்வாகம் 4 ரூபாய் கொடுக்கிறது, அரசாங்கம் 4 ரூபாய் கொடுக் கிறது. அப்படிக் கோடிக் கணக்கில் ரூபாய்....

[1991 செப்டம்பர் 16

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேசுகிற உறுப்பினர்கள் அனைவருமே தொழிற்சங்க நடவடிக்கைகளோடு தொடர்புள்ள தொகுதிகளைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். எனவே ஒவ்வொருவரும் ஒதுக்கப்பட்ட நேரத்திற்குள்ளாக முடித்துக் கொள்வது நல்லது. அதற்கு மீறி பேசிக் கொண்டே இருப்பீர்களேயானால், உங்களை நிறுத்துவதும் கஷ்டம்—தொழிற்சங்கவாதிகளை.....

**திரு. ஜி. காளன் :** ஆசியாவிலேயே பெரிய தொழிற்பேட்டை வில்லிவாக்கத்திலே இருக்கிறது. இங்கே பேசுவதில் நான் மட்டும் தான் தொழிற் சங்கத் தலைவன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்றைக்குப் பேசுகிற அத்தனை பேரும் தொழிற்சங்க நடவடிக்கைகள் மிகுதியாக இருக்கிற தொகுதிகளைச் சார்ந்தவர்கள். ஆகவேதான் ச ல்லுகிறேன். உங்களை நிறுத்துவதும் கஷ்டம். ஆகவே நீங்க ளாகவே நேரத்தைக் கருதிப் பேச வேண்டும்.

**திரு. ஜி. காளன் :** இன்றைக்கு தொழிலாளர் நல வாரியம் கோடிக்கணக்கான ரூபாயை வசூலிக்கிறது. அந்த நிதியிலிருந்து தமிழக அரசாங்கம் பல கட்டிடங்களைக் கட்டுகிறார்கள். தொழிலாளர்கள் தங்கள் சமூகப் பாதுகாப்பிற்காகத்தான் அங்கே சந்தா செலுத்துகிறார்களே தவிர தமிழக அரசுக்கு சொத்து சேர்ப்பதற்காக அல்ல. எனவே கட்டிடங்கள் என்று சொன்னால் தமிழக அரசினுடைய மானியக் கோரிக்கையில்தான் கட்ட வேண்டும். ஆனால் வரக்கூடிய சந்தாக்களை அங்கே பட்டதாரிகளை உருவாக்குவதற்கும், தொழிலாளர்களின் குழந்தைகள் கல்வி கற்பிக்கவும் செலவிட வேண்டும். தையல் போன்றவைகளில் பயிற்சி கொடுப்பதற்கும் ஏதோ ஒரு சிறு உதவியாக ரூ. 70 ரூபாய் 25 என்று தருகிறார்கள். எனவே அதையெல்லாம் பரிசீலனை செய்து அந்த உதவித் தொகைகளை கணிசமாக அதிகரிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இங்கே பல்வேறு அங்கத்தினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் எங்களுடைய தொகுதியிலே கல்லூரி வேண்டும்; பாலிடெக்னிக்குகள் வேண்டும் என்று கேட்டார்கள். அதற்கு நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அந்த நிதியிலே அதிகப்படியான பணங்கள் இருப்பதால் தொழிலாளர்கள் அதிகமாக இருக்கக்கூடிய இடங்களிலே வில்லிவாக்கம் தொகுதியிலோ அல்லது கோயம்புத்தூர் பகுதியிலோ அல்லது இன்னும் பல இடங்களிலோ அந்தக்கல்லூரியையோ பாலிடெக்னிக்குகளையோ கட்டலாம் என்று நான் கூறிக் கொள்வேன். அது தொழிலாளர்களுக்கும்



1991 செப்டம்பர் 16] [திரு. ஜி. காளன்]

உதவியாக இருக்கும்; அதே நேரத்தில் அரசாங்கத்தின் பிரச்சினைகள் தீருவதற்கும் ஏதுவாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் ஆலோசனையாகக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல தொழிலாளர் மையங்கள் என்று வருகிறபோது ஒரு சில இடங்களில்தான் அந்த சலுகைகளை நீங்கள் விஸ்தரித்து இருக்கிறீர்கள். எங்கெங்கெல்லாம் தொழிற்கூடங்கள் இருக்கிறதோ அங்கேயெல்லாம் அதை நீங்கள் கண்டிப்பாக விஸ்தரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாலை 4—55

அதேபோல ஈ.எஸ்.ஐ. மருத்துவமனையை பார்க்கிறபோது அது இன்றைக்கு மிகப் பெரிய அலங்கோலமாக நடந்துக் கொண்டிருக்கிறது. அதிலே தொழிலாளர்களும் சந்தா செலுத்துகிறார்கள். முதலாளிகளும் காண்டிரிபியூஷன் என்ற வகையில் இரண்டு மடங்கை செலுத்துகிறார்கள். ஆனால் அங்கே பார்க்கிறபோது, அய்யனாவரத்திலே இருக்கிற மருத்துவமனையையோ அல்லது கோயம்புத்தூரிலே இருக்கிற மருத்துவமனையையோ அல்லது மற்ற மற்ற இடங்களில் இருக்கிற மருத்துவமனைகளைப் பார்க்கிறபோது அரசு பொது மருத்துவமனைகள் இருக்கிறதைவிட மோசமாக இருக்கின்றது. தொழிலாளர்கள் மாதா மாதம் 70 ரூபாய் 100 ரூபாய் என்று அதற்கு காண்டிரிபியூஷன் கொடுக்கிறபோது அங்கே பிரத்தியேகமான, வசதிகள் இருக்கிறதா என்று பார்த்தால் கிடையாது. ஈ.எஸ்.ஐ மூலம் அளிக்கப்படும் வைத்திய வசதிகள் அரசு பொது மருத்துமனைகளைவிட சீர்கெட்டு உள்ளது. அதற்கு ஒரு முக்கியமான காரணம் பேமலி மெம்பர்ஸஂுக்கும் அங்கே ட்ரீட்மெண்டை பண்ணுகிறோம். அதனால் மொத்தமாக மோசமாக போய் இருக்கிறது. அந்த மாதிரி இல்லாமல் இன்ஷூர்டு பெர்சன்ஸ்க்காவது ஒரு விசேஷ மருத்துவ வசதியைத் தரக்கூடிய வகையிலே நீங்கள் தீர்மானிக்க வேண்டும். கே.கே. நகரில் இருக்கக் கூடிய ஈ.எஸ்.ஐ. மருத்துவமனையை இன்றைக்கு கார்ப்பரேஷன் எடுத்துக் கொண்டிருக்கிறது. அங்கே தரமான உணவு போடுகிறார்கள்; நல்ல தரமான மருத்துவ வசதி கொடுக்கிறார்கள்; அந்த முறையிலே அதே போன்று நம் தமிழக அரசின் கீழ் வரக்கூடிய அந்த மருத்துவமனைகளையும் சுகாதார முறையிலே பார்ப்பதற்கும், அங்கே சிறந்த மருத்துவர்களை நியமிப்பதற்கும், சிறந்த மருத்துவ வசதிகளை கொடுப்பதற்கும் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக இன்றைக்கு மூடப்பட்ட மில்களை நாம் பார்க்கின்றபோது இந்த தொழிலாளர் அமைச்சருடைய ஆலோசனையில் அதிகப்படியாக ஒன்றும் குறிப்பிடப்படவில்லை.

[திரு. ஜி. காளன்] [1991 செப்டம்பர் 16

ஒவ்வொரு அரசாங்கம் வருகின்றபோதும் மூடப்பட்ட மில்களை நாங்கள் திறப்போம் என்ற வாக்குறுதி கொடுக்கிறார்கள். வசந்தா மில், ராதாகிருஷ்ணா மில், மது மில், ஜெயலட்சுமி மில் போன்ற மில்கள் மூடப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு பூராவும் ஏன் போகிறீர்கள்? பிறகு நீங்களே பேசி, அமைச்சரே பதில் சொல் கின்ற அளவிற்கு போய்விடும்.

**திரு. ஜி. காளன்:** தலைவர் அவர்களே, மூடிய மில்களை ஆக்கப்பூர்வமாக தமிழக அரசு திறப்பதற்கும், திறக்கின்ற வரை யிலே அந்த பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு கணிசமான நிவாரணம் வழங்குவதற்கும் முன்வர வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். மால்கோ என்று மேட் டூரிலே ஒரு தொழிற்சாலை இருக்கிறது. அது மிக முக்கியமான பிரச்சினை. அந்த தொழிற்சாலையை ஏற்படுத்துகின்றபோது அங்கே மின்சாரம் கணிசமாகச் சீப்பர் ரேட்டிலே கொடுப்பதாக வாக்குறுதி அளிக்கப்பட்டது. அலுமினியம் தயாரிப்பதற்கு மின்சாரம்தான் மூலப் பொருள் ஆகும். அந்த மின்சாரத்திற்கு கடந்த தி.மு.க. ஆட்சியிலே அதிகப்படியான ரேட்டை ஏற்றியது மட்டுமல்லாமல் அந்த தொழிற்சாலையினுடைய மொத்தக் கடனையும் ஒரேயடியாக கட்டினால்தான் மின்சாரம் தருவோம் என்று சொன்ன நிலையினால் இன்றைக்கு மால்கோ தொழிற் சாலை மூடப்பட்டிருக்கிறது. அதனால் தமிழகத்திலே மிக முக்கியமான அலுமினியத்திற்கு இன்றைக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த அலுமினியம் தொழிற்சாலைக்கு ஏற்கனவே அரசு அளித்த அந்த உறுதி மொழிப்படி அதற்குண்டான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து, அங்கே உடனடியாக அந்த அலுமினியம் உற் பத்திச் செய்வதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று தமிழக அரசைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். அதே போன்று குறைந்தபட்ச கூலி நிர்ணயம் செய்வதைப்பற்றி அமைச்சர் அவர் கள் அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். அதனால் ஒன்றைக் கேட்டுக் கொள்கிறேன். குறைந்த பட்சக் கூலி என்பது மனிதன் உடலிலே உயிரைத் தக்க வைத்துக் கொள்வதற்கு, ஒட்டி வைத் துக் கொள்வதற்கு என்பது தான் குறைந்த பட்சக் கூலி. ஆனால் அப்படிப்பட்ட குறைந்த பட்சக் கூலி ஒவ்வொரு தொழிலுக்கும் வேறுபடுகின்றது. அத்தகைய நிலைமை இல்லாமல் தமிழகம் பூராவும் எல்லாவிதமான குறைந்த பட்ச கூலி சட்டத்தையும் ஒரே மாதிரியாக அமைக்க வேண்டும். குறிப்பாக 15 ரூபாய் என்பது இன்றைக்குள்ள விலைவாசி ஏற்றத்திலே போதாது. அதை அதிகரித்து 30 ரூபாயாவது தினக் கூலியாக நிர்ணயம் செய்யக்கூடிய வகையில், எல்லா தொழிலாளர்களுக்கும் குறைந்த



1991 செப்டம்பர் 16] [திரு. ஜி. காளன்]

பட்சக் கூலியைத் தக்கவாறு மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டு, இந்தச் சந்தர்ப்பத்தை கொடுத்ததற்கு நன்றி கூறி, உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. வெ. பழனிசாமி :

**திரு. வெ. பழனிச்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் மானிய கோரிக்கையின் மீது பேசு கின்ற வாய்ப்பினை தந்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள், கடந்த தி.மு.க. வினு டைய ஆட்சிக் காலத்திலே, தொழிலாளர்களுக்காக புரட்சித் தலைவர் அரசால் அளிக்கப்பட்ட இன்ஷூரன்ஸ் திட்டம் ரத்து செய்யப்பட்டதை, மீண்டும் இந்த ஆட்சியிலே கொண்டு வருவதற்கான வாய்ப்பை உருவாக்கித் தந்ததற்கு ஒட்டு மொத்தமாக தொழிலாளர்களுடைய சார்பாக எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

திருப்பூரில் இன்றைக்கு தொழிலாளர்களுக்காக அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் என்ற ஒன்று இருக்கிறது. அந்த தொழிற் பயிற்சி நிறுவனத்திற்கு தளவாடங்கள் போதாமையாக இருக்கின்றன என்பது பல்வேறு கட்டங்களில் குறிப்பிட்டு காட் டப்பட்டன. தளவாடங்கள் கொள்முதல் செய்வதற்காக நிதி ஒதுக்கீடு செய்வதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை, வணக்கத்தைத் தெரி வித்துக்கொள்வதோடு அந்த தொழிற் பயிற்சி நிலையம் தற் போது வாடகைக் கட்டிடத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதையும், அந்த வாடகை மிக அதிகமாக இருக்கின்ற சூழ் நிலை இருந்து வருவதால் அந்த அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தை தொழிலாளர் சேம நல நிதியிலிருந்து சொந்தமாக கட்டித் தருவதற்கு உண்டான சூழ்நிலைகளை உருவாக்கித் தர வேண்டுமென்று வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

மாலை 5-00

பொதுவாக திருப்பூர் நகரத்தில் பனியன் தொழிலிலும் ஜின்னிங் பேக்டரி தொழிலிலும் மிக அதிகமான பெண்கள் தொழிலாளர்கள் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். சுமார் 25 ஆயிரத்திலிருந்து 30 ஆயிரம் பேருக்கும் மிக அதிகமாக பெண் தொழிலாளர்கள் பணியாற்றுகின்ற நகரமாக திருப்பூர் நகரம் இருந்து கொண்டிருக்கிறது. இந்த தொழிலாளர்களு டைய சட்டங்கள் இரவு நேரங்களில் பெண்கள் பணியாற்றக் கூடாது என்ற நிலைமை இருந்தாலும் கூட காலத்தின் சூழ்நிலை யின் காரணமாக, அந்த குடும்பங்களின் சூழ்நிலையின் காரணம் மாக இரவு நேரங்களில் 9, 10 மணி வரை பணியாற்ற வேண்டிய

நிலைமையை முன்னிட்டு அவர்கள் இரவு நேரங்களில் பணியாற்றிவிட்டு வீடு செல்வதற்கு அவர்களுக்கு பாதுகாப்பு அற்ற சூழ்நிலையின் காரணமாக அவர்களுக்கு பஸ் போக்குவரத்து வசதிகளை இந்த அரசு செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டு இருப்பதைப் போல சம்பந்தப்பட்ட தொழிற்சாலையின் சார்பாக அந்த ஏற்பாடு செய்யப்படும் என்று குறிப்பிட்டு இருந்தாலும் கூட திருப்பூர் நகரத்தைப் பொறுத்தவரையில் அனைத்து தொழிற் சாலைகளும் உயர்ந்த அளவிலோ, பெரிய அளவிலோ இல்லை. சின்னஞ்சிறிய தொழிற்சாலைகள் ஏராளமாக இருப்பதால் தனிப் பட்ட முதலாளிகள் மூலமாக செய்வது ஒரு பக்கம் இருந்தாலும் போக்குவரத்துத் துறையின் மூலமாக ஓரளவுக்கு செய்து தர வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் இன்றைக்கு அரசு துறையில் பெண்களுக்கு 30 சதவீதம் வாய்ப்புத் தரவேண்டும் என்ற நிலையை எடுத்து இருக்கிற சூழ்நிலையில் இன்றைக்கு ஆலைகளில் பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய பெண் தொழிலாளர்கள் கடந்த 15, 20 ஆண்டுகளுக்கு முன்னால் உதாரணமாக மதுரையில் உள்ள மதுரா மில்ஸ், திருப்பூரில் உள்ள தனலட்சுமி மில்ஸ், எஸ்.ஆர்.சி. மில்ஸ் போன்ற பஞ்சாலைகளில் மிக அதிகமான பெண் தொழிலாளர்கள் பணியாற்றிக்கொண்டு இருந்தார்கள். இன்றைக்கு புதிய பெண் தொழிலாளர்களுக்கு வாய்ப்புத் தராமல் ஏற்கனவே பணியாற்றிக்கொண்டு இருக்கிற பெண் தொழிலாளர்களை ஒவ்வொரு கட்டத்திலும் அவர்கள் இன்றைக்கு வேலை நீக்கம் செய்து பெண் தொழிலாளர்களே வேலை செய்ய முடியாத அளவுக்கு வாய்ப்பு அற்ற ஒரு சூழ்நிலையை இன்றைக்கு உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, பெண்களுக்கு முக்கியத்துவம் தருகிற, பெண்களுக்கு சம வாய்ப்பு தர வேண்டும் என்று கோருகிற நமது புரட்சித் தலைவி அவர்களுடைய அரசின் வேண்டுகோளின்படி 30 சதவீதம் ஒவ்வொரு தொழிற்சாலையிலும் பெண்களுக்கு வேலை வாய்ப்பு தரக்கூடிய ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்கித்தர வேண்டும் என்று நான் வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் திருப்பூர் நகரத்தில் இன்றைக்கு சின்னஞ்சிறிய வர்கள் எல்லாம் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். 8 வயது முதல் 60 வயது வரையில் உள்ளவர்கள் எல்லாம் பணியாற்றக் கூடிய அளவுக்கு பல்வேறு வகையான தொழில் சூழ்நிலைகள் திருப்பூர் நகரத்தில் இருக்கின்றன. குறிப்பாக 8 வயது முதல் 12, 14, 20 வயது வரையில் உள்ள இளைஞர்களாக இருக்கக்கூடிய வர்கள் இன்றைக்கு திருப்பூர் நகரத்தில் 25 சதவீதம், 30 சதவீதம் பேர்கள் சின்னஞ்சிறியவர்கள் பணியாற்றிக் கொண்டிருக்



கிறார்கள். சிவகாசியைப்போல. ஆனால், தொழிற்சாலைகளில் பணியாற்றக்கூடிய அந்த தொழிலாளர்கள் கல்விச் சாலைக்குச் செல்ல முடியாமல் வறுமையின் காரணமாக, குடும்ப சூழ்நிலையின் காரணமாக அவர்கள் நேராக வேலை வாய்ப்புத் தேடி அங்கே பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, குறைந்தபட்ச ஆரம்ப கல்வி கூட அவர்களுக்கு இல்லாத சூழ்நிலையில் அவர்கள் தொழிற்சாலைகளில் பணியாற்றிததான் அந்த குடும்பத்தை காப்பற்ற வேண்டிய நிலைமை இருப்பதால் அவர்கள் அங்கே பணியாற்றிய நேரம் போக நாள் ஒன்றுக்கு ஒரு மணி நேரமாவது அவர்களுக்கு கல்வி வசதி செய்து கொடுக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை அரசு உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கட்டாயமாக கல்வி கற்க வேண்டும் என்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய வேண்டுகோளின்படி அவர்களுக்கு, கல்வி கற்க செல்ல முடியாத பாவப்பட்ட ஜென்மங்களாக இருக்கின்ற அந்த சின்னஞ்சிறிய தொழிலாளர்கள், சின்னஞ்சிறிய சிறுமிகளுக்கு எல்லாம் அந்த கல்வியை கற்கிற ஒரு வாய்ப்பை இந்த அரசு உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் எங்களுடைய மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்ற முறையில் அவர்களுக்குத் தெரியாதது ஒன்றும் இல்லை. ஒரு இலட்சம் தொழிலாளர்கள் அங்கே பனியன் பேக்டரி, பவர்லூம் பேக்டரி, ஜின்னிங் பேக்டரி, பாத்திரத் தொழில் போன்ற பல்வேறு தொழில்கள் சூழ்ந்து இருக்கிற பகுதியில் இன்றைக்கு வீட்டு வசதி இல்லாமல் தவித்துக்கொண்டிருக்கிற நிலைமை இருக்கிறது. தாம் சம்பாதிக்கிற ஊதியத்தில் குறிப்பிட்ட விகிதத்தை வீட்டு வாடகையாக தரவேண்டிய நிலைமையின் காரணமாக அங்கே தொழிலாளர்களுக்கு மாத வாடகை அடிப்படையிலோ அல்லது பணத்தை தவணை முறையில் கொடுத்து விலைக்கு வாங்கும் முறையிலோ 10 ஆயிரம் வீடுகளையாவது தொழிலாளர்களுக்கு என்று தனியாக கட்டிக் கொடுக்கின்ற சூழ்நிலையை அருமை தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் சிபாரிசு செய்து, கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் பத்திரிகை நண்பர்கள் எல்லாம் பழக்கப்பட்டவர்கள் எல்லாம் சில கருத்துக்களைச் சொன்னார்கள். உழைக்கும் பத்திரிகையாளர்கள் செய்தித்தாள்களில் பணியாற்றக் கூடியவர்கள் இவர்களுக்கு எல்லாம் ஊதிய போர்டால் தரப்பட்ட அந்த சலுகைகளை பல்வேறு பத்திரிக்கையாளர்களுக்கு அந்த சம்பள உயர்வை வழங்காமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். அதேபோல் நீண்ட நெடுங்காலமாக அவர்கள் ஹவுசிங்

யூனிட் வீட்டு வசதி கேட்டு அரசுக்கு முறையீடு தந்து கொண்டிருக்கிறார்கள் ஆகவே மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் காலத்தில் அந்தப் பிரச்சினையை தீர்க்கக்கூடிய ஒரு சூழ்நிலையில் நாட்டில் பல்வேறு கருத்துக்களை உருவாக்கித் தருகிறார்கள், எங்கள் கருத்துக்களை எல்லாம் எழுதிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்தப் பத்திரிக்கையாளர்களை ஊக்கப்படுத்துகிற வகையில் அவர்களுக்கு ஊதியங்கள் கிடைக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உதிரி தொழிலாளர்களாக இருக்கின்ற கட்டிடத் தொழிலாளர்கள் இன்றைக்கு அவர்களுக்கு குறைந்தபட்ச கூலி நிர்ணயச் சட்டங்கள் உருவாக்கப்பட்டும் கூட இன்றைக்கும் பல்வேறு இடங்களில் கட்டிடத் தொழிலாளர்கள் கொத்தடிமைகளைப் போல சட்டப்படி சம்பளங்கள் வழங்கப்படாமல் இருந்து கொண்டிருக்கிற நிலைமைகளை பல்வேறு கட்டங்களில் பார்க்கிறோம்.

மாலை 5-05

இன்றைக்கு கட்டிடத் தொழிலாளர்களுடைய சம்பளம் ஊருக்கு ஊர், நகரத்திற்கு நகரம் வித்தியாசப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதையும் ஆகவே, அவர்களுக்கு முறையான, ஏற்கெனவே சட்டப்பிரகாரம் உருவாக்கிய சம்பளத்தைக் கொடுக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கித் தரவேண்டும். குறிப்பாக, கோவை மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். எங்களுடைய மாவட்டத்தைச் சேர்ந்த வசந்தா மில்ஸ், இராதாகிருஷ்ணா மில்ஸ், காவேரி ஸ்பின்னிங் மில்ஸ், ஜெயலட்சுமி மில்ஸ், மதர்ஸ் ஸ்பின்னிங் மில்ஸ் போன்ற ஆலைகள் வெகுநீண்ட நெடுங்காலமாக மூடிக்கிடக்கின்றன. அரசினுடைய குறிப்பிலே அவர்களுடைய பிரச்சினைகளை, பல்வேறான முறையிலே, விவரிக்கப்பட்டு இருப்பதை நான் படித்திருந்தாலும் அவை எழுத்தளவிலே நின்றுவிடாமல் மிக வேகமாக முடித்து நம்முடைய புரட்சித் தலைவியினுடைய ஆட்சிக் காலத்தில் மூடப்பட்ட ஆலைகளே இல்லை என்கிற நிலைமையை உருவாக்கித் தரவேண்டுமென்று நான் வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன். எனக்கு முன்னாலே பேசிய அருமை மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப் போல தொழிலாளர்களுடைய வழக்குகள் இன்றைக்கு பல்லாயிரக்கணக்கான வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன. ஆனால் அந்த வழக்குகளெல்லாம் ஆமை வேகத்திலே சென்றுகொண்டிருக்கின்றன. தொழிலாளர்கள் நீதிமன்றத்திற்குச் செல்வது என்று சொன்னாலே பயப்படுகிறார்கள். எப்படியாவது ஒரு கட்டைப் பஞ்சாயத்து பண்ணியாவது காசை வாங்கிக்கொண்டு செல்ல வேண்டுமே தவிர நீதி மன்றத்திற்குச் சென்று நீதியை நாம் எதிர்பார்ப்பது என்பது, அதற்குள் நம்முடைய காலமே முடிந்துவிடும் என்ற நிலை இருந்துகொண்டிருக்



கிறது. ஆகவே அவர்களுடைய வழக்குகளை விசாரிப்பற்கு, தொழிலாளர்களுடைய வழக்குகளை விசாரிப்பதற்கென்றே ஸ்பெஷலாகவே, அதிக பட்சமான நீதிமன்றங்களையும், நீதிபதிகளையும் நாம் உருவாக்கித்தரவேண்டும். இப்படியே காலங்கள் நீடிக்குமேயானால் அந்த வழக்குகள், தேங்கிக் கிடக்கின்ற வழக்குகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படும். இப்போது தீபாவளி நெருங்கிக்கொண்டிருக்கிற சூழ்நிலை, போனஸ் பிரச்சினையின் காரணமாக தொழிற் தகராறுகள் ஆங்காங்கே உருவாகிற நிலைமைகள், பொதுவாகவே இந்த நேரத்திலே ஒன்றை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நான் ஒரு கட்சியை மட்டும் குறிப்பிட்டுச் சொல்ல விரும்பவில்லை. போனஸ் பிரச்சினையில் தகராறுகள் வரும் என்று தெரிந்திருந்தும்கூட இறுதி நேரத்திலே, 10, 15 நாட்கள் இருக்கும்போது போனஸ் தகராறுகளை உருவாக்குவது, எப்படியாவது அதை வேலைநிறுத்தமாக உருவாக்குவது, அதிலே அரசியல் ஆதாயம் தேடுவது என்கிற நிலையிலேயெல்லாம் சில கட்சிகள் இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, போனஸ் தகராறு வரும் என்பது அனைவருக்கும் தெரிந்த நிலைமை. அதை ஆரம்பத்திலேயே தீர்க்கவேண்டுமென்ற நிலையோடு, அரசு முன்னின்று செய்து தரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டு, எந்தப் பிரச்சினைகளும் வராதவாறு நிலைமையை உருவாக்கித் தரவேண்டுமென்று நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். பொதுவாகவே, தொழிற்சங்க வர்க்கம் என்பது இன்றைக்கு பல்வேறு கட்டங்களில் பல்வேறாக பணியாற்றிக்கொண்டிருக்கிறது. பொதுவாக, என்னுடைய அனுபவத்தின் வாயிலாக சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தொழிற்சங்க அமைப்பு என்பது இன்றைக்கு சட்டத்திற்கு உட்பட்டு சிலபகுதிகளில் செயல்படுகின்றன. ஆனால் சட்டமே தெரியாத தொழிற்சங்கத் தலைவர்களெல்லாம் இன்றைக்குப் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். ஆங்காங்கே, சிறு பகுதிகளிலே, 10 பேர், 15 பேர் பணியாற்றிக்கொண்டு இருக்கிற ஒரு பகுதியில் யாரோ ஒருவன் அங்கே நன்றாக வாய் பேசக்கூடியவனாக இருந்தால், அவன் தொழிற்சங்கத் தலைவனாகி விடுகிறான். தொழிலாளர் சட்டங்கள் விதிமுறைகள் தெரியாமல் அங்கே வேலை நிறுத்தம் செய்வதும், அவர்களை பலாத்காரப்படுத்துகின்ற நிலைமைகளும் உருவாகின்றன. ஒரு பக்கம், தொழிலாளிக்காகப் பேசுகிறான் என்று சொல்லுகிற நிலைமை இருந்தாலும், அந்தத் தொழில் பட்டுப்போய்விடுகிறது. இன்றைக்கு, தமிழ்நாடு முழுவதும், பல்வேறான இடங்களிலே தொழில்கள் நடக்கின்றன. உதாரணமாக எடுத்துக்கொள்வோம் என்று சொன்னால், ஜின்னிங் பேக்டரி என்று வைத்துக்கொள்வோம்; பனியன் பேக்டரி என்று வைத்துக்கொள்வோம், அந்தந்த ஊர்களுக்கு ஏற்றபிரகாரம் கூலிகள் இன்றைக்கு வித்தியாசப்படுகிறது. திருப்பூரை எடுத்துக்கொள்வோமானால், திருப்பூர் தொழிற்சங்கம் நிறைந்த பகுதி, அங்கே இருக்கிற தொழிற்

சாலைகளிலே உரிமையோடு போராடி அதிகபட்சம் ஊதியங்
களையும் உரிமைகளையும் பெறுகிறார்கள். அதே தொழில்
இன்னொரு ஊரிலே இருக்குமானால் அங்கே தொழிற்சங்க நட
வடிக்கை இல்லாமல் இருக்கின்ற ஒரு காரணத்தினாலே அங்கே
கூலி உயர்வும் இதர உரிமைகளும் இல்லை. இந்த வித்தியாசத்
தின் காரணமாக ஒரு பகுதியிலே உற்பத்திச் செலவு அதிகமா
கிறது. இன்னொரு பகுதியிலே உற்பத்திச் செலவு குறைவாக
இருக்கிறது. உதாரணமாக ஜின்னிங் பேக்டரியை எடுத்துக்
கொண்டால் திருப்பூரிலே அதிகபட்சமான கூலி, உரிமைகள்
தரப்படுகின்றன. ஆனால் தேனி, போடி போன்ற பல்வேறு
பகுதிகளிலே உள்ள ஜின்னிங் பேக்டரியினுடைய அந்தச் சம்பள
உயர்வு வித்தியாசப்படுவதால் உற்பத்திச் செலவு இங்கே அதிக
மாகி, அங்கே குறைந்துவிடுகிறது. இதனால் எதிர்காலத்திலே
அதிகமாக இருக்கிற இடத்திலே தொழிற்சாலை பாதிக்கப்பட்டு
அந்தத் தொழிற்சாலை முடமாக்கப்படுகிற நிலைமையும்,
உரிமைகளை பெறமுடியாத இடங்களிலே தொழிசாலை நன்றாக
இருக்கிற சூழ்நிலைகளும் இன்றைக்கு உருவாகிக்கொண்டிருக்
கின்றன. ஆகவே, எந்தத் தொழிற்தகராறு வந்தாலும், தமிழ்
நாடு முழுவதும், ஒட்டுமொத்தமாக ஒரேமாதிரியாக இருக்கிற
நிலைமை இருக்குமேயானால், உற்பத்திச் செலவு ஒரே மாதிரி
யாக இருக்கும். தொழிலும் பாதிக்கப்படாது. தொழிலாளர்
களுடைய நலனும் பாதிக்கப்படாது. இப்படிப்பட்ட சூழ்நிலை
கள் பல்வேறு பகுதிகளிலே இருந்து கொண்டிருக்கின்றன.

அதேபோல, பவர்லூம் தொழிலிலும், இதே நிலைமைதான்
இருக்கிறது. ஊருக்கு ஊர் வித்தியாசம் இருந்து கொண்டிருக்
கிறது. பவர்லூம் தொழிலாளர் தொழிற்சங்கத்தினுடைய அரங்
கத்திலே பணியாற்றக்கூடிய பவர்லூம் தொழிலாளர்களுக்கு
அங்கே சம்பள உயர்வு, போனஸ், இதர சலுகைகள் ஏராளமாகக்
கிடைக்கின்றன. ஆனால் தொழிற்சங்கத்தினுடைய ஆக்டிலே
கட்டுப்படாத பகுதிகள், தொழிற்சங்க அரங்குகள் அமைக்க
முடியாத பகுதிகளிலே அதேபோன்ற உரிமைகள் கிடைப்ப
தில்லை. அதனால் இந்தப் பகுதியிலே இருக்கிற பேக்டரிகள்
மாறவேண்டிய சூழ்நிலையும், தொழில் பாதிக்கக்கூடிய சூழ்நிலை
யும் இன்றைக்கு உண்டாகிக்கொண்டிருக்கின்றன.

மாலை 5-10

இன்றைக்கு ஓட்டல் தொழிலாளர்களின் நிலைமை பல்வேறு
நிலைமைகளிலே இருந்து கொண்டிருக்கிறது. ஓட்டல் தொழி
லாளர்களைப் பொறுத்த வரையில் கொத்தடிமைகளைப் போல
வைத்துக் கொண்டிருக்கின்ற ஓட்டல்கள் ஏராளமாக இருக்கின்
றன. வெறும் சாப்பாட்டைப் போட்டுவிட்டால் போதும் என்ற
நிலைமைகளெல்லாம் இருந்து கொண்டிருக்கின்றன. அவர்களுக்



காகப் பல்வேறு சட்டங்கள் போடப்பட்டும், இன்றைக்கு அவர்களுடைய உரிமைகள் ஆங்காங்கே பறிக்கப்பட்டு வருகின்றனவே தவிர ஒட்டுமொத்தமாக அவர்கள் பாதிக்கப்பட்டு வருகிறார்கள் என்பதை நான் இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக, புரட்சித் தலைவரவர்களின் ஆட்சிக் காலத்தில் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். கொள்கையளவிலே நான் அதைச் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாகத் தொழிற்சங்கங்களின் தலைவர் என்பவர், அந்தத் தொழிலாளர்களைப் புரிந்துகொண்டவர்கள். அந்தத் தொழிலாளர்களின் மத்தியிலே வாழ்ந்தவர்கள், அந்தத் தொழிலினுடைய தன்மைகளைப் புரிந்துகொண்டவர்கள், தொழிற்சங்கத்தினுடைய தலைவராக வர வேண்டுமென்று சொன்னார்கள். பல்வேறு கட்சிகளைச் சார்ந்தவர்கள் எதிர்த்தாலும், ஆனால் எதிர்காலத்திலே அப்படிப்பட்ட ஒரு நிலைமை வந்தால்தான் தொழில் நலனும் பாதிக்கப்படாது; தொழிலாளர்களினுடைய நலனும் பாதிக்கப்படாது. ஆனால், ஆங்காங்கே இருக்கின்ற கட்சிகளின் பிரச்சினைகளை முன் வைத்துக்கொண்டு, தொழிற்சங்கத்திலே இருக்கக்கூடிய பல்வேறு பிரச்சினைகளைப் பற்றித் தெரியாமல், தொழிலைப் பாதிப்பதற்குரிய சூழ்நிலையெல்லாம் இன்றைக்கு உருவாகிக் கொண்டிருக்கின்றன. ஆகவே அப்படிப்பட்ட நிலைமையில், தொழிற்சங்கத்திலே இருக்கக்கூடியவர்கள் குறைந்தபட்சம் அந்தத் தொழிலினுடைய தன்மைகளை ஓரளவுக்காவது தெரிந்து கொண்டவர்கள், அந்தத் தொழிற்சங்கத்தினுடைய அரங்கத்திலே பணியாற்றினால்தான், ஓரளவுக்கு அந்தத் தொழிலினுடைய நிலைமைகளைப் புரிந்து கொள்ள முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒவ்வொரு பகுதியிலேயும் இருக்கக்கூடியவர்கள், இரண்டிலும் ஒரே கண்பார்வையாக, அந்தத் தொழிலினுடைய தன்மைகள், இலாப நட்டங்களைப் பற்றித் தெரிந்து கொள்ளாமல், குறிப்பாக அந்தத் தொழிலாளர்களுக்கு வாங்க வேண்டுமென்ற முறையிலேயே, உரிமைகளுக்காகப் போராட வேண்டும் என்ற முறையிலேயே செயல்படுவதால் அந்தத் தொழிலும் பாதிக்கப்படுகிறது. ஆகவே, தொழிற்சங்கத்திலே அரங்கத் தலைவராக வரக்கூடியவர்கள், புரட்சித் தலைவருடைய கருத்துக்களின் பிரகாரம் அந்தத் தொழிற்சாலையிலே பணியாற்றியவர்கள், அந்தத் தொழிலாளியாக இருந்தவர், அந்தத் தொழில்களினுடைய தன்மைகளைப் புரிந்தவர், தொழிற்சங்கத்தினுடைய தலைவராக வருவதன் மூலமாக அங்கே அரசியல் காழ்ப்புணர்ச்சிகள், அரசியல் பிரச்சினைகள் தலைதூக்காமல், உண்மையான தொழிலாளர்களினுடைய நலன் பேணிப் பாதுகாக்கப்படக் கூடிய சூழ்நிலை உருவாகும் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டி-

[திரு. வெ. பழனிசாமி] [1991 செப்டம்பர் 16

களுக்கு அப்பாற்பட்ட முறையிலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆங்காங்கே அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாகப் பிரச்சினைகள் ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. வெ. பழனிசாமி. முடியுங்கள்.

**திரு. வெ. பழனிசாமி :** உருவாகும் என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொண்டு, புரட்சித் தலைவரினுடைய ஆட்சியினுடைய காலத்திலே, திருப்பூர் பனியன் தொழிலாளர்களுடைய நீண்ட நெடு நாளைய கோரிக்கையான பஞ்சப்படியைப் பெற்றுத் தந்து, அன்றைக்குத் தொழிலாளர்களினுடைய வாழ்க்கையிலே விளக்கேற்றி வைத்தார்கள். அதைப்போல, புரட்சித் தலைவியினுடைய அரசுக் காலத்திலே, திருப்பூர் பனியன் தொழிலாளர்களுக்கு வீடுகள் போன்ற பல்வேறு அத்தியாவசியமான வசதிகளைச் செய்து தர வேண்டுமென்று அவர்களின் சார்பாகக் கேட்டு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. செ. கு. தமிழரசன்.

**திரு. செ. கு. தமிழரசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மானியத்தின்மீது இந்தியக் குடியரசுக் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களை வழங்குவதற்கு வாய்ப்பு தந்தமைக்காக என்னுடைய நன்றியை முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன்.

நேரத்தின் அருமை கருதி, என்னுடைய உரையை மிகச் சுருக்கமாக நிறைவு செய்து கொள்ளுவேன்.

ஒரு நாடு வளர்ச்சி அடைய வேண்டுமானால் தொழில் துறையிலே அந்த நாடு வளர்ச்சியடைய வேண்டும். தொழில்துறை வளர வேண்டுமானால் தொழிலாளர் நலன் செம்மையாகப் பாதுகாக்கப்பட வேண்டும்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அந்த வகையிலே தொழிலாளர் நலத்தைச் செம்மைப்படுத்துவதற்கு இந்த அரசு பல்வேறு திட்டங்களை இந்தக் கொள்கைக் குறிப்பிலே எடுத்துக் கூறியிருக்கிறது. அதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனாலும்கூட, ஒரு முக்கியமான கொள்கைப் பிரச்சினையை நாம் நீண்டகாலமாக நிறைவேற்றாமலேயே இருக்கிறோம். அரசியல் சட்டத்திலேயே தொழிலாளர்களுக்கு நிர்வாகத்திலே



1991 செப்டம்பர் 16] [திரு. செ. கு. தமிழரசன்]

பங்கு பெறுகின்ற வகையிலே நாம் தொழிலாளர் நலத்தைப் பாதுகாப்பதை நம்முடைய அரசின் முழு முக்கியக் குறிக்கோளாக வைத்துக்கொள்ள வேண்டுமென்று நாம் சுதந்திரத்தைப் பெற்ற போதே வற்புறுத்தினோம். ஆனாலும்கூட, இதுவரையிலே எந்த அரசும் இதை முற்படுத்துவதற்கு முன் வரவில்லை. மாநில அரசானாலும், மத்திய அரசானாலும், எந்த அரசுமே இன்னமும் நாம் அரசியல் சட்டத்திலே அதை வற்புறுத்திக் கொண்டிருக்கிறோமே தவிர செயல்படுத்துவதற்கு யாரும் முன்வரவில்லை.

நிர்வாகத்திலே தொழிலாளர்களுக்குப் பங்கு தருவதன்மூலம் தான் தொழிலாளர்களுக்கு உண்மையான ஆர்வத்தையும், ஊக்கத்தையும் நம்மால் தர முடியும். எனவே, நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள், இந்தப் புரட்சிகரமான திட்டத்தை தமிழகத்திலே அமல்படுத்தி இந்தியாவிற்கே எடுத்துக்காட்டாக இதைச் செயல்படுத்த வேண்டுமென்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாலை 5-15

பொது நிறுவனங்கள் ஆனாலும், அரசு நிறுவனங்கள் ஆனாலும், எல்லா தொழிற்சாலைகளிலும் விசேஷ பிரதிநிதிகளை, அதனுடைய நிர்வாகத்திலே பங்குகொள்கிற வகையிலே புதிய சட்டத்திருத்தத்தைக் கொண்டு வர வேண்டுமென்று நான் இங்கே வலியுறுத்த விரும்புகிறேன்.

நம்முடைய தொழிலாளர் ஆணையகத்திலே, பெண்களுக்காக ஒரு தனிப் பிரிவைச் செயல்படுத்தி இருப்பதை, நம்முடைய கொள்கைக் குறிப்பிலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நான் இதை மனப்பூர்வமாக வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், இன்றைக்குப் பார்த்தால், அது ஓட்டலானாலும், ஜவுளி அங்காடிகள் ஆனாலும், எந்த நிறுவனம் ஆனாலும், அங்கெல்லாம் '' சேல்ஸ்மேன் '' என்கின்ற வகையிலே, '' ரிசப்ஷனிஸ்ட் '' என்கிற வகையிலே, பெண்கள்தான் காட்சிப் பொருட்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் வர்த்தக நிறுவனங்கள் எல்லாவற்றிலும் கண்கூடாகப் பார்க்க முடியும். ஒரு 500 ரூபாய்க்கும், 600 ரூபாய்க்கும், படித்து பட்டமில்லாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்ற பெண்கள் ஆதரவற்ற பெண்கள் இன்றைக்கு எல்லா வர்த்தக நிறுவனங்களிலும் காட்சிப் பொருட்களாக உட்கார்ந்து கொண்டிருக்கக்கூடிய வேதனையை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இப்படிப்பட்ட நிலைமையிலே, நம்முடைய தொழிலாளர் ஆணையகத்திலே, பெண்களுக்கு ஒரு தனிப் பிரிவை ஏற்படுத்தியிருப்பதை நான் இந்த நேரத்திலே வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. செ. கு. தமிழரசன்] [1991 செப்டம்பர் 16

தமிழ்நாட்டிலே மட்டும் இன்றைக்கு எட்டு மில்கள் மூடப்பட்டிருக்கின்றன. சென்னையிலே கூட பி. & சி. மில்லும், ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற்சாலையும் மூடப்பட்டிருக்கின்றன இதன் காரணமாக, ஏறத்தாழ 11 ஆயிரம் தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள் வடசென்னை என்றாலே நமக்கு நினைவுக்கு வருவது பி அன்ட் சி மில் தான். பெரம்பூர் என்றாலே உடனே நினைவுக்கு வருவது பி அன்ட் சி மில்தான். ஆக அவ்வளவு புராதனம் மிக்க அந்த பி அன்ட் சி மில் இன்றைக்கு மூடப்பட்டு, 8,000-க்கும் மேலே தொழிலாளர்கள் வேலையில்லாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதன்மூலம் பல குடும்பங்கள் இன்றைக்கு வேதனையில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கின்றன. பி அன்ட் சி மில்லைத் திறப்பதற்கு நம்முடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் சிறப்பான முயற்சிகள் எடுத்துக்கொண்டு வருகிறார்கள் என்பதை அறிந்து நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். தவிர, விரைவில் இவைகளைத் திறப்பதற்கு இந்த அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் நான் வற்புறுத்த விரும்புகிறேன்.

குழந்தைத் தொழிலாளர்கள், பெண் தொழிலாளர்கள் எல்லாம் மிக அதிகமான வகையிலே தொழிற்சாலைகளிலே பயன்படுத்தப்பட்டு வருகிறார்கள். சிவகாசி போன்ற பகுதிகளிலும், குடியாத்தம் போன்ற பகுதிகளிலும், பட்டாசு தொழிற்சாலைகளிலும், தீப்பெட்டித் தொழிற்சாலைகளிலும் மிக அதிகமான சிறுவர்கள் பயன்படுத்தப்படுகிறார்கள். இவர்களை இப்படிப் பயன்படுத்துவதும், ஆண்டுக்கொரு முறை 40 பேர் அல்லது 50 பேர் விபத்தில் இறப்பதும் வாடிக்கையாகிக் கொண்டு வருகிறது. அதற்குப் பின்னாலே, நாம் கமிஷன் போடுகிறோம்; விசாரிக்கிறோம். ஆனால், முடிவில் எந்தத் தொழிற்சாலையும் இதுவரையிலே மூடப்பட்டதாக இல்லை. எனவே, குழந்தைத் தொழிலாளர்களைப் பயன்படுத்துகிற எந்தத் தொழிற்சாலையானாலும், எந்த நிறுவனம் ஆனாலும் மிகக் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, அதனுடைய 'லைசென்ஸை' ரத்து செய்து, ஒருமுறை மூடினால்தான் தொடர்ந்து குழந்தைத் தொழிலாளர்களைப் பயன்படுத்துவதற்கு அச்சப்படுவார்கள். எனவே, குழந்தைத் தொழிலாளர்கள் விஷயத்தில் இந்த அரசு கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் வற்புறுத்த விரும்புகிறேன்.

நான் இன்னொன்றையும் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தொழிலாளர்களுக்கு என்று பல தொழிற்சங்கங்கள் இருக்கின்றன. அவையெல்லாம் ஒரு வரையறுக்கப்பட்ட தொழில்களுக்கான தொழிற்சங்கங்கள். ஆனால், விவசாயக் கூலிகளுக்கு



1991 செப்டம்பர் 16] [திரு. செ. கு. தமிழரசன்]

தொழிற்சங்கங்கள் இருந்தபோதும்கூட, விவசாயக் கூலிகள் வரையறுக்கப்பட்ட தொழிற்சாலையிலோ, தொழிலாளர்களாகவோ இல்லை; சிதறுண்டு கிடக்கிறார்கள்.

விவசாயக் கூலிகளுக்காக நாம் இதுவரையில் எதனையும் முழுமையாகச் செய்யவில்லை என்பதை இங்கே வேதனையோடு நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். குறைந்தபட்சக் கூலிச் சட்டம் இருக்கிறதே, அது விவசாயக் கூலிகளுக்கு ஏதாவது செய்திருக்கிறதா என்றால், நிச்சயமாக இல்லை. விவசாயக் கூலிகள், தஞ்சை மாவட்டத்திலே ஒரு கூலி பெறுகிறார்கள்; கோயம்புத்தூர் மாவட்டத்திலே ஒரு கூலி பெறுகிறார்கள்; வடாற்காடு அம்பேத்கார் மாவட்டத்திலே ஒரு கூலி பெறுகிறார்கள், சென்னையிலே ஒரு கூலி. இப்படி, மாவட்டத்திற்கு மாவட்டம், அங்கே இருக்கிற நிலச்சுவாந்தார்களின் மன இயல்புகளுக்கேற்ப, அவர்கள் கூலி பெறுகிறார்களேயொழிய, ஒரு குறைந்தபட்ச கூலி நிர்ணயம், விவசாயக் கூலிகளுக்கு என்ற வகையிலே நிர்ணயிக்கப்படுகிறதா என்றால், இல்லை. எனவே, அரசு எல்லா தாலுகா அலுவலகங்களிலும் குறைந்தபட்சம் ஒரு டெபுடி தாசில்தாரையாவது நியமித்து, அல்லது தொழிலாளர் நல ஆணையரின் மூலமாக தக்க அதிகாரிகளை நியமித்து, விவசாயக் கூலிகளுக்கு ஒரு குறைந்தபட்சக் கூலி நிர்ணயத்தை கடுமையாகச் செயல்படுத்தியாக வேண்டும் என்பதை இங்கே நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். விவசாயக் கூலிகளுக்கு நேர்மை சம்பளத்தைக் கொடுத்தால்தான், தமிழகத்திலே, பசுமைப் புரட்சியைக் கொண்டு வர முடியும். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பாடியதைப் போல, 'காடு வெளைஞ்சென்ன மச்சான்; நமக்குக் கையுங் காலுந்தானே மிச்சம்' என்று இன்றைக்கும் விவசாயக் கூலிகள் உழைத்து உழைத்து ஓடாகப் போய்க்கொண்டிருக்கிறார்களே தவிர, நல்ல கூலி விகிதத்தை அவர்கள் பெறவில்லை என்பதை நான் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

மாலை 5-20

இன்னொன்றையும் நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். தமிழகத்திலே இன்னமும், ஆயிரக்கணக்கான துப்புரவுத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். பேரூராட்சியிலும், நகராட்சியிலும் அந்தத் துப்புரவுத் தொழிலாளர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இன்னமும் மனிதனுடைய மலத்தை மனிதனே தூக்குகிற கொடுமையைச் செய்து கொண்டிருக்கிறார்கள். விஞ்ஞான பூர்வமாக எல்லா வழிகளிலும் சிந்தித்துக் கொண்டிருக்கிற நாம், இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியை முடித்துக் கொண்டிருக்கிற நாம், இன்னமும், துப்புரவுத் தொழிலாளர்கள் விஷயத்திலே மனிதனுடைய மலத்தை மனிதனே தலையில் தூக்குகிற அந்த கொடுமையை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். பக்கத்திலே இருக்கிற கர்நாடக அரசிலே கூட இந்தக் கொடுமை

[திரு. செ. கு. தமிழரசன்] [1991 செப்டம்பர் 16

முழுமையாக அழிக்கப்பட்டு அங்கே, பாம்பே கக்கூஸ் என்று
சொல்கிறார்களே அவைகளைத் தவிர வேறு எதையும் அங்கே
உள்ளாட்சி நிறுவனங்கள் அங்கீகரிப்பதில்லை. ஆனால், இங்கே
மட்டும், இந்தக் கொடுமை நடந்து கொண்டிருக்கிறது. இதை
உடனடியாக அரசு ஒழித்தாக வேண்டுமென்பதை இங்கே நான்
நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இது போன்று, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனிலே மூட்டை
தூக்குகின்ற தொழிலாளர்கள் ஆயிரக்கணக்கிலே இருக்கின்
றார்கள். இவர்கள் எல்லாம் பணி நிரந்தரம் செய்யப்படாமல்
இருக்கின்றார்கள். இந்த மூட்டை தூக்குகின்ற தொழிலைச்
செய்து கொண்டிருக்கிறவர்களில் (மணியடிக்கப் பெற்றது) ஏழை
கள், தாழ்த்தப்பட்ட மக்கள் நூற்றுக்குத் தொண்ணூறு பேர்.
அவர்கள் தான் மூட்டை தூக்குகிற தொழிலைச் செய்து கொண்
டிருக்கிறார்கள். பல இடங்களிலே மூட்டை தூக்குகிற போது,
விபத்திலே மறைவுற்றிருக்கிறார்கள். ஆனாலும், இன்னமும்
அவர்கள் பணி நிரந்தரம் செய்யப்படவில்லை. ஆகவே மூட்டை
தூக்குகிற தொழிலை செய்பவர்களை, சிவில் சப்ளைஸ் கார்ப்ப
ரேஷனிலே பணி நிரந்தரம் செய்யப்பட வேண்டுமென்பதை நான்
இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

செருப்புத் தைக்கும் தொழிலாளர்கள் பாதை ஓரங்களிலும்
பிளாட்பாரங்களிலும் இருப்பதைப் பார்க்கிறோம். இவர்களுக்கு
எல்லாம் தொழிலாளர் சங்கங்கள் இல்லை. இவர்களுக்கு எந்தச்
சட்டமும் உரிய பாதுகாப்பு அளிப்பதில்லை. பிளாட்பாரங்
களிலே, புயல் காற்றானாலும், மழையானாலும், பிளாட்
பாரங்களிலே உட்கார்ந்து செருப்புத் தைத்துக் கொண்டிருக்கிற
வேதனையை நாம் பார்க்கிறோம். மாண்புமிகு புரட்சித் தலைவர்
எம்.ஜி.ஆர். அவர்கள் அந்தத் தொழிலாளர்களுடைய நலத்திலே
அக்கறை கொண்டு தான், செருப்பு வழங்குகின்ற திட்டத்தைத்
தமிழகத்திலே அமல்படுத்தினார்கள். இந்தத் திட்டத்தின் மூலம்
தீண்டாமை ஒழிக்கப்படுகிறது என்றாலும், இன்னொரு விஷய
மும் அதிலே இருந்தது. இந்தச் செருப்புத் தயாரிக்கிற பணியை
செருப்புத் தைக்கும் தொழிலாளர்களுடைய கூட்டுறவுச் சங்கங்
களுக்கு வழங்கினார்கள். அது இப்போது நின்றுவிட்டது. அதை
மீண்டும் இப்போது செயல்படுத்த வேண்டுமென்பதை நினைவு
படுத்த விரும்புகிறேன். (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. க. அர்ச்சுனன்) :
ஒரு நிமிடத்தில் முடியுங்கள்.

திரு. செ. கு. தமிழரசன் : ஒரு நிமிடத்தில் முடித்து விடு
கிறேன். வேலை வாய்ப்புத் துறையில் ஏராளமானோர் பதிவு
செய்து விட்டு வேலையில்லாமல் இருக்கிறார்கள். ஒருவன்
புதுக் கவிதையிலே சொன்னான். "கோவிலுக்குப் போவது



1991 செப்டம்பர் 16] [திரு. செ. கு. தமிழரசன்]

மட்டுமா மூட நம்பிக்கை, வேலைவாய்ப்பு அலுவலகத்திற்குப்
போவதும்தான் மூட நம்பிக்கை". இதை ஏன் அவன் வேதனை
யோடு சொன்னான் என்றால், ஆண்டுக்கணக்காகப் பதிவு செய்து
விட்டு, வேலை வரும், வேலை வரும் என்று வயதைக் கடத்திக்
கொண்டிருக்கிற வேதனையை நாம் இன்று பார்க்கிறோம்.
எனவே, இன்றைக்குக் கம்ப்யூட்டரைஸ் செய்யப் போகிறோம்.
ஊழல்களை, முறைகேடுகளைத் தவிர்ப்பதற்கு. இந்த நல்ல
திட்டத்தை நான் வரவேற்கிறேன். ஆனாலும் கூட, வேலை
வாய்ப்புத்துறை மிக மிக அதிகமான வேலை வாய்ப்புத் தரு
வதற்கு ஏதாவது சிறப்புத் திட்டத்தை அறிவித்திருக்கிறதா
என்றால் இல்லை. ஆக, ஒரு சிறப்புத் திட்டத்தை இன்றைக்குக்
கொண்டு வரவேண்டுமென்று நான் இங்கே நினைவுபடுத்த
விரும்புகிறேன்.

அன்னிய தேசத்திலே வேலைவாய்ப்புத் தருவதாகப் பல
நிறுவனங்கள் சொல்கின்றன. அவைகளிலே நூற்றுக்கு எழுபது
சதவிகிதம் மோசடி செய்பவர்கள்தான். அதிலே பெரும்புள்ளி
கள் எல்லாம் அதன் பின்னணியிலே இருக்கிறார்கள். வெளி
நாட்டிலே வேலை வாங்கித் தருகிறார்கள். ஐம்பதாயிரம்
கொண்டுவா, ஒரு லட்சம் கொண்டுவா என்று ஒரு கம்பெனி
பெயரைப் போடுகிறார்கள்; போர்டு போடுகிறார்கள், அறி
விப்புச் செய்கிறார்கள், இலட்சக் கணக்கில் வசூல் செய்துவிட்டு
அவர்கள் இல்லாமலும் போய்விடுகிறார்கள். பல பேரைக்
கொண்டுபோய், பம்பாயிலோ, கல்கத்தாவிலோ விட்டுவிட்டு,
அங்கிருந்து அவர்கள் ஊருக்கு வருவதற்கு முடியாமல் கொண்டு
போய் விட்டுவிடுகிறார்கள். இதிலே பெரும்புள்ளிகள் பின்னணி
யிலே இருக்கிறார்கள். எனவே, அரசே நேரிடையாக இவர்
களையெல்லாம் தணிக்கை செய்து, இவர்கள் வெளியிடுகிற
ஒவ்வொரு விளம்பரத்தையும் பார்த்து அது சரிதானா? அது
உண்மைதானா என்று தணிக்கை செய்ய வேண்டுமென்று நான்
கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

பல விஷயங்கள் இருந்தாலும் ஒரே ஒரு விஷயத்தை மட்டும்
இங்கே நான் சொல்ல விரும்புகிறேன். பத்திரிகையாளர்களுக்கு
வீட்டுவசதி இருக்கிறது. ஆசிரியர்களுக்கு வீட்டுவசதி இருக்
கிறது. ஆனால் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு வீட்டு
வசதி இல்லை. போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு வீட்டு
வசதித் துறையின் மூலமாக அதைச் செய்து தரவேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன். அதே போல், போக்குவரத்துத் தொழி
லாளர்களுக்குப் பென்ஷன் வழங்குவதற்கு—ஏனெனில் அவர்கள்
சிறுக்குறைய அரசு நிறுவனங்களில் வேலை செய்கிறார்கள்
தான், ஆயிரக் கணக்கிலே இருக்கிறார்கள். அவர்களுக்குப்
பென்ஷன் வழங்குவதற்கு—ஒரு திட்டம் கொண்டு வரவேண்டும்.

[திரு. செ. கு. தமிழரசன்] [1991 செப்டம்பர் 16

நான் பத்திரிகை என்கிற போது இன்னொன்றையும் சுட்டிக்
காட்ட வேண்டும். ஒரு பத்திரிகை அங்கே இல்லாதவர்களுக்குக்
கூடச் சம்பளம் கொடுக்கின்றது. தொழிலாளரே இல்லை.
உண்மையான தொழிலாளிக்கு 500 ரூபாய் கொடுக்கிறது.
இல்லாத் தொழிலாளிக்கு ஆயிரக்கணக்கிலே சம்பளம் தருகிறது.
அது முரசொலி பத்திரிகை. பாவம் வேலை செய்கின்றவர்கள்.
இல்லாத ஏழைகள். அந்தத் தொழிலையே நம்பியிருக்கின்ற
வர்கள் குறைந்தபட்சச் சம்பளம் வாங்கிக் கொண்டு இருக்
கிறார்கள், அந்தப் பத்திரிகையிலே. வேலை செய்யாதவர்கள்
எல்லாம் அந்தப் பத்திரிகையிலே வேலை செய்வதாகப் போட்டுச்
சம்பளம் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். இப்படியெல்லாம்
கூட நடக்கிறது. இவைகளையெல்லாம் நம்முடைய வேலை.
வாய்ப்புத் துறை அக்கறையோடு கவனிக்க வேண்டுமென்று நான்
இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. க, அர்ச்சுனன்) :
திரு. செ. கு. தமிழரசன் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்
திற்கு மேலாக 5 நிமிடம் கொடுத்துவிட்டேன். அடுத்து திரு.
என். ஜி. வேணுகோபால்.

மாலை 5-25

திரு. என். ஜி. வேணுகோபால் : தலைவர் அவர்களே,
நமது இதய தெய்வம் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி,
தமிழக மக்களின் நம்பிக்கை நட்சத்திரம், தமிழக சட்டமன்ற
வரலாற்றிலேயே மாபெரும் வெற்றி பெற்று சரித்திரம் படைத்
திட்ட வரலாற்று நாயகி அவர்களை வணங்கி என் கன்னி
உரையைத் தொடங்குகிறேன்.

இராணிப்பேட்டைத் தொகுதி தொழிற்பேட்டைகள் நிறைந்த
தொகுதி. பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வாழும்
பகுதி அது. இதுவரையில் தொழிலாளர்களின் பிரதிநிதி
ஒருவர் கூட சட்டமன்ற உறுப்பினராக என்னுடைய தொகுதி
யிலிருந்து தேர்ந்தெடுக்கப்படவில்லை. ஆனால் இன்று நமது
இதயதெய்வம் இந்தத் தொகுதியை நன்கு புரிந்து வைத்துள்ள
காரணத்தினால் அந்தத் தொழிலாளர்களுக்கு உள்ள
அந்தஸ்தைக் கொடுக்கிற வகையில் என்னை வேட்பாளராக
நியமித்து அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழ
கத்தின் ஒரே பிரதிநிதியாக நான் தேர்ந்தெடுக்கப்பட்டு, இன்று
சட்டமன்ற உறுப்பினர் என்ற அந்தஸ்தை எனக்கு அளித்துள்
ளார்கள். எனவே தமிழக தொழிலாளர்களின் சார்பில் எனது
நெஞ்சார்ந்த நன்றியை உங்கள் பொற்பாதங்களில் சமர்ப்பிக்
கிறேன். இதனால் நான் புரட்சித்தலைவி அவர்களை அடிக்கடி
சந்திக்க வாய்ப்புப் பெற்றவன் என்று தொகுதி மக்கள் நினைத்து
சுமார் 34,000 வாக்குகள் அதிகம் தந்து அனைத்திந்திய அண்ணா



1991 செப்டம்பர் 16] [திரு. என். ஜி. வேணுகோபால்]

திராவிட முன்னேற்றக் கழகத்தை வெற்றிபெறச் செய்துள்
ளார்கள். எனவே அருள்கூர்ந்து என்னுடைய தொகுதியை
உங்களின் மேற்பார்வையில் வைத்து முன்னுரிமை தந்து முதன்
முறையாக வெற்றிபெற்ற தொகுதியாக இருப்பதன் காரணத்
தால் எங்கள் குறைகளைப் போக்க வேண்டும் என்று வணங்கிக்
கேட்டுக் கொள்கிறேன். என்னை வெற்றிபெறச் செய்த வாக்
காளர்களுக்கும் என்னுடைய நன்றியை இந்த நேரத்தில் நான்
சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய
பகுதியில் பி.எச்.இ.எல். என்ற தொழிற்சாலை இருக்கிறது.
அது மத்திய அரசைச் சார்ந்தது. அதில் அத்தியாவசியமான
பணிகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் உள்ளனர். உதாரண
மாக கேன்டீன் சேனிடேஷன், தண்ணீர் சப்ளை செய்யும் தொழி
லாளர்கள் ஆகியோர் சுமார் 11 ஆண்டுகளாக பணி நிரந்தரம்
செய்யப்படாமல் இருக்கிறார்கள் என்பதை இங்கே தெரியப்
படுத்தி அரசின் கவனத்திற்குக் கொண்டுவர தான் விரும்புகிறேன்.
மேலும் புரட்சித் தலைவர் அவர்கள் காலத்தில் இந்தத் தொழிற்
சாலைக்கு நிலம் கொடுத்து வந்தவர்களுக்கு வேலை கொடுக்க
வேண்டும் என்று ஆணை பிறப்பித்தும் இதுவரையில் அது
பூர்த்தி செய்யப்படவில்லை. சுமார் 300–க்கு மேற்பட்ட
தொழிலாளர்கள் வேலைவாய்ப்பின்றி அங்கே அவதிப்பட்டுக்
கொண்டிருக்கிறார்கள். எனவே நமது அரசு தலையிட்டு ஆவன
செய்யவேண்டும். குறிப்பாக நிலம் கொடுத்தவர்களுக்கு வேலை
கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று இந்த நேரத்தில்
நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். மேலும் யுனைட்டட்
இண்டியா பேரிங் என்ற கம்பெனி இராணிப்பேட்டை, சிப்காட்
பகுதியில் உள்ளது. சுமார் 7½ ஆண்டுக்காலமாக மூடியிருக்கும்
இந்த ஆலை சுமார் 200 தொழிலாளர்களுக்குரிய பணத்தை
அளிக்காமல் இருக்கிறது. தொழிலாளர்களின் பிரதிநிதிகளும்
பலமுறை அணுகியும் கூட அந்தத் தொழிலாளர்களுக்குச் சென்று
சேரவேண்டிய பணம் சென்று சேரவில்லை. எனவே இதில்
உடனடியாக அரசு தலையிட்டு ஆவன செய்யவேண்டும் என்று
நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து எஸ்.ஆர்.பி. டூல்ஸ் என்ற நிறுவனத்தில் 70 நாட்
களுக்கு மேல் ஆகியும் வேலைநிறுத்தம் நடைபெற்று வருகிறது.
காரணம் அங்கே ஒரு உணவகம் தேவை என்று அவர்கள்
கோரிக்கை முன்வைத்து ஸ்ட்ரைக்கில் ஈடுபட்டு சுமார் 70 நாட்
களாக ஸ்ட்ரைக் நடந்து வருகிறது. அங்கே 250 தொழிலாளர்
கள் இருந்தால்தான் ஒரு கேன்டீன் நடத்த முடியும் என்று விதி
இருக்கிறது. ஆனால் அங்கே சென்று பார்க்கும்போது நிரந்
தரம் செய்யப்பட்ட தொழிலாளர்கள் சுமார் 240 பேர்தான்
இருக்கிறார்கள். ஆனால் நிரந்தரம் செய்யப்படாத தொழி
லாளர்கள் பலர் இருக்கிறார்கள். மற்றும் காண்ட்ராக்ட் லேப
ரர்ஸ் இருக்கிறார்கள். இவர்களை எல்லாம் சேர்த்தால சுமார்

350 தொழிலாளர்களுக்கு மேல் அங்கே இருக்கிறார்கள். ஆனால் சட்டப்படி 250 நிரந்தரம் செய்யப்பட்ட தொழிலாளர் கள் இருந்தால்தான் கேன்டீன் திறக்க முடியும் என்ற விதி இருப்பதன் காரணத்தால் அந்த விதியைச் சுட்டிக்காட்டி இன்று அந்த கேன்டீன் திறக்கப்படாமல் இருக்கிறது. எனவே என்னுடைய தொகுதியைச் சேர்ந்த எஸ்.ஆர்.பி. டூல்ஸ் நிறுவனத் தினுள்ள தொழிலாளர் வேலைநிறுத்தத்தில் உடனடியாக நமது அரசு தலையிட்டு அந்த வேலைநிறுத்தத்தை வாபஸ் பெறச் செய்யவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள் கிறேன்.

இந்த நேரத்தில் நான் குறிப்பிட விரும்புவது எந்த மாதிரி சட்டங்கள் இங்கேஇருந்தாலும் சட்டத்தைக் கொண்டுவந்தவர் கள் அதிலே ஒரு வழிவகையைவைத்து இருப்பதன் காரணத்தால் அந்தச் சட்டத்தின் உள்ளே புகுந்து சட்டத்தை உடைத்து சட்டத்தை மதிக்காமல் இருக்கின்ற பல நிறுவனங்கள் இருப்பதன் காரணத்தால் இன்று தொழில் அமைதி கெட்டிருக்கிறது என்று இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட் டிருக்கிறேன்.

மாலை 5-30

உதாரணமாக 480 நாட்கள் வேலை செய்தால், 24 மாதங் களிலே 480 நாட்களாவது ஒருவன் வேலை செய்தான் என்று சொன்னால் அவனை உடனடியாக பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்று சட்ட விதி இருக்கிறது. ஆனால் தற்போது தொழிற்சாலைகளிலே என்ன செய்கிறார்கள் என்று சொன்னால் அவர்கள் அந்த 480 நாட்களுக்கு அவர்களுக்கு வேலை கொடுப் பது இல்லை. 6 மாதங்கள் ஆன உடனே அவர்களுக்கு பிரேக் கொடுத்து விடுகிறார்கள். அவர்கள் அப்படி பிரேக் கொடுத்த உடனே அந்த சட்டத்திலே அவர்களுக்கு 480 வேலை நாட்கள் வருவதற்கு வாய்ப்பு இல்லாமல் போய் விடுகிறது. இதன் காரணமாக நிரந்தரம் செய்யப்படாத தொழிலாளர்களுடைய எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதனால் வேலை இல்லாத் திண்டாட்டம் போன்று பலவகையிலே தொழி லாளர்கள் அல்லல்பட்டு வருகிறார்கள் என்பதை உங்கள் கவனத் திற்கு கொண்டு வருவதை என்னுடைய கடமையாகக் கருது கிறேன்.

அங்கே நவலாக், தென்னை விதைப் பண்ணை, விதைப் பண்ணை போன்ற பண்ணைகளிலே சுமார் 15 ஆண்டுகளாக இருக்கின்ற தொழிலாளர் தோழர்கள் பணி நிரந்தரம் செய்யப் படாமல் இருக்கின்றார்கள். என். எம். ஆர். ஆகவே இன்னும் பணியாற்றிக் கொண்டு வருகிறார்கள். அவர்களுடைய நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. அதாவது என்.



எம். ஆர்.-லே கூட அவர்களுக்கு வேலை வாய்ப்புச் சரியாகக் கிடைப்பதில்லை. அவர்களுடைய சம்பள விகிதமும் மிகவும் குறைவாக இருப்பதால், அங்கே இருக்கின்ற தொழிலாளர்கள் அல்லல் பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருவதை என்னுடைய கடமையாகக் கருதுகிறேன்.

வேலூரில், அதாவது வட ஆற்காடு மாவட்டத்திலே என்ன ஆயிற்று ? லேபர் சம்பந்தமான வழக்குகள் மிகவும் அதிக எண்ணிக்கையிலே பெண்டிங்-ஆக இருப்பதால், லேபர் கோர்ட் அங்கே திறக்கப்பட வேண்டும் என்று சொல்லி அரசு ஆணை பிறப்பித்து விட்டது. ஆனால் ஜட்ஜுகள் நியமிக்கப்படாமல் இருப்பதால் அந்த வழக்குகள் அங்கே தேங்கிக் கிடக்கின்ற நிலைமையில் இன்று இருக்கின்றன. இதை அரசினுடைய கவனத்திற்கு கொண்டு வருவதை என்னுடைய கடமையாகக் கருதுகிறேன்.

சிப்காட் பகுதியிலே ஈ. எஸ். ஐ. இருக்கிறது. சுமார் 4 ஆயிரம் தொழிலாளர்கள் அந்த ஈ. எஸ். ஐ.யிலே பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அங்கே சரியாக டாக்டர்கள் நியமிக்கப்படவில்லை என்ற காரணத்தினாலே, 4 டாக்டர்கள் இருக்க வேண்டிய இடத்திலே 2 டாக்டர்களே இருப்பதால் அந்த தொழிலாளர்களுக்கும் அவர்களுடைய குடும்ப நலன்களுக்கும் தற்போது சரியான மருத்துவ வசதி செய்யப் படவில்லை என்பதை அங்கே இருக்கின்ற தொழிலாளர்கள் கோரிக்கையாகவே வைத்திருக்கிறார்கள். நம்முடைய அரசு உடனடியாக, சிப்காட்டிலே இருக்கின்ற அந்த ஈ. எஸ். ஐ. ஆஸ்பிட்டலிலே மருத்துவ வசதிகளைச் செய்து அதன் மூலம் தொழிலாளர்களுக்கு நன்மை பயக்க வேண்டும். அவர்களுடைய குறையைப் போக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

வாலாஜா தொழில் நிறுவனங்கள் பகுதியாக மாறிக் கொண்டு வருகிறது. சுமார் ஆயிரம் தொழிலாளர்களுக்கு மேல் அந்த பகுதியிலே இருப்பதால், அவர்களுக்கு ஈ. எஸ். ஐ. ஆஸ்பத்திரி வசதி இல்லாமல் இருக்கிறது. அவர்கள் ராணிப்பேட் டையிலே இருக்கின்ற சிப்காட்டுக்குத்தான் வரவேண்டும். அவர் களுடைய குறையைப் போக்குகின்ற அளவிலே அங்கே உள்ள மாவட்ட தாலுக்கா அரசு மருத்துவ நிலையத்தில் ஈ. எஸ். ஐ. யின் தனிப்பிரிவு ஒன்றை ஏற்படுத்தி அந்தத் தொழி லாளர்கள் அங்கே மருத்துவ நலனை பெற வாய்ப்பு தரவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

[1991 செப்டம்பர் 16

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ச. இராமச்சந்திரன்.

*திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தில் பங்கு பெற்று எனது கருத்துக்களை வழங்குவதில் உண்மையிலேயே நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். ஒரு காலத்தில் பல தொழிற்சங் கங்களை நடத்தி இருக்கிறேன். பிறகு அரசின் சார்பில் பல தொழிற்சாலைகளை நடத்தி நல்ல அனுபவமும் பெற்று இருக் கிறேன். அதுவுமின்றி தொழிலாளர் நல அமைச்சராகவும் இருந்து நிர்வாகத்திற்கும் தொழிற் சங்கத்திற்கும் சமரசம் செய் யும் வாய்ப்பினையும் பெற்று இருக்கிறேன். எல்லாவற்றிற்கும் மேலாக நியாயம் என்று தெரிந்தால் நிறைவேற்றக் கூடிய அனுபவமிக்க மாண்புமிகு அமைச்சர் திரு. அரங்கநாயகம் அவர் கள் இந்தத்துறையின் பொறுப்பை ஏற்று இருக்கிறார்கள். ஆகவே தொழிலாளர்களுக்கு நல்ல பல காரியங்கள் நடக்கும் என்பதை நான் நிச்சயமாக நம்புகிறேன்.

முதன் முதலாக 1967 ஆம் ஆண்டு அறிஞர் அண்ணா அவர் கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற போது இன்றைய மாண்பு மிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் தொழிலாளர் நல அமைச்சராக இருந்தார்கள். அப்போது இந்த மன்றத் திலே உங்களது தொழிலாளர் கொள்கை என்ன என்று திரும்பத் திரும்பக் கேட்கப்பட்டது. அறிஞர் அண்ணா அவர்கள் சொன் னார்கள். எங்களுடைய தொழிலாளர் கொள்கை இது தான். நம்முடைய நாட்டிலே வேலையை விட்டுப் போ என்று சொல்வது ஒருவனை ''செத்துப் போ'' அதாவது ''இறந்து போ'' என்று சொல்வதை விட கொடுமையானது என்றார்.

மாலை 5-35

ஆகையினால் எக்காரணத்தைக் கொண்டும் வேலையை விட்டு தொழிலாளர்கள் நீக்கப்படுவதை அனுமதிக்க மாட்டோம். அதே போல ஆலைகள், தொழிற்சாலைகள் மூடப்படுமாயின் ஆலை அதிபர்களுக்கு ஒரு தொழிற்சாலை மட்டும் தான் போகும். ஆனால் அங்கே பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கோ வாழ்வே போகும். ஆகவே, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் அதைத்தன்னுடைய முக்கியக் குறிக் கோளாக கொள்ள வேண்டும். எந்தக் காரணத்தைக் கொண் டும் தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்படவோ அல்லது ஆலைகள் மூடப்பட்டு அதனால் தொழிலாளர்கள் வாழ்வை இழக்கவோ வழி ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.



1991 செப்டம்பர் 16] [திரு. ச. இராமச்சந்திரன்]

பல ஆலைகள் மூடப்பட்டிருக்கின்றன. சில ஆலைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் சில திறக்கப்பட வேண்டும். குறிப்பாக இரண்டு பெரிய நிறுவனங்கள், தலைநகரத்திலே திறக்கப்பட வேண்டும். பி. அண்ட். சி. முக்கியமான பழம் பெரும் நிறுவனம். இந்த நிறுவனத்தில் நிதி நெருக்கடி காரண மாகவும், புவனகிரிக்கு மாற்றுதல் செய்ய வேண்டிய ஒரு பிரச்சி னையை எழுப்பியும், 25 (ஓ) பிரிவில் மூட வேண்டுமென்று நிர்வாகம் கேட்டும், இதன் காரணமாக 1—4—1991 முதல் இந்த நிறுவனம் மூடப்பட்டிருக்கிறது. இதைத் திறப்பதற்குரிய முயற்சிகள் அரசின் சார்பில் எடுத்துக்கொள்ளப்படுவதாக நான் அறிகிறேன். என்ன என்ன முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன என்பதை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டும். ஏனென்றால், அண் மையில் பத்திரிகைகளில் வந்த செய்தியைப் பார்க்கும்பொழுது, மாநில அரசு கூட அல்ல, மத்திய அரசே இந்தத் தொழிற் சாலையை ஏற்று நடத்த வேண்டுமென்ற கோரிக்கை எழுப்பப் பட்டு வருகிறது. மத்திய அரசு ஏற்றுக் கொள்வதற்குப் பதிலாக மாநில அரசே அதைத் திறப்பதற்கு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதை ஏற்று நடத்த வேண்டுமென்று நான் சொல்லவில்லை.

பி. அண்ட் சி. ஆலையைப் பொறுத்தவரையில் பி.ஐ.எப். ஆர்., அதாவது தொழில் நிதி மற்றும் மறு கூட்டமைப்பு வாரியத் திற்கு அவர்கள் மனு போட்டிருப்பதாகத் தெரியவில்லை. அந்த நிறுவனம் இன்னும் லாபத்தில் தான் நடக்கிறது என்ற கணக்கு களை தவறுதலாக எழுதிக் காட்டியதாக ஒரு தகவல் வந்திருக் கிறது. ஆகவே, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச் சர் அவர்கள் அதை சரி பார்க்க வேண்டும்.

தொழிலாளர்களை தியாகம் செய் என்று சொல்கிறார்கள். தொழிலை நடத்த வேண்டுமானால், தொழிலாளர்கள் பல காரியங்களை, ஊதியக் குறைவு போன்றவற்றிற்கு எல்லாம் ஒப்புக் கொள்ள வேண்டுமென்று சொல்கிறார்கள். அதே நேரத்தில் தொழிற்சாலைகள் நன்றாக நடக்கிறபொழுது, அதிலே வருகிற லாபமோ, பெரிய வருமானமோ அல்லது எந்தவிதமான பங்கோ தொழிலாளர்களுக்கு கிடைப்பதில்லை. ஆகவே, பி. அண்ட் சி. நிறுவனத்தைப் பொறுத்த வரையில் உடனடியாக என்னென்ன முயற்சிகள் வேண்டுமோ அதை மேற்கொள்ள வேண்டும். அந்த ஆலை மூடியிருப்பதன் காரணமாக, வாடி இருக்கின்ற தொழி லாளர்களுக்கு அரசின் சார்பில் ஏதாவது நிவாரணம் அளிப்ப தற்கு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்பதையும் அறிவிக்க வேண்டும்.

[திரு. ச. இராமச்சந்திரன்] [1991 செப்டம்பர் 16

அதே போல ஸ்டாண்டர்ட் மோட்டார் தொழிற்சாலையைப்
பொறுத்தவரையில் அதுவும் ஒரு முக்கியமான தொழிற்சாலை.
தென்னகத்திலேயே கார் உற்பத்தி சாலை அது ஒன்றுதான் இருந்
தது. அதுவும் நிதி நெருக்கடியின் காரணமாக மூடப்பட்டு விட்டது.
அதிலும் தொழிலாளர்கள் பெரும் துன்பத்திற்கு ஆளாகி இருக்கி
றார்கள். இந்த இரண்டு தொழிற்சாலைகளும், எனக்கு முன்பு
பேசியவர் எடுத்துக் காட்டியது போல, அதை நடத்துகின்றவர்
கள், அதன் நிர்வாகத்தில் பொறுப்பேற்று இருக்கின்றவர்கள்
மறைந்த புரட்சித் தலைவருக்கு வேண்டியவர்கள், அதனால்
தான் கடந்த காலத்தில் துன்புறுத்தப்பட்டார்கள் என்பதையும்
நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அந்தக் காரணத்
தாலா அல்லது வேறு காரணங்களாலா அந்தத் தொழிற்சாலை
மூடப்பட்டிருக்கிறது என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்
கள் விளக்க வேண்டும். காரணம் எதுவாக இருந்தாலும்,
தொழிலாளர்களுக்கு வேலை இழப்பு என்பது வாழ்வு இழப்பு
என்பதைக் கருத்தில் கொண்டு, இத்தகைய பெரிய தொழிற்
சாலைகள் நீண்ட காலத்திற்கு மூடப்படாமல் இருக்கும் வகையில்
தேவைப்படுகின்ற நடவடிக்கைகளை மாநில அரசின் மூலமாக
வும், தேவைப்பட்டால் நிதி நிறுவனங்கள் மூலமும் மேற்கொள்ள
வேண்டும். அதிக அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று
அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாலை 5-40.

அடுத்தபடியாக, வேலைவாய்ப்பில் ஈடுபடுகின்ற தொழி
லாளர்கள் என்று பார்க்கின்றபொழுது, சில முதலாளிகள் சிறு
பிள்ளைகளை, பெண்களை வேலைக்கு வைக்கிறார்கள். அவர்
களுடைய முக்கியமான நோக்கம் இவர்களுக்கு சம்பளம் குறை
வாக கொடுத்தால் போதும் என்பது தான். ஆகவே, சிறு
பிள்ளைகளை வேலைக்கு வைத்துக் கொள்வதை தடுக்க வேண்
டும். அது போல பெண்களை வேலைக்கு வைக்கும் பொழுது
சம ஊதியம் பெறுவதற்கு ஆன வழிவகைகளை முக்கியமாக
கணக்கிலே கொள்ள வேண்டும். அமைப்பு ரீதியற்ற தொழிற்
சாலை[illegible] இதைப் போல [illegible]ச்சினைகள் ஏற்படுகின்றன.
சாதாரணமாக கடைகளிலேகூட ஒரு குறைந்தஅளவு கூலி என்று
நிர்ணயம் செய்கிறோம். அதனுடைய விளைவு என்ன ஆகிற
தென்றால் 2 பேர்கள் வேலை செய்கிற ஒரு கடையில் குறைந்த
அளவு கூலி என்று வருகிறபோது ஒருவரை மட்டும் கணக்கில்
காட்டி, சம்பளம் கொடுத்துவிட்டு, இன்னொருவரை வேலை
யிலிருந்து நீக்கிவிடுகிறார்கள். அந்தப் பட்டியலில் அவர்
இருப்பதில்லை. ஆகவே இரண்டு பேர்கள் இருந்த
இடத்தில் ஒருவருக்கு வேலை போய்விடுகிறது. இன்னொருவர்
இரண்டு பேர் வேலையையும் சேர்த்து செய்ய வேண்டிய நிலைமை
ஏற்படுகிறது. மினிமம் வேஜஸ் ஆக்டினுடைய விளைவு, பல



1991 செப்டம்பர் 16] [திரு. ச. இராமச்சந்திரன்]

இடங்களில் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் அதிகரித்து
வருகிறது. ஆகவே அத்தகைய நியாயமற்ற போக்கு அமைப்பு
ரீதியற்ற தொழில் நிறுவனங்களிலே நடைபெறுவதை அரசு
தடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். குறைந்த அளவு கூலியோடு அகவிலைப்
படியையும் சேர்த்துத்தருவது வரவேற்கத்தக்கது. அமைப்பு
ரீதியற்ற தொழிலாளர்களுக்கு குறைந்த அளவு ஊதியத்தோடு
அகவிலைப் படியையும் சேர்த்துத் தருவதற்கு உடனடியாக
நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

தொழிற் சங்கங்களிலே மிகப் பெரிய பூதாகரமான பிரச்
சினையாக இருப்பது அரசியல் தலையீடு என்பதை நாம் மறுப்
பதற்கில்லை. தொழிற் சங்கங்கள் அங்கீகாரத்திலிருந்து, போராட்
டங்களிலிருந்து, தொழிற் சங்கங்கள் பலவாறாகப் பிரிந்து
ஒருவருக்கொருவர் போட்டி போடுவதிலிருந்து, அளவுக்கு
மீறிய வன்முறை வருவதிலிருந்து பார்க்கின்றபோது, தொழிற்
சங்கங்களிலே அரசியல் தலையீடு காரணமாக அவை பிரிந்து
கிடக்கின்ற தன்மை இருக்கிறது. அதை மாற்றுவதற்கு பல்
வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும் இன்னும ஒரு சரியான
தீர்வு ஏற்படவில்லை. குறிப்பாக தொழிற்சங்கங்களுக்கு
அங்கீகாரம் வழங்குவதில் 'நேஷனல் கமிஷன் ஆன் லேபர்'
மூலம் சட்டமெல்லாம் கொண்டு வந்தும்கூட, அதைப் பல
தொழிற் சங்கங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அதனால் அதன்
மூலமும் ஒரு தீர்வு காண முடியவில்லை. மாண்புமிகு தொழி
லாளர் நலத்துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள்.
அவர் இந்த ஆலோசனையைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். ஒரு தொழிலிலே பல தொழிற் சங்கங்கள்
இருந்தாலும்கூட பேச்சு வார்த்தைகள் நடக்கிறபோது, அதற்
கான 'பேச்சு வார்த்தைக் குழு'—ஒரு கமிட்டி—என்று உரு
வாக்கி, அதற்குப் பல்வேறு தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளும்,
ப்ரபோர்ஷனல் ரெப்ரசன்டேஷன் என்ற முறையில், விகிதாச்
சார பிரதிநிதித்துவ முறையில் இடம் பெற்று, ஒரு தீர்வு
ஏற்படுமானால் ஒரு சங்கம் போட்ட ஒப்பந்தத்தை இன்னொரு
சங்கம் எதிர்த்துப் போராட வேண்டிய சூழ்நிலை வராது.
அதற்கு சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமா என்ப
தைப் பற்றி மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரவர்கள்
சிந்திக்கவேண்டும்.

அடுத்து காவலர் அணுகுமுறை மிகவும் முக்கியமானது.
தொழிற் சங்கத் தகராறுகளில், அதுவும் குறிப்பாக அரசியல்
ரீதியாக சங்கங்கள் அமையும்போது, காவலர்கள் ஒரு தொழிற்
சங்கத் தகராறில் தலையிடுகிறபோது, குறிப்பாக ஆளுங் கட்சி

[திரு. ச. இராமச்சந்திரன்] [1991 செப்டம்பர் 16

தொழிற் சங்கம், எதிர்க் கட்சி தொழிற் சங்கம் என்று இருக்கும் போது, எதிர்க் கட்சிக்காரர்களை நியாயத்திற்குப் புறம்பாக கைது செய்து, சிறையில் அடைத்தார்கள், வழக்கு போட்டார் கள் என்று எண்ணுகின்ற நிலைமை வருகிறது. ஆகவே இத் தகைய முறைகள் மாற வேண்டுமானால் உண்மையாகவே தொழிலாளர்கள் பக்கம் காவல் துறை ஈடுபடுகிறது என்பதை நாட்டுக்கு நிரூபிக்க வேண்டுமானால் அதிலே அரசியல் தலையீடு எவ்வளவுக்கெவ்வளவு குறைக்கப்படுகிறதோ அவ்வளவுக்கவ் வளவு நல்லது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக வேலை வாய்ப்புத் துறை மிகவும் முக்கிய மான துறை. வேலை வாய்ப்புத் துறையில் பல்வேறு தவறுகள் நடைபெறுகின்றன. இது ஊர் அறிந்த உண்மை. அவற்றைப் போக்குவதற்கு எல்லா முயற்சிகளையும் இந்த அரசு மேற் கொள்ள வேண்டும். வேலையற்றோர் எண்ணிக்கை அதிகமாக வும், வேலைகள் குறைவாகவும் இருக்கும்போது இந்த பிரச்சினை ஏற்படுகிறது. ஆகவே வேலையற்றோருடைய நிலைமையைப் பரிசீலித்து அங்கே எந்தவிதமான தவறுகளும், குறிப்பாக அதி காரிகள் மட்டத்தில் தவறுகள் ஏற்படா வண்ணம், வேலை யற்றவர்கள் மத்தியில் வேலை வாய்ப்பு அலுவலகங்கள் நம்பிக்கை ஊட்டும் வகையிலே அந்த நிர்வாகம் சீர்திருத்தப்பட வேண்டும். தனியார் துறையிலே வேலைக்கு எடுக்கின்றபோது, வேலை வாய்ப்புத் துறையை கேட்க வேண்டிய அவசியமில்லை என்று இருக்கிறது. தனியார் துறையிலே இருக்கிறவர்களும் வேலை வாய்ப்பு அலுவலகங்களிலே இருந்து தங்களுக்கு வேண்டிய தகுதியான ஆட்களை பெறுவதற்கான சூழ்நிலையை வேலை வாய்ப்பு அலுவலகங்கள் உருவாக்க வேண்டும். அதற்குரிய முறையிலே அவர்கள் பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப் பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விரைவில் முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. ச. இராமச்சந்திரன் : வீட்டுக்கு ஒருவருக்கு வேலை என்ற திட்டம் மிகவும் முக்கியமான திட்டம். அதிலும் குறிப் பாக வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள குடும்பங்களிலே இருக்கிற ஒருவருக்கேனும் வேலை கிடைக்குமானால் அந்தக் குடும்பங்கள் வறுமையிலிருந்து நீங்க வழி ஏற்படும். ஆகை யாலே அந்தத் திட்டத்தை தயாரிக்கின்றபோது வறுமைக் கோட்டுக்குக்கீழே இருக்கின்ற குடும்பங்களின் கணக்கை எடுத்து அவர்களுக்கு வாழ்வளிக்கும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். வேலை வாய்ப்பிலே அதிக வாய்ப்பு இல்லாத காரணத்தாலே இளைஞர்கள் பலருக்கு வேலை கிடைக்கவில்லை. எனவே வயது வரம்பை உயர்த்துவதற்கு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1991 செப்டம்பர் 16] [திரு. ச. இராமச்சந்திரன்]

மாலை 5-45

பத்திரிகைகளிலே பணியாற்றுகின்ற பல தொழிலாளர்கள் நிரந்தர சம்பளம் பெற முடிவதில்லை. ஓய்வு பெற்றால் ஓய்வூதியம் கிடைப்பதில்லை. வீட்டு வசதி போன்றவை கிடைப்பதில்லை. எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பி னர்கள் எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். பத்திரிகைத் தொழில் என்றால், பத்திரிகை அதிபர்கள் நன்றாக இருக்கி றார்கள். இன்னும் குறிப்பாக சில பத்திரிகைகளை எடுத்துப் பார்க்கிறபோது முறையான பட்டியல் வைத்து அவர்களுக்கு சம்பளம் என்கின்ற விவரமே இல்லாமல் 'பீஸ் ஒர்க்'-ல் காலம் தள்ளுகின்ற பத்திரிகைகள் எல்லாம் இருக்கின்றன. ஆகையி னாலே, பத்திரிகையாளர்கள் நிலைமையை அரசு கவனத்திலே கொள்ள வேண்டும். எனக்கு நினைவு, அவர்களுக்கு வீடு கட்டும் திட்டம் கூட அரசினால் உருவாக்கப்பட்டது. அந்தத் திட்டம் என்ன நிலையிலே இருக்கிறது? என்ன ஆயிற்று என்ற விவரத்தைத் தரவேண்டும்.

அடுத்தபடியாக, முக்கியமானது, அயல்நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனம் உருவாக்கப் பெற்று இருக்கிறது. அசோக் மேத்தா அவர்கள் திட்டக் கமிஷன் துணைத் தலைவராக இருந்தபொழுது இங்கே அன்றைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களைப் பார்த்த நேரத்திலே சொன்னார், தமிழ்நாட்டுக்கு இருக்கிற மிகப் பெரிய வாய்ப்பு 'ஸ்கில்'-ஐ 'டெவலப்' பண்ண வேண்டும், இங்கே இருக்கின்றவர்களுடைய திறமையை அதிகரிக்க வேண் டும்; அந்தத் திறமையாளர்களை உலகம் முழுவதும் அனுப்புவதற்கு வாய்ப்பு இருக்கிறது; அதன் மூலம் வேலை வாய்ப்பைப் பெருக்குவதற்கு நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன என்று அசோக் மேத்தா அவர்கள் சொன்னார்கள். 'ஓவர்சீஸ் பவர் கார்ப்பரேஷன்', அயல்நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனம் அந்த நோக்கத்தோடு துவக்கப்பட்டு இருக்கிறது அதன் மூலம் பல நாடுகளிலே இருக்கிற வேலை வாய்ப்புகளைப் பற்றி தகவல் அறியவும், அதற்கு ஏற்ப திறமையாளர்களை உருவாக்கவும், அவர்களை அந்நாடுகளுக்கு அனுப்பவும், அங்கே பாதுகாப்பாக அவர்கள் இருக்கிறார்களா என்று பார்த்துக் கொள்ளவும், இந்த நிறுவனத்தைத் தக்க முறையிலே வளர்க்க வேண்டும். இன்னும் ஒரு படி மேலே போய், அயல்நாட்டு தூதரகங்களிலே கூட நாம் ஒருவரை அங்கே நியமிப்பதற்கு, இந்திய அரசினை தமிழ்நாடு அரசு கேட்டுப் பெறவேண்டும். இவையெல்லாம் மற்ற நாடுகளிலே நடக்கக்கூடியவைகள். அப்படி வேலை வாய்ப்பைப் பெருக்குகிறபோது, உலகளாவிய தமிழர்களுக்கு அது உறுதுணையாக இருக்கும் என்று கூறி என் உரையை முடிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கே. ஏ. மனோகரன்.

டி2 53-298—24

[1991 செப்டம்பர் 16

திரு. கே. ஏ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நல மானியக் கோரிக்கையின் மீது பேச வாய்ப்பு அளித்த உங்களுக்கு நன்றி.

தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையில் ஊரக வளர்ச்சிக்கு ஒதுக்கியுள்ள நிதி ஊரக முன்னேற்றத் திட்டங்களுக்கு போது மானதல்ல. ஓசூர் போன்ற ஊரகப் பகுதி சிறிய நடுத்தரத் தொழில்கள் பெருகிவரும் இடமாகும். தொழிற்சாலை களையொட்டி தொழிலாளர்கள் எண்ணிக்கையும் பெருகிக் கொண்டே போவதால் வாடகை வீடுகள் கிடைப்பதில்லை. வாடகை மிக அதிகம். குடிநீர்த் தட்டுப்பாடும் இருந்து வருகிறது. நல்ல பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் ஓசூரின் எல்லாப் பகுதி களிலும் கிடைக்க வழி செய்ய வேண்டும்.

தொழிலாளர்கள் நிருவாகத்தில் பங்கு பெறும் நிலைமையினை உருவாக்க வேண்டும். அதற்கான சட்டம் மத்திய அரசில் கொண்டு வரப்படும் வரை காத்திராமல் அரசுத் துறை, கூட்டுத் துறை மற்றும் கூட்டுறவுத் துறையில் மாநில அரசே கொண்டு வரலாம். உதாரணமாக போக்குவரத்துக் கழகங்கள், மின்வாரியம், பால்வள நிறுவனம், கூட்டுறவு நூற்பாலை, கூட்டுத்துறையான 'டைட்டான் வாச்சஸ்' போன்றவற்றில் உற்பத்தி மட்டம், நிர் வாக மட்டம், போர்டு மட்டம் வரை தொழிலாளர் பிரதிநிதிகள் நிர்வாகத்தோடு இணைந்து முடிவெடுக்க வாய்ப்புக் கொடுக்கப் பட வேண்டும். மூன்றாண்டுக் கால வரையறையை நிர்ணயித்து, அதன் பிரதிபலிப்புகளை லாபம் உற்பத்தி, உற்பத்தித் திறன், தொழில் உறவு, தொழிலாளர்களின் வளர்ச்சி முதலிய கோணங் களில் நிர்ணயித்து கணித்துப் பிறகு அடுத்தடுத்து ஏனைய தொழி லாளர்களுக்கும் இத்திட்டத்தினை விரிவுபடுத்தலாம்.

தொழில் உறவில் அரசு தான் ஒரு முன்மாதிரியாக நடந்து கொள்ள வேண்டும். உதாரணமாக ஒப்பந்தத் தொழிலாளர் சட்டம் இருக்கிறது. அதை அமல்படுத்துவதில் அரசு சீரிய கவனம் செலுத்த வேண்டும். மணலி உரத் தொழிற்சாலையின் சீரமைப்பு மேம்பாட்டிற்காக தமிழக அரசு 300 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது. அந்தத் தொழிற்சாலையில் சென்ற 1970 ஆம் ஆண்டு முதல் "பாரத் டிரான்ஸ்போர்ட்ஸ்" என்ற கம்பெனி 900 பேர்களுக்கு மேல் கான்ட்ராக்ட் தொழிலாளர்களை சப்ளை செய்து வந்தது. கடந்த 1988 ஜூலையில் திடீரென்று தொழிலா ளர்களை வேலையில் இருந்து நிறுத்தி விட்டது. மணலி உரத் தொழில் நிர்வாகம் 18 ஆண்டுகள் உற்பத்தி தொடர்பான வேலை பார்த்த ஒப்பந்தத் தொழிலாளர்களைக் கைகழுவி விட்டு வேறு தொழிலாளர்களை நியமித்துக் கொண்டது. வேலை நீக்கம் சம்பந்தமான நோட்டீஸ் கொடுக்கப்படவில்லை. கிராஜு விட்டி கொடுக்கப்படவில்லை. 18 ஆண்டு வேலை செய்து இன்று



1991 செப்டம்பர் 16] [திரு. கே. ஏ. மனோகரன்]

வேலை வாய்ப்பில்லாமல் உள்ள தொழிலாளர்களை மணலி எம்.எஃப்.எல். நிர்வாகம் நேரடித் தொழிலாளர்களாக ஆக்குமாறு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரசுத் துறையில் என்.எம்.ஆர். என்ற பெயரில் பி. டபிள்யூ.டி. சிப்காட் போன்ற பல துறைகளில் பல பேர் பணிபுரிந்து வருகின் றனர். பல ஆண்டுகள் ஆகியும் அவர்கள் பணி நிரந்தரம் செய்யப் படவில்லை. குறிப்பிட்ட காலம் வந்ததும் அவர்கள் தற்காலிக ஊழியர்களாகவே தொடரும் வகையில் அதிகாரிகள் 'சர்வீஸ் கட்' செய்து, சில வாரங்கள் இடைவெளிவிட்டு பிறகு மாற்றுப் பெயரில் வேலையில் தொடர அனுமதிக்கிறார்கள். இது முறை கேடு ஆகும். தொழிலாளர் நலத்திற்கு எதிரானது. அரசு இதுபோன்ற ஒப்பந்தத் தொழிலாளர்களை அமர்த்தி வேலை வாங்குகிறது. பல ஆண்டுகள் ஆனாலும் வேலை நிரந்தரம் செய் வதில்லை. உதாரணமாக மின்வாரியம் 18,000 தொழிலாளர் களுக்கு மேற்பட்டவர்களை கான்ட்ராக்ட் தொழிலாளர்களாக வைத்து உள்ளது. அவர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்று ஐ.என்.டி.யூ.சி. சுப்ரீம் கோர்ட்டில் வழக்காடியது. சுப்ரீம் கோர்ட் நீதிபதி கலித் கமிஷன் மூலமாக 18,000 தொழிலாளர் களையும் நிரந்தரம் செய்யுமாறு உத்தரவு வழங்கியுள்ளது. இதுபோல் வழக்குகள் போடாமல் இருக்கிற ஒப்பந்தத் தொழி லாளர்களையும் சர்வீஸ் நிரந்தரம் செய்ய இந்த அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாலை 5—50

ஓசூரில் பட்டு உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழி லாளர்களின் ஊதியம் மிகமிகக் குறைவு. இது சம்பந்தப்பட்ட ஊதிய உயர்வுக்கான கோரிக்கை ஒன்று 1987 ஆம் ஆண்டு முதல் சென்னை இண்டஸ்ட்ரியல் ட்ரிபியூனலில் நடந்து வருகிறது. அரசு லட்சிய முதலீட்டாளராக,மாடல் எம்ப்ளாயராக நடக்க வேண்டும். ஓசூர் ஒருமுக்கிய வளர்ந்துவரும் தொழில்கேந்திரம் ஆகும்.ஓசூரை அடுத்துள்ள பாகலூர், தளி, தேன்கனிக்கோட்டை முதலிய பகுதி களில் ஈ.எஸ்.ஐ. திட்டம் இல்லை. அங்கு சுமார் 2,000 தொழி லாளர்கள் உள்ளனர். அங்கே ஈ.எஸ்.ஐ. திட்டம் வராமல் அங்கேயுள்ள நிர்வாகங்கள் தடுத்து வருகின்றன. ஓசூரில் சுமார் 10,000 தொழிலாளர்கள் வசித்து வருகிறார்கள். அங்கு ஆரம்பப் பள்ளி, உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி வசதிகள் இல்லை. தொழிலாளர்கள் நிறைய பணம் கொடுத்து பிள்ளைகளை பள்ளி களில் சேர்க்க இயலாத சூழ்நிலை உள்ளது. அதிகப் பள்ளி களை அரசு திறக்க வேண்டும். தேசு பயிற்சி அமைப்புகளையும் விளையாட்டுத் திடல்களையும், பூங்கா வசதிகளையும் அரசு அங்கே செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. கே. ஏ. மனோகரன்] [1991 செப்டம்பர் 16

தொழிலாளர்களுக்கு பல்வேறு தொழில்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச கூலியினை 25 சதவீதம் உடனடியாக உயர்த்த வேண்டும். பட்டுத் தொழில், நெசவுத் தொழில், இன்ஜினியரிங் தொழில், கட்டிட நிர்மாணத் தொழில், பீடி சுற்றும் தொழில், சோப், ரொட்டி, பிஸ்கட் தொழில், ஓட்டல் தொழில் முதலியவற்றில் உயர்த்த வேண்டும். காரணம் விலைவாசி உயர்வும், பண மதிப்பு 20 சதவீதம் இறக்குமதிக்கு என்று குறைக்கப்பட்டிருந்தாலும் அதன் பிரதிபலிப்பு அடி மட்டத்தின் மக்களையும் பாதிக்கிறது. இந்தச் சூழ்நிலையில் குறைந்தபட்சக் கூலியினை 25 சதவீதம் உயர்த்தி உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தொழிற்சாலையில் விபத்திற்குள்ளாகும் தொழிலாளர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் ஈட்டு மானியத்தை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டு, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. சிங்கை கோவிந்தராசு.

திரு. சிங்கை கோவிந்தராசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் எங்களுக்கு எல்லாம் இந்த சட்டமன்றத்திலே தொழிலாளர் நலன் பற்றிய மானியக் கோரிக்கையின் மீது பேசுகின்ற வாய்ப்பினை பெற்றுத் தந்திருக்கும் எங்களுடைய கழகத்தின் காவல்தெய்வம், என்னுடைய குடும்ப தெய்வம், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் மலர் பாதங்களை மானசீகமாகத் தொட்டு வணங்கி, என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

நான் சார்ந்திருக்கும் கோவை மாவட்டம் தொழிலாளர்கள் நிறைந்த மாவட்டம் ஆகும். அங்கே பஞ்சாலைகள், இன்ஜினியரிங் தொழிற்சாலைகள், இதர தொழிற்சாலைகள் நிறைந்து, தொழிலாளர்கள் நிரம்ப இருக்கும் மாவட்டம் ஆகும். அதிலேயும் என்னுடைய தொகுதியான சிங்காநல்லூர் தொகுதியில் தமிழகத்தில் மொத்தமாக இருக்கக்கூடிய 105 பஞ்சாலைகளில் 35 பஞ்சாலைகள் உள்ள தொகுதியாகும். அந்தத் தொகுதியிலிருந்து தொழிலாளர்களால், அன்புத்தலைவி புரட்சித் தலைவி அவர்கள் முதலமைச்சராக இந்த மாமன்றத்தில் அமர வேண்டுமென்ற உணர்வோடு, அனுப்பிவைக்கப்பட்ட நானும் ஒரு சாதாரண மில் தொழிலாளி என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆடை இல்லாத மனிதன் அரைமனிதன் என்பார்கள். அந்த ஆடையை நெய்து கொடுக்கக்கூடிய பஞ்சாலைத் தொழிலாளியின் கடைசி சொத்து என்னவென்று சொன்னால் ஆஸ்துமா, டி.பி.



1991 செப்டம்பர் 16] [திரு. சிங்கை கோவிந்தராசு]

போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டு ரிடையர் ஆகிறார்கள். அந்தத் தொழிலாளர்கள் ஓய்வு பெறுவதற்கு முன்னால், அந்தத் தொழிலாளர்களுக்காக ஈ.எஸ்.ஐ. மருத்துவமனை நடத்தப்படுகிறது. இங்கேயுள்ள மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் எங்களுடைய மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். அங்கே இருக்கக்கூடிய தொழிலாளர்களுடைய நிலையை அவர்கள் முழுமையாக உணர்ந்தவர்கள். அந்த ஈ.எஸ்.ஐ. மருத்துவமனையில் இன்றைய தினம் தொழிலாளர்கள் 1,500 ரூபாய் ஊதியம் பெறுபவர்களுக்கு சிகிச்சை இல்லையென்ற காரணத்தால், தொழிலாளர்கள் குடும்பத்தில் இருக்கக்கூடிய வயதானவர்கள் எல்லாம் ஓய்வு எடுக்கும் இல்லங்களாக அது மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. சரியான முறையிலே மருத்துவ வசதி கிடையாது. சரியான முறையிலே மருந்துவிநியோகம் கிடையாது. ஒரு ஆப்பரேஷன் செய்ய வேண்டுமென்றால் அதற்கு தேவையான மருந்துகள், உபகரணங்கள் கிடையாது. அங்கே இருக்கக்கூடிய டாக்டர்கள் நோயாளிகளின் உறவினர்களிடம் சொல்லி வெளியே இருந்து வாங்கிக் கொடுக்கச் சொல்கிறார்கள். இதை எல்லாம் கேட்கின்ற நேரத்திலே மத்திய அரசும் மாநில அரசும் கூட்டாக இணைந்து நடத்துகின்ற இந்த மருத்துவமனை சென்னையிலே ஐயனாவரத்திலும் மதுரையிலும் கோவையிலே சிங்காநல்லூரில் நான் பிறந்த வரதராஜபுரத்திலும் இருக்கின்றன. அன்றாடம் நான் காலையிலே எழுந்தவுடன் என் கண் முன்னே தோன்றுவது அந்த மருத்துவமனைதான். அந்த மருத்துவமனையிலே இருக்கக் கூடியவர்கள் தர்மத்திற்கு அங்கே பணியாற்றுகிறார்கள். பெறுகின்ற ஊதியத்திற்கும் அங்கே பணியாற்றுகின்ற டாக்டர்கள், நர்சுகளால் தொழிலாளர்களுக்கு எந்தவிதமான பலனும் இல்லை. அங்கே இருப்பதெல்லாம் படுக்கை அறைகள் தான். அதிலே தொழிலாளர்கள் தங்களுடைய பாட்டிமார்களையும் தாய்மார்களையும் தந்தைமார்களையும் அனுப்பி, படுக்க வைத்து ஓய்வு பெறச் செய்து கொண்டிருக்கிறார்கள். அங்கே இருக்கக்கூடிய அதிகாரிகளைக் கேட்டால் நாங்கள் என்ன செய்வோம்; எங்களுக்கு அனுப்புவதை வைத்துத்தானே செய்ய முடியும் என்கிறார்கள்.

மாலை 5-55

தொழிலாளர்களுக்கு என்று இருக்கக்கூடிய டிஸ்பென்சரிகளில் கொடுக்கக் கூடிய மருந்துகள் வெற்றிலைப் பாக்கு போடுவதற்கு தடவுகின்ற சுண்ணாம்பும் அதுவும் ஒன்றுதான் என்று சொல்லுகின்ற அளவுக்கு தரம் குறைந்த மருந்தாக இருக்கிறது. அந்த அளவுக்கு தரம் குறைந்த மருந்துகளைப் பயன்படுத்துகிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையை அங்கே இருக்கக்கூடிய பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கும் என்ஜீயனிரிங் தொழிலாளர்களுக்கும் மாற்றியமைக்க நம்முடைய புரட்சித் தலைவி அவர்

களுடைய ஆட்சிக் காலத்திலே தொழிலாளர் நலத்துறை
அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு
கொள்கிறேன்.

அதே நேரத்தில் சென்ற கவர்னர் உரை மீது நன்றி தெரிவிக்
கின்ற விவாதத்தில் குறிப்பிட்டது போல நான் வாழ்ந்துகொண்டி
ருக்கிற என்னுடைய தொகுதியிலே வசந்தாமில் ஆலையிலே 1,662
மில் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். 13-7-1984 ஆம் ஆண்டு
மூடப்பட்ட அந்த ஆலையில் இன்றைய தினம் 200-க்கு மேற்
பட்ட தொழிலாளர்கள் இறந்து விட்டார்கள். பசியாலும்
பஞ்சத்தாலும் வேலையில்லாததாலும் அந்தக் குடும்பங்கள் வாடி
வதங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதைப் போலத்தான் ஜெய
லட்சுமி மில்ஸ் இருக்கிறது. அதைப் போலத்தான் மது ஸ்பின்
னிங் மில்ஸ் இருக்கிறது. அதைப் போலத்தான் இராதா
கிருஷ்ணா மில்ஸ் இருக்கிறது. ஆனாலும் இன்றைய தினம்
இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பிலே
மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவித்திருப்பது வரவேற்கக்கூடிய
தாக இருந்தாலும் உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா
னால் அந்தக் குடும்பங்கள் வாழ்வதற்கும் தொடர்ந்து அங்கே
இருக்கக்கூடிய ஊழியர்கள் மேலும் இறக்காமல் பாதுகாப்பாக
இருப்பதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும் என்று கருதுகிறேன்.
இதிலே குறிப்பிட்டிருப்பதைப் போல அந்த மில்கள்
பற்றி, சென்ற முறை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள்
இந்த மன்றத்திலே பதில் சொல்லுகின்றபோது சரியான நட
வடிக்கை எடுப்பதற்கு உண்டான சாத்தியக் கூறுகளை அறி
வித்திருந்தார்கள். அந்த நிலை அதே இடத்தில் நின்றுவிடாமல்
தொடர்ந்து வேகப்படுத்தி, வசந்தா மில்ஸ், ஜெயலட்சுமி மில்ஸ்,
மது ஸ்பின்னிங் மில்ஸ், இராதா கிருஷ்ணா மில்ஸ் தொழிலாளர்
களுக்கு வாழ்வளிப்பதற்கு உண்டான நிலையை ஏற்படுத்தித்
தர வேண்டுமென்று இந்த நேரத்தில் மாண்புமிகு புரட்சித்
தலைவி அவர்கள் மூலமாக மாண்புமிகு தொழிலாளர் நலத்
துறை அமைச்சர் அவர்களை நான் பணிவன்போடு கேட்டுக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உயிர் வாழ்வதற்காக மேற்கொள்ளப்படும் பணியின் போது
ஏற்படும் விபத்துக்களில் தொழிலாளர்களுடைய விலை மதிப்பு
இல்லாத உயிரை, உறுப்புகளை, ஆரோக்கியத்தை இழந்துவிடு
கிறார்கள். எனவே தொழிலாளர்கள் மேற்கொள்ளும் பணியின்
போது பாதிப்பு ஏற்படாத வகையில் தொழிலாளர்களுடைய
ஆரோக்கியம், பாதுகாப்பு நடவடிக்கை ஆகியவற்றை தொழில்
வளர்ச்சியுடன் இணைத்து கருதிப் பார்க்க மாண்புமிகு புரட்சித்
தலைவி அவர்களுடைய அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க
வேண்டுமென்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.



அதைப்போல, இன்றைய தினம் தொழிலாளர்கள் என்று
எடுத்துக் கொண்டால் பனியன் தொழிலாளர்கள், விவசாயத்
தொழிலாளர்கள், மாநகராட்சி சுகாதார ஊழியர்கள், பீடி
சுற்றும் தொழிலாளர்கள், தையல் தொழிலாளர்கள், வண்டி
இழுக்கும் தொழிலாளர்கள், சுமை தூக்கும் தொழிலாளர்கள்,
கட்டிடத் தொழிலாளர்கள், பத்திரிகைத் தொழிலாளர்கள்,
அச்சகத் தொழிலாளர்கள், மளிகைக் கடைத் தொழிலாளர்கள்,
ஓட்டல் தொழிலாளர்கள், நெசவுத் தொழிலாளர்கள் என்று
பல்வேறுபட்ட தொழிலாளர்கள் இந்தச் சமுதாயத்திலே வாழ்ந்து
கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு என்று சில இடங்களிலே
சில தொழில்களுக்கு தொழிற்சங்க அமைப்புகள் இருக்கின்றன.
பல தொழிற்சங்க அமைப்புகள் இல்லாத தொழிலாளர்கள் இன்
றைய தினம் தாயை இழந்த குழந்தையைப் போல அனாதை
களாக இந்தச் சமுதாயத்திலே நிர்கதியாக நிறுத்தப்பட்டு இருக்
கிறார்கள். அவர்களுக்கு எல்லாம், இன்றைய தினம் புரட்சித்
தலைவியினுடைய ஆட்சிக் காலத்திலே, கூலி நிர்ணயம் செய்து,
அவர்களுடைய வாழ்க்கைக்கு உத்தரவாதம் உள்ள நடவடிக்கை
களை மேற்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்திலே நான்
பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மாலை 6-00

என்னுடைய தொகுதியான சிங்காநல்லூர் தொகுதியிலே வரு
கின்ற தீபாவளி போனஸ் பிரச்சினைக்காக, தொழிற்சங்கங்கள்
தங்களுடைய மாறுபட்ட கருத்தைக் கொண்டு உள்ளன. எனவே
அவைகளால் ஏற்படக்கூடிய சிக்கல்களினால், தொழிலாளர்
களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்பைத் தவிர்க்கின்ற வகையிலே
நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக தொழிலாளர்களுக்காக வாழ்ந்து, தொழிலா
ளர்களுக்காகவே தன் உயிரைத் தியாகம் செய்த தியாகி
என்.ஜி. ராமசாமி அவர்களுடைய பெயரை மாண்புமிகு தமிழக
முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள், எந்தக் கட்சியிலே இருப்
பவர்களானாலும், 'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும்
மணம் உண்டு' என்று பேரறிஞர் அண்ணாவினுடைய இலட்
சியங்களை ஏற்றுக் கொண்டு, அரசாட்சி நடத்துகின்ற அன்புத்
தலைவி அவர்கள் பாதம் தொட்டு வணங்கிக் கேட்டுக் கொள்
கிறேன்—தொழிலாளர்களுக்காக, முதலாளிகளால் படுகொலை
செய்யப்பட்ட தியாகி என். ஜி. ராமசாமி அவர்களுடைய
பெயரை என்னுடைய தொகுதியிலே இருக்கக்கூடிய தொழி
லாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனைக்கு, ஈ.எஸ்.ஐ.-க்கு வைக்க
வேண்டும் என்று பணிவன்போடு கேட்டு, எனக்கு இந்த வாய்ப்பை
நல்கிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைச்
சொல்லி விடை பெறுகிறேன், நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ஏ. ரவிக்
குமார்.**

*திரு. ஏ. ரவிக்குமார் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னைப் போன்ற சாதாரணமானவர்களும் இந்த மன்றத்தில் பங்கேற்று, மக்கள் குறைகளை எடுத்துக் கூறுகின்ற வாய்ப்பை அளித்த எங்களின் இதய தெய்வம், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் பொற் பாதங்களுக்கு எனது நன்றியை காணிக்கையாக்கி, எனது கன்னி உரையைத் தொடங்குகின்றேன்.

தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் என்ற மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பை அளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது பொன்னேரி தொகுதியில் புதிதாக உருவாகிக்கொண்டு இருக்கும் சுமார் 2 ஆயிரம் மெகாவாட் மின்சார உற்பத்தி செய்கிற அனல் மின் நிலையத்திற்கு கடந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு எந்தவிதமான சம்பந்தமும் இல்லாமல், வடசென்னை அனல் மின்சாரத் திட்டம் என்று பெயரிட்டுள்ளார்கள். அதை மாற்றி, அந்த மின்சாரத் திட்டம் வருவதற்கு பெருமுயற்சி எடுத்துக் கொண்ட, டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பெயரினை, அவரின் நினைவாக, செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் அமைந்துள்ள அந்த மிகப் பெரிய தொழிற்சாலைக்கு செங்கை-எம்.ஜி.ஆர். அனல் மின்சாரத் திட்டம் என்றோ, அல்லது பொன்னேரி அனல் மின்சாரத் திட்டம் என்றோ பெயரிட வேண்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களைப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், அங்கே வேலைக்கு ஆட்களை அமர்த்தும்போது, பின்தங்கிய தொகுதியாகிய எனது தொகுதியைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல் எண்ணூர் அனல் மின் நிலையத்தில், 'இன்கோ சர்வீஸ்' என்ற அமைப்பில் வேலை செய்யும் சுமார் 1,000 தொழிலாளர்களை நிரந்தரமாக்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை, மணலி உரத் தொழிற்சாலையில் கடந்த 15 ஆண்டுகளாக, சுமார் 1,000 ஒப்பந்தத் தொழிலாளர்கள் வேலை செய்து வந்தார்கள். அவர்கள் கடந்த 3 ஆண்டுகளாக நிறுத்தப்பட்டு, பசியும் பட்டினியுமாக வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே, மீண்டும் அவர்களுக்கு



நிரந்தரமாக வேலைவாய்ப்பை அளித்து, மீண்டும் அவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், அந்த உரத் தொழிற்சாலையை சுமார் 314 கோடிக்கு விரிவாக்கம் செய்யும் திட்டம் உள்ளது என்பதை இந்த நேரத்தில் நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோல் தமிழகத்தில் பல்வேறு இடங்களில், செக்யூரிட்டி பீரோ என்ற அமைப்பை ஏற்படுத்தி, அதன் மூலம் தொழிற்சாலைகளுக்கு காவலர்களை நியமிக்கிறார்கள். அதில் ஒவ்வொருவருக்கும் தொழிற்சாலையின் சார்பாக மாதம் ரூபாய் 1,500 என்று கொடுக்கப்படுகிறது. அதை இந்த அமைப்பில் இருப்பவர்கள் எடுத்துக் கொண்டு, சுமார் 500 ரூபாய் என்றும், 400 ரூபாய் என்றும் அங்கே வேலை செய்கின்ற வாட்ச்மேன்களுக்குக் கொடுக்கிறார்கள். எனவே இதை மாற்றி, சென்ட்ரல் கவர்ன்மென்ட்டிலே சி.ஐ.எஸ்.எப். (Central Industrial Securety Force) என்ற அமைப்பு இருப்பது போல் ஒரு அமைப்பை தமிழக அரசும் ஏற்படுத்தி, அவர்களுக்கு தொழிற்சாலையில் கொடுக்கின்ற முழுத் தொகையையும் கொடுப்பதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு ஆவன செய்யவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று எனது சோழவரம் பகுதியில் ஆங்காடு கிராமத்தில் அமைந்துள்ள எலும்புக் கம்பெனியின் துர்நாற்றமும், சுகாதாரக் கேடும் அந்தப் பகுதி மக்களை வெகுவாக பாதித்துள்ளது. அந்தப் பகுதியைச் சுற்றியுள்ள சுமார் 20-க்கும் மேற்பட்ட கிராமங்கள் அவற்றால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. சுமார் 30,000 பேர் பல்வேறு வியாதிகளுக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றனர். எனவே அந்தத் தொழிற்சாலயை உடனே மூடுவதற்கு புரட்சித் தலைவி அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாலை 6-05

அதேபோன்று சென்னையில் பல்வேறு இடங்களில் 'எக்ஸ் போர்ட் கம்பெனிகளில்' வேலை செய்கின்ற தாய்மார்களுக்கு குறைந்த அளவே கூலியாக அதாவது மாதம் ஒன்றுக்கு ரூ. 250 அல்லது ரூ. 300 தான் கொடுக்கிறார்கள். அதை மாற்றி அவர்களுக்கும் குறைந்த அளவு, மினிமம் வேஜஸ் திட்டத்தின் கீழ் குறைந்த அளவு ஊதியத்தை நிர்ணயம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கு மிடையே ஏற்படுகின்ற பிரச்சினைகளை உடனடியாகத் தீர்த்து வைப்பதற்கு உரிய முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று வேலைவாய்ப்புத் துறையைப் பொறுத்த வரையில், தொழிற்பயிற்சி நிலையங்களில் படித்து, வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்திருக்கின்ற எண்ணற்ற வேலையில்லாத பட்டதாரிகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். உதாரணத்திற்கு நான் கூட 1978-ல் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்திருக்கிறேன். ஐ.டி.ஐ. க்வாலிபி கேஷன் இருக்கின்றது. டிகிரி குவாலிபிகேஷன் இருக்கின் றது. அனைத்து குவாலிபிகேஷன் இருந்தும் இதுவரை எனக்கு ஒரு இண்டர்வியூ கூட வரவில்லை. ஆனால் எனக்குப் பின்னால் பதிவு செய்தவர்கள் பல இண்டர்வியூக்களைப் பெற்று, வேலையில் சேர்ந்திருக்கிறார்கள். எனவே சீனி யாரிட்டி அடிப்படையில் மெரிட்டில் அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கூறிக்கொண்டு, எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு மாண்பு மிகு பேரவைத் துணைத் தலைவருக்கு நன்றியைக் கூறி, விடை பெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தே. குமாரதாஸ் அவர்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று நடைபெறுகின்ற தொழிலாளர், தொழிற்சாலை மற்றும் வேலைவாய்ப்பு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசுவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்ததற்காக நன்றியினைக் கூறிக் கொள்கிறேன். உங்கள் முன்னாலே சில நிமிடங்களுக்கு என்னுடைய கருத்துக் களை பகிர்ந்து கொண்டு, பிறகு என்னுடைய உரையை நிறைவு செய்யலாம் என்று கருதுகின்றேன்.

குறிப்பாக இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்களால் தரப்பட்டிருக்கக் கூடிய கொள்கை விளக்கக் குறிப்புப் புத்த கத்தில் 14 மில்கள் மூடப்பட்டுள்ளதாகவும், 9,434 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டிருக் கின்றார்கள். நான் இந்த நல்ல நேரத்திலே கேட்டுக் கொள்வ தெல்லாம் 1981 முதல் 1990 வரைக்கும் தொடர்ச்சியாக மூடப்பட்டுள்ள மில்களினுடைய எண்ணிக்கைதான் அது. அதிலே வேலை செய்கின்ற பெருவாரியான தொழிலாளர் கள் வாழ்க்கை நடத்த முடியாத சூழ்நிலையில் தற்கொலைக்ள் பலர் செய்து கொண்டதாகக் கூட கூறுகின்றார்கள். இந்த



நேரத்திலே நான் உங்களிடம் கேட்டுக் கொள்வது மில்களைத் திறப்பதற்கான நடவடிக்கைகளை அதிவிரைவில் நீங்கள் மேற்கொள்கின்ற அதே நேரத்தில் பாதிக்கப்பட்ட தொழி லாளர்களுக்குக் குறைந்த பட்சம் மாதம் ஒரு ஊதியத்தை நிர்ணயித்து, இடைக்கால நிவாரணம் வழங்குவதற்கான முயற்சிகளை நீங்கள் மேற்கொள்ள வேண்டும்.

இன்னும் கோவை பகுதியைச் சேர்ந்த அருமை நண் பர்கள் என்னைச் சந்தித்து, வெகு விரைவில் தீபாவளி வர இருக்கிறது. அந்த தீபாவளிக்கு போனசாக—போனஸ் அல்ல. தீபாவளி முன்பணமாக கொஞ்சம் பணத்தை அந்த மூடிய மில் அதிபர்களிடமிருந்து வாங்கித் தருவீர்கள் என்று சொன்னால் சிறப்பாக இருக்கும் என்று கேட்டிருக்கிறார்கள். எனவே அதை உங்களுடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன். நீங்கள் பாதிக் கப்பட்ட தொழிலாளர்களுக்கு தீபாவளிக்கு முன்பாக பணம் கிடைக்குமாறு ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாலை 6—10

அதேபோன்று திருவொற்றியூர் பகுதியில் கே.சி.பி. தொழிற்சாலை இருக்கிறது. அங்கே கிட்டத்தட்ட 525 தொழிலாளர்கள் பணியாற்றி வருகிறார்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள் தொழிலாளர் நலத்துறை ஆணையாளர் அவர்களை அழைத்து அந்த முதலாளிகளிடம் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்ட நேரத்தில் கூட, அவர்கள் பேசி, தொழிலாளர் நல ஆணையாளர் எடுக்கின்ற முடிவுகளுக்குக் கட்டுப்படாமல் தன்னிச்சை யாக, தான்தோன்றித்தனமாக இருக்கின்ற காரணத்தினாலே அந்த 525 குடும்பங்களும் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பதை உங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர் களும், ஆணையாளர் அவர்களும் ஒரு நிலையான முடிவினை எடுத்து, அந்த பாதிக்கப்பட்ட நண்பர்களுக்கு உடனடியாக வேலை கிடைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று பி.அண்ட்.சி. தொழிலாளர்கள் கிட்டத்தட்ட 8,000 நண்பர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களும் பி. அண்ட்.சி. மில் திறக்கப்பட வேண்டுமென்று சொல்லி, மாண்புமிகு முதல்வர் அவர்களிடமும் அமைச்சரிடமும் மனுக்கள் கொடுத்தும் பல கட்டங்களில் பேச்சுவார்த்தைகள் நடத்தியும்கூட எந்தவித மான பயனும் இல்லாமல் இருக்கின்ற சூழ்நிலை நிலவுகிறது. எனவே இப்படி தன்னிச்சையாக செயல்படுபவர்கள் மீது கடுமை யான நடவடிக்கை எடுக்கவும் இந்த அரசு தயங்கக் கூடாது என்று நான் மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்

டிருக்கிறேன். அதைப்போல வடலூர் பகுதியில் சேஷசாயி என்ற
தொழிற்சாலை இன்று மூடப்பட்டிருக்கிறது. அதிலே கிட்டத்
தட்ட 1,800 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.
கடந்த 30 ஆண்டுகாலமாக நல்ல முறையில் செயல்பட்டு வந்த
அந்த நிறுவனம் இன்று திடீர் என்று மூடிக்கிடப்பது மட்டுமல்லா
மல் கடந்த 1982—83-ல் சூப்பர் டாக்ஸ் கட்டக்கூடிய அளவுக்கு
மிக வளர்ச்சி அடைந்தே இருக்கிறது. அவர்கள் அரசாங்கத்திட
மிருந்து பணம் கடனாக வாங்கியிருக்கிறார்கள். அதை திருப்பிக்
கட்டாமல் தட்டிக் கழிப்பதற்காகத்தான் இன்றைக்கு அதை
லே-ஆப் ஆக்கி, கடந்த டிசம்பர் மாதம் 1990-ல் மூடி இருக்கிறார்
கள். இப்படிப்பட்ட முதலாளிகள் அரசையும் ஏமாற்றி தொழி
லாளர்களையும் ஏமாற்றுகிற விதத்தில் செயல்பட்டுக் கொண்
டிருக்கிறார்கள். அதை வன்மையாகக் கண்டித்து இப்படி கீழ்த்
தரமான செயல்பாடுகளில் ஈடுபடுகிறவர்கள் மீது தக்க நட
வடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்திற்கும்
சம்புவராயர் மாவட்டத்திற்கும் சேர்த்து வட ஆற்காடு அம்பேத்
கார் மாவட்டத்தில் தொழிலாளர் நல நீதிமன்றம் ஒன்று இருப்ப
தாக என்னிடம் சொன்னார்கள். கிட்டத்தட்ட ஓராண்டு
காலமாக 17—10—1990 முதல் அந்த தொழிலாளர் நீதிமன்றத்
திற்கு நீதிபதி இல்லாமல் இருக்கிறது என்று என்னுடைய கவ
னத்திற்கு கொண்டு வந்திருக்கிறார்கள். அதிலே ஆயிரத்திற்கும்
அதிகமான வழக்குகள் தேங்கியிருப்பதாகவும் சொல்லியிருக்கிறார்
கள். எனவே அரசு இதில் நேரிடையாக கவனம் செலுத்தி அந்த
மாவட்டத்தில் தொழிலாளர் நீதிமன்றத்திற்கு ஒரு நீதிபதியை
உடனடியாக நியமித்துக் கொடுக்க வேண்டும் என்று நான் மிகப்
பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். அதேபோல கட்டிடத்
தொழிலாளர்களுடைய பிரச்சினை ஒன்றை நான் உங்கள் முன்
னாலே கொண்டு வர கடமைப்பட்டிருக்கிறேன். கட்டிடத் தொழி
லாளர்களுடைய வேலை வாய்ப்பை முறைப்படுத்த வேண்டும்
என்று சொல்லி நம்முடைய முன்னாள் முதல்வர் மறைந்த
எம்.ஜி.ஆர். அவர்கள் இருந்த நேரத்திலே 1982 ஆம் ஆண்டு ஒரு
சட்டத்தை ஏற்படுத்தி அதிலே பத்தாவது பிரிவு ஒன்றை ஏற்
படுத்தினார்கள். அதிலே அவர்கள் உடல் உழைப்போர் பாது
காப்பு சட்டம் என்ற சட்டத்தை இயற்றி உள்ளார்கள். ஆனால்
அது அமல்படுத்தப்படவில்லை. அதிலும் குறிப்பாக ஈ.எஸ்.ஐ.,
பிராவிடன்ட் பண்டு, ஓய்வூதியம், வீட்டு வசதி, குழந்தைகள் காப்
பகம் போன்ற இவைகளையெல்லாம் கட்டிடத் தொழிலாளர்
களுக்கும் அமைத்துத் தர வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள்.
அது மட்டும் அல்ல. அவர்களுடைய ஒரு கோரிக்கையை உங்கள்
முன்னால் வைத்திருக்கிறார்கள். முத்தரப்பு நிறுவனம் என்ற
ஒரு அமைப்பை ஏற்படுத்தி, கூட்டுறவு உணர்வை ஏற்படுத்தி அவர்
களுடைய குறைகளை களைந்து தருவதற்கு செயல்படுத்தவேண்டும்



என்று கேட்டிருக்கிறார்கள். அதாவது அரசு தரப்பு அதிகாரி
களும், கட்டிட முதலாளிகளுடைய அமைப்பில் இருந்து ஒரு
சிலரும், தொழிலாளர்களுடைய பிரதிநிதிகளும் சேர்ந்திருக்கிற
ஒரு முத்தரப்பு குழு ஒன்றை அமைப்பீர்கள் என்று சொன்னால்
அந்தக் கட்டிடத் தொழிலாளர்களுடைய பிரச்சினைகளை தீர்ப்
பதற்கான ஒரு வாய்ப்பு ஏற்படும் என்று சொல்லி கோரிக்கை
வைத்திருக்கிறார்கள். அதை நீங்கள் பரிவுடன் கவனிக்க வேண்
டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல தொழில் வரி என்று ஒன்றை போட்டிருக்கிறீர்கள்.
எந்த முதலாளியும் தொழிலாளர்களுக்காக வரிகளை செலுத்து
வதில்லை. என்னிடம் அந்த தொழிலாளர் நண்பர்கள் குறைபட்
டுக் கொண்டிருக்கிறார்கள். அது என்னவென்றால் ஆண்டுக்கு
நாங்கள் 250 ரூபாய் என்று சொல்லி முன்பு வரி கட்டிக்கொண்டி
ருந்தோம் என்று சொன்னால் இப்போது பத்து மடங்காகி ஏறக்
குறைய 2,500 ரூபாயை நாங்களே கட்ட வேண்டிய சூழ்நிலை ஏற்
படுகிறது. இந்த வரிப்பளுவை நாங்கள் தாங்க முடியாத சூழ்
நிலையில் இருக்கிறது. எனவே எங்களுக்கு முன்பு 250 ரூபாய்
என்று சொன்னால் மேலே 50 ரூபாயோ அல்லது 100 ரூபாயோ
அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டும் என்கிற வீதத்தில் இருக்க
வேண்டுமே தவிர ஒரேயடியாக 10 மடங்கு போடுவது சரியல்ல
என்று தொழில் வரியைப் பற்றி குறைபாடு சொன்னார்கள்.

அதேபோல சிவகாசி பகுதியில் இப்போது ஏற்பட்ட விபத்தின்
காரணமாக அங்கே மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலே
ஒரு குழுவைப்போட்டு, அவர்களுடைய குறைகளை களைகின்ற
விதத்தில் ஒரு குழு நியமிக்கப்பட்டிருக்கிறது. அதிலே மாவட்ட
ஆட்சித் தலைவர் அவர்கள் தலைவராக இருக்கின்றார். என்
னைப் பொறுத்தவரைக்கும் அந்தப் பகுதியிலுள்ள அனைத்துக்
கட்சியைச் சார்ந்தவர்களையும் அதிலே உறுப்பினர்களாக சேர்த்து
ஒரு குழுவை அமைத்தால் அது சிறப்பாக இருக்கும். தனியாக
அவர் விசாரித்து ஒரு அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு பதிலாக
அங்கேயிருக்கக் கூடிய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்
களானாலும் சரி, ஜனதா தளம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்
கட்சி இப்படி எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த எல்லா
உறுப்பினர்களையும் இதிலே பார்ட்டிசிபேட் பண்ணுகிற
விதத்திலே ஒரு குழுவை அமைத்து அந்த அறிக்கையை
உங்களுக்குத் தந்தால் அது மிகவும் பயன் உள்ளதாக இருக்கும்
என்பதை உங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு
வருகிறேன்.

அதேபோல வேலை வாய்ப்பு அலுவலகங்களைப் பொறுத்த
வரைக்கும் இங்கே தரப்பட்டிருக்கக் கூடிய குறிப்பில் 68 வேலை
வாய்ப்பு அலுவலகங்கள் தமிழகம் முழுவதும் இருக்கின்றன

என்று இருக்கிறது. இந்த 68 அலுவலகங்களில் 32 லட்சத்து 44
ஆயிரம் பேர்கள் வேலைக்காக பதிவு செய்திருக்கிறார்கள் என்ற
குறிப்பு நீதிநிலை அறிக்கையில் தந்திருந்தார்கள். கிட்டத்தட்ட
32½ லட்சம் மக்கள் பதிவு செய்திருக்கிறார்கள்.
வருடம், 18 வருடம் பதிவு செய்தும் இதுவரைக்கும் கார்டுவராத
ஒரு கண்டிஷனில் நிறைய பேர்கள் இருக்கிறார்கள். அதிலே 15
வந்து கேட்கிறார்கள். நாங்கள் அந்த அலுவலகத்திற்கு சென்று
நீங்கள் ஏன் அனுப்பவில்லை என்று கேட்டால் சீக்கிரம் அனுப்பி
விடுகிறோம், அடுத்த முறை வருகிற நேரத்தில் அனுப்பி எங்களிடம்
கிறோம் என்று சொன்னார்கள். அடுத்த முறை போய் பார்த்தால் விடு
'சார் ஏஜ் பாராகப் போகிறது, சீக்கிரம் கார்டு அனுப்ப வேண்டும்
என்று சொன்னால் ஒரு மாதத்திலே அனுப்பிவிடுகிறோம்' என்று
சொல்வான். இரண்டு நாள் தாண்டிவிட்டது என்று போய்
சொன்னால், ஐயோ இரண்டு நாள் லேட்டாக வந்து விட்டீர்களே,
வயது கூடிப்போய்விட்டதே என்று சொல்லுவான். இப்படி வயது
குறைவாக இருக்கிறது என்று சொல்கிற நேரத்தில் போனால்
கொஞ்சம் பொறுத்து வாருங்கள் என்றும், கொஞ்சம் பிந்திப்
போனால் வயது கூடிப்போய்விட்டது, முடியாது என்று சொல்கிற
ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. எனவே தகுதியின்
அடிப்படையில் 15 வருடம் எல்லாம் கார்டு வராமல் இருக்கிறது
என்று சொன்னால் அந்த எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ் இருப்
பதில் என்ன பயன் என்று நமக்கு புரியவில்லை. எனவே அதிலே
ஒரு குறிப்பிட்ட கவனத்தை அரசு தனியாக செலுத்த வேண்டும்.
மற்றும் இதை ஒரு பரிந்துரையாக நீங்கள் எடுத்துக் கொள்ள
வேண்டும். மண்டல் குழுவினுடைய பரிந்துரைகளை அமல்
படுத்த வேண்டுமென்று சொல்வதில் இந்த அரசுக்கு எந்தவித
மான கருத்து வேறுபாடும் கிடையாது. அதே போல கிட்டத்
தட்ட 50 இலட்சம் அல்லது ஒரு கோடி ரூபாய்கள் அரசிட
மிருந்து கடனாகப் பெற்று தொழில் தொடங்குகின்றவர்கள் எந்த
முதலாளியாக இருந்தாலும் அது அவர்களுடைய பணம்— கேப்
பிடல்ஃபீஸ் கொஞ்சமாக இருக்கும். அதிகமான பணம் அரசினு
டைய பணம். அரசிடமிருந்து கடன் வாங்கி ஆரம்பிக்கப்படுகின்ற
போது இந்த மண்டல் கமிஷன் பரிந்துரைகள் அடிப்படையில்
குறிப்பிட்ட சதவீதத்தை சார்ந்தவர்களுக்கு நீங்கள் வேலை
வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்று சொல்லி தனியார் துறை
யிலே நீங்கள் ஃபோர்ஸ் பண்ண வேண்டும். அப்படிச் செய்வீர்
கள் என்று சொன்னால் வேலைவாய்ப்புகளை அதிகமாக பகிர்ந்
துக் கொள்வதற்கான ஒரு வாய்ப்பு ஏற்படும் என்பதை உங்களு
டைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாலை 6-15

அதே போல ஐ.டி.ஐ. படித்த மாணவர்களுடைய சூழ்நிலையை
பார்க்கின்றபோது சுய வேலை வாய்ப்புக்காக 10,000 ரூபாய்
கடன் கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். இந்த



10,000 ரூபாயில் ஒன் ஃபோர்த் மானியமாக கொடுப்பதாகச் சொல்கிறார்கள். 10,000 ரூபாய் வாங்குவதற்கு இவன் வங்கிகளில் அலைந்தால், உங்களுடைய அமைச்சர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் சொல்லிவிடுவார்கள். ஆனால் நாங்கள் தருவதற்கு தயாராக இல்லை என்று சொல்லி உதாசீனப்படுத்திவிடுகிறார்கள். இது பெருவாரியாக எங்கே கடன் வாங்கச் சென்றாலும் எல்லா வங்கிகளிலும் நடைபெறுகின்ற சூழ்நிலை. எனவே, இப்படி ஐ.டி.ஐ. யிலிருந்து தொழிற் பயிற்சி பெற்றவர்கள் கடன் வாங்கச் செல்கின்ற நேரத்தில் அவர்களுக்கு கொடுப்பதற்கு அரசு உத்தேசித்துள்ள மானியத் தொகையோடு அந்த கடன் தொகைகளையும் வழங்க வேண்டுமென்று தெளிவான அறுதியிட்ட ஒரு சட்டத்தை நீங்கள் கொடுக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். இறுதியாக ஒன்றைக் கூறிக்கொள்கிறேன். ஈ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரிகள் மாவட்டத்திற்கு ஒன்று என்று பெருவாரியாக இருக்கின்றன. அதை குறைந்தபட்சம் மாவட்டத்திற்கு இரண்டு என்று ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடைசியாக ஒரு பிரச்சினை. மாவட்ட பிரச்சினை. அங்கே ஒரு ரப்பர் தோட்டம் ஒன்று இருக்கிறது. கடந்த 3 மாதங்களாக தொடர்ச்சியாக அங்கே போராட்டம் நடந்து வருகிறது. உண்ணாவிரதப் போராட்டம் போன்ற போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. பணி நிரந்தரம் செய்யப்பட வேண்டும். சி.எல். தொழிலாளி இன்றைக்கும் அவன் தகுதி உடையவனாக சி. எல். ஆகப் பணியாற்றுகிறான். நாளை பெர்மனன்ட்டாக இன்னொரு நபரை எடுக்கின்றபோது இவன தகுதியற்றவனாக ஆகிவிடுகிறான். இது எந்த விதத்தில் செல்லுபடியாகும் என்று எனக்குப் புரியவில்லை. எனவே சி. எல். தொழிலாளியாகப் பணியாற்றுகிறவர்களை அரசு ரப்பர் சழகத்திலே நிரந்தர பணியாளர்களாக நியமிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு அதிகாரிகள் தங்களுக்கு ஒருவரை அங்கு வேலை செய்வது பிடிக்கவில்லை என்று சொன்னால் டகுதி டிவிஷன்கள் 10, 12 இருக்கின்றன. அவர்களுக்குத் தோன்றிய படி மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். பஸ் போக்குவரத்துக்கு எல்லாம் பெரிய சிரமமேற்றிருக்கிறது. எனவே அந்த ப்ளான்டேஷனுக்குள் மாறி மாறி வேலைக்கு செல்ல முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. அப்படிப்பட்ட சூழ்நிலை வர வேண்டாம் என்று கேட்டுக் கொள்வதோடு....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சீக்கிரம் முடியுங்கள்.

டாக்டர் தே. குமாரதாஸ் : அந்த தோட்டத் தொழிலாளர்களுடைய பிரச்சினையில் அரசு தனிக் கவனம் செலுத்தி அவர்களுடைய கோரிக்கைகளை அமல்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி வணக்கம்.

மாண்மிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு.ஜெ. பாலகங்காதரன்.

* திரு. ஜெ. பாலகங்காதரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் குமாரதாஸ் அவர்கள் சிவகாசி தொகுதி யைப் பற்றிப் பேசும்போது அங்கே நடந்த வெடி விபத்தில் கலெக்டர் அவர்கள், அவர்களாகவே விசாரணை செய்தார் என்று குறிப்பிட்டார். ஆனால் அனைத்து கட்சிகளையும் சேர்த்து தான் விசாரித்தார் என்பதை இங்கே கூறக் கடமைப்பட்டு உள் ளேன். மேலும் ** என்பவர் மூலமாக ஸ்பெஷல் கமிஷன் அமைத்து....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர், யாருடைய பெயரையும் சொல்லக் கூடாது. அதைத் தவிர்க்கவும். அது நீக்கப்படுகிறது.

திரு. ஜெ. பாலகங்காதரன் : ஸ்பெஷல் கமிஷனரை அப்பாயின்ட் பண்ணி எல்லாம் விசாரித்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. எஸ்.எஸ். ராமசுப்பு.

மாலை 6-20

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலம், தொழிற்சாலை என்ற இந்த மானியத்திலே காங்கிரஸ் கட்சியினுடைய சார்பாக பேச வாய்ப்பு அளித்த உங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தொழிலாளர்கள் இந்த நாட்டினுடைய பொரு ளாதார வளர்ச்சியின் முதுகெலும்பாக இருக்கிறார்கள். தொழில் செய்யும் நிர்வாகிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் மத்தியில் ஒரு நல்ல இணக்கமும், சுமூகமான நிலையும் இல்லை என்றால் தொழில் வளர்ச்சி இந்த நாட்டிலே குன்றிப் போகும் என்பதில் எந்தவிதமான ஐயமும் இல்லை. தொழில் நிர்வாகிகள், தொழில் அதிபர்கள் லாக் அவுட் என்ற ஆயுதத்தை வைத்துக்கொண்டு அதேபோல் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்யக்கூடிய அந்த ஆயுதத்தை தங்கள் கையில் எடுத்துக்கொண்டு ஒவ்வொருவரும் முன்னுக்குப் பின் முரணாக நடந்து கொண்டார்கள் என்றால் தொழிற்சாலைகள் வளர்ச்சி என்பது இந்த நாட்டிலே இருக்காது

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம் ஆகும். இந்த இருவருக்கும் இடையே ஒரு சுமூகமான உறவை ஏற்படுத்து வதற்கு அரசு எல்லாவகையிலும் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். எந்தப் பேச்சு வார்த்தையாக இருந்தாலும் சரி அதைப்போல இருவருக்கும் இடையில் ஒரு சுமூகமான உறவை உருவாக்குவதற்கு அரசு முயற்சி எடுக்கவில்லை என்றால் நிச்சயமாக எந்த நேரத்திலும் ஒரு முன்னேற்றத்தை இதில் காண இயலாது. ஏன் என்றால் இதற்கு முந்தைய அரசு நமக்கு ஒரு உதாரணமாக இருக்கிறது. டி.வி.எஸ். சுஜிகி கம்பெனியில் ஒரு முறை தகராறு நிர்வாகத்திற்கும் தொழி லாளர்களுக்கும் இடையில் வந்தபோது தி.மு.காவினர் உள்ளே நுழைந்து அங்கே இருக்கின்ற சங்கங்களை உடைத்து அவர்கள் அங்கே பல்வேறுவிதமான இடர்பாடுகளை உருவாக்கினார்கள். இதுபோன்ற பல்வேறுவிதமான தொழிலாளர் விரோதப் போக்கை முந்தைய அரசு கடைப்பிடித்து இருந்ததற்கு பல்வேறு உதாரணங்கள் இங்கே இருக்கின்றன.

அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்கள் என்பவர்கள் இந்த நாட்டில் ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். மொத்தத்தில் தொழிலாளர்கள் எண்ணிக்கையில் அதிகமாக இருப்பவர்கள் இந்த அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்கள் தான். முக்கியமாக கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள், கல் உடைப்போர், மூட்டை தூக்குவோர், விவசாயக் கூலிகள் இவர்கள் எல்லாம் இந்த அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்களாக இருந்து கொண் டிருக்கிறார்கள். இவர்களுக்கு மினிமம் வேஜஸ் ஆக்ட் என்று சொல்லக்கூடிய குறைந்த சம்பளத்தினுடைய நிலையை நீங்கள் கொடுத்து அவர்களுக்கு சம்பளத்தைக் கொடுப்பதற்கு இந்த அரசு பல்வேறு திட்டங்களை வகுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் பீடித் தொழிலாளர்கள் பிரச்சினை. எங்க ளுடைய தொகுதி மட்டும் அல்ல, நெல்லை மாவட்டத்தினு டைய பல்வேறு கிராமங்களில் இது ஒரு முக்கியமான தொழிலாக மக்கள் மேற்கொண்டிருக்கிறார்கள். பெண்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்பதிலே இந்த அரசு மிகவும் அக்கறை எடுத்துக்கொண்டு இருப்பதை நான் வரவேற்கிறேன். அதேசமயத்தில் 90 சதவீதம் இந்த பீடித் தொழிலை நம்பி எங்களுடைய கிராமங்களில் தாய்மார்கள் இதைத் தொழிலாக கொண்டிருக்கிறார்கள். ஆனால் பீடித் தொழிலிலே வேலை செய்கின்றவர்களுக்கு முக்கியமாக பெண்கள் வேலை செய்தும் கூட பெண்கள் உரிமை எல்லாம் பேசுகின்ற இந்தக் காலத்திலே ஆண்களின் பெயரில் தான் அங்கே பாஸ் புத்தகம் எல்லாம் போடப்படுகிறது. இந்த நிலை இன்றும் இருந்து கொண்டிருக் கிறது. பல்வேறு பீடி கம்பெனிகளில் பெண்கள் பெயரால்

பாஸ் புத்தகம் போடப்படவில்லை. அவர்களுக்கு பல்வேறு சலுகைகள் வழங்கவேண்டும் என்பதற்காக இந்த நிர்வாகம் இந்த தாய்மார்களுக்கு கூலி கொடுக்கக் கூடாது, அதாவது அவர்களுக்கு பிரசவ காலத்தில் எல்லாம் லீவு கொடுக்க வேண்டும் ; சம்பளம் கொடுக்க வேண்டும் என்பது எல்லாம் இருப்பதால் அதைக் கொடுக்கக்கூடாது என்ற நிலையை இந்த நிர்வாகங்கள் உருவாக்கிக் கொண்டிருக்கிறது. இதைத் தவிர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

போனஸ் கொடுப்பதில் இந்த பீடி கம்பெனிகள் சில நேரங்களில் காலதாமதம் ஏற்படுத்துகின்றது. பிராவிடென்ட் பண்டு போன்றவைகள் இந்தத் தொழிலாளர்களுக்கு சீக்கிரமாகக் கொடுக்காமல் சில நேரங்களில் காலதாமதம் ஏற்படுத்துவதை அரசு தவிர்த்து பல்வேறு திட்டங்களை அவர்களுக்காக முடுக்கி விடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். .

மேலும் பீடி கம்பெனிகளில் பீடி இலை, பீடித் தூள்கள் இவைகள் எல்லாம் சிலநேரங்களில் குறைவாகவும், மோசமாக வும் கொடுக்கப்படுவதால் அங்குள்ள தொழிலாளர்கள் வெளியில் இருக்கின்ற கடைகளில் வாங்கி பீடியை அவர்கள் சரியாக சுற்றிக் கொடுக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய கையில் உள்ள பணத்தை செலுத்தி இதை வாங்குவதால் கடன் தொல்லைக்கு உள்ளாகிறார்கள். இதுபோன்ற நிலைமை ஏற்படாமல் இருக்க பீடி தொழில் அதிபர்கள் நல்ல இலையையும், நல்ல தூளையும் அதிகமாக சரியான முறையில் அவர்களுக்கு கொடுப்பதற்கு ஏற்பாடு செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கான்டிராக்ட் தொழிலாளர்கள். இன்றைக்கு பல்வேறு நிறுவனங்களில் இவர்களை வைத்துக்கொண்டிருக் கிறார்கள். முக்கியமாக இந்த அரசு வந்ததற்குப் பின்னால் மின்சார இலாக்காவில் பணிபுரிந்து கொண்டிருந்த கான்டிராக்ட் தொழிலாளர்கள் இப்போது நிரந்தர வேலைக்கு எடுத்துக் கொண்டு இருக்கிறார்கள், நிரந்தரம் ஆக்கப்பட்டிருக்கிறார் கள், என்று சொல்லும்போது மகிழ்ச்சியாக இருக்கிறது. அதே சமயத்தில் இன்னும் பல்வேறு நிர்வாகங்களில் இதுபோன்ற கான்டிராக்ட் தொழிலாளர்கள் நிரந்தரமாக்கப்படாமல் சரி யான சம்பளத்தைப் பெறாமல் இருக்கின்ற சூழ்நிலையில் இருக்கிறார்கள். அந்தச் சூழ்நிலையை மாற்றியமைப்பதற்கு அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்து சங்கங்கள். இப்போது பல்வேறு சங்கங்கள் ஒவ்
வொரு தொழிற் சாலையிலும் இருக்கின்றன. ஒவ்வொரு
சங்கமும் ஒவ்வொரு கொள்கையை கொண்டவையாக இருக்
கின்றன. இதுபோன்ற இந்த சங்கங்களால் பிரச்சினைகள்
இருப்பதால் சில நிர்வாகங்கள் பொம்மைச் சங்கங்களை தங்க
ளுக்கு என்று தனியாக நியமித்துக்கொண்டு அந்தச் சங்கங்களை
ரெககனைஸ் செய்து வைத்துக்கொண்டு அந்த சங்கத்தின் நிர்
வாகத்தின் மூலமாக தொழிலாளர்களை செயலாக்குகிறார்கள்.

மாலை 16.25

இதுபோன்ற பொம்மைச் சங்கங்களை உருவாக்குவதனால்
பல்வேறு இடர்ப்பாடுகள், சண்டைச் சச்சரவுகள் எல்லாம்
தொழிலாளர்கள் மத்தியிலே ஏற்படுகின்றன. இந்தச் சச்சரவு
கள் ஏற்படாமல் இருப்பதற்கு அரசு நடவடிக்கை எடுப்பதோடு
மட்டுமல்லாமல் ஒரு சுமுகமான உறவை ஏற்படுத்த வேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல மூடிய ஆலைகள்
இருக்கின்றன. இன்றைக்கு, பி அன்ட் சி மில் என்றால்
சுமார் 6,630 தொழிலாளர்கள் அங்கே வேலை செய்து
இப்போது வேலையில்லாமல் இருக்கக் கூடிய சூழ்நிலை
இருந்து கொண்டிருக்கிறது. அதேபோல பல்வேறு மில்களிலே
சுமார் 11,610 தொழிலாளர்கள் இன்றைக்கு வேலை இல்லாமல்
இருந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமைகளெல்லாம்
இருக்கின்றன. நமது அரசானது இப்போது அவர்களுக்கு
நிவாரணமாக, வேலையில்லாத் தொழிலாளர்களுக்கு சுமார்
250 ரூபாய், முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்
படுவதாக இங்கே சொல்லியிருக்கின்றீர்கள். ஆனால் திராவிட
முன்னேற்றக் கழக அரசு காலத்திலே இந்த நிவாரணம்
வழங்கப்படும்போது, ‘ கடைத் தேங்காயை எடுத்து வழிப்
பிள்ளையாருக்கு உடைத்ததைப் போல, அவர்கள் தொழி
லாளர்களுடைய நல நிதியிலிருந்து அந்தப் பணத்தை எடுத்துக்
கொடுத்தார்கள். அப்போது நாங்கள், சென்ற முறை சட்ட
மன்றத்திலே இதுபற்றி கேட்டோம். ஏன் இப்படிச் செய்கிறீர்
கள், தொழிலாளர் நல நிதியிலிருந்து அந்தப் பணத்தைக்
கொடுக்காமல் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து தான்
கொடுக்கப்பட வேண்டுமென்று நாங்கள் சொன்னோம். அதைத்
தான் நான் இப்போது சொல்கிறேன். திமுக அரசானது
தொழிலாளர்களுக்கு விரோதமான போக்கை, எப்போதுமே
கடைப்பிடித்து வந்தது. இதை ஒரு உதாரணத்திற்காகச்
சொல்கிறேன். அதுமட்டுமல்ல, தொழிலாளர் நலன்
காக்கப்பட வேண்டும். '' தொழிலாளர் உலகம் '' என்ற
ஒரு பத்திரிகை இங்கே அரசாங்கத்தின் மூலமாக வெளியிடப்
பட்டது. அதிலே பல சட்ட திட்டங்கள், தொழிலாளர்
களுடைய பிரச்சினைகள் குறித்து சொல்லப்பட்டிருக்கும்.
அந்தத் தொழிலாளர் நலப் பத்திரிகையை மீண்டும் விட்டு,

அதன் மூலம் அவர்கள் நலம் பெற வசதி செய்து கொடுக்கப்பட வேண்டுமென்பதையும் நான் உங்கள் மத்தியிலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஈட்டுறுதி, ஈட்டுறுதியுடன் இணைந்த ஓய்வூதியத் திட்டத்தினால் பல ஏழை மக்கள் ஏழைத் தொழிலாளர்களுக்கு வாய்ப்பாக இருந்த அந்தத் திட்டத்தை திராவிட முன்னேற்றக் கழக அரசானது தடுத்து நிறுத்தியது. அதை மீண்டும் கொண்டு வந்து அந்த மக்களுக்கு, அந்த ஏழைத் தொழிலாளர்களுக்கு வசதி செய்து கொடுக்கப்பட வேண்டுமென்பதையும் நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

**பீடி**த் தொழிலாளர்கள் அதிகமாக இருக்கின்ற எங்களுடைய பகுதியிலே காச நோய் ஆஸ்பத்திரி ஒன்றை கட்டிக் கொடுப் பதற்கு அரசு முன்வர வேண்டுமென்பதையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். வேலை வாய்ப்பு அலுவலகத்திலே பதிந்து வைக்கப்பட்ட சுமார் 31 இலட்சம் வேலை வாய்ப்பற்ற இளைஞர்கள் இருக்கிறார்கள். மற்றவர்களும் இருக்கிறார்கள். பதியாத, வேலை வாய்ப்பில்லாத இளைஞர்களும் இருக்கிறார்கள். இவர்களுக்காகவும் திட்டங்களை வகுக்க வேண்டுமென்று அரசையும் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் நான் இங்கே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுப்பதோடு மட்டுமல்லாமல் அவர்களுக்குக் கொடுக்கின்ற நிவாரணத் தொகையைக் கூட்டி, மாதம் 300 ரூபாயாக கொடுக்கப்பட வேண்டுமென்பதையும் உங்கள் மத்தியிலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல இன்றைக்கு, பத்திரிகைகாரர்களுக்கு டிரை பார்ட்டைட் செட்டில்மெண்ட் என்ற முத்தரப்பு பேச்சின் மூலமாக அவர்களுக்கு வேஜ் போர்டிலே ஒரு தீர்மானத்தைப் போட்டு, அவர்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பு கிடைப்பதற்கும், அங்கே வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு வேஜ்—ஆனது நிர்ணயிக்கப்பட வேண்டுமென்பதையும் தெரிவித்துக் கொள் வதோடு அரசானது இதை எடுத்துச் செய்ய வேண்டுமென்பதை யும் இங்கே நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். மேலும் வெளி நாடுகளுக்கு. . . (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விரைவாக முடியுங்கள் , மற்றவர்களும் பேச வேண்டும்.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : ஒரு நிமிடத்தில் முடித்துக் கொள்கிறேன். வெளி நாடுகளுக்கு வேலை வாய்ப்பிற்காக பலர் இன்றைக்கு ஈரான், ஈராக் போன்ற நாடுகளுக்கெல்லாம் சென்றிருக்கிறார்கள். மாண்புமிகு பண்ருட்டியார் அவர்கள்



பேசும்போது சொன்னார்கள் ; வெளிநாடுகளுக்குச் செல் கின்றவர்களுக்காக, தனியாக ஒரு அதிகாரியை நியமித்தாவது சென்டிரல் கவர்ன்மெண்டுடன் தொடர்பு வைத்து அவர் களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டுமென்பதைச் சொன்னார்கள். வெளி நாடுகளுக்கு அனுப்புவதற்கு பல புரோக்கர்கள் செயல்படுவதனால், இதனால் பலர் ஏமாற்றம் அடைகிறார்கள். இதுபோன்ற புரோக்கர்களையெல்லாம் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதையும் சொல்லிக் கொண்டு, ஒரு படத்திலே புரட்சித் தலைவர் அவர்கள் சொல்லுவார்கள். '' உழைக்கும் தோழர்களே ஒன்று கூடுங்கள் ; உலகம் நமது என்று சிந்து பாடுங்கள் '' என்று ஒரு பாடலிலே அவர்கள் சொல்லுவார்கள். அவர்கள் தொழிலாளர்கள் மீது அக்கறை கொண்டு அந்தப் பாடலைப் பாடியதைப் போல, இந்த அரசானது தொழிலாளர்கள் மீது சிறப்பான அக்கறை கொண்டு, அவர்களுக்கு எல்லா சலுகை களையும் அளித்து, சிறப்பான திட்டங்களை உருவாக்கி, ஒரு சுமூகமான உறவை நிலைநாட்டி, தொழில்கள் வளர்ச்சி யடைவதற்கு வேண்டிய எல்லா வகையான நடவடிக்கைகளை யும் மேற்கொள்ள வேண்டுமென்ற வேண்டுகோளை வைத்து, வாய்ப்புக்கு நன்றி சொல்லி, முடிக்கிறேன். நன்றி வணக்கம்.

மாலை 6.30

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : திரு. கே. குப்பன்.

திரு. கே. குப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னை இந்தச் சட்ட மன்றத்திலே உறுப்பினராகப் பணியாற்றுகின்ற வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்த எங்களுடைய இதய தெய்வம், எங்களுடைய அன்புத் தலைவி, ஆறரை கோடி மக்களுடைய இதயத்திலே நீங்கா இடம் பெற்றிருக்கிற எங்களுடைய இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற் பாதங்களிலே என்னுடைய நன்றியைக் காணிக்கை யாக்கி, உரையைத் துவங்குகின்றேன்.

என்னைத் தேர்ந்தெடுத்து சட்ட மன்றத்திற்கு அனுப்பிய திருவொற்றியூர் தொகுதியினுடைய வாக்காளப் பெரு மக்களுக்கும் என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்கிக் கொள்ளுகின்றேன்.

திருவொற்றியூர் தொகுதி தொழிற்சாலைகள் நிறைந்த பகுதியாகும். அந்தப் பகுதியிலே, திருவொற்றியூர் தொகுதிக்கு உட்பட்ட கே.சி.பி. தொழிற்சாலை என்ற தொழிற்சாலை இருக்கின்றது. அந்த கே.சி.பி. தொழிற்

[திரு. கே. குப்பன்] [1991 செப்டம்பர் 16

சாலையிலே 525 தொழிலாளர்கள் பணி புரிகின்றார்கள்.
கே.சி.பி. நிறுவனம் சட்ட விரோதமான கதவடைப்பை
இன்றைக்குச் செய்து 30-10-1990-லேயிருந்து இது
வரையில் 11 மாத காலமாக அங்கே 525 குடும்பங்கள்
இன்றைக்குப் பசியாலும், பட்டினியாலும் வாடுகின்ற சூழ்
நிலை இருந்து கொண்டிருக்கிறது. கடந்த கால
திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி
யிலே இந்தப் பிரச்சினையைக் கண்டு கொள்ளாமல் இருந்து
விட்டார்கள் என்பதை நான் இந்தச் சட்ட மன்றத்திலே
தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆகவே, இன்றைக்கு மாண்புமிகு தமிழகத்தினுடைய
முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கின்ற எங்
களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் இந்தச்
சந்தர்ப்பத்திலே கவனத்தில் கொண்டு, நல்லதொரு முறை
யிலே இந்தப் பிரச்சினைகளை முடித்துக் கொடுப்பார்கள் என்ற
நம்பிக்கையோடு இந்த 525 குடும்பங்களும் எண்
ணிக் கொண்டிருக்கிறார்கள். அந்த நம்பிக்கையிலே மாண்பு
மிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களிடத்திலேயும்
நான் அந்தத் தொழிற் சங்கத் தலைவர்களையும் பலமுறை
அழைத்துச் சென்று இந்தப் பிரச்சினையை எடுத்து வைத்திருக்
கின்றேன்.

இந்த அடிப்படையில் கடந்த இரண்டாம் தேதிகூட, தொழி
லாளர் நல ஆணையாளர் அவர்கள்கூட இந்தப் பிரச்சினை
யிலே பேச்சுவார்த்தை நடத்தி ஒரு சுமுகமான முடிவுக்கு வர
இருக்கின்ற சூழ்நிலையில் அந்த கே.சி.பி. நிறுவனம் 6-ஆம்
தேதி அன்றைக்குப் பேச்சுவார்த்தைக்கு வராமல் திரும்பிச்
சென்றிருக்கிறார்கள். அவர்கள் எப்படியாவது இந்தப் பிரச்
சினையில் மாற்றுக் கட்சியுடன் தொடர்பு கொண்டு, இந்தத்
தொழிற்சங்கத்தினுடைய பிரச்சினையை எப்படியாவது முறி
யடித்து, அங்கேயுள்ள தொழிலாளர்களைப் பழி வாங்க
வேண்டுமென்ற நோக்கத்தோடு இருக்கின்ற அந்த கே.சி.பி.
நிறுவனத்தைத் தமிழக அரசு மாண்புமிகு தமிழக முதலமைச்ச
ராகப் பொறுப்பேற்றிருக்கின்ற எங்களுடைய இதயதெய்வம்
புரட்சித் தலைவி அவர்கள் இதைக் கருத்திற்கொண்டு நல்ல
முறையிலே அதை முடித்துக் கொடுத்து, 525 குடும்பங்களையும்
காப்பாற்ற வேண்டுமென்று தொழிலாளர் நலத் துறை அமைச்
சரவர்களையும் நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்
கிறேன்.

அது மட்டுமல்ல, தொழிற்சாலைகள் நிறைந்த பகுதி
யான திருவொற்றியூர் தொகுதிக்கு உட்பட்ட எம்.எப்.எல்.
தொழிற்சாலை சென்னை உரத் தொழிற்சாலை இருக்கின்றது.



1991 செப்டம்பர் 16] [திரு. கே. குப்பன்]

பணிபுரிந்து
அங்கு 1,500 பேர் 25 ஆண்டுக்காலமாக
கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நான்கு ரூபாய் கூலியிலே
யிருந்து 25 ரூபாய் கூலி வரை வாங்குகின்ற அளவிற்கு அந்தத்
தொழிற்சாலையிலே அவர்கள் 25 ஆண்டுக்காலமாகப்
பணிபுரிந்திருக்கிறார்கள். அந்த நேரத்திலே, அவர்கள்
20, 25 ஆண்டுக்காலமாகப் பணிபுரிந்த காலத்தில்
தான் அந்தப் பிரச்சினையை அவர்கள்—1,500 தொழிலாளர்
களையும் சொசைட்டி ஒன்று உருவாக்கி, அவர்களை, அந்தக்
கம்பெனி நிரந்தரமாக ஆக்கிக் கொள்ளக்கூடிய வாய்ப்பினை
ஒரு ஒப்பந்தத்தை அந்த நிறுவனம்—அந்தத் தொழிற்சாலை
ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

அப்படியிருக்கின்றபொழுது, இதை எப்படி, 1,500 தொழி
லாளர்களை—நாம் அவர்களை பர்மனென்ட் செய்து விடு
வது என்ற எண்ணத்தில்—குறுகிய நோக்கத்தோடு எம்.எப்.எல்.
நிறுவனம் இன்றைக்கு 1,500 குடும்பங்களும் வெளியேற்றப்
பட்டு, ஒரு சில தனியார் மூலம் கான்ட்ராக்ட்டுகள் விட்டு,
இன்றைக்கு அந்தப் பிரச்சினையில் இருக்கிறார்கள். ஆகவே,
அவர்கள் 1500 தொழிலாளர்களும், நீதிமன்றத்திற்குச் சென்று
இருக்கிறார்கள் இன்றைக்கு அந்த 1,500 குடும்பங்களும் நடுத்
தெருவிலே இருக்கின்ற சூழ்நிலை இருக்கிறது.

ஆகவே, நான் இந்தப் பிரச்சினையை மாண்புமிகு **தொழி
லாளர் நலத்துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு
வாக் கடமைப் பட்டிருக்கிறேன். **அவர்கள் இந்தப் பிரச்சினை
யிலே தலையிட்டு, இந்த....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் உறவுமுறைகளைச் சொல்ல வேண்டா
மென்று கேட்டுக்கொள்கிறேன். அவருடைய உரையில்**
என்று வந்த சொற்கள் நீக்கப்படுகின்றன.

திரு. கே. குப்பன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்
துறை அமைச்சரவர்கள் இந்தப் பிரச்சினையிலே தலையிட்டு,
அந்த 1,500 குடும்பங்களையும் பசியாலும், பட்டியாலும்
வாடிக்கொண்டிருக்கின்ற அந்த 1,500 குடும்பங்களுக்கும் நீதி
கிடைக்க வழிவகைகளை ஏற்பாடு செய்து அவர்கள் தொழி
லில் ஈடுபடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து தர வேண்டு
மென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த
1,500 குடும்பங்களும் நீதிமன்றத்திற்குச் சென்றதன்
வாயிலாக நீதிமன்றத்திலே அந்த 1,500 பேர்களைத்தான்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. கே..குப்பன்] [1991 செப்டம்பர் 16

வேலைக்கு வைத்துக் கொள்ள வேண்டும்; தனியார் மூலம் கான்ட்ராக்ட் விடக் கூடாது என்று உத்தரவைப் பிறப்பித்தது மட்டுமல்ல, கடந்த ஒருசில தினங்களுக்கு முன்பாக நீதிமன்றத்திலே அந்த எம்.எப்.எல். தொழிற்சாலையினு டைய — நிறுவனத்தினுடைய மேலாளராக இருக்கின்ற மேனேஜர் அவர்களுக்கு இரண்டாயிரம் ரூபாய் அபராதத்தை விதித்து நீதிமன்றம் தீர்ப்புக் கூறி இருக்கிறது என்பதையும் நான் மாண்புமிகு அமைச்சரவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாலை 6-35

ஆகவே, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் என்னுடைய இதய தெய்வம், பொன்மனத் தலைவி, புரட்சித் தலைவி அவர்களுடைய காலத்தில் கே.சி.பி. தொ ழிற்சங்கத்தினுடைய அந்தப் பிரச்சினையையும், எம்.எப்.எல். தொழிற்சங்கத்தினுடைய பிரச்சினையையும் முடித்துக் கொடுக்க வேண்டுமென்று, எனது திருவொற்றியூர் தொகுதி மக்களின் சார்பாக, இந்த நேரத்திலே கேட்டுக் கொண்டு, எனக்கு பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவருக்கு என்னுடைய நன்றியைக் கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. வி. தம்புசாமி.

*திரு. வி. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலன் குறித்து, மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின்சார்பில்ஒரு சில கருத்துக்களைக்கூற அனுமதி தந்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அரசு மாறியிருக்கிறது. அரசுக்குப் பேராதரவு கிடைத்திருக்கிறது. ஆனால், தொழிலாளர் துறையோ அல்லது அதிகாரிகளோ, சட்டமோ, அல்லது தொடர்ந்து கடைபிடித்து வந்திருக்கிற தொழிலாளர் கொள்கைகளோ மாற்றப்படவில்லை என்பதை நாம் அனைவரும் அறிவோம். எப்படி இந்த அரசு மாறியிருக்கிறதோ, அதேபோன்று எதிர்காலத்திலே தொழிலா ளர் துறை மாற்றப்பட்டு, தொழிலாளர்நலத் துறையாகச் செயல் படுவதற்கு. தமிழக அரசு கவனம் செலுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

தொடர்ச்சியாக, தொழிலாளர்களுக்கு எவ்வளவோ சட்டங் கள் இயற்றப்பட்டாலுங்கூட, அந்தச் சட்டங்கள் முழுமையும் ஏட்டளவிலே, 'ஏட்டுச் சுரைக்காய்' போன்று இருக்கிறதே தவிர,



1991 செப்டம்பர் 16] [திரு. வி. தம்புசாமி]

எந்தவித தொழிலாளர் நலத்திற்கோ அல்லது அவர்களுடைய பாதுகாப்பிற்கோ, அல்லது அவர்களுடைய வாழ்க்கைக்கு வேறெந்த விதத்திலோ கடந்த காலத்திலே பயன்படவில்லை என்பதை தொடர்ந்து பல்வேறு அனுபவங்கள் நமக்கு முன் னாலே காட்டுகிறது. எனவே, எதிர்காலத்திலே தொழிலாளர் களுக்கு ஏற்பத்திய அந்தச் சட்டங்களை எல்லாம் முறையாக, செம்மையாக அமல்படுத்துவதற்கு, அவர்களுக்கு எதிர்காலத் தில் ஒரு பாதுகாப்பு ஏற்படுத்துவதற்கு தமிழக அரசு முன்னுக்கு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு, அந்தச் சட்டங் களையெல்லாம் கறாராக அமல்படுத்த வேண்டும். காரணம் ஒரு குறிப்பிட்ட தொழிற்சாலையிலோ, அல்லது தமிழகத்திலே இருக்கிற அனைத்து தொழிற்சாலையிலோ வேலை செய்யக் கூடிய தொழிலாளர்கள், இலட்சோப இலட்சத் தொழிலாளர்கள். ஒரு தொழிற்சாலையிலோ அல்லது தொழிற் சாலையினுடைய அதிபர்கள். அவர்கள் செய்கின்ற சட்ட விரோ தச் செயல்களுக்கு இலட்சக்கணக்கான தொழிலாளர்களை பழி வாங்கக்கூடிய போக்கு, தொடர்ந்து இனிமேல் நீடிக்காது என்ற நம்பிக்கையோடு, தமிழக அரசு தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்கான தொழிலாளர் நலச் சட்டங்களை விரைவாக அமல்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று, முன்பு அனைத்திந்திய அண்ணா திரா விட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப் பேற்றிருந்தபோது, அப்போது தமிழகத்தினுடைய முதல்வராக இருந்த, மாண்புமிகு அமரர் எம்.ஜி.ஆர். அவர்கள் 480 நாட்கள் வேலை செய்திருந் தால், அவர்களை நிரந்தரமாக ஆக்க வேண்டுமென்ற ஒரு சட் டத்தைக் கொண்டு வந்தார்கள். ஆனால், செயல்படவில்லை. அந்தச் சட்டத்தை மீண்டும் தமிழக அரசு அமல்படுத்துவதற்கு தீவிரமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், முன்பு அனைத்திந்திய அண்ணா திரா விட முன்னேற்றக் கழக அரசு இருந்த காலத்தில், தொழிலாளர் களினுடைய நலன் கருதி, அவர்களுடைய வாழ்க்கையிலே ஏற் படக்கூடிய துன்ப துயரங்களையெல்லாம் கருதி, அவர்களுக்கு தொழிற்சாலையிலே கிடைக்கக்கூடிய வருவாயைக் கருதி அவர் களுக்கு வீட்டு வாடகைப்படிச் சட்டம், செக்யூரிட்டி தொழிலாளர் நலச் சட்டம் கொண்டு வரப்பட்டது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அந்தச் சட்டங்கள் எல்லாம் இன்றைய தினம் அமல்படுத்தப் படாமல், கிடப்பிலே போடப்பட்டிருக்கின்றன. மீண்டும், தமிழக அரசு அந்தச் சட்டத்தை அமல்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

டி2 53-298—27

அதே போன்று, பெரிய பெரிய தொழில்கள் நடக்கக்கூடிய நகரங்களில், அது சிவகாசியாக இருந்தாலும், கோவையாக இருந்தாலும், அங்கே அவர்களுக்கு என்ன நலச் சட்டங்கள் இருக்கின்றன என்று சொன்னாலும், அல்லது என்ன ஒப்பந்தங்கள் ஏற்பட்டாலும், அந்த ஒப்பந்தங்கள் முழுமையும் தூக்கி எறியப் படுகின்ற கடந்த கால அனுபவம் நமக்கு முன்னாலே இருக் கிறது.

மாலை 6-40

குழந்தைகள் வேலை செய்யக் கூடாது என்று சட்டம் இருந் தாலும், அவர்கள் எவ்வளவோ துன்ப துயரங்களுக்கிடையில், பொருளாதார நெருக்கடிகளுக்கிடையில் அந்தக் குடும்பங்களில் சின்னஞ்சிறிய குழந்தைகள் எல்லாம் வேலை செய்யக்கூடிய ஒரு சூழ்நிலையையும், அந்த வேலைக்கு எவ்வளவு குறைத்துக் கூலி கொடுக்க முடியுமோ அப்படிக் கூலி கொடுக்கின்ற காட்சி களையெல்லாம் நாம் பார்க்கிறோம். ஆகவே, அந்தச் சின்னஞ் சிறார்கள் வேலை செய்யக் கூடாது என்று சட்டம் மூலம் அதைக் கறாராக அமல் படுத்துவதற்குத் தமிழக அரசு முன்னுக்கு வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அது போன்று, தொழி லாளர் சம்பந்தப்பட்ட எந்தவொரு பிரச்சினையாக இருந்தா லும், ஒரு ஒப்பந்தம் ஏற்படுகிறது. அரசு தரப்பில் அல்லது அந்தத் தொழில் முதலாளிகள் தரப்பில். தொழில் நிறுவனங் கள் தரப்பில், தொழிலாளர்கள் தரப்பில் ஒப்பந்தங்கள் ஏற்படு கின்றன. ஆனால், ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகு, அந்தத் தொழி லதிபர்கள் அல்லது தொழிலிலே இருக்கக்கூடிய நிர்வாகிகள் உடனடியாக நீதிமன்றத்திற்குச் சென்று தடை வாங்கி விடுகிறார் கள். அப்படித் தடை வாங்குவதன் மூலம் அந்தத் தடை பல ஆண்டுகள் ரத்துச் செய்யப்படாமல் இருக்கிற ஒரு சூழ்நிலையை நாம் பார்க்கிறோம். அதனால் யாருக்குப் பாதிப்பு? அந்தத் தொழிலுக்கோ, அல்லது தொழிலதிபர்களுக்கோ பாதிப்பு கிடையாது. ஆனால், அந்த ஒப்பந்தத்தை நம்பியிருக்கிற லட்சோப லட்சக்கணக்கான தொழிலாளர்களுடைய தொழிலைப் பாதிக்கிறது. பொருளாதாரம் பாதிக்கிறது. குடும்பங்கள் பாதிக்கப்படுகின்றன. அவர்களுடைய நலன்கள் முழுமையும் பாதிக்கப்படுகின்றன. எனவே ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகு, இனிமேலாவது அந்த ஒப்பந்தத்தை தடை செய்வதற்காக நீதி மன்றத்திற்குப் போகக் கூடாது என்பதற்காக தமிழக அரசு தொழிலாளர் நலனுக்காக, அவர்களுடைய வாழ்க்கைக்காக ஒரு உத்தரவாதத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதே போன்று, குறைந்த பட்சக் கூலி சட்டம் என்று ஒன்று இருக்கிறது. அந்தக் குறைந்த பட்சக் கூலிச் சட்டத்தை மீண்டும் பரிசீலிக்க வேண்டும், பரிசீலித்து அதை அமல்படுத்து





வதற்கு அரசு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அரசின் குறைந்த பட்ச அந்த ஊதிய அறிவிப்புக்கு முதலாளிகள் அதைக் கொடுக்கமாட்டேன் என்று கோர்ட்டுக்கு போவதையும் தடை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். தொழிலாளர் பிரச்சினையை தமிழக அரசு ஆதரவோடு அணுக வேண்டும். காரணம் என்னவென்றால், ஏதோ தொழிலாளர் ஒன்றுபடு வது அல்லது தங்களுடைய கோரிக்கைகளை முன்வைத்து இயக்கங்கள் நடத்துவது என்பது ஆசைப்பட்டல்ல. அல்லது வேண்டுமென்று செய்யக் கூடியது அல்ல. தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வதோ, அல்லது பல்வேறு இயக்கங்கள் நடத்துவதோ, எது அவர்களை அந்த அளவுக்குக் கொண்டு வந்து நிறுத்துவது, வறுமை. ஒருபுறத்திலே விலைவாசி உயர்ந்து கொண்டே போகிறது. ஒருபுறத்திலே வேலைக்கு உத்திர வாதம் இல்லாத சூழ்நிலை இருக்கிறது; அல்லது லே ஆப் ஏற்படுகிறது. அப்போது இதையெல்லாம் வைத்து தொழி லாளர்கள் கஷ்டப்படுகின்றபோது, தங்களுடைய கோரிக்கை களாகச் சொல்ல வேண்டுமென்று கருதுகிறார்கள். தங்களுடைய கோரிக்கைகளை நிர்வாகம் ஏற்றுக் கொள்ளவில்லையென்றால் அவர்கள் ஒன்றுபட்டு, ஜனநாயக முறைப்படி பல்வேறு இயக்கங் களை நடத்துவதற்கு அவர்கள் முன்னுக்கு வருகிறார்கள். அப் படி இயக்கங்கள் நடத்துகிறபோது, ஏதோ அரசை எதிர்க் கிறார்கள் என்று எண்ணக்கூடாது. அல்லது நிர்வாகத்தை எதிர்க்கிறார்கள் என்றும் எண்ணக்கூடாது. அவர்களுக்கு இருக் கிற சிரமங்கள், சங்கடங்கள் வாழ்க்கையிலே ஏற்படுகிற துன்ப துயரங்கள் இதை வைத்துத்தான் அவர்கள் அப்படி ஒன்றுபட்டு இயக்கங்கள் நடத்துகின்ற சூழ்நிலை வருகிறது. எனவே, எதிர்காலத்திலே தமிழக அரசு தொழிலாளர் பிரச்சினைகளை ஆதரவோடு அணுக வேண்டும். பரிசீலிக்க வேண்டும். லட்சோப லட்சம் தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்கான முழு முயற்சி யையும் எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் பிரச்சினைகள் வருவதற்கு முன்னாலேயே அரசு தரப்பில், தொழிற் சங்கத் தலைவர்களை எல்லாம் அழைத் துப் பேசி, முதலாளிகள் பிரதிநிதிகளையெல்லாம் அழைத்துப் பேசி, அதிலே இருக்கிற சிரமங்கள், சங்கடங்களையெல்லாம் பரிசீலனை செய்து எதிர்காலத்திலே பிரச்சினைகள் வராமலிருக்க இப்படிப்பட்ட ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்கு வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே, தொழிலாளர் சங்கத் தலைவர்களோடு அடிக்கடி அரசு தொடர்பு கொண்டு, கலந்து பேசி, நிர்வாகத்தோடு பேசி, எதிர்காலத்திலே இப்படிப்பட்ட ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே தமிழக அரசை நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதே போன்று, குடிநீர் வடிகால் வாரியத்தின் ஊழியர்கள்
நீண்டகாலமாகப் பல்வேறு கோரிக்கைக்குரிய நபர்களாக இருந்து
கொண்டிருக்கிறார்கள். நீண்டகாலமாக அவர்கள் வேலை
யிலிருந்து நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆகவே அதை
யெல்லாம் பரிசீலித்து, எதிர்காலத்தில், அரசு அவர்களுக்கு வாழ்க்
கையிலே ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்கி வைக்க வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போன்று கனிமம் வெட்டியெடுக்கும் தொழிலாளர்
களும் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அதையும்
தமிழக அரசு பரிசீலித்து அதற்கு நல்லதொரு தீர்வுகாண வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாலை 6-45

அதுபோல் மூடப்பட்ட ஆலைகளைத் திறப்பதற்கான அவ
சரமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்
கொள்கிறேன். காரணம் என்னவென்றால் மூடப்பட்டிருக்
கின்ற ஆலைகளைச் சேர்ந்த இலட்சோப லட்சக்கணக்கான
உழைப்பாளி மக்கள் வாழ முடியாமல் தவித்துக் கொண்டிருக்
கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கைக்கு உத்தரவாதம் ஏற்
படுகிற வகையில் மூடிய ஆலைகளை விரைவாகத் திறக்க தமிழக
அரசு முன் முயற்சி எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்
கிறேன். அதே மாதிரி தொழில் துறை சம்பந்தமாக அந்தத்
தொழில் துறையில் வழக்குகள் ஏற்படுகிறபோது அதற்கென்று தனி
வழக்கறிஞர்கள் நியமிக்கப்பட்டு அந்த வழக்குகளைக் கவனித்து
விரைவாக அந்தவழக்குகளைத் தீர்த்து தொழிலாளர்களுக்கு உதவி
செய்ய தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுபோல்,
போனஸ், இதர சலுகைகள் ஆகிய இவை முழுவதையும் பொறுத்த
வரையில் பேச்சுவார்த்தை மூலம் அதாவது அரசு தலையிட்டு
ஆலை நிர்வாகத்தோடும், தொழிலாளர்கள் தலைவர்களோடும்
அரசு தரப்பில் பேசி எதிர்காலத்தில் தீர்வு காணவேண்டும் என்று
நான் கேட்டுக் கொள்கிறேன். அதுபோல் தொழிலாளர்கள்
சம்பந்தப்பட்ட அனைத்து துறைகளையும் சீர்படுத்துவதற்கு
அரசு முயற்சிக்க வேண்டும் ஏனென்றால் புதிய அரசு
வந்திருக்கிறது, ஆனால் நிர்வாகம் பழைய நிலையிலே
இருக்கிறது. ஆகவே — எதிர்காலத்திலே அரசு
விரைவாகத் தலையிட்டு அந்தக் குறைபாடுகளை எல்லாம்
நீக்கி எதிர்காலத்தில் தொழிலாளர்களின் அரசு இது என்ற ஒரு
உத்தரவாதத்தை ஏற்படுத்தக் கூடிய வகையில் செயலாற்ற வேண்
டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் ஏதோ போராடுகிறார்கள் என்பதற்காக
அவர்களை விரோதிகளாகப் பார்க்க வேண்டாம் என்று நான்
கேட்டுக் கொள்கிறேன். சமீபத்தில் காஞ்சிபுரத்தில் நெச
வாளர்கள் போராடினார்கள். அந்தப் போராட்டத்தின்



மூலம் 500-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டு
ஜாமீனில் வந்திருக்கிறார்கள். நானும் கைத்தறித் துறை
அமைச்சர் அவர்களிடம் இப்போது கூடக் கேட்டேன். ஆகவே
தமிழகத்தினுடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும்,
மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களும் அந்தத்
தொழிலாளர்களை விரோதிகளாகப் பார்க்காமல் அவர்களுடைய
வழக்கை விரைவாக ரத்து செய்வதற்கு ஆணை
பிறப்பிக்கவேண்டும் என்று நான் இந்த மன்றத்தின்
மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று சுருட்டுத் தொழிலாளர்கள். சுருட்டுத்
தொழில் என்பது ஒரு காலத்தில் முதலாளிகள்
100 பேர், 200 பேர் என்று தொழிலாளர்களை வைத்து சுருட்டு
சுற்றக்கூடிய தொழிலாக வைத்திருந்தார்கள். அப்படி அவர்
களை வைத்து இருந்தால் தொழில் சட்டத்தின் அடிப்படையில்
அவர்களுக்கு பஞ்சப்படி, போனஸ் இவை முழுவதையும் வழங்க
வேண்டும் என்பதற்காக எல்.டு லைசன்ஸ் என்ற பெயரில்
அவரவர்கள் வீடுகளிலேயே சுருட்டு சுற்றுவதற்கு அவர்களிடம்
புகையிலைக் கொடுத்து சுருட்டைச் சுற்ற வைத்து, திருப்பி
அவர்கள் வாங்கி வியாபாரம் செய்து கொண்டிருக்கிறார்கள்.
அப்படிப்பட்ட தொழிலில் ஈடுபட்டிருக்கக் கூடிய சுருட்டுத்
தொழிலாளர்கள் தஞ்சை மாவட்டத்தில் அதிகமான அளவில்
ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்குச் சம்பள உத்தரவாதம்
கிடையாது ; போனஸ் கிடையாது; பஞ்சப்படி கிடையாது ;
எந்தவிதமான சலுகையும் அற்ற சூழ்நிலையில் இருந்துகொண்
டிருக்கிறார்கள். அவர்களும், அவர்கள் குடும்பத்தைச் சேர்ந்
தவர்களும் உழைத்து அன்றாட ஜீவனத்தை நடத்திக்கொண்
டிருக்கிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட அந்தத் தொழிலாளர்
களுக்கு எதிர்காலத்தில் ஒரு உத்தரவாதத்தை அளிக்கக்கூடிய
வகையில் தமிழக அரசு அவர்களுக்காக எதிர்காலத்தில் எப்படி
உத்தரவாதம் அளிப்பது என்று பரிசீலித்து அவர்களுக்கு
போனஸ் கொடுப்பதற்கோ அல்லது முதலாளிகளுக்கு வரக்கூடிய
வருவாயில் ஏதாவது எதிர்காலத்தில் கிடைப்பதற்கோ அந்த
சுருட்டுத் தொழிலில் ஈடுபட்டுள்ள அவர்களுக்கு ஒரு
உத்தரவாதம் ஏற்படுவதற்கோ அரசு நடவடிக்கை எடுக்க
வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று நகரசுத்தித் தொழிலாளர்களுக்கு ஓரளவுக்குப்
பாதுகாப்பு இருந்தாலும்—பேரூராட்சியிலே இருக்கக் கூடியவர்
கள் அல்லது பஞ்சாயத்திலே இருக்கக்கூடியவர்கள் அப்படிப்
பட்ட நகர சுத்தித் தொழிலாளர்களுக்கு—எந்தவிதமான
சட்டப் பாதுகாப்பும் இல்லாத சூழ்நிலையில் இருக்கிறார்கள்.
ஊராட்சியிலே பணியாற்றக்கூடிய நகரசுத்தித் தொழிலாளர்
களின் சம்பளத்தைப் பார்த்தால் கிட்டத்தட்ட மாதம்
60 ரூபாய் சம்பளத்திற்கு அவர்கள் வேலை செய்கிறார்கள்.

[திரு. வி. தம்புசாமி] [1991 செப்டம்பர் 16

அவர்கள் குடியிருக்கக்கூட வீடு கிடையாது. எந்தவிதமான, அரசு அல்லது நகராட்சியில் வழங்கக்கூடிய சலுகைகளும் அவர்களுக்கு வழங்கப்படவில்லை. ஆகவே நகராட்சி மற்றும் பேரூராட்சியில் எந்த வகையான சட்டம் அமல்படுத்தப்படுகிறதோ அதே சட்டத்தை கிராமப்புறத்தில் இருக்கின்ற அந்த ஊராட்சி யிலே பணியாற்றக்கூடிய அந்த நகரசுத்தித் தொழிலாளர் களுக்கும் அளிக்கக்கூடிய வகையில் உத்தரவாதம் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று கட்டடத் தொழிலாளர்கள். இன்றைய தினம் இலட்சக் கணக்கான கட்டடத் தொழிலாளர்கள் எந்தவிதமான பாதுகாப்பும் அற்ற சூழ்நிலையில் இருக்கிறார்கள். அங்கே முதலாளிகள் இஷ்டப்படி கொடுக்கின்ற சம்பளத்தை வாங்கித் தான் அவர்கள் ஜீவிக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. கட்டடங்கள் அதிகமாகவும், வேகமாகவும் வளர்ந்துகொண் டிருக்கிற இந்தச் சூழ்நிலையில் அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக் கிற கட்டடத் தொழிலாளர்களுக்கு எதிர்காலத்தில் எப்படி பாதுகாப்புக் கொடுக்கப்பட வேண்டும் என்று தமிழக அரசு பரிசீலித்து அவர்களுக்கு எதிர்காலத்தில் ஒரு பாதுகாப்பு உத்தரவாதம் அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாலை 6-50

அதுபோல காண்ட்ராக்ட் தொழிலாளர்கள். இன்றைய தினம் எந்தத் தொழிலை எடுத்துக்கொண்டாலும் ஒரு காண்ட் ராக்ட் பேசிசில் தான் வேலை வாங்கப்படுகிறது. உதாரணத்திற்குச் சொன்னால், அரசு தரப்பிலே இருக்கின்ற மின்சார வாரியத்திலே காண்ட்ராக்ட் தொழிலாளர்கள் இருக்கின்றார்கள். 10 ஆண்டுக் காலம், 15 ஆண்டுக் காலம் தொடர்ந்து பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொழி லாளர்களுக்கு இதுவரை வேலைக்கு உத்தரவாதம் கிடையாது. நிரந்தரம் கிடையாது. ஒரு அடிப்படைச் சம்பளம்கூட கிடையாது. மின்சார வாரியத்திலே இருக்கக்கூடிய அதிகாரிகள் என்ன சம்பளத்தை நிர்ணயிக்கிறார்களோ அந்தச் சம்பளத்தைப் பெற்றுக்கொண்டு அவர்கள் வாழ்க்கையை நடத்துகிறார்கள். இப்படி ஆயிரக்கணக்கான ஊழியர்கள் நமது அரசுத் தரப்பிலே இருக்கும் மின்சார வாரியத்திலே உழைத்துக் கொண்டிருக்கின் றார்கள். அவர்களை நிரந்தரம் ஆக்குவதற்கு, அவர்களுக்கு ஒரு அடிப்படைச் சம்பளத்தை ஏற்படுத்துவதற்கு அரசு முயற்சிக்க வேண்டும். உதாரணத்திற்குச் சொன்னால், திருவாரூரில் இருக்கின்ற மின்சார வாரியத்தின் பிரிவிலே ஏறத்தாழ 275 ஊழியர்கள். இன்றைக்கு பற்றாக் குறை ஏற்பட்ட காரணத்தினாலேதான் இன்றைய தினம் விளக்குகள் எரியவிடமுடியாத ஒரு நிலைமை இருந்துகொண் டிருக்கிறது. அப்படி ஆட்கள் தேவையிருந்தும்கூட அது பூர்த்தி செய்யப்படவில்லை. அந்த இடங்கள் முழுவதையும் நிரப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1991 செப்டம்பர் 16] [திரு. வி. தம்புசாமி]

அதே மாதிரி பல்வேறு தொழில்களிலே காண்ட்ராக்ட் ஊழியர்கள் அரசு தரப்பிலே கூட இருக்கின்றார்கள். பெரிய பெரிய பாலங்கள் கட்டுகிறார்கள். அந்த நேரத்திலும், அணை களைக் கட்டுகிறபோது பெரிய சாலைகளை அமைக்கிற போது காண்ட்ராக்ட் தொழிலாளர்களை பயன்படுத்துகிறார்கள். அவர் களுக்கு எதிர்காலத்திலே ஒரு உத்தரவாதம் அளிக்கக்கூடிய வகையிலே அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இதுபோன்ற முன்னால் இருந்த அரசு பொதுப் பணித் துறையிலே பணியாற்றிக்கொண்டிருந்த என்.எம். ஆர். என்று சொல்லக்கூடிய ஊழியர்கள் பூராவுமாக, முழுமையாக நீக்கப்பட்டு இருக்கின்றார்கள். அவர்கள் பூராவும் கிட்டத்தட்ட சிவில் என்ஜினியரிங் அளவுக்குப் படித்தவர்கள். ஆனால் அவர்கள் என். எம். ஆர். ஆக 4 வருடம், 3 வருடம் வேலை செய்துகொண்டிருந்தவர்கள். அவர்களை திடீரென்று நீக்கி விட்டார்கள். அப்படி நீக்கிவிட்டதால் அவர்கள் படுகின்ற துன்பங்கள் அதிகமாக இருக்கின்றது. எனவே தமிழக அரசு இதைப் பரிசீலிக்கவேண்டும். பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் இதைப் பரிசீலித்து அவர்களுக்கு எதிர் காலத்திலே வேலையை உத்தரவாதம் செய்வதற்கான சூழலை உருவாக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதே மாதிரி, விவசாயத் தொழிலாளர்கள். விவசாயத் தொழிலாளர்கள் பற்றி இன்றையதினம் மத்திய அரசால் பரிசீலிக்கப்பட்டு நாடு முழுவதும் ஒரு சீரான கூலி இருக்க வேண்டுமென்பதற்காக ரூ. 20 அறிவிக்கப்பட்டிருக்கிறது. சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே தமிழக அரசு இந்த வகையிலே விவசாயத் தொழிலாளர்களுக்கான ஒரு குறைந்தபட்ச கூலிச் சட்டத்தை ஏற்படுத்துவதற்கு பரிசீலிப்பதற்கு முன்னுக்கு வரவேண்டும். அப்படி பரிசீலிக்கிறபோது, அதிலே ஒரு குறைந்த பட்ச சட்டத்தைக் கொண்டு வருகிறபோது தமிழ்நாடு பூராவும் ஒரே சீராக அமல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயத் தொழி லாளர்களுக்காக குறைந்தபட்ச சட்டம் அமல்படுத்தப்பட்டாலும் அதை நிறைவேற்றி விட்டோம். என்று சொன்னாலும் கூட கொடுக்காதவர்கள் மீது எந்தவித நடவடிக்கையும் எடுப்பதற்கான சட்ட விதிகள் கிடையாது. எனவே அதற்கு என்று தனியாக ஒரு வட்ட ஆட்சியர் நியமிக்கப்பட்டு அந்த வழக்குகள் பரிசீலிக்கப்பட்டு அந்தக் கூலி கிடைக்காதவர்களுக்கு கூலி ,பெற்று தருவதற்கான ஒரு சூழலை தமிழக அரசு ஏற்படுத்தவேண்டும்.

[திரு. வி. தம்புசாமி] [1991 செப்டம்பர் 16

விவசாய குத்தகை கட்டவில்லை என்றாலோ அல்லது நிலத்தை
விட்டு வெளியேற்றக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டாலோ அவர்கள்
கோர்ட்டுக்குச் சொல்லலம் என்ற சூழ்நிலை இருப்பது
போல, விவசாயத் தொழிலாளர்களுக்கும் தமிழக அரசால்
அறிவிக்கப்பட்ட குறைந்தபட்ச கூலிச் சட்டம், அது நிறை
வேற்றப்படவில்லை என்றால் அந்தச் சட்டத்தின்படி தனக்குக்
கிடைக்கக்கூடிய அந்த உரிமையைப் பெறுவதற்கு ஒரு குறைந்த
பட்ச முதல்வகுப்பு நீதிபதி என்ற முறையிலே ஒரு வட்ட ஆட்சியர்
அளவுக்கு வழக்கை நடத்துவதற்கு விவசாயத் தொழிலாளர்களுக்கு
அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அது
போன்று திருச்சி பாய்லர் தொழிற்சாலை திருச்சியிலே
இருந்தாலும் கூட அதைச் சுற்றியிருக்கின்ற ஏறத்தாழ
கும்பகோணம் வரையிலும் உற்பத்தி பரவியுள்ளது. அதாவது
20 தொழிலாளர்களை வைத்து வேலை செய்தால் அது சட்டத்
திற்கு உட்பட்டது என்று கருதி 19 தொழிலாளர்களை வைத்துக்
கொண்டு, சிறு தொழில் என்ற பெயரால் அனைத்து
வீடுகளிலும் அதனுடைய பிரிவுகள் செய்யப்படுகின்றன. நட்,
ஸ்குரு இதுபோன்ற சின்னச் சின்ன பகுதிகள் செய்யப்படுகின்றன.
அந்தத் தொழிலாளர்கள் பூராவும் ஐ.டி.ஐ. படித்த
மாணவர்கள். குறைந்த சம்பளத்திற்கு ஒரு நாளைக்கு 10
ரூபாய்க்கு வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப்
பட்ட நிலைமைகளையெல்லாம் அரசு ஆய்வு செய்து
அவர்களுக்கு எதிர் காலத்திலே உத்தரவாதத்தை அளிக்கும்படி
கேட்டுக் கொள்கிறேன்.

இன்றையதினம் எவர்சில்வர் வியாபாரம் என்பது கும்ப
கோணத்திலேயும் அதைச் சுற்றியுள்ள நாச்சியார்கோவில்
வரையிலும் அதிகமாக வளர்ந்து கொண்டிருக்கின்றது. அங்கே
அந்தத் தொழிலாளர்களுக்கு சம்பளம் 8 ரூபாய், 9, ரூபாய், 10
ரூபாய் என்று கொடுக்கப்படுகிறது. நாள்முழுவதற்கும் கூட வேலை
செய்கிறார்கள். எவர்சில்வர் பாத்திரங்களை உருவாக்குகிறார்
கள். அதே மாதிரி வெண்கல பாத்திரங்களை உருவாக்குகிறார்
கள். அதே மாதிரி ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இந்த
குறைந்த கூலி பெற்று வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கின்
றார்கள். அந்தப் பகுதியையும், அந்த தொழிலாளர்களையும்
கணக்கு எடுத்து அவர்களுக்கு என்று ஒரு குறைந்த பட்ச கூலிச்
சட்டத்தை நிர்ணயிப்பதற்கு தமிழக அரசு முன்னுக்கு வர வேண்
டும், நடவடிக்கை எடுக்க வேண்டும், விரைவாக நடவடிக்கை
எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாலை 6.55

அதுபோல இன்று சென்னை மாநகரில் முழுமையும் அத்துக்
கூலிகளாக பலர் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அத்துக்
கூலிகள் என்றால் தினக் கூலிகளாக, கொடுக்கிற கூலியை



1991 செப்டம்பர் 16] [திரு. வி. தம்புசாமி]

வாங்கிக் கொண்டு வேலை செய்து கொண்டிருக்கிறார்கள்.
அப்படி ஏறத்தாழ சென்னை மாநகரில் மட்டும் லட்சக் கணக்கான
தொழிலாளர்கள் இரவும் பகலும் உழைத்துக் கொண்டிருக்கிற
காட்சிகளை நாம் பார்க்கிறோம். அவர்களுக்கு எதிர் காலத்தில்
நிரந்தரமாக தங்குவதற்கு ஒரு குடியிருப்புப் பகுதியை ஏற்படுத்திக்
கொடுப்பதோடு அவர்கள் எந்தத் தொழிலை செய்தாலும்கூட
இன்னசம்பளம் வழங்கியாக வேண்டுமென்ற வகையில் சென்னை
மாநகரில் இருக்கிற அத்துக்கூலி தொழிலாளர்களைப் பாதுகாக்
கின்ற வகையில் ஒரு குறைந்த பட்ச கூலிச் சட்டத்தை உருவாக்கி
அவர்களையும் பாதுகாப்பதற்கு இந்த அரசு முன்னுக்கு வர
வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.
இந்தமாதிரி எதிர் காலத்தில் தொழிலாளர்களைப் பாதுகாக்க
வேண்டும் (மணியடிக்கப் பெற்றது.).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 20 நிமிடம் ஆயிற்று.

திரு. வி. தம்புசாமி : மேற்கண்ட என்னுடைய கருத்துக்களை
கூறி, மீண்டும் தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர்
அவர்களையும், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்
களையும் காஞ்சிபுரத்தில் கைது செய்யப்பட்ட
அந்த 500 தொழிலாளர்களுடைய வழக்கையும் நீங்கள் வாபஸ்
பெற்றுக் கொள்ள வேண்டும்.—அவர்களை தினசரி கோர்ட்டுக்கு
அலையவிட்டால் அவர்களுடைய சம்பளம் முழுமையும் அவர்கள்
இழக்கக்கூடிய சூழ்நிலை இருப்பதால்—அந்த வழக்கை ரத்து
செய்ய வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் மூலம் கேட்டு,
மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் இந்தக் கருத்துக்
களைப் பேச வாய்ப்பளித்தமைக்கு மாண்புமிகு பேரவைத்
தலைவருக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; திரு. சி, ஞானசேகரன்:
மணி 6.56 ஆயிற்று.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, நான் கடைசி. .. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கடைசி என்பதல்ல. உங்
களுக்குப் பிறகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்க வேண்டும்.

திரு. சி. ஞானசேகரன் : எனக்கு முன்னால் பேசிய மாண்பு
மிகு உறுப்பினர் அவர்கள் ஆடை இல்லாத மனிதன் அரை
மனிதன் என்று சொன்னார்கள். தொழிலாளர் வர்க்கம் இன்
றைக்கு ஆடை இல்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறது. தொழி
லாளர்களைப் பார்த்து சமுதாயத்தில் இருக்கிற பெரியோர்கள்
கந்தையானாலும் கசக்கி கட்டு என்று முதுமொழி பேசிக் கொண்
டிருக்கிறார்கள். அதுவரை நான் எதைக் கட்டுவது என்று
தொழிலாளர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.....

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) பேரவையின் அலுவல்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று மாலை கூடிய அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் எடுத்த முடிவின்படி, பேரவை அலுவல்களில் கீழ்க்கண்ட மாற்றம் செய்ய, தீர்மானிக்கப்பட்டுள்ளது.

17–9–1991 ஆம் நாள் அன்று, அதாவது நாளை மாலை பேரவைக் கூட்டம் இல்லை.

அன்று எடுத்துக் கொள்வதாக இருந்த சமூக நலன் பற்றிய மானியக் கோரிக்கை எண் 30, 20–9–1991 ஆம் நாள் அன்று கீழ்க்கண்டவாறு விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

காலை 9–30 முதல் 11–30 வரை கோரிக்கை எண் 26, கைத்தறித் துணித் தொழிலும், கைத்தறியும் துணித் தொழிலும்.

காலை 11–30 முதல் பிற்பகல் 1–30 வரை கோரிக்கை எண் 30, சமூக நலன், அதாவது நாளை எடுத்துக் கொள்வதாக இருந்த மானியக் கோரிக்கை 20 ஆம் தேதி எடுத்து கொள்ள படுகிறது.

20–9–1991 ஆம் நாள் அன்று கேள்வி நேரம் இல்லை.

4. மானியக் கோரிக்கைகள், 1991-92—விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன் தொடர்ந்து பேசலாம்.

திரு. சி. ஞானசேகரன் : இங்கே பட்டுக்கோட்டை கவிஞர் சொன்னதைப் போல, திருடுகிற கூட்டம் திருடிக் கொண்டே இருக்கிறது. சட்டம் போட்டு தடுக்கிறவர்கள் தடுத்துக் கொண்டே இருந்தாலும், குற்றங்கள் நிறைந்து கொண்டிருக்கின்றன என்பதற்கு எடுத்துக் காட்டாக இன்றைக்கு தமிழ் சமுதாயத்தில் எத்தனையோ சட்டங்கள் இருந்தாலும், தொழிலாளர்கள் சுரண்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இன்று தொழிலாளர் தோழர்கள் பல பேர் சட்டமன்ற உறுப்பினர்களாக இங்கே வந்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அண்ணாமலை பேசும்போது நான் ஒரு கொத்தனார் என்று சொன்னார். அதுபோல மற்றொரு உறுப்பினர் நான் ஒரு தொழிலாளி என்றார். இன்று தொழிலாளர் வர்க்கத்தைச் சேர்ந்த பல பேர் சட்டமன்ற உறுப்பினர்களாக



இங்கே வந்திருக்கிற வேளையில் தொழிற் சட்டங்கள் எல்லாம் நல்ல முறையில் செயல்படுத்தப்பட வேண்டும், தொழிலாளர்களுடைய துயர் நிச்சயமாக தீர்க்கப்படும் என்கிற ஒரு நம்பிக்கை எனக்கு பிறந்திருக்கிறது.

இன்று உழைக்கும் பத்திரிகையாளர்கள் சமூகம் இந்த சமுதாயத்தின் கண்களாக விளங்கிக் கொண்டு, சமுதாயத்தின் காதுகளாக விளங்கிக் கொண்டிருக்கிறது. அந்தப் பத்திரிகையாளர் சமூகத்திற்கு என்று அவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட ஊதியம் கொடுக்கப்படுகிறதா என்றால் கிடையாது. 1988 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பச்சாவட் கமிட்டி என்கின்ற அந்த ஊதிய போர்ட் உழைப்பாளர்களுக்கு, பத்திரிகையாளர்களுக்கு இன்ன ஊதியத்தை இனிமேல் கொடுக்க வேண்டுமென்ற ஒரு நிலையை உருவாக்கியிருந்தாலும் கூட இதுவரை அந்தப் பத்திரிகையாளர்களுக்கு அது கொடுக்கப்பட்டதா என்றால் கிடையாது. சில பத்திரிகைகள் அதைக் கொடுப்பதாக சொல்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் எந்தெந்தப் பத்திரிகைகள் அதனுடைய பத்திரிகையாளர்களுக்கு அந்தப் பச்சாவட் கமிட்டியினுடைய தீர்மானங்களையொட்டி, ரெக்கமன்டேசனையொட்டி அந்த ஊதியத்தை கொடுக்கவில்லை என்பதை அறிவிக்கும்படி பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். அதுபோல, அந்தக் கமிட்டியினுடைய அறிவுரைப்படி முத்தரப்பு குழு ஒன்றை மத்திய அரசை வற்புறுத்துகிற அடிப்படையிலே மாநில அரசு உடனடியாக கூட்டி பத்திரிகையாளர்களுக்கு என்று அவர்களுடைய நலனுக்கு என்று நிர்ணயிக்கப்பட்ட ஊதியத்தை கொடுக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இரவு 7-00

இந்தப் பத்திரிகையாளர்களும் சமுதாயத்திலே அவர்கள் மனிதர்களாக விளங்குவதற்கு நாம் உறுதுணையாக இருந்து, அவர்களுக்கு அரசு தொகுப்பு வீடுகளை ஒதுக்கிக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை அவையின் முன் வைக்க விரும்புகின்றேன்.

வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம் பீடித் தொழிலாளர்கள் ஏராளமாக இருக்கக்கூடிய மாவட்டம். நெல்லை மாவட்டமும், வட ஆற்காடு மாவட்டம் பீடித் தொழிலில் முன்னணியில் இருக்கின்றன. தொழிலில்தான் முன்னணி. அந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள பீடித் தொழிலாளர்கள் பீடி சுருட்டுவதால் அவர்கள் சுருண்டுவிழும் நிலையில் இருக்கிறார்கள். அவர்களின் முதலாளிகள்தான் பெருச்சாளிகளாகப் பெருத்துக் கொண்டிருக்கிறார்கள். பீடித் தொழிலாளர்களுக்கு இன்றைக்கு தொகுப்பு வீடுகள் கிடையாது. சென்ற திட்டத்தில்

என்னுடைய வேலூர் சத்துவாச்சேரியில 150 வீடுகள் கட்ட பட்டுள்ளன. வாணியம்பாடி, குடியாத்தம், வேலூர் போன்ற பகுதியிலே அதுபோன்ற வீடுகள் இல்லை. தொகுப்பு வீடுகள் ஆயிரம் கட்டிக் கொடுப்பதாக இப்போது பட்ஜெட்டிலே கூறி யிருக்கிறார்கள். அந்த ஆயிரம் வீடுகளை தயவுசெய்து வட ஆற்காடு அம்பேத்கார் மாவடடத்திற்கே ஒதுக்கிக் கொடுத்து, பீடித் தொழிலாளர்கள் இன்றைக்குத் துன்பப்படுவதால் எங்கள் பகுதிக்கே ஒதுக்கித் தந்து, அடுத்த ஆண்டு வேறு மாவட்டங் களுக்கு தொகுப்பு வீடுகளைக் கட்டுங்கள் என்ற கோரிக்கையை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அமைச்சர வர்களுக்கு வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து கோவையிலே 25,000-க்கும் மேற்பட்ட தொழி லாளர்கள் நகைத் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்களுக்கென்று தனி வரைமுறை கிடையாது. அங்கே இருக்கும் முதலாளிகள் சுரண்டி சுரண்டி பிழைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தான் மேலும் மேலும் பணக்காரர்களாக ஆகிக் கொண்டிருக்கிறார்கள். 25,000-க்கும் மேற்பட்ட தொழி லாளர் வர்க்கத்திற்கு இதுவரை நல்ல வரைமுறை கிடையாது. அந்த நகைத் தொழிலாளர்களுக்கு ஒரு சட்டத்தை தமிழக அரசு இயற்றி, அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டு மென்ற கோரிக்கையை வைக்க விரும்புகிறேன்.

என்னுடைய வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்திலே தீப்பெட்டித் தொழிற்சாலை அதிகமாக குடியாத்தத்தில் இருக் கிறது. வேலூரைச் சுற்றியுள்ள பகுதிகளில் பட்டாசுத் தொழிற் சாலை இருக்கிறது. அந்தத் தீப்பெட்டித் தொழிற்சாலை களில் பணிபுரியும் தொழிலாளர்கள், 10, 20 பேர்கள் விபத்து ஏற்பட்டு மாண்டுவிடுகிறார்கள். தொழிற்சாலை சட்ட விதிப் படி அவைகள் வைக்க வேண்டியதை வைக்காததால் விபத்துக்கள் உருவாகின்றன. வாணியம்பாடியை அடுத்த உதயேந்திரம் பகுதியிலே ஒரு தோல் தொழிற்சாலையிலே பாய்லர் வெடித்து 8 பேர்கள் கருகினார்கள். அதிலே லலிதா என்ற பெண்ணும் கருகி னாள் என்பதை இந்த அவையிலே தெரிவிக்க விரும்புகிறேன். இங்கே இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு அரசின் சார்பாக எந்த நிவாரணமும் கொடுக்கவில்லை. விபத்தில் இறக்கும் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சர் நிதியி லிருந்து நிவாரணம் கொடுக்க அரசு ஏற்பாடு செய்ய வேண்டு மென்று ஒரு கோரிக்கையை வைக்கக் கடமைப்பட்டிருக் கிறேன்.

அடுத்து, தொழிலாளர்களை தற்காலிகத் தொழிலாளர்க ளாக வைத்து ஏமாற்றுபவர்கள் பிரைவேட் தொழிலதிபர்கள் என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். அரசுகூட சில நேரங்





களிலே, சில இடங்களிலே தற்காலிகத் தொழிலாளர்களாக என்.எம்.ஆர். ஆக பல ஆண்டுகளாக வைத்து, அப்படியே நோகடிக்கிறார்கள். எம்.எல்.ஏ. ஆஸ்டல் வளாகத்திலே உள்ள தேர்வாணைக் குழு அலுவலகத்திலேகூட 350 பேர்கள், 25 ரூபாய் ஊதியத்தில்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தேர்வாணைக் குழு பற்றி இங்கே விவாதிப்பது சரியல்ல. அதைத் தவிர்க்கவும்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுத் துறையிலேகூட பல இடங்களிலே என்.எம்.ஆர். என்று தொழிலாளர்களை ஆண்டுக் கணக்கிலே வைத்துக்கொண்டு, அவர்கள் நெடுநாட்களாக பணி புரிந்தாலும் அவர்கள் பணி நிரந்தரமாக்கப்படாமல், அவர்கள் சுரண்டப் படுகிறார்கள். அரசு முன் உதாரணமாக இருந்தால்தான் தனியார்களைக் கட்டுப்படுத்த முடியும். நம்மைப் பின்பற்றி அவர்கள் செயல்பட ஏதுவாக இருக்கும். அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து ஓராண்டு என்.எம்.ஆர். ஆக பணிபுரிந்தவர் களை உடனடியாக நிரந்தரமாக்க ஏற்பாடு செய்ய வேண்டு மென்ற கோரிக்கையை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

25 ரூபாய் கூலிக்கு சுமார் 10 ஆண்டுகளாக அரசே வேலை வாங்கிக்கொண்டிருக்கிறது. என்னுடைய வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் 3 ஆண்டுகளுக்கு முன்னாலே லேபர் கோர்ட் பார்ம் செய்வதற்கு அரசு உத்தரவுகள் பிறப்பிக்கப் பட்டிருக்கின்றன. நீதித் துறையும், அரசும் இணைந்து ஓர் உத்தரவு பிறப்பித்தும், 3 ஆண்டுகள் ஆகியும் அது செயற்படுத்தப் படாமல் அந்த லேபர் கோர்ட் அமைக்கப்படாமல் இருக்கிறது.

இரவு 7-05

ஏற்கெனவே 10 செஷன்ஸ் ஜட்ஜுகளுடைய போஸ்ட்ஸ் காலி யாக இருக்கிற கட்டத்தில் மாவட்டத்திற்கு ஒரு லேபர் கோர்ட்டை இந்த அரசு உடனடியாக நியமித்து தொழிலாளர் களுடைய துயரைத் துடைக்க ஆவன செய்ய வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை நான் அவை முன் வைக்கக் கடமைப்பட்டிருக் கின்றேன்.

பெண் தொழிலாளர்கள் இன்று ஆண்களுக்கு நிகராக இருக் கிறார்கள். பெண்கள் ஆண்களுக்கு சரிநிகர் சமானமாக இருக்கின்ற இந்த வேளையில் பல தொழிற்சாலைகளிலே இன்று பெண்கள் பணிபுரிகிறார்கள். இரவு வேளைகளிலே அவர்கள் பணிபுரிய நேரிடுகிறது. ஆனால் பணி முடிந்த பிறகு அவர்கள் பாதுகாப்போடு வீடுகளுக்குப் போய்ச் சேர முடிவதில்லை.

அவர்களுக்கு என்று போதிய வாகனங்களும் இப்போது சரிவர ஏற்பாடு செய்யவில்லை. ஆகவே, போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே அமர்ந்து இருக்கிறார்கள். அவர்கள் இந்த பெண் தொழிலாளர்களுடைய துயரைத் துடைக்கும் முகத்தான அவர்களுக்கு உடனடியாக இரவுக் காலங்களிலே பணிபுரிகின்ற தொழிற்சாலைகளிலே இருந்து வீடுகள் செல்வதற்கு பேருந்துகளை இயக்க ஆவன செய்ய வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை நான் வைக்கக் கடமைப் பட்டு இருக்கிறேன்.

வேலை வாய்ப்பு அலுவலகங்களில் இன்று அதிகமானவர்கள் பல இலட்சக் கணக்கான மக்கள் வேலை இன்றி தங்களுடைய பெயரை பதிவு தான் செய்கிறார்களேயொழிய அங்கிருந்து ஏதாவது தங்களுக்கு இண்டர்வியூ வருகிறதா என்றால் கிடையாது. அவர்களுக்கு ரிடையர்டு ஆகக் கூடிய வயது கூட வந்து சேர்ந்து விடுமோ என்ற ஒரு நிலை இன்று தமிழகத்திலே நிலவிக்கொண்டு இருக்கிறது. ஆகவே, உடனடியாக அவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க தமிழக அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அங்கே இந்தமாதிரி பேசிக்கொண்டு இருக்கக்கூடாது. பதில் சொல்ல வேண்டிய அமைச்சர் பக்கத்தில் உட்கார்ந்து இருக்கிறார். அப்படிப் பேசிக்கொண்டிருப்பது தொழிலாளர் நல அமைச்சர் அவர்களுடைய கவனத்தை நீங்கள் ஈர்ப்பது போல அமையும்.

திரு. சி. ஞானசேகரன் : அவர்களுடைய கவனத்தை ஈர்க்கும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் ஈர்க்க வேண்டும் என்றுதான் சொல்கிறேன். அவர் ஈர்த்து விடக் கூடாது.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, என்னுடைய கவனம் எல்லாம் உறுப்பினருடைய பேச்சிலே தான் இருக்கிறது.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரவுக் காலங்களிலே பணிபுரிகிற பெண்களுடைய நிலையைக் குறித்து அவர்களுக்கு வாகனங்கள் ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும். அந்தப் பொறுப்பு நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கு இருக்கிறது என்பதை கூறி அவர் கவனத்தை ஈர்க்க நான் முயன்று கொண்டுதான் இருக்கிறேன். டில்லியிலே இருக்கிற செங்கோட்டைக்குச்



சல்ல வேண்டிய அமைச்சர் அவர்கள் இன்று செயின்ட் ஜார்ஜ் காட்டைக்கு வந்து இருக்கிறார்கள். நமக்கு நிச்சயமாக யவர்கள் செய்து தருவார்கள். காரணம், அவர் பெயரே செங் காட்டையன் என்பதாலே குறிப்பிட்டேன். மன்னிக்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் இந்தக் கோட்டை ிலே தொடர்ந்து 1977-லிருந்து இருக்கிறார்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏதோ மத்தியிலே இருக்கிற கோட்டைக்கு அனைத் திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் போகும் என்ற உணர்வோடு சொல்வதற்காக நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. சி. ஞானசேகரன் : எங்களோடு சரிநிகர் சமானமாக இருந்துகொண்டு இருக்கிற தோழமை கட்சி அங்கே செல்வதற்கு நாங்கள் எந்த வகையிலும் குறுக்கே நிற்கமாட்டோம்; நீங்கள் சென்றாலும் ஒன்று; நாங்கள் சென்றாலும் ஒன்று என்ற ஒரே மனப்பான்மையோடு இயங்கிகொண்டு இருக்கிற நாங்கள் நீங்கள் சொல்வது குறித்து நிச்சயமாக மகிழ்ச்சி தான் அடைவோமே யொழிய வேறல்ல.

மாண்புமிகு தலைவர் அவர்களே, எனக்கு முன்னாலே பேசிய திரு. தமிழரசன் அவர்கள் ஒரு குறிப்பை இங்கே கூறினார்கள். குழந்தைகளை தொழிற்சாலைகளில் அமர்த்துவதன் காரணமாக இன்று குழந்தைகள் சுரண்டப்படுகிறார்கள்; அப்படிப்பட்ட தொழிற்சாலைகளை மூட வேண்டுமென்று அவர்கள் ஒரு கோரிக்கை வைத்தார்கள். குழந்தைகளைப் பணியில் அமர்த்துகிற அந்த முதலாளிகளுக்கு ஏதாவது தண்டனை வழங்குவதற்கு ஏற்கெனவே சட்டம் இருக்கிறது. அதற்காக ஒரு தொழிற் சாலையை மூடிவிட்டோமேயானால் அங்கே பணிபுரிகிற வயது வந்த தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள். அதற்காக அப்படிப்பட்ட ஒரு கடுமையான நடவடிக்கையை நாம் ஏற்பாடு செய்ய வேண்டியது இல்லை. ஆனால் அந்த குழந்தைகளைப் பணியில் அமர்த்துகிற முதலாளிகளை உடனுக்குடன் பிடித்து எந்தச் சட்டப் பிரிவின்கீழ் வழக்குத் தொடர முடியுமோ அதைச் செய்வதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை வைக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

லேபர் இன்ஸ்பெக்டர் போன்றவர்களையும் அதுபோல டிஸ்ட்ரிக்ட் வெல்ஃபர் ஆபீசர் போன்றவர்களையும் வழக்கறிஞர்களாக இருப்பவர்களை நீங்கள் நியமித்தால் ஏதோ சட்டம் தெரிந்தவர்கள் அந்த இடத்திற்கு சென்றால் பணி செய்வது மிகச் சீரான முறையில் பணியாற்ற ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக்

கொடுக்கும். இப்போது இருக்கக்கூடியவர்கள் அங்கு தொழிற் சாலைகளுக்கு சென்று விதிப்படி அங்கே எல்லாம் இருக்கிறதா என்று பார்ப்பதற்குப் பதிலாக, தொழிற்கூட உரிமையாளர் களை அலுவலகத்திற்கு வரவழைத்து, அவர்கள் அந்த தொழிற் சங்க சட்டங்கள் எல்லாம் முடங்கிக் கிடக்கும் வகையிலே செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே லேபர் இன்ஸ் பெக்டர் போன்றவர்களை அரசு கண்காணித்து, தவறு செய்பவர் களை— எப்படி சஸ்பென்ட் உத்தரவு மதுவிலக்குக் கொள்கை யிலே பிறப்பிக்கபடுகிறதோ, அதுபோல இந்த தொழிலாளர் சட்டங்களை மீறுபவர்களுக்கும் இந்த சஸ்பெண்ட் உத்திரவுகள் உடனடியாகப் பிறப்பிக்கப்படவேண்டும். அப்போது தான் தொழிலாளர் வர்க்கம் மேல் தளத்திற்கு வருவதற்கு உறுதுணை யாக இருக்கும் என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

வேலூரிலே மாவட்டத்துக்கு ஒரு லேபர் கோர்ட் வேண்டும் என்று சொன்னேன். அதை உடனடியாக ஏற்படுத்துவதற்கும், அதுபோல் பெண்கள் பணிபுரிகிற இடத்தில் அவர்கள் ஒரு வேளை வீடு செல்ல முடியாமல் போனால் அவர்களுக்கு என்று 'பெண்கள் பாதுகாப்பகம்' ஒன்றை ஆங்காங்கே மாவட்ட வாரி யாக இந்த அரசு ஏற்படுத்தித்தர வேண்டுமென்ற கோரிக்கையை யும் நான் வைக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இரவு 7-10

இங்கே புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சி நடந்து கொண்டிருக்கிற இந்த வேளையில் தொழில் புரட்சியை உருவாக்கவேண்டும். எங்களுடைய வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டம் தொழிற்சாலைகள் இன்றி வறுமையான மாவட்ட மாக இருந்து கொண்டிருக்கிறது. பீடித் தொழில் அதிகமாக இருக்கிறதாலோ என்னவோ அது காசநோய் பிடித்த மாவட்டமாக இருந்து கொண்டிருக்கிறது. என்னுடைய தொகு திக்கு அடுத்துள்ள இராணிப்பேட்டையில் இப்போது சிப்காட் அமைக்கப்பட்டிருக்கிறது. வேலூரிலும், வாணியம்பாடி, குடியாத் தம் போன்ற ஊர்களிலும் தொழிற்சாலைகளை ஆங்காங்கே நிறுவுவதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டும். எங்களுடைய மாவட்டத்தை தொழில் வளமுள்ள மாவட்டமாக மாற்றுவதற்கு ஆவன செய்ய வேண்மென்ற கோரிக்கையை வைத்து எனக்குக் கொடுக்கப்பட்ட கால அவகாசத்திற்குள் நான் பேச்சை முடித்து அமர்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்,





*மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவை முன் வைக்கப்பட்டிருக்கிற கொள்கைக் குறிப்பினை அடிப்படையாக வைத்தும், தங்க ளுடைய அனுபவங்களை வைத்தும், தங்களிடத்தில் சொல்லப்பட்ட செய்திகளை வைத்தும் மாண்புமிகு உறுப்பினர்கள் பல கருத்துக் களை எடுத்து முன்வைத்திருக்கிறார்கள், பல்வேறு யோசனை களை சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு தொழிலாளர் நலத் துறையின் சார்பாக மானியத்தைப் பெறுவதற்காக உங்கள் முன்னால் நான் நிற்கிறேன். மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களின் அரசு ஏற்பட்டு முதன்முதலாக உங்கள் முன்னால் வைக்கப்படுகிற இந்த மானியக்கோரிக்கையில் இந்த அரசி னுடைய, இந்த ஆட்சியினுடைய தொழிலாளர் கொள்கை எப்படி இருக்கும் என்று தெரிந்துகொள்ள நீங்கள் விரும்புவீர்கள். அதன்காரணமாகத்தான் ஐந்தாறு உறுப்பினர்கள் கொள்கை பற்றி இன்றைக்கு விவாதிக்க வேண்டுமென்று வெட்டுத் தீர்மானங் களைத் தந்திருக்கிறீர்கள். தொழிலாளர் பற்றிய எங்க ளுடைய கொள்கையை நான் சுருக்கமாக விளக்கிச் சொல்ல விரும்புகிறேன்.

காண்பதெல்லாம் தொழிலாளி செய்தான் என்கிற வார்த் தைகளை நாம் பலமுறை கேட்டிருக்கிறோம். அதை நாங்கள் பல இடங்களில் பேசி வந்திருக்கிறோம். அதைப்போலவே ஒரு பொருளுக்கு ஏற்படுகிற மதிப்பு என்பது அந்தப் பொருள் உருவாவதற்கு உழைப்பாளி தருகிற உழைப்புதான் அந்த மதிப்பு என்பதையும், அந்த மார்க்சிய தத்துவத்தையும் உணர்ந்து இருக்கிறோம். என்னதான் மாறினாலும் இந்த கொள்கை மட்டும் மாறாதது. என்னதான் மாற்றங்கள் ஏற்பட்டாலும் இந்தக் கொள்கையில் மாற்றம் ஏற்படாது என்ற அடிப்படையில்தான் புரட்சித் தலைவி அவர்கள் தேர்தல் அறிக்கையை வெளியிடுகிற நேரத்தில் குறிப்பாக அழுத்தந்திருத்தமாக ஒரு உறுதிமொழி யைத் தந்திருந்தார்கள். உழைப்பவர்களுக்கு உழைப்பிற்கேற்ற ஊதியம் வழங்கப்பட வேண்டும். உழைப்பவர்களுக்கு உழைப் பிற்கேற்ற ஊதியம் வழங்கப்படாத நிலையில்தான் பல்வேறு போராட்டங்கள் கடந்த 100, 200 ஆண்டுக்காலமாக நடை பெற்று வந்திருக்கிறது. இன்றைக்கு நடக்கிற பல்வேறு போராட் டங்கள் அந்த அடிப்படையில்தான் நடைபெற்றுக் கொண்டிருக் கிறது.

ஆகவே, உழைப்பிற்கேற்ற ஊதியம் தரப்பட வேண்டும். அன்றைய காலக்கட்டத்தில் அதிக நேரம் வேலை வாங்கிக் கொண்டு குறைந்த ஊதியம் தரப்பட்டிருக்கலாம். அன்றைக்கு உழைப்பிற்கேற்ற ஊதியம் தேவையென்று போராட்டம் அதை எதிர்த்து நடைபெற்று இருக்கக்கூடும். இன்றைக்கு ஏறுகிற விலைவாசியை சமாளிக்க முடியாமல் ஒருகாலத்தி வாங்கிய கூலி, அல்லது ஆறுமாதத்திற்கு முன்னால் வாங்கிய கூலியே கூட

[டாக்டர் செ. அரங்கநாயகம்] [1991 செப்டம்பர் 16

இன்றைய நிலையில் நியாயமற்றதாக கருதப் படுகிற சூழ்நிலை வேகமாக உருவாகி வருகிற நிலையில், நியாயமான கூலி கிடைக்கிற ஒரு கட்டத்திலேதான் உழைப்பிற்கேற்ற ஊதியம் கிடைப்பதாக அர்த்தமே தவிர, அந்தநிலை ஏற்படாத வரைக்கும் உழைப்பிற்கேற்ற ஊதியம் கிடைக்கவில்லை என்றுதான் நாங்கள் கருதுகிறோம். அதற்காக இந்த அரசு தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் என்ற உறுதிமொழியை நான் இந்த நேரத்தில் தர விரும்புகிறேன். உழைப்பிற்கேற்ற ஊதியம் கிடைக்கவில்லை என்றால் அந்த இடத்தில் சுரண்டல் நடக்கிறது என்று அர்த்தம். சுரண்டலுக்கான தன்மைகள் நீக்கப்பட வேண்டும், ஒழிக்கப்பட வேண்டும்.

இரவு 7-15

சுரண்டல் எந்தச் சமுதாயத்தில் இருக்கிறதோ, அந்தச் சமுதாயத்திலே வறுமையும், ஏழ்மையும்தான் மிச்சமாக இருக்கும், இன்றைய நம்முடைய நிலைமைக்குக் காரணமேகூட, ஆயிரம் ஆண்டுகளாக ஜாதி அடிப்படையில், சமுதாயத்திற்குத் தேவையான தொழில்களைச் செய்கின்றவர்கள் ஒருபிரிவினராகவும், அப்படித் தொழில் செய்யாதவர்கள் ஒருபிரிவினராகவும் இருந்து ஜாதி அடிப்படையில் இந்தச் சமுதாயம் சுரண்டப்பட்டதினுடைய விளைவுதான் இன்றைக்கு 40 ஆண்டுக்காலம் ஆனதற்குப் பிறகும், நம்மாலே வறுமையையும் ஏழ்மையையும் ஒழிக்க முடியவில்லை என்பதையும், திராவிடர் இயக்கத்தைச் சேர்ந்த நாங்கள், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நாங்கள் புரட்சித் தலைவி அவர்கள் தலைமையிலே இயங்குகிற இந்த ஆட்சி நன்கு உணர்கிறது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தொழிலாளர்களுடைய நலன்களைப் பொறுத்தவரையில், இந்த அரசு ஆதரிக்கும். அவர்களுக்காக வாதாடும். அவர்கள் சார்பாக நின்று நாங்கள் பேசுவோம் அவர்களுக்கு நலன்கள் கிடைப்பதற்காக அரசு இயந்திரம் பெரு முயற்சி எடுத்துக் கொள்ளும். அதற்காக தொழில்களை நசியவிடமாட்டோம். காரணம், தொழில்கள் முக்கியம். தொழில்கள் நடந்தால்தான், தொழிலாளர்களுக்கு ஊதியம் கிடைக்கும். ஆகவே, பிரச்சினை தொழில்கள் நசிக்கின்ற அளவிற்கு, நாங்கள் முற்றுகின்ற நிலைமையை வளரவிடமாட்டோம் என்பதோடு, இன்றைக்குக்கூட, நாங்கள் வந்து, 2, 3 மாத காலத்தில் மூடிய ஆலைகளை, மூடிய தொழிற்சாலைகளைத் திறப்பதற்கு, உங்களுக்குத் தெரிந்தோ, தெரியாமலோ, பல்வேறு முயற்சிகளை புரட்சித் தலைவியினுடைய அரசு எடுத்து வருகிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். (குறுக்கீடு).



1991 செப்டம்பர் 16]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திரு. சி. ஞானசேகரன்,

**திரு. சி. ஞானசேகரன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலத்துறை அமைச்சர் திருமதி இந்திர குமாரி அவர்களுடைய நாட்ராம்பள்ளித் தொகுதியிலே இருக்கக்கூடிய சந்தன ஆலை அரசுக்குச் சொந்தமானது. பல ஆண்டு காலமாக மூடப்பட்டிருக்கிறது. அதை மூடுவதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்பதை அமைச்சர் அவர்களிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மூடியிருக்கிற ஆலையை மூடிவிடலாம் என்கிறீர்களா ?

**திரு. சி. ஞானசேகரன்** : மன்னிக்க வேண்டும், திறக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பல ஆண்டுகாலமாக மூடியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : உட்காருங்கள். இருப்பதையும் கெடுக்க வேண்டும் என்பது உங்களுடைய ஆசையா ?

**மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூடிய ஆலைகளை, தொழிற்சாலைகளை திறப்பதற்கு இந்த அரசு முயற்சி எடுத்து வருகிறது என்பதை நான் மறுபடியும் வலியுறுத்த விரும்புகிறேன். அது எந்த ஆலையாக இருந்தாலும் தேவையான ஒரு தொழிலாக இருக்குமானால், அந்தத் தொழிலை திரும்பவும் நடத்தவேண்டும் என்று விரும்புகிற ஆட்சிதான் இன்றைக்கு நடைபெறுகிற இந்த ஆட்சி என்பதை உறுப்பினர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்.

தொழிற்தகராறு சட்டம், தொழிலாளர் நலச் சட்டங்கள், குறைந்த பட்சக் கூலி தருகிற சட்டங்கள் என்று இப்படி பல்வேறு சட்டங்கள் இருக்கின்றன. இந்தச் சட்டங்களோடு ஒவ்வொரு தொழிற்சாலைக்கும் ஸ்டாண்டிங் ஆர்டர்ஸ் என்று விதிகள் இருக்கின்றன. இப்படிப்பட்ட சட்டங்களையும், விதிகளையும் ஒருபுறம் மீறுகிற தொழில் நிர்வாகமும் இருக்கிறது. அதை மீறுகிற தொழிலாளர்களும் இருக்கிறார்கள். இந்தச் சட்டங்களை தொழில் அதிபர்களும், தொழில் நிர்வாகமும், தொழிலாளர்களும் நன்கு மதித்து, அதற்கு ஏற்ப, தங்களுடைய நடவடிக்கைகளை, வைத்துக் கொள்வார்களானால், நிச்சயமாக தொழில் உலகில் நல்ல அமைதி ஏற்படும் என்கிற ஒரு செய்தியை நான் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே, சட்டங்களையும், விதிகளையும் யார் மீறினாலும், அங்கே பிரச்சினைகள் உருவாகின்றன. பிறகு, அதைத் தீர்ப்பதற்கு பல்வேறு முயற்சிகளை நாம் எடுக்க வேண்டியதாக இருக்

கிறது. ஆகவே இந்த அரசு என்ன் கேட்டுக் கொள்கிறது என்றால் நிர்வாகமாக இருந்தாலும் சரி, தொழிலாளர்களாக இருந்தாலும் சரி, உங்களுக்கு என்று இயற்றப்பட்டு இருக்கிற சட்டங்களை மதித்து நடக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அந்தச் சட்டங்களிலே குறைபாடுகள் இருக்குமானால், இந்த அரசினுடைய கவனத்திற்கு நீங்கள் அதைக் கொண்டு வந்தால், தேவையான திருத்தங்களைச் செய்ய இந்த அரசு தயார் என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே சட்டங்களை மதிப்பதும், விதிகளை மதிப்பதும், இருசாராரும் ஏற்று நடத்த வேண்டிய கடமை, பொறுப்பு என்பதை நான் இந்த நேரத்தில் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

இரவு 7-20

சில பகுதிகளில் தொழிலாளர்கள், தொழிற்சங்கங்களைத் துவக்குவதற்குகூட, அனுமதிக்கப்படவில்லை என்பதை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். அப்படிப் பட்ட நிர்வாகங்களும் இருக்கின்றன. அப்படிப்பட்ட ஒரு தவறான போக்கு குறிப்பிட்ட சில பகுதிகளிலே இருக்கின்றது என்பதையும் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். தொழிலாளர்கள், தொழிற்சங்கங்களை ஆரம்பிப்பதற்கு, தடையாக இருக்கின்ற நிர்வாகம் என்பது, எந்தக் காலத்திற்கும் ஒவ்வாத ஒரு நிர்வாகமாகும். காட்டு மிராண்டிக் காலத்திலே இருக்கவேண்டிய நிர்வாகமாகும்.

இப்போது தொழிலாளர்களுக்கு தரப்பட்டிருக்கின்ற அத்துணை அடிப்படை உரிமைகளையும் சட்டங்களையும் மதிக்க மறுக்கிற எந்த நிர்வாகமாக இருந்தாலும் அதை இந்த அரசு கண்டிக்கிறது, என்பதை இங்கே நான் குறிப்பாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அப்படிப்பட்டவர்கள் மீது எப்படிப்பட்ட சட்டங்கள் பாயும் என்பதை அவர்களே உணர்ந்திருக்க வேண்டும். நான் அதைச் சுட்டிக் காட்டத் தேவையில்லை. ஆகவே, அத்தகைய போக்கு நிர்வாகத்தின் சார்பில் எங்கு இருந்தாலும் அது திருத்திக் கொள்ளவேண்டுமென்கிற ஒரு விருப்பத்தை புரட்சித் தலைவி அரசின் சார்பாக நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதே போன்று அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப் போன்று அவர்களுக்குக்கூட குறைந்த ப்ட்ச ஊதியத்தை நிர்ணயிக்க வேண்டுமென்கிற முயற்சிகளை இந்த அரசு எடுத்துக் கொண்டு வருகிறது. இன்னும் எடுக்கப்படாத பிரிவினருக்கும் எடுத்து வருகின்றோம். குறைந்த பட்சம் 15 ரூபாயாவது கிடைக்கவேண்டுமென்ற நிலையில் நாங்கள் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். விலைவாசிப் புள்ளியுடன் இணைந்த





அகவிலைப்படியைப் கொண்டுவரவும் இந்த அரசு முடிவு செய்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதற்கடுத்து வேலைவாய்ப்பு பற்றியது. அந்தத் துறையும் இதிலே இருக்கிற காரணத்தால் நீங்களும் பல்வேறு கருத்துக்களைச் சொன்னீர்கள். வேலைவாய்ப்பு அலுவலகங்களைப் பொறுத்தமட்டில் குறிப்பாக ஒன்றைச் சொல்லவேண்டுமேயானால், படித்தவர்களை எல்லாம் நாம் அங்கே பதிவு செய்து வைத்திருக்கிறோம். அவர்களுக்கு வேலைவாய்ப்பு தர வேண்டிய பொறுப்பு, அல்லது வேலைக்கு அனுப்ப வேண்டிய பொறுப்பு இந்த வேலைவாய்ப்பு அலுவலகத்திற்குத் தரப்பட்டிருப்பதைப் போல இருக்கிறது. அங்கே ஏதேனும் ஊழல்கள் நடைபெறுமேயானால் அது நடைபெறாமல் பார்த்துக் கொள்கிற ஒரு முக்கிய கடமையை இந்த அரசு மிகத் தெளிவாக தவறாமல் செய்து வருகிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். சமீபத்திலே அடையார் எக்சேஞ்சில் கம்ப்யூட்டரை நாம் கொண்டு வந்திருக்கிறோம். அண்ணா நகரிலே கொண்டுவரப் போகிறோம். கோயம்புத்தூரிலே கொண்டு வரப்போகிறோம். இதெல்லாம் எதற்காக ? இலட்சக்கணக்கான பேர் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்திருந்தாலும் அங்கே நீதியோடு நடந்துகொள்கிறார்கள் என்ற ஒரு நம்பிக்கையாவது இருக்கட்டும். வேலை தான் கிடைக்கவில்லை என்றாலும் நீதியாவது கிடைக்கட்டும் என்ற ஒரு நிலைமையில் நாம் அதைக் காப்பாற்றுவதற்காக இந்த முறையை கொண்டு வந்திருக்கிறோம். இன்னும் இந்த அரசு தெளிவாக உணர்ந்திருக்கிறது. படித்த இளைஞர்கள் நீண்டநாளைக்கு வேலையில்லாமல் இருப்பார்களானால் வாழ்க்கையில் ஒரு விரக்தியடைவார்களானால், அவர்கள் எங்ஙனம் தீவிரவாதிகளாக மாறிவிடுவார்களோ என்கிற ஆபத்தையும் இந்த அரசு உணர்ந்திருக்கிறது. ஆகவேதான் அதற்காக பல்வேறு திட்டங்களைக் கொண்டுவரவேண்டுமென்கிற முயற்சியில் நாங்கள் ஏற்கெனவே ஈடுபட்டு இருக்கிறோம் என்பதனை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். எந்த வேலையும் தெரியாதவர்களுக்கு ஒரு வேலை தரவேண்டுமென்பது எவ்வளவு பெரிய சிக்கலான காரியம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் உணரவேண்டும். ஏதாவது ஒரு தொழிலில் பயிற்சி பெற்றிருக்கவேண்டும். இன்னும் சொல்லப் போனால், பயிற்சி பெறாத யாரும் எந்த வேலைக்கும் வரக் கூடாது என்ற, கொள்கையை நாம் என்றைக்கு நிலைநாட்டுகின்றோமோ அன்றைக்குத்தான் தொழிலில் ஒரு உற்பத்தித் திறன் அதிகரிக்கக்கூடிய தன்மையையும், தொழிலில் ஒரு மேன்மையையும் நாம் பெருக்க முடியும். தொழில் உறவில் கூட ஒரு முன்னேற்றத்தை நாம் பெருக்க முடியும். ஆகவே

[டாக்டர் செ. அரங்கநாயகம்] [1991 செப்டம்பர் 16

சாதாரணமாக ஒரு கடிகாரம் ரிப்பேர் செய்ய வேண்டுமென் றாலும் நாம் யாரிடத்திலே கடிகாரத்தைத் தருகிறோமோ அவருக்கு அந்த கடிகார ரிப்பேர் தொழில் பயிற்சி கிடையாது. அதே மாதிரி நாம் ரேடியோவைக் கொண்டுபோய்க் கொடுக் கிறோம். அதற்கும் அவருக்குப் பயிற்சி கிடையாது. ரூ. 10,000, ரூ. 12,000 போட்டு டி. வி. வாங்குகிறோம். அதைக் கொண்டுபோய் ரிப்பேர் செய்பவரிடத்தில் தருகிறோம் அவருக்கு ரிப்பேர் செய்வதிலே பயிற்சி இருக்கிறதா என்பது நமக்குத் தெரியாது. அதற்கான சர்டிபிகேட் வைத்திருக்கி றாரா என்பதும் தெரியாது.

10 மாடி, 14 மாடி உயரக் கட்டிடங்களைக் கட்டுகிறோம். அதிலே ஏறி வேலை செய்கிறார்கள். ஆபத்தான வேலைதான் அதிலே அவர்களுக்கு பயிற்சி இருக்கிறதா என்று பார்ப்பது கிடையாது. அதே காரணத்தினால்தானே சிவகாசி பட்டாசுத் தொழிற்சாலையில் ஆபத்து ஏற்பட்டது. சாதாரண படிப் பறிவில்லாத ஏழைகள் அந்தத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டிருக் கிறார்கள். அவர்கள் கையில் தரப்படுகின்ற அந்த கெமிகல்ஸ் வேதிப் பொருட்கள், அதனுடைய தன்மை என்ன என்பதைப் பற்றி அந்த அப்பாவி தொழிலாளர்களுக்குத் தெரியாது. நான் போயிருந்தபோது சொன்னார்கள். இந்த வேதிப் பொருள் தண்ணீர் பட்டால் வெடிக்கும். இது தீப்பட்டால் வெடிக்கும் என்று. ஆக அப்படிப்பட்ட கெமிகல்ஸ் வைத்து, ஆபத்தான வேதிப் பொருட்களை வைத்து, தொழில் செய்கின்ற வர்களுக்கு அந்தத் தொழில் பற்றி, அந்தப் பொருள் பற்றி ஒரு பயிற்சி-பாதுகாப்புப் பயிற்சி ஏதேனும் இருக்கிறதா என்றால் இல்லை. இது வரையில் யாரும் அதைப்பற்றி சிந்திக்கவில்லை. இந்த அரசுதான் அதைப்பற்றி சிந்தித்து அதற்கான நடவடிக்கை எடுத்திருக்கிறது. இல்லையென்றால் அந்தத் தொழிலையே தடை செய்தாக வேண்டும். ஒன்று, தொழிலைத் தடை செய்யவேண்டும்.

இரவு 7-25

இல்லையென்றால் அந்தத் தொழிற்சாலையை தடை செய் தாக வேண்டும். ஒன்று அந்த தொழிலை தடை செய்ய வேண்டும். அல்லது அந்தத் தொழிலில் பயிற்சி பெற்றவர்கள் தான் இருக்கவேண்டும் என்ற நிலைமையை நாம் ஏற்படுத்தியாக வேண்டும். அதற்கான முயற்சியில் இந்த அரசு ஈடு பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். போட்டி தொழிற்சங்கத்தைப் பற்றிச் சொன்னார்கள். அதை நாங்கள் உணருகின்றோம். தொழிற் சங்கங்களினாலே, தொழிற்சங்கத் தகராறுகளினாலே எவ்வளவு வன்முறை சம்பவங்கள் நடைபெற்றிருக்கிறது என்பதை 40, 50 ஆண்டுக்காலமாக நாங்கள் பார்த்து வருகிறோம். எவ்வளவோ கொலைகள் எல்லாம் நடைபெற்



1991 செம்டம்பர் 16] [டாக்டர் செ. அரங்கநாயகம்]

றிருக்கின்றன. அந்த போட்டி தொழிற் சங்கங்களை ஒழிக்க வேண்டும் என்பதில் அல்லது இப்படிப்பட்ட நிலைமைகளுக்கு அடிப்படையான காரணங்களை ஒழிக்க வேண்டும் என்பதில் புரட்சி தலைவி அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்கள் மிகவும் கவனம் எடுத்துக் கொண்டு இருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

ஆனால் ஒரு உறுதியை நான் தர விரும்புகிறேன். தி.மு.க. ஆட்சியிலே இந்தத் தடவையானாலும் அதற்கு முன் தடவை யானாலும் சரி சிம்ப்ஸன் போன்ற தொழில் நிறுவனங் களில் தங்களுடைய ஆளை நுழைக்க வேண்டும் என்பதற்காக சட்டத்திற்கு மாறாக, விதிகளுக்கு மாறாக முறைகளுக்கு மாறாக நெறிகளுக்கு மாறாக அந்த ஆட்சி நடந்ததைப் போல இந்த ஆட்சி நிச்சயமாக நடக்காது என்ற உறுதியை நான் இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). நாங்கள் தொழிற் சங்கப் பிரதிநிதிகளோடு பேசுகிற நேரத்தில் எல்லாம் அவர்கள் எந்தக் கட்சி என்று நாங்கள் பார்க்கவில்லை. பார்க்காமலேயேதான் பேசுகிறோம் எங்கள் முன்னாலே இருப்பவர்கள் தொழிலாளர்கள், அவர்கள் வேலை செய்கிற தொழிற்சாலைகள் தொழிலாளர்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும். தொழில் நடைபெற, வேண்டும் என்ற அந்த அடிப்படையிலேதான் நாங்கள் கடந்த 3, 4 மாதங்களாக எங்களிடத்திலே வருகிற தொழிற்சங்கப் பிரதிநிதிகளைப் பார்த்து வருகிறோம். வந்த வுடன் எந்தக் கட்சி என்று நாங்கள் இதுவரையிலும் யாரிடத் திலும் கேட்கவில்லல என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இப்படி பல்வேறு பிரச்சினைகளை எங்கள் முன்னாலே நீங்கள் எடுத்து வைத்திருக்கிறீர்கள். பல்வேறு நிலைமைகளை தெரிந் துக்கொள்ளவேண்டும் என்று விருப்பமும் தெரிவித்திருக்கிறீர்கள். அதிலே குறிப்பாக ஸ்டாண்டர்ட் மோட்டார் தொழிற் சாலையைப் பற்றி இங்கே எல்லோரும் பேசினார்கள். அது பெருங்களத்தூரிலே இருக்கிற சுமார் 3,086 தொழிலாளர்கள் வேலை செய்து வந்த ஒரு நிறுவனம் ஆகும். அது ஒரு நல்வுற்ற நிறுவனமாக, சிக் இண்டஸ்ட்ரீசாக இன்றைக்கு முடிவு செய்யப்பட்டு, இன்றைய தினம் ஒரு ஒப்பந்தம் போட்டிருக்கிறார்கள். அதன்படி புதிய நிர்வாகம் அதை ஏற்று நடத்த ஒரு திட்டத்தை தந்திருக்கிறார்கள். அதிலே 4—7—1991 அன்று பி.ஏ.எப். ஆர். முன்பு நடைபெற்ற கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவின்படி இந்நிறுவனம் விரைவிலே துவங்கப்படும் என்கிற செய்தியை நான இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதேபோல பி. அண்டு சி. மில்லைப் பற்றி இங்கே பல உறுப்பினர்கள் பேசினார்கள்.

அதிலே இந்த ஆட்சி பொறுப்புக்கு வந்ததற்கு பிறகு எப்படி நடந்து கொண்டிருக்கிறது என்பதை மட்டும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அங்கே இருக்கிற பிராஸஸிங் யூனிட்-அதை லாபகரமாக இயக்க முடியவில்லை அதற்கான வசதி இல்லை என்பதோடு, குறைவான உற்பத்தி தொடர்ந்து ஏற்பட்டு வரும் இழப்பு ஆகிய காரணங்களுக்காக ஆலையை மூடுவதற்கு தொழிலாளர் துணை ஆணையாளர் அவர்களிடம் தொழிற் தகராறு சட்டப் பிரிவு 25 (ஓ)வின்படி அனுமதி கோரினார்கள். தொழிலாளர் ஆணையாளர் நிறுவனத்தை மூட அனுமதி மறுத்து இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் ஆலையை மூடியதோடு மட்டும் அல்லாமல் மூடுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டதை எதிர்த்து உயா நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருக்கிறார்கள். வழக்கு நீதிமன்றத்திலே இருக்கிறது. அதேபோல தொழிற் சங்கத்தைச் சார்ந்தவர்களும் வழக்கு போட்டிருக்கிறார் கள். இடையிலே இந்த பிராஸஸிங் யூனிட்டை புனைகிரிக்கு மாற்ற வேண்டும் என்று சொன்னதை ஒரு தனி நபர் கமிஷ னிடத்திலே விட்டிருக்கிறார்கள். முன்னாள் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி கே. பி. என். சிங் அவர்கள் அந்தக் குழுவாக இருந்து அதை விசாரித்து பார்த்து அவர் தந்த முடிவானது "இதனால் தொழிலாளர்களுக்கு பாதகம் விளையும்" என்ற கருத்தை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே புவனகிரிக்கு மாற்றுவதை அந்த தனி நகர் குழு ஏற்றுக்கொள்ள வில்லை. இது குறித்து இந்த அரசினுடைய கருத்து அறிய அனுப்பப்பட்டபோது, புரட்சித் தலைவி அவர்கள் இந்த தனி நபர் குழு சொன்னதை ஏற்றுக் கொண்டு, அது தான் அரசினுடைய கருத்தாக உயர்நீதிமன்றத்திற்கு நாட் தெரிவித்து இருக்கிறோம். ஆகவே நாங்கள் நிர்வாகத்திற்கு சார்பாக இல்லை என்பது மட்டும் அல்ல தொழிலாளர்களுக்கு ஆதரவாக இந்தக் கருத்தை ஏற்றுக் கொண்டு உயர்நீதி மன்றத்திலே அதைச் சொல்லியும் இருக்கிறோம் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இரவு 7-30

அதே போல அவர்களுக்கு தண்ணீர் தேவை என்று கேட்டார் கள். தண்ணீர் தரமுடியுமா என்று அரசாங்கத்திடம் கேட்டார் கள். மழை பெய்வதைப் பொறுத்து தேவையான தண்ணீரை இந்த அரசு தரும் என்ற வாக்குறுதியை நாம் தந்திருக்கிறோம். ஜூலை மாதத்திற்கு 6 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள அரசி போன்ற அத்தியாவசியப் பொருள்கள், ஆகஸ்ட், மாதத்திற்கு 3 இலட்சம் மதிப்பு உள்ள பொருள்கள், பின்னி ஆலைத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கக் கிளையின் மூலம் கடன் அடிப்படையில் பொருட்கள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு





இருக்கின்றன. இன்னும் பொருள்கள் வழங்கப்படவில்லை. இப்பிரச்சினையில் நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு எதிர்பார்க்கப் படுகிறது. இப்பிரச்சினை குறித்து 9—9—1991-ல் அந்த ஆலை தொழிலாளர் சங்கத்தினுடைய தலைவர் டபிள்யூ. ஆர். வரதராசன் அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களை தலைமைச் செயலகத்திலே சந்தித்து தங்களுடைய உணர்வுகளைத் தெரிவித்துக் கொண்டார். அப்போது அவ ரிடத்திலே, அரசு ஆலையை விரைவில் திறக்க தக்க நட வடிக்கை எடுக்கும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் உறுதியளித்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.) இப்படி பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி இங்கே என்னிடத்திலே விளக்கங்களைத் தந்திருக்கிறார்கள். அதை யெல்லாம் சொல்வது என்றால் நேரம் ஆகும் என்ற காரணத் தால் நான் அவற்றை வேறொரு சந்தர்ப்பத்திலே சொல்லிக் கொள்கிறேன் என்று குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்துக்கள் எல்லாம் எடுத்துக்கொண்டிருக் கின்ற இந்த நிலையில் எப்போதும் மானிய கோரிக்கை என்றால் சில அறிவிப்புகளை மற்றவைகளை எதிர்பார்ப்பார்கள். மக்கள் எதிர்பார்ப்பார்கள். சம்பந்தப்பட்டவர்கள் எதிர் பார்ப்பார்கள் என்ற அடிப்படையில் சிலவற்றை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

வெகு நாட்களாக தொழிலாளர் நீதிமன்றங்கள் மற்றும் தொழில் நிர்வாகிகளின் வேண்டுகோளுக்கிணங்க தமிழ்நாட்டின் தொழிலாளர் நீதி மன்றங்களை அதிகரிக்க உத்திரவு இடப் பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதன் பயனாக புதியதாக தொழில் நீதி மன்றங்கள் முறையே வேலூர், சேலம் மற்றும் திருச்சி ஆகிய பகுதிகளில் துவங்கப்பட்ட உள்ளது. ஏற்கனவே சென்னை, மதுரையில் உள்ள கூடுதல் தொழில் நீதி மன்றங்களை கடலூர் மற்றும் திருநெல்வேலி மாவட்டங் களுக்கு மாற்றி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி). இந்த தொழில் நீதி மன்றங்களின் ஆட்சி எல்லையை தக்க முறைகளிலே தொழிலாளர்கள் மற்றும் நிர்வாகிகளின் வசதிகளையும் கருத்தில் கொண்டு மாற்றி யமைக்கவும் அரசுக்கு பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன. குறைந்த பட்ச கூலி சட்டத்தின்படி அவ்வப்போது ஊதிய நிர்ணயம் செய்யும் போதோ அல்லது மாற்றம் செய்யும் போதோ கீழ்க்கண்ட கொள்கையுடன் செயல்பட்டு வருகிறது.

குறைந்தபட்ச சம்பளத்தை இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை மாற்றியமைப்பது, 15 ரூபாய்க்கு குறையாமல் நிர்ணயிப்பது எல்லா தொழிலுக்கும் அகவிலைப்படி நிர்ணயிப்பது, அகவிலைப் படியை விலைவாசி புள்ளிக்கேற்ப நிர்ணயிப்பது இவற்றை நாங்கள் முடிவு செய்திருக்கிறோம்.

[டாக்டர் செ. அரங்கநாயகம்] [1991 செப்டம்பர் 16

ஏடுகள் மற்றும் அலைவைச் சட்டங்கள் மற்றும் பல்வேறு
பட்ட தொழிலாளர் நலச் சட்டங்களை செயல்படுத்தாத
வணிகர், நிர்வாகங்களின் மீது ஒவ்வொரு ஆண்டும் சுமார்
49,000 வழக்குகள் போடப்படுகின்றன. இவ்வழக்குகள்
சரியான முறையில் நடத்தப்பட்டு குற்றம் புரியும் வணிகர்,
நிர்வாகங்களுக்கு தண்டனை அளிக்கப்பட்டால் தான் சட்டங்
களின் பலனை தொழிலாளர்கள் பெற இயலும். மேலும்
அரசு ஆணைகள் உயர்நீதி மன்றத்தில் நிர்வாகங்களால்
எதிர்க்கப்படும்போது அரசு வழக்குரைஞர்களுக்கு தகுந்த
ஆலோசனைகள் அளிக்கப்பட வேண்டியுள்ளது. இவற்றைக்
கருத்தில் கொண்டு, தொழிலாளர் துணை ஆணையர் அலுவலகத்
திற்கு துணை ஆணையர் நிலையில் தனியாக சட்ட அலுவலர்
ஒருவரை அரசு நியமித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி).
அவர் 4—9—1991 முதல் பணியாற்றி வருகிறார்.

மத்திய அரசு உழைக்கும் மகளிருக்கு மற்றும் குழந்தை
களுக்கான ஒரு மையப் பிரிவை ஏற்படுத்தி அவர்களுடைய
பிரச்சினைகள் மற்றும் இடர்ப்பாடுகளைக் களைய நடவடிக்கை
எடுத்து வருகிறது. மத்திய அரசு மாநில அரசுகளைக்
கேட்டுக் கொண்டதற்கிணங்க இவ்வரசும் தொழிலாளர் துறை
யில் ஒரு மகளிர் பிரிவை ஏற்படுத்தவுள்ளது. நடப்பாண்டில்
திருநெல்வேலி மாவட்டம் பீடி தொழிலாளர்கள் குறிப்பாக
பெண் தொழிலாளர்கள் நலனுக்காக தொழிலாளர் நலச்
சட்டங்களைச் சிறப்பாக செயல்படுத்த கூடுதல் பணியாளர்களு
டன் 6 தொழிலாளர் உதவி ஆய்வகப் பதவிகளை உருவாக்க
உத்தேசிக்கப்பட்டுள்ளது. பீடி சுற்றும் தொழிலில் ஈடுபட்
டுள்ள தொழிலாளர்களின் பொருளாதார நிலையில் பின்தங்கிய
நிலையில் உள்ள தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி செய்து
தரும் வகையில் வீடு கட்டிக்கொள்ள ஒரு வீடு கட்டத் தேவை
யான தொகையில் 50 சதவீதம் அல்லது அதிகபட்சம் 5,000
ரூபாய்க்கான அரசு மானியம் இந்திய அரசால் தமிழகத்திற்கு
அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் வேலூரில்
சத்துவாச்சாரி என்னும் இடத்தில் 150 வீடுகள் ஏற்கனவே
கட்டப்பட்டுவிட்டன. அதே அளவில் திருநெல்வேலி கட்ட
பொம்மன் மாவட்டம் மூக்கூடல் மற்றும் வேலப்பாளையம்
ஆகிய இடங்களில் ஆயிரம் வீடுகள் கட்டித்தர உத்தேசிக்கப்பட்டு
உள்ளன. மேற்குறிப்பிட்ட இடங்களில் வீடு கட்ட தேவை
யான நில ஒதுக்கீடும் பெறப்பட்டுள்ளதால் இந்தப் பணி
விரைவில் தொடங்க உள்ளது.

இரவு 7-35

உழைக்கும் பத்திரிக்கை தொழிலாளர்களின் பச்சாவாட் குழு
தீர்ப்பு சீரிய முறையில் மாநிலத்தில் அமல் செய்யப்பட்டு
வருகிறது. மாநிலத்திலுள்ள 99 பத்திரிக்கை நிறுவனங்களில்
சுமார் 76 பத்திரிக்கை நிறுவனங்கள் இந்த தீர்ப்பை முழுமை



1991 செப்டம்பர் 16] [டாக்டர் செ. அரங்கநாயகம்]

யாக அமல் செய்துள்ளது. அமல் செய்யாத நிர்வாகங்களை விரைவில் அமல் செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டு வருவதோடு சட்டபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் இந்தத் தீர்ப்பை அமல் செய்வதை கண்காணித்து தக்க நடவடிக்கை மேற்கொள்ள ஒரு முத்தரப்புக் குழு அமைக்கவும் அரசு ஆலோசித்து வருகிறது.

மிக குறைந்த வசதிகளைக் கொண்ட கட்டிடங்களில் அதிக வாடகை செலுத்தி தொழிலாளர் மற்றும் தொழிற்சாலை துறையின் அலுவலகங்கள் இயங்கி வருவதை கருத்தில் கொண்டு பொதுமக்களின் சிரமத்தைக் குறைக்கவும் அலுவலகங்கள் அனைத்தும் ஒரே இடத்தில் இயங்கும் வகையில் பெரிய நகரங்களில் கட்டிடங்கள் கட்டும் எண்ணம் வெகு காலமாக அரசின் கவனத்தில் இருந்து வருகிறது. முதல் கட்டமாக நடப்பு ஆண்டில் கோவை மைய சிறைச்சாலை வளாகத்தில் கையகப்படுத்தப்பட்டுள்ள 60 சென்ட் நிலத்தில் தனியார் கட்டிடங்களில் இயங்கி வரும் 29 அலுவலகங்களுக்காக ஒரு கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தொழிற்சாலைகள் அதிகமாக நிறைந்துள்ள கோவை, ஓசூர், தூத்துக்குடியிலுள்ள தொழிலாளர்களுக்கான கலை அரங்கும் முதியோர் கல்வி, குழந்தைகள் காப்பகம், மகளிர் நல மன்றம், விளையாட்டு வசதிகள், பொழுதுபோக்கு நூலகம் போன்ற வசதிகள் கிடைக்கப்பெறும் வகையில் மூன்று தொழிலாளர் நல வளாகங்கள் ஆரம்பிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

தொழிலாளர்களின் உபயோகத்திற்காக வெளியிடப்பட்டு வந்த 'உழைப்பவர் உலகம்' என்ற பத்திரிக்கை 1989, ஜூன் திங்கள் முதல் வெளி வராமல் இருந்தது. இந்த அரசு எடுத்துக்கொண்ட முயற்சியால் இந்தப் பத்திரிக்கை 1991ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அதாவது இந்த மாதத்திலேயே வெளிவர இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையை தட்டும் ஒலி),

சில சட்ட திருத்தங்களை நாங்கள் கொண்டுவர இருக்கிறோம். தமிழ்நாடு தொழில் நிறுவனங்களில் தேசிய மற்றும் பண்டிகை விடுமுறை நாட்கள் சட்டத்தின்கீழ் தொழிலாளர்களுக்கு தேர்தல் நாள் அன்றும் மற்றும் அரசால் அறிவிக்கப்படுகின்ற முக்கியமான நாட்கள் அன்றும் சம்பளத்தோடு விடுமுறை கோரும் சட்டத் திருத்தம் அரசின் பரிசீலனையில் உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி).

தமிழ்நாடு தொழில் தகராறு விதிகள் 1958-ன்கீழ் விதி 59(ஏ) புதிதாக சேர்க்கப்பட உள்ளது. இதனால் வேலைநிறுத்தம் மற்றும் கதவடைப்பு பற்றி சமரச அலுவலர்

களுக்கு தொலைபேசி மற்றும் தந்தி வாயிலாக 24 மணி
நேரத்திற்குள் தகவல் கொடுக்க வேண்டுமென்று சட்ட விதி
திருத்தம் செய்யப்படவுள்ளது.

தொழிலாளர் நல நிதி சட்டத்தின்கீழ் தொழிலாளர்கள்,
வேலை அளிப்பவர்கள் மற்றும் அரசு செலுத்த வேண்டிய
தொகையை 2 : 4 : 2 என்பதை முறையே 3 : 6 : 3 என்று
உயர்த்தலாம் என அரசு முடிவு எடுத்துள்ளது. இதற்காகச்
சட்டத்தில் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ள திருத்த
சட்டமுன்வடிவு விரைவில் அறிமுகம் செய்யப்படும்.

குறைந்த அளவு ஊதிய சட்டத்தின் கீழ் தொழிலாளர்
களுக்குச் சேர வேண்டிய தொகையை வசூலிக்க தற்போது
மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டி
யுள்ளது. இதனால், காலதாமதமும், பண விரயமும் ஏற்படுவ
தால், தொழிலாளர்கள் உரிய அலுவலர் முன்பு மனு செய்து
கொள்ளவும் அவ்வலுவலர் நிர்ணயிக்கும் தொகையை நிலவரி
பாக்கி போல மாவட்ட ஆட்சியர் மூலம் வசூலித்து தொழி
லாளர்களுக்கு வழங்கும் வகை செய்யும் இந்த சட்டப்பிரிவு
20 (5)ஐ திருத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பெரிய நிறுவனங்கள் பாதுகாப்பு ஏஜென்சி மூலம்
பாதுகாவலர்களை நியமிக்கிறார்கள். இத்தகைய பாதுகாப்பு
தொழிலாளர்களின் பணி நிபந்தனையை வரைமுறை செய்யும்
பொருட்டு அரசு இதற்கான ஒரு வரைவு சட்டம் தயாரித்
துள்ளது. இதை முழுமையாக சட்ட முன்வடிவாக கொண்டு
வர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறன்றன. இந்த பொருள்
அரசியல் நிர்ணய சட்டத்தில் பொதுப் பட்டியலில் இருப்பதால்
மத்திய அரசின் ஒப்புதல் பெற வேண்டியுள்ளது. மத்திய
அரசு கேட்டுள்ள விளக்கங்களுக்கு விரைவில் பதில் அளித்து
அதன் அனுமதி பெற்று இந்த சட்டம் சட்டமன்றத்தில்
தாக்கல் செய்யப்பட இருக்கிறது.

கட்டிடத் தொழிலாளர்களுடைய பணி மேம்பாட்டுத் திட்டம்
முதல் கட்டமாக கட்டிடங்கள் மற்றும் கட்டுமான தொழி
லாளர்கள் சட்ட ரீதியாக பயன்பெற அந்த தொழிலாளர்
கள் தமிழ்நாடு உடல் உழைப்போர் சட்டத்தின் கீழ் கொண்டு
வரப்படுவார்கள். பிறகு அந்த சட்டத்தின் கீழ் திட்டம்
வகுத்து அவர்கள் பயன்பெற வழிமுறைகள் விரைவில் கொண்டு
வரப்படும்.

இரவு 7.40

பட்டாசு தொழிலுக்கான பயிற்சி வகுப்புகள், பட்டாசு
தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்கள் பயனடை
யக்கூடிய வகையில் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.



இப்பயிற்சி வகுப்புகளில், பட்டாசு தொழிற்சாலைகளில் பயன்
படுத்தப்படும் இரசாயன பொருட்கள், அதன் அபாயகரமான
தன்மைகள், அதனைக் கையாளுவதில், இருப்பு வைத்திருப்பதில்,
உற்பத்தி செய்வதில் உள்ள அபாயங்கள் ஆகியவை குறித்து
பயிற்சி வகுப்பில், தமிழில் எடுத்துரைக்கப்படுகிறது. மாதம்
ஒன்றுக்கு 10 பயிற்சி வகுப்புகள் தற்போது நடத்தப்படுகின்றன.

வேலை வாய்ப்புக்காக சில திட்டங்களை அறிமுகப்படுத்
தலாம் என்று இந்த அரசு கருதியிருக்கிறது. அதிலே ஏற்கெனவே
இருக்கின்ற திட்டங்களோடு புதிதாக சில திட்டங்களை அறி
முகப்படுத்த இந்த அரசு விரும்புகிறது. அதிலே ஒன்று, இரண்டு
சக்கர வாடகை வாகனம் 'Motar cycle Taxes என்று
அதைச் சொல்வார்கள். கோவா மாநிலத்திலே வெற்றிகரமாக
நடைபெற்று வருவதாக இங்கே சொல்லப்பட்டது. அந்த
அடிப்படையிலே, அதைப்பற்றி இந்த அரசு பரிசீலித்து வருகிறது.
சுயவேலை வாய்ப்பை உருவாக்கும் வண்ணமாக புதிய திட்டம்
ஒன்றை அமலாக்க அரசு ஆலோசித்து வருகிறது. இத்திட்டத்
தின் பெயர் இரண்டு சக்கர வாடகை வாகனம். இத்திட்டத்தின்
கீழ், வேலை வாய்ப்பற்றோருக்கு ஒரு இரண்டு சக்கர மொபெட்
கொடுக்க ஏற்பாடு செய்யப்படும். அந்த வாகனத்தை பொது
மக்கள் எளிதாக அடையாளம் கண்டு கொள்ளும் வகையில் ஒரு
தனி வர்ணம் பூசப்படும். சென்னை மாநகரத்தின் ஒரு பகுதி
யிலிருந்து மற்றொரு பகுதிக்குச் செல்ல விருப்பப்படும் எந்த
ஒரு தனி நபரும் இந்த இரண்டு சக்கர வாகனத்தின் பின் இருக்கை
யிலே ஏற்றிச் செல்லப்படுவர். இதற்கான நியாயமான கட்ட
ணத்தை வாகன ஓட்டுநர் பெறுவார். இத்திட்டத்தின் பால்
வாகன ஓட்டுநர் சுயவேலை வாய்ப்பு பெறுவதோடு மட்டு
மல்லாமல் பொது மக்களுக்கும், குறிப்பாக பல அலுவல்களின்
நிமித்தம் சென்னையில் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு
செல்லும் தனி நபர்களுக்கு குறைந்த செலவில் செல்வதற்கு
வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)
போக்குவரத்துத் துறையினுடன் கலந்து ஆலோசித்து, திட்டம்
செயல்படுத்துவது பற்றி ஆய்வு செய்யப்படும். இதிலே
என்னென்ன பிரச்சினைகள் இருக்கின்றன என்பதை நாங்கள்
ஏற்கெனவே பரிசீலித்துத்தான் இதைக் கொண்டு வரலாம்
என்றிருக்கிறோம். இத்திட்டம் ஏற்கெனவே ஒரு மாநிலத்திலே
நடைபெற்றுக்கொண்டிருக்கிற காரணத்தால் நாங்கள் தைரிய
மாக நடைமுறைப்படுத்தலாம் என்று நினைக்கிறோம். (குறுக்கீடு)
பெண்களுக்கென்றால், பெண்கள் இதிலே போக வேண்டுமென்ற
கட்டாயம் இல்லை. (சிரிப்பு) பெண்களே ஓட்டலாம் அல்லது
அதிலே போக தைரியம் உள்ள பெண்கள் போகலாம். ஆகவே,
எப்படி வேண்டுமானாலும் நாம் செய்து கொள்ளலா

[டாக்டர் செ. அரங்கநாயகம்] [1991 செப்டம்பர் 16

இன்னொன்று, வீட்டு சேவை மையங்கள், இது மிகவும்
தேவையான ஒன்று என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் உணர்
வார்கள். வீட்டிலே ஏதாவது ஒரு ரிப்பேர் ஆகிவிட்டால்
உடனே நாம் ஆள் தேட வேண்டியிருக்கிறது. அதற்காக, ஒரு
நாள், இரண்டு நாள நாம் கஷ்டப்படுகிறோம். இதற்காக
வீட்டு சேவை மையங்களை அரசின் சார்பிலேயே ஆரம்பித்து
9 மையங்களை இந்த நகரத்திலே நடத்தியிருக்கிறார்கள். அந்த
9 மையங்களும் வெற்றி பெறவில்லை. காரணம், அங்கே
ஒரு பிளம்பர், ஒரு எலக்ட்ரீஷியன் இந்த மாதிரி 3, 4 பேர்கள்
இருப்பார்கள். அங்கே வந்து அவர்களைக் கூட்டிக் கொண்டு
போகலாம் என்ற நிலைமை இருந்தது. அந்த மாதிரி வைத்
திருந்தார்கள். அது வெற்றி பெறவில்லை. அதிலே இருக்கிற
முக்கிய குறைபாடு ஃபோன் இல்லை என்பதுதான். ஃபோன்
இருந்தால் தான் இந்த மையமே திறமையாகச் செயல்படும்.
ஆகவே, இப்போது என்ன புதிதாகத் திட்டம் கொண்டு வந்
திருக்கிறோம் என்றால், வீட்டு சேவை மையத்தோடு, பப்ளிக்
டெலிஃபோன் பூத் இருக்கிறதல்லவா, இந்த இரண்டையும்
இணைத்து ஒரே இடத்தில் அந்த மையத்தை வைப்பதன் மூலம்
10 பேர், 15 பேருக்கு வேலை கிடைக்கச் செய்ய முடியும்
என்பதைக் கருதி இந்த திட்டத்தை 'நாசே' என்ற நிறுவனம்
நமக்குத் தந்தது. அதை நாம் பரிசீலித்து, அதனால் வேலை
வாய்ப்பு கிடைக்க இருப்பதை நினைத்து அரசு அதற்கு ஆதரவு
கொடுக்க இருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்பு
கிறேன்.

அதைப்போலவே, பெரிய வீடுகளிலே இருப்பவர்கள்
சாமான்கள் வாங்குவது என்றால், வெளியே போவதற்கு அவர்
கள் கஷ்டப்படுகிறார்கள். அப்படிப்பட்ட இடங்களுக்கு,
பெண்கள் ஒரு ட்ரை-சைக்கிள் வைத்துக் கொண்டு, தன்னுடன்
இன்னொரு பெண்ணையும் வைத்துக் கொண்டு, நம்முடைய
அமுதம் அங்காடிகளிலோ அல்லது கூட்டுறவுக் கடைகளிலோ
யிருந்து சாமான்களை வாங்கிக் கொண்டு போய் அவர்களுக்குத்
தருகின்ற அந்த வேலையைச் செய்வதன் மூலம் ஒரு கமிஷனைப்
பெற்றுக் கொள்ளலாம். அதிலே, 3 பேருக்கு, ஒரு பகுதியிலே
வேலை கிடைக்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. பெண்களுக்கு
வேலை வாய்ப்பு கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அதை,
அமுதம் அங்காடி போன்ற கூட்டுறவுக் கடைகளோடு பேசி,
பெண்களுக்கு வேலை வாய்ப்பைப் பெற்றுத் தரலாம் என்று
இந்த அரசு கருதி இருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட
விரும்புகிறேன்.

இப்போது மதுரை, கோயம்புத்தூர், அம்பத்தூர் ஐ.டி.ஐ.-
களில் உற்பத்தியோடு கூடிய பயிற்சி தரப்பட்டு வருகிறது.
அதை எல்லா ஐ.டி.ஐ.-க்களுக்கும் கொண்டு செல்லலாம்: எல்லா



1991 செப்டம்பர் 16] [டாக்டர் செ. அரங்கநாயகம்]

ஐ.டி.ஐ.-களிலும் அந்த முறையைப் பின்பற்றலாம் என்ற முடிவை
அரசு எடுத்திருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட
விரும்புகிறேன்.

இரவு 7-45

பி. அன்ட் சி. மில் தொழிலாளர் பிரச்சினையைப் பற்றிப்
பேசுகிற பொழுது, அந்தத் தொழிற்சங்கத் தலைவர் டபிள்யூ.
ஆர். வரதராஜன் அவர்கள் அந்தத் தொழிலாளர்களுக்கு நிவார
ணம் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அந்தக்
கோரிக்கையை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஏற்றுக்
கொண்டு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு
தொழிலாளிக்கு 400 ரூபாய் தருவது என்ற முடிவைச் செய்திருக்
கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சரவர்கள் பேசி
முடிக்கட்டும்; கடைசியிலே கேட்கலாம்.

திரு. டி. சுதர்சனம் பி. அன்ட் சி. மில் சம்பந்தப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பூராவும் தொழிலாளர்
நலன்தானே; சரி, கேளுங்கள்.

திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்
களே, பி அன்ட் சி மில் நிர்வாகத்தைப் பற்றி இங்கே மாண்புமிகு
அமைச்சரவர்கள் தன்னுடைய பதிலுரையிலே டபிள்யூ. ஆர்.
வரதராஜன் அவர்கள் வந்து பேசினார் என்று குறிப்பிட்டார்கள்.
காங்கிரஸ் கட்சியின் சார்பாக, அவர் பேசுவதற்கு முதல் தினமே
நானும், ஐ.என்.டி.யூ.சி. தலைவர் காளன் அவர்களும், ரங்க
நாதன் அவர்களும், எஸ்.எம். கிருஷ்ணன் அவர்களும், பலராமன்
அவர்களும்—ஐந்து சட்டமன்ற உறுப்பினர்கள் தமிழக முத
லமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களைச் சந்தித்து,
இந்த பி அன்ட் சி மில் நிர்வாகத்திலே ஏற்பட்டிருக்கின்ற
தகராறுகளைப் பற்றியெல்லாம் விவரமாகச் சொல்லி, இதற்குப்
பரிகாரம் காண வேண்டுமென்று நாங்கள் வேண்டுகோள் விடுத்
தோம். அந்த வேண்டுகோளை மாண்புமிகு புரட்சித் தலைவி
அவர்கள் ஏற்றுக் கொண்டு, அன்று மாலையே அறிக்கை வெளி
யிட்டார்கள். அந்த அறிக்கையிலே நியாயமான கோரிக்கை
களையெல்லாம் ஏற்றுக் கொள்வதாகச் சொன்னார்கள். ஆனால்
மாண்புமிகு டபிள்யூ. ஆர். வரதராஜன் அவர்கள் முதலமைச்
சரையே பார்க்க முடியவில்லை என்று சுவரெல்லாம் ஆங்காங்கு
சுவரொட்டிகள் ஒட்டினார்கள்.......

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு
பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள்
தன்னுடைய கருத்துக்களைச் சொல்லலாம். இப்பொழுது

பிரச்சினையை, இந்தப் போட்டித் தொழிற்சங்கம் என்கிற பிரச்சினையைப் போல அதை ஆக்க வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு நாம் இடம் தர வேண்டாம். நீங்கள் சொன்னதும் வெளியே வந்திருக்கிறது. அவர் என்ன சொன்னார், என்ன எழுதினார் என்பதெல்லாம் எங்களுக்குத் தெரியும். அதை நாங்கள் எப்படிச் சந்திக்க வேண்டுமென்பதும் எங்களுக் குத் தெரியும். இப்பொழுது தொழிலாளர் பிரச்சினைகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோம். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் கோரிக்கை யையும் வைத்தீர்கள் என்ற அளவிற்கு வந்தால் சரிதானே.

திரு. டி. சுதர்சனம்: முதலமைச்சர் அவர்கள் ஒத்துக் கொண்டு......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சரி, நல்லது. திரு. ச. இராமச்சந்திரன்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, நிவாரணம் எந்தத் தேதியிலிருந்து பி அன்ட் சி மில் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் என்ற விவரத்தையும் தெரிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரவர்கள்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இது ஒரு தடவை 400 ரூபாய் தரப்படும்.

இங்கே குறிப்பாக வேலை வாய்ப்பு அலுவலகத்திலே பணி புரிகின்ற அலுவலரைப்பற்றிப் புகார்கள் சொன்னார்கள். இதற் காக ஒரு ஸ்குவாட் வைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஸ்குவாட் 27 விசாரணை நடத்தி, தவறு செய்த 7 அலுவலர் மீது நட வடிக்கை எடுத்திருக்கிறது என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு தமிழ்நாட்டில், தொழில் அமைதி ஏற்படவும், தொழில் உறவு நல்லபடியாக இருக்கவும், மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய அரசு எல்லாவிதமான முயற்சிகளையும் எடுக்கும் என்கின்ற உறுதி யையும், நம்பிக்கையையும் தெரிவித்து, வெட்டுத் தீர்மானங்களை வாபஸ் வாங்கிக் கொண்டு உங்கள் முன்னாலே வைக்கப்பட் டிருக்கின்ற மானியக் கோரிக்கையை ஏகமனதாக நிறைவேற் றித்தர வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். எஸ். ராம சுப்பு.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, பீடித் தொழிலாளர்களுக்கு மேலப்பாளையத்திலும், முக்கூடலிலும் வீடு கட்டிக் கொடுப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்த வேலை இன்னும் நடைபெறுவதாக இல்லை. அதைப்போல, ஆலங்குளம் பகுதியில் தான் அதிகமான பீடித் தொழிலாளர்கள் இருக்கின்றார்கள். அந்தப் பகுதிக்கும் கூடுதலாக வீடுகள் கொடுக்கப்பட்டு, இந்தப் பீடித் தொழிலாளர் களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இது முதல் பட்ஜெட், முதல் பட்ஜெட்டிலே இப்பொழுது சொல்லியிருக்கிறோம். இனி, அடுத்து வர இருக்கின்ற பட்ஜெட்டிலேயெல்லாம் ஒவ்வொரு பகுதியாக நாங்கள் அந்தத் திட்டங்களைக் கொண்டு வருவோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சிங்கை கோவிந்த ராசு.

திரு. சிங்கை கோவிந்தராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது பி அன்ட் சி மில்லுக்கு நிவாரணம் அளிப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். என்னுடைய தொகுதியிலே இருக்கக்கூடிய வசந்தா மில், ஜெய லட்சுமி மில், மதர்ஸ் ஸ்பின்னிங், இராதாகிருஷ்ணா மில் ஆகிய மில்கள் நின்று பத்து வருஷங்களுக்குப் பக்கமாகிறது. இதே கோரிக்கை எங்களுக்கும் தொடர்ந்து அளிக்கப்படுமா என்று அமைச்சரவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

இரவு 7-50

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய வேண்டு கோள் அரசால் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜெ. பாலகங்கா தரன்.

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, பீடித் தொழிலாளர்களுக்கு மட்டும் வீட்டுவசதி என்ற நிலைமை, தற்போது அமைச்சர் அவர்கள் அறிவித்துள்

ளார்கள். அதேபோல், சிவகாசியிலுள்ள பட்டாசுத் தொழிற் சாலையில் வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்கும் வீட்டுவசதி ஏற்பாடு செய்து தரப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்தும் அரசு பரிசீலிக் கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஓ. எஸ். அமர்நாத்.

திரு. ஓ. எஸ். அமர்நாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்நல துணை ஆணையர் அவர்களால் உத்தரவிடப்படும் இழப்பீட்டுத் தொகை, குறிப்பிட்ட காலத்திற் குள் 'டெப்பாசிட்' செய்ய, தனித் திட்டம் கொண்டுவர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து, கவனத்திலே எடுத்துக்கொள்ளப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ச. புரட்சிமணி.

திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், ஆதிதிராவிட மக்களுக்கும் வயது வரம்பு அதிகரிக்கப்படுமா என நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வயது வரம்பை எடுப்பதன் மூலம், சிலபேருக்கு நன்மை என்றாலும், அதனாலே சிலபேருக்கு பாதகமான நிலைமைதான் வரும். குறிப்பாக, இளைஞர் களுக்கு பாதமகான நிலைமை வரும். எல்லோரையும் பொது வாக நாம் பார்க்கிறபோது, இதனாலே ஒரு குறிப்பிடத்தக்க எந்தப் பயனும் நமக்கு இல்லை. அடுத்த முறையில், நமக்கு வேண்டியவர்கள் 30 வயதாகிவிட்டால், நமக்கு பார்க்க பரிதாப மாக இருக்குமே தவிர, பல்வேறு சமுதாய ரீதியிலே பார்க்கிற போது அதிலே எந்தவிதமான மாற்றமும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கி. செல்வராஜ்.

திரு. கி. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர், சேலம், திண்டுக்கல் பகுதிகளில் சில பஞ்சாலைகளில், 10, 12 வயது சிறுவர், சிறுமியரை வைத் துக்கொண்டு, 10, 12 மணி நேரம் வேலை வாங்கிவிட்டு,



5 ரூபாய், 6 ரூபாய் கூலியை கொடுத்து வற்புறுத்தி வருகிறார்கள். அப்படி வேலை வாங்குகிற நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்க ஆவன செய்வீர்களா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தா. வேடியப்பன்.

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது வடாற்காடு மாவட்டம், வடாற்காடு அம்பேத்கர் மாவட்டம் என்றும், திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் என்றும் இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. வடாற்காடு அம்பேத்கர் மாவட்டம் அனைத்து தொழிற்பேட்டை மையங்களையும் கொண்டுள்ளது. திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் தொழில் துவங்க, பேரவைத் தலைவர் மூலம், தொழிலாளர் நல அமைச்சரை, அரசு அங்கு தொழிற்பேட்டை அமைக்க ஆவன செய்யுமா என கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது தொழிலாளர் நலன் குறித்த மானியக் கோரிக்கை. திரு. வி. கே. சின்னசாமி.

*திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், எத்த னையோ வகைத் தொழிலாளர்களைப் பற்றியெல்லாம் சொன் னார்கள். ஆனால், இலட்சக்கணக்கான, கோடிக்கணக்கான பேர் விவசாயத் தொழிலிலே ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் இந்த நாட்டிலே இருக்கிறார்கள். ஆக, அவர்களுக்கும் இப்படிப்பட்ட தொழிற்சங்கங்கள் வைத்துக்கொள்வதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உதவுவாரா ? பட்டாசுத் தொழிலைச் செய்வதற்கு 'டிரெயினிங்' கொடுப்பதாகச் சொன்னார்கள். அதுபோல, வேளாண்மைத் துறையின் மூலம், எப்படி விவசாயிகள் விவசாயம் செய்ய வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில், விவசாயத் தொழிலாளர்களுக்கும் பயிற்சி கொடுப்பதற்காக, பயிற்சி நிலையங்களை உருவாக்கு வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப் பாரா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத் தொழிலாளர் களுக்கு பயிற்சி, வேளாண்மைத் துறையினரால் தரப்பட்டு வருகிறது. அவர்களுடைய குறைந்தபட்ச ஊதியம் பற்றியும் இந்த அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.

[1991 செப்டம்பர் 16

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு.கே. குப்பன்.

திரு. கே. குப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே உள்ள கே.சி.பி. தொழிற்சாலையினுடைய நிறுவனம், 525 குடும்பங்கள் இன்றைக்கு பசியும், பட்டினியுமாக இருக்கின்ற வகையில், 11 மாதகாலமாக சட்டவிரோதமாக கதவடைப்பு செய்திருக்கிறது. அந்தக் கதவடைப்பை நீக்குவதற்கு — பி. அண்டு சி. மில்லைப்பற்றியும், வண்டலூரிலுள்ள தொழிற்சாலையைப் பற்றியும் பேசிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் — என்னுடைய தொகுதியிலே இருக்கிற கே.சி.பி. தொழிற்சாலையைப்பற்றி எதுவும் சொல்லாதது, வருத்தத்தை அளிக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைத் திறப்பதற்கு, ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, ஆவன செய்வாரா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுபற்றி ஏற்கெனவே நீங்கள் பேசியிருக்கிறீர்கள்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் எல்லோருடைய கருத்தைப் பற்றியும் பேச முடியவில்லை என்ற வருத்தம் எனக்கு இருக்கிறது. நேரம் கருதித்தான் சுருக்கமாக முடித்துக்கொண்டேன். கே.சி.பி. லிமிடெட்டைப் பொறுத்தமட்டில், அது கதவடைப்பு அல்ல ; வேலை நிறுத்தம் நடைபெறுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. காளன்.

திரு. ஜி. காளன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய விளக்கத்திலே, தொழிலாளர் நல வாரியத்துக்திற்குக் கொடுக்கக்கூடிய சந்தாவை உயர்த்தப்போவதாகக் கூறியிருக்கிறார்கள். இப்போதே, தொழிலாளர்கள் இரண்டு ரூபாயும், நிர்வாகம், 4 ரூபாயும் செலுத்துகிறார்கள்.

இரவு 7-55

அதிலே தற்போது தொழிலாளர் வாரியத்தின் மூலமாகத் தொழிலாளர் தரப்பிலே சலுகைகள் முப்பது இலட்சம் ரூபாய் தான் வருடத்திற்குச் செலவாகின்றது. ஒரு கோடி ரூபாய் அரசாங்கசேமிப்பு இல்லாமலேயே இப்போது மிச்சம் இருக்கிறது. எனவே, விஸ்தரிப்பு எதுவும் இல்லாமல் சந்தாவை உயர்த்த வேண்டிய அவசியம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.



1991 செப்டம்பர் 16]

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, பணம் பாங்கிலே டெபாசிட்
செய்யப்பட்டிருக்கிறது. செலவு செய்யப்படவில்லை என்பதை
நாங்கள் வந்தவுடன் பார்த்தோம். அதனாலேதான், கோயம்
புத்தூர், ஓசூர், தூத்துக்குடி போன்ற இடங்களில் பெரிய
அளவிலே தொழிலாளர்களுக்கான வளாகங்களை நிறுவுவதென
முடிவு மேற்கொண்டிருக்கிறோம். இது இப்போது மூன்று இடங்
களில் அமைக்கப்பட இருக்கிறது. மற்ற இடங்களில் அதை
விரைவாகக் கொண்டுவர இருக்கிறோம். தொழிலாளர்களுக்
குரிய கலாச்சார வாழ்வைத் தரவேண்டுமென்பதே இந்த அரசின்
நோக்கம். அந்த அடிப்படையிலேதான், தொழிலாளர் நல
வளாகங்கள் அமையும் என்பதை நான் இங்கே குறிப்பிட
விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி செ. சுந்தராம்
பாள்.

திருமதி செ. சுந்தரம்பாள் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, எனது தொகுதியிலே கடந்த ஏழு ஆண்டு
களாக மூடியிருக்கும் மேட்டூர் டெக்டைல்ஸ் என்ற நூற்பாலை
யில் 2,550 தொழிலாளர்கள் பசியால் வாடிக்கொண்டிருக்கிறார்
கள். அவர்களுக்கு ஏதாவது நிவாரணம் அளிக்கும் திட்டம்
அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய
கோரிக்கையை அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. பி. ராஜு.

திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, கோவை விவசாயப் பல்கலைக் கழகத்திலே
... ... ...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூடிக்கிடக்கின்ற தொழில்
நிறுவனங்கள் இருக்கிற பகுதிக்காக....

திரு. கே. பி. ராஜு : கோவை விவசாயப் பல்கலைக் கழகத்
திலே உள்ள கூலித் தொழிலாளர்கள் 10, 15, 20 வருடங்களாக
கூலித் தொழிலாளர்களாகவே வேலை செய்து கொண்டு வரு
கிறார்கள். அவர்களைப் பெர்மனென்ட் செய்ய வேண்டுமென்று
சென்ற ஆட்சியின்போது 48 நாட்கள் உண்ணாவிரதப்
போராட்டம் நடத்தியும், அந்த ஆட்சி கண்டுகொள்ளாமல் விட்டு
விட்டது. அந்தக் கூலித் தொழிலாளர்களுக்கு அவர்கள் 4[illegible]

நாட்கள் ஸ்டிரைக் செய்த காலத்தில் கிடைக்காத ஊதியத்தை வழங்குவதற்கும், அவர்கள் வேலைக்கு உத்தரவாதம் தருவதற்கு உள்ள நிலை அரசின் பரிசீலனையில் உள்ளதா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர். செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் கூறிய இந்தப் பிரச்சினையை அரசு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சா. பன்னீர் செல்வம்.

திரு. சா. பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, சில கம்பெனிகள் காண்டிராக்ட் முறையில் பெண்களை வைத்துக் குறைந்த கூலி கொடுக்கிறார்கள். எனவே, அந்தக் கம்பெனிகளிலே அவர்களுக்கு அதிகமான கூலி கிடைக்க அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாகப் புகார் தரப்பட டால் அது குறித்து அரசு பரிசீலிக்கும், விசாரித்து தக்க நட வடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

மானியக் கோரிக்கை எண். 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய வெட்டுத் தீர்மானம் வலியுறுத்தப் படுகிறதா என்று அறிய விரும்புகிறேன். திரு. எச். எம். ராஜு.

திரு. எச். எம். ராஜு : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எச். எம். ராஜு அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது. டாக்டர் தே. குமார தாஸ் தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்துகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ் — உறுப்பினர் தம் இருக்கையில் இல்லை. அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனு மதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றதாகக் கருதப் பெற்றது.





"தொழிலாளர் நலனும்—தொழிற்சாலைகளும் பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 42,19,41,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்" என்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. .. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க .. (இல்லை.)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி).

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெற்றது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை காலை 9.30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை இரவு 7-59 மணிக்கு ஒத்தி வைக்கப்பெற்றது.

## 6. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்

### ஆ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

78. மானாமதுரை, தொழுநோய் நிலையம், தயாபுரம் தொழுநோய் மருத்துவமனையினரால்வாங்கப்பட்ட மகிந்திரா ஜீப்பிற்காக செலுத்தப்பட வேண்டிய வரியிலிருந்து விலக்களிப் பது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 22—3—1991 ஆம் நாளிட்ட 166ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1990-ஆம் ஆண்டு உள்ளாட்சி பகுதிக்குள் இயக்கூர்திகளின் நுழைவின் மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/ 1990) 18 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

79. கோவை ஸ்ரீ ஜனார்தனா மில்ஸ் லிமிடெட் அவர்களால் செலுத்தப்பட வேண்டிய வரியினை 12—10—1990 முதல் மூன்று ஆண்டு காலத்திற்கு தள்ளிப் போடுவது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக் கட்டளைகள் துறையின் 25—2—1991-ஆம்

நாளிட்ட 97-ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.[தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

80. புதுக்கோட்டை, திருவாளர்கள் லக்ஷ்மி சண்முகா நூற்பாலை நிறுவனத்தாரால் செலுத்தப்பட வேண்டிய வரியினை 23–11–1990 முதல் மூன்று ஆண்டு காலத்திற்கு தள்ளிப்போடுவது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 25–2–1991 ஆம் நாளிட்ட 98 ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

81. தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் பராமரிப்புத் துறையினரால் 1–3–1982 முதல் 27–2–1986 வரை விற்பனை செய்யப்பட்ட ஒப்பந்தப் புள்ளி படிவங்களுக்காக செலுத்தப்பட வேண்டிய வரி வித்தியாசத்தினை தள்ளுபடி செய்வது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 20–12–1990-ஆம் நாளிட்ட 740 ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

82. திருச்சிராப்பள்ளி, பாத்திமாநகர் ஹோலி பேமிலி ஹான்சனோரியத்திற்கு சொந்தமான ஜீப் டி.ஏ.கே. 2736-க்கு சலுகை முறையில் வரி விதிப்பது குறித்து உள் (போக்குவரத்து-அ) துறையின் 11–7–1990-ஆம் நாளிட்ட 1654-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

35. தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் செயல்பாடுகள் குறித்த சிறு குறிப்பு, 1990–91 (தமிழ், ஆங்கிலம்).

36. தமிழகத்தில் மத்தியக் கூட்டுறவு வங்கிகள், 1990–91 என்கிற புத்தகம். (தமிழ், ஆங்கிலம்).

37. தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், 1991 என்கிற புத்தகம். (தமிழ், ஆங்கிலம்).



38. தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கியின் பணிகள் பற்றிய குறிப்பு. (தமிழ், ஆங்கிலம்).

39. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் என்கிற புத்தகம். (தமிழ், ஆங்கிலம்.).

40. தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் என்கிற புத்தகம். (தமிழ், ஆங்கிலம்).

41. கோரிக்கை எண். 18 மற்றும் 19—மருத்துவம்—மக்கள் நல்வாழ்வு பற்றிய கொள்கைக் குறிப்பு, 1991-92. (தமிழ், ஆங்கிலம்).

42. கோரிக்கை எண். 19—சுற்றுப்புறத் தூய்மைக் கட்டுப்பாடு மீதான கொள்கை விளக்கக் குறிப்பு, 1991-92. (தமிழ், ஆங்கிலம்).

43. கோரிக்கை எண். 29—தொழிலாளர், தொழிற்சாலை மற்றும் வேலைவாய்ப்பு—பயிற்சி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1991-92. (தமிழ்.).

டி2 53-298-

## இணைப்பு 1.

42 ஆம் பக்கத்தில் உள்ள அடிக் குறிப்பைக் காண்க.

### மருத்துவம்-மக்கள் நல்வாழ்வு பற்றிய கொள்கைக் குறிப்பு 1991-92



1991 செப்டம்பர் 16]

### I. முன்னுரை.

1991-92 ஆம் ஆண்டு வரவு-செலவு மதிப்பீட்டில் ரூ. 411 கோடி மருத்துவம் மற்றும் பொது சுகாதாரத்திற்கு கீழ்க் குறிப்பிட்டுள்ளவாறு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அவ்வாண்டு வருவாய்க் கணக்கில் ஆகும் மொத்தச் செலவு ரூ. 6,250 கோடியில் அது ஏழு சதவீதமாகும்.

| மானியம். | திட்ட மல்லாத செலவு. | திட்டப்பணிச் செலவு. | | | |
|---|---|---|---|---|---|
| | | மாநிலத் திட்டம். | மைய அரசு பொறுப் பேற்பவை. | மைய அரசின் உதவி பெற்றது. | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | (ரூபாய் கோடியில்) | | | |
| 18. மருத்துவம். | 221.57 | 21.83 | 2.59 | 0.66 | 25.08 |
| 19. பொது சுகாதாரம் (மற்றும் குடும்ப நலம்) | 71.24 | 15.45 | 55.18 | 17.81 | 88.44 |
| மொத்தம் | 292.81 | 37.28 | 57.77 | 18.47 | 113.52 |

| மானியம். | மொத்தம். திட்டம் மற்றும் திட்டமல்லாத செலவு. | கூட்டுக திரும்ப வசூலிப் பவை. | ஓட்டு மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (7) | (8) | (9) |
| 18. மருத்துவம் | 246.65 | 2.75 | 249.40 |
| 19. பொது சுகாதாரம் (மற்றும் குடும்பநலம்) | 159.68 | 1.75 | 161.43 |
| மொத்தம். | 406.33 | 4.50 | 410.83 |

மருத்துவமனைகளுக்கு கட்டிடம் போன்றவற்றிற்காக மூலதனச் செலவு மதிப்பீட்டில் ரூ. 11.33 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

[1991 செப்டம்பர் 16

(2) மருத்துவம் மற்றும் பொது சுகாதார மானியக் கோரிக்கைகளில் அடங்கிய முக்கிய செலவினங்கள் வருமாறு :

| | (ரூபாய் கோடியில்.) |
|---|---|
| **கோரிக்கை எண் 18 மருத்துவம் :—** | |
| மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள் .. | 131.86 |
| மருத்துவக் கல்வி .. .. .. .. | 30.54 |
| நோய்க் கட்டுப்பாடு (தொழுநோய், காசநோய் போன்ற). .. | 20.59 |
| தொழிலாளர் ஈட்டுறுதித் திட்ட மருத்துவமனைகள் | 24.27 |
| நெறிப்படுத்தலும், நிருவாகமும் .. .. | 5.87 |
| கட்டிடம் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு .. | 5.54 |
| மருத்துவமனைகளில் காவல்படை .. .. | 0.60 |
| பல்வகை இனங்கள் .. .. .. | 1.04 |
| இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி .. | 7.74 |
| அகவிலைப்படிக்கான மொத்த நிதி ஒதுக்கம் .. | 18.60 |
| | 246.65 |
| கூட்டுக : திரும்ப வசூலப்பவை .. | 2.75 |
| | 249.40 |
| **கோரிக்கை எண் 19 பொது சுகாதாரம் :—** | |
| சுகாதாரத் துணை மையங்கள் .. .. | 11.36 |
| ஆரம்ப சுகாதார மையங்கள் .. ... | 35.58 |
| மலேரியா போன்ற நோய்கள் கட்டுப்பாடு .. | 24.03 |
| கிங் நிலையம், கிண்டி .. .. .. | 2.81 |
| நெறிப்படுத்தலும் நிருவாகமும் .. .. | 4.87 |
| மருந்துக் கட்டுப்பாடு நிருவாகம் .. .. | 1.26 |
| மற்ற பொதுச் சுகாதார செலவினங்கள் .. | 1.90 |
| அகவிலைப் படிக்கான மொத்த நிதி ஒதுக்கம் .. | 10.56 |
| கட்டட பழுதுபார்ப்பு .. .. ... | 0.87 |
| | 93.24 |



1991 செப்டம்பர் 16]

| | |
|---|---|
| **குடும்ப நலம் :—** | |
| நோய்த் தடுப்பு .. .. .. .. | 3.69 |
| டானிடா .. .. .. .. | 1.53 |
| ஐ. பி. பி. V .. .. .. .. | 10.22 |
| சுகாதாரப் போக்குவரத்துத் துறை .. .. | 2.59 |
| குடும்பநலப் பணிகள் .. .. .. | 47.43 |
| | 65.46 |
| குடிநீர் வழங்குதல் மாசு கட்டுப்பாடு மற்றும் மலைப்பகுதி முன்னேற்றம் .. .. | .98 |
| | 159.68 |
| கூட்டுக— திரும்ப வசூலிப்பவை .. | 1.75 |
| | 161.43 |

(3) நமது அரசின் முக்கியக்குறிக்கோள் அனைவருக்கும் மருத்
துவ வசதிகள் நல்குவதுதான். அனைவரும் நலமுடன் வாழ்வதற்
காக மருத்துவ மனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார மையங்களின்
எண்ணிக்கையை அதிகரிப்பதோடு குறிப்பாக கிராமப்புற மருத்துவ
மனைகளில் மருந்துகள் தடையின்றி கிடைக்கவும், மருத்துவ அதி
காரிகளின் சேவை மேம்படவும் தேவையான நடவடிக்கை எடுக்
கப்படும். நல்வாழ்வுப் பணியில் ல்வேறு புலங்களிலும் தற்
பொழுது நடைமுறையில் இருந்துவரும் திட்டங்களின் விவரமும்
இனி மேற்கொள்ளவிருக்கும் புதுப்பணிகளின் விவரமும் பின்வரும்
அத்தியாயங்களில் விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளன. குடும்ப
நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு எப்போதுமே
முன்னிலையிலுள்ளது. 1991–92 ஆம் ஆண்டு ''தாய்மை நல
ஆண்டாக'' அறிவிக்கப்பட்டுள்ளது. பேறுகால இறப்பு மற்றும்
குழந்தைகள் இறப்பைத் தடுத்தல், பாதுகாப்பான பிள்ளைப்பேறு,
குழந்தைகளிடையே இடைவெளி, உரிய வயது எய்திய பின்னரே
திருமணம் போன்றவைகளுக்கு இவ்வாண்டு முதன்மை தரப்படும்.
இவைபற்றிப் பெண்களுக்குப் போதிப்பதற்கும் இவ்வாண்டு
கவனம் செலுத்தப்படும்.

(4) தற்போதுள்ள நிருவாக அமைப்பு வசதிகளை முழுமை
யாக திறம்படப் பயன்படுத்தி, ஒருங்கிணைந்த செயற்பாடு நிக
ழும் வகையில் மருத்துவப் பணிகள், குடும்பநலம், பொது சுகாதா
ரம் ஆகிய இயக்ககங்கள் அண்மையில் சீரமைக்கப்பட்டுள்ளன.
பயிற்றுவிக்கும் மருத்துவ மனைகள் தவிர பிற மருத்துவ
மனைகள் அனைத்தும், ஆரம்ப சுகாதார நிலையங்களும் மற்றும்

குடும்பநலப் பணிகளும் மருத்துவம் மற்றும் ஊரக நல்வாழ்வுப்
பணி இயக்குநரகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. பொது
சுகாதாரம், தடுப்பு மருந்து மற்றும் அத்துறைகளில் தொடர்
கல்வி ஆகியவை தற்போது பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு
மருந்து இயக்ககத்தின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. வருவாய்
மாவட்ட அளவிலும் சுகாதார நிருவாகம் திருத்தி அமைக்கப்
பட்டுள்ளது. மாவட்டம் முழுமைக்குமான மருத்துவம், பொது
சுகாதாரம், குடும்பநலம், பார்வையின்மைத் தடுப்பு, காசநோய்
சிகிச்சை, தொழுநோய் சிகிச்சை உட்பட எல்லா சுகாதாரப் பணி
களும் (மருத்துவப் பணியைச் சார்ந்த) சுகாதார இணை இயக்கு
நர் ஒருவரின் முழுப் பொறுப்பில் விடப்பட்டுள்ளது. மேலும்
இப்பணிகளுக்காக மாவட்டத்திலுள்ள சார்நிலைப் பணியாளர்
கள் அனைவரும் இணை இயக்குநரின் முழுக் கட்டுப்பாட்டின் கீழ்
கொண்டுவரப்பட்டுள்ளார்கள். மாவட்டத்திலுள்ள அனைத்து
மருத்துவ நிலையங்களும் (மருத்துவப்பணியைச் சார்ந்த) துணை
இயக்குநர் ஒருவரின் பொறுப்பில் உள்ளன. ஒவ்வொரு மாவட்ட
மும் இரண்டாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பாதியிலும் சுகாதாரம்
மற்றும் குடும்பநலத் திட்டப் பணிகள் அனைத்தையும் பொது
சுகாதாரப் பணியைச் சார்ந்த துணை இயக்குநர் ஒருவர்
கிறார்.





## II. மருத்துவக் கல்வி.

மருத்துவக் கல்வி மேம்பாட்டில் தனிக் கவனம் செலுத்து வதற்காக 1966-ல் உருவாக்கப்பட்ட மருத்துவக் கல்வி இயக்ககம், மருத்துவக் கல்லூரிகளையும் அவற்றோடு இணைந்த மருத்துவ மனைகளையும் நிருவகித்து வருகிறது. தற்பொழுது அரசின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் மருத்துவக் கல்லூரிகள் 10-ம் (பல் மருத்துவக் கல்லூரி 1 உட்பட) அவற்றோடு இணைந்த மருத்துவ மனைகள் 35-ம், மருந்தகங்கள் 14-ம் உள்ளன. இக்கல்லூரிகளில் பயின்று எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்று வெளிவருபவர் எண்ணிக்கை ஆண்டுதோறும் 1,000-க்கு மேலாகும்; பட்ட மேற்படிப்பு, பட்டயம் உயர் சிறப்புப் பயிற்சி ஆகிய தகுதிகளைப் பெற்று வெளி வருவோர் எண்ணிக்கை ஆண்டுக்கு 900 ஆகும். 1990-91-ல் எம்.பி.பி.எஸ். படிப்புக்கு (பல் மருத்துவக் கல்லூரியைப் பொறுத்த வரை பி.டி.எஸ்.) அனுமதிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கை வருமாறு :

| | |
|---|---|
| (1) சென்னை மருத்துவக் கல்லூரி .. .. | 130 |
| (a) பெருந்துறை மருத்துவக் கல்லூரிக்காக | 20 |
| (2) சென்னை பல் மருத்துவக் கல்லூரி (பி.டி.எஸ்.) | 45 |
| (3) ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, சென்னை | 150 |
| (4) கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, சென்னை | 110 |
| (a) பெருந்துறை மருத்துவக் கல்லூரிக்காக | 20 |
| (5) செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி, செங்கல்பட்டு. | 50 |
| (6) தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி, தஞ்சாவூர் | 150 |
| (7) மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை | 155 |
| (a) பெருந்துறை மருத்துவக் கல்லூரிக்காக | 20 |
| (8) திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி, திருநெல்வேலி. | 100 |
| (9) கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி, கோவை | 110 |
| (10) அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி, சேலம். | 77 |
| (11) ஸ்ரீராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் (தன்னுரிமை பெற்றது) | 100* |
| மொத்தம்—எம்.பி.பி.எஸ். × பி.டி.எஸ். 45 | 1,237 |

*மருத்துவக் கல்லூரிகளுக்கு மாணவர் தெரிந்தெடுக்கும் குழு மூலம் நிரப்பப்படும் இடங்கள்.

[1991 செப்டம்பர் 16

பெரியார் மாவட்டம், பெருந்துறையில் புதிய மருத்துவக் கல்லூரி ஒன்றைத் தொடங்க அரசு ஏற்பளித்துள்ளது. அக் கல்லூரி மாணவர்கள் தற்பொழுது சென்னை மருத்துவக் கல்லூரி, கிழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, மதுரை மருத்துவக் கல்லூரி ஆகியவற்றில் ஒவ்வொன்றிலும் 20 மாணவர் வீதம் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். பெருந்துறையில் புதிய கல்லூரி செயல்படத் தொடங்கியதும் அவர்கள் அக்கல்லூரிக்கு மாற்றப்படுவர். பல்வேறு மருத்துவக் கல்லூரிகளிலும் உள்ள வெவ்வேறு படிப்புகளைப்பற்றிய விவரங்கள் சாதனை நிலை அறிக்கையில் தரப்பட்டுள்ளன. அரசு மருத்துவக் கல்லூரிகள் பத்திலும் மொத்தம் உள்ள பணியாளர் விவரம் வருமாறு :—

| | |
|---|---|
| மருத்துவர்கள் .. .. .. .. | 1,997 |
| மருத்துவத் துணைப் பணியாளர்கள் .. | 601 |
| அமைச்சுப் பணியாளர் .. .. .. | 386 |
| அமைச்சுப் பணியாளர் அல்லாத பிற பணியாளர். .. | 592 |
| அடிப்படை ஊழியர் .. .. .. | 820 |
| | 4,396 |

2. சேலத்தில் தொடங்கப்பட்ட அரசு மோகன் குமார முங்கலம் மருத்துவக் கல்லூரி 75 மாணவர்களுடன் 1990 சூலைத் திங்களில் தொடங்கப்பட்டது. சேலத்தில் இருந்த மாவட்ட தலைமையிட மருத்துவமனை பயிற்றுவிப்பு மருத்துவ மனையாக இக்கல்லூரியால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. உடற் கூறியல், உடலமைப்பியல், உயிர் வேதியல் ஆகிய பயிற்று விப்புத் துறைகள் முதலாண்டு தொடங்கப்பட்டன. பயிற்று விப்புக்கான கட்டடங்கள் மொத்தம் ரூ. 3.75 கோடி செலவில் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இச் செலவுக்காக 1991-92ல் ரூ. 1.39 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மாணவியருக்கு ரூ. 1.07 கோடி செலவில் விடுதிக் கட்டிடட் கட்ட 1991 ஏற்பளிக்கப்படும்.



91 செப்டம்பர் 16]

3. மருத்துவக் கல்லூரிக்குத் தேவையான அடிப்படை திகளும், தகுந்த நிதி வளமும் பெற்றுள்ள பின்வரும் ரண்டு அமைப்புக்கள் அரசுக்கு நிதிப் பொறுப்பு ஏதும் ற்படா வண்ணம் புதிய மருத்துவக் கல்லூரி தொடங்க ரசு அனுமதித்துள்ளது:—

(1) ராஜா முத்தையா மருத்துவ அறிவியல் நிறுவனம், அண்ணாமலை நகர், சிதம்பரம், தென்னாற்காடு மாவட்டம்.

(2) பி.எஸ்.ஜி. மருத்துவ அறிவியல் நிறுவனம், பீளமேடு, கோயம்புத்தூர்.

**ணை மருத்துவப் பயிற்சி வசதிகள் :**

4. செவிலியர் பயிற்சிப் பள்ளிகள் எட்டு உள்ளன. மூன்று ண்டு செவிலியர் பயிற்சிப் பட்டயப் படிப்புக்கு 595+30 ஆட்டவர்) உதவித் தொகை பெறுபவர் +50 உதவித் தொகை பெறாதவர் அனுமதிக்கப்படுகின்றனர். செவிலியர் தவிர பிற துணை மருத்துவப் படிப்புகளின் விவரங்களைச் சாதனை நிலை அறிக்கையில் காணலாம்.

**மருந்தாக்கியல் படிப்பு :**

5. மதுரை, கோவை, தஞ்சாவூர் அரசு மருத்துவமனை களில் உள்ள மருந்தாக்கியல் பிரிவுகளையும் சேர்த்து மொத்தம் உள்ள மருந்தாக்கியல் படிப்பு நிலையங்கள் 25-க்கும் மருத்துவக் கல்வி இயக்ககத்தில் உள்ள மருந்தாக்கியல் வாரியம் மருந்தாக்கியல் பட்டயத் தேர்வை நடத்தி வருகிறது. இவற்றில் ஆண்டுதோறும் சேர்க்கப்படும் மாணவர் எண்ணிக்கை சுமார் 2,500 ஆண்டுதோறும் மருந்தாக்கியல் இறுதித் தேர்வு எழுதி பட்டயம் பெற்று வெளி வருவோர் எண்ணிக்கை சுமார் 1,000 ஆகும்.

மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகள் மற்றும் பயிற்றுவிக்கும் மருத்துவமனைகள் :

6. மருத்துவக் கல்வித் துறையின் கீழுள்ள பயிற்றுவிக்கும் மருத்துவமனைகள் 35-லும் உள்ள வசதிகள் மற்றும் அவற்றின் பணி விவரங்களைப் பின்வரும் புள்ளிவிவரங்கள் காட்டும் :

1990–91-ல் சிகிச்சை பெற்றவர்கள்:

| | |
|---|---|
| உள் நோயாளிகள் (சராசரி ஒரு நாளைக்கு) .. | 10,200 |
| புறநிலை நோயாளிகள் .. .. .. | 46,000 |
| படுக்கைகள் எண்ணிக்கை .. .. .. | 17,095 |

பணியாளர் விவரம் :

| | |
|---|---|
| மருத்துவர்கள் .. .. .. .. | 944 |
| செவிலியர் .. .. .. .. | 3,562 |
| செவிலியர் தவிர பிற துணை மருத்துவப் பணியாளர்கள். | 2,911 |
| அமைச்சுப் பணியாளர்கள் .. .. .. | 1,208 |
| அமைச்சுப் பணியாளர் அல்லாத பிறர் .. | 2,709 |
| அடிப்படை ஊழியர் முதலியவர்கள் .. .. | 5947. |
| மொத்த பணியாளர்கள் .. | 17,287 |

1990–91-ல் செய்யப்பட்ட அறுவைச் சிகிச்சைகள் எண்ணிக்கை :

| | |
|---|---|
| பெரியவை .. .. .. | 1,07,427 |
| சிறியவை .. .. .. .. | 1,79,337 |
| மொத்தம் .. | 2,86,764 |



| | |
|---|---|
| செய்யப்பட்ட ஆய்வகக்கூட பரிசோதனைகள் | 45,12,910 |
| எடுக்கப்பட்ட எக்ஸ்ரே கதிர் படங்கள் | 11,17,697 |

7. வரும் 1991–92-ம் ஆண்டில் பயிற்றுவிக்கும் மருத்துவ மனைகளில் மேற்கொள்ளப்படவிருக்கும் மேம்பாட்டுத் திட்டங்களுள் முக்கியமானவை வருமாறு :—

| | |
|---|---|
| (1) கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை. | கதிர்வீச்சு சிகிச்சைப் பிரிவைத் தொடங்குதல். |
| (2) திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை. | (1) இருதய—மார்பு அறுவை சிகிச்சைப் பிரிவு தொடங்குதல். |
| | (2) இரத்த சேமிப்பு—வழங்கல் பணியை மேம்படுத்துதல். |
| (3) அரசு இராஜாஜி மருத்துவ மனை, மதுரை. | குழந்தைகள் சிகிச்சைப் பிரிவை மேம்படுத்தக் கூடுதல் பணியாளர்கள். |

8. மருத்துவக் கல்வித் துறையின் கல்லூரிகள், மருத்துவ மனைகளுக்காக முன் ஆண்டுகளில் ஏற்பளிக்கப்பட்டு, இப்பொழுது நடைபெற்று வரும் கட்டட வேலைகளுக்காக 1991–92-ல் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகளின் முக்கியமானவற்றின் விவரங்கள் வருமாறு :—

| | 1991–92-ல் நிதி ஒதுக்கீடு (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|
| (1) ஸ்டான்லி மருத்துவமனையில் குழந்தைகள் மருத்துவப் பிரிவு. | 24 |
| (2) சென்னையில் காது, மூக்கு, தொண்டை சிகிச்சை மருத்துவமனை. | 27 |
| (3) அரசு பொது மருத்துவமனையில் ஏழு மாடிக் கட்டிடம். | 25 |
| (4) மதுரையில் உள்ள அரசு இராஜாஜி மருத்துவமனையில் கண் மருத்துவப் பிரிவு மற்றும் இரத்த நாள் அறுவை சிகிச்சைப் பிரிவுகளுக்கு கட்டிடம். | 20 |

[1991 செப்டம்பர் 16

| | 1991–92ல் நிதி ஒதுக்கீடு. (ரூபாய் லட்சம்.) |
|---|---|
| 5. அண்ணா நகரில் உள்ள நகர்ப்புற மருத்துவ மனையில் உணவு செரிமான நலப் பிரிவுக்கு கட்டிடம். | 25 |
| 6. சென்னை பல் மருத்துவக் கல்லூரிக் கட்டிட விரிவாக்கம். | 35 |
| 7. கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் புறநிலை நோயாளிகள் சிகிச்சைப் பிரிவுக்கு மேல் மாடிக் கட்டிடம். | 20 |
| 8. கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை யில் உடல் தோற்றப் பொலிவு அறுவை (பிளாஸ்டிக் சர்ஜரி) மற்றும் நரம்பியல் அறுவைப் பிரிவுகளுக்கு கட்டிடம். | 41 |

9. 1991–92-ம் ஆண்டில் ஏற்பளிக்கப்படவிருக்கும் புதிய பணிகளில் பின்வருமாறு சீர்வளி வசதி (மொத்தம் ரூ. 5 லட்சம் செலவில்) செய்யும் பணிகளும் அடங்கும் :—

1. கோவை, தஞ்சாவூர், மருத்துவமனைகளில் இரத்த சேமிப்பு அறைகளுக்கு சீர்வளி வசதி.

2. கோவை, தஞ்சாவூர், திருநெல்வேலி மருத்துவக் கல்லூரிகளின் நுண்ணுயிரியல் துறைகளில் உள்ள எய்ட்ஸ் கண்காணிப்பு மையங்களுக்கு சீர்வளி வசதி.

10. தற்பொழுது உடலின் உட்புறத்தை நுணுக்கமாக படம் பிடித்துக் காட்டும் கருவிகள்- முழு உடலுக்கும் பயன்படுத்தக் கூடியவை—(Whoi: Body Scanu r) சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் ஒன்றும், மதுரையில் உள்ள அரசு இராஜாஜி மருத்துவமனையில் ஒன்றுமாக இரண்டு உள்ளன. முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பெறும் ரூ. 1 கோடியைக் கொண்டு சென்னை பொது மருத்துவமனை நரம்பியல் மருத் துவத் துறைக்கும் அத்தகைய கருவி வாங்கப்படவிருக்கிறது. அம்மருத்துவமனையின் சிறுநீரக மருத்துவத் துறைக்காக முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து பெறும் தொகையைக் கொண்டு ரூபாய் 2 கோடி செலவில் லித்தோடிரிப்டர் என்னும் கருவி வாங்கிடவும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.



1991 செப்டம்பர் 16]

மருத்துவமனை பராமரிப்பு நிதி :

11. அரசு மருத்துவமனைகள் நன்கு பேணி பராமரிக்கப்பட வகை செய்யும் நோக்குடன் பயிற்றுவிக்கும் மருத்துவமனைகள் அனைத்திலும் மற்றும் திருச்சி, ஈரோடு, வேலூர், தூத்துக்குடி ஆகிய மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளிலும் ஒவ் வொன்றிலும் ஒரு மருத்துவமனைப் பராமரிப்பு நிதி அமைத்திட 1981 ஆம் ஆண்டு ஜூன் மாதம் அரசு ஆணையிட்டது. மொத் தம் 37 மருத்துவமனைகளில் இத்திட்டம் செயல்படும். வள் ளண்மை கொண்டோர் வழங்கும் தொகைகளும், ஏனைய வகை களில் வரும் மானியம் நன்கொடை போன்ற வரவுகளும் இந்நிதி யில் சேர்க்கப்படும். மருத்துவமனைத் தலைவரின்கீழ் அமைந்த ஒரு குழு இந்நிதியை நிருவகிக்கும். தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் உள்ள கணக்கில் இந்நிதிப்பணம் வைத்து வரப்படும். இந்நிதியில் இருந்து மருத்துவமனைக் கட்டடங்களைப் பழுது பார்த்தலும், பராமரிப்பும், மரச்சாமான்கள், தளவாடங்கள், மின் விளக்குகள், மின் விசிறிகள் அமைத்தல், கழிவறை வசதிகள் போன்ற தேவைகளை மருத்துவமனையளவிலேயே உடனுக்குடன் நிறைவேற்றிக்கொள்ள இந்நிதி வழி வகை செய்யும்.

12. சென்னையிலுள்ள அரசு மருத்துவமனைகளில் உலக வங்கி உதவியுடன் ரூ. 5.56 கோடி செலவில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பணித் திட்டம் ஒன்று அண்மையில் ஏற்பளிக் கப்பட்டுள்ளது. விபத்துக்குட்பட்டவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிப்பதற்கான மையங்களான குழந்தைகள் மருத்துவமனை, எழும்பூர், கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, இராயப்பேட்டை மருத்துவமனை ஆகியவற்றில் கூடுதல் கட்டட வசதிக்காக ரூ. 2.75 கோடி செலவிடப்படும். விபத்துக்குள் ளானவர்களை முதற்கண் ஏற்கும் மையங்களாகச் செயல்பட விருக்கும் அண்ணாநகர், கே.கே. நகர், தண்டையார்பேட்டை, பெரம்பூர், சைதாப்பேட்டை ஆகிய புறநகர மருத்துவமனை களில் மொத்தம் ரூ. 1 கோடி செலவில் கூடுதல் கட்டட வசதி செய்யப்படும். தேவையான தளவாடங்கள், ஊர்திகள் வாங்கிட வும் இத்திட்டம் வகை செய்துள்ளது.

13. தமிழ்நாட்டில் எய்ட்ஸ் நோய்த் தடுப்பு ஆராய்ச்சி செய் திட சென்னை மருத்துவக் கல்லூரியில் எய்ட்ஸ் கண்காணிப்பு மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இரத்த தானம் செய்பவர் களுடைய இரத்தத்தைச் சோதனை செய்வதற்கு இரத்த வங்கி களில் எலிசா ரீடர் கருவிகள் அமைக்கப்பட்டுள்ளன. தள வாடங்கள் வாங்க ரூ. 12 இலட்சம், இரத்த வங்கிக்கு ரூ. 3 இலட்சம் ஆக மொத்தம் ரூ. 15 இலட்சம் மைய அரசு ஏற்பளித் துள்ளது. 1991-92 ஆம் ஆண்டு எய்ட்ஸ் பற்றிய சுகாதாரக் கல்விக்கு ரூ. 15 இலட்சம் மைய அரசு ஏற்பளித்துள்ளது. வரும் நிதியாண்டில் திருச்சி, தர்மபுரி, தூத்துக்குடி, கடலூர், திண்டுக் கல், ஆகிய மாவட்டத்தலைமையிட மருத்துவமனைகளில் எய்ட்ஸ்

கண்காணிப்பு மையங்கள் நிறுவப்பட இருக்கின்றன. அவை ஒவ்வொன்றிலும் ஒரு மைக்ரோ பயாலாஜிஸ்ட் பணியிடம் ஏற்படுத்தப்படும். இம்மையங்கள் ''எய்ட்ஸ்''-க்காக ரத்தத்தைப் பரிசீலித்து முடிவு தெரிவிக்கும்.

**பார்வையின்மைத் தடுப்புக்கான தேசியத் திட்டம் :**

14. தேசிய சுகாதாரக் கொள்கையின் குறிக்கோள் இந்தியாவில் கி.பி. 2000-த்தில் கண் பார்வையற்றோர் எண்ணிக்கை 1.5 சதவீதத்திலிருந்து 0.3 சதவீதமாக குறைக்கப்பட வேண்டும் என்பதாகும். 1991-92-ல் அரசு இலவச கண் அறுவை சிகிச்சை முகாம்களுக்காகவும், ஏனைய கண் பார்வையின்மைத் தடுப்பு நடவடிக்கைகளுக்கும் மாநில அரசுப் பணத்திலிருந்து செலவிட ரூ. 1 கோடிக்கு மேல் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், இதுபற்றிய மைய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின் கீழ் இம்மாநிலத்திற்கு 1991-92-ல் ரூ. 79 இலட்சம் நிதியுதவி வழங்கப்படும். சுகாதாரத்துறை இயக்கங்கள் செயல்படுத்தும் கண்பார்வையின்மைத் தடுப்புத் திட்டங்களையும் மருத்துவக் கல்வி கூடுதல் இயக்குநர் கண்காணித்து வருகிறார். பிற

15. பயிற்றுவிக்கும் மருத்துவ மனைகள் மற்றும் மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில் கண் சிகிச்சைப் பிரிவுகள் உள்ளன. அங்கு சிவில் சர்ஜன்கள், சார் பணியாளர்களுடன் பணியாற்றி வருகின்றனர். மாநில நடமாடும் கண் சிகிச்சை பிரிவுகள் 8, மாவட்ட நடமாடும் கண் சிகிச்சைப்பிரிவுகள் 7-ம் இம்மாநிலத்தில் கண்புரை நோய் அறுவை சிகிச்சை இலக்கை எய்த உதவி வருகின்றன. 1991-92 ஆம் ஆண்டில் மாவட்ட நடமாடும் கண் சிகிச்சை பிரிவுகள் மேலும் சில அமைக்கப்படும். ஆண்டு தோறும் கண்புரை சிகிச்சை எண்ணிக்கை குறித்து இம்மாநிலத்திற்கு மைய அரசு குறிப்பிடும் இலக்கிற்கு அதிகமாகவே சாதனை நிகழ்ந்துள்ளது. இம்மாநிலத்திலுள்ள தனியார் அமைப்புகளும் இவ்வகையில் உதவி வருகின்றன. 1990-91-ல் மொத்தம் 1,08,317 கண்புரை அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன.

16. ஆரம்ப சுகாதார நிலையங்கள் 162-ல் ஒவ்வொன்றிலும் தகுதி பெற்ற கண் சிகிச்சை உதவியாளர் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் கண் பாதுகாப்பு சிகிச்சை அளிப்பதுடன் கண் நோய் தடுப்பு பற்றிய செய்திகளைக் கிராமப்புற மக்களிடம் பரப்பவும் உதவுகின்றனர். 1991-92-ல் மேலும் 20 ஆரம்ப சுகாதார நிலையங்களில் கண் சிகிச்சை உதவியாளர்கள் நியமிக்கப்படுவார்கள்.

17. 1989-90 ஆம் ஆண்டில் சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை, செங்கை-எம்.ஜி.ஆர். ஆகிய நான்கு மாவட்டங்களை கண்புரை நோய் நீக்கப்பட்ட மாவட்டங்களாக மாற்றும் திட்டம் தொடங்கப்பட்டது. அறுவை சிகிச்சை செய்யக்கூடிய கண்புரை நோய் உடையவர்கள் அனைவருக்கும் முதல் மூன்று மாவட்டங்களில் சிகிச்சை அளிக்கப்பட்டு விட்டது. இத்திட்டம், தென்னாற்காடு, தஞ்சாவூர், நெல்லை-கட்டபொம்மன் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நான்கு மாவட்டங்களுக்கும் விரிவாக்கப்பட்டது. நெல்லை-கட்டபொம்மன், கோயம்புத்தூர் ஆகிய இரண்டு மாவட்டங்களிலும் அறுவை சிகிச்சை செய்யக் கூடிய அனைவருக்கும் கண்புரை சிகிச்சை அளிக்கப்பட்டுவிட்டது.



18. 1990-91 ஆம் ஆண்டில் கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஒரு கண் வங்கி நிறுவ ஏற்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

19. மத்திய அரசினால் ''முன்னோடி மாவட்டம்'' ஆகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சேலம் மாவட்டத்தில் கண் நோய் தடுப்புக்கான பல்வேறு புதிய பணிகளும் எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிறைவேற்றப்படும். சேலம் மாவட்ட ஆட்சியாளர் தலைமையின் கீழ் மாவட்ட கண்நோய் தடுப்புச் சங்கம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அச்சங்கத்திற்கு 1990-91 ஆம் ஆண்டில் ரூ. 16 இலட்சம் மைய அரசு மானியம் தந்தது. 1991-92 ஆம் ஆண்டில் மேலும் ரூ. 16 இலட்சம் அச்சங்கத்திற்கு மைய அரசு தரும். இத்திட்டத்தை ஒருங்கிணைத்துக் கண்காணிப்பதற்கு டானிடா-வால் சேலத்தில் ஒருங்கிணைப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

**கிங் நிலையம் :**

20. இந்தியாவில் உள்ள கிங் தடுப்பு மருந்து தயாரிப்பு நிலையம் வாக்சைன் மற்றும் சீரம் (Serum) ஆகியவற்றைத் தயாரிக்கும் முதன்மை வாய்ந்த சுகாதார ஆய்வுக் கூடமாக செயல்படுகிறது. அது பயிற்சி, ஆராய்ச்சி ஆகியவற்றிலும் ஈடுபட்டுள்ளது. காலரா தடுப்பு மருந்து, காசநோய் தடுப்பு மருந்து, நாய்க்கடிக்கான ஊசி ஆகியவற்றை இம்மாநிலத்தின் தேவைக்காக தயாரித்து வருவதோடு பிற மாநிலங்களின் தேவைகளையும் இந்நிலையம் பூர்த்தி செய்து வருகிறது. இந்நிலையப்பணியாளர் எண்ணிக்கை சுமார் 700 ஆகும். 1991–92ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் இந்நிலையத்திற்காக ரூ. 2.81 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. பாம்பு நச்சு முறிவு சீரம் உற்பத்தி பெருக்குவதற்கான தளவாடங்கள் முதலியவை வாங்கிட 1991-92 ஆம் ஆண்டில் ரூ. 18 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

[1991 செப்டம்பர் 16

**ஸ்ரீராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியும் ஆய்வு நிலையமும் :**

21. ஸ்ரீராமச்சந்திரா மருத்துவக் கல் ரியும் ஆய்வு நிலைய
மும் 1985 ஆம் ஆண்டு ஸ்ரீராமச்சந்திரா கல்வி மற்றும் சுகாதார
டிரஸ்ட்டால் நிறுவப்பட்டது. இக்கல்லூரியும், மருத்துவ
மனையும் 9.6 இலட்சம் சதுர அடி பரப்பளவுள்ள கட்டிடங்களில்
செயல்படுகின்றன. இம்மருத்துவமனையையும் கல்லூரியை
யும் ஏனைய பிரிவுகளுடன் தமிழ்நாடு அரசு 1—7—1989-ல்
மேற்கொண்டது. அரசுப் பணியிலிருந்து மாற்றுப் பணியில்
அனுப்பப்பட்ட சிறப்பு அதிகாரி (நிர்வாக இயக்குநர்), நிதிக்
கட்டுப்பாட்டு அதிகாரி, கல்லூரி மற்றும் மருத்துவமனை முதல்வர்
ஆகியோர் இந்நிறுவனத்தின் நிருவாகத்தை கவனித்து வருகின்
றனர். இந்நிறுவனம் 19—1—1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு
சங்கங்கள் பதிவு சட்டத்தின் கீழ் தன்னுரிமை பெற்ற சங்கமாக
பதிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கு ஆட்சி மன்றம் மற்றும்
நிருவாக குழு ஆகியவையும் அமைக்கப்பட்டுள்ளன. 1990-91
ஆம் ஆண்டில் இக்கல்லூரியில் மருத்துவ மாணவர் தேர்வுக்
குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட 100 மாணவர்கள் அனுமதிக்கப்
பட்டனர். 1991-92 ஆம் ஆண்டில் நிதி நிலை அறிக்கையில்
இந்நிறுவனத்திற்கு மானியமாக ரூ. 7.50 கோடி ஒதுக்கப்பட்டு
உள்ளது.

22. இம்மருத்துவமனையில் 500 உள் நோயாளிகள் தங்கி
சிகிச்சை பெற வகை செய்யப்பட்டுள்ளது. 1990-ல் சிகிச்சை
பெற்ற புறநிலை நோயாளிகள் 3.40 லட்சம் பேர், அவ்வாண்டு
இம்மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவு 7,500
நோயாளிகளைக் கவனித்தது. நோயாளிகளுக்கு வெந்நீர் தருவ
தற்கு இம்மருத்துவ மனையின் மாடியில் சூரிய வெப்பத்தால்
நீரைச் சூடாக்கும் கருவிகள் அமைக்கப்பட்டுள்ளன.

23. கிராமப்புற மற்றும் நகர்ப்புற சுகாதாரப் பயிற்சி
மையங்களாக இந்நிறுவனம் பயன்படுத்துவதற்கு என்று பூந்த
மல்லியில் உள்ள கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையமும், ஆதம்
பாக்கம் நகர்ப்புற சுகாதார மையமும் இந்நிறுவனத்தின் கட்டுப்
பாட்டின் கீழ் விடப்பட்டுள்ளன.

**தமிழ்நாடு டாக்டர் எம். ஜி. ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம் :**

24. தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்
கழகம் 1988 ஜூலை முதல் செயல்பட்டு வருகிறது. மருத்துவம்
மற்றும் மருத்துவம் சார்ந்த துறையில் கல்வியின் தரத்தினை
உயர்த்தும் பொருட்டு அமைக்கப்பெற்ற இப்பல்கலைக் கழகம்
மருத்துவ அறிவியல் ஆராய்ச்சியில் அகில உலகத் தரத்திற்கும்,
இந்தியத் தரத்திற்கும் இடையே வேகமாக வளர்ந்து கொண்டு
வரும் இடைவெளியை நிரப்பும் நோக்கம் கொண்டுள்ளது. இப்



1991 செப்டம்பர் 16]

பல்கலைக் கழகத்திற்கு 1988-89-ல் ரூ. 31 இலட்சம் மொத்த மானியமாகத் தரப்பட்டது. 1989-90-ல் ரூ. 80 இலட்சமும் 1990-91-ல் ரூ. 80 இலட்சமும் வழங்கப்பட்டன. இப்பல்கலைக் கழக நிர்வாக அலுவலகக் கட்டிடம் கட்டுவதற்காக மானியம் தர 1990-91-ல் அரசு இசைந்துள்ளது. இப்பல்கலைக் கழகத்துக்கு மானியம் தர 1991-92-ல் ரூ. 80 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

25. இப்பல்கலைக்கழகத்தின் நிர்வாக வளாகம் கட்டுவதற்காக முதற்கண் தாம்பரம் காசநோய் சானடோரியத்தின் காலி நிலம் 22.25 ஏக்கர்களை அரசு ஒதுக்கியுள்ளது. இந்நிலத்தில் நிர்வாக வளாகம் கட்டும் கருத்துருவையும் அரசு ஏற்றுள்ளது. மேலும் பொன்னேரி தாலுக்கா எருமைவெட்டிபாளையம் என்ற இடத்தில் 235 ஏக்கர் புறம்போக்கு நிலத்தினை இப்பல்கலைக் கழகத்தின் வருங்கால விரிவாக்கத்திற்காக வழங்கவும் ஒரு கருத்துரு ஆய்வில் உள்ளது.

26. இப்பல்கலைக் கழகத்துடன் 42 கல்வி நிறுவனங்கள் இணைக்கப்பட்டுள்ளன. கல்வித்தர வளர்ச்சிக்கான நடவடிக்கைகள் ஊக்குவிக்கப்பட்டுள்ளன. எம்.பி.பி.எஸ். பயிலும் மாணவர்களுடைய பயிற்சித் திட்டங்களை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. மக்கள் நல்வாழ்வு குறித்த பல்வேறு பணிகளில் ஈடுபட்டுள்ள பணியாளர்களுக்காக பயிற்சிப் பணிக்களரிகளையும், கருத்தரங்குகளையும் பல்கலைக் கழகம் அவ்வப்போது நடத்தி வருகிறது. தேர்வு முறைச் சீர்திருத்தங்கள் சிலவும் செய்யப்பட்டுள்ளன. பல்வேறு ஆராய்ச்சி அமைப்புகளையும் மையங்களையும் தொடங்குவதற்கும் பல்கலைக் கழகம் திட்டங்கள் வகுத்துள்ளது.

27. குறைந்தபட்ச அடிப்படை வசதிகளைக் கூட ஏற்படுத்தாமல் புதிய தனியார் மருத்துவக் கல்லூரிகள் தொடங்கும் போக்கு அன்மைக்காலத்தில் மிகவும் பெருகி உள்ளமையால் இத்தகைய நிறுவனங்களில் சேரும் மாணவர்களுக்கு இடர்கள் ஏற்படுகின்றன. இதற்குப் பரிகாரமாக இப்பல்கலைக் கழகச் சட்டம் 1990 சூலை மாதம் திருத்தப்பட்டுள்ளது. அத்திருத்தத்தின்படி எந்த ஒரு கல்லூரியும், அக்கல்லூரி அரசின் முன் அனுமதி பெற்று இருந்தாலொழிய இப்பல்கலைக் கழகத்துடன் இணைத்துக் கொள்ளப்படமாட்டாது. அவ்வாறு அரசின் அனுமதி பெறும் பொழுது அரசு குறிப்பிட்ட விதிகள் வரன்முறைகள் ஏதேனுமிருப்பின் அவற்றையும் நிறைவேற்றினால்தான் இணைப்புத்தர இயலும். அடிப்படை வசதிகளற்ற மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த கல்லூரிகள் பல்கிப் பெருகுவதைத் தடுப்பதற்கு இத்திருத்தம் வகை செய்கிறது.

டி2 53-298—34

[1991 செப்டம்பர் 16

III. மருந்துவம் மற்றும் ஊரக நல்வாழ்வுப் பணித்துறை ;

அண்மையில் செய்துள்ள நிருவாகச் சீரமைப்பின்படி மருத்
துவம் மற்றும் ஊரக நல்வாழ்வுப்பணி இயக்ககம் பயிற்றுவிக்கும்
மருத்துவமனைகள் தவிர பிற மருத்துவமனைகள் அனைத்துக்கும்
பொறுப்பு வகிப்பதோடு, குடும்பநலத் திட்டம் ஆரம்ப சுகாதார
நிலையங்கள் ஆகியவற்றுக்கும் ஒருங்கிணைந்த பொறுப்பு வகித்து
வருகிறது. வருவாய் மாவட்ட நிலையில் மருத்துவப் பணியி
லிருந்து நியமிக்கப்படும் மருத்துவம் ஊரக நல வாழ்வுப்பணி
இணை இயக்குநர் ஒருவர் முழுப்பொறுப்பு ஏற்று மருத்துவம்,
சுகாதாரம், குடும்பநலம், பார்வையின்மைத் தடுப்பு, காசநோய்
ஒழிப்பு, தொழுநோய் ஒழிப்பு உட்பட அனைத்துப் பணிகளையும்
கண்காணித்து வருகிறார். அப்பணிகள் சார்ந்த அனைத்துக்
கீழ்நிலை அலுவலர்களும் அவர் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு
வரப்பட்டுள்ளனர்.

2. மருத்துவம் ஊரக நல்வாழ்வுப் பணி இயக்குநரின்கீழ்
செயல்படும் மருத்துவமனைகள், அவற்றில் உள்ள படுக்கைகள்
ஆகியவற்றின் விவரம் வருமாறு :—

| | மருத்துவ மனைகள் எண்ணிக்கை | படுக்கைகள் எண்ணிக்கை |
|---|---|---|
| மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகள். | 19 | 6,516 |
| வட்டத் தலைமையிட மருத்துவ மனைகள். | 123 | 7,679 |
| வட்டத் தலைமையிடமல்லாத பிற இடங்களில் உள்ள மருத்துவ மனைகள். | 72 | 2,014 |
| காசநோய் மருத்துவமனை/சானிட்டோரியம். | 6 | 712 |
| தொழிலாளர் ஈட்டுறுதி திட்ட மருத்துவ மனைகள். | 7 | 1,749 |
| தொழிலாளர் ஈட்டுறுதி திட்ட மருந்தகங்களும் வலம்வரும் மருந்தகங்களும். | 146 | .. |
| தொழுநோய் கட்டுப்பாட்டு மையங்கள். | 105 | .. |
| அரசு மருந்தகங்களும் வலம்வரும் பிரிவுகளும். | 24 | .. |
| | 502 | 18,670 |

(ஆரம்ப சுகாதார நிலையங்களைப் பற்றிய விவரங்கள் அடுத்த
இயலில் தரப்பட்டுள்ளன).



1991 செப்டம்பர் 16]

3. மேற்கண்ட மருத்துவ மனைகள் மூலம் 1990-91 இல்
பயன்பெற்றவர் விவரம் வருமாறு.

| | இலட்சங்களில். |
|---|---|
| சிகிச்சை அளிக்கப்பட்ட உள் நோயாளிகள் நாள்தோறும் சராசரி | 0.26 |
| சிகிச்சை அளிக்கப்பட்ட புறநிலை நோயாளிகள் நாள்தோறும் சராசரி. | 1.67 |
| செய்யப்பட்ட பெரும் அறுவை சிகிச்சைகள் ஆண்டு முழுவதும். | 0.95 |
| செய்யப்பட்ட சிறு அறுவை சிகிச்சைகள் ஆண்டு முழுவதும். | 1.79 |

4. மருத்துவப்பணிகள் மற்றும் ஊரக நல்வாழ்வுத்துறை
மருத்துவ மனைகளில் (ஆரம்ப சுகாதார) நிலையங்கள் தவிர
பணியாற்றும் பணியாளர்களின் விவரங்கள் வருமாறு :—

| | |
|---|---|
| சிவில் சர்ஜன்கள் (சிறப்பு வல்லுநர்கள்) | 217 |
| சிவில் சர்ஜன்கள் (பொது) | 222 |
| உதவி மருத்துவர்கள் | 2,795 |
| அமைச்சுப் பணியாளர்கள் | 1,279 |
| செவிலியர்கள் | 3,985 |
| மருத்துவ துணைப் பணியாளர்கள் | 8,934 |
| | 17,432 |

மாவட்டக் தலைமையிட மருத்துவ மனைகள் :

5. இந்த இயக்குநரகத்தின் கீழ் மாவட்டத் தலைமையிட
மருத்துவமனைகள் 19 உள்ளன. இம்மருத்துவமனைகளில் நவீன
மருத்துவ வசதிகளையும் உபகரணங்களையும் படிப்படியாக
அமைத்திட அரசு உத்தேசித்துள்ளது. அவ்வாறு இம்மருத்துவ

[1991 செப்டம்பர் 16

மனைகளில் 1991-92 ஆம் ஆண்டில் அமைக்கத் தொடங்கவிருக்கும் முக்கியமான வசதிகள் உபகரணங்கள் பற்றிய விவரங்கள் வருமாறு :—

| வசதிகள்/உபகரணங்கள். | ஏற்கனவே இவ்வசதிகள் உள்ள தலைமையிட மருத்துவ மனைகளின் எண்ணிக்கை. | 1991-92இல் புதிதாக இவ்வசதிகள் ஏற்படுத்தப்படவிருக்கும் தலைமையிட மருத்துவ மனைகளின் எண்ணிக்கை. |
| --- | --- | --- |
| (1) | (2) | (3) |
| 1. தீவிர இருதய கவனிப்புப் பிரிவு. | 14 | 5 |
| 2. விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு. | 16 | 3 |
| 3. அல்ட்ரா சவுண்ட் ஸ்கேனர் | 7 | 5 |
| 4. அர்த்ராஸ்கோப் | — | 10 |
| 5. 300 எம்ஏ-எக்ஸ்ரே வசதிகள் | 3 | 16 |
| 6. சாதாரண சமையல் கூடங்களை எரிவாயு உபயோகப் படுத்த மாற்றம். | 2 | 17 |
| 7. நீராவிச் சலவை வசதி | | |
| 8. ஆடியோ மீட்டர் | 3 | 16 |
| 9. மின் அதிர்ச்சி வைத்தியம் | .. | 19 |
| 10. சீர்வளிசெய்த அறுவை அரங்கங்கள். | .. | 19 |
| | 11 | 3 |

6. விருதுநகர், சிவகங்கை, திருவண்ணாமலை மற்றும் பெரியகுளம் மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் ஒவ்வொன்றிலும் படுக்கை வசதிகள் 200-க்கும் குறைவாக உள்ளன. 1991-92 ஆம் ஆண்டு விருதுநகர், திருவண்ணாமலை மருத்துவமனைகளில் படுக்கை வசதிகளை 200 அளவுக்கு அதிகரிப்பதற்குத் தேவையான கட்டுமானப்பணி துவக்கப்படும்.



1991 செப்டம்பர் 16]

வட்ட மருத்துவமனைகள் :

7. தமிழ்நாட்டில் உள்ள 171 வட்டங்களில், 156 வட்டங்களில் ஏற்கெனவே மருத்துவமனைகள்/தலைமையிட மருத்துவ மனைகள்/பயிற்றுவிக்கும் மருத்துவமனைகள் உள்ளன. 1991–92-ல் மீதமுள்ள 15 வட்டங்களில் உள்ள ஆரம்ப சுகாதார மையங்கள்/சமூக சுகாதார மையங்களை மேன்மைப் படுத்தி வட்ட மருத்துவமனைகளாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அவற்றின் விவரங்கள் வருமாறு :—

| மாவட்டம். | ஆரம்ப சுகாதார மையங்கள்/ சமூக சுகாதார மையங்கள். |
| --- | --- |
| (1) | (2) |
| செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். | கும்மிடிப்பூண்டி |
| செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். | பள்ளிப்பட்டு |
| தஞ்சாவூர் | திருவையாறு |
| தஞ்சாவூர் | வேதாரண்யம் (சமூக சுகாதார மையம்) |
| புதுக்கோட்டை | ஆவுடையார்கோவில் |
| புதுக்கோட்டை | கந்தர்வகோட்டை |
| மதுரை | ஆண்டிப்பட்டி |
| மதுரை | வாடிப்பட்டி |
| நெல்லை—கட்டபொம்மன் | சிவகிரி |
| திண்டுக்கல்-அண்ணா | வேடசந்தூர் |
| காமராஜர் | திருச்சுழி (சமூக சுகாதார மையம்) |
| தர்மபுரி | பெண்ணாகரம் |
| பெரியார் | பெருந்துறை |
| தென்னாற்காடு | வானூர் |
| திண்டுக்கல்-அண்ணா | நத்தம் |

8. தற்போதுள்ள வட்ட மருத்துவமனைகளில் விவரம் படுக்கை வசதிகள் எண்ணிக்கைப்படி பின்வருமாறு உள்ளது :—

| 32 படுக்கைகளுக்குக் குறைவு. | 32–49 | 50–100 | 100க்கு மேல் படுக்கைகள். | மொத்தம். |
| --- | --- | --- | --- | --- |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 28 | 28 | 45 | 22 | 123 |

32 படுக்கை வசதிகளுக்குக் குறைவாக உள்ள 28 வட்ட மருத்துவமனைகள் அனைத்தும் இரண்டு கட்டங்களில் 32 படுக்கை வசதி கொண்டவையாக உயர்த்தப்படவிருக்கின்றன.

[1991 செப்டம்பர் 16

1991–92ஆம் ஆண்டில் அவற்றில் கீழ்க்கண்ட 14 வட்ட மருத்துவமனைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு மொத்தம் 222 படுக்கை வசதிகள் கூடுதலாக ஏற்படுத்தும் பணி தொடங்கப் படும்:—

| மாவட்டம். (1) | வட்ட மருத்துவமனை. (2) |
|---|---|
| செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். | செய்யூர் |
| செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். | உத்திரமேரூர் |
| வடார்க்காடு-அம்பேத்கார் | ஆர்க்காடு |
| தென்னார்க்காடு | திட்டக்குடி |
| தர்மபுரி | ஊத்தங்கரை |
| தர்மபுரி | பாலக்கோடு |
| கோயம்புத்தூர் | வால்பாறை |
| கோயம்புத்தூர் | அவினாசி |
| திருச்சிராப்பள்ளி | உடையார்பாளையம் |
| புதுக்கோட்டை | கீரனூர் |
| தஞ்சாவூர் | பாபநாசம் |
| தஞ்சாவூர் | குடவாசல் |
| சிதம்பரனார் | ஒட்டப்பிடாரம் |
| சிதம்பரனார் | சாத்தான்குளம் |

9. கிருஷ்ணகிரி, மயிலாடுதுறை, ராசபாளையம், விருத்தாசலம், சங்கரன்கோயில் ஆகிய அரசு மருத்துவமனைகளில் 1991-92-ல் கண் மருத்துவப் பிரிவுகள் தொடங்கப்படும்.

10. சாத்தூர் (காமராசர் மாவட்டம்) மயிலாடுதுறை, பேராவூரணி மற்றும் நாகப்பட்டினம் அரசு மருத்துவமனைகளில் புதியதாக கட்டப்பட்டுள்ள வார்டுகளுக்கும், தர்மபுரி மாவட்டம் ஊத்தங்கரை அரசு மருத்துவமனையில் புதிதாகக் கட்டப் பட்டுள்ள எக்ஸ்-ரே பிரிவுக்கும் தேவையான பணியாளர்களும் உபகரணங்களும் 1991-92-ல் ஏற்பளிக்கப்படும்.

**பழங்குடிகள் சார் திட்டம் :**

11. இம்மாநிலத்தின் பல்வேறு பாகங்களில் வசிக்கும் பழங் குடி மக்களின் முன்னேற்றத்திற்காக பல்வகைச் சிறப்புத் திட்டங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. பழங்குடி மக்களின் மருத்துவ வசதிக்காக (திருச்சி, சேலம் மாவட்டங்களில்) பச்சமலை; (திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில்) ஐவ்வாது மலை; (தென்னாற்காட்டில்) கல்ராயன்மலை ஆகிய வற்றில் பழங்குடியினர் மருந்தகங்கள் ஐந்து தொடங்கப்பட் டுள்ளன. பழங்குடி மக்களின் மருத்துவ வசதிக்காக வலம் வரும் மருத்துவப் பிரிவுகளும் இருக்கின்றன.



1991 செப்டம்பர் 16]

**மலைப்பகுதி முன்னேற்றத் திட்டம்:**

12. 1990-91ஆம் ஆண்டில் ரூ. 18 இலட்சம் செலவில் கோத்தகிரி மற்றும் கடலூர் அரசு மருத்துவமனைகளில் பத்து படுக்கை வசதிகள் கொண்ட குழந்தைகள் நலப் பிரிவு தொடங்குவதற்கான கட்டிடப் பணிக்கு ஏற்பளிக்கப்பட்டது. 1991-92–ல் குன்னூர் அரசு மருத்துவமனையிலும் அத்தகைய 10 படுக்கை வசதிகள் கொண்ட குழந்தைகள் நலப் பிரிவுக் கட்டிடம் கட்ட ஏற்பளிக்கப்படும்.

**விபத்து மற்றும் அவசர சிகிச்சை மருத்துவப் பணிகள் திட்டம்:**

13. இத்திட்டம் கிராமப்புறங்களில் விபத்துக்குள்ளானவர் களுக்கு உடனடியாக தீவிர மருத்துவ சிகிச்சை அளிப்பதற்காக உருவானதாகும். விபத்து மற்றும் அவசர சிகிச்சை மருத்துவப் பணிகள் மூன்று நிலைகளில் அளிக்கப்படுகிறது. ஆரம்ப சுகாதார நிலையங்கள் அண்மையில் உள்ள உடனடி முதலுதவி நிலையமாகச் செயல்பட்டு சிறு காரியங்களைக் கவனித்து சிகிச்சை அளிக்கின்றன. வட்ட மற்றும் மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகள் மிகுந்த காயம் பட்டவர்களை ஏற்று சிகிச்சை/ முதல் நிலை சிகிச்சை அளித்து தேவையானால் பயிற்றுவிக்கும் மருத்துவமனைகளுக்கு அவர்களை அனுப்பி வைக்கின்றன. பயிற்றுவிக்கும் மருத்துவமனைகளில் எலும்பு முறிவு சிகிச்சை, நரம்பியல் அறுவை, உடல் தோற்றம் பொலிவு அறுவை ; மார் பியல் சர்ஜரி மற்றும் ஜெனிடோ யூரினரி அறுவை போன்ற சிறப்புச் சிகிச்சைகள் தேவைக்கேற்ப மேற்கொள்ளப்படு கின்றன. இத்திட்டம் 1979-80-ல் முதலில் தொடங்கப்பெற்று படிப்படியாக விரிவாக்கப்பட்டு தற்பொழுது கீழ்க்கண்ட மருத் துவமனைகளில் செயல்படுகிறது :—

| | | |
|---|---|---|
| ஆரம்ப சுகாதார நிலையம் | .. | 389 |
| மாவட்டத் தலைமையிட மருத்துவமனை | .. | 16 |
| வட்ட மருத்துவமனை | .. | 20 |
| மருத்துவக் கல்லூரி மருத்துவமனை | .. | 3 |
| மொத்தம் | .. | 428 |

இத்திட்டத்தின் கீழ் 24 மணி நேரமும் சிகிச்சை அளிக்கப்படு கின்றது. மாவட்டத் தலைமையிட மருத்துவமனை மற்றும் வட்ட மருத்துவமனையில் 10 படுக்கை வசதிகள் கொண்ட விபத்துப் பிரிவுகளும் மதுரை, திருநெல்வேலி மற்றும் கோயம் புத்தூரில் உள்ள மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் 30 படுக்கை வசதிகள் கொண்ட விபத்துப் பிரிவுகளும் உள்ளன.

[1991 செப்டம்பர் 16

விபத்துப் பிரிவு இதுவரை இல்லாத மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகள் வேலூர், காஞ்சீபுரம், விருதுநகர் ஆகிய மூன்றிலும் 1991-92-ல் விபத்துப் பிரிவு தொடங்கிட ஏற்பளிக்கப்படும்.

காசநோய்த் தடுப்பு :

14. தமிழ்நாட்டில் சுமார் பத்து இலட்சம் காச நோயாளிகள் இருக்கின்றனர். அவர்களில் சுமார் 2.50 இலட்சம் தொற்று நோயாளிகள். எல்லா மாவட்டங்களிலும் காசநோய் தடுப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. மாநிலத்தில் தனியார் மருத்துவமனைகளையும் சேர்த்து காசநோய் மருத்துவ நிலையங்கள் / சானடோரியங்கள் 10 இருக்கின்றன. அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் அனைத்திலும் காசநோய் உள்ளதா என்று கண்டறிந்து அந்நோய் இருந்தால் உரிய மருந்துகளை அளிப்பதற்கான வசதிகள் உள்ளன. இந்நோய்க்காக அவசர தீவிர சிகிச்சை செய்திட காசநோய் நோயாளிகளுக்கென தனிப் படுக்கை வசதிப் பிரிவுகள் எல்லா மாவட்டங்களிலும் இருக்கின்றன. அவற்றில் மொத்தம் 3,630 காசநோய் தனிப் படுக்கைகள் இருக்கின்றன.

15. மாநில அளவில் இணை இயக்குநர் தரத்தில் முழுநேர அதிகாரி ஒருவர் காசநோய் தடுப்புப் பணிகளை ஒருங்கிணைந்து மேற்பார்வையிட்டு வருகின்றார். மாவட்ட அளவில் சிவில் சர்ஜன் சிறப்பு வல்லுநர் தரத்தில் மாவட்ட காசநோய் அதிகாரி ஒருவர் ஒவ்வொரு மாவட்ட காசநோய் மையத்திற்கும் தலைமை ஏற்றுள்ளார். காசநோய்த் தடுப்பு மருந்துச் செலவையும், உபகரணங்கள் வாங்குவதற்கான செலவையும் மாநில அரசும் நடுவண் அரசும் 50 : 50 என்ற அடிப்படையில் ஏற்கின்றன. காசநோய் மருத்துவ நிலையங்களை நடத்தும் முழுச் செலவையும் மாநில அரசே ஏற்று வருகின்றது. காசநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளை புதியதாகக் கண்டறிவதற்கான இலக்கு 1990-91-ம் ஆண்டில் 1.15 இலட்சமாக நிர்ணயிக்கப்பட்டு அது நிறைவேற்றப்பட்டது. 1991-92ஆம் ஆண்டிற்கான காசநோய் தடுப்புப் பணிகளுக்கான மொத்த நிதி ஒதுக்கீடு ரூ. 4.46 கோடியாகும். 1,000-க்கு மேற்பட்ட பணியாளர்கள் காசநோய் தடுப்புத் திட்டத்தின்கீழ் பணியாற்றி வருகின்றனர்.

தொழுநோய் ஒழிப்புத் திட்டம் :

16. தொழுநோய் மிக அதிகமாக காணப்படும் மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். கி.பி. 2000 ஆண்டில் தொழுநோயை முற்றிலுமாக ஒழித்து விடவேண்டும் என்ற இலக்குடன் செயல்படும் தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. நீலகிரி மாவட்டம்



1991 செப்டம்பர் 16]

நீங்கலாக மற்ற மாவட்டங்களில் தொழுநோய் தடுப்பில் ஆற்றல் வாய்ந்த பல்வகை மருந்து சிகிச்சை (லேம்ப்ரீன் மற்றும் ரிபாம்பிசின்) செயற்படுத்தப்பட்டு வருகின்றது. 1991-92-ல் தொழுநோய் ஒழிப்பிற்காக 14 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தொழுநோய் தடுப்புப் பணியாளர்கள் மொத்தம் எண்ணிக்கை 4,300 ஆகும். 2,300 தொழுநோய் ஆய்வாளர்கள் உட்பட 1990—91-ம் ஆண்டில் இத்திட்டத்தில் எய்திய சாதனை பின்வருமாறு :—

| | | |
|---|---|---|
| தொழுநோயாளிகள் என கண்டறியப்பட்டவர் | .. | 84,213 |
| புதிதாகச் சிகிச்சைக்காக கொணரப்பட்டவர் | ... | 81,017 |
| முற்றிலும் குணமானவர்கள் | — | 1,08,492 |

தொழுநோய் மிகுதியதாக உள்ள அனைத்து மாவட்டங்களிலும் பல்வகை மருத்துவ சிகிச்சை திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதால் கி.பி. 2000-க்குள் தமிழ்நாட்டில் தொழுநோயை முற்றிலும் ஒழிக்கும் இலக்கு நிறைவேற்ற இயலும் எனக் கருதப்படுகிறது.

[1991 செப்டம்பர் 16

## VI. ஆரம்பச் சுகாதார நிலையங்கள்.

கிராமப் பகுதிகளில் '' அனைவருக்கும் நல்வாழ்வு '' என்ற
இலக்கை அடைவதற்காக ஆரம்ப சுகாதார நிலையங்கள் (சமு
தாய சுகாதார நிலையங்கள் உட்பட) சுகாதாரத் துணை நிலை
யங்கள் ஆகியவை மூலமாக சுகாதாரப் பணிகளை மேம்படுத்துதல்,
நோய் வராமல் தடுத்தல், நோய் தீர்த்தல், புதுவாழ்வு அளித்தல்,
குடும்ப நலப் பணிகளை அளித்தல் போன்ற சுகாதாரப் பணிகள்
விரிவுபடுத்தப்படுகின்றன. தற்பொழுது ஆரம்ப சுகாதார நிலை
யங்கள் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணி இயக்குநரகத்தின்
கீழ் செயல்பட்டு வருகின்றன. தமிழகத்தில் மூலை முடுக்குகளி
லுள்ள அனைத்து கிராமப் பகுதிகளுக்கு மருத்துவ வசதி
ஏற்பாடுகளைச் செய்து கொடுப்பது இவ்வரசின் குறிக்கோளாகும்.

2. தமிழகத்தில் இதுவரை 1,429 ஆரம்பச் சுகாதார நிலை
யங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. (72 சமுதாய சுகாதார நிலை
யங்கள்உட்பட) 1990-91ஆம் ஆண்டில் 43 ஊராட்சி ஒன்றிய
மருந்தகங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்களாக நிலை உயர்த்
தப்பட்டன மொத்தமுள்ள 1,429 ஆரம்ப சுகாதார நிலை
யங்களில் 23 ஆரம்ப சுகாதார நிலையங்களும், 2 சமுதாய சுகா
தார நிலையங்களும் பழங்குடி மக்கள் வாழ் பகுதியில் செயல்
படுகின்றன. 1991-92 ஆம் ஆண்டில் மேலும் 76 ஆரம்ப சுகா
தார நிலையங்களை ஏற்படுத்த இருப்பதால், தமிழகத்தில்
மொத்தம் 1,505 ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைய இருக்
கின்றன. சமவெளிப் பகுதியாயின் 30,000 மக்களுக்கும் மலைப்
பகுதியாயின் 20,000 மக்களுக்கும் ஒரு ஆரம்ப சுகாதார நிலை
யம் அமைக்கப்பட வேண்டும் என்ற மைய அரசின் இலக்கையும்
இம்மாநிலம் தாண்டிவிட்டது. தற்பொழுது 8,681 சுகாதாரத்
துணை நிலையங்கள் உள்ளன. சமவெளிப் பகுதியாயின் 5,000
மக்களுக்கும் மலைப் பகுதியாயின் 3,000 மக்களுக்கும் ஒரு சுகா
தாரத் துணை நிலையம் நிறுவப்பட வேண்டும் என்ற மைய
அரசின் இலக்கை இம்மாநிலம் எய்தி விட்டது. இச்சுகாதார நிலை
யங்கள் மக்களுக்கு அளிக்கும் நோய் தடுப்புச் சுகாதாரப் பணி
கள் குறித்த விவரங்களை அதுபற்றிய அத்தியாயத்தில் காண
லாம்.

3. '' அடிப்படைத் தேவைத் திட்டத்தின் '' கீழ்
ஒரு இலட்சம் மக்கட் தொகையுள்ள பகுதிக்கு ஒரு சமுதாய
சுகாதார நிலையம் அல்லது தரம் உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகா
தார நிலையம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற திட்டம் படிப்
படியாகச் செயற்படுத்தப்படும். இதுவரை 72 சமுதாய சுகா
தார நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன (எண்பதுகளின் உயர்த்
தப்பட்ட 30 ஆரம்ப சுகாதார நிலையங்கள் உட்பட). இவை
களில் சிவில் மருத்துவர் ஒருவரும் மருத்துவ பட்ட மேற்படிப்புத்
தகுதி பெற்ற மருத்துவர் ஒருவரும் (எம்.எஸ். பட்டம் பெற்றவர்



1991 செப்டம்பர் 16]

ஒருவர், மகளிர் நோய் மற்றும் மகப்பேறு பட்டயம் பெற்றவர்
ஒருவர்) பணிபுரிகிறார்கள். மேலும், இங்கு அறுவைச் சிகிச்சை
கூடம், எக்ஸ்ரே வசதி, நோய்க்குறி ஆய்வு மற்றும் உயிர் இயல்
ஆய்வுக்கூட வசதிகள், 24 படுக்கை வசதிகளைக் கொண்ட வார்டு
ஆகிய சிறப்புச் சுகாதார வசதிகள் அளிக்கப்படுகின்றன. இவை
கள் ஆரம்ப சுகாதார நிலையங்களிலிருந்து அனுப்பப்படும்
நோயாளிகளுக்கு சிறப்புச் சிகிச்சையளிக்கும் நிலையங்களாக
செயல்படுகின்றன. கடலாடியிலுள்ள சமூக சுகாதார நிலையம்
தவிர அனைத்து நிலையங்களுக்கும் கூடுதல் கட்டிடங்கள் கட்டி
முடிக்கப்பட்டு விட்டன. கடலாடி சமூக சுகாதார நிலையத்தில்
கூடுதல் கட்டிடம் கட்ட நிலம் ஒப்படைக்கப்படவுள்ளது.
சென்னிமலையிலுள்ள சுகாதார நிலையம் 1985-86 ஆம் ஆண்டில்
சமூக சுகாதார நிலையமாக நிலை உயர்த்தப்பட்டது. மேலும்
1987 ஆம் ஆண்டில் ஜூன் திங்களில் 8-20 படுக்கை வசதிகளை
கொண்ட வட்ட மருத்துவமனை அல்லாத 41 மருத்துவமனைகள்
மருத்துவத் துறையிடமிருந்து மாற்றப்பட்டு சமுதாயச் சுகா
தார நிலையங்களாக மாற்றப்பட்டன.

4. மருந்துகள் வாங்குவதற்கு ஆண்டுதோறும் ஒவ்வொரு
ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் ரூ. 30,000மும் ஒவ்வொரு
சமுதாய சுகாதார நிலையத்திற்கும் ரூ. 75,000 மும் அனுமதிக்கப்
பட்டு வந்தன. ஆரம்ப சுகாதார நிலையங்களில் அதிக அளவில்
மருந்துகள் கிடைக்க ஆண்டுக்கு ரூ. 30,000 என்பது ரூ. 40,000
ஆக உயர்த்தப்படுகிறது. இதனால் ஆண்டுக்கு ரூ. 1.5 கோடி
வீதம் கூடுதல் செலவு அரசுக்கு ஏற்படும்.

5. ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஆய்வக வசதிகளை மேம்
படுத்துவதற்காகக் கருவிகள் வாங்க கடந்த இரண்டு ஆண்டுகளில்
தலா ரூ. 6,000 வீதம் 700 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு
நிதி ஒதுக்கப்பட்டது. 1990-91-ல் சென்னிமலையிலும், ஆண்
டிப்பட்டியிலும் உள்ள சமுதாய சுகாதார நிலையங்களுக்கு
எக்ஸ்ரே கருவிகள் மற்றும் பிற கருவிகள் வாங்க ரூ. 14 இலட்சம்
ஏற்பளிக்கப்பட்டது.

6. 1990-91 ஆம் ஆண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களிலுள்ள
பணியாளர்களின் விவரம் வருமாறு :—

| | | |
|---|---|---|
| மருத்துவர் .. .. | 2,816 | (30 சிவில் சர்ஜன் மற்றும் 2,786 உதவி மருத்துவர்கள்). |
| செவிலியர் .. .. | 1,504 | |
| மருந்தாளுநர் .. .. | 1,460 | |
| மருத்துவம் சார்ந்த பணியாளர் | 3,712 | |
| பிற பணியாளர்கள் .. | 1,707 | |
| மொத்தம் .. .. | 11,199 | |

[1991 செப்டம்பர் 16

1989-90 இல் ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் சமுதாய சுகாதார நிலையங்களிலும் மொத்தம் 0,62 இலட்சம் அக நோயாளிகளுக்கும் 1.62 இலட்சம் புறநிலை நோயாளிகளுக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டது.

7. மாநிலத்திலுள்ள மொத்த ஆரம்ப சுகாதார நிலையங்களில் 562 நிலையங்களுக்கு மட்டும் மருந்தக கட்டிடங்கள் உள்ளன. 300க்கும் குறைவான ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவ அலுவலர்களுக்கும், மருத்துவம் சார்ந்த பணியாளர்களுக்கும் குடியிருப்பு வசதிகள் உள்ளன. 120 ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருந்தகத்துடன் கூடிய பணியாளர் குடியிருப்புகள் கட்டுவதற்காகக் கீழ்க்கண்ட செலவின விவரங் கொண்ட திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது :—

| | மொத்தச் செலவு. | நகர்ப்புற வீட்டு வசதி கடன் | மாநில அரசு பங்கு |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 120 ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடங்கள். | 749.09 | 561.82 | 187.27 |
| 120 மருத்துவ அலுவலர் குடியிருப்புகள். | 274.46 | 164.69 | 109.77 |

1990-91 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட கட்டுமானப் பணிகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

| | (செலவு ரூபாய் (இலட்சத்தில்) | |
|---|---|---|
| 10 ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியாளர் குடியிருப்புகளும் 20 ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருந்தகக் கட்டிடங்களும் கட்டுதல். | 54.40 | குடும்ப நலத்துறையின் பரிசுத் தொகையிலிருந்து) |
| 20 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மருந்தக கட்டடங்கள். | 52.00 | |
| 17 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மருந்தகக் கட்டிடங்கள் கட்டுதல். | 104.00 | (இதில் 50 விழுக்காடு நகர்ப்புற வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்திடமிருந்து கடன் பெற வேண்டும்.) |



1991 செப்டம்பர் 16]

8. குறிப்பாக கிராமப் பகுதிகளில் மருத்துவ வசதிகள் நன்முறையில் கிடைக்காமலிருக்கும் பிரச்சினையை அரசு உணர்ந்துள்ளது. கிராம மருத்துவமனைகளில் மருத்துவர்கள் பணியும் மருந்துகளும் போதுமான அளவில் கிடைக்க வேண்டும் என்று அரசு விரும்புகிறது. எனவே கிராமப் பகுதிகளில் மருத்துவர்களுடைய பணி நன்கு கிடைக்கும் வகையில் நிரு வாகக் கட்டுக்கோப்பு சீரமைக்கப்படுவதுடன் சிறப்பு மருத்துவ சேவையும் அங்கு கிடைக்க வகை செய்யப்படும். ஒதுக்குப்புற கிராமங்களிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணி செய்ய மருத்துவர்களுக்குத் தற்பொழுது அளிக்கப்படும் ஊக்கு விப்புகள் ஆய்வு செய்யப்பட்டு. தேவையானால் அதிகமான ஊக்குவிப்புகள் அளிக்கப்படும். ஆரம்ப சுகாதார நிலைய ஊர்திகளை அருகில் உள்ள பேருந்து நிற்குமிடத்திலிருந்து ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சென்று வருவதற்கு குறைந்த கட்டணத்தில் பயன்படுத்த மருத்துவர்கள் அனுமதிக் கப்படுவர். ஆரம்ப சுகாதார நிலையங்களில் கட்டாயமாக பணிபுரிய வேண்டும் என விதித்துள்ள கால அளவு முழுமையும் நன்கு பணி செய்யும்படி பார்த்துக் கொள்வதற்காக, பட்ட மேற்படிப்பிற்கு சேர்த்துக் கொள்வதற்காக ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒரு வருடப் பணிக் காலத்திற்கு இரண்டு மார்க்குகள் வீதம் வழங்கப்படுவதை மாற்றி மருத்துவர்கள் உண்மையிலேயே வருடத்திற்கு 280 நாட்கள் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணி புரிந்தால் மட்டுமே இரண்டு மார்க்கு என்று அமைக்கப்படும். விடுமுறை மற்றும் இதர வகையில் பணிக்கு வராத காலம் இந்த 280 நாட்களுக்கு கணக்கில் எடுக்கப்படமாட்டாது.

9. சத்துணவுக் கூடங்களின் வாயிலாக கிராமப் பகுதிகளில் சத்துணவு மற்றும் இதர சமுதாயப் பணிகள் மக்களுக்கு அளிக்கப்படும். கிராம சுகாதார செவிலியர்கள் சத்துணவுக் கூடங்களில் குறிப்பிட்ட நாட்களில் குறிப்பிட்ட நேரங்களில் வந்திருந்து மக்களுக்கு உள்ளூரிலேயே சுகாதாரச் சேவைகளைச் செய்வர்.

[1991 செப்டம்பர் 16

டானிடா உதவி பெறும் நல்வாழ்வுத் திட்டம்.

தேசிய நல்வாழ்வுக் கொள்கையின் அடிப்படையில், நல் வாழ்வு குடும்பநலப் பணிகளை ஒருங்கிணைந்த முறையில் செய்வதற்கான வசதிகளைப் பெருக்கவும், வலுப்படுத்தவும் நம்நாட்டின் குறிப்பிட்ட பகுதிகளில் அந்தந்தப் பகுதி நல் வாழ்வு மேம்பாட்டிற்கென்றே வகுக்கப்பட்ட திட்டங்கள் செயல்படுகின்றன. தற்பொழுது இத்தகைய திட்டங்கள் 15 மாநிலங்களில் மொத்தம் 67 மாவட்டங்களில் வெளிநாட்டு உதவியுடன் செயல்படுகின்றன. உதவி தரும் வெளிநாட்டு அமைப்புக்கள் உலக வங்கி, அமெரிக்க உதவி நிறுவனம் (USAID ) ODA இங்கிலாந்து, டென்மார்க் நாட்டு உதவி நிறுவனம் ( டானிடா) மக்கள் தொகைக் கட்டுப்பாட்டுக்கான ஐக்கிய நாடுகள் நிதி ( UNFPA ) ஆகியவையாகும். இத் திட்டங்களின் மொத்த முதலீடு சுமார் ரூ. 500 கோடியாகும். இவற்றின் நோக்கம் அந்தந்தப் பகுதியின் நல்வாழ்வு குடும்ப நலப் பணிகளுக்கான அமைப்புகளின் செயற்பாட்டை மேம் படுத்துவதும், தாய்சேய் நோய்கள், அந்நோய்களால் தாய்சேய் உயிரிழப்பு ஏற்படுதல் ஆகியவற்றைக் குறைப்பதும் ஆகும்.

(2) டானிடாவுடன் இந்திய அரசு 1—8—1981 அன்று செய்துகொண்ட ஒப்பந்தம் ஒன்றின்படி தமிழ்நாட்டில் சேலம், தென்னாற்காடு ஆகிய இரு மாவட்டங்களின் நல்வாழ்வு குடும்ப நலப்பணி மேம்பாட்டுக்கென்று டானிடா உதவி பெறும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவ்விரு மாவட்டங்களின் மக்கள் தொகை 88 இலட்சம். அம்மாவட் டங்களில் கிராமப்புறங்களில் நல்வாழ்வுப் பணிகளை விரிவு படுத்தவும், அப்பணிகளின் தரத்தை மேம்படுத்தவும் தொடங் கிய இத்திட்டத்தின் கீழ் 31—1—1989 முடிய மொத்தம் ரூ. 21.08 கோடி செலவிடப்பட்டது. இத்திட்டம் இரண்டாம் கட்டமாக 1—4—1989 முதல் 31—3—1992 முடிய 3 ஆண்டு களுக்கு மேலும் நீட்டிக்கப்பட்டுள்ளது. இம்மூன்று ஆண்டு களுக்கான ஒதுக்கீடு ரூ. 16.26 கோடி ஆகும்.

(3) முதற் கட்டத்தில் சுகாதாரத் துணை நிலையங்கள், 1,380லும், ஆரம்ப சுகாதார நிலையங்கள் 69-லும் உள்ள அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட்டதுடன் நல்வாழ்வுப் பணிகள் திறம்படச் செய்வதற்கான உபகரணங்களும் வழங்கப் பட்டன. நல்வாழ்வுப் பணியாளர்கள் 1,800 பேருக்கு பணியிடைப்பயிற்சி வழங்கப்பட்டு நல்வாழ்வுப் பணிகள் குறித்த அவர்கள் அறிவும், செயல் திறன்களும் மேம்படுத்தப் பட்டன. நல்வாழ்வு சார்ந்த புதிய திட்டங்கள் சிலநிறைவேற்றப்பட்டன.





கிராம மக்களுடன் நேரடி தொடர்புகள் மூலமாகவும் பொதுமக்கள் தொடர்பு பிரச்சார சாதனங்கள் மூலமாகவும் சமுதாயத்தினருக்கு நல்வாழ்வுக் கல்வி புகட்டப்பட்டது.

(4) 1989-92ஆம் ஆண்டுகளில் செயல்படும் இரண்டாம் கட்டத்திற்கான செலவு பின்வருமாறு ஏற்கப்படுகிறது.

| | சதவீதம். |
|---|---|
| டென்மார்க் அரசு (டானிடா) | 85 |
| இந்திய அரசின் பங்கு | 5 |
| மாநில அரசின் பங்கு | 10 |

1989-90-ல் ரூ. 2.18 கோடியும், 1990-91-ல் ரூ. 4.58 கோடியும் செலவிடப்பட்டன. 1991-92-க்கு அனுமதிக்கப் பட்டுள்ள ஒதுக்கீடு ரூ. 2.75 கோடியாகும்.

(5) பேறுகால சமயத்தில் இசிவு நோய் (டெட்டனஸ்) தொற்றாமல் தடுப்பதற்காக கருவுற்ற தாய்மார்களுக்குப் பிரசவம் பார்க்க பயன்படுத்திவிட்டுப் பின்னர் எறிந்துவிடக் கூடிய பொருள்கள் கொண்ட பைகள் ஆண்டு தோறும் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்றன. தொற்றுநோய் எதுவும் பற்றாமல் பிரசவம் பார்ப்பதற்கான பிரசவகாலப் பலகைகள் வழங்கப்படுகின்றன. பிறந்தவுடன் குழந்தைகள் மூச்சுத் திணறல் ஏற்பட்டு இறக்காமல் தடுக்க அம்பு ( Ambu ) பைகள் வழங்கப்படுகின்றன. குழந்தைகளுக்கு ஏற்படும் கடுமையான சுவாசக் கோளாறுகளைத் தடுப்பதற்கான மருந்துகள் தரப்படுகின்றன. சுகாதாரத் துணை நிலையங்கள் திறம்படச் செயலாற்றும் வகையில் ஆய்வகக் கூட வேதியியல் பொருள்கள், ஆய்வுக்குப் பயன்படும் வேதிப் பொருள்கள் தேவையான எழுதுபொருள்கள் ஆகியவை அவற்றுக்குத் தரப் பட்டுள்ளன.

(6) இன்றியமையாத மருந்துகள் உரிய காலத்தில் தட்டுப் பாடின்றி அனைத்து மருத்துவமனைகளிலும் நல்வாழ்வு மையங் களிலும் கிடைக்கச் செய்யும் வகையில் மருந்து விநியோக முறையைச் சீரமைக்கும் நோக்குடன் சேலத்திலும், கடலூரிலும் மொத்தம் ரூ. 25 இலட்சம் செலவில் மருந்துக் கிடங்குகள் கட்டப்படுகின்றன.

[1991 செப்டம்பர் 16

**மலைவாழ் மக்களின் சுகாதார நிலையை உயர்த்துதல் :**

(7) தென்னாற்காடு மாவட்டம் கல்ராயன்
வாழும் பழங்குடி மக்களின் சுகாதார நிலையை உயர்த்தும்
நோக்குடன் அடிப்படை சுகாதார வசதிகளையும், ஆரம்ப
சுகாதார நிலையப் பணிகளையும் திறம்படச் செய்வதற்காக
மொத்தம் ரூ. 79 இலட்சம் செலவில் முழுமையான சுகாதாரப்
பணித் திட்டம் ஒன்று ஏற்பளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்
தின் கீழ் சுகாதாரத் துணை நிலையங்கள் 10-க்குக் கட்டடங்
களும், சுகாதார மேற்பார்வையாளர் (மகளிர்) குடியிருப்புகளும்
குடிநீர் வசதியுடன் கட்டப்பட்டு வருகின்றன. சமவெளிப்
பகுதிகளைச் சார்ந்த சுகாதாரப் பணியாளர்கள், மலைப்
பகுதிகளில் தங்குவதில்லை. எனவே மலைப் பகுதியைச்சார்ந்த
பழங்குடியினப் பெண்களே தெரிந்தெடுக்கப்பட்டு பயிற்சி தரப்
பட்டு உதவி சுகாதாரப் பணியாளர்களாக நியமிக்கப்பட்டு,
அவர்கள் மூலமாகவே பழங்குடியினருக்கு சுகாதாரப் பணி
ஆற்றப்படுகிறது. தனியார் அமைப்பு ஒன்று இன்னாசி
என்னும் இடத்தில் சுகாதார மையம் ஒன்றை நடத்தி வருகிறது
அதற்கு டானிடா உதவி செய்து வருகிறது. மருந்துதக
கட்டிடம், மருத்துவர் இல்லங்கள் ஆகியவற்றுக்கு நிதி உதவி
தரப்படுகிறது. கரியலூரிலுள்ள 12 படுக்கைகள் கொண்ட
சமுதாய சுகாதார மையத்திற்கு அறுவை சிகிச்சை அரங்குகள்
மருத்துவர் குடியிருப்புகள், குடிநீர் வசதிகள் ஆகியவை ஏற்
பளிக்கப்பட்டுள்ளன.

**சமுதாயப் பங்கேற்புடன் சுகாதாரத் துணை மையங்களுக்குக் கட்டிடங்கள் :**

(8) சேலம், தென்னாற்காடு இரு
உள்ள 410 சுகாதாரத் துணை மையங்கள் மாவட்டங்களிலும்
ளின்றி வாடகைக் கட்டிடங்களில் செயல்பட்டு வருகின்றன. போதிய வசதிக
அவற்றுக்கு அடிப்படைக் கட்டிட வசதிகளைச் செய்து தரக்
கருதி 1989-90, 1990-91ஆம் ஆண்டுகளில் மொத்தம்
100 சுகாதாரத் துணை மையங்களுக்கு உள்ளூர் மக்கள்
பங்கேற்புடன் கட்டிட வேலை மேற்கொள்ளப்பட்டது.
எஞ்சியவை 1991-92-ல் எடுத்துக்கொள்ளப்படும்.
நிதியிலிருந்து சுகாதாரத் துணை மையக் கட்டிடம் ஒவ்வொன்
றுக்கும் ரூ. 90,000 வழங்கப்படுவதுடன் குடிநீர் வசதியும்
செய்து தரப்படுகிறது. உள்ளூர் மக்கள் நிலம், கட்டுமானப்
பொருள்கள், நிதி உதவி, உடலுழைப்பு, கட்டுமான வேலையை
மேற்பார்த்தல் ஆகிய வகைகளில் உதவுகின்றனர். இதன்
மூலம் மொத்தச் செலவு பாதி அளவு குறைகிறது. டானிடா



1991 செப்டம்பர் 16]

(9) சுகாதாரத் துணை மையங்கள் செயல்படும் பழைய
கட்டிடங்களைப் பேணிப் பராமரித்துவர பணம் அனுமதிக்கப்
படுகிறது.

(10) உள்ளூர் மக்கள் ஒத்துழைப்பும் பங்கேற்பும் பெறு
வதற்கு வட்டார மக்கள் தொடர்பு அமைப்புகள் பயன்படுவ
துடன், பணிக்களரிகள், கருத்தரங்குகள் ஆகியவையும் நடத்தப்
பட்டு வருகின்றன. கிராம சுகாதாரக் குழுக்களும் அமைக்கப்
படுகின்றன.

(11) டானிடா திட்டத்தின்கீழ் சேலம், தென்னாற்காடு
மாவட்டங்கள் நல்ல பயன் பெற்றுள்ளன. எனவே, சுகாதாரப்
பணிக்கான அடிப்படை வசதிகள் மேம்படுத்த வேண்டிய
நிலையில் உள்ள வேறு சில பகுதிகளுக்கும் இத்திட்டத்தை
விரிவாக்கலாமெனக் கருதப்படுகிறது. மாநிலத்தில் உள்ள
20 மாவட்டங்களில் 10 மாவட்டங்களில் உலக வங்கி உதவி
யுடன் ''தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம்''
செயல் படுகிறது. பிற மாவட்டங்களில், தருமபுரி, தஞ்சாவூர்
ஆகிய இரண்டையும் தெரிந்தெடுத்து அவற்றுக்கு ''டானிடா''
திட்டத்தை விரிவாக்க ரூ. 59.2 கோடி திட்ட அறிக்கை ஒன்று
தயார் செய்து மைய அரசுக்கு அனுப்பப்பட்டு, அவ்வரசின்
ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

[1991 செப்டம்பர் 16

## VI. குடும்ப நலம்.

1. குடும்ப நலத் திட்டச் செயற் பாட்டில் உயர்ந்த நிலை
வகிப்பதில் நமது நாட்டிலுள்ள அனைத்து மாநிலங்களில் தமிழ
கம் எப்பொழுதுமே முன் மாதிரி மாநிலமாக இருந்து வருகிறது.
கி.பி. 2000 ஆண்டிற்குள் பிறப்பு விகிதத்தை 1000-த்திற்கு
21 ஆகவும், இறப்பு விகிதத்தை 1000-க்கு 9 ஆகவும், சிசு மரண
விகிதத்தை 1000-த்திற்கு 68 ஆகவும் குறைப்பதும், குடும்ப நல
முறைகளை அனுசரிக்கும் தம்பதிகள் எண்ணிக்கையை 60 சத
வீதமாக உயர்த்துவதும் தேசிய குறிக்கோளாகும். 1991 ஆம்
ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தமிழகத்தில் மக்கள்
தொகை 5.56 கோடியாகும். 1981 ஆம் ஆண்டு மக்கள்
தொகையைவிட இது 14.94 சதவீதம் அதிகமாகும். சில
முக்கிய புள்ளி விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :

| | | |
|---|---|---|
| பிறப்பு விகிதம் (1989) | .. | 23.1/1000 மக்கள் தொகைக்கு. |
| இறப்பு விகிதம் (1989) | .. | 8.6/1000 மக்கள் தொகைக்கு |
| ஆண்டு வளர்ச்சி விகிதம் | .. | 1.45 சதவீதம். |
| சிசு மரண விகிதம் (1989) | .. | 68/1000 இறப்புகளுக்கு. |
| குடும்ப நல முறைகளை அனுசரிக்கும் தம்பதிகள் (1990) | .. | 56.2 சதவீதம். |
| சராசரி திருமண வயது | .. | ஆடவர் 26.1 வருடங்கள். |
| | | மகளிர் 20.7 வருடங்கள். |

குடும்ப நல முறைகளை அனுசரிப்போரின் சராசரி வயது :—

| | | |
|---|---|---|
| பெண் அறுவை சிகிச்சை | .. | 29.1 வருடங்கள். |
| கருத்தடை வளையம் | .. | 26.4 வருடங்கள். |

1991-92 ஆம் ஆண்டுக்கான குறிக்கோள்கள் பின்வருவனவாகும் :

1. 1000 மக்கள் தொகைக்கான பிறப்பு விகிதத்தை 22 ஆக குறைத்தல்.

2. 1000 மக்கள் தொகைக்கான இறப்பினை 9 ஆக குறைத்தல் (இந்த தேசிய குறிக்கோளை தமிழகம் 1989 ஆம் ஆண்டி லேயே எட்டியுள்ளது).

3. சிசு மரணத்தை 1000 பிறப்புகளுக்கு 60 ஆக குறைத்தல்.



1991 செப்டம்பர் 16]

4. கர்ப்பிணிகள் இறப்பினை 1000 பிரசவங்களுக்கு 1 ஆக குறைத்தல்.

5. குடும்ப நல முறைகளை அனுசரிப்போரின் விகிதத்தை 60 சதவீதம் ஆக ஏய்துதல்.

### இலக்கும் சாதனையும்.

2. 1990–91 மற்றும் 1991–92 ஆம் ஆண்டிற்கான குடும்ப நலத் திட்டத்தின் பல்வேறு முறைகளின் இலக்கும் சாதனைகளும் பின்வருமாறு :—

| முறைகள். | 1990-91ம் ஆம் ஆண்டுக் கான இலக்கு. | சாதனை. | 1991-92 ஆம் ஆண்டுக் கான இலக்கு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. அறுவை சிகிச்சை .. | 4,25,000 | 3,82,512 | 4,25,000 |
| 2. கருத்தடை வளையம் பொருத்துதல் .. | 5,50,000 | 4,19,192 | 5,50,000 |
| 3. ஆண் உறைகள் உபயோகிப்போர் | 3,89,000 | 2,96,586 | 3,00,000 |
| 4. கருத்தடை மாத்திரைகள் உபயோகிப்போர் | 1,73,600 | 1,76,695 | 2,00,000 |

### தாய் நலப் பாதுகாப்பு.

3. தமிழ் நாட்டில் ஆண்கள் எண்ணிக்கையைவிடப் பெண்கள் எண்ணிக்கை குறைவாக இருப்பதாக 1991 மக்கள் தொகைக் கணக்கெடுப்பிலிருந்து தெரியவருகிறது. 1000 ஆண்களுக்கு 972 பெண்களே உள்ளனர். தாய்மார்கள் இறப்பு விகிதத்தையும் சிசுக்களின் இறப்பு விகிதத்தையும் குறைத்தல், பாதுகாப்பான பிரசவம், அடிக்கடி குழந்தை பெறுவதைத் தவிர்த்தல், திருமண வயதைக் கடைப்பிடித்தல், தாய்மார்களுக்கு கல்வி; போன்ற நோக்கங்களுடன் 1991—92 ஆம் ஆண்டு தாய்மார்கள் பாதுகாப்பு ஆண்டாக அறிவிக்கப்பட்டுள்ளது. மாநிலம் முழுவதும் உள்ள பயிற்சி பெறாத மருத்துவச்சிகளுக்கு பயிற்சி கொடுக்க கருதப்படுகிறது. தாய்மார்கள் பாதுகாப்புத் திட்டம் யுனிசெப் உதவியுடன் வட ஆற்காடு அம்பேத்கார், திருநெல்

வேலி கட்டபொம்மன், திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டங்களிலும், செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் இந்திய மக்கள் தொகைத் திட்டம் V-ன் உதவியுடன் செயல்படுத்தப் படும். மற்ற மாவட்டங்களில் இப்பணிக்கான செலவு குடும்ப நலத் திட்ட ஒதுக்கீட்டின்கீழ் செய்யப்படும்.

குழந்தை பேற்றில் இடைவெளி.

4. கி.பி. 2000-ம் ஆண்டில் குடும்ப நல முறைகளை அனுசரிக்கும் தம்பதிகள் 60 சதவிகிதத்தை அடைதல் தேசியக் குறிக்கோளாகும். தமிழ்நாடு ஏற்கனவே 56.2 சதவீதம் சாதனையை அடைந்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு கிராம நல ஊழியர்களுக்கும் 100 தம்பதிகளைப் பதிவுசெய்து, அவர்களுக்கு குழந்தை பிறப்பு இடைவெளியை அதிகரிக்க ஏதாவது ஒரு கருத்தடை முறையைக் கையாள ஆலோசனை கூறப்படும். வருடத்தில் ஆறு மாத காலங்களுக்கு அத்தம்பதி கள் கண்காணிக்கப்படுவர். இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு வட்டத்திலும் முதலில் 100 தம்பதிகளைப் பதிவு செய்யும் கிராம நல ஊழியர்களுக்கு பரிசு வழங்கும் திட்டம் தொடங்குவது குறித்தும் ஆலோசிக்கப்படுகிறது.

கண்காணிப்புத் திட்டம்.

5. குடும்ப நல முறைகளைக் கையாளுவது குறித்து இணைப்பு ஊழியர்கள், சத்துணவு ஊழியர்கள் ஊக்குவிப்பா ளர்கள் ஆகியோர்களுக்கு இத்திட்டத்தின்கீழ் பயிற்சி கொடுக்கப் படும். கருத்தடை அறுவை சிகிச்சை செய்யும் பொழுது. கோளாறுகள், இறப்புகள் ஆகியவை ஏற்படாமல் செவ்வனே நடக்கும்படி பார்த்துக் கொள்வதற்காக 'கருச்சிதைவுப் பணி கண்காணிப்பு முறை' என்ற ஒரு திட்டத்தை மத்திய அரசின் உதவியுடன் செயலாக்க கருதப்படுகிறது.

திருமணங்களைப் பதிவு செய்தல்.

6. சிறு வயதில் திருமணம் நடத்துவது, பிறக்கும் குழந்தை கள் எண்ணிக்கை அதிகரிப்பிற்கு ஒரு முக்கியமான காரணமாகும். திருமண வயதை உயர்த்தினால் குழந்தைகள் எண்ணிக்கை குறைவது மட்டுமின்றி சிசு இறப்பு, பேறு காலத்தில் தாய் நோய் வாய்ப்படுதல் அல்லது இறத்தல் போன்ற கேடுகளையும் தவிர்க்கலாம். ஆண்களுக்கு 21 வயதுக்கு முன்னும் பெண் களுக்கு 18 வயதுக்கு முன்னும் திருமணம் செய்யக் கூடாது எனச் சட்டபூர்வமாக நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும், கிராமப் புறங்களில் இவ்வயது வரம்பு அடையுமுன்னரே திருமணங்கள் நடைபெறுகின்றன. கிராமங்களில் திருமணங்கள் பதிவு செய்யப் படாமையும் இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். திரு



மணங்களைப் பதிவு செய்வதால், குறைந்த பட்ச வயதுக்கு முன்னரே திருமணம் நடத்துவது சட்டப்படி குற்றமாகும் என்ற உணர்வு ஏற்படும். கிராமங்களில் நடைபெறும் திரு மணங்களைப் பதிவு செய்து சட்ட பூர்வ திருமண வயது அமு லாக்கப்படுவதைக் கண்காணிக்கும் செயற் குறிப்பு ஒன்று ஆய்வி லுள்ளது.

நகரக் குடும்பநலச் சீரமைப்புத் திட்டம்.

7. தமிழ்நாட்டில் 1991-92-ம் ஆண்டில், நகர் பகுதிகளில் தாய் சேய் நலத்துடன் கூடிய குடும்ப நலத் திட்டத்தினைப் புறத் தொண்டாகவும், உள்ளிருப்புத் தொண்டாகவும் செய லாற்றக் கூடிய "நகரக் குடும்ப நல சீரமைப்புத் திட்டம்" நகர நலமையங்கள் 144 வழியாக, 2 மாநகராட்சிகள், 21 நகராட் சிகள் மற்றும் ஒரு நகரியத்தில் செயல்படவுள்ளது. மேலும் 1981-ம் ஆண்டு மக்கட் தொகைக் கணக்கின்படி 2 இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகையினைக் கொண்ட 9 நகர தொகுப்புகள்/பெரிய நகரங்களிலும் இத்திட்டத்தினை வலுப் படுத்துவதற்கான கருத்துரு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் கூடுதல் வசதிகள் தரப்படுவதுடன் கிராமப் பகுதிகளைப் போல நகர்ப் பகுதிகளிலும் 5,000 மக்களுக்கு ஒரு பல்நோக்குச் சுகாதாரப் பெண் பணியாளரும் நியமிக்கப்படுவார். இந்த 9 நகரத் தொகுப்புக்கள்/தெரு நகரங்களில் அடங்கிய பெரு நகரங்கள்/நகரங்கள் எண்ணிக்கை 14. அந்தப் பதினான்கில் 11 நகரங்களில் நகரக் குடும்ப நலச் சீரமைப்புத் திட்டம் ஏற்கனவே செயல்பட்டு வருகின்றது. எனவே, இத்திட்டம் 1991-92-ம் ஆண்டில் தமிழகத்தில் செயல்பட இந்திய அரசு ஒப்புதல் அளித்தால், புதிதாக 3 நகரங்கள் பலன் அடைந்து மொத்தம் தமிழ் நாட்டில் இத்திட்டத்தின்கீழ் பயனடையும் பெருநகரங்கள்/நகரங்கள் எண்ணிக்கை 27 ஆக உயரும்.

பேறுகாலப் பின் பணித் திட்டம்.

8. தாய்சேய் நலம் மற்றும் குடும்ப நலத் திட்டங்களின் மூலமாக தாய்மார்கள் மற்றும் குழந்தைகளின் நலவாழ்வினை மேம்படுத்துவதற்காக, 1968-69 முதல் தமிழ்நாட்டில் அனைத்திந்திய "பேறுகாலப் பின்பணித் திட்டம்" செயல் படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் ஒரு மாதத் திற்குட்பட்ட குழந்தைகளுக்குப் பாதுகாப்பு, பேறுகால முன் கவனிப்பு, பேறுகாலப் பின் கவனிப்புச் சேவைகள் நல்கப் படுகின்றன. மேலும் தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும் நோய்கள் வராமல் தடுப்பதற்காக தடுப்பு மருந்துகள் தரப் படுகின்றன. தடுப்பு ஊசிகள் போடப்படுகின்றன. இரத்த

சோகை நோயும், மாலைக்கண் நோயும் வராமல் காப்பதற்காக தடுப்பு மருந்துகள் கொடுக்கப்படுகின்றன. தமிழ் நாட்டில் பேறுகால பின்பணித் திட்ட நிலையங்கள் 118 செயல்படுகின்றன. அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளில் 9, மாவட்ட மருத்துவ மனைகளில் 22-ல் துணை மாவட்ட மற்றும் வட்ட மருத்துவமனைகளில் 87. மாநிலத்தில் இப்பணிகளுக்கென்றே 1,252 படுக்கை வசதிகள் ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளன.

மருத்துவ முறைக் கருச்சிதைவு.

9. முறையற்ற முறையில் கருச்சிதைவு செய்துகொள்வதன் காரணமாக (Illegal Abortion ) தாய்மார்கள் ஆபத்துக்கள் மற்றும் நோய்க்கு உள்ளாவதையும், இறப்புக்குள்ளாவதையும் தவிர்க்க உதவுகிற ஒரு நல்வாழ்வுத் திட்டம் " மருத்துவ முறைக் கருச்சிதைவு " திட்டமாகும். அடிப்படையில் நல்வாழ்வு பாதுகாப்புத் திட்டம் ஆக இருப்பினும் ஒரு சிதைவு செய்துகொள்கின்ற பெரும்பாலான கருச் கருச்சிதைவுடன் கூட கருத்தடை முறைகளையும் தாய்மார்கள் கொள்ள மனமுவந்து முன் வருவதாலும், ஏற்றுக் நெறியை ஏற்க விரும்புவதாலும் சிறு குடும்ப நலத் திட்ட நிறைவேற்றத்திற்கும் இத்திட்டம் உறுதுணையாக அமைகிறது. குடும்ப மருத்துவ முறைக் கருச்சிதைவுச் சட்டம் குறித்த விவரங்களைப் பொதுமக்களுக்கு எடுத்து விளக்குவதும், மருத்துவர்கள் மற்றும் மருத்துவ ஊழியர்கள் ஆகியோருக்குத் தெரிவிப்பதுடன் இப்போதைய உத்தியாக ஏற்றுச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மருத்துவ முறை கருச்சிதைவுத் திட்டத்தில் மருத்துவர்களுக்கும் மற்ற மருத்துவ ஊழியர்களுக்கும் பயிற்சி அளிப்பதும், இதற்காக மாநிலத்தில் அதிகப்படியான நிலையங்களைத் திறப்பதும் இத்திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட விருப்பவையாகும். தமிழ்நாட்டில் இப்போது 475 நிலையங்கள் (அரசின் கீழ் 377 ; உள்ளாட்சி நிறுவனங்களின்கீழ் 4 ; தன்னியக்க நிறுவனங்களின் கீழ் 21 ; தனியார் நிறுவனங்களின் கீழ் 73) இயங்கி வருகின்றன.

தகவல், கல்வி மற்றும் தொடர்பு.

10. தகவல், கல்வி தொடர்புப் பணிகளின் மூலம், நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தும் மாநிலங்களில் தமிழ்நாடு முன்னிலையிலுள்ளது. தமிழ் நாட்டின் கிராமப் புறங்களில் சமூக பொருளாதார மற்றும் நல்வாழ்வு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த இப் பணி பெரிதும் உதவுகிறது. இதுதவிர, இதில் பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு ஏற்ற கல்வி, தகவல் தொடர்புப் பணிகளை பல்வேறு வகை மக்கள் தொடர்புச் சாதனங்களையும் திறம்





படப் பயன்படுத்தச் செய்வதில் சிறப்பான பயிற்சியளித்து வருகிறது. மேலும் மகளிர் மன்றங்களை ஒருங்கிணைத்துக் குடும்ப நலத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் பெண்களுக்காக தனிக் கவனம் செலுத்தவும் கருதப்பட்டுள்ளது.

இந்திய மக்கள் தொகை திட்டம். V.

11. சென்னை மற்றும் புற நகர்களில் வாழும் குடிசைப் பகுதி மக்கள் நல் வாழ்விற்காக உலக வங்கியின் உதவியுடன் இந்திய மக்கள் தொகை திட்டம் V நடைபெற்று வருகிறது. தேசிய நகரச் சீரமைப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக குடும்ப நலத் திட்டச் செயல்பாடு குறித்து மத்தியரசின் கொள்கைகள், திட்டங்கள் ஆகியவற்றைச் செயல்படுத்துவதில் உதவுவதே இத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். 1988 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திலிருந்து 7 ஆண்டுகளில் ரூ. 69.13 கோடி செலவில் இத்திட்டம் நிறைவேற்றப்படும். சென்னை மாநகராட்சி, தாம்பரம், பல்லாவரம், ஆலந்தூர், திருவொற்றியூர் ஆகிய நகராட்சிகள், செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் அடங்கியுள்ள ஆவடி, அம்பத்தூர், மாதவரம், கத்திவாக்கம் ஆகிய நகரியங்கள் ஆகியவற்றில் இத்திட்டம் செயல்படுகிறது. இத் திட்டத்தின் முக்கிய நோக்கங்கள்:

(அ) குடும்ப நலப் பணிகளை விரிவுபடுத்தும் அதே நேரத்தில் தாய் சேய் நலத்தைப் பேணுதல் பிள்ளைப் பிறப்பு இடைவெளியை அதிகரித்தல், தற்காலிக முறைக் கருத்தடை சாதனங்களை பின்பற்றுதல்|ஊக்குவித்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்துதல்.

(ஆ) குடும்ப நலப் பணிகள் செயலாக்கத்தின் தரத்தை உயர்த்தல்.

(இ) நகர்ப்புற பகுதிகளில் குடும்ப நலத் திட்டத்தை விரிவாக்கி மேம்படுத்துதல்.

(ஈ) நகர்ப்புற தன்னியக்க நிறுவனங்களை குடும்ப நலப் பணிகளில் அதிக அளவில் ஈடுபடுத்துதல்.

12. ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்டதின் அடிப்படையில், 138 நல்வாழ்வு மையங்களும், 15 வட்டார மையங்களும் இத்திட்டத்தின்கீழ் நிறுவப்பட்டுள்ளன. தேவையான மருத்துவர் மற்றும் மருத்துவப் பணியாளர்கள் நல்வாழ்வு மையங்களைச் செயலாக்க நியமிக்கப்பட்டுள்ளனர். (மருத்துவர் 1, சுகாதாரப் பணியாளர் 1, பல்நோக்கு சுகாதாரப் பணியாளர்—பெண் 41, மற்றும் பெண் உதவியாளர் 1 ஆகியோர் ஒவ்வொரு நல்வாழ்வு மையத்திற்கும் நியமிக்கப்பட்டுள்ளனர்.)

[1991 செப்டம்பர் 16

13. இத்திட்ட நோக்கத்தின்படி தன்னியக்க நிறுவனங்கள் 19, நல்வாழ்வு மையங்களை நடத்துவதில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இத்திட்டப் பணியின் ஒரு அங்கமாக புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களுக்கு துவக்கப் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஏற்கனவே பணியாற்றி வருபவர்களுக்கு பணியிடைப் பயிற்சி தரப்படுகிறது. மருத்துவர், மருத்துவப் பணியாளர்களுக்கு அவ்வப்பொழுது பணியிடைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. கல்வி தொடர்பு பணியின் கீழ்மகளிர் கருத்தரங்குகள், குடும்ப நலத் திட்டத் தலைவர்கள் பயிற்சி முகாம், பட்டி மன்றங்கள், படக் காட்சிகள், வீடியோக்கள், சிறு கண்காட்சிகள் போன்றவைகள் மேற்கொள்ளப்படுகின்றன. சிறப்பு தொலைக் காட்சி, வானொலி நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

14. மொத்தம் இத்திட்டத்திற்கு அனுமதிக்கப்பட்ட ரூ. 69.13 கோடியில், 31—3—1991 வரை ரூ. 8.63 கோடி செலவாகியுள்ளது. (அதில் 90 விழுக்கடாகிய ரூ. 7.77 கோடி மானியமாகப் பெறப்பட்டுவிட்டது), 1991-92ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு ரூ. 10.22 கோடியாகும். (அதில் 90 விழுக்காடான ரூ. 9.20 கோடி மானியமாகப் பெறப்படும்.)

15. இத்திட்டத்தினை 2 இலட்சமும் அதற்கு மேலும் மக்கள் தொகை கொண்டுள்ள மதுரை, கோயம்புத்தூர் மாநகராட்சிகளுக்கும், திருச்சி, சேலம், திருப்பூர், நாகர் கோவில், தூத்துக்குடி, ஈரோடு நகராட்சிகளுக்கும் மொத்தம் 10.76 கோடி செலவில் விரிவுபடுத்துவதற்கான செயற் குறிப்பு ஒன்று மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது.



1991 செப்டம்பர் 16]

## (VII) பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து.

### (i) நிருவாகம்.

முழுமையான அடிப்படை சுகாதார வசதிகளை அளிப்பதன் மூலம் " கி.பி. 2000-த்திற்குள் அனைவருக்கும் நல்வாழ்வு " என்ற தேசியக் குறிக்கோளை எய்துவதற்குத் தமிழக அரசு செயல்பட்டு வருகிறது. இத்தகைய வசதிகள் கீழ்க்கண்ட சுகாதார நிறுவனங்களின் வாயிலாக அளிக்கப்படுகின்றன :—

| | |
|---|---|
| ஆரம்ப சுகாதார நிலையங்கள் .. .. | 1,357 |
| சமுதாய சுகாதார நிலையங்கள் .. .. | 72 |
| | 1,429 |
| சுகாதார துணை நிலையங்கள் .. .. | 8,681 |
| சிறு சுகாதார நிலையங்கள் (அரசு நிதியுதவியுடன் தனியார் நிறுவனங்களால் நடத்தப்படுபவை) .. .. | 201 |

மொத்தமுள்ள 8,681 சுகாதார துணை நிலையங்களில் 5,364-க்கு சொந்த கட்டிடங்கள் உள்ளன. இந்த 8,681 சுகாதார துணை நிலையங்களுள் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்திலும், பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்திலும் ஏற்படுத்தப்பட்ட பின்வரும் சுகாதார துணை நிலையங்களும் அடங்கியுள்ளன :—

| | |
|---|---|
| மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (நீலகிரி) .. | 48 |
| பழங்குடியினர் பகுதிகள் .. .. | 111 |

(ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தில் 50 நிலையங்களும் இதர திட்டங்களின் கீழ் 61 நிலையங்களும்).

2. பொது சுகாதாரத தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் பொறுப்பு வகிக்கும் பணிகள் பல. அவை கிராமம் மற்றும் நகர்ப் பகுதிகளில் நோய்களைத் தடுப்பதற்கான செயல் திட்டங்களை வகுத்தல், மலேரியா ஒழிப்பு, யானைக்கால் நோய்க் கட்டுப்பாடு, கொள்ளை நோய்கள் கட்டுப்பாடு, தாய்சேய் நல மேம்பாடு, சமுதாய ஊட்டச் சத்து, சுகாதார ஆராய்ச்சி, சுகாதாரக் கல்வி, பிறப்பு, இறப்பு பதிவு உட்பட சுகாதாரப் புள்ளி விவரங்கள், உணவுக் கலப்படத்தை தடுத்தல், பள்ளி மாணவர் சுகாதாரப் பணிகள் ஆகியவையாகும். சுகாதாரப் பணிகள் சம்பந்தப்பட்ட பல்வேறு துறைகளுக்கும் தொழில் நுட்ப ஆலோசனை வழங்குதல், ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்புப் பணிகளை இத்துறை செய்கிறது. மாநகராட்சிகள், நகராட்சிகள், நகரியங்கள் பேரூராட்சிகள் ஆகியவற்றின் நகர்ப்புற சுகாதார அடிப்படை வசதிகள் தொடர்பாக முழுமையான தொழில் நுட்ப ஆலோசனை வழங்குகிறது ; சில காரியங்களுக்கு நிதியுதவி தருகிறது ; மற்றும் நிருவாக ஒத்துழைப்பும் நல்குகின்றது.

## (II) தாய்சேய் நலப் பணிகள்

3. இம்மாநிலத்தில் வருவாய் மாவட்டங்கள் 21 உள்ளன. சென்னை தவிரப் பிற 20 மாவட்டங்கள் ஒவ்வொன்றும் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பாதி மாவட்டத்திற்கும் பொதுச் சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்துப் பணிகளை பொதுச் சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்துத் துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) ஒருவர் கவனிக்கிறார். மருத்துவப் பணிகளை கவனிப்பதற்கு வருவாய் மாவட்டம் முழுமைக்கும் மருத்துவ நலப் பணி துணை இயக்குநர் ஒருவர் பணி புரிகிறார். மாவட்ட அளவில் சுகாதாரம் மற்றும் மருத்துவ நலப் பணிகள் அனைத்திற்கும் சுகாதாரப் பணி இணை இயக்குநர் பொறுப்பேற்றுப் பணி புரிகிறார்.

4. சமுதாயத்தில் மருத்துவ சுகாதாரப் பணிகளின் பாதுகாப்பு மிகுதியாகத் தேவைப்படும் பிரிவினர் மகப்பேறு எய்தும் வயதுடைய பெண்களும், 16 வயதிற்குட்பட்ட குழந்தைகளும் ஆவர். அவர்கள் எண்ணிக்கை மொத்தம் 3.35 கோடி ஆகும். இப்பிரிவினருக்கான தாய் சேய் நலப் பணிகளை அளிப்பதற்கு அரசு மிகுந்த முதன்மை அளிக்கிறது. ஊரகப் பகுதிகளில் இத்தகைய தாய்சேய் நலப் பணிகள் ஆரம்ப சுகாதார நிலையங்கள், சுகாதாரத் துணை நிலையங்கள் வாயிலாகவும், நகர்ப்புறங்களில் நகராட்சி மகப்பேறு நிலையங்கள் வாயிலாகவும், மக்களுக்கு அளிக்கப்படுகின்றன. நகராட்சிகள் இவ்வகையில் செய்யும் செலவில் கால் பகுதியை மாநில அரசிடமிருந்து மானியமாகப் பெறுகின்றன.





5. இந்த வகையில் அளிக்கப்படும் நலப் பணிகளில் முக்கிய மானவை வருமாறு :

(1) பரம்பரை மருத்துவச்சிகளுக்குப் பயிற்சி அளித்தல்.

(2) பேறுகால சமயத்தில் இசிவு நோய் (டெட்டனஸ்) தொற்றிவிடாமல் பாதுகாக்கவும், சுகாதார முறையில் பிரசவம் பார்க்க வழி செய்யவும், பயன்படுத்திவிட்டு எறிந்து) விடக் கூடிய மகப்பேறு சாதனங்கள் கருவுற்ற தாய்மார்களுக்கு வழங்கப்படுகிறது. இச்சாதனங்கள் ஒவ்வொரு துணை சுகாதார நிலையத்திற்கும், ஆண்டுக்கு 50 வீதம் வழங்கப் படுகின்றன.

(3) குடும்ப நலப் பணிகளை ஊக்குவித்தல், கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்து கொள்வோர், கருத்தடை வளையங் களைப் பயன்படுத்துவோர் ஆகியோருள் 80 விழுக்காட்டினர் சுகாதாரத் துணைப் பணியாளர்களால் ஊக்குவிக்கப்பட்டு முன்வருபவர்களேயாவர்.

6. கருவுற்ற தாய்மார்களுக்கு மாதம் ரூ. 200 வீதம் நான்கு மாதங்களுக்கு மகப்பேறுக்கு முன்னர் இரு திங்களும், மகப்பேறுக்கு பின்னர் இரு திங்களும் உதவித் தொகை வழங்கும் ஒரு புதிய திட்டத்தை அரசு ஏற்படுத்தியுள்ளது. இதனால் மகப்பேற்றிற்கு முன்னர் மருத்துவ—சுகாதார நிலை யங்களில் தங்களைப் பதிவு செய்து கொள்ளும் தாய்மார்களின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது.

## பலநோக்கு சுகாதாரப் பணியாளர்கள் திட்டம்.

7. மக்கட் தொகை அதிகமாகக் கொண்ட பெரிய நிலப் பரப்புள்ள பகுதியில் குறிப்பிட்ட ஒவ்வொரு வகைச் சுகாதார பணிக்கும் தனித்தனி சுகாதாரப் பணியாளர் என்ற நிலைமை மாற்றப்பட்டுள்ளது. 5,000 மக்கள் கொண்ட கிராமப் பகுதி ஒவ்வொன்றுக்கும் தனியே சுகாதாரத் துணை நிலையம், அவர்களுக்காக குடும்ப நலம் உள்ளிட்ட சுகாதாரப் பணிகள் அனைத்தையும் நிறைவேற்ற சுகாதாரப் பணியாளர் இருவர் (ஆடவர் ஒருவர், மகளிர் ஒருவர்) என்ற புதிய கோட்பாடு மைய அரசின் பரிந்துரைப்படி அமுலுக்கு வந்துள்ளது. (மலைப பகுதிகளில் மட்டும் 3,000 மக்களுக்கு சுகாதாரத் துணை நிலையம் ஒன்று அமைக்கப்படுகிறது.) இச்சிறந்த திட்டம்

[1991 செப்டம்பர் 16

1988 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்படுகிறது. பல்வேறு இனங்களில் உள்ள பணியாளர்களின் எண்ணிக்கை வருமாறு :

| | |
|---|---|
| 1. கிராம சுகாதாரச் செவிலியர்கள் .. .. | 8,681 |
| 2. வட்டார சுகாதாரச் செவிலியர்கள் .. | 1,881 |
| 3. சமுதாய சுகாதாரச் செவிலியர்கள் .. .. | 584 |
| 4. பல்நோக்கு சுகாதார உதவியாளர்கள் (ஆடவர்). | 3,316 |
| 5. பல்நோக்கு சுகாதார மேற்பார்வையாளர்கள் (ஆடவர்). | 3,656 |
| 6. அடிப்படை சுகாதார மேற்பார்வையாளர்கள் | 869 |

[அரசிதழ் பதிவு பெற்ற (தொழில் நுட்ப) நேர்முக உதவியாளர்களாகப் பதவி உயர்வு பெற்ற 15 நபர்கள் நீங்கலாக.]

நோய்த் தடுப்பு மருந்துகள் வழங்கும் திட்டங்கள்.

8. பெரியம்மை, பிளேக், நரம்பு சிலந்தி ஆகிய நோய்கள் தமிழகத்தில் முற்றிலுமாக ஒழிக்கப்பட்டு விட்டன. 1994 ஆம் ஆண்டிற்குள் இளம்பிள்ளை வாதத்தையும் ஒழித்துக் கட்ட அரசு முடிவு செய்துள்ளது. கருவுற்ற மகளிர், குழந்தைகள் ஆகியோருக்கு வரக்கூடிய சில நோய்களை அறவே தடுப்பதற்காக அவர்கள் அனைவருக்கும் தடுப்பு மருந்து வழங்கும் திட்டம் 1985—86 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. தற்பொழுது மாநிலம் முழுவதும் செயல்படுத்தப்படுகிறது.

கருவுற்ற தாய்மார்கள் அனைவருக்கும் இசிவு (டெடனஸ்) தடுப்பு ஊசி இரு முறை போட இத்திட்டம் வகை செய்கிறது. கைக்குழந்தைகளுள் 85 விழுக்காட்டினருக்கு காச நோய் தடுப்பதற்கான பி.சி.ஜி. ஊசி ஒரு முறை, தட்டம்மை தடுப்பு மருந்து ஒரு முறை, (தொண்டை அடைப்பான், கக்குவான், இசிவு நோய் ஆகிய மூன்று நோய்களைத் தடுப்பதற்கான) முத்தடுப்பு மருந்து ஊசி மூன்று முறை ; இளம்பிள்ளை வாத நோய் சொட்டு மருந்து ஆகிய தடுப்பு



1991 செப்டம்பர் 16]

மருந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இத்திட்டம் வகை செய்கிறது. செயல்பட்டுக் கொண்டிருக்கும் தடுப்பு மருந்துத் திட்டங்களின் விவரம் வருமாறு :

| | 1990-91 | | 1991-92 |
|---|---|---|---|
| | இலக்கு. | சாதனை. | இலக்கு. |
| | (இலட்சத்தில்) | | |
| இசிவு நோய் தடுப்பு ஊசி (பிரசவத்திற்கு முன் தாய்மார்களுக்கு). | 13.32 | 12.86 | 12.78 |
| இளம்பிள்ளை வாத தடுப்பு ஊசி (6 வாரம் முதல் 12 மாதம் வரையுள்ள குழந்தைகளுக்குச் சொட்டு மருந்து) | 11.97 | 12.75 | 11.68 |
| முத்தடுப்பு ஊசி (6 வாரம் முதல் 12 மாதம் வரையுள்ள குழந்தைகளுக்கு) .. .. | 11.97 | 12.62 | 11.68 |
| தட்டம்மை நோய்த் தடுப்பு ஊசி (9 முதல் 12 மாத குழந்தைகளுக்கு) .. .. | 11.97 | 12.17 | 11.68 |
| காச நோய் தடுப்பு ஊசி (கைக் குழந்தைகளுக்கு) .. .. | 11.97 | 12.82 | 11.68 |

9. தடுப்பு மருந்துகள் தம் ஆற்றலை இழந்துவிடாமலிருக்க வேண்டுமானால் அவை தாய்மார்கள், குழந்தைகளுக்குச் செலுத்தப்படும் நிலை வரையில் உரிய குளிர் நிலையில் வைத்திருக்கப்பட வேண்டும். கிண்டி கிங் நிலையத்தில், தடுப்பு ஊசிகள் பெரும் அளவில் குளிர்பதன அறையில் சேமித்து வைக்கப்படுகின்றன. கோவையில் குளிர்பதன அறை ஒன்று கட்டப்பட்டுள்ளது. திருநெல்வேலியிலும், மதுரையிலும் குளிர் பதன அறைகள் கட்டப்படுகின்றன. சென்னை, மதுரை, கோவை, தஞ்சை, பாளையங்கோட்டை, திருச்சி, வேலூர், சேலம், கடலூர், ஆகிய இடங்களில் பெரிய குளிர் பதனப் பெட்டிகள் ( Walk-in Coolers ) அமைக்கப்பட்டுள்ளன. மாவட்டங்களிலுள்ள துணை இயக்குநரகங்களிலும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், ஆழ்நிலை குளிர்பதனக் கலங்களும், ஐ. எல். ஆர். குளிர்பதனக் கருவிகளும் உள்ளன. குளிர்ப்பதன ஏற்பாடு ஒழுங்காகச் செயல்படுகிறதா எனக்

கண்காணிப்பதற்காகப் பல்வேறு நிலையங்களிலுள்ள போலியோ சொட்டு மருந்து மாதிரிகள் அவ்வப்பொழுது எடுக்கப்பட்டு வீரியத் தன்மை பரிசோதனை செய்யப்படுகிறது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கை.

10. சோகை முதலிய நோய்களைத் தடுக்க கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

| | 1990–91 இலக்கு. | 1990–91 சாதனை. | 1991–92 இலக்கு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (இலட்சத்தில்) | |
| 1. கருவுற்ற தாய்மார்களுக்கு கடைசி மூன்று மாதங்களில் ஊட்டச் சத்துத் குறைவினால் சோகை நோய் ஏற்படுவதைத் தடுத்தல் (இரும்புச் சத்து, போலிக் அமில மாத்திரைகள்—பெரியவை கொடுத்தல்) | 10.52 | 9.80 | 12.78 |
| 2. குழந்தைகளிடையே சோகை நோயைத் தடுத்தல் (மேற் சொன்ன மாத்திரைகள்—சிறியது கொடுத்தல்) | 30.00 | 26.30 | 30.00 |
| 3. ஆறுமாதம்—5 வயதுக் குழந்தைகளிடையே கண் பார்வை இழப்பைத் தடுத்தல் (ஆறு மாதத்திற்கு ஒரு தடவை 'ஏ' வைட்டமின் சொட்டு மருந்து கொடுத்தல்) | 18.00 | 7.64 | 30.00 |

11. 5 வயதிற்குட்பட்ட குழந்தைகள் வயிற்றுப் போக்கால் உடலில் நீர்ச்சத்து குறைந்து இறந்துவிடும் ஆபத்து உண்டு. இவ்வாறு இறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கையை குறைக்க வயிற்றுப் போக்கு ஏற்பட்டால் வாய் வழியாக தேவையான உப்புக் கலந்த நீரை முறையாகக் கொடுத்து உயிர் காக்கப் பயிற்றுவிக்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. குழந்தைகளுக்கு வயிற்றுப் போக்கு ஏற்படும் பொழுது கிராமநிலை சுகாதாரப் பணியாளர்கள் உப்புக் கரைசலைப் பயன்படுத்தி உடலில் நீர்ச் சத்து குறைவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்





கின்றனர். கடுமையான பாதிப்புக்குட்பட்ட குழந்தைகளை ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும், மருத்துவ மனைகளுக்கும் அனுப்புகின்றனர். அனைத்து சுகாதாரத் துணை நிலையங் களுக்கும் நீர்ச்சத்து குறைவதை தடுக்கும் உப்பு பொட்டலங் கள் 1989–90-ல் 10 இலட்சமும், 1990–91-ல் 14.65 இலட்சமும் வழங்கப்பட்டன.

12. யூனிசெப் மற்றும் மைய அரசு உதவியுடன் இராம நாதபுரம் மாவட்டத்தில் முன்னோடித் திட்டமாக நுரையீரல் மூச்சுக் குழாய் தொற்று நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

(V) பள்ளி மாணவ, மாணவியர் சுகாதார திட்டம்.

13. ஐந்தாண்டுத் திட்டக் கால முடிவில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் 153-லும், நகராட்சிகள் 40-லும், பள்ளி மாணவ, மாணவியர் சுகாதார சிறப்புத் திட்டம் செயல்பட்டது. இத் திட்டத்தை 5—11 வயதுள்ள ஆரம்பப் பள்ளிக் குழந்தைகள் 77 இலட்சம் பேருக்கு மொத்தம் ரூ. 88 இலட்சம் செலவில் விரிவுபடுத்த 1990 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் ஆணை வெளியிடப்பட்டது. (1 முதல் 5 வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு 77 இலட்சம் சுகாதார அட்டைகளை அச்சடிக்க ரூ. 50 இலட்சமும், மருந்துகளுக்கு ரூ. 38 இலட்சமும், ஊட்டச் சத்துக் குறைவு, பார்வைக் குறைவு, பல்நோய், காச நோய், தொழுநோய் உள்ளிட்ட தோல் வியாதிகள், பழக்க வழக்கக் குறைகள், உடற்குறை, மனநலக் குறை ஆகியவை மாணவ, மாணவியரிடம் இருக்கின்றனவா என்று பரிசோதிக்கப் படுகிறது. தேவைப்படும் குழந்தைகளுக்கு சிகிச்சை அளிக்க மருந்துகளுக்காக, நகராட்சி ஒவ்வொன்றிற்கும் தலா ரூபாய் 10,000மும், ஆரம்ப சுகாதார நிலையம் ஒவ்வொன்றிற்கும் தலா ரூ. 2,000 மும் இத்திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்படுகிறது. தனிக் கவனம் செலுத்தப்பட வேண்டிய குழந்தைகள் அருகிலுள்ள மருத்துவமனைக்கு அனுப்பப்படுகிறார்கள். 1990–91-ல் இத்திட்டத்தின்கீழ் 16.08 இலட்சம் மாணவர்கள் பயன் பெற்றனர். 1991–92 ஆம் ஆண்டின் இலக்கு 9.89 இலட்சம் ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

14. பள்ளி மாணவ மாணவியருக்கும் 10 வயதிலும், 16 வயதிலும் இசிவு நோய்த் தடுப்பூசி போடப்படுகிறது. 1990–91 ஆம் ஆண்டில் 14.12 இலட்சம் மாணவர்களுக்கு தடுப்பூசி போடப்பட்டது. 1991–92 ஆம் ஆண்டிற்கான இலக்கு 21.67 இலட்சமாகும்.

### (vi) ஊட்டச் சத்து ஆய்வுப் பணிகள்.

15. தமிழ்நாடு அரசு சத்துணவுத் திட்டத்தில் பொதுச் சுகாதாரத் துறையும் பங்கேற்று வருகிறது. சத்துணவு பெறும் குழந்தைகள் மற்றும் சத்துணவு மையப் பணியாளர்கள் ஆகியோருக்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் வட்டார சுகா தார செவிலியர் ; கிராமச் சுகாதார செவிலியர் மூலம் மருத்துவ-சுகாதார வசதிகள் அளிக்கப்படுகின்றன.

16. தற்பொழுது தமிழ்நாட்டின் சமூகநல இயக்குநரின் கீழ் தீவிர குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டங்கள் 81 செயல்பட்டு வருகின்றன. இத்திட்டங்களுக்கான மாநில ஒருங்கிணைப்பாளராக பொது சுகாதார இயக்குநர் செயல்படுகிறார். சேலம், தென்னார்க்காடு ஆகிய மாவட்டங்களில் செயல்பட்டு வரும் டானிடா திட்டத்தின் கீழ் நடைபெறும் சுகாதாரப் பணிகள் பற்றிய விவரங்களை உரிய அத்தியாயத்தில் காணலாம்.

17. இந்த இயக்ககத்தின் கீழ் உள்ள '' மைய ஊட்டச்சத்து அமைப்பு '' சுகாதார மேற்பார்வையாளர்கள், ஆரம்ப சுகாதார நிலைய மருந்துவர்கள் போன்றவர்களுக்கு ஊட்டச்சத்து பற்றிய பயிற்சி அளித்து வருகிறது. மாநிலத்தின் குறிப்பிட்ட பகுதிகளின் ஊட்டச்சத்து ஆய்வுகளையும் செய்து வருகிறது. நீலகிரி மாவட்டத்தில் அழலை ( Goitre ) நோய் உள்ளதா என்பது குறித்து கணக்கெடுப்பு ஒன்று நடத்தப்பட்டது.

18. இந்த இயக்ககத்தின் கீழ் செயல்படும் '' தேசிய ஊட்டச் சத்து கண்காணிப்பு அமைப்பு '' ஹைதராபாத் நகரிலுள்ள தேசிய ஊட்டச்சத்து ஆய்வு நிறுவனத்தின் அறிவுரைப்படி இம்மாநிலத்திலும் ஆங்காங்கு உணவு மற்றும் ஊட்டச் சத்து குறித்த கணக்கெடுப்புகளை மாதிரி நிலையில் மேற்கொண்டுவருகின்றது.

### (vii) தொற்று நோய்களைக் கட்டுப்படுத்துதல்.

காலரா :

19. தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் அவ்வப்போது வாந்தி பேதி (காலரா) நோய் திடீரென்று தோன்றிப் பரவுகின்றது. இந்நோயை கண்டறிந்து தடுப்பு மற்றும் சிகிச்சை அளிப்பதற்கான கண்காணிப்பு அமைப்பின் மூலம் தீவிரமாக நோய் தடுப்பு நடவடிக்கைகள் உடனுக்குடன் எடுக்கப்படுகின்றன. 1990-ல் காலரா நோயால் பாதிக்கப்பட்டவர்கள் 803 பேர்கள் அவர்களுள் நால்வர் இறந்துவிட்டனர்.





20. சந்தைகள், திருவிழாக்கள் ஆகியவை நடைபெறும் காலங்களில் துப்புரவு ஏற்பாடுகளை இத்துறையின் அதிகாரிகளும் பணியாளர்களும் திறம்பட கண்காணித்து அக்காலங்களில் அல்லது அவற்றை அடுத்து, கொள்ளை நோய்கள் எவையும் பரவாமல் பார்த்துக் கொள்கின்றனர்.

### கொசுக்கள் போன்ற உயிரினங்கள் மூலம் பரவும் நோய்களைக் கட்டுப் படுத்துவதற்கான ஒருங்கிணைந்த திட்டம்.

21. கொசுக்கள் போன்ற உயிர்கள் மூலம் பரவும் மலேரியா, யானைக்கால், நரம்புச் சிலந்தி, பிளேக் போன்ற நோய்களைப் கட்டுப்படுத்துவதற்கான திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அண்மை ஆண்டுகளில் இம் மாநிலத்தில் ஜப்பானிய மூளைக் காய்ச்சல் நோயும் பரவி பொது சுகாதாரப் பிரச்சினையாக உள்ளமையால், மலேரியா ஒழிப்புத் திட்டப் பணியாளர்களையும் சாதனங்களையும் பயன் படுத்தி இந்நோய்யைக் கண்காணிக்கும் பணியும் அந்நோய் பரவுதலைத் தடுக்கும் பணியும் மேற் கொள்ளப்பட்டுள்ளன. ஒசூரில் உள்ள '' நோய்ப் பரப்பும் உயிரினக் கட்டுப்பாடு மற்றும் விலங்குவழி நோய்கள் ஆராய்ச்சி நிறுவனம் '' இத்தகைய நோய்களைப் பற்றி உயிரின ஆய்வுகளையும் தடுப்பு மருந்து ஆய்வுகளையும் மேற்கொண்டு வருகிறது.

மலேரியா. :

22. இம்மாநிலத்தில் மலேரியா ஒழிப்புத் திட்டத்தை நிறைவேற்றும் செலவை மாநில அரசு ஏற்று வருகிறது. இவ்வகையில் கொசு ஒழிப்பு மருந்துகள், உபகரணங்கள் ஆகியவற்றுக்கு ஆகும் செலவில் பாதியை மைய அரசு ஏற்றுக் கொள்கிறது. அண்மை ஆண்டுகளில் மலேரியாவால் பாதிக்கப்பட்டவர்கள் விவரம் வருமாறு :—

| ஆண்டு. | மாநிலம். | சென்னை நகரம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1989 | 90,478 | 45,622 |
| 1990 | 1,20,129 | 51,272 |
| 1991 (மே மாதம் முடிய) | 47,188 | 15,895 |

[1991 செப்டம்பர் 16

ஜப்பானிய மூளைக் காய்ச்சல் :

23. இந்நோய் கடந்த சில ஆண்டுகளாக இம்மாநிலத்தில் பரவி வருவதால் பொது சுகாதாரப் பிரச்சினையாக உருவாகியுள்ளது. கடந்த சில ஆண்டுகளில் இந்நோயால் பாதிக்கப் பட்டவர்கள் எண்ணிக்கை வருமாறு :—

| ஆண்டு. | நோயால் பாதிக்கப் பட்ட வர்கள். | அவர்களுள் இறந்தவர் கள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1989 .. .. .. | 321 | 194 |
| 1990 .. .. .. | 243 | 170 |
| 1991 (மே மாதம் முடிய) | 26 | 11 |

மலேரியா ஒழிப்புத் திட்டப் பணியாளர்களையும் சாதனங் களையும் பயன்படுத்தி இந்த மூளைக் காய்ச்சல் நோய் கண் காணிப்புப் பணியும், அந்நோயைப் பரப்பும் உயிரினக் கட்டுப் பாட்டுப் பணியும் நடைபெற்று வருகின்றன. 1991—92ல் ரூ. 44 இலட்சம் செலவில் இந்நோயைக் கட்டுப் படுத்துவதற்கான அடிப்படை வசதிகளுக்கும் நடவடிக்கை களுக்கும் ஏற்பளிக்கப்படவிருக்கிறது.

யானைக்கால் நோய் :

24. தமிழ்நாட்டில் யானைக்கால் நோய்க் கட்டுப்பாடு நடவடிக்கைகள் நகர்ப்பகுதிகள் 35-ல் எடுக்கப்பட்டு வரு கின்றன. இப்பகுதிகளில் நோய்க்கட்டுப்பாடு பிரிவுகள் 21-ம் இரவு நேர சிகிச்சை நிலையங்கள் 42ம் (சென்னை உட்பட 8 மாவட்டங்களில்) இயங்கி வருகின்றன. இவற்றின் மூலம் 70 இலட்சம் மக்கள் இந்நோயிலிருந்து பாதுகாக்கப்படுகின்றனர். 1990ல் 10.28 இலட்சம் நபர்களுக்கு இந்நோய் இருக்கிறதா என்று சோதனை நடத்தப்பட்டது. அவர்களுள் 2,105 பேர்களிடம் நோய் கண்டுபிடிக்கப்பட்டு சிகிச்சை தரப்பட் டது. இத்திட்டத்திற்கான பொருள்கள், உபகரணங்கள், செலவில் பாதியை மைய அரசு ஏற்று வருகிறது. திட்டச் செயற்பாட்டுச் செலவு முழுவதையும் மாநில அரசு ஏற்கிறது.



1991 செப்டம்பர் 16]

நரம்புச் சிலந்தி நோய் :

25. தமிழ்நாட்டில் நரம்புச் சிலந்தி நோய் முற்றிலும் ஒழிக்கப்பட்டுவிட்டது. எனினும் அண்டை மாநிலங்களி லும் இந்நோய் அறவே ஒழிக்கப்படும் வரை அம்மாநிலங்களி லிருந்து இந்நோய் பரவிவிடாமல் கண்காணிக்கும் பணியைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளது.

(VIII) பிறப்பு இறப்பு பதிவு.

26. பிறப்பு இறப்புப் பதிவுச் சட்டம் 1969-ன் படியும் தமிழ்நாடு பிறப்பு இறப்புப் பதிவு விதிகள் 1977ன் படி யும் பிறப்புகளையும் இறப்புகளையும் பதிவு செய்ய வேண்டி யது கட்டாயமாகும். பொது சுகாதாரம் நோய்த் தடுப்பு மருத்துவத் துறை இயக்குநர் தமிழ்நாட்டின் பிறப்பு-இறப்பு தலைமைப் பதிவாளராவார். இம்மாநிலத்தில் குறிப்பிட்ட சில இடங்களில் பிறப்பு-இறப்புப் பதிவு மாதிரித் திட்டம் செயல்படுத்தப்பட்டு பிறப்பு-இறப்பு விகிதங்கள் குறித்த ஆண்டு வாரி மதிப்பீடுகள் பெறப்படுகின்றன. இந்தப் பணி டெல்லியிலுள்ள இந்திய தலைமைப் பதிவாளர் வழிகாட்டு தலின் கீழ் நடைபெறுகிறது.

இறப்பு வீதம் பற்றிய நம்பத் தகுந்த புள்ளிவிவரங் களைப் பெறும் நோக்குடன் ஆரம்ப சுகாதார நிலையங்கள் 64ல் ''மாதிரி பதிவுத் திட்டம்' செயல்படுத்தப்படுகிறது. பன்னாட்டு நோய் வகைப்பாட்டுக் குறியீட்டைப் பின்பற்றி இறப்புக்கான மருத்துவச் சான்றிதழ் கொடுக்கும் திட்டம் இப்பொழுது மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், மாவட்ட தலைமையிட மருத்துவமனைகள், வட்ட மருத்துவ மனைகள், ஆரம்ப சுகாதார மையங்கள் ஆகியவற்றில் செயல்படுத்தப்படுகிறது.

(IX) உணவுக்கலப்படத்தை தடுத்தல்.

27. உணவுக் கலப்பட தடைச் சட்டம் :-(மத்திய சட்டம்) 1954 மற்றும் உணவுக் கலப்பட தடுப்பு விதிகள் 1955 ஆகிய வற்றின்கீழ் இம்மாநிலத்தின் ''மாநில உணவு (சுகாதார)'' அதிகாரியாக பொது சுகாதார நோய்த் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் செயல்படுகிறார். மாநகராட்சி-நகராட்சிகளின் சுகாதார அதிகாரிகளும் சுகாதார அதிகாரிகள் இல்லாத நக ராட்சிகளில் அந்நகராட்சி ஆணையர்களும் கிராமப் புறப் பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்களும் அந் தந்தப் பகுதிக்குரிய உணவு (சுகாதார) அதிகாரிகளாக செயல் படுகின்றனர்.

[1991 செப்டம்பர் 16

28. ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணி
பகுதி சுகாதார மேற்பார்வையாளர்கள். வளர்ச்சி செய்யும்
சுகாதார மேற்பார்வையாளர்கள் ஆகியோரும் வட்டார
மாநகராட்சிகள், நகராட்சிகள், நகர் பஞ்சாயத்துக்கள் ஆகிய மற்றும்
வற்றின் துப்புரவு ஆய்வாளர்களும் பகுதி நேர உணவு ஆய்
வாளர்களாக செயல்படுகின்றனர். அவர்கள் உணவு மாதிரி
களை சோதனைக்காக எடுக்கலாம். நகராட்சிகள், மாநக
ராட்சிகள், நகரியங்கள், கன்டோன்மென்ட் போர்டுகள் உட்
பட மொத்தம் 488 உள்ளாட்சி மன்றங்களில் மாதந்தோ
றும் சோதனைக்காக உணவுப் பொருள் மாதிரிகள் எத்தனை
எடுக்கப்பட வேண்டும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்
ளது. கிண்டி, மதுரை, கோயம்புத்தூர், தஞ்சாவூர், சேலம்,
பாளையங்கோட்டை ஆகிய இடங்களில் உணவு பகுப்பாய்
வகங்கள் செயல்படுகின்றன. சென்னை மாநகராட்சியின் கீழும்
உணவு பகுப்பாய்வகம் ஒன்று செயல்படுகிறது.

29. மாநில நுகர்வோர் பாதுகாப்பு அமைப்பின் உட்
குழு ஒன்று நல்வாழ்வுத் துறைச் செயலாளர் தலைமையில்
அமைக்கப்பட்டு அக்குழுவானது உணவுக் கலப்படச் சட்டத்
தையும் விதிகளையும் நன்முறையில் அமுல்படுத்துவது பற்றி
யும் உணவு கலப்படத்திலிருந்து நுகர்வோரைப் பாதுகாப்பது
பற்றியும் யோசனைகளை அவ்வப்பொழுது ஆய்வு செய்
கிறது.

## (X) தொழில் சார்ந்த சுகாதாரம்.

30. தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியத்தில் பொதுச்
சுகாதார நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநரும் ஒரு
உறுப்பினராவார். தொழிற்துறைச் செயலாளரின் கீழ்
அமைந்த "தொழிற் சாலைகள் குழு" விலும் அவர் ஒரு
உறுப்பினர். மேலும் மாநில சுற்றுப்புறச் சூழ்நிலைக் குழு
விலும் அவர் உறுப்பினராக உள்ளார். இயந்திரங்களை நிறுவு
தல், அபாயகரமானவையும் கேடு விளைவிப்பவையுமான
தொழில்களைத் தொடங்குதல், ஆகியவற்றிற்கு உரிமம் வழங்
கும் அதிகாரம் அந்தந்த உள்ளாட்சி மன்றத்திற்கே உள்ளது.
எனினும் சுகாதார அதிகாரிகளின் கருத்தை அறிந்த பின்னரே
உரிமங்கள் வழங்கப்படுதல் வேண்டும் என்று விதிக்கப்பட்
டுள்ளது.

31. குடிநீர் மாசுபடுத்தப்படுவதையும் குடிநீர் மூலம்
தொற்றுநோய் பரவுவதையும் தடுத்தல், கட்டுப்படுத்துதல்
ஆகிய நோக்கங்களுக்காக கிண்டியிலும், கோயம்புத்தூரிலும்,
நீர் பகுப் பாய்வகங்கள் செயல்படுகின்றன. அவை உள்
ளாட்சி மன்றங்கள், பிற நிறுவனங்கள் ஆகியவற்றிடமிருந்



1991 செப்டம்பர் 16]

தும் குடிநீர் வழங்கு திட்டங்களிலிருந்தும் நீர் மாதிரிகளை
சேகரித்து ஆய்வு செய்து வருகின்றன. தமிழ்நாடு மாசுக்
கட்டுப்பாடு வாரியத்திற்கும் இவை உதவுகின்றன.

## XI. சுகாதாரக் கல்வி.

32. இத்துறையின் சுகாதாரக் கல்விப் பிரிவு பள்ளிகளுக்
கும், கல்லூரிகளுக்கும் பிற நிறுவனங்களுக்கும் சுகாதாரக்
கல்வி பற்றிய பாடத் திட்டங்கள், பாட நூல்கள், பயிற்று
விப்புக் கையேடுகள் ஆகியவற்றை உருவாக்க உதவுகிறது.
சுகாதாரக் கல்வித் திட்டம் திறம்பட நடைபெறுவதற்கு நல்
வாழ்வுத் துறைக்கும், கல்வித் துறைக்குமிடையில் இப்பிரிவு
ஒரு பாலமாக இயங்குகிறது.

33. சுகாதாரக் கல்வியின் கொள்கைகளைக் களத்தில்
செயல் படுத்தும் ஆய்வுமாக செயல்படுவது சுகாதாரக்
கல்விப் பிரிவின் "களப்பணி-செயற்பட்டு மையத்தின்" நோக்க
மாகும். ஆரம்ப சுகாதார மையங்களின் சுகாதாரப் பணி
களோடு சுகாதாரக் கல்வியையும் இணைத்து வழங்கிட இது
முயற்சி செய்றகிது. கேளம்பாக்கம் மற்றும் சிறு ஆரம்ப
சுகாதார நிலையங்களில் இப்பணி நடைபெறுகிறது. சுகா
தார கள அலுவலர்கள் சுகாதாரக் கல்வியையும் இணைத்து
வழங்கக்கூடிய வகையில் அவர்களுக்கு இக்குழுவினர் தேவை
யான தகவல்களையும், திறன்களையும் கொடுத்து உதவு
கின்றன. சமுதாயத்தின் நலனுக்காக சுகாதாரக் கல்விக்
கோட்பாடுகளை செயல் முறை விளக்கங்கள் மூலம் அறிவுறுத்
துவதோடு இக்குழு ஆய்வுகளையும் செய்து வருகிறது.

[1991 செப்டம்பர் 16

## VIII. மருந்துக் கட்டுப்பாடு நிர்வாகம்.

1. தமிழ் நாட்டில் மருந்துக் கட்டுப்பாடு நிர்வாகம், மருந்துக் கட்டுப்பாடு அலுவலரைத் தலைவராகக் கொண்டு 1981 நவம்பர் முதல் தனித்துறையாக இயங்கி வருகிறது. 1991-92ஆம் ஆண்டு வரவு-செலவு மதிப்பீட்டில், இத் துறைக்கு ரூ. 1.26 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

2. மாநிலத்தில் மொத்தம் 18,070 நிறுவனங்கள் மருந்துகளை விற்பனை செய்கின்றன. மருந்துகளை உற்பத்தி செய்யும் நிறுவனங்களின் எண்ணிக்கை மொத்தம் 2,029 ஆகும். (ஆங்கில முறை வைத்தியம் 920, இந்திய முறை வைத்தியம் 585, ஹோமியோபதி வைத்தியம் 9 மற்றும் அழகு சாதன உற்பத்தி நிறுவனங்கள் 515.).

3. அலோபதி, ஆயுர்வேதம், சித்தா, யுனானி, ஹோமியோபதி ஆகிய அனைத்து வகை மருந்துகளையும் மற்றும் அழகு சாதனங்களையும் விற்பனைக்காக உற்பத்தி செய்ய உரிமங்கள் வழங்குவதற்கும், அவைகளைப் புதுப்பிப்பதற்கும் உரிய அலுவலர் மருந்துக் கட்டுப்பாட்டு அலுவலர் ஆவார். அவருக்கு உதவியாக, இயக்குநர் அலுவலகத்தில் மருந்துக் கட்டுப்பாடு துணை இயக்குநர்கள் மூவரும், மருந்துக் கட்டுப்பாடு உதவி இயக்குநர் ஒருவரும் உள்ளனர். மருந்துகள் மற்றும் அழகுச் சாதனச் சட்டத்தின் கீழ் மருந்துகள் விற்க உரிமம் வழங்கும் அதிகாரம் இயக்குநருக்குக் கீழ் உள்ள வட்டார நிலை அதிகாரிகளுக்குத் தரப்பட்டுள்ளது. இதற்காக மாநிலம் பத்து மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, அந்தந்த மண்டல மருந்துக் கட்டுப்பாடு உதவி இயக்குநர், அம்மண்டலத்தில் விற்பனை உரிமங்கள் வழங்குவதற்கும், புதுப்பிப்பதற்கும் அதிகாரம் பெற்றவராகச் செயல்படுகிறார். முதுநிலை மருந்து ஆய்வாளர்கள் மூவரும், மருந்து ஆய்வாளர்கள் மூவரும் தலைமையகத்திலும் மருந்து ஆய்வாளர்கள் 69 பேர் பல்வேறு மண்டலங்களிலும் பணி செய்கின்றனர். சிறப்பு விசாரணைகளையும் திடீர்ச் சோதனைகளையும் நடத்துவதற்கும் சட்டம் மற்றும் புலனாய்வுப் பிரிவு ஒன்று இயக்ககத்தில், மருந்துக் கட்டுப்பாடு துணை இயக்குநர் ஒருவரின் கீழ் இயங்கி வருகிறது. வழக்குகள் சம்பந்தப்பட்ட பணிகளில் சட்ட ஆலோசகர் ஒருவர் இவருக்கு உதவி செய்கிறார்.

4. மருந்தாய்வாளர்கள் எடுத்த மாதிரிகளைச் சோதிப்பதற்காக இந் நிர்வாகத்தின் கீழ் மருந்துப் பரிசோதனை ஆய்வகம் ஒன்று உள்ளது.



1991 செப்டம்பர் 16]

5. தமிழகத்தில் மருந்து உற்பத்தியையும் விற்பனையையும் ஒழுங்குபடுத்த மருந்து கட்டுப்பாடு நிர்வாகம் கீழ்க்காணும் சட்டங்களைச் செயல்படுத்துகிறது:—

(அ) மருந்துகள் மற்றும் அழகு சாதனச் சட்டம், 1940:

தரமுள்ள மருந்துகள் தயாரித்து விற்கப்படுகின்றனவா என்று கண்காணிக்கவும் குற்றம் செய்பவர்கள் மீது வழக்குகள் தொடரவும் இச்சட்டம் வகை செய்கிறது.

(ஆ) மருந்துகள் விலைக் கட்டுப்பாடு ஆணை:

நிர்ணயிக்கப்பட்ட விலையில் மருந்துகள் விற்கப்படுகின்றனவா என்று கவனமாகக் கண்காணித்து, அதிக விலைக்கு விற்பவர்கள் மீது வழக்குகள் தொடரப்படுகின்றன. மாநிலத்தில் மருந்துகள் தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்கின்றனவா என்று கண்காணிக்கப்பட்டு தட்டுப்பாடு ஏற்படும் நிலைகள் மத்திய இரசாயன மற்றும் எரிபொருள் அமைச்சகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுகின்றன.

(இ) மருந்துகள் மற்றும் மாயமந்திர சிகிச்சை (ஆட்சேபகரமான விளம்பரங்கள்) சட்டம்.

ஆட்சேபகரமான, பொய்த் தகவல்களைத் தரும் தவறான மருந்து விளம்பரங்கள் இச்சட்டத்தின் கீழ் தடை செய்யப்படுவதுடன் அத்தகைய விளம்பரங்களை வெளியிடுபவர்கள் மீது நடவடிக்கையும் எடுக்கப்பட்டு பொதுமக்கள் நலன் காக்கப்படுகிறது.

(ஈ) போதை மருந்துகள் மற்றும் மயக்க மருந்துகள் சட்டம், 1985:

போதை மருந்துகள் மற்றும் மயக்க மருந்துகளை விற்பனை செய்பவர்கள் மீது இச்சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. உடல் நலத்திற்குக் கேடு விளைவிக்கும் போதை மருந்துகளைப் பயன்படுத்துவதைத் தடுக்கவும், இளைஞர்கள் போதை மருந்துகளுக்கு அடிமை ஆவதைத் தடுக்கவும் இச்சட்டம் கடுமையாக அமுல்படுத்தப்படுகிறது.

(உ) இறக்குமதிக் கட்டுப்பாடு ஆணை:

இறக்குமதிக் கட்டுப்பாடு ஆணையின்கீழ் மருந்து மற்றும் அழகு சாதனங்கள் தயாரிக்கும் நிறுவனங்களின் இறக்குமதித் தேவைகளைப் பெற மாநில மருந்து கட்டுப்பாடு அலுவலர் பரிந்துரை செய்யும் அதிகாரியாவார்.

[1991 செப்டம்பர் 16

6. மாநிலமெங்கும் உபயோகத்திற்காக அனுப்பப்படும் மருந்துகள் நல்ல தரமுள்ளனவா என்று சரிவரக் கண்காணிக்கவும் போலி மருந்துகள் விற்பனையைத் தடுக்கவும் விஞ்ஞான ரீதியில் வழிமுறைகள் வகுக்கப்படுகின்றன. அதன்படி—

(அ) மருந்துகள் தயாரிக்கும் இடங்களிலிருந்தும்,

(ஆ) விற்பனை செய்யும் இடங்களிலிருந்தும்,

(இ) அரசு மருத்துவமனைகளிலிருந்தும், தேவையான எண்ணிக்கையில் மாதிரிகள் பரிசோதனைகளுக்காக எடுக்கப்படுகின்றன. அது போன்று தமிழகத்தில் தயாரிக்கும் மருந்துகளாயினும் சரி, வெளி மாநிலத்தில் தயாரிக்கும் மருந்துகளாயினும் சரி, இம் மாநிலத்தில் விற்கப்படும் அனைத்து மருந்துகளும் தரமுள்ளதாக இருக்கும்படி பார்த்துக் கொள்ளும் வகையில் மாதிரிகள் எடுக்கப்படுகின்றன. களப் பணியாளர்கள் மேற்கொள்ளும் ஆய்வுகள் நெறிமுறைப்படுத்தப்பட்டு அவர்கள் செயற்பாடு பல்வேறு நிலைகளிலும் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு மதிப்பிடப்படுகின்றது.

7. 1990-91 ஆம் ஆண்டில் சோதனைக்கு எடுக்கப்பட்ட மருந்துகள், தவறு செய்த தயாரிப்பாளர்களுக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்குகள், நீதிமன்றத்தின் முன் உள்ள வழக்குகள் ஆகியவற்றின் விவரங்கள் வருமாறு:—

| | |
|---|---|
| ஆய்வுக்கு எடுக்கப்பட்ட மாதிரிகள் எண்ணிக்கை | 4,369 |
| ஆய்வு செய்த மாதிரிகள் எண்ணிக்கை .. .. | 4,214 |
| தொடரப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை .. | 190 |
| தண்டனை அடைந்தவர்கள் .. .. .. | 109 |
| நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகள் | 81 |



1991 செப்டம்பர் 16]

## IX. சுகாதாரப் போக்குவரத்து.

மக்கள் நல்வாழ்வுத் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அனைத்து இயக்ககங்களைச் சார்ந்த மோட்டார் ஊர்திகளைப் பழுதுப்பார்த்தல், பராமரித்தல் மற்றும் சீர் காப்புப் பணிகளை நிறைவேற்ற 1981ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில சுகாதார போக்குவரத்துத் துறை தோற்றுவிக்கப்பட்டது. 1991-92-ல் இத்துறைக்கான நிதி ஒதுக்கீடு ரூ. 2.59 கோடி ஆகும். 1-5-1991 அன்றைய நிலவரப்படி இத்துறை பின்வருமாறு 2,202 ஊர்திகளைப் பேணி வருகிறது:—

| வரிசை எண். | இயக்ககம். | ஊர்திகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | மருத்துவக் கல்வி இயக்குநர் | 193 |
| 2. | மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர்—மருத்துவப் பணி. | 488 |
| | ஆரம்ப சுகாதார நிலையங்கள் | 491 |
| | குடும்ப நலம் | 587 |
| 3. | பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து இயக்குநர். | 384 |
| 4. | டானிடா | 22 |
| 5. | மாநில மருந்துக் கட்டுப்பாடு இயக்குநர் | 3 |
| 6. | தமிழ்நாடு மாநில சுகாதாரப் போக்குவரத்து துறை இயக்குநர். | 30 |
| 7. | இந்திய மருத்துவத் துறை இயக்குநர் | 4 |
| | மொத்தம் | 2,202 |

2. பல்வேறு துறைகளுக்கு புது வாகனங்கள் வாங்க அரசு வழங்கும் ஒப்பளிப்புகள் மீது இத்துறை தொடர் நடவடிக்கை எடுத்து வாகன விற்பனையாளர்களிடம் போக்குவரத்து ஆணையர் வாகனங்களை விலைக்குப் பெற நடவடிக்கை எடுக்குமாறு பார்த்துக் கொள்கிறது. பின்னர் வாகனங்கள் விநியோகம்

செய்யப்பட்டதும், அவற்றைச் சென்னையில் உள்ள மையப் பண்டகசாலையில் பெற்று, பதிவு செய்து, அவற்றை உரிய வாகன உபயோகித்தும் அலுவலரிடம் சேர்ப்பிக்கும் வரை அனைத்துப் பணிகளையும் இத்துறை செவ்வனே செய்து வருகிறது.

3. இத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் திருச்சிராப்பள்ளியில் ஒரு மையப் பணிமனை, சென்னை, மதுரை, சேலம், கோயம்புத்தூர், வேலூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் ஆறு வட்டாரப் பணிமனைகள்; மாவட்ட அளவிலான 9 பராமரிப்புப் பணிமனைகள் ; வட்டாரம்/மாவட்டப் பணி மனைகளைச் சார்ந்து 20 நடமாடும் பராமரிப்புப் பிரிவுகள், சென்னையில் ஊர்தி மறுசீரமைப்புப் பிரிவு ஒன்று மேற்கூடு பழுது பார்ப்புப் பிரிவு ஒன்று ஆகியவை இயங்கி வருகின் றன். தொழில்நுட்பப் பணியாளர்களும், பிறபணியாளர் களும் சேர்த்து மொத்தம் 686 பேர் இத்துறையில் பணி யாற்றுகின்றனர்.

4. ஓடாத வண்டிகளின் எண்ணிக்கையை எந்த நேரத்தி லும் மிகக் குறைந்த எண்ணிக்கையில் வைத்திருப்பதற்குத் தேவையான முயற்சிகளை இத்துறை மேற்கொள்கிறது. ஓடும் வண்டிகளின் விழுக்காடு 1981-ல் 72.6 ஆக இருந்தது படிப் படியாகச் சீரடைந்து இப்பொழுது 93 விழுக்காடு அளவுக்கு உயர்ந்துள்ளது.

5. ஊர்திகளுக்கு இத்துறை மேற்கொண்ட பெரிய மற் றும் இரண்டாம் நிலைப் பழுது பார்ப்புப் பணிகளில் எண் ணிக்கை அண்மை ஆண்டுகளில் ஆண்டுக்கு சராசரியாக 2,500 ஆகும். நல்ல நிலையில் இயங்கக் கூடிய என்சின் மற்றும் கியர்பாக்ஸ், அசெம்பிளி போன்ற உதிரி பாகங்களை இத்துறையிலேயே, புத்தமைப்பு (ரீகண்டிஷன்) செய்து போது மான அளவில் ஆயத்தமாக வைத்திருப்பதன் மூலம் ஊர்தி களுக்கு பழுது பார்க்க ஆகும் கால அளவை வெகுவாகக் குறைக்க முடியுமாகையால் அவ்வாறு செய்யும் வகையில் இப்பணிக்காக சென்னையில் 1985 ஆம் ஆண்டிலிருந்து மைய ரீகண்டிஷனிங் பிரிவு ஒன்று செயல்பட்டு வருகிறது.

6. 1973 ஆம் ஆண்டுக்கு முன்னர் யூனிசெப் நிறுவனத்தின ரால் ஆரம்ப சுகாதார நிலயங்களுக்கு வழங்கப்பட்ட ஊர்தி களும் குடும்ப நலத் திட்டங்களுக்காக இந்திய அரசு வழங் கிய ஊர்திகளும் பெட்ரோல் வண்டிகளாகவும், வழக்கொழிந்த மாடல்களாகவும் இருந்தன. அவற்றுக்கு உதிரி மற்றும் துணை பாகங்கள் வாங்குவது மிகவும் கடினமாக இருந்தது. இந்த இயக்ககம் தொடங்கப்பட்ட பின்னர், நமது நாட்



டில் உற்பத்தி செய்யப்பட்ட என்ஜின்கள், பிரேக் அமைப்பு ஆகியவற்றையே பயன்படுத்தி இத்தகைய பழைய ஊர்திகள் 205 உபயோகத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

7. சென்னையிலுள்ள தொழில் பழகுநர் பயிற்சி இயக்குநர் அலுவலகம் அனுப்பும் தொழிற் பயிற்சிச் சான்றிதழ் பெற்ற வர்கள் தகுதிப் பட்டயம் பெற்றவர்கள் ஆகியோருக்கு இத் துறை பயிற்சியளிக்கிறது. ஆண்டுதோறும் தொழிற்பயிற்சிப் பட்டயம் பெற்றவர்கள் 17 பேருக்கும் தொழிற் பயிற்சி சான் றிதழ் பெற்றவர்கள் 32 பேருக்கும் தொழில் பழகுநர் பயிற்சி அளிக்கப்படுகிறது.

8. ஓட்டுநர்கள் தமது திறமையை வளர்த்துக் கொள்ளவும், ஊர்திகளில் ஏற்படும் சிறு பழுதுகளைத் தாமே சீர்படுத்திக் கொள்ளக் கூடிய திறன் பெறவும், திருச்சியிலுள்ள ஓட்டுநர்கள் பணியிடைப் பயிற்சி நிலையத்தில் அவர்களுக்கு பணியிடைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதுவரையில் 1,583 ஓட்டுநர்கள் இத்தகைய பயிற்சியைப் பெற்றுள்ளனர்.

9. இருபது ஆண்டுகள் 2 லட்சம் கி.மீ. வரை ஓடிய வாகனங்களையும் பயனற்ற வாகனங்களையும் கண்டறிந்து அவற்றை ஆண்டுதோறும், கழிவு செய்து மாற்றுவதற்கும் இத்துறை தக்க நடவடிக்கை எடுக்கிறது. முந்தைய ஆண்டு களில் 262 பழைய ஊர்திகள் மாற்றப்பட்டு புதிய ஊர்திகள் வாங்கப்பட்டுள்ளன.

10. வட்டார மற்றும் வட்டாரமல்லாத மருத்துவமனை களில் 50 அல்லது 50க்கு மேல் எண்ணிக்கையுள்ள படுக்கை உள்ளவை 78 ஆகும். அவை ஒவ்வொன்றுக்கும் இரண்டு அவ சர கால ஊர்திகள் தரத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்நோக் கத்துடன் தற்பொழுது உபயோகத்திலுள்ள ஊர்திகளை மருத்துவமனைகளிடையே மறு விநியோகம் செய்வதுடன், புதிதாக 56 ஊர்திகள் வாங்க வேண்டும். முதற்கட்டமாக 1991–92 ஆம் ஆண்டில் ரூ. 50.40 இலட்சம் செலவில் அவ சரகால ஊர்திகள் 28-ஐ புதிதாக வாங்கிட நடவடிக்கை எடுக்கப்படும்.

[1991 செப்டம்பர் 16

## X. இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி.

சித்த மருத்துவம் ஆயுர்வேத மருத்துவம் யுனானி
மருத்துவம் ஆகிய இந்திய மருத்துவ முறைகள் முன் காலத்
தில் முழுமையும், மேன்மையும் பெற்று விளங்கின. இவை
மக்களின் இருப்பிடம், காலம், உணவு மற்றும் பழக்க வழக்
கங்களைக் கருத்திற்கொண்டு வகுக்கப்பட்ட சிகிச்சை
முறைகளைக் கொண்டவை. மருந்துச் செடிகள் மற்றும்
மூலிகைகளினால் தயாரிக்கப்படும் கஷாயம், சாறு ஆகியவற்
றின் சிறந்த மருத்துவப் பயன்பாட்டை மற்ற நாட்டு மக்
களும் பாராட்டி ஏற்றுக் கொண்டுள்ளனர். இந்த மருந்
துகள் மலிவானவை. எவ்வித பக்க விளைவுகளையும் ஏற்
படுத்தாதவை. இந்திய விடுதலைக்குப் பிறகு இந்திய அர
சும், தமிழக அரசும், இந்திய மருத்துவத்திற்கு கொடுத்து
வரும் ஆதரவினால் இந்திய மருத்துவ முறைகள் மீண்டும்
முக்கியத்துவம் பெற்றுள்ளன. சித்த மருத்துவ வளர்ச்சிக்
குத் தமிழக அரசு தனி முதன்மை கொடுத்து வரு
கிறது.

2. இந்திய மருத்துவ முறைகளுக்கு தனி ஊக்கம் அளிப்
பதற்காக 1970 ஜூலையில் இந்திய மருத்துவப் பணிகள்
ஒருங்கிணைக்கப்பட்டு ஒரே இயக்ககத்தின் கீழ் கொண்டு வரப்
பட்டன. இந்திய முறை மற்றும் ஓமியோபதி முறை மருத்
துவமனைகள், மருந்தகங்கள் ஆகியவற்றை நடத்துதல் ;
இம்முறை மருத்துவக் கல்லூரிகளை நிர்வகித்தல், இந்திய
முறை சிகிச்சைகளைப் பிரபலப்படுத்துதல், ஆராய்ச்சி
மற்றும் வளர்ச்சித் திட்டங்களை ஊக்குவித்தல் போன்ற
பணிகளுக்கு இத்துறை பொறுப்பேற்றுள்ளது. மூலிகைகளை
வளர்த்தல், இன்றியமையாத மருந்துகளை உற்பத்தி செய்
தல் போன்ற பணிகளையும் இத்துறை மேற்கொண்டுள்
ளது. தனியார் மருத்துவ நிலையங்கள் என்ற பெயரில்
தரமற்றவைகள் உருவாவதை இத்துறை கட்டுப்படுத்து
கிறது. யோகம், இயற்கை முறை வைத்தியம் மற்றும்
ஏனைய பாரம்பரிய மருத்துவ முறைகளின் மூலம் மருத்
துவ சிகிச்சை அளிப்பதற்கும் ஊக்கம் அளிக்கப்படு
கிறது.



1991 செப்டம்பர் 16]

### (i) சித்த முறை வைத்தியம்

3. கீழ்க்கண்ட நிலையங்களில் சித்த மருத்துவச் சிகிச்சை தற்பொழுது அளிக்கப்படுகிறது.

(அ) சித்த மருத்துவமனை :—

| | படுக்கைகளின் எண்ணிக்கை. | |
|---|---|---|
| 1. சித்த மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை, பாளையங்கோட்டை | 250 | |
| 2. அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவ மனை, சென்னை | 100 | |
| (சித்தா 65—வர்மம் 25, தொக்கணம் 10) | .. | 350 |
| 3. மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் உள்ள சித்த முறை பிரிவுகள், சிதம்பரம் வட்ட மருத்துவமனையில் 15 படுக்கைகள் | | 241 |
| | | 591 |

(இ) சித்தமுறைப் பிரிவுகள் (புறநோயாளிகளுக்கு மட்டும்).

| | நிலையங்களின் எண்ணிக்கை. |
|---|---|
| 1. மாவட்ட தலைமை மருத்துவ மனைகள் (சித்தமுறைப்பிரிவுகள் இல்லாதவை) | 8 |
| 2. வட்ட மருத்துவமனைகள் | 70 |
| 3. வட்ட மருத்துவமனைகள் அல்லாத மருத்துவமனைகள் | 13 |
| 4. ஆரம்ப சுகாதார நிலையங்கள் | 253 |
| | 344 |

[1991 செப்டம்பர் 16

| | | |
|---|---|---|
| (ஈ) | அரசினர் சித்த முறை மருந்தகங்கள் (கிராமங்களில் 21 மலைப்பகுதிகளில் 7 உட்பட ) | 39 |
| (உ) | நடமாடும் சித்த மருந்தகம் (சேலம் மாவட்ட மலைப்பகுதிகளில்) | 1 |

1991–92 ஆம் ஆண்டில் மேலும் 9 ஆரம்ப சுகாதார நிலையங்களில் சித்தமருத்துவப் பிரிவுகள் தொடங்கப்பட உள்ளன.

**அறிஞர் அண்ணா அரசு இந்திய முறை மருத்துவமனை, சென்னை.**

(4) இந்த மருத்துவமனை இந்திய மருத்துவ முறைகள்
மூன்றிலும் புற நோயாளிகளுக்கும், உள் நோயாளி
களுக்கும் சிகிச்சை அளிக்கிறது. இங்கு சித்த மருத்து
வத்திற்கு 100 படுக்கைகளும் ஆயுர்வேத மருத்துவத்
திற்கு 55 படுக்கைகளும் யுனானி மருத்துவத்திற்கு 54
படுக்கைகளும் உள்ளன. மூட்டுப் பிசகுதல் கழுத்து எலும்பு
விட்டுப் போதல் போன்ற நெடுநாள் நோய்களுக்கும், பல
நரம்பியல் நோய்களுக்கும் வர்ம முறை சிகிச்சையினால்
நல்ல பலன் கிட்டியுள்ளது. மகப்பேறு அறையுடன் கூடிய
10 படுக்கைகள் கொண்ட ஒரு மகப்பேறு பிரிவு கட்டு
வதற்கு அனுமதி வழங்கப்பட்டு, கட்டுமானப் பணி முடி
வுறும் தருவாயில் உள்ளது. இங்கு நோய்க் குறியியல் ஆய்
வுக் கூடம், உயிர்வேதியியல் ஆய்வுக் கூடம், எக்ஸ்ரே பிரிவு
மற்றும் மருத்துவ ஆவணப் பிரிவு ஆகியவைகள் செயல்படுகின்
றன. இங்குள்ள மருந்தாக்கியல் பிரிவு, இந்திய முறைகள் மூன்
றையும் சார்ந்த மருந்துகளையும் மருந்துப் பொருட்களையும்
தயாரிக்கிறது. இது மருத்துவ மனையின் தேவைகளையும்
இத்துடன் இணைந்துள்ள ஏழு சித்த மருந்தகங்களின் தேவைகளை
யும் பூர்த்தி செய்கிறது. இம்மருத்துவமனை மருந்தாக்கியியலில்
(சித்த) இரண்டு வருட பட்டயப்படிப்பு நடக்கிறது. இதற்கு
ஆண்டு தோறும் 50 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்
கள்.

**சித்த மருத்துவக் கல்வி :**

5. பாளையங்கோட்டையில் ஒன்றும் பழனியில் ஒன்றுமாக அரசினர் சித்த மருத்துவக் கல்லூரிகள் இரண்டு செயல்படுகின்றன பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி 5½ வருட பி.எஸ்.எம்.எஸ். படிப்பும் (ஆண்டுதோறும் சேரும் மாணவர்கள் 100) 3 வருட எம்.டி. (சித்தா) படிப்பும் (ஆண்டு தோறும் சேரும் மாணவர்கள் 41) கற்பிக்கப்படுகின்றன. இங்கு 2 வருட மருந்தாளுநர் பட்டயப்படிப்பும் கற்பிக்கப்படுகிறது



1991 செப்டம்பர் 16]

(50 இடங்கள்). இக்கல்லூரியுடன் இணைந்துள்ள மருத்துவமனையில் 250 படுக்கை வசதிகள் உள்ளன. இக்கல்லூரியிலுள்ள மருந்தாக்கியல் பிரிவு, மருத்துவமனைக்கு தேவையான மருந்துகளையும், மருந்துப் பொருட்களையும் தயாரிக்கிறது. விடுதிக் காப்பாளர்களுக்கு குடியிருப்புகளும், மாணவ, மாணவியர்களுக்குத் தனித்தனி விடுதிகளும் கட்டப்பட்டுள்ளன.

6. பழனியிலுள்ள அரசு சித்த மருத்துவக் கல்லூரி 1985 நவம்பரில் வாடகைக் கட்டிடத்தில் தொடங்கப்பட்டது. இக்கல்லூரி மற்றும் மருத்துவமனைக்கான கட்டிடங்கள் பழனிநகருக்கருகே சிவகிரிப்பட்டி கிராமத்தில் கட்டப்படுகின்றன. சித்த மருத்துவப் பட்டப்படிப்பு வகுப்பில் ஐந்தாமாண்டு வகுப்பு 1990இல் இக்கல்லூரியில் தொடங்கி நடைபெற்று வந்தது. இக்கல்லூரி மாணவர்கள் பயிற்சிக்கென்று தேவையான பணியாளர்கள் உபகரணங்கள் ஆகியவற்றுடன் 25 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை அமைக்க ஏற்பளிக்கப்பட்டுள்ளது. 1991–92-ல் ரூ. 3 இலட்சம் செலவில் இக்கல்லூரிக்குகூடுதல் பணியாளர்களும் வசதிகளும் வழங்கப்படும்.

**மருந்தாக்கியல் பிரிவுகள் :**

7. அறிஞர் அண்ணா மருத்துவமனையில் ஒன்றும், பாளையங்கோட்டை சித்த மருத்துவக் கல்லூரியில் ஒன்றுமாக மருந்தாக்கியியல் பிரிவுகள் இரண்டு உள்ளன. 1989 சனவரியிலிருந்து பாளையங்கோட்டையைச் சார்ந்த வண்ணாரப்பேட்டையில் வட்டார மருந்தாக்கியல் பிரிவு ஒன்று செயல்பட்டு வருகிறது. தென் மாவட்டங்களிலுள்ள சித்த மருத்துவப் பிரிவுகளுக்குத் தேவையான மருந்துகளை இது தயாரிக்கிறது. இரண்டாவதாக இன்னொரு வட்டார மருந்தாக்கியல் பிரிவை அமைப்பதற்காகப் புதுக்கோட்டையில் கட்டிடம் அண்மையில் கட்டப்பட்டுள்ளது.

**அரிய சித்த மருத்துவ சுவடிகளை அச்சிடுதல்:**

8. முன்னாள் தமிழ்நாடு சித்த மருத்துவ வாரியம் பின்வரும் அரிய சித்த மருத்துவப் புத்தகங்கள், சுவடிகள் முதலியவற்றை சேகரித்துள்ளது :

| | | |
|---|---|---|
| (1) | கிடைத்தற்கரிய, மீண்டும் அச்சிடப்பட்ட புத்தகங்கள். | 978 |
| (2) | பனை ஓலைச் சுவடிகள் | 870 |
| (3) | தாள் சுவடிகள் | 246 |
| (4) | தட்டச்சுப் பிரதிகள் | 368 |
| (5) | ஏற்கெனவே வெளியான சித்த மருத்துவ நூல்கள் | 78 |

1989–90 முடிய பனை ஓலைச் சுவடிகள் 67 கட்டுகள் எடுத்தெழுதப்பட்டுள்ளன. 1990–91-ல் மேலும் 27 கட்டுகள் ஓலைச் சுவடிகள் எடுத்தெழுதப்பட்டுள்ளன. இந்திய மருத்துவ இயக்கத்திலுள்ள விற்பனைப் பிரிவில் பொது மக்களுக்கு சித்த ஆயுர்வேத, யுனானி மருத்துவப் புத்தகங்கள் விற்கப்படுகின்றன.

9. சென்னை அறிஞர் அண்ணா மருத்துவமனை வளாகத்தில் மருந்து சோதனை ஆய்வுக்கூடம் ஒன்று நிறுவவும் ஏற்பளிக்கப்பட்டுள்ளது.

பரம்பரை சித்த மருத்துவர்களுக்கு முதியோர் உதவித் தொகை.

10. 60 வயதும் அதற்கு மேற்பட்ட வயதுள்ள பரம்பரை சித்த மருத்துவர்கள் (தமிழ் நாடு இந்திய முறை மருத்துவ வாரியத்தில் 'பி' வகையிலோ அல்லது 'சி' வகையிலோ பதிவு செய்துள்ள) பணிபுரிய இயலாத நிலையில் அல்லது வாழ்க்கையை நடத்துவதற்கான வருவாயை ஈட்ட இயலாத நிலையில் இருந்தால் அவர்களுடைய ஆண்டு வருமானம் ரூ. 6,000-க்குக் குறைவாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு அவர்களுக்கு திங்கள் ஒன்றுக்கு ரூ. 150 வீதம் உதவித்தொகை வழங்கப்படுகிறது. இந்த முதியோர் உதவித் தொகை வழங்கும் அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குத் தரப்பட்டுள்ளது.

மத்திய சித்த ஆராய்ச்சி நிலையம் :

11. மத்திய (சித்தமுறை) ஆராய்ச்சி நிலையம், சென்னை அறிஞர் அண்ணா அரசு இந்திய முறை மருத்துவ மனை வளாகத்தில் செயல்படுகிறது. இந்நிலையம் டில்லியிலுள்ள ஆயுர்வேதசித்த மருத்துவ மத்திய ஆராய்ச்சி மன்றத்தின் கீழ் இயங்குகிறது. இந்நிலையத்தில் 30 படுக்கை வசதியுடன் கூடிய நோயாளிகளின் சிகிச்சைப் பிரிவும் உள்ளது. இந்நிலையம் புற்று நோய், நீரிழிவு நோய், மஞ்சள் காமாலை, நமட்டுச் சொறி முதலிய நோய்கள் பற்றி ஆராய்ச்சி செய்கிறது.

தேசிய சித்த மருத்துவ நிறுவனம் :

12. செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம் பனப்பாக்கம் கிராமத்தில் தேசிய சித்த மருத்துவ நிறுவனம் அமைக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. வருங்காலத்தில் இந்நிறுவனம் 500 படுக்கைகள் மற்றும் சித்த மருத்துவ கல்லூரி ஆகியவற்றைக் கொண்டதாக இருக்கும். இந்த திட்டத்தை விரைவாக செயல்படுத்த ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்நிறுவன அமைப்புப் பணிக்காக இணைமானியமாகத் தர 1991–92-ல் ரூ. 5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.





(ii) ஆயுர்வேதம்.

13. சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவமனையில் ஆயுர்வேத மருத்துவமுறைப்படி சிகிச்சை பெற தனி மருந்தகப் பிரிவு/புற நோயாளிப்பிரிவு, 55 படுக்கைகள் கொண்ட உள்நோயாளிகள் வார்டு ஆகியவை உள்ளன. 5 ஆயுர்வேத மருந்தகங்கள் (கன்னியாகுமரி மாவட்டத்தில் மூன்றும், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் 1-ம் புதுக்கோட்டை மாவட்டத்தில் 1-ம்) மற்றும் தூத்துக்குடி, திண்டுக்கல், நாகப்பட்டினம் ஆகிய இடங்களிலுள்ள மாவட்ட தலைமையிட மருத்துவமனைகளில் (பஞ்சகர்மா சிகிச்சைப்பிரிவு உட்பட) 3 ஆயுர்வேத சிகிச்சைப் பிரிவுகள் உள்ளன.

14. தனியார் ஆயுர்வேத மருத்துவக் கல்லூரிகள் 2 அதாவது சென்னை மைலாப்பூரில் வெங்கடரமணா ஆயுர்வேதக் கல்லூரியும் மற்றும் கோயம்புத்தூரில் ஆரியவைத்திய இராமவாரியர் நிறுவனம் அமைத்த ஆயுர்வேதக் கல்லூரியும் செயல்பட்டு வருகின்றன. சென்னை மத்திய (சித்த) ஆராய்ச்சி நிறுவனக் கட்டிடத்தில் காப்டன் சீனிவாசமூர்த்தி ஆராய்ச்சி நிறுவனம் (ஆயுர்வேத, சித்த முறை மருத்துவ மத்திய ஆராய்ச்சி நிறுவனம் அமைத்தது) ஆயுர்வேதத்தில் ஆய்வுகளை நடத்தி வருகிறது.

(iii) யுனானி மருத்துவ முறை.

15. அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவ மனையில் 54 படுக்கைகள் கொண்ட அக நோயாளி வார்டும் புறநோயாளிகள் பிரிவும் உள்ளன. செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம் மீஞ்சூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் யுனானி மருத்துவம் 1990 லிருந்து செயல்பட்டு வருகிறது.

16. அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவ மனை வளாகத்தில் யுனானி மருத்துவக் கல்லூரி செயல்பட்டு வருகிறது. இக்கல்லூரியில் ஆண்டு தோறும் 16 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள்.

17. மத்திய யுனானி மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் சென்னை இராயபுரத்தில் வட்டார யுனானி ஆராய்ச்சி நிலையம் நிறுவியுள்ளது. அதற்காக மாநில அரசு 3 ஏக்கர் நிலத்தை அளித்துள்ளது.

(iv) ஓமியோபதி :

18. மதுரை மாவட்டம் திருமங்கலத்தில் 25 படுக்கை வசதிகள் கொண்ட அரசினர் ஓமியோபதி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஓமியோபதி மருத்துவ முறை மருத்துவமும் மருத்

[1991 செப்டம்பர் 16

துவக் கல்வியும் அளிக்கப்படுகிறது. இக்கல்லூரியில் ஆண்டுதோறும் 22 மாணவர்கள் சேர்க்கப்பட்டு 5½ ஆண்டு பி.எச்.எம்.எஸ்., மருத்துவப் பட்டப் படிப்பு பயில்கின்றனர். ஓமியோபதி மருந்தகங்கள்] தலைமையிட மருத்துவமனைகளில் 19-லும், சென்னையில் 5-லும் மற்றும் வட்டார மருத்துவமனைகள் 6-லும் உள்ளன.

(v) இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி மருத்துவத்தில், மருத்துவப் பணியாற்றும் பதிவு செய்துள்ள மருத்துவர்கள்.

19. 31—12—1990 நிலவரப்படி இந்திய மருத்துவ முறைகளில் மருத்துவம் செய்யும் பதிவு செய்துள்ள மருத்துவர்களின் விவரம் வருமாறு :

| | | தமிழ்நாடு இந்திய மருத்துவ வாரியத்தின் கீழ். | சென்னையிலுள்ள ஒருங்கிணைக்கப்பட்ட மருத்துவ வாரியத்தின் கீழ். |
|---|---|---|---|
| (1) | | (2) | (3) |
| சித்த முறை | .. .. | 10,328 | 296 |
| ஆயுர்வேதம் | .. .. | 2,718 | 431 |
| யுனானி | .. .. | 762 | 46 |
| | | 13,808 | 773 |

ஓமியோபதி கவுன்சிலில் பதிவு செய்துள்ளவர்கள் (ஏ-பிரிவு 438, பி-பிரிவு 13,970, சி-பிரிவு 1,206). 15,614

(vi) இயற்கை முறை மருத்துவமும் யோகாசனப் பயிற்சியும்:

20. இதுவரை தமிழ்நாடு அரசு மூலமாக 15 பேர் ஐதராபாத்தில் இயற்கை முறை மருத்துவப் பட்டயப் படிப்பு படித்துள்ளனர். செங்கல்பட்டு எம்.ஜி. ஆர். மாவட்டம் மூட்டுக்காட்டில் 10 படுக்கை வசதிகள் கொண்ட இயற்கை முறை மருத்துவமனை ஆரம்பிக்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது.



1991 செப்டம்பர் 16]

(vii) தமிழ்நாடு மருத்துவ மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருத்துவக்கழகம் :

21. தமிழ்நாடு மருத்துவ மூலிகைப் பண்ணை மற்றும் மூலிகை மருத்துவக் கழகம், ரூ. 50 இலட்சம் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனத்துடனும் ரூ. 20.75 இலட்சம் செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்துடனும் 1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் கீழ் பதிவுப் செய்யப்பட்ட நிறுவனமாகும். இக்கழகத்தின் முக்கிய நோக்கங்கள் வருமாறு :

(அ) அரிய பொதுவான மருத்துவ மூலிகைகளைக் கண்டறிந்து அவற்றை வளர்த்தல்.

(ஆ) இந்திய முறை மருத்துவம் தொடர்பாக அரசு மருத்துவமனைகளுக்கும், தனியாருக்குத் தேவையான மூல மருத்துவப் பொருட்களையும், மூலிகைகளையும், வழங்குதல்.

(இ) மூலிகையை அடிப்படையாகக் கொண்ட நுகர்பொருட்களையும், மருந்துகளையும் தயாரித்து விற்பனை செய்யும் தொழிலில் ஈடுபடுதல்.

(ஈ) சித்த மருத்துவம் சார்ந்த மூலிகைப் பொருட்களை ஏற்றுமதி, இறக்குமதி செய்யும் தொழிலை மேற்கொள்ளுதல்.

22. வலி நிவாரண மூலிகை மருந்து மற்றும் மூலிகை சோப்பு ஆகிய மருந்துப் பொருட்களை டாம்ப்கால்' அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளது. மூலிகை க்ரீம் தயாரிப்பு சமீபத்தில் துவக்கப்பட்டுள்ளது.

23. கொல்லிமலை (105 ஏக்கர்) செங்காட்டு தோப்பு (33 ஏக்கர்) மற்றும் அரும்பாக்கத்திலும் (10 ஏக்கர்) மருத்துவ மூலிகைகள் வளர்க்க பெரிய அளவிலான மூலிகைப் பண்ணைகள் டாம்ப்கால் கழகம் வைத்துள்ளது. சித்த முறை மருத்துவத்தில் சாஸ்திரிய முறை மருந்துகளையும், உயிர்காக்கும் மருந்துப் பொருட்களையும் தயாரிப்பதற்காக இக்கழகம் மாமல்லபுரத்திற்கு அருகிலுள்ள ஆலத்தூரில் சிட்கோ நிறுவனம் கட்டிய தொழிற்சாலையை வாங்கியுள்ளது. தற்போது இக்கழகம் பதினொரு சித்த மருந்துகளை தயாரித்து வருகிறது.

24. 1990-91 ஆம் ஆண்டு இக்கழகம் ரூபாய் 86 இலட்சத்திற்கு நுகர்வோர் பொருட்கள், ரூபாய் 21 இலட்சத்திற்கு செய்முறைப்படுத்தப்படாத மருந்துப் பொருட்கள், ரூபாய் 6 இலட்சத்திற்கு ஏனைய பொருட்கள் ஆக மொத்தம் ரூ. 113 இலட்சத்திற்கு பொருட்களை விற்பனை செய்தது.

[1991 செப்டம்பர் 16

## இணைப்பு—2.

### சுற்றுப்புறம் மற்றும் வனத்துறை.

**சுற்றுப்புறச் சூழல் கட்டுப்பாடு கொள்கை விளக்கக் குறிப்பு.**

மனிதன், விலங்குகள், செடி, கொடிகள், மரங்கள், நீர், காற்று மற்றும் மண் ஆகியவை ' சேர்ந்து சுற்றுப்புறமாக அமைகிறது. விரைந்து பெருகும் மக்கள் தொகை மற்றும் தொழிற்சாலைகள் காரணமாக காற்று, நீர் முதலியன மாசுபடு கின்றன. இவற்றிற்குத் தூய்மைக்கேடு பல்வேறு ஆதாரங் களைக் கண்டறிந்து அவற்றைத் தடுத்து நமது சுற்றுப்புறச் சூழலை பாதுகாக்க வேண்டியதன் அவசியம் சமீப காலங் களில் மிகவும் உணரப்படுகிறது. சுற்றுப்புறச் சூழல் மிகுந்த பாதிப்பிற்கு உள்ளாகி வருகிறது. நகர்ப்புறங்களில் மக்கள் தொகை பெருகி வருவதனால் எல்லா இடங்களிலும் குடிசைப் பகுதிகளும் பெருகி வருகின்றன. சென்னை நகரில் கழிவு நீரும் சாக்கடை நீரும் சுத்திகரிக்கப்படாமல் கூவம், அடையாறு பக்கிங்காம் கால்வாய் போன்ற நீர் வழிகளில் நேரடியாகக் கலப்பதனால் சுற்றுப்புறங்கள் அசுத்தமாக மக்கள் சுகாதாரத் திற்கு கேடுவிளைவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதே நிலைமை தொடர்ந்து நீடிக்குமானால் சென்னை மாநகரின் சுகாதாரமே பாதிக்கப்படும் சூழ்நிலை ஏற்படும். எனவே பல்வேறு துறை களும் பல்வேறு மட்டங்களில் பொறுப்பேற்று சுற்றுப்புறச் சூழலுக்குப் பாதிப்புகள் ஏற்படாமல் பராமரிப்பு செய்யும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். எந்த ஒரு பெரிய திட் டத்தையும் நிறைவேற்ற எடுத்துக்கொள்வதற்கு முன்னர் அந்த திட்டத்தினால் சுற்றுப்புறச் சூழலுக்கு ஏற்படக்கூடும் பாதிப்புகளைப் பற்றி அறிந்து உணர்வது திட்டத்தினைத் தீட்டும் துறை பொறுப்பாக இருக்க வேண்டும். சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புப் பணியில் பொதுமக்கள், மாணவ மாணவி யர் மற்றும் பொதுத் தொண்டு செய்யும் நிறுவனங்களின் பங்கு மிக முக்கியம். தொழிற்சாலைகளினால் நீருக்கும், காற் றுக்கும் விளையும் தூய்மைக்கேடு வரைமுறையில்லாமல் சாலைகள் போடுதல், கட்டிடங்கள் கட்டுதல், மண் அரிப்பு கனிமங்களை வெட்டுதல், தாவரங்கள் மற்றும் விலங்கினங் களை அழித்தல், கேடு விளைவிக்கும் இரசாயனப் பொருட் களை பயன்படுத்துதல் மற்றும் சுகாதாரமற்ற கழிவுநீர் வடிகால் அமைப்புகள் போன்றவை சுற்றுப்புறச் சூழல் சம் பந்தப்பட்ட பிற பிரச்சினைகள் ஆகும். 1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1981 ஆம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், ஆகிய சட்டங்களைத் தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தி யும், 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரி



1991 செப்டம்பர் 16]

யத்தை நிறுவியதும், 1983 ஆம் ஆண்டில் அரசு மாசுக் கட்டுப் பாடு துறையை ஏற்படுத்தியதும் இப்பெரும் பிரச்சினையைச் சமாளிக்க எடுத்த ஆரம்ப நடவடிக்கைகள் ஆகும்.

மாசுக் கட்டுப்பாட்டிற்கென்று தமிழ்நாடு மாசுக் கட்டுப் பாடு வாரியமும் அரசு சுற்றுப்புறச் சூழல் துறையும் எடுத்து வரும் பல்வேறு நடவடிக்கைகள் இந்த கொள்கை விளக்கக் குறிப்பில் விளக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் :

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் 1982 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. வாரியம் கீழ்க்கண்ட சட்டங்களை நடை முறைபடுத்தி வருகிறது :—

(1) 1974 ஆம் ஆண்டு நீர் (மாசுத் தடுப்பு மற்றும் கட்டுப் பாடு) சட்டம்.

(2) 1977 ஆம் ஆண்டு நீர் (மாசுத் தடுப்பு மற்றும் கட்டுப் பாடு) மேல் வரிச் சட்டம்.

(3) 1981 ஆம் ஆண்டு காற்று (மாசுத் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம்.

(4) 1986 ஆம் ஆண்டு சுற்றுப்புறச் சூழல் (பாதுகாப்பு) சட்டம்.

நீர் மற்றும் காற்று மாசுக் கட்டுப்பாடு சட்டங்களின்படி புதிதாகத் தொடங்கவிருக்கும் அனைத்து தொழிற்சாலை களும் மற்றும் ஏற்கனவே இயங்கிவரும் தொழிற்சாலை களும், அவற்றில் இருந்து வெளியேறும் கழிவு நீரை ஓடை யிலோ அல்லது கிணற்றிலோ அல்லது சாக்கடையிலோ அல் லது நிலத்திலோ செலுத்துவதற்கும், காற்று மாசுத் தடுப்பு பகுதியில் தொழிற்சாலைகளை இயக்குவதற்கும் இவ்வாரியத் தின் அனுமதிக்கு விண்ணப்பிக்க வேண்டியது அவசியமாகும். மாநிலம் முழுவதுமே, காற்று, மாசுக் கட்டுப்பாடு பகுதி யாக அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் வழங்கும் அனுமதி ஆணையில் தொழிற்சாலைகளிலிருந்து வெளி வரும் கழிவு நீர் மற்றும் சில வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ள தொழிற்சாலைகள் வெளியேற்றும் காற்று ஆகியவற்றின் தரங்கள் இவ்வாறாகத் தான் இருக்க வேண்டும் என்று குறிப்பிடப்படுகிறது. அனுமதி ஆணை ஆண்டு தோறும் மார்ச் திங்கள் வரை வழங்கப்படு கிறது. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் இதுவரை

1974 ஆம் ஆண்டு நீர் (மாசுத் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் கீழ் 6,668 தொழிற்சாலைகளுக்கும் 1981 ஆம் ஆண்டு காற்று (மாசுத் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் கீழ் 4,268 தொழிற்சாலைகளுக்கும் அனுமதி அளித்துள்ளது.

மாநிலம் முழுவதிலும் உள்ள தொழிலகங்களுடன் தொடர்பு கொண்டு சேவை புரிய வேண்டும் என்பதை உணர்ந்ததால், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் செயல்படும் முறை 1–12–1988 முதல் திருத்தியமைக்கப்படது. வாரியத்தில் 5 வட்டார அலுவலகங்கள் சென்னை, வேலூர், கோயம்புத்தூர். திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் முதுநிலை சுற்றுப்புற சூழல் நலபொறியாளர்களின் தலைமையில் இயங்குகிறது. செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். (வடக்கு மற்றும் தெற்கு) வட ஆற்காடு அம்பேத்கார், கோயம்புத்தூர் பெரியார், நீலகிரி, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, சிதம்பரனார், மதுரை, சேலம், தருமபுரி, கன்னியாகுமரி மற்றும் அண்ணா ஆகிய மாவட்டங்களில் மாவட்ட சுற்றுப்புற சூழல் நலப் பொறியாளர் நியமிக்கப்பட்டுள்ளனர். தொழிற்சாலை துவங்க விருப்பமுள்ளவர்களிடமிருந்து மாவட்ட அலுவலகங்கள், விண்ணப்பப் படிவங்களைப் பெற்று ஆய்வு செய்கின்றன. மாவட்ட அலுவலர்கள் தங்கள் எல்லைக்குட்பட்டிருக்கும் தொழிற்சாலைகளை மேற்பார்வையிட்டு அவை சரியான மாசுக் கட்டுப்பாடு வழிமுறைகளைப் பின்பற்றுகின்றனவா என்று கண்காணிக்கின்றனர். பொது மக்களிடமிருந்து மாசுக் கட்டுப்பாடு வழிமுறைகளை மீறுவது பற்றி பெறப்படும் புகார் மனுக்கள் மீதும் மாவட்ட அலுவலகங்களில் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ''பச்சை'' பிரிவு தொழிற்சாலைகள் (மாசு விளைவிக்காதவை) சம்பந்தமாக பெறப்படும் விண்ணப்பங்கள் குறைகள் ஏதும் இல்லாத நிலையில், விண்ணப்பம் பெறப்பட்ட 45 தினங்களுக்குள் ஒப்புதல் வழங்கப்பட்டுவிடவேண்டும் என்பதை வாரியம் தனது குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் மாவட்டங்கள் அளவில் நல்ல நிர்வாக அமைப்புக்களைக் கொண்டுள்ளதால் எந்த ஒரு புகாரையும் கிடைக்கப் பெற்ற 24 மணி நேரத்திற்குள் விசாரணை செய்யும் நிலையில் உள்ளது. நிர்வாக அமைப்பில் இவ்வாரியம் பாரதத்தில் தலை சிறந்ததாக திகழ்கிறது.

**ஆய்வுக்கூடம் :**

அறிவியல் ஆய்வுகள் சம்பந்தமான விஷயங்களில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்திற்கு உதவுவதற்கு வாரியத்தில் மூன்று மேம்படுத்தப்பட்ட அய்வகங்கள் சென்னை,



மதுரை மற்றும் சேலத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் வாரியம் நான்கு மாவட்ட ஆய்வகங்களை மறைமலை நகர், அம்பத்தூர், வேலூர் மற்றும் கடலூரிலும் 6 நடமாடும் ஆய்வகங்களையும் ஏற்படுத்தியுள்ளது. சென்னையில் உள்ள மத்திய ஆய்வகம், தண்ணீர் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீர் மற்றும் காற்றில் கலந்துள்ள மாசுகளை ஆய்வதற்கான நவீன சாதனங்களைப் போதுமான அளவில் பெற்றுள்ளது. சுற்றுப்புறச் சூழல் பொறியியல் துறையில் ''டாக்டர்'' பட்டம் பெறுவதற்கான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு திட்டங்களை ஆய்வு செய்ய உதவும் மையமாக வாரிய ஆய்வகத்தைச் சென்னை பல்கலைக் கழகம் அங்கீகரித்துள்ளது. இந்த ஆண்டில் வாரியம் மாவட்ட சுற்றுப்புற ஆய்வகம் ஓசூர் மற்றும் தூத்துக்குடியில் ரூபாய் 17.72 இலட்சம் செலவில் நிறுவ உத்தேசித்துள்ளது.

**கண்காணிப்பு :**

நல்ல நிர்வாக ஏற்பாட்டின் காரணமாக மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர்கள் தங்கள் நிர்வாக எல்லைக்குள் உள்ள எல்லாத் தொழிற்சாலைகளையும் அவ்வப்போது ஆய்வு செய்து கண்காணித்து வருகின்றனர். மிக அதிகமாக மாசு விளைவிக்கக் கூடியவை என்ற வகையைச் சேர்ந்த ''சிகப்பு'' பிரிவு தொழிற்சாலைகளையும் புதிய தொழிற்சாலைகளுக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களையும் மாவட்ட சுற்றுப்புறச் சூழல் பொறியாளர்களே நேரில் சென்று ஆய்வு செய்யவேண்டும் என்று ஆணையிடப்பட்டுள்ளது. இதுவரை 1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் கீழ் 301 வழக்குகளையும் 1981-ஆம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் கீழ் 120 வழக்குகளையும் வாரியம் தொடுத்துள்ளது. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் எடுத்துக் கொண்ட விடா முயற்சியின் காரணமாக பல தொழிற்சாலைகள் கழிவு நீர்ச் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணியை மேற்கொண்டுள்ளன. தோல் பதனிடும் தொழிற்சாலைகளைப் பொறுத்தமட்டில் 52 தொழிற்சாலைகள் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைந்துள்ளன. 142 தொழிற்சாலைகளில் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி நடந்து வருகிறது. தற்போது வட ஆற்காடு அம்பேத்கார் மற்றும் அண்ணா மாவட்டங்களில் தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் கழிவு நீர் சுத்திகரிப்புக்கென பொதுவான கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கும் பணியில் தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சிக் கழகம் ஈடுபட்டுள்ளது, வாணியம்பாடி, ஆம்பூர், பேர்ணாம்பட்டு, இராணிப்பேட்டை, திண்டுக்கல் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்காக பொதுவான கழிவு நீர்ச் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது, வாணியம்பாடியில் சுத்திகரிப்பு நிலையப்

அமைக்கும் பணி முடியும் தருவாயில் உள்ளது. ஆம்பூர், பேர்ணாம்பட்டு மற்றும் இராணிப்பேட்டை ஆகிய இடங்களில் பொது கழிவு நீர்ச் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க தேர்ந்தெடுத்துள்ள இடங்களுக்குத் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் ஒப்புதல் வழங்கியுள்ளது. பல நெசவு ஆலைகளும், இரசாயன தொழிற்சாலைகளும், பால் பண்ணைகளும் கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்துள்ளன.

பம்மல் பகுதியில் உள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்கென்றே ஒரு பொதுவான கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்து அதனை இயக்கும் பொருட்டு தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் ஒரு புதிய வழிமுறையை பின்பற்றியுள்ளது. அங்குள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகளின் உரிமையாளர்களை ஒன்று சேர்த்து ஒரு நிறுவனத்தை உருவாக்கி, இந்நிறுவனம் ரூ. 30 இலட்சம் மூலதனம் தீட்டியுள்ளது. இத்திட்டத்திற்காக வாரியத்தின் உதவியுடன் தேசிய மயமாக்கப்பட்ட வங்கி ஒன்றிடமிருந்து ரூ. 1.50 கோடி கடனுதவியும் பெற்றுள்ளது.

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் பம்மல், ஈரோடு, திருப்பூர் மற்றும் அய்யம்பேட்டை, முத்தையால்பேட்டை ஆகிய இடங்களில் பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மத்திய அரசின் உதவியோடு கட்டுவதற்கு தீர்மானித்துள்ளது. இதற்காக மத்திய அரசு 25 சதவீதம் மூலதனமான ரூ. 160 இலட்சத்தினை பொது சுத்திகரிப்பு நிலையம் கட்டுவதற்கு ஒதுக்கியுள்ளது.

அவசர நிலை மறு மொழி (பதில்) மையம் அமைத்தல் :

சென்னையை சுற்றியுள்ள மணலி பகுதி, நாட்டிலுள்ள முக்கியமான தொழிற்சாலை பகுதியாக தோன்றி வருகிறது. மேலும் அப்பகுதி உன்னதமான தொழிற் நுட்பத்தை பயன்படுத்தும் வெவ்வேறு தொழிற்சாலைகளை கொண்டது. முக்கியமாக அவைகளை எல்லாம் வெளியிலுள்ள பெரும் சமுதாயத்திற்கும், தொழிற்சாலைகளிலுள்ள பணியாளர்களுக்கும் நிலை சக்தி (மறைந்திருக்கும் சக்தி) அபாயம் விளைவிக்கும் தொழிற்சாலை இடங்களாகும்.

முக்கியமான சுற்றுபுறச் சூழல் அபாயங்களுக்குள்ளாக்குதலை தவிர்க்கும் நோக்குடன் ரூ. 58.44 இலட்சம் செலவில் அபாயகரமான தொழிற்சாலை இடங்களுக்கும் அபாயகரமான தகவல் பணியை அளிக்க, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் அவசர நிலை மறு மொழி மையம் நிறுவப்பட உள்ளது. இந்த மையம் ஆபத்து அறிக்கை, தகவல் ஆராய்ச்சி, பூர்த்தியான வழிகாட்டுதல், அடக்குதல் மற்றும் குறைத்தல், வெளிப்புற ஏஜென்சிகளான நிபுணர்கள், யோசனைக்காரர் ஆய்வுக் கூடங்களிலிருந்து பெறும் வெளியார் உதவி போன்ற முறைகளை உள்ளடக்கும்.



மாசு கட்டுப்பாடு வாரியம் மேம்படுத்தப்பட்ட சுற்றுப்புற சூழல் நல ஆய்வகத்திற்காக நிரந்தரமான கட்டிடங்கள் கட்டுவது :

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் 1982 பிப்ரவரி 27-ம் நாள் உருவமைக்கப்பட்டது. அன்றிலிருந்து வாரியத்தின் செயல்பாடுகள் நிலையாக வளர்ந்துள்ளது. மேலும் தற்பொழுது 4 மண்டல அலுவலகங்களையும் 16 மாவட்ட அலுவலகங்களையும், 3 மேம்படுத்தப்பட்ட சுற்றுப்புறச் சூழல் நல ஆய்வகங்களையும் கொண்டுள்ளது. மேலும் தேசிய அபிவிருத்தி நிர்வாகம் (ODA) மேம்படுத்தப்பட்ட ஆய்வகத்திற்கு பகுப்பாய்வு சாதனங்கள் மற்றும் தொழில்நுட்ப கருவிகள் வாங்குவதற்காக 1,20,000 † அளிக்க முன்வந்துள்ளது. இந்த கருவிகளை வைத்து பராமரிப்பதற்கு நிரந்தரமான கட்டிடங்கள், அரசிடமிருந்து பெறப்பட்ட நிலத்தில் கட்டுவதற்கு அரசிடம் இருந்து ஆணைகள் பெற்றவுடன் கட்டப்பட உள்ளது.

வாரிய செயற்பாடுகளை கணிபொறி மயமாக்குதல் :

தற்பொழுது வாரியத்தின் எல்லா செயல்பாடுகளும் மனிதரால் செய்யப்படுகிறது. தொழிற்சாலைகளின் எண்ணிக்கை வளர்ந்து கொண்டே செல்வதால் மாசு பிரச்சினைகள் அதிகரித்து மனிதரால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளில் அனேக கடஷ்ங்கள் உண்டாகிக் கொண்டிருக்கின்றன. எனவே தகவல் குறிப்புகளை பகுப்பாய்வு செய்தல் கணிப்பொறி மயமாக்கப்பட உள்ளது. ஷாப்ட்வேர் மற்றும் சில ஹார்டுவேர்கள் சேகரித்தல் தொடங்கப்பட்டபோதிலும் முக்கிய பகுதிகள் ரூ. 30 இலட்சம் செலவில் 1991-92-ல் கணிப்பொறி மயமாக்கப்பட உள்ளது.

தொழில்நுட்ப நூலகம் :

நவீன வசதிகள் தகவல் (அதாவது வீடியோ கேசட், தொழில் நுட்ப புத்தகங்கள்) போன்றவற்றுடன் கூடிய இந்த துறையில் முதன்மை வாய்ந்த நூலகமாக்க ரூ. 50 இலட்சம் செலவில் தொழில் நுட்ப நூலகம் நிறுவப்பட உள்ளது.

தொழிற்சாலைகளின் அபாயகரமான கழிவுகள் பற்றி குழு அமைத்தல் :

விரைவான தொழில் வளர்ச்சியின் காரணமாக வாரியம் அடிக்கடி பல அவசரமான நிலைகளை சந்திக்க வேண்டியுள்ளது. சுற்றுப்புறசூழல் (பாதுகாப்பு) சட்டம் 1986-ன் கீழ் அபாயகரமான கழிவுகள் (மேற்பார்வை மற்றும் கையாளுதல்) விதிகள், 1989-ஐ மத்திய அரசு இயற்றியுள்ளது. அபாயகரமான கழிவுகளை சேமித்து வைத்தல், கையாளுதல் மற்றும்

[1991 செப்டம்பர் 16

வெளியேற்றுதல் போன்றவற்றை கண்காணிக்க மாசு கட்டுப்பாடு வாரியத்தை அனுமதித்துள்ளது. இதற்காக உயர் அதிகாரிகளின் தலைமையில், அபாயகரமான கழிவுகளை கண்டறிந்து அப்புறப் படுத்த குழு ஒன்று வாரியத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் சுற்றுப்புறச் சூழ்நிலை களைக் கண்காணிப்பதற்காக சில சிறப்பு திட்டங்களை மேற் கொண்டுள்ளது. அவை கீழ்வருமாறு :

1. உலக சுற்றுப்புறச் சூழல் கண்காணிப்புத் திட்டம் :

உலக சுகாதார நிறுவனம், உலக வானிலைக் கழகம், உலக கல்வி மற்றும் கலாச்சாரக் கழகம், ஐக்கிய நாட்டு சுற்றுப்புறச்சூழல் கழகம் ஆகிய அமைப்புகளால் கூட்டாக ஆரம்பிக்கப்பட்ட உலக சூழல் கண்காணிப்புத் திட்டத்தில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் பங்கேற்றுள்ளது. நமது மாநிலத்தில் காவிரி ஆறு இந்தத் திட்டத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. மாதந்தோறும் காவிரியின் மேற்பரப்பு நீர் மாதிரிகள் சேகரிக்க முசிறி, மேட்டூர் மற்றும் திருச்செங்கோடு ஆகிய இடங்களில் மூன்று நிலையங்கள் அமைக்கப்பட்டு நீர் மாதிரிகள் சேகரிக்கப்படுகின்றன. நிலத்தடி நீர் மாதிரி முசிறி அருகே உள்ள நிலையத்தில் சேகரிக்கப்படுகிறது. சேகரிக்கப்படும் நீர் மாதிரிகள் ஆய்வு செய்யப்படுகின்றன.

2. தேசிய சுற்றுப்புறக் காற்று தரக் கண்காணிப்புத் திட்டம் :

தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம் மத்திய மாசுக் கட்டுப் பாடு வாரியத்துடன் இணைந்து இந்த திட்டத்தில் பங்கு கொள்கிறது. முதற் கட்டமாக சென்னை நகரத்தில் சுற்றுப்புறக் காற்றின் தரம் கண்காணிக்கப்படுகிறது. இத் திட்டத்தின் கீழ் எண்ணூர், மணலி, திருவொற்றியூர், பாரிமுனை மற்றும் மயிலாப்பூர் ஆகிய இடங்களில் நாள்தோறும் சுற்றுப் புறக் காற்றின் தரக்கண்காணிப்பு செய்ய நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தூத்துக்குடி தொழிற் பேட்டையில் ஒரு நிலையம் அமைக்கப்பட்டு சுற்றுப்புறக் காற்றின் தரம் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

3. கடற்கரையோர நீர் தரக் கண்காணிப்பு :

மத்திய அரசின் கடல் வளத் துறை, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தை தமிழ்நாடு கடலோர நீர்த் தரக் கண்காணிப்பினை மேற்கொள்ளும் ஒரு நிறுவனமாக அங்கீ கரித்துள்ளது. 1987–88-ம் ஆண்டில் எடுத்துக் கொள்ளப்பட்ட இத்திட்டம் 1988–89-ம் ஆண்டிலும் தொடர்ந்தது.



1991 செப்டம்பர் 16]

4. தேசிய அளவில் நீர் ஆதாரங்கள் பற்றி கண்காணிப்பு (மினார்) :

இத்திட்டத்தின்கீழ் 1988-ம் ஆண்டு செப்டம்பர் முதல் காவிரி மற்றும் தாமிரபரணி நதிகளின் நீரின் தரம், முறையே ஆறு மற்றும் நான்கு நிலையங்கள் அமைக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட இடங்களில் ஒவ்வொரு மாதமும் நீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு ஆய்வுக்குப் பின்னர் ஒவ்வொரு காலாண்டும் அறிக்கைகள் மத்திய மாசுக் கட்டுப் பாடு வாரியத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

5. சுற்றுப்புறச் சூழல் பற்றிய விழிப்புணர்ச்சி :

பொது மக்களுக்குச் சுற்றுப்புறச் சூழல் பற்றிய விழிப் புணர்ச்சியை உண்டாக்க தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் பல நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்துள்ளது. இதில் முதற் கட்டமாக ஒரு செய்திப் பத்திரிக்கை வெளியிட்டு அதன் மூலம் தொழிற்சாலைகளுக்கும், மக்களுக்கும், வாரியத் திற்கும் இடையில் ஒரு தொடர்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. வாரியம் தனியார் வாகனங்களின் புகைக் கட்டுப்பாடு கண்காணிப்பு பற்றிய ஒரு ஆய்வும் நடத்தியுள்ளது. இவ் வாரியம் சுற்றுப்புறச் சூழல் சம்பந்தப்பட்ட சில கருத்தரங்கு களிலும் நடைமுறை இயக்கங்களிலும் பங்கேற்று உள்ளது.

6. மணலி பகுதியில் தொடர் கண்காணிப்பு செய்வது ;

சென்னையை அடுத்துள்ள மணலி பகுதி தமிழ் நாட்டில் முக்கியமான தொழிற்சாலை பகுதியாக உருவாகி வருகிறது. அங்கு இரசாயனம், பெட்ரோ கெமிக்கல்ஸ், எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை, மேலும் பெரிய தொழிற்சாலைகள் நிறைந்துள்ளன. மேலும் இவை இயற்கை வளத்துடன் இருக்கவும், மேலும் அதிக மோசமான நிலையை அந்த இடத்தில் உண்டு பண்ணாமல் இருக்கவும் ரூ. 30 இலட்சம் செலவில், மணலியில் தற்போதுள்ள நிலையினை தொடர்ந்து நீடிக்க ஒரு தொடர் ஆராய்ச்சியினை (கண்காணிப்பினை) மணலியில் ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான தொடர் ஆராய்ச்சியினை நடத்தும் பணியினை பாண்டிச்சேரியில் உள்ள சலீம் அலி ஸ்கூல் ஆப் எக்காலஜிக்கு கொடுக்கப் பட்டுள்ளது.

தமிழ் நாடு மாநில சுற்றுப்புறச் சூழல் நலக் குழு :

வளர்ச்சித் திட்டங்களினால் சுற்றுப்புறச் சூழலில் ஏற்படும் பாதிப்புகளின் அளவைக் கண்டறிவது சுற்றுப்புறச் சூழல் நலப் பாதுகாப்பின் ஒரு முக்கிய அம்சமாகும். தமிழ்நாடு

சுற்றுப்புறச் சூழல் நலக் குழு, மாநிலத்தின் சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க, தமிழ்நாடு அரசினால் ஏற்படுத்தப் பட்ட ஓர் உயர்மட்ட ஆலோசனைக் குழுவாகும். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இக்குழுவின் தலைவர் ஆவார். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இக்குழுவின் துணைத் தலைவர். ரூ. 5 கோடிக்குமேல் மதிப்புள்ள திட்டங்களை இக்குழு பரிசீலனை செய்கிறது. தமிழ்நாடு மாநில சுற்றுப்புறச் சூழல் நலக் குழுவிற்கு உதவி செய்ய மூன்று உப குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தமிழ் நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், புதிய திட்டங்களுக்குரிய விண்ணப்பங்களைப் பெற்று அவற்றைப் பரிசீலனை செய்து உப குழுக்களுக்கு அனுப்பி பின்பு தமிழ் நாடு மாநில சுற்றுப் புறச் சூழல் நலக் குழுவிற்கு சமர்ப்பிக்கிறது. இதுவரை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் 102 திட்டங்களை ஆய்வு செய்து இக்குழுவிற்கு அனுப்பியுள்ளது.

விமானத் தளச் சூழல் மேம்பாட்டுக் குழு :

விமான தளங்களுக்கு அருகாமையில் பறவைகளால் ஏற்படும் தொல்லைகளைக் கட்டுப்படுத்த அரசு விமான தளச் சூழல் மேம்பாட்டுக் குழு என்ற அமைப்பு ஒன்றை ஏற்படுத்தி உள்ளது. சுற்றுப்புறம் வனத் துறையின் செயலாளர் இந்தக் குழுவின் தலைவராகவும், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் உறுப்பினர்—செயலாளர் இக்குழுவின் உறுப்பினர் செயலாளராகவும் உள்ளனர். இக்குழு விமான தளங்களுக்கு அருகில் பறவைகள் வருவதற்கான காரணங்களைக் கண்டறிந்து போதிய விவரங்களைச் சேகரித்து, பறவைகளினால் ஏற்படும் தொல்லைகளைக் குறைப்பதற்குத் தகுந்த வழி முறைகளை வழங்குகிறது.

தொழில் நுட்பக் குழு :

சுற்றுப்புறம் வனத் துறையில் ஒரு தொழில் நுட்பக் குழு ஏற்படுத்தப்பட்டு இக்குழு 1992-ம் ஆண்டு மார்ச் திங்கள் வரை தொடர்ந்து இயங்க மத்திய அரசு மானியம் வழங்கி யுள்ளது. இக்குழு 1987-ம் ஆண்டு மார்ச் திங்கள் 11-ம் தேதி முதல் இயங்கி வருகிறது. மாநிலத் துறை திட்டங்களில் சுற்றுப்புறச் சூழல் நிர்வாகம் சம்பந்தப்பட்ட பல்வேறு பண்புக் கூறுகளைக் கண்காணிக்கும் ஒரு ஒருங்கிணைக்கும் நிறுவனமாக இக்குழு இயங்கி வருகிறது. மாநிலத் துறை திட்டங்களில் வளர்ச்சி சம்பந்தப்பட்ட திட்டங்களை ஆய்வு செய்வதும் இக்குழு பணியாகும். சுற்றுப்புறச் சூழல் நோக்கில் ஒப்புதல் வழங்கப்பட வேண்டி தமிழ்நாடு மாநில சுற்றுப்புறச் சூழல் நலக் குழுவில் முன்னர் வைக்கப்பட வேண்டிய வளர்ச்சித் திட்டங்களையும் இந்தத் தொழில் நுட்பக்



குழு முன்னாய்வு செய்கிறது. இக்குழு சுற்றுப்புறம்—வனத் துறை செயலாளரின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் பணி புரிகிறது.

சென்னை நகர நீர்வழிகளில் சுற்றுப்புறச் சூழலை மேம் படுத்துவதற்கான திட்டங்கள் :

சென்னை நகர நீர்வழிகளில் அதாவது அடையார், கூவம் மற்றும் பக்கிங்காம் கால்வாய் நீர் ஓட்டமில்லாமல் தேங்கி நிற்பதனால் ஏற்பட்டுள்ள தூய்மைக்கேடு சம்பந்தப்பட்ட பிரச்சனை கவனிக்க வேண்டிய ஒன்றாகிறது. இந்நீர் வழிகளின் தூய்மைக்கேட்டினால் விளையும் தீமை மிக மிக அதிகமாகி விட்டது. சென்னை நகர்வாழ் மக்களின் நலம் பேணிப் பாது காக்கப்பட வேண்டும் என்றால் இந்தப் பிரச்சினைக்கு உடனே முடிவு காணவேண்டியது அவசியமாகிறது. இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ஓவர்சீஸ் டெவலப்மெண்ட் அட்மினிஸ்ட் ரேஷன் என்ற அமைப்பின் உதவியால் ''செவர்ன் ட்ரெண்ட் இன்டர்நேஷனல்'' என்ற நிறுவனத்தின் மூலம் நீர் வழிகள் செல்லும் சென்னை நகர்ப் பகுதிகள் அனைத்தையும் ஆய்வு செய்வதற்குத் தமிழ்நாடு அரசு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

மேற்குறிப்பிட்ட ஆலோசனை நிறுவனம், அவர்களது இடைக்கால அறிக்கையை சமர்ப்பித்துள்ளது. முழுமையாக சுத்திகரிப்பு செய்யப்படாத மற்றும் அரைகுறையாக சுத்திகரிப்பு செய்யப்பட்ட கழிவு நீர் வழிந்தோடி நீர்வழிகளில் விழுவதே 80 விழுக்காடு தூய்மைக்கேட்டிற்குக் காரணம் என்று மேற்படி நிறுவனம் கருத்து தெரிவித்துள்ளது. மேற்படி நிறுவனத்தின் பரிந்துரைகளின்படி இடைக்காலப் பணிகளை சென்னை பெருநகர் கழிவு நீர் அகற்றும் வாரியம் செய்து வருகின்றது. 1991 டிசம்பர் மாதத்திற்குள் நீர்வழிகளில் ஏற்படும் தூய்மைக் கேட்டினைத் தடுத்து விடலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இது தவிர, முதலமைச்சர் அவர்கள் தலைமையில் ஒரு உயர்மட்ட அமைச்சர்கள் குழுவும், அரசு தலைமைச் செயலாளர் தலைமையில் ஒரு செயற்குழுவும் அமைக்கப்பட்டுள்ளன. நகரில், பொதுக் கட்டடங்களின் சாக்கடை நீர் சுத்தி கரிப்புச் செய்யப்படாமல் நேரடியாக நீர்வழிகளில் கலப்பதால் உண்டாகும் தூய்மைக் கேட்டினைத் தவிர்க்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நீர்நிலைகளின் அடிப்பகுதியில் பல ஆண்டுகளாக நிலையாகத் தங்கியிருக்கும் சேறு மற்றும் கசடுகளைத் தோண்டி எடுத்து பாதுகாப்பான இடத்திற்கு அப்புறப்படுத்துவது தொடர்பாக

ஓவர்சீஸ் டெவலப்மென்ட் அட்மினிஸ்ட்ரேஷன் என்ற அமைப்புடன் ஆலோசனை செய்யப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

காவேரி நதியில் தூய்மைக் கேட்டினை நீக்குதல்:

காவேரி நதியில் தூய்மைக் கேட்டினைத் தடுக்க கங்கை நதி தூய்மைத் திட்டத்தைப் போன்று ஒரு திட்டத்தை ஏற்படுத்தி நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசியத்தை அரசு எண்ணியுள்ளது. காவிரி நதிக்கரையில் சுற்றுப்புறச் சூழல் மேம்பாட்டுத் திட்டம் என்ற பொருளில் ஒரு முதல் திட்ட அறிக்கையை தமிழ்நாடு சுற்றுப்புறச் சூழல் கட்டுப்பாடு வாரியம் தயாரித்துள்ளது. காவேரி நதிக்கரையின் ஓரம் உள்ள 35 நகரங்களிலிருந்து வெளியாகும் கழிவுநீர் மற்றும் 1,139 தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகும் கழிவுகளினாலும் காவேரி ஆற்று நீருக்கு நிரந்தர தூய்மைக் கேடு அபாயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்று மதிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தின் மதிப்பீடு ரூ. 251 கோடியாகும். கரையோரம் உள்ள ஊராட்சி மற்றும் பேரூராட்சி, நகராட்சிகளிலிருந்து காவிரி மற்றும் அதன் உபநதிகளில் விழும் கழிவுநீரை ஒழுங்காக சுத்திகரிப்பு செய்து அதனை நதியில் விழாமல் தடுப்பதற்காக நடவடிக்கை எடுப்பது தவிர. அப்பணிகளுக்கான தகுந்த சுத்திகரிப்பு வழிகளை ஏற்படுத்துவது மேற்படி திட்டத்தின் முக்கிய பகுதிகளாகும். மேற்படி திட்டத்திற்கு 100 விழுக்காடு உதவி அளிக்குமாறு கோரி மத்திய அரசைக் கேட்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மாநில அளவில் அபாயகர கழிவுகள் பற்றிய மேற்பார்வை பணி :

போபால் விஷ வாயு விபத்துக்குப் பின்னர் தமிழ்நாடு அரசு தொழிற்சாலைகள் வெளியேற்றும் அபாய கழிவுகள் பற்றி மேற்பார்வை செய்வதற்கென்று பல தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அபாயகரமான இரசாயனப் பொருட்களை உபயோகிக்கும் தொழிற்சாலைகளை மேற்பார்வை செய்வதற்கும் இரசாயனப் பொருட்களால் விளையக்கூடிய விபத்துக்களைத் தடுப்பதற்கும் அரசு மாநில அளவில் தலைமைச் செயலாளரைத் தலைவராகக் கொண்ட ஒரு ஒருங்கிணைந்த குழுவினையும் மாவட்ட ஆட்சியாளர்கள் தலைமையில் மாவட்ட அவசர நிலைக் குழுக்களையும் அமைத்துள்ளது. மேற்படி குழுக்கள் அமைத்ததைத் தொடர்ந்து கீழ்க்காணும் தொழிற்சாலைகள் நிறைந்துள்ள இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அத்தொழிற்சாலைகள் வளாகத்திற்குள்/வளாகத்திற்கு வெளியில் நிகழக் கூடிய விபத்துக்களைச்



சமாளிக்கும் அவசர நிலை ஏற்பாடு திட்டம் தீட்டுவதற்கென்று மத்திய அரசு தயாரித்துள்ள வழிகாட்டுக் குறிப்புகளும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(1) மணலி— எண்ணூர் (வட சென்னை).

(2) இராணிப்பேட்டை.

(3) கடலூர்.

(4) தூத்துக்குடி.

(5) மேட்டூர்

அபாயகரமான பொருட்களை (இராசயனப் பொருட்கள்) தயாரிக்கும்/உபயோகிக்கும் சுமார் 50 தொழிற்சாலைகள், வளாகத்திற்குள்/வளாகத்திற்கு வெளியே நிகழக்கூடிய விபத்துக்களைச் சமாளிக்கும் அவசர நிலை ஏற்பாடு திட்டம் தயாரிப்பதற்கென்று தேர்ந்தெடுக்கப்பட்டன. இவற்றில் 35 தொழிற்சாலைகள் திட்டங்களைத் தயாரித்து விட்டன. இப்பணி தொடருகிறது. சுற்றுப்புறம் வனத் துறையைச் சேர்ந்த தொழில்நுட்பக் குழு இதனைத் தீவிரமாகக் கண்காணித்து வருகிறது.

[1991 செப்டம்பர் 16

150—ம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.

இணைப்பு—3.

தமிழ் நாட்டின் தொழிலாளர் நலன் கொள்கை விளக்கம்.
1991–92.

அத்தியாயம் 1.

முன்னுரை :

தொழில் வளர்ச்சியில் மிக முக்கிய பங்கு வகித்துவரும் காரணத்தால் தொழிலாளர் நலன் பெரும் கவனத்தைக் கவர்வதாயுள்ளது. தொழிற்சாலைகளில் இளம் வயதினருக்கும் பெண்களுக்கும் வேலை வழங்கிட முன்னுரிமையளிக்க அரசு முயற்சி செய்யும். பெண் மற்றும் குழந்தைத் தொழிலாளர்களின் பிரச்சினைகளைக் கவனிக்க தொழிலாளர் ஆணையர் அலுவலகத்தில் பெண்கள் பிரிவு ஒன்றை அரசு அமைக்க உத்தேசித்துள்ளது. தேசிய மனித சக்தி மற்றும் பொருளாதார கூட்டமைப்புக்குள் பெண்கள் நலனுக்கான கொள்கைகள் மற்றும் திட்டங்களை உருவாக்கவும் ஒருமைப்படுத்தி இயக்கவும் இந்தக் குழு செயல்படும். பல்வேறு பொருளாதார நிலையில் உள்ள பெண் தொழிலாளர்கள் பற்றிய அனைத்துத் தகவல்களையும் இக்குழு சேகரித்து பாகுபடுத்தி ஆய்வு செய்து துல்லியமாகப் பிரித்தமைக்கும். பெண்களின் கல்விப் பயிற்சி நலன் மற்றும் சமூகப் பொருளாதார மேம்பாட்டை உயர்த்தவும், இதன் பொருட்டு சம்பந்தப்பட்ட அரசு நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு பெண் தொழிலாளர்களின் நலன் குறித்த திட்டங்கள் நிறைவேறும் வகையில் இக்குழு செயல்படும்.

2. பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் நலன்கள், பீடித் தொழிலில் ஈடுபட்டுள்ள பெண் தொழிலாளர்களை சென்று அடைவதை உறுதிப்படுத்தும் பொருட்டு, வீடுகளில் பீடி சுற்றும் வேலையில் ஈடுபட்டுள்ள பெண் தொழிலாளர்கள் பற்றிய விபரங்களைச் சேகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் பொருட்டு ஆறு தொழிலாளர் உதவி ஆய்வாளர்கள் பதவிகளை ஏற்படுத்திட கணக்கெடுப்பு நடத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

3. பல்வேறு தொழில்களுக்கு அகவிலைப்படியுடன் குறைந்த அளவு கூலி விகிதங்கள் உரிய காலத்தில் நிர்ணயம்/மறு நிர்ணயம் செய்யப்படும்.

பொது :

தமிழகம், 1990 ஆம் ஆண்டிலும் எப்போதும் போல் தொழிலுறவில் சிறப்பான வகையில், தொழில் அமைதியைக் காத்து வந்துள்ளது. இதற்கான சமூகநலனை பெரிதெனக் கொண்டு





தங்களின் அளவற்ற ஆதரவையும், ஒத்துழைப்பையும் நல்கிய தொழிலாளர்கள் மற்றும் நிர்வாகத்தினருக்கு நன்றி தெரிவிக்க வேண்டியுள்ளது. பொதுவாக விழாக் காலங்களில், தொழிலாளிக்கு அதிக போனஸ் வழங்குதல், ஊதிய உயர்வு கோருதல் போன்ற பிரச்சினைகளின் வாயிலாக சில சிக்கல்கள் ஏற்பட வழி வகைகளுண்டு. ஆயினும், கடந்த கால நிகழ்ச்சியினைத் திறனாய்வு செய்யுங்கால் இத்தகைய நிகழ்ச்சிகள் ஏதும் நடைபெறாமல் இருந்ததோடன்றி, தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் போன்ற விரும்பத்தகாத நிகழ்வுகள் நடைபெறாமல், சுமூகமான முறையில் பிரச்சினைகளைத் தடுத்து, அரசு இயந்திரம் பாராட்டத் தக்க வகையில் செயற்பட்டுள்ளது. கடந்த காலத்தில் மிகவும் பயனுள்ள வகையில் நடவடிக்கைகள் மேற்கொண்டதன் பலனாக கதவடைப்பு செய்யப்பட்டிருந்த 4 ஆலைகள் மீளவும் திறக்கப்பட்டு, பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் நிதியிலிருந்து நிவாரணம் அளிக்கப்பட்டது.

தமிழக அரசு 'அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்களின்' வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக மிக ஆர்வத்துடன் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. இந்த வகையில் அரசு நடப்புக் காலத்தில் முதன் முறையாக 4 தொழில்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு ஊதிய விகிதத்தை நிர்ணயித்தும், 9 தொழில்களுக்கு ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்டிருந்த ஊதிய விகிதத்தை மாற்றியமைத்தும் ஆணைகள் வழங்கியுள்ளது. ஒவ்வொரு தொழிலாளிக்கும் ஒரு நாள் ஊதியம் ரூ. 15-க்குக் குறையாமல் இருக்க அரசு நடவடிக்கைகள் மேற்கொண்டு குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயிக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது.

தமிழக அரசின் தொழிலாளர் துறை அமுல் செய்யும் பிரிவு இயந்திரம் இந்த வகையில் சீருடன் குறைந்த பட்ச ஊதிய விகிதங்களைப் பயனுள்ள வகையிலும் தீவிரமான முறையிலும் அமுல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. இதன் தொடர்பாக, அவ்வப்போது கூட்டு ஆய்வுகளை நடத்தியும், திடீர் சோதனைகளை மேற்கொண்டும் தொழிலாளர் நலச் சட்ட விதிகளையும், எடைகள் அளவுகள் மற்றும் (பொட்டலப் பொருட்கள்) சட்ட விதியின் கீழ் தவறு செய்வோர் மீது நடவடிக்கைகள் எடுத்து அபராதம் வசூலித்தும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த வகையில் தொழிலாளர் துறை சமூகப் பாதுகாப்பு, நன்மைகள் மற்றும் நல்வாழ்வு கவனத்தில் கொண்டு சிறப்பான வகையில், திட்ட சம்பந்தமான பலன்கள் ஆகியவை உழைக்கும் வர்க்கத்தினருக்குப் போய்ச் சேரும் வகையில், திறம்பட பணியாற்றி வருகிறது.

தொழில் உறவுகள்:

விரைவாக தொழில் மயம் ஆகி வரும் இந்தக் கால கட்டத்தில்; தொழில் உறவு பற்றிய பிரச்சினைகள் சில நேர்வுகளில் மிகுந்த சிக்கலையும் அதனால் பலதரப்பட்ட சுமையையும் தரவல்லதாக உள்ளது. பிரச்சினைகள் அதிக அளவில் உருவாகி அதன் பய னாகத் தொழிலாளர்களும், நிர்வாகத்தினரும் கருத்து வேறுபாடு கள் ஏற்பட்டு ஒருவரை ஒருவர் பார்ப்பதுகூட இன்றி இருசாரா ருக்கிடையேயான பிரச்சினைகள் சிக்கலானதாகவும் உள்ளாற் றல் பெற்றவனவாகவும் ஏற்படுகின்றன. எனவே, தொழில் உறவில் காணப்படும் அமைதியின்மையைப் போக்கி, தொழில் அமைதியை உருவாக்கி அதனைக் காத்து வருவதை அரசு தனது தலையாய கடமையாகக் கொண்டு செயற்பட்டு வருகிறது. தொழில் உறவில் ஒரு புதிய கோட்பாட்டையும், பண்பாட்டையும் உருவாக்கும் வகையில், தொழிலாளர் மற்றும் நிர்வாகத்தினருக் கிடையே ஒரு இசைவிணக்கத்தையும், ஒருவருக்கொருவர், நம்பிக்கையுடன் ஒத்துழைத்து செயலாற்றவும், அதன் விளைவாக தொழில் உறவில் ஒரு நல்ல அமைதியான நிலையை எட்ட அரசு பெருமுயற்சி செய்து அதற்காகப் பாடுபட்டும் வருகிறது.

சமூகத்தில் நலிவுற்ற மக்களின் முன்னேற்றத்திற்காகவும் அவர்களது உரிமைகளைப் பாதுகாக்கும் வகையிலும் அரசாங்கம் தொழில் உறவுகள் விஷயத்தில் நல்லதொரு நிலையில் இதற்காகச் செயற்பட்டு வருகிறது. எனவே, அரசு, தொழிலாளர் மற்றும் நிர்வாகத்தினருக்கிடையேயான பிரச்சினைகள், பூசல்கள், தொழில் அமைதியின்மையை ஏற்படுத்தாத வகையில் சில நட வடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதோடு, அவர் களுக்கிடையே ஒரு நல்ல உறவையும் சூழ்நிலையையும் ஏற்படுத்தி, அவர்களது கூட்டு முயற்சியின் விளைவாக தொழில் நல்லுறவு ஏற்படவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ் விதமான நிலைகளை மனத்தில் நிறுத்தி, தமிழகத்தில், தொழில் அமைதி ஏற்படவும், நிர்வாகத்தினர் மற்றும் தொழிலாளர் களுக்கிடையே சுமூகமான உறவு நிலவவும், தொழில் அமைதிக்கு குந்தகம் ஏற்படாத வகையில், வேலை நிறுத்தம், அதிக அளவிலான தொழில் தகராறுகள் ஏற்படுதல் ஆகியவைகள் நடை பெறாவண்ணம், அரசு உடனுக்குடன் தலையிட்டு, அரிய சேவை செய்து வருகிறது. தமிழகத்தில் தொழிலாளர் நலச்சட்ட விதி களை நல்ல முறையில் அமுல் செய்யவும், சட்ட விதிகளை மீறுவோர் மீது உரிய நடவடிக்கைகள் எடுத்தும் இதன் விளைவாக தொழிலாளர்கள் மற்றும் நுகர்வோர் நலன்களை கருத்தில் கொண்டு இந் நடைமுறையை அரசு ஏற்று செயலாற்றி வரு கிறது. தொழிலாளர் மற்றும் நிர்வாகத்தினரின் பொறுப்பு, அவர்களின் கூட்டு முயற்சி, ஒத்துழைப்பு ஆகியவற்றை உணர்ந்து அவர்கள் செயலாற்றுவதை அரசு எதிர்பார்த்து, நலத் திட்டங் கள் மற்றும் அதிக உற்பத்தித் திறன் ஆகியவற்றை அடைய



முயற்சி செய்து வருகிறது. அதே நேரத்தில் எந்த வகையிலும் நலிவடைந்தோர், ஏழைத் தொழிலாளர்கள் சுரண்டலுக்கு உட் படாமல் பார்த்துக் கொள்வதும் அரசு தனது கடமையாகக் கொண்டுள்ளது. தொழில் அமைதி எனும்போது இருவிதமான வகையில் அது உள்ளடங்கியுள்ளது. அவையாவன:—வருமுன் காத்தல் மற்றும் தீர்வு காணுதல் இவற்றில் வருமுன் காத்த லையே அரசு பெரிதும் விரும்புகிறது. அரசு தொழில், தொழி லாளர் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் அவ்வப்போது தலை யீடுசெய்து தேவையற்ற வகையில் செயல்படுவதை விரும்ப வில்லை. நிர்வாகத்தினரும், தொழிலாளர்களும் உடனமர்ந்து நேரடியாகக் கலந்து பேசி சுமூகமான ஒரு நிலை ஏற்படுவதையே அரசு விரும்புகிறது. இந்த வகையில் தொழிலாளர் நலத்துறை, தம்மை அணுகுவோரின் பிரச்சினைகளை ஆய்ந்து அவர்களது பிரச்சினைகள் தீர்வு காண அரிய சேவை செய்து வருகிறது. வேலை நிறுத்தம், கதவடைப்பு போன்ற தொழில் அமைதியைக் கெடுக்கும் முறைகளை அரசு எப்போதும் களைய முயற்சி செய்து வருகிறது. இதன் பொருட்டு தொழில் உறவில் ஏற்படும் பிரச்சி னைகள், தகராறு ஆகியவற்றை, உடனுக்குடன் அறிந்து, அப் பிரச்சினைகள் விரிவடைந்து, பெரிய அளவில் உருவாகாமல் இருக்கவும், பிரச்சினைகள் இனம் கண்டு, வருமுன் காத்தல் என்ற கொள்கைப்படி, அவற்றை அடிமட்டத்திலேயே அறிந்து, தொழில் அமைதி, தொழில் உறவு பாதிக்கப்படாத வகையில், தொழிலாளர் நலத்துறை அதற்கேற்றவாறு சீரமைக்கப்பட்டு திறம்பட செயலாற்றி வருகிறது.

தொழிலாளர்கள் மற்றும் சம்பந்தப்பட்டவர்களுக்கும் தொழி லாளர் நலச்சட்ட விதிகளின் பலன் அவர்களுக்கு போய்ச் சேரும் வகையில், அரசு உன்னிப்பாகச் செயலாற்றி வருகிறது. தவறி ழைப்போர் மற்றும் சட்ட விதிகளை மீறுவோரையும் விட்டு விடாமல் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொண்டும், வழக்குத் தொடர நடவடிக்கைகளும் அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

II. தொழில் தகராறுகளைத் தீர்த்து வைத்தல் :

தமிழக அரசின் தொழிலாளர் துறை சமரச அலுவலர்களின் வாயிலாக, 1990 ஆம் ஆண்டில் மட்டும், மொத்தம் 12,995 தொழில் தகராறுகளில், 10,812, தாவாக்கள் தீர்த்து வைக்கப் பட்டன. தொழிலாளர் துறையின் முதுநிலை அலுவலர்களால் தீர்த்து வைக்கப்பட்ட தொழில் தாவாக்களும் இதில் அடங்கு கின்றன. சில பெரிய தொழிற் தகராறுகள் மாண்புமிகு தமிழக தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் தலையீட்டினாலும் அவர்களது ஆலோசனைகளின் பேரிலும் தீர்த்து வைக்கப்பட்டன.

இவற்றுள் கீழ்க்குறிப்பிட்டுள்ள சில முக்கிய குறிப்பிடத்தக்க ஒப்பந்தங்களும் அடங்கும் :—

| வரிசை எண். நிறுவனம். | தொழிலாளர்கள் எண்ணிக்கை. | கோரிக்கைகள். | ஒப்பந்தம் ஏற்பட்ட தேதி. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. சிம்சன் குரூப் கம்பெனி, சென்னை. | 2,388 | பொது கோரிக்கைகள் .. | 10— 1—1990 |
| 2. ஜி.கே.டி. டெக்ஸ்டைல்ஸ், கோவை. | 850 | வேலைப் பளு மற்றும் ஊதியம் தொழிலாளர்களால் மேற்கொள்ளப்பட்ட வேலை நிறுத்தம். | 11— 1—1990 மற்றும் 16— 2—1990 |
| 3. எண்ணூர் பவுண்டரீஸ், எண்ணூர். | 2,300 | வேலை நிறுத்தம் .. .. | 20— 2—1990 |
| 4. ஸ்ரீஜனார்த்தன மில்ஸ் லிமிடெட், கோவை. | 650 | ஆலையை மீளத் திறப்பது .. | 23— 2—1990 |
| 5. ஆட்டோமோடிவ் கோச்சஸ் அண்ட் கம்பெனி லிமிடெட், கும்மிடிபூண்டி. | 700 | கதவடைப்பு .. .. | 16— 7—1990 |
| 6. பவானி மில்ஸ் லிட், கோவை. | 850 | ஆலையை மீளத் திறப்பது ; வேலை பளு நிர்ணயம் ; ஊதிய நிர்ணயம். | 17— 4—1990<br>10— 8—1990 |



| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 7. இங்லிஷ் எலக்ட்ரிக் கம்பெனி (இந்தியா) லிமிடெட், பல்லாவரம். | 2,000 | மூன்றாண்டு கால போனஸ் (1987–88 முதல் 1989–90 வரை). | 4—10—1990 |
| 8. மெட்ராஸ் அலுமினியம் கம்பெனி லிமிடெட், சேலம். | 1,200 | 1989–90-க்கான போனஸ் .. | 25—10—1990 |
| 9. உபாசி அண்ட் பி.ஏ.டி. .. | 4,000 | பொது கோரிக்கைகள் (தோட்டத் தொழிலாளர்கள்). | 1— 3—1990 |
| 10. தாரங்கதாரா கெமிக்கல்ஸ் ஒர்க்ஸ் லிமிடெட், சாகுபுரம், ஆறுமுகநேரி. | 800 | 1989–90-க்கு போனஸ் .. | 14— 6—1990 |
| 11. சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட், பள்ளிப்பாளையம், ஈரோடு. | 2,200 | 1989–90 முதல் 1992–93-க்கு போனஸ். | 9— 8—1990 |
| 12. டீ அண்ட் காபி பிளான்டேஷன் இன் தமிழ்நாடு. | 40,000 | ஊதிய உயர்வு—இதர கோரிக்கைகள். | 21— 9—1990 |
| 13. தமிழ்நாடு சிமெண்ட் கார்ப்பரேஷன். | 2,250 | 1989–90-க்கு போனஸ் .. | 13—10—1990 |
| 14. ஈ.ஐ.டி. பாரி (இந்தியா) லிமிடெட், நெல்லிக்குப்பம். | 925 | போனஸ் மற்றும் இதர கோரிக்கைகள். | 23—11—1990 |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 15. விம்கோ லிமிடெட், திருவொற்றியூர். | 620 | பொது கோரிக்கைகள் ... | 24—12—1990 |
| 16. மெட்ராஸ் ஆட்டோமிக் பவர் ஸ்டேஷன், கல்பாக்கம். | 1,200 | ஊக்கப்படி ... .. | 29—11—1990 |
| 17. பிரசாத் பிலிம் லேபரேட்டரீஸ், சென்னை. | 300 | கதவடைப்பு மற்றும் இதர கோரிக்கைகள். | 14— 3—1990 |
| 18. சென்னை, செங்கை—எம்.ஜி.ஆர்., வடஆற்காடு அம்பேத்கார் மற்றும் திருச்சி மாவட்டங்களில் இயங்கும் பீடி நிறுவனங்கள். | 30,000 | ஊதிய உயர்வு மற்றும் போனஸ். | 8— 9—1990 |
| 19. ஆரோ புட், ஆரோவில், தென்னாற்காடு மாவட்டம். | 840 | கிராக்கிப்படி, வேலைநிறுத்தம் மற்றும் கதவடைப்பு. | 9—11—1990 |
| 20. பென்னர் இந்தியா லிட்., மதுரை. | 996 | வேலை நிறுத்தமும், கதவடைப்பும். | 8— 8—1990 |
| 21. யுனைட்டெட் இந்தியா ஷூ கார்ப்பரேஷன், ஆம்பூர், வட ஆற்காடு மாவட்டம். | 900 | பொது கோரிக்கைகள், போனஸ் 1990–91 மற்றும் 1991-92 | 19— 9—1990 |



| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 22. அட்கோ இந்தியா லிமிடெட், சென்னை. | 550 | தொழிலாளர் நல மையம் ஏற்படுத்துதல். | 7— 8—1990 |
| 23. கோத்தாரி சுகர்ஸ் அண்ட் கெமிக்கல்ஸ் லிமிடெட், லால்குடி. | 739 | பொது கோரிக்கைகள் .. | 6— 1—1990 |
| 24. மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், மேட்டூர். | 2,500 | ஆலையை மீளத் திறப்பது ... | 3— 4—1990 |
| 25. ஜெயலட்சுமி மில்ஸ், சிங்கநல்லூர். | 600 | ஆலையை மீளத் திறப்பது மற்றும் ஊதியத்தை நிறுத்தி வைத்தல். | 17— 4—1990 |
| 26. வசந்தா மில்ஸ், சிங்கநல்லூர். | 1,350 | ௸ | 17— 4—1990 |
| 27. பவர்லூம் பேட்ரீஸ், சங்கரன்கோவில். | 1,500 | ஊதியம் திருத்தி அமைத்தல் | 9— 4—1990 |
| 28. பவர்லூம் பேட்ரீஸ், புளியங்குடி. | 1,000 | ௸ | 23— 4—1990 |
| 29. நேஷனல் கார்பன் கம்பெனி, தண்டையார்ப்பேட்டை, சென்னை. | 750 | ௸ | 18— 7—1990 |
| 30. இந்துஸ்தான் டெலி பிரிண்டர்ஸ், கிண்டி. | 1,584 | ௸ மற்றும் இதர கோரிக்கைகள். | 10— 5—1990 |

II. மூடப்பட்ட நிறுவனங்களும் மூடப்பட்ட நிறுவனங்களின் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணமும்.

31—12—1990 அன்று மூடப்பட்டிருந்த நிறுவனங்களின் விவரம் பின்வருமாறு :

| வரிசை எண். | நிறுவனத்தின் பெயர். | தொழிலாளர் எண்ணிக்கை. | மூடப்பட்ட தேதி. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | பத்மா மில்ஸ், காலப்பட்டி, கோவை .. ... | 150 | 25—2—1981 |
| 2 | அலெக்ஸாண்டர் திரெட் டிவிசன், மேட்டூர் அணை ... | 260 | 1—7—1984 |
| 3 | வசந்தா மில்ஸ், கோவை .. .. .. .. | 1,562 | 13—11—1984 |
| 4 | கே. எஸ்.எஸ். ஸ்பின்னர்ஸ், கோவை .. .. | 150 | 8—1—1985 |
| 5 | ராதாகிருஷ்ணா மில்ஸ் லிமிடெட், கோவை .. ... | 1,100 | 10—8—1986 |
| 6 | காவேரி ஸ்பின்னிங் அண்ட் வீவிங் மில்ஸ், லிமிடெட், புதுக்கோட்டை. | 850 | 13—11—1986 |
| 7 | ருக்மணி மில்ஸ், கல்லல், பசும்பொன் முத்துராமலிங்கம் திருமகனார் மாவட்டம். | 200 | பிப்ரவரி 1987. |
| 8 | சிவமணி ஸ்பின்னிங் மில்ஸ், பைசுகளி, தர்மபுரி மாவட்டம். | 225 | 17—6—1987 |
| 9 | ஜெயலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் மில்ஸ், கோவை .. | 558 | 25—10—1987 |
| 10 | மகாவிஷ்ணு டெக்ஸ்டைல்ஸ், கோவை .. .. | 84 | 14—6—1988 |
| 11 | மது ஸ்பின்னிங் அண்ட் வீவிங் மில்ஸ், கோவை .. | 500 | 7—3—1986 |
| 12 | எவரெஸ்ட் இன்ஜினியரிங், கோவை.. .. .. | 309 | 30—12—1989 |
| 13 | ஸ்டாண்டர்ட் மோட்டார்ஸ் பிராடக்ட்ஸ் ஆப் இந்தியா லிமிடெட், மதராஸ். | 3,086 | 7—2—1989 |
| 14 | இராமகிருஷ்ணா இண்டஸ்ட்ரியல்ஸ் லிமிடெட், கோவை. | 400 | 3—9—1984 |



1991 செப்டம்பர் 16]

மேற்கண்ட நிறுவனங்களின் ஸ்திரத்தன்மையைப்பற்றி கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநர்/தொழில் மற்றும் வணி கத்துறை இயக்குநர் முடிவு செய்கின்றனர். தொழிலாளர் பிரச்சனை பற்றி நிறுவனத்தின் ஸ்திரத்தன்மையை முடிவு செய்து பின்னர்தான் பரிசீலிக்கப்பட வேண்டும். ஆயினும் (நிறுவனத்தை மீண்டும் திறந்து நடத்தும் வகையில்) இருதரப்பினரும் தாமாகவே இத்துறையை அணுகும் பிரச்னைகளில், ஒப்பந்தங்கள் ஏற்படுத்த முயற்சிக்கும் வகையில் சமரசப் பேச்சு வார்த்தைகள் இத்துறை அலுவலர்களால் மேற்கொள்ளப்படுகின்றன. (உதாரணம்) ஜெயலட்சுமி மில்ஸ், மது ஸ்பின்னிங் மற்றும் வீவிங் மில்ஸ், மற்றும் பவானி மில்ஸ்.

1989 ஆம் வருடத்தில் கீழ்க்கண்ட 6 மூடப்பட்ட பஞ்சாலைகளைத் திறப்பதற்காக அறிவிக்கப்பட்டது.

1. பவானி மில்ஸ், கோவை.
2. வசந்தா மில்ஸ், கோவை.
3. ஜெயலட்சுமி மில்ஸ், கோவை.
4. மேட்டூர் டெக்ஸ்டைல் இண்டஸ்ட்ரி லிமிடெட், மேட்டூர் அணை.
5. மகாலட்சுமி மில்ஸ், மதுரை.
6. சிவமணி ஸ்பின்னிங் மில்ஸ், தர்மபுரி மாவட்டம்.

மேற்கண்ட 6 ஆலைகளில் மேட்டூர் டாமிலுள்ள மேட்டூர் டெக்ஸ்டைல் இண்டஸ்ட்ரீஸ் மற்றும் மதுரையிலுள்ள மகாலட்சுமி மில்ஸ் ஆகியவை இரண்டும் கூட்டு நிறுவன அடிப்படையில் முறையே 23-7-1990 மற்றும் 17—9—1990 தேதிகளில் திறக்கப்பட்டன. இத்துறையின் தலையீட்டினால் கோவை பக்கத்திலுள்ள பவானி மில்ஸ் ஆலை அதே நிர்வாகத்தினால் 29-9-1990 முதல் திறக்கப்பட்டது. தர்மபுரியில் உள்ள சிவமணி ஸ்பின்னிங் மில்ஸ் நிறுவனம் 18—3—1991 முதல் புதிய நிர்வாகத்தினால் திறக்கப்பட்டது.

கோயம்புத்தூரிலுள்ள ஜெயலட்சுமி மில்ஸ் ஆலையை (அதே நிர்வாகத்தினர்) திறப்பது சம்பந்தமாக தொழிலியல், நிதியியல், மற்றும் மறுகட்டமைப்பு மேல்முறையீட்டு ஆணைக் குழுவின் (B. I. F. R.) முடிவு எதிர்நோக்கப்படுகிறது. கோயம்புத்தூரிலுள்ள வசந்தா மில்ஸ் சம்பந்தமாக கோயம்புத்தூர் தொழிலாளர் இணை ஆணையர் முன்பு பிரிவு 12 (3)-ன் கீழ் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு நிதி நிறுவனங்களிலிருந்து ஆலை திறப்பது சம்பந்தமாக நிதி உதவி எதிர்பார்க்கப்படுகிறது.

[1991 செப்டம்பர் 16

மேற்கண்ட ஆலைகள் தவிர 1990-91 ஆம் ஆண்டில் கீழ்க்
காணும் மூடப்பட்ட ஆலைகள் அரசு அல்லது இத்துறையின்
தலையீட்டினால் அவற்றின் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள தேதி
களில் திறக்கப்பட்டன.

| | |
|---|---|
| 1. ஸ்ரீஜனார்த்தனா மில்ஸ் லிமிடெட், கோவை. | 22—8—1990 |
| 2. திருப்பூர் காட்டன் ஸ்பின்னிங் அண்ட் வீவிங் மில்ஸ், திருப்பூர். | 25—6—1990 |
| 3. லட்சுமி சண்முகா மில்ஸ், புதுக்கோட்டை. | 3—8—1990 |
| 4. ருக்மணி மில்ஸ், கல்லல் | 2—3—1991 |

மேலும் கோயம்புத்தூரிலுள்ள மது ஸ்பின்னிங் மற்றும் வீவிங்
மில்ஸ் ஆலையை புதிய நிர்வாகத்தினரால் திறப்பது சம்பந்தமாக
11—1—1991 அன்று சென்னை, தொழிலாளர் இணை ஆணை
யர் (சமரசம்) முன்னிலையில் நடைபெற்று சமரசப் பேச்சுவார்த்
தைகளில் தொழிற் தகராறு சட்டம் பிரிவு 12 (3)-ன் கீழ் ஓர்
ஒப்பந்தம் ஏற்பட்டு, தொழில், நிதி, (B.I.F.R.) மறுகட்டமைப்பு
மேல்முறையீட்டு ஆணைக்குழுவின் அங்கீகாரம் எதிர் நோக்கப்
படுகிறது.

இன்றைய தேதியில் கீழ்க்கண்ட ஆலைகள் மூடப்பட்டுள்ளன:

| வரிசை எண்ணும் ஆலையின் பெயரும். (1) | தொழிலாளர் எண்ணிக்கை. (2) | மூடப்பட்ட தேதி. (3) |
|---|---|---|
| 1. அலெக்ஸாண்டர் திரெட் டிவிசன், மேட்டூர் அணை. | 260 | 1—7—1984 |
| 2. வசந்தா மில்ஸ் லிமிடெட், கோவை. | 1,562 | 13—11—1984 |
| 3. கே.ஜி.எஸ். ஸ்பின்னர்ஸ், கோவை. | 150 | 8—1—1985 |
| 4. இராதா கிருஷ்ணா மில்ஸ் லிமிடெட், கோவை. | 1,100 | 10—8—1986 |
| 5. காவேரி ஸ்பின்னிங் அண்ட் வீவிங் மில்ஸ் லிமிடெட், புதுக்கோட்டை. | 850 | 13—11—1986 |
| 6. ஜெயலட்சுமி மில்ஸ், லிமிடெட், கோவை. | 558 | 25—10—1987 |
| 7. மது ஸ்பின்னிங் அண்ட் வீவிங் லிமிடெட், கோவை. | 500 | 7—3—1988 |
| 8. பி. அண்ட் சி. மில்ஸ், சென்னை | 6,630 | 1—4—1991 |
| மொத்தம் ... | 11,610 | |



1991 செப்டம்பர் 16]

மேட்டூர் டாம், அலெக்ஸாண்டர் திரெட் டிவிசன் பொறுத்த
வரையில், இந்நிறுவனம், இன்னமும் சாதாரண நிலையில் இயங்
கத் தொடங்காத மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் இண்டஸ்ட்ரீஸ்
லிமிடெட் நிறுவனத்தின் வளாகத்தில் அமைந்துள்ளதால், மேட்
டூர் டெக்ஸ்டைல்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம் சாதாரண
நிலையில் இயங்கத் தொடங்கும் போது அலெக்ஸாண்டர் திரெட்
டிவிசன் நிறுவனமும் இயங்கத் தொடங்கும் என எதிர்பார்க்கப்
படுகிறது.

கோயம்பத்தூரிலுள்ள வசந்தா மில்ஸ் மற்றும் ஜெயலட்சுமி
மில்ஸ் லிமிடெட் சம்பந்தமாக கோவை தொழிலாளர் இணை
ஆணையர் முன்பு சம்பள ஒத்திவைப்பு, மூடப்பட்ட காலத்திற்கு
நிவாரணம் போன்றவை சம்பந்தமாக ஓர் ஒப்பந்தம் ஏற்பட்
டுள்ளது. நிதி நிறுவனங்கள் ஆகிய அமைப்புகளிலிருந்து நிதி
மற்றும் உதவிகள் பெற்ற பின்பு ஆலைகள் திறக்கப்படும். தி
காவேரி ஸ்பின்னிங் அண்ட் வீவிங் மில்ஸ் லிட், தமிழ்நாடு பஞ்
சாலை கழகத்தை சார்ந்தது. இந்த ஆலையை விற்பது சம்
பந்தமாக சென்னை உயர்நீதிமன்றத்தில் ஒரு வழக்கு நிலுவை
யிலுள்ளது என அறியப்படுகிறது. இதுபற்றி சென்னை கைத்தறி
மற்றும் துணி நூல் இயக்குநர் கவனித்து வருகிறார்.

மது ஸ்பின்னிங் அண்டு வீவிங் மில்ஸ் லிட் ஆலையை
பொறுத்த வரையில் புதிய நிர்வாகத்தினர் ஆலையை ஏற்று
நடத்த முன் வந்ததால் சென்னை தொழிலாளர் இணை ஆணை
யர் (சமரசம்) முன்பு வேலைப்பளு, சம்பளம் ஆகியவை குறித்து
ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆலையை திறப்பது
குறித்து, நிர்வாகம் தொழில் நிதி மற்றும் மறு கட்டமைப்பு
வாரியத்தில் (B. I. F. R.) அங்கீகாரம் எதிர்நோக்கியுள்ளது.

கோயம்புத்தூர் இராதாகிருஷ்ணா மில்ஸ் லிட் எனும்
பஞ்சாலை நிர்வாகத்தில் ஏற்பட்ட உட்பூசல் காரணமாக மூடப்
பட்டது. சென்னை உயர்நீதிமன்றத்தில் கம்பெனி மனுக்கள்
தாக்கல் செய்யப்பட்டன. நீதிமன்றத்தில் உள்ள வழக்குகள்
நிறுவனத்தை திறப்பதற்கு தடையாக உள்ளன.

கோயம்புத்தூர் கே. ஜி. எஸ். ஸ்பின்னிங் நிறுவனத்தைப்
பொறுத்த வரையில், நிருவாகத்தினருக்கும், தமிழ்நாடு மின்
சார வாரியத்திற்கும் இடையே, ஆலைக்கு மின்சாரம் வழங்கு
தல் சம்பந்தமாக ஏற்பட்ட தகராறு காரணமாக ஆலையைத்
திறக்க இயலவில்லை என கூறப்படுகிறது. இந்த ஆலையைத்
திறப்பதில் தொழிலாளர் சம்பந்தமான பிரச்சினை ஏதும்
இல்லை.

[1991 செப்டம்பர் 16

பி. அண்டு சி. ஆலை, சென்னை.

சென்னையில் உள்ள பி அண்டு சி ஆலை நிறுவனம் நிதிநிலை
நெருக்கடி காரணமாகவும், மற்றும் துணி பதப்படுத்தும் பிரிவை
புவனகிரிக்கு மாற்றம் செய்யவேண்டும் என்ற நிதி நிறுவனங்
களின் நிபந்தனை குறித்து தொழிலாளர்களுடன் ஒப்பந்தம்
ஏற்படாததாலும் ஆலையை மூடுவதற்கு தொழிற் தகராறு
சட்டப் பிரிவு 25—ஒ—வின் கீழ் தொழிலாளர் ஆணையருக்கு
விண்ணப்பம் செய்திருந்தனர்.

(2) தொழிலாளர் ஆணையர் தொழிற் தகராறு சட்டப் பிரிவு
25—ஒ-வின் கீழ் ஆலையை மூடுவதற்கு அனுமதி மறுத்து உத்
தரவு பிறப்பித்தார். ஆனால் நிர்வாகம் திடீரென 1—4—1991
முதல் ஆலை இயக்கத்தை நிறுத்தினர்.

(3) நிர்வாகம் சென்னை உயர் நீதிமன்றத்தில் இரண்டு ரிட்
மனுக்களை தாக்கல் செய்தனர். அவற்றில் ஒன்று ஆலையை
மூடுவதற்கு அனுமதி மறுத்து தொழிலாளர் ஆணையர் பிறப்
பித்த உத்திரவை எதிர்த்தும், மற்றொன்று தொழிற் தகராறு
சட்டப் பிரிவு 25—ஒ-வின் செல்லுபடியாகும் தன்மையை
எதிர்த்தும் தாக்கல் செய்யப்பட்டன. தொழிற் தகராறு
சட்டப் பிரிவு 25—ஒ-வின் சரத்துகளை மீறியதற்காக நிர்
வாகத்தின் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்க அரசு உத்தரவு
பிறப்பித்தது. நிர்வாகம் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்
திருந்த ரிட் மனுவில் தொழிற் சங்கங்களும் தங்களை எதிர்
தரப்பினராகச் சேர்த்துக்கொண்டு, நிறுவனம் இயங்காத காலத்
திற்கு தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்க வேண்டுமென நிர்
வாகத்தை பணிக்க வேண்டுமெனவும், சம்பளப் பட்டியல் தயாரிப்
பதை கவனிக்க தொழிற் சங்கங்களையும் அனுமதிக்க வேண்டும்
எனக் கோரினர். தொழிற்சங்கங்கள் சென்னை உயர் நீதிமன்றத்
தில் இரண்டு மேல் முறையீடுகளையும் தாக்கல் செய்தனர்.
இவற்றை விசாரித்த உயர் நீதிமன்றம் தனது 25—4—1991
மற்றும் 26—4—1991 ஆம் தேதியிட்ட உத்திரவுகளில் ஆலை
யில் துணி பதப்படுத்தும் பிரிவை புவனகிரிக்கு மாற்றுவது
குறித்த பிரச்சினை குறித்து ஆராய முன்னாள் தலைமை நீதிபதி
திரு. கே. பி. என். சிங் தலைமையில் ஒரு தனிநபர் குழுவை
நியமித்தது. இந்த தனிநபர் குழு ஆலையில் துணி பதப்படுத்தும்
பிரிவை புவனகிரிக்கு மாற்றுவது தொழிலாளர்களுக்கு பாதக
மாகும் என சென்னை உயர்நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்த தனது
அறிக்கையில் தெரிவித்தது. அரசும் தனிநபர் குழுவின் அறிக்
கையை ஆதரிப்பதாக கருத்து தெரிவித்தது.

ஆலைக்கு தண்ணீர் வழங்குவது குறித்த மாநில அரசின்
நிலையை தெரிவிக்குமாறு உயர்நீதிமன்றம் கேட்டுக்கொண்டது.
பி அண்டு சி ஆலை திரும்பவும் திறக்கப்படும்போது தடையின்



1991 செப்டம்பர் 16]

லாது தண்ணீர் வழங்குவது குறித்து ஆலைக்கு நாள் ஒன்றுக்குத்
தேவையான 4000 கிலோ லிட்டர் தண்ணீரை கீழ்ப்பாக்கம்
நீர் ஏற்று நிலையத்திலிருந்து ஆலை திறக்கப்படும் நாளிலிருந்து
1991 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முடிய வழங்க இயலும் என்று
கருத்து தெரிவிக்கப்பட்டது. 1991 ஆம் ஆண்டு நவம்டர்
மாதத்திற்கு பிறகு நீர் நிலைகளில் தேக்கப்பட்டுள்ள தண்ணீர்
அளவினைப் பொறுத்து நாள் ஒன்றுக்கு ஆலைக்குத் தேவையான
4000 கிலோ லிட்டர் தண்ணீர் வழங்குவதை தொடரலாம் என
வும் தெரிவிக்கப்பட்டது. மெட்ரோ வாட்டர் நிறுவனம்
பி அண்டு சி ஆலைக்கு நாள் ஒன்றுக்கு தேவையான 4000 கிலோ
லிட்டர் தண்ணீரை வழங்கி வர வேண்டும் என்ற உத்திரவாதம்
சாதகமான வடகிழக்கு பருவக் காற்றினைப் பொறுத்ததாகும்.

உயர் நீதிமன்றம் கேட்டுக் கொண்டதின்பேரில் ரூ. 6 லட்சம்
மதிப்புள்ள மளிகைப் பொருட்களை 1991 ஆம் ஆண்டு ஜூலை
மாதத்திலும், ரூ. 3 லட்சம் மதிப்புள்ள மளிகைப் பொருட்கள்
ஆகஸ்ட் மாதத்திலும் ஆலையின் பண்டகசாலை மூலம் தொழி
லாளர்களுக்கு வழங்க அரசு நிர்வாகத்திற்கு கடனுதவி வழங்
கியது உயர் நீதிமன்றத்தின் இறுதி தீர்ப்பு எதிர்பார்க்கப்
படுகிறது.

## இதர முக்கியமான வேலை நிறுத்தங்கள்.

ஸ்டாண்டர்டு மோட்டார் பிராடக்ட்ஸ் ஆப் இந்தியா லிமிடெட்,
பெருங்களத்தூர், சென்னை.

இந்த நிர்வாகம், 1987 முதல் தொடர்ந்து நஷ்டம் ஏற்பட்ட
தன் அடிப்படையில் 7—2—89 முதல் நிறுவனத்தின் இயக்கத்தை
நிறுத்தியது. சென்னை, தொழிலாளர் ஆணையர் முன்னிலையில்
தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தியதன் பயனாக தொழிற்
தகராறுகள் சட்டப் பிரிவு 12 (3)-ன் கீழ் அவர் முன்னிலையில்
3—1—1990 அன்று ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. இதில், இதர
ஷரத்துக்களுடன், ஜூன் 1990-க்கு பிற்படாது நிறுவனத்தைத்
திறக்க ஒப்புக்கொள்ளப்பட்டது. இந்த வழக்கு தொழிலாளர்
நிதி மற்றும் மறு கட்டமைப்பு வாரியம் (BIFR ) முன்னிலை
யில் பல தேதிகளில் விவாதிக்கப்பட்டு ஒரு புனரமைப்பு மற்றும்
நவீன மயமாக்குதல் சம்பந்தமான திட்டம் ஒன்று தயாரிக்கப்
பட்டது. இந்த திட்டத்தின் ஷரத்துக்கள் படி தமிழ்நாடு அரசு
ரூ. 3 கோடி முன்பணமாக கொடுக்க முன்வந்தது. 21—2—1991
அன்று நடைபெற்ற தொழிலாளர் நிதி மற்றும் மறு கட்டமைப்பு
வாரியத்தின் கூட்டத்தில் திரு. ஏ. சி. முத்தையா, இந்நிறு
வனத்தை புனரமைக்க தனது மாற்றியமைக்க திட்டத்தை
அளித்தார். கடைசியாக 4—7—1991 அன்று நடைபெற்ற
தொழிலாளர் நிதி மற்றும் மறு கட்டமைப்பு வாரியத்தின்
விசாரணையில் ஒரு பரந்த இணக்கம் ஏற்பட்டு நிறுவனம் ஜனவரி

1992 முதல் தனது வணிக உற்பத்தியை தொடங்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. தொழிற் துறை இவ்விஷயமாக பரிசீலித்து வருகிறது.

இதில் பாதிக்கப்பட்ட தொழிலாளர் எண்ணிக்கை 3,086 ஆகும்.

கே. சி. பி. லிமிடெட், திருவொற்றியூர் :

சென்னை கே. சி. பி. லிமிடெட் நிறுவனத்தில் உள்ள மொத்தம் 520 தொழிலாளர்கள், தொழிலாளர்களின் ஊதிய உயர்வு மற்றும் பொதுக் கோரிக்கைகளை முன்வைத்து 26—10—90 முதல் உள்ளிருப்பு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதைத் தொடர்ந்து நிர்வாகம் நிறுவனத்தை 30—10—90 முதல் கதவடைப்பு செய்தது. இப்பிரச்சினை தொடர்பான பேச்சு வார்த்தைகள் இத்துறையில் பல நிலைகளில் நடைபெற்றது. பேச்சுவார்த்தைகளில் இருதரப்பினர்களுக்கும் இடையே சுமுகமான முடிவு ஏற்படாத நிலையில் அரசு கோரிக்கைகளை தொழில் தீர்ப்பாயத்திற்கு அனுப்பி ஆணைகள் பிறப்பித்தது.

மேலும் தொழிற்தகராறு சட்டப்பிரிவு 10.பி-யின்கீழ் நிர்வாகம் 13—5—91 அன்றோ அல்லது அதற்கு முன்போ கதவடைப்பை விலக்கிக் கொள்ள வேண்டுமென்றும், தொழிலாளர்களும் வேலை நிறுத்தத்தை கைவிட்டு உடனடியாகப் பணிக்குத் திரும்ப வேண்டுமென்றும் மற்றொரு ஆணையும் பிறப்பித்தது. இந்த ஆணையின்படி நிர்வாகமானது 13—5—91 முதல் கதவடைப்பை விலக்கிக் கொண்டது. ஆனால் தொழிலாளர்கள் எவரும் பணிக்குத் திரும்பாமல் வேலைநிறுத்தத்தைத் தொடர்கின்றனர். தொழில் தீர்ப்பாயத்திற்கு இத்தாவாவினை அனுப்பிய பின்னும் பேச்சுவார்த்தைகள் மூலம் ஒப்பந்தம் ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.



மூடப்பட்ட நிறுவனங்களின் தொழிலாளர்களுக்கு நிவாரணம் :

மூடப்பட்ட நிறுவனங்களில் உள்ள பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு 1990-ம் வருடத்தில் முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து நிவாரணம் வழங்கப்பட்ட விவரங்கள் பின்வருமாறு :

| வ. எண். | நிறுவனத்தின் பெயர். | தொழிலாளர்களின் எண்ணிக்கை. | வழங்கப்பட்ட தொகை. | அரசாணை மற்றும் தேதி. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | இந்தியா போர்ஜ் அண்டு டிராப் ஸ்டாம்பிங்ஸ் லிட்., சென்னை | 233+4 | 46,600+ 800— | 37 மற்றும் 860, நாள் 4-1-1990 மற்றும் 19-6-1990 |
| | (ஒரு நபருக்கு ரூ. 200 வீதம்) | | | |
| 2. | ஸ்டாண்டர்டு மோட்டார் புராடக்ட்ஸ் ஆப் இந்தியா லிட்., பெருங்களத்தூர் | 3,086 | 7,71,500— | 3344, நாள் 19-9-1990 |
| | (ஒரு நபருக்கு ரூ. 250 வீதம்) | | | |
| 3. | மெஸ், மெட்டல் பாக்ஸ் இந்தியா லிட், சென்னை. | 89 [நாட்புணி (கேசுவல்) யாளர்] | 22,250— | 387, நாள் 1-10-1990 |
| | (ஒரு நபருக்கு ரூ. 250 வீதம்) | | | |
| | மொத்தம் | | 8,41,150— | |

## V. சட்டங்கள், சட்டதிருத்தங்கள், அறிவிக்கைகள் விதிவிலக்கு மற்றும் பல.

தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறை நாட்கள்) சட்டம் :

1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறை நாட்கள்) சட்டத்திலிருந்து மருத்துவர்களின் ஆலோசனைக் கூடங்கள், இவற்றுடன் சார்ந்த மருந்தகங்கள், மருத்துவ இல்லங்கள்/மனைகள் மற்றும் பணியாளர், முடவர், மனநிலை பாதிக்கப்பட்டோர், கைவிடப் பட்டோர் ஆகியோருக்கு மருத்துவம் செய்யும் நிறுவனங்களுக்கு நிரந்தரமான விதிவிலக்கு அரசு ஆணை எண் 1032, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 12— 11— 1990 மூலம் அளிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறை நாட்கள்) சட்டத்தின் கீழ் தொழிலாளர்களுக்கு தேர்தல் நாளன்றும் மற்றும் அரசால் அறிவிக்கப்படுகின்ற முக்கியமான நாட்கள் அன்றும் விடுமுறை அளிக்க கோரும் சட்டத் திருத்தம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

தமிழ்நாடு பிழைப்பூதியச் சட்டம் :

தமிழ்நாடு பிழைப்பூதியச் சட்ட விதிகளின் விதி 5-ன்படி இரண்டாவது மேல்முறையீடு ஆணையருக்கு செய்ய வேண்டும் என்ற விதியை நீக்கம் செய்து அரசாணை எண் 236, நாள் 16— 2— 1990-ல் அரசு ஒரு திருத்தத்தை வெளியிட்டுள்ளது.

இச்சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள அதிகாரி, தொழிலாளிக்கு வழங்கும் தொகையை நிர்ணயம் செய்து உத்தரவு வழங்கியிருந்தால், அந்த உத்தரவு பெறப்பட்ட 30 நாட்களுக்குள் அத்தொகை தொழிலாளிக்கு வழங்கப்படவேண்டும் என்று தமிழ்நாடு பிழைப் பூதியச்சட்ட விதிகளின் விதி 5(6)-க்கு அரசு அரசாணை எண் டி(572), நாள் 19— 11— 1990-ல் திருத்தம் வெளியிட்டுள்ளது.

தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டம் :

அரசாணை எண் 2146, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை, நாள் 13— 12— 1989-ல் கீழே குறிப்பிடப்பட்ட தொழில்கள், அவற்றில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ் பயன்பெறுவதற்காக அச்சட்டம் அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ளன.





1. தரைமட்டத்திலிருந்து 3.66 மீட்டர் உயரமோ அல்லது அதற்கு மேலோ உள்ள விளம்பர பலகையில் வரைதல் தொடர்பான பணியில் ஈடுபட்டுள்ள கலைஞர்கள்.

2. கோயில்களில் உள்ள விமானங்களில் சிற்ப வேலையில் ஈடுபடும் சிற்பிகள்.

3. துளை போடுதல் பணி உட்பட்ட நில அளவை மற்றும் அது சம்பந்தமான ஆய்வுகள், நில வாயு கண்காணிப்பு, வெள்ளம் வருவதை முன்கூட்டியே தெரிவிக்கும் நடவடிக்கைகள், நிலத்தடி தண்ணீர் அளவை கண்டறிதல் மற்றும் ஆராய்ச்சிகள் இவற்றில் ஈடுபட்டுள்ள பணியாளர்கள்.

தொழிற்சாலை விபத்து துயர் துடைப்பு நிதி :

1990-ம் வருடத்தில் இந்த நிதியிலிருந்து 2 வழக்குகளில் ரூ. 3,500 வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு உணவு நிறுவனச் சட்டம் :

தமிழ்நாடு உணவு நிறுவனச் சட்டத்தில், தொழிலாளி யாரேனும் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்து கொண்டால், அவருக்கு சிறப்பு விடுப்பு அளிக்கவும், கூடுதலான பாரத்தை சுமந்து செல்வதை தடுக்கவும், குற்றங்கள் இசைவு தீர்வும் மற்றும் கட்சிகள் பிரதிநிதித்துவம் செய்வது குறித்தும் தக்க திருத்தம் கொண்டுவர அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

புதியச் சட்டம் :

மாநிலத்தில் நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் பணியாற்றும் தனியார் காவலாளிகளின் பணியினை முறைப் படுத்த தனிச்சட்டம் ஒன்றை ஏற்படுத்த அரசு முயற்சித்து வருகிறது. இது பற்றிய மசோதா மீது மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. அதன் பிறகு சட்டப்பேரவையில் இது அறிமுகப்படுத்தப்படும்.

தொழிலாளர் நலச்சட்ட அமலாக்கம் :

பீடி, உணவு நிறுவனம், கடை வர்த்தக நிறுவனம் போன்றவைகளில் பணியாற்றும் மற்றும் ஒப்பந்தத் தொழிலாளர் போன்ற பலதரப்பட்ட தொழிலாளர்களின் பணிவரையறைகளை உருவாக்கவேண்டி அநேக தொழிலாளர் நலச்சட்டங்கள் உள்ளன. தொழிலாளர் துறையில் உள்ள அமலாக்கப் பணி இயந்திரம்

இந்த நோக்கத்தோடு திறம்பட செயல்படவும் உருவாக்கப் பட்டுள்ளது. தொழிலாளர் நலச்சட்டங்கள் அமுலாக்கப்படும் முன் அவற்றினை தொழிலாளர்களுக்கும், வேலையளிப்பவர் களுக்கும் போதிப்பதும் எடுத்துச் சொல்வதும் இன்றியமையாத வையாகும்.

அமுலாக்கப் பணியின் முக்கிய குறிக்கோள்கள் :

1. தொழிலாளர்களுக்கு சட்டப்பூர்வமாக கிடைக்க வேண்டிய நன்மைகளை பெற்றுக் கொடுப்பது.
2. நுகர்வோரின் அக்கறையை பாதுகாப்பது.
3. இன்னலற்ற அமுலாக்கம்.

எடைகள் மற்றும் அளவுகள் உட்பட சட்டபூர்வமான தொழிலாளர் நலச்சட்டங்களின் சரியாக அமுல் செய்யப்படுகின்றனவா என்று தெரிந்து கொள்ள சிறப்பு திடீர் சோதனை ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. பொட்டலப் பொருட்கள் விதிகள் உட்பட, எடையளவுச் சட்டங்களின்கீழ் அண்மையில் செயல்படுத்தப்பட்டுவரும், இசைவு தீர்வை முறையானது, நீதிமன்றத்தில் வழக்குகள் தொடருவதில் ஏற்படும் கால தாமதத்தை தடுக்க உதவுகிறது.

இசைந்த தீர்வையின் மூலம் (Compounding of Offences) எடையளவுகள் சட்டம் மற்றும் பொட்டலப் பொருட்கள் விதிகளின் கீழ் 17,344 வழக்குகளில் ரூ. 17,40.365 அபராதத் தொகையாக வசூல்க்கப்பட்டது.

VII. குறைந்தபட்ச ஊதியச் சட்டம் 1948 :

1948 ஆம் ஆண்டு குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின் கீழ் இவ்வரசு பொதுவாக அமைப்பு ரீதியற்ற பேரம் பேச வலுவற்ற தொழிலாளர்களுக்கு குறைந்த அளவு ஊதியங்களை நிர்ணயித் தல்/மறு நிர்ணயம் செய்து வருகிறது. இன்று வரை இச்சட்ட அட்டவணையில் 69 தொழில்கள் சேர்க்கப்பட்டுள்ளன. பரி சீலனைக்குரிய இவ்வாண்டில் கீழ்க்கண்ட தொழில்களுக்கு முதன் முறையாக குறைந்தபட்ச ஊதியங்கள் நிர்ணயம் செய்யப் பட்டுள்ளன.

(1) பேக்கரி மற்றும் பிஸ்கட் தயாரிப்பு தொழில்.
(2) காலணி தயாரிப்பு தொழில்.
(3) தோல் பொருட்கள் தயாரிப்பு தொழில்.
(4) பதனீர் இறக்கும் தொழில்.



பின்வரும் தொழில்களுக்கு குறைந்தபட்ச ஊதிய விகிதங்கள் மறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன.

மறு நிர்ணயம்.

1. கடைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் தொழில்.
2. பொன் மற்றும் வெள்ளிச் சர்தனங்கள் தயாரிப்புத் தொழில்.
3. லாண்டரி மற்றும் துணி வெளுக்கும் தொழில் (கம்பளி ஆடைகள் உட்பட).
4. செங்கல் மற்றும் ஓடு தயாரிக்கும் தொழில்.
5. மூக்குப் பொடி தயாரிப்புத் தொழில்.
6. புகையிலை (மெல்லும் மற்றும் வாசனை) தயாரிப்புத் தொழில்.
7. ஆட்டோ ரிக்ஷா மற்றும் டாக்சி தொழில்.
8. விலைக்கு வாங்கும் தேயிலைத் தொழிற்சாலைகள் தொழில்.
9. அரிசி, மாவு மற்றும் பருப்பு ஆலைத் தொழில்கள்.

மறு நிர்ணயம் :

(1) காப்பி பதப்படுத்தும் தொழில்.

(2) பொது மோட்டார் போக்குவரத்துத் தொழில்.

(3) தோல் பதனிடும் மற்றும் தோல் தயாரிப்புத் தொழில்.

(4) கயிறு தயாரிக்கும் தொழில்.

(5) ஜவ்வரிசித் தொழில்.

காகிதம் மற்றும் காகிதம் சார்ந்த தொழிலுக்கு குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயம் செய்யும் பொருட்டு குறைந்தபட்ச ஊதிய (மாநில) ஆலோசனை வாரியத்தின் அறிக்கை அரசுக்கு கிடைக்கப் பெற்று பரிசீலனையில் உள்ளது.

பின்வரும் தொழில்களுக்கு குறைந்தபட்ச ஊதிய நிர்ணயம்/ மறு நிர்ணயம் செய்வது தொடர்பான அமைக்கப்பட்ட குறைந்த பட்ச (மாநில) ஆலோசனை குழுக்கள் செயல்பட்டு வருகின்றன.

[1991 செப்டம்பர் 16

நிர்ணயம் :

1. தகரக் கொள்கலன்கள் தயாரிப்புத் தொழில்.

2. பாலிதீன், புராசசிங் போம் வகைகள் மற்றும் பிளாஸ்டிக் தயாரிப்புத் தொழில்.

3. பட்டு வளர்ப்புத் தொழில்.

4. அப்பளம் தயாரிப்புத் தொழில்.

5. கெமிக்கல் மற்றும் டிஸ்டில்லரி தொழில்.

6. கைவினைப் பொருட்கள் தயாரிப்புத் தொழில்.

7. தோட்ட நிறுவனங்கள் (சிப்பந்திகள்) தொழில்;

8. தோட்ட நிறுவனங்கள் (ஏலக்காய் தோட்டம்) தொழில்;

9. பட்டு இழை முறுக்கும் தொழில்.

மறுநிர்ணயம் :

1. முந்திரித் தொழில்;

2. வெளுப்பாக்கல் அல்லது சாயம் தோய்த்தல் அல்லது இரு தொழில்கள்.

3. திரைப்படத் தொழில் (தயாரிப்பு, விநியோகம் மற்றும் விளம்பரம் உட்பட).

பின்வரும் தொழில்களுக்கு குறைந்தபட்ச ஊதிய நிர்ணயம் செய்வது தொடர்பான ஆலோசனைக் குழுக்கள் அமைக்கும் செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

நிர்ணயம் :

1. காற்றூட்டப்பட்ட நீர் தயாரிப்புத் தொழில்.

2. வர்த்தக ரீதியில் நடத்தப்பெறும் தனிப் பயிற்சிக் கல்லூரிகள், நர்சரி பள்ளிகள் போன்ற கல்வி பயிற்றுவிக்கும் நிறுவனங்கள் தொழில்.

3. தச்சு மற்றும் கருமார் தொழில்.



1991 செப்டம்பர் 16]

மறுநிர்ணயம் :

தோட்ட நிறுவனங்கள் (சிப்பந்திகள்) தொழிலுக்கு குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் / மறுநிர்ணயம் சம்பந்தமாக அரசின் பரிசீலனையில் உள்ளது.

மறுநிர்ணயம் :

(அறிவிக்கை முறையின் மூலம்).

(1) தீப்பெட்டி மற்றும் பட்டாசு தயாரிப்புத் தொழில்.

(2) அச்சகத் தொழில்.

(3) உப்பளத் தொழில்.

(4) ஆட்டோமோபைல் பணிமனைத் தொழில்.

(5) பட்டு கைத்தறி நெசவுத் தொழில்.

(6) ஓட்டல் மற்றும் உணவு நிறுவனங்கள் தொழில்.

(7) சினிமா (திரையரங்கங்கள்) தொழில்

(8) தையற் தொழில்

(9) பொதுப் பொறியியல் மற்றும் கட்டமைப்புத் தொழில்

(10) கம்பளித் தயாரிப்பு மற்றும் சால்வை நெசவுத் தொழில்

(11) எண்ணை ஆலைத் தொழில்.

குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம்-மறு நிர்ணயம் செய்யும் போது அடிப்படை ஊதியம் தவிர விலைவாசி உயர்வை ஈடு கட்டும் விதத்தில் விலைவாசிப் புள்ளி உயர்வுடன் இணைந்த அகவிலைப் படியையும் நிர்ணயம் செய்வதை இவ்வரசு கொள்கையாகக் கொண்டுள்ளது.

சட்ட அட்டவணைத் தொழில்களுக்கு தினசரி ரூ. 15]க்கு குறையாமல் ஊதிய விகிதங்களை நிர்ணயம் ] மறுநிர்ணயம் செய்வதில் அரசு அக்கறைக் கொண்டுள்ளது.

1990 ஆம் ஆண்டில், குறைந்தபட்ச ஊதிய (மாநில) ஆலோசனை வாரியம் மூன்று முறை கூட்டங்களை நடத்தியுள்ளது.

[1991 செப்டம்பர் 16

கடந்த 4–12–1990 அன்று சென்னையில் நடைபெற்ற குறைந்தபட்ச ஊதிய (மாநில) ஆலோசனை வாரியத்தின் கூட்டத்தில் குறைந்தபட்ச ஊதிய மறுநிர்ணயம் தொடர்பான நெறிமுறைகளை வகுக்கும் பொருட்டு வாரியத்தின் உறுப்பினர்களைக் கொண்ட துணைக் குழுவினை அமைக்க முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## VIII. நலத் திட்டங்கள் மேற்கொள்ளுதல் :

### (அ) பீடி தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி செய்து தருதல் :

பீடி தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களில், பொருளாதார நிலையில் பின்தங்கிய நிலையில் உள்ள தொழிலாளர்களுக்கு வீட்டுவசதி செய்து தரும் வகையில் வீடு கட்டிக்கொள்ள ஒரு வீடு கட்டத் தேவையான தொகையில் 50 சதவீதம் அல்லது அதிக பட்சம் ரூ. 5000-க்காக, மானியம், இந்திய அரசால் தமிழக அரசிற்கு அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் வேலூரில் சத்துவாச்சாரி என்னுமிடத்தில் 150 வீடுகள் ஏற்கனவே கட்டப்பட்டுவிட்டன.

மாநிலத்தில் உள்ள பீடித் தொழிலாளர்களுக்கென் 1,000 வீடுகள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது, இத்திட்டம் 1989–90 ஆம் ஆண்டிற்குரியது. இத்திட்டத்தின் கீழ் நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள முக்கூடல் மற்றும் மேலப்பாளையம் ஆகிய இடங்களில் வீடுகள் கட்டப்பட உள்ளன. இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவேரைத் தெரிந்தெடுப்பதற்காக அரசு எண். Rt. 112, நாள் 11–4–1991–ல் கோட்பாடுகள் ஒப்புதல் செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்படி, ஒவ்வொரு வீடும் ரூ. 15,000 செலவில் கட்டப்படும். இதற்கு பீடித் தொழிலாளர் நல நிதியிலிருந்து ரூ. 5,000 மானியமாகப் பெறப்படும். மீதமுள்ள ரூ. 10,000 அட்கோவிடமிருந்து கடனாகப் பெறப்படும். இந்தக் கடன் தொகை 7 சதவீதமாக ஆண்டு வட்டியுடன் 22 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தப்படவேண்டும்.

### (ஆ) பிற திட்டங்கள் :

தொழிலாளர் சமூகத்திற்கு குறிப்பாக அமைப்பு ரீதி இல்லாத தொழிலாளர்களுக்கு சட்ட சலுகைகள் பெற உதவும் பொருட்டு இம்மாநிலத்தில் 3 தொழிலாளர் சட்ட ஆலோசனைக் குழுக்கள் இயங்கி வருகின்றன.



1991 செப்டம்பர் 16]

### புதிய திட்டங்கள்.

1991–92 ஆம் ஆண்டில், பகுதி II திட்டத்தின் கீழ் பின் வரும் திட்டங்கள் செயல்படுத்தப்படும் :—

| | | (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | எடை மற்றும் அளவைகள் அமைப்பை வலுப்படுத்த 8 முத்திரை ஆய்வர் பதவிகளையும், பீடித் தொழிலாளர் நலனுக்காக தொழிலாளர் நலச் சட்டங்களை சிறப்பாக செயல்படுத்த கூடுதல் பணியாளர்களுடன் 6 தொழிலாளர் உதவி ஆய்வர் பதவிகளையும் உருவாக்கும் திட்டம் .. | 4.53 |
| 2. | தொழிலாளர் துறை மற்றும் தொழிற்சாலைகள் ஆய்வகத்திற்காக கோயம்புத்தூரில் மைய அலுவலகக் கட்டிடம் கட்டுவதற்கான திட்டம் .. | 5.00 |
| 3. | சென்னை மற்றும் கோவையில் எண்ணெய்த் தொட்டிகளின் கொள்ளளவுகளை சரிபார்க்க பணியாளர்களை நியமிக்கும் திட்டம் .. | 2.00 |

## (IX) தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம், சென்னை.

தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம் 1973 ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது. பரந்து பெருகி வரும் பல்வேறு பணிகளை முன்னிட்டு இந்நிலையம் 1978 ஆம் ஆண்டு முதல்தர நிலையமாக உயர்த்தி அமைக்கப்பட்டது. 1–4–1988 முதல் தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975-ன் கீழ் பதிவு செய்யப்பட்டு தன்னாட்சி நிறுவனமாக இயங்கி வருகிறது. இந்த நிலையம் தற்போது தமிழ்நாடு தொழிலாளர் துறை அமைச்சர் தலைமையின் கீழ் உள்ள ஆளுநர் குழுவினால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

நிர்வாகத்தினருக்கும் தொழிலாளர்களுக்குமிடையே சுமூகமான உறவுகள் நிலை பெற தேவையான வழிவகைகளை ஆராய பயன்படும் வகையில் ஆராய்ச்சி மையமாகவும், சிறந்த தொழிற்சங்க அமைப்பை உருவாக்க உதவிடவும், மேலும் தொழிலாளர் துறையில் பணியாற்றும் அலுவலர்களின் திறமையை மேம்படுத்தும் நோக்கத்துடன் இக்கல்வி நிலையம் துவக்கப்பட்டது. இக்கல்வி நிலையத்தில் துறையின் பணியாளர்களுக்கு

புத்தாக்கப் பயிற்சி அளிப்பதோடன்றி, கடைகள் நிறுவனச் சட்ட விதிகள், தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்ட விதிகள் மற்றும் நிர்வாகத்தினர் ஆகியோருக்கு தொழிலாளர் நலச்சட்ட விதிகள் மேலாண்மையையும், செயலாக்கத்தையும், வளர்க்கும் வகையில் அவ்வப்போது கருத்தரங்குகள் சிறப்பான முறையில் நடத்தப்பட்டு வருகின்றன. தொழிற்சாலைச் சட்டத்தின் கீழ் மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் நிர்வாகத்தினர் மற்றும் தொழிலாளர்களுக்கும் பலனளிக்கும் வகையில் இக்கருந்தரங்குகள் நடைபெற்று வருகின்றன. சென்னை பல்கலைக் கழகத்தின் ஒப்புதலுடன் தொழிலாளர் கல்வி பட்டப் படிப்பும் மற்றும் பி. எல். எம்.. எம். எல். எம்., போன்ற பட்டப் படிப்புக் கல்வியும் கற்பிக்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சித் திட்டங்கள் சிறப்பாக வடிவமைக்கப்பட்டு இதில் தொழிலாளர் சட்ட நிபுணர்களின் உரையும், வழக்குகளின் ஆய்வும், குழு கலந்துரையாடலும், மாதிரி விசாரணை முறையும் அமைந்துள்ளன. 1990 ஆம் ஆண்டில் 61 பயிற்சிகள் / கருத்தரங்குகள் நடத்தப்பட்டு 2,133 நபர்கள் பங்கு கொண்டு பயிற்சி பெற்றுள்ளனர். இக்கல்வி நிலையம் ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் 31–12–90 வரையிலான காலத்திற்குள் 698 கருத்தரங்குகள் மற்றும் பயிற்சித் திட்டங்கள் நடத்தப்பட்டு 29,100 நபர்கள் பங்கு பெற்றுள்ளனர்.

## X. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்.

தொழிலாளர்களுக்கென பல வசதிகளை அளிக்கும் நோக்கத்தோடு, தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம் 1972-ல் உருவாக்கப்பட்டது. இச்சட்டத்தின் கீழ் மாநில தொழிலாளர் நல அமைச்சரை தலைவராகக் கொண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் இயங்கி வருகிறது. இவ்வாரியத்தின் நிதியிலிருந்து தொழிலாளர்களுக்கும், அவர்களின் குடும்பத்தினருக்கும் பல்வேறு வசதிகள், சலுகைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. தமிழகத்தில் இவ்வாரியத்தின் கட்டுப்பாட்டில் 52 தொழிலாளர் நல மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இம்மையங்களில் தொழிலாளர்களை சார்ந்து வாழும் பெண்களுக்கு தையற் தொழில் கற்றுக் கொடுத்தலும் மற்றும் இளங் குழந்தைகளுக்கான பள்ளியும் நடத்தப்பட்டு வருகின்றன. தையற் பயிற்சி பெறுபவர்களுக்கு மாதம் ரூ. 80 உதவித் தொகையும் அளிக்கப்படுகிறது. குழந்தைகள் பள்ளியில் பயிலும் சிறார்களுக்கு சத்துணவுடன் கூடிய மதிய உணவு மற்றும் பால், பழம் மற்றும் முட்டை ஆகியவை வழங்கப்படுகின்றன.

இந்த வாரியம் அளிக்கும் பல்வேறு நலத்திட்டங்கள் பற்றிய விபரங்களை இணைப்பு 8 முதல் 10 வரை காணலாம்.





## அத்தியாயம் II.

### தொழிற்சாலைகள் ஆய்வகத்துறை :

தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை 1948-ம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் 12 இதர முக்கிய தொழிலாளர் சட்டங்களான ஊதியம் வழங்குதல் சட்டம் 1936, குறைந்தபட்சம் ஊதியச் சட்டம் 1948, மகப்பேறு பயன் சட்டம் 1961, ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம் 1970, சம ஊதியச் சட்டம் 1976, குழந்தை தொழிலாளர் (தடுப்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் 1986, போன்ற சட்டங்கள் அனைத்தும் தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் பதிவு பெற்ற தொழிற்சாலைகளில் அமுல்படுத்தப்படுகின்றன.

தமிழகத்தில் 31–12-1990 அன்று 16,710 தொழிற்சாலைகள் பதிவு பெற்று உத்தேசமாக 8,67,726 தொழிலாளர்கள் உள்ளனர். மேற்குறிப்பிடப்பட்டுள்ள தொழிலாளர் நலச் சட்டங்களின் அமுலாக்கத்தினால் தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களின் உடல்நலம், பாதுகாப்பு ஆகியவை காப்பாற்றப்படுகின்றன.

இத் தொழிலாளர் சட்டங்களினை செயல்படுத்தி நிர்வகிக்க இத்துறையின் முழுப்பொறுப்பினையும் தொழிற்சாலைகள் தலைமை ஆய்வரைச் சாரும் . தொழிற்சாலை தலைமை ஆய்வருக்கு உறுதுணையாக 5 தொழிற்சாலைகள் இணைத் தலைமை ஆய்வர், 28 தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வர்கள், 47 தொழிற்சாலைகள் ஆய்வர்கள், ஒரு மகளிர் தொழிற்சாலைகள் ஆய்வர், 44 தொழிற்சாலைகள் உதவி ஆய்வர்கள், ஒரு அறுவை சிகிச்சை மருத்துவர், 8 உதவி அறுவை சிகிச்சை மருத்துவர்கள் மற்றும் ஒரு கணக்கு அலுவலர் உள்ளனர்.

கடும் விபத்து தடுப்புப் பிரிவு (The Major Accident Hazards Control Cell) உரிய தளவாடங்களுடன் சென்னையில் அமைக்கப்பட்டுள்ளது. அபாயகரமான உற்பத்தி முறைகளை கையாளும் தொழிற்சாலைகளுக்கு ( Hazardous Process Industries ) தொழிற்சாலைக்குள் விபத்து ஏற்படாமல் தடுக்கும் முறைகளும், (On-site Emergency Plan) அவ்வாறு விபத்து ஏற்பட்டு விட்டால் அதனை சமாளிக்கும் அவசர கால முறைகளுக்கு சோதனை மற்றும் பாதுகாப்ப பிரிவு முழுப் பொறுப்பாகும்.

[1991 செப்டம்பர் 16

தொழிலாளர்களின் மருத்துவ பரிசோதனை தொழிற் சார்ந்த சுகாதார ஆய்வு மற்றும் மருத்துவ சான்றிதழ் அளித்தல் ஆகியவை சோதனை மற்றும் பாதுகாப்பு பிரிவின் இணைந்துள்ள உதவி அறுவை சிகிச்சை மருத்துவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையின் பணிகள் விவரம் வருமாறு :—

1. தொழிற்சாலைகள் மற்றும் ஏனைய சார்புள்ள சட்டங்களை நிர்வகிப்பது.
2. பாதுகாப்பு முறைகள் மற்றும் பயிற்சி.
3. அழுத்த கலன்கள் சோதனை.
4. தொழிலாளர் உடல் நலம் பேணுதல்.
5. உற்பத்தி திறன் விரிவுபடுத்தும் உதவி.
6. தொழிலாளர் நலம் காத்தல்.

தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் ஏனைய சார்புளள் சட்டங்களை நிர்வகித்தல்.

13 சட்ட அமுல் நடத்தும் கோட்டங்கள் தொழிற்சாலைகள் சட்டம், 1948 மற்றும் தொடர்புள்ள தொழிலாளர் நலச் சட்டங்களை செயல்படுத்துகின்றன. பயன் தரத்தக்க முறைகளை இத்துறையினரால் மேற்கொள்ளப் படுவதால் தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு மற்றும் சிறப்பான பணி சூழ்நிலை உறுதிப்படுத்தப்படுகின்றது. மேலும் பல்வேறு தொழிலாளர் சட்டங்கள் மூலம் தொழிலாளர்களின் உரிமைகள் மற்றும் சலுகைகள் உறுதிப்படுத்தப்படுகின்றன.

மாநிலத்தில், 10 சோதனை மற்றும் பாதுகாப்பு கோட்டங்கள் உள்ளன. ஒவ்வொரு கோட்டத்திலும் பொறுப்பில் உள்ள தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வர் ஒருவர் தலைமை ஏற்று தனிக் கவனம் செலுத்துகின்றார். அழுத்த இயந்திர சோதனை, பாதுகாப்பு வகுப்புகள், பாதுகாப்பு ஆய்வுகள், கருத்தரங்குகள் பாதுகாப்பு பற்றிய வெளியீடுகள் தயாரித்தல் ஆகியவை இக்கோட்டங்களின் பணியாகும்.

மேலும் உற்பத்தி பெருக்கத்திற்கான ஆர்வத்தை தொழிலாளர்களிடம் ஊக்குவிக்கப்படுகின்றது. அவ்விதம் ஊக்குவிப்பதற்காக ''உற்பத்தி திறன் குழு'' என்று தொழிற்



1991 செப்டம்பர் 16]

சாலைகள் தலைமை ஆய்வர் அலுவலகத்தில் தொழிற்சாலை
கள் இணைத் தலைமை ஆய்வர் ஒருவரின் தலைமையின்கீழ்
செயல்படுகின்றது. இப்பிரிவு கருத்தரங்கு மற்றும் கல்வித்
திட்டங்கள் மூலம் சிறப்பாக செயல்படுகின்றது.

1990-ம் ஆண்டு துவக்கத்தில் 15,623 தொழிற்சாலைகள்
1948-ம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் இருந்தன.
அவைகள் 1990-ம் ஆண்டு டிசம்பர் இறுதியில் 16,710 ஆக
அதிகரித்து உள்ளன. 31—12—1990 இல் 1948-ம் ஆண்டு
தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் உத்தேசமாக 8,67,726
தொழிலாளர்கள் உள்ளனர். 1990 ஆம் ஆண்டு ரூ. 1,31,21,805
உரிமத் தொகையாக வசூலிக்கப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டின் 28,841 முறையான ஆய்வுகள் மேற்
கொண்டதோடு விடுமுறை, சிறப்பு, திடீர், இரவு ஆய்வுகள்
மற்றும் மேல் ஆய்வுகளையும் சேர்த்து 8,882 ஆய்வுகள் மேற்
கொள்ளப்பட்டு உள்ளன. ஆய்வு விபரங்கள் இணைப்பில்
தரப்பட்டுள்ளன.

ஆய்வின் போது காணப்படும் சட்ட விதிகளின் முரண்பாடு
களை நிர்வாகத்தினருக்கு தெரியப்படுத்தி அதனை களைவதற்
கான தொடர் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.
கடுமையான முரண்பாடுகளை சுட்டிக்காட்டி அதனை நிவர்த்தி
செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளாத நிர்வாகங்கள்
மீது இறுதி கட்டமாக வழக்கு தொடரப்படுகிறது. நடப்பு
ஆண்டில் தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் 2,394 வழக்குகள்
தொடரப்பட்டுள்ளன. தவிர ஒப்பந்தத் தொழிலாளர் சட்டம்
1970, ஊதியம் வழங்குதல் சட்டம் 1936, குறைந்த பட்ச
ஊதியச் சட்டம் 1948, மற்றும் 1958-ம் ஆண்டு தமிழ்நாடு
தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை) விடுமுறை
கள் சட்டம் ஆகியவற்றின் கீழ் 446 வழக்குகள் தொடரப்பட்டு,
ரூ. 11,25,291 அபராத தொகையாக வசூலிக்கப்பட்டுள்ளன.
வழக்கு விபரங்கள் இணைப்பில் தரப்பட்டுள்ளன.

1988-ம் ஆண்டு தொழிலாளர் சட்டங்கள் (அறிக்கைகள்
அளித்தல் மற்றும் பதிவேடுகள் பராமரித்தல்) சட்டம், குறைந்த
தொழிலாளர்கள் பணியாற்றும் நிறுவனங்களுக்கு பதிவேடு
பராமரிப்பிலும் அறிக்கைகள் அளிப்பதிலும் விதிவிலக்கு அளிக்க
வகை செய்து, 1–5–1989 முதல் இம்மாநிலத்தில் இது நடை
முறைப்படுத்தப்படுகின்றது. 1948-ம் ஆண்டு தொழிற்சாலைகள்
சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு 19 தொழிலாளர்களுக்கு
உள்ளிட்ட தொழிற்சாலைகளுக்கு இச்சட்டம் பொருந்தும்.
இத்தொழிற்சாலைகள் இச்சட்டத்தின்கீழ் எளிய முறையில்
வரையறுக்கப்பட்டுள்ள பதிவேடுகள மற்றும் அறிக்கைகளை,
(1) தொழிற்சாலைகள் சட்டம், (2) ஊதியம் வழங்கும் சட்டம்,

[1991 செப்டம்பர் 16

(3) குறைந்தபட்ச ஊதியச் சட்டம், (4) சம ஊதியச் சட்டம் மற்றும் ஒப்பந்தத் தொழிலாளர்கள் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம் ஆகியவற்றின்கீழ் வரையறுக்கப்பட்டுள்ள பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளுக்கு பதிலாக பராமரிக்க இயலும்.

தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வர்களால் ஒவ்வொரு மாவட்டத்திலும், மாதந்தோறும் தொழிற்சங்க பிரதிநிதிகளைக் கூட்டி தொழிலாளர்களின் குறைகளை அறிந்து அதனை உடனுக்குடன் ஆய்வர்களால் கவனிக்கப்படுகின்றன. நடப்பு ஆண்டில் 836 புகார்கள் பெறப்பட்டு விசாரிக்கப் பட்டுள்ளன. முரண்பாடுகள் காணப்பட்ட நேரத்தில் அவை களை களைய சட்டபூர்வ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட் டுள்ளன.

1987 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் (திருத்திய) சட்டத் தில் உள்ள அபராத விதிகள் கடுமையாக்கப்பட்டு, உரிமை யாளர்கள் மற்றும் மேலாளர்களை சட்ட விரோத முயற்சி களிலிருந்து பின்வாங்கச் செய்கிறது. அதிகரிக்கப்பட்டுள்ள அபராத விதிகளினாலும் சட்ட விதிமுறைகள் செம்மையாக செயல்படுத்துவதாலும், பொதுவாக, நல்ல முறையில் இச் சட்டம் பின்பற்றப்படுகிறது.

பாதுகாப்பு மற்றும் சுகாதாரமான சூழ்நிலையில் பணிபுரியும் நிலையை உறுதிப்படுத்த தொழிற்சாலைகளின் வரைபடங்கள் தொழிற்சாலை ஆய்வகத்தினால் ஒப்புதல் அளிக்கப்பட வேண்டி யுள்ளது. தொழிற்சாலை கட்டிடத்தின் உறுதி, தன்மை, காற்றோட்டம், ஒளி பணிபுரியும் சூழ்நிலைகள், குறிப்பாக உற்பத்தி செய்யும் முறையில் உள்ள ஆபத்துக்கள் அமைப்பு, பொருள்களை கையாளும் முறைகள் ஆகிய விவரங்களைக் கவனத்திற்குகொண்டு வரைபடங்கள் ஒப்புதல் அளிக்கப்படு கின்றன.

வரைபடங்கள் ஒப்புதல் அளிப்பதை துரிதப்படுத்த, வரை படங்கள் ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் சார்நிலை அலுவலர் களுக்கு பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளன. அபாயகரமான உற் பத்தி முறை உள்ள தொழிற்சாலைகளை தவிர்த்து 100 தொழி லாளர்களுக்கு குறைவாக உள்ள தொழிற்சாலைகள் சம்பந்தப் பட்ட வரைபடங்களை தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர்கள் ஒப்புதல் அளிக்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

100க்கு மேற்பட்டு 500 க்கு குறைவாக உள்ள தொழிலாளர் கள் உள்ள தொழிற்சாலைகள் சம்பந்தப்பட்ட வரைபடங்கள் தொழிற்சாலைகள் இணைத் தலைமை ஆய்வாளர்களுக்கு ஒப்புதல் அளிக்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.



1991 செப்டம்பர் 16]

அபாயகரமான உற்பத்தி முறையில் உள்ள தொழிற்சாலை கள் மற்றும் 500 தொழிலாளர்களுக்கு மேற்பட்டு உள்ள தொழிற்சாலைகள் சம்பந்தப்பட்ட வரைபடங்கள் தொழிற் சாலைகள் தலைமை ஆய்வாளரால் ஒப்புதல் அளிக்கப்படு கின்றன.

இந்த வருடம் தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளரால் 1,002 வரைபடங்களும், தொழிற்சாலைகள் இணைத் தலைமை ஆய்வாளர்களால் 393 வரைபடங்களும், தொழிற் சாலைகள் துணைத் தலைமை ஆய்வர்களால் 3,168 வரை படங்களும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன.

சம்பளப் பட்டுவாடாச் சட்டம், 1936 :

தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளை பொறுத்தவரை இச்சட்டம் தொழிற் சாலை ஆய்வகத் துறையால் அமுல்படுத்தப்படுகிறது. 25,650 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு 107 வழக்குகள் இந்த ஆண்டில் இச்சட்டத்தின்கீழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட் டுள்ளன. இவ்விவரங்கள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

குறைந்தபட்ச ஊதியச் சட்டம், 1948 :

தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் பதியப்பெற்ற தொழிற் சாலைகளில், இச்சட்டம் தொழிற்சாலை ஆய்வகத்துறையால் அமுல்படுத்தப்படுகிறது. 14,694 ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டு 163 வழக்குகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட் டுள்ளன. இவ்விவரங்கள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

1970-ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (ஒழுங்குபடுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம் :

தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் இயங்கிவரும் தொழிற் சாலைகளில் இச்சட்டம் இத்துறையால் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. இச்சட்டத்தின்கீழ், பதிவுசெய்யப்பட்ட முதன்மை நிர்வாகிகள் 661, உரிமம் பெற்ற ஒப்பந்தக்காரர்கள் 791. இந் நிறுவனங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களின் எண்ணிக்கை 44,173.

நிறுவனங்கள் பதிவுசெய்யப்பட்ட வகையில் கட்டணமாக ரூ. 10,929 மற்றும் உரிமக் கட்டணமாக ரூ. 24,725 வசூல் செய்யப்பட்டது.

ஆய்வுகள் மற்றும் வழக்குகள் தொடுத்த விபரங்கள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

[1991 செப்டம்பர் 16

தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்கள் நிரந்தரப் படுத்துதல், சட்டம் 1981) :

இச்சட்டம், தொழிலாளர்கள் 24 மாதங்களில் தொடர்ச்சியாக 480 நாட்கள் தொழிற்சாலையில் பணிபுரிந்திருப்பின் அவர்கள் நிரந்தரம் செய்யக் கோரும் தகுதியை அளிக்கிறது.

இச்சட்டம், தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் வரும் தொழிற்சாலைகளில் தொழிற்சாலை ஆய்வகத் துறையால் அமுல்படுத்தப்படுகிறது. 8,717 தொழில் நிறுவனங்கள் இச் சட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. 12,999 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 41,843 தொழிலாளர்கள் சென்ற நிதி நிலைக் கூட்டத்தின் பொழுது மேற்கொண்ட உறுதியின் பேரில் இந்த ஆண்டு பணியில் நிரந்தரம் செய்யப்பட்டுள்ளனர்..

பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் பயிற்சி அளித்தல்:

போபாலில் நடந்த துக்ககரமான விபத்துக்குப்பின் இந்திய அரசு தொழிலாளர் பாதுகாப்பு மற்றும் உடல்நலம் ஆகியவை குறித்து உள்ள எல்லா தொழிலாளர் நலச் சட்டம் பிரிவுகளை மேலும் கடுமையானதாக மாற்ற விரும்பியது. அவ்வாறு மாற்ற விரும்பிய தொழிலாளர்கள் நலச் சட்டங்களில் தொழிற்சாலைகள் சட்டமும் ஒன்றாகும். தொழிலாளர் உடல் நலனை பாதுகாக்கவும் அபாயகரமான விளைவுகளினால் உடல்நலம் பாதிக்கப்படும் நிலைமை இருப்பின் அதனின்று பாதுகாத்துக் கொள்ள உரிய பாதுகாப்பு நடைமுறைகளை சேர்த்தும், தொழிற்சாலைகள் சட்டத்திற்கு 1987-ஆம் ஆண்டு இந்திய அரசு ஒரு திருத்தச் சட்டம் கொண்டு வந்தது. 'தொழில் பாதுகாப்பு' என்ற குறிக்கோளை விரிவுபடுத்தி தொழிற்சாலைக்குள் பணியாற்றும் தொழிலாளர்களின் பாதுகாப்பினை மட்டும் அல்லாமல் அத்தொழிற்சாலைகளின் சுற்றுப்புறத்தில் குடியிருக்கும் பொதுமக்களின் நலனையும் பாதுகாப்பையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்பதும் திருத்தச் சட்டத்தில் இடம்பெற்றுள்ளது.

நம் மாநிலத்தில் அபாயகரமான தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிற்சாலைகள் இயங்கும் ஆறு பகுதிகளை அடையாளம் கண்டுள்ளோம். அவையாவன : மணலி, நெய்வேலி, கடலூர், ராணிப்பேட்டை, மேட்டூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களாகும். இந்த இடங்களைப் பொறுத்தவரை அபாயகரமான உற்பத்திமுறை கையாளும் தொழிற்சாலைகளுக்கு தொழிற்சாலைகளுக்குள் விபத்து ஏற்படாமல் தடுக்கும் முறைகளும், அவ்வாறு விபத்து ஏற்பட்டால் அதனை சமாளிக்கும் முறைகள் உள்ள நடைமுறைத் திட்டங்களும் ( On– it –Plan ) தொழிற்சாலைகளை சுற்றியுள்ள பகுதியில் எந்தவிதமான பாதிப்பு ஏற்படும்போது மக்களை பாதிப்புக்கு உள்ளாக்காமல் பாதுகாப்பாக வெளியேற்றும் திட்டம், பாதுகாப்பு நடைமுறைகள் ( Off-site



1991 செப்டம்பர் 16]

plan ) ஆகியவை தீட்டப்பட வேண்டும். சோதனை மற்றும் பாதுகாப்புக் கோட்டம் மற்றும் பெரும் விபத்து தடுப்பு பிரிவு ( The T·sting and Saf·ty Divisicn and Major Accid nt Hazard Cont ol Cell ) இணைந்து இத்திட்டங்களை தயாரிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றன. மாவட்ட ஆட்சியாளர் தலைமையில் இயங்கும் மாவட்ட நெருக்கடி நிலைகுழுவில் District Em rg·ncy Committ e ) மண்டல தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளரும் பங்குபெற்று மாவட்டத்தில் உள்ள பல்வேறு அபாயகரமான உற்பத்தி முறைகளைக் கையாளும் தொழிற்சாலைகளில் பெரும் விபத்துக்களைத் தடுக்க ஒருங்கிணைந்த திட்டங்கள் தயாரிக்க ஒத்துழைக்கிறார்கள்.

அபாயகரமான இரசாயனப் பொருட்களை மூலப் பொருளாக கொண்டு செயல்படும் 59 தொழிற்சாலைகள் இம் மாநிலத்தை பொறுத்தவரை அடையாளம் காணப்பட்டுள்ளது. சோதனை மற்றும் பாதுகாப்புப் பிரிவு மண்டல தொழிற்சாலைகள் துணை தலைமை ஆய்வர்கள், தொழிலாளர்கள், மேற்பார்வையாளர்கள் நிர்வாக அலுவலர்களுக்கு தொழிற்சாலையில் பல்வேறு மட்டத்தில் கையாளவேண்டிய பாதுகாப்பு முறைகளை கற்பிக்க பயிற்சி வகுப்புகள் நடத்தி வருகிறார்கள்.

236 பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள், 294 தொழிற்சாலைகளில் இந்த ஆண்டில் நடைபெற்று அதன்மூலம் 6,540 தொழிலாளர்கள் பயனடைந்து உள்ளனர். அதிக விபத்துக்கள் நடக்கும் தொழிற்சாலைகளை தேர்ந்து எடுத்து அத் தொழிற்சாலைகளை பொறுத்தவரை 41 பாதுகாப்பு ஆய்வுகள் நடத்தப்பெற்று அதன் முடிவுகள் சம்பந்தப்பட்ட தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கு தக்க பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுப்பப்பட்டன. மேலும் 49 தொழிற்சார்ந்த சுகாதார ஆய்வுகள் 1990-ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தொழிற் பாதுகாப்பு குறித்து சோதனை மற்றும் பாதுகாப்பு பிரிவினால் காலாண்டு இதழ் வெளியிடப்படுகிறது. இதில் பாதுகாப்பு விபத்து பற்றிய குறிப்புகள், கேலிப் படங்கள் ஆகியவை நிர்வாகம் மற்றும் தொழிலாளர்கள் பயிற்சி பெற உள்ளது.

விபத்துக்களின் எண்ணிக்கை விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| ஆண்டு. | மரண விபத்து. | மரணம் இல்லாத விபத்து. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1988 | 52 | 14,249 |
| 1989 | 49 | 12,471 |
| 1990 | 35 | 13,062 |

[1991 செப்டம்பர் 16

பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு பயிற்சியளித்தல் :

பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெரும்
பான்மையான தொழிலாளர்கள் கிராமப்புறங்களில் இருந்து
வருவதால் பெரும்பாலும் படிப்பறிவு அற்றவர்களாக உள்ளனர்.
பட்டாசு தொழிற்சாலைகளில் ஏறத்தாழ 20,000 தொழிலாளர்
கள் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளனர். இங்கு வேலைசெய்யும்
தொழிலாளர்களுக்கு அபாயம் மற்றும் பாதுகாப்பு பற்றிய
பயிற்சி முகாம்களை அவர்கள் பயன்பெறும் வகையில் தொழிற்
சாலைகள் ஆய்வகத் துறையினரால் நடத்தப்பட்டு வருகின்றன.
இந்தப் பயிற்சித் திட்டம் இரண்டு நாள் நிகழ்ச்சி நிரல்கள் கொண்
டது. இதுபோன்று மாதத்தில் 8 முதல் 10 வரையிலான பயிற்சி
வகுப்புகள் மாதந்தோறும் நடத்தப்பட்டு வருகின்றன. சிவகாசி
கோட்டத்தில் உள்ள பட்டாசு தொழிற்சாலைகளில் வேலை
செய்யும் 40 முதல் 50 வரையிலான தொழிலாளர்களை ஒவ்வொரு
பயிற்சி வகுப்பிற்கும் அனுப்பப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டு வரு
கிறது. அபாயகரமான முறைகளில் கையாளப்படும், பயன்படுத்தப்
படும், பாதுகாக்கப்படும் வேதிப் பொருட்களின் வேதியல் மற்றும்
இயற்பியல் பண்புகளை எளியமுறையில் பட்டாசு தொழிற்
சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு தொடர்ந்து கற்
பிக்கப்படுகிறது. தொழிற்சாலைகளில் வேலை செய்யும்போது
அவர்கள் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு முறைகளும்
கற்பிக்கப்படுகிறது. பட்டாசு தொழிற்சாலைகளில் வேலை
செய்யும்போது தொழிலாளர்கள் மேற்கொள்ள வேண்டிய
பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து பட விளக்கத்துடன் கூடிய
துண்டு பிரசுரங்கள் மேற்காணும் பயிற்சியின்போது விநியோகிக்
கப்படுகிறது.

இவ்வாறான பயிற்சி திட்டத்தினால் ஆண்டொன்றுக்கு 5,000 தொழிலாளர்கள் பயிற்சி பெறுகிறார்கள்.

மாநில பாதுகாப்பு பரிசுகள் மற்றும் சிரம் வீர் பரிசுகள் :

தொழிற்சாலையில் சிறந்த பாதுகாப்பு செயல்களை தெரிந்து
கொள்ளவும் தொழில் பாதுகாப்பில் ஆழ்ந்த பற்றுக் சொண்டு
இயங்கச் செய்யவும் நிர்வாகத்தினர்களுக்கு தமிழக அரசு
மாநில பாதுகாப்பு பரிசுகள் வழங்குகிறது. இந்த பரிசுகள்
வழங்கும் நோக்கத்திற்காக தொழிற் நிறுவனங்கள் கீழ்க்கண்ட
மூன்று வகையாக பிரிக்கப்பட்டுள்ளன.

தொகுதி 'அ' : பத்து இலட்சம் மனித நேரத்திற்கு குறைவில்லாமல் வேலை செய்த தொழிற்சாலைகள்,



1991 செபடம்பர் 16]

தொகுதி 'ஆ' : ஐந்து முதல் பத்து இலட்சம் மனித நேரங்களுக்கு இடையில் வேலை செய்த தொழிற்சாலைகள்.

தொகுதி 'இ' : இரண்டு முதல் ஐந்து இலட்சம் மனித நேரங்களுக்கு இடையில் வேலை செய்த தொழிற்சாலைகள்.

கீழ்க்கண்ட மூன்று திட்டங்கள் செயலில் உள்ளது :—

திட்டம் 1.—முந்தைய ஆண்டை ஒப்புநோக்குகையில் விபத்து விகிதத்தை மிக அதிகமாக குறைத்து காண்பிக்கும் தொழிற் சாலைக்கு இந்த பரிசினை வழங்குதல்.

திட்டம் 2.—விபத்து விகிதத்தைக் குறைத்துக் காண்பிக்கும் அதே வகைப்பட்ட மற்ற தொழிற்சாலைகளுடன் ஒப்பிடும்போது நிறையிட்ட அளவு எண். வீதத்தை (Lower Weighted Frequency Rate) அந்த ஆண்டில் மிகக் குறைத்து காண்பிக்கும் தொழிற் சாலைக்கு இந்த பரிசினை வழங்குதல்.

திட்டம் 3.—பரிசுக்குரிய ஆண்டில் விபத்தின்றி அதிக மனித நேரம் செயல் புரிந்த தொழிற்சாலைக்கு வழங்குதல்.

இந்த தொழிற்சாலைகள் மேலும் 10 பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. (நூற்பு, சிமெண்ட், பொறியியல் மற்றும் பல.)

விபத்து தவிர்க்கும் வழிகள், உற்பத்தி திறன் அதிகமாக்குதல் மற்றும் தொழிலின் திறமைகளை காட்டுதல் போன்றவற்றின் சீரிய முறையில் பங்கு கொள்ள தொழிலாளர்களை ஊக்கப்படுத்த சிரம் வீர் பரிசுகள் வழங்கப்படுகின்றது. பாதுகாப்பு பற்றிய கருத்துக்கள், அதிக உற்பத்தி, தொழிலின் சிரத்தை மற்றும் வேலை செய்யும் முறைகளில் புதிய கண்டுபிடிப்பு, முன்னேற்றம், சேதம் மற்றும் விபத்துக்களைக் குறைத்தல் ஆகியவற்றிற்கான கருத்து எடுத்துக் கூறும் தொழிலாளர்களுக்கு இப்பரிசு வழங்கப்படுகிறது.

மாநிலப் பாதுகாப்புப் பரிசுகள், கேடயங்கள் மற்றும் சான்றிதழ்கள் தேர்வு பெற்ற நிர்வாகத்தினருக்கு வழங்கப்பட்டது.

1988-ஆம் ஆண்டிற்கு 481 விண்ணப்பங்களுக்கு முதல் பரிசாக 77 கேடயங்கள் (சான்றிதழுடன்), 131 சான்றிதழ்கள் இரண்டாவது மற்றும் மூன்றாவது பரிசாக அளிக்கப்பட்டுள்ளது.

[1991 செப்டம்பர் 16

1988 ஆம் ஆண்டிற்கான சிரம் வீர் பரிசுகளுக்கு 90 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. அவைகளில் 4 முதற் பரிசுகள், 9 இரண்டாவது பரிசுகள் மற்றும் 17 மூன்றாம் பரிசுகள் தெரிவு செய்யப்பட்டு பரிசளிப்பு விழா உரிய நேரத்தில் நடைபெறவுள்ளது.

மேற்குறிப்பிட்டுள்ள பரிசுக்குரியோரை அரசால் அமைக்கப்பட்ட குழுவினரால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

அழுத்த இயந்திரங்கள் சோதனை :

தமிழ்நாட்டில் 32,701 அழுத்த இயந்திரங்கள் உள்ளன. தொழிற்சாலைகளில் அமைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு அழுத்த இயந்திரத்தையும் தகுதியுள்ள நபர்களால் காலமுறை தோறும் முழுமையாக ஆராய்ந்து அதன் பாதுகாப்பாக வேலை செய்யும் தன்மைக்குத் தகுதி சான்று வழங்க வேண்டும் என 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் 1950 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு தொழிற்சாலைகள் ஆய்வகத்துறையே இப்பணியினை தாமே செய்து வருகின்றனர். அழுத்த இயந்திரங்களை சோதனை செய்ய சோதனை மற்றும் பாதுகாப்புக் கோட்டங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

1989ஆம் ஆண்டில் சோதனை செய்யப்பட்ட கலன்களின் விபரம் கீழே வருமாறு :—

| | |
|---|---|
| வெளிப்புறம் .. .. .. | 26,128 |
| உட்புறம் .. .. .. | 463 |
| தீர்மன்களின் நிலை : | |
| (ஹைடிரோஸ்டேடிக்ஸ்) .. .. .. | 5,226 |
| ஒலி அலை அதிர்வாய்வு .. .. | 884 |
| மொத்தம் .. .. .. | 32,701 |

இந்த நோக்கத்திற்காக வசூலிக்கப்பட்ட கட்டணம் ரூபாய் 37,241,115.

தொழிலாளர் உடல் நலன் பேணுதல் :

கடும் விபத்து தடுப்புப் பிரிவுடன் (Major Accident Hazard Control Cell) இணைந்துள்ள தொழிற்சாலைத் துப்புரவு சோதனைக் கூடத்திற்கு அறுவை சிகிச்சை மருத்துவர் ஒருவர் பொறுப்பிலுள்ளார். இவ்வாய்வகத் துறையில் சென்னை,



1991 செப்டம்பர் 16]

கோவை, வேலூர், சேலம், திருச்சி, சிவகாசி, திருநெல்வேலி மற்றும் மதுரை ஆகிய 8 இடங்களில் உதவி அறுவை சிகிச்சை மருத்துவர்கள் பணியாற்றுகின்றனர்.

1990 ஆம் ஆண்டு 11 தொழில் சார்ந்த சுகாதார ஆய்வுகள், தொழிற்சாலை துப்புறவு சோதனை கூடத்தினால் மேற்கொள்ளப் படுகின்றது. குளோரின், சல்பர்-டை-ஆக்சைட், சல்பூரிக் ஆசிட், மிஸ்ட், கார்பன்-டை-ஆக்சைட், கார்பன் பிளாக்-மெர்குரி போன்ற நச்சுபொருள்கள் மற்றும் அளவுக்கு அதிகமான இரைச்சல் களால் தொழிலாளர்களுக்கு ஏற்படும் உடல் மற்றும் மனக்கேடு கள் பரிசோதித்துச் கண்டுபிடிக்கப்பட்டு, அனுமதிக்கப்பட்டதை விட அதிகமாக நச்சுத்தன்மை அதிகமாக இருப்பின், அதனைக் குறைத்துத் தகுந்த காப்பினை அமைப்பதற்கான வழி முறைகள் பரிந்துரைக்கப்பட்டன.

1990 ஆம் ஆண்டு அறுவை சிகிச்சை மருத்துவர்களால் 51 தொழிற்சாலைகள் (குறிப்பாக அபாயகரமான தொழிற் சாலைகள்) பார்வையிடப்பட்டது. 843 தொழிலாளர்களிடம் தொழில் சார்ந்த நோய்கள் உள்ளனவா என்று பரிசோதிக்கப் பட்டது.

ஆய்வின்பொழுது நிர்வாகம், மேற்பார்வையாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் ஆகியோருக்கு தொழிற்கூட நலம் மற்றும் தனி நபர் நலன் பற்றி தெளிவாக்கப்பட்டது. சிறப்பு மருத்துவ சிகிச்சை தேவைப்படும் தொழிலாளர்களை மருத்துவ வல்லு நர்களிடம் ஆலோசனைப் பெறுமாறு அறிவுறுத்தப்பட்டார்கள்.

அறுவை சிகிச்சை மருத்துவர் மற்றும் உதவி சிகிச்சை மருத்துவர் களின் பணிகள் வருமாறு :—

| | |
|---|---|
| 1. நடப்பு ஆண்டில் (1990) பார்வையிடப்பட்டுள்ள தொழிற்சாலைகள் .. .. .. | 1,345 |
| 2. அபாயத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர் பரிசோதிக்கப்பட்ட எண்ணிக்கை | 12,568 |
| 3. நடப்பு ஆண்டில் சான்றளிக்கப்பட்டவை : | |
| 1. அபாய தொழிலில் .. .. .. | 11,532 |
| 2. இளம் வயதினர் .. .. .. | 10,070 |
| 3. சிற்றுண்டி விடுதி .. .. .. | 2,502 |
| 4. வசூலிக்கப்பட்ட பரிசோதனை கட்டணம் | 3,04,100 |

[1991 செப்டம்பர் 16

உற்பத்தித்திறன் முறைகள் :

உற்பத்தித் திறன், 20 அம்சத் திட்டத்தில் வரும் ஒரு முக்கிய அம்சமாக இருப்பதால் நாட்டில் உற்பத்தி திறனை மேம்படுத்த இந்திய அரசு மிகுந்த கவனம் செலுத்துகிறது. இத்திட்டத்தை திறம்படச் செயல்படுத்துவதற்காக ஒரு தொழிற்சாலைகள் ஆய்வரின் உதவியுடன் தொழிற்சாலைகள் இணைத் தலைமை ஆய்வர் (உற்பத்தித் திறன் குழு) பதவி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இக்குழுவில் மேலும் இரண்டு உதவித் தொழிற்சாலைகள் ஆய்வாளர்களை நியமித்து உற்பத்தித் திறன் நுணுக்கங்களை விரிவாக செயல்படுத்த வளப்படுத்தப்பட்டுள்ளது.

ஆலோசனை நல்கும் அமைப்பான உற்பத்தி திறன் குழு உற்பத்தித் திறனை மேம்படுத்துதல், அதிக அதிகாரங்களை பயன்படுத்துதல், வீணாவதை நீக்குதல், கால ஆய்வு இயக்க ஆய்வு நடத்துவதன் மூலம் பணி கோட்பாடுகளை வரையறுத்தல், வேலைப் பகுப்பாய்வு, வேலை பாதுகாப்பு, பகுப்பாய்வு நடத்துதல், பரிசு வழங்கும் திட்டத்தை கொண்டு வருதல், தொழிலாளர்களுக்கும் மேற்பார்வையாளர்களுக்கும் முறையாக பயிற்சி அளித்தல் போன்ற பணிகளையும் புரியும்.

சென்னை உற்பத்தித் திறன் குழுவின் ஆட்சிக் குழுமத்தில் தொழிற்சாலைகள் தலைமை ஆய்வரும், கோவை, மதுரை, சேலம், திருச்சி மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ள பிராந்திய உற்பத்தித் திறன் குழுவின் ஆட்சிக் குழுமத்தில் அப்பிரதேச எல்லையிலுள்ள தொழிற்சாலைகள் இணைத் தலைமை ஆய்வர், தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வர் உறுப்பினராக செயலாற்றுகின்றனர்.

இந்த உற்பத்தித் திறன் பிரிவு தொழிற்சாலைகள் தலைமை ஆய்வர் அலுவலகத்தில் செயல்பட்டு வருகின்றன. இக்குழு 1-1-1990 முதல் 31-12-1990 வரையிலான காலத்தில் 35 பயிற்சி வகுப்புகள் நடத்தி 954 தொழிலாளர்கள் பயனடைந்து உள்ளார்கள்.

1987-88 மற்றும் 1988-89 ஆகிய ஆண்டுகளுக்கு இப்பிரிவு திட்டத்தின்கீழ் வெற்றி பெற்றவர்களை தெரிவு செய்யப்பட்டு விரைவில் பரிசுகள் வழங்க உள்ளன.

இரசாயனத் தொழிற்சாலைகளின் குறித்த பணிக்குழு :

தொழிற்சாலைகள் மற்றும் தொழில்களில் கேடு விளைவிக்கும் வேதிப் பொருட்களை அதிக அளவில் பயன்படுத்துவதால், தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட



1991 செப்டம்பர் 16]

அதிக எண்ணிக்கையிலான மக்களுடைய வாழ்க்கைக்கு எந்த நேரத்திலும் அபாயம் விளைவிக்கக்கூடும். இது இரசாயன பொருட்களினாலும், அதனால் ஏற்படும் தீ விபத்து, வெடி விபத்துக்கள், நச்சு வாயுக்கள் வெளிப்படுவதன் மூலமாகவும், தொழிலாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் மரணம் மற்றும் காயங்களை விளைவிக்கக்கூடும். இதன் விளைவாக மனித இனம் அழிவதோடு சுற்றுப்புற சூழலும் அடியோடு பாதிக்கப்படலாம். ஆகவே, 1984 ஆம் ஆண்டு போபாலில் ஏற்பட்ட விபத்துக்கு பிறகு இது போன்ற அபாயம் விளைவிக்கக் கூடிய கடுமையான கேட்டினை உலகம் முழுவதும் தடுத்து நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டு வருகிறது.

போபால் விபத்துக்குப் பின், மாநில அரசுகளின் தொழிலாளர் துறை செயலாளர்கள் கூடி ஆபத்து விளைவிக்கும் தொழில் பிரிவுகளை அடையாளம் காணவும் நடைமுறைகளில் உள்ள பாதுகாப்பு வழிகளை கண்டறியவும் ஒவ்வொரு நிலையிலும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து கருத்து தெரிவிக்கவும் ஒவ்வொரு மாநிலத்திலும் பணிக் குழு (Task Force) ஒன்றை நியமிக்க முடிவு செய்தனர். இதன்படி டாக்டர் சாந்தப்பா அவர்கள் தலைமையின்கீழ் அமைந்த குழுவின் அறிக்கையின் பரிந்துரைகள் மற்றும் கருத்துரைகள் மீது அரசு நடவடிக்கை மேற்கொண்டு பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்திற்கு மாநில அளவில் உயர் மட்ட முத்தரப்பு பாதுகாப்புக் குழு (State level High Power Tripartite Safety Committee) ஒன்றினை மாநிலத்தின் தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய கொள்கைகள் வகுக்கும் மாநில அளவிலான முத்தரப்பு அமைப்பாகவும் மாநில அளவில் வல்லுநர் குழு/பணிக்குழு (State Level Expert Committee/Task Force) ஒன்றையும் அமைத்து மேற்கூறப்பட்ட இரு குழுக்களும் தொழிற்சாலைகள் தலைமை ஆய்வர் பணியமைப்பில் உறுப்பினர் செயலாளர் கட்டுபாட்டின்கீழ் ஏற்படுத்தப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கும்பொருட்டு நோடல் ஆபிஸர் (Nodal Officer) ஆகவும் அன்னார் பணி அமர்த்தப்பட்டுள்ளார்.

15—11—1990 அன்று மாநில வல்லுநர் குழு, பணிக் குழு கூடி பாதுகாப்பு நடைமுறைகள் சரியாக மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதை கண்டறிய பாதுகாப்பு தணிக்கைக் குழு (Safety Auditing Cell) அமைப்பதற்கான வழி முறைகளை கண்டறிந்தது. அத்தணிக்கை முறைக்கான உரிய வழிமுறைகளையும் உருவாக்க தீர்மானிக்கப்பட்டது.

பெரும் விபத்து நேர்ந்து கேடு விளைவிக்கக் கூடிய 14 தொழிற்சாலைகளிலிருந்து "On Site Plan" இந்த ஆண்டில் பெறப்பட்டது.

[1991 செப்டம்பர் 16

தொழிலாளர் நலம் பேணுதல் :

தனி நபர் விபத்து ஈட்டுறுதி திட்டம்.

1986 ஆம் ஆண்டு ஜுலைத் திங்கள் முதல் நாளிலிருந்து பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களுக்கென தனி நபர் விபத்து ஈட்டுறுதி திட்டத்தினை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டம் மேற்சொன்ன தொழிலாளர்கள் விபத்தில் இறந்தாலோ அல்லது அங்கங்களை இழந்தாலோ அவர்களுக்கு உதவி அளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஈட்டுறுதி செய்யப்பட்ட தொழிலாளர்கள், பணியில் ஈடுபட்டிருக்கும்போது மட்டுமின்றி மற்ற இனங்களில் ஏற்படும் விபத்துகளுக்கும் ஈட்டுறுதி பயன் கொடுக்கப்படும்.

இத் திட்டம் பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழிலில் ஈடுபட்டுள்ள 14 முதல் 65 வயது வரை உள்ள அனைத்து தொழிலாளர்களுக்கும் பொருந்தும்.

உச்ச நீதி மன்றம் நீதிபேராணை எண். 465/86 கொடுத்த தீர்ப்பின்பேரில் பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் விபத்தில் இறக்க நேரிட்டால் அவர்களுக்கு ரூபாய் 50,000 வழங்கும் வகையில் தனிநபர் விபத்து ஈட்டுறுதி திட்டம் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. அத்திட்டம் 1991 ஆம் ஆண்டு ஜுலைத் திங்கள் முதல் நாளிலிருந்து அமுலுக்கு வந்துள்ளது. அத்திட்டத்தில் 10 வயது முதல் 65 வயது வரை உள்ள மேற்சொன்ன தொழிலாளர்களுக்கும் பொருந்தும். அத்திட்டம் நேஷனல் இன்ஸ்யூரன்ஸ் நிறுவனத்தால் தமிழகத்தில் செயல்பட்டு வருகிறது.

காமராசர் மாவட்டம், சிவகாசி அருகில் உள்ள மீனம்பட்டி என்ற கிராமத்தில் உள்ள டான் அம்ரோஸ் பட்டாசு தொழிற்சாலையில் 1991-ம் ஆண்டு ஜுலைத் திங்கள் 12-ஆம் நாள் அன்று எதிர்பாராத விபத்து ஒன்று ஏற்பட்டது. அவ்விபத்து எப்படி ஏற்பட்டது என்பதை கண்டறியவும், இது போன்ற விபத்துக்கள் இனி ஏற்படாமல் இருக்கும் வகையில் யோசனை கூறவும் திரு. தங்கராஜு, இ.ஆ.ப., சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர், நில நிர்வாகம் தலைமையில் ஒரு தனிநபர் விசாரணை குழுவினை அரசு நியமித்துள்ளது.



1991 செப்டம்பர் 16]

தேசிய குழந்தை தொழிலாளர்கள் திட்டம்.

தேசிய குழந்தை தொழிலாளர்கள் திட்டத்தினை மைய அரசு
சிவகாசியில் 1986 ஆம் ஆண்டு துவக்கியது. இத்திட்டத்தின்
நோக்கம் பதினான்கு வயதுக்கு உட்பட்ட குழந்தை தொழி
லாளர்கள் பணியில் ஈடுபடுவதில் இருந்து நீக்குதல். அக்
குழந்தை தொழிலாளர் குடும்பங்களின் வருவாயை அதிகரித்தல்.
கல்வி மற்றும் சுகாதாரம் போன்ற இன்ன பிற அடிப்படை
வசதிகளை அவர்களுக்கு செய்துகொடுப்பதே ஆகும். அத்திட்டம்
1975ஆம் ஆண்டு குழுமங்கள் பதிவு சட்டத்தின் கீழ் பதிவு
செய்யப்பட்ட தேசிய குழந்தை தொழிலாளர்கள் திட்ட
குழுமத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

காமராசர் மாவட்ட ஆட்சித் தலைவர் அக்குழுமத்தின்
தலைவர் ஆவார். மாவட்ட வளர்ச்சி அலுவலர் அக்குழு
மத்தின் உறுப்பினர்-செயலாளர் ஆவார். அத்திட்டத்தின்
செயல்பாடுகள் மாநில அளவில் அமைக்கப்பட்ட ஒரு குழு
வால் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

[1991 செப்டம்பர் 16

## அத்தியாயம் III.

### 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி (பல்வகை விதித்துறைகள்) சட்டம்.

1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி (பல்வகை விதித்துறைகள்) சட்டத்தில் உள்ள மூன்று திட்டங் களில் 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி ஒன்றாகும். இத் திட்டம் 1952 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் முதல் நாளில் இருந்து செயற்பாட்டுக்கு வந்தது. வருங்கால வைப்பு நிதி என்பது தொழிலாளரும் வேலை அளிப்பவரும் சேர்ந்து பங்கு கட்டணம் கட்டாயமாக செலுத்த வேண்டும் என்ற குறிக்கோளுடன் ஏற்படுத்தப்பட்ட திட்ட மாகும். துவக்கத்தில் 6 பெரிய தொழில்கள் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன. இத்திட்டம் படிப்படியாக அதிகமான தொழிலகங்களுக்கும், நிறுவனங்களுக்கும் விரிவாக் கப்பட்டுள்ளது. இன்றளவில் 174 தொழிலகங்களில் உள்ள தொழிலாளர்கள் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட் டுள்ளனர். 1971ஆம் ஆண்டு குடும்ப நல ஓய்வூதியத் திட்டம், 1976 ஆம் ஆண்டு தொழிலாளர் வைப்பீட்டுத் தொகையுடன் இணைந்த காப்பு நிதித் திட்டம் ஆகிய வேறு இரு திட்டங் களும் இச்சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ளன.

### இச் சட்டம் பொருந்துதல் பற்றி :

மைய அரசால் குறித்தறிவிக்கப்பட்டும், இருபதும் அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களையும் கொண்ட தொழிற்சாலை களுக்கும், தொழிற் நிறுவனங்களுக்கும் இச்சட்டமும் அதன் திட்டங்களும் பொருந்தும். இச்சட்டம் இருபதுக்கும் மேற்பட்ட தொழிலாளர்களைக் கொண்டு தொடங்கும் புதிய தொழிற் நிறுவனங்களுக்கு மூன்றாண்டுகளுக்கு பொருந்தாது. மேலும் கூட்டுறவு சங்கங்கள் சட்டத்தின் கீழ் பதிவு பெற்ற 50-க்கும் குறைவாக உள்ள தொழிலாளர்களைக் கொண்டு, மின் ஆற்றல் உதவியின்றி செயல்படுகின்ற கூட்டுறவு சங்கங்களுக்கு இச் சட்டம் பொருந்தாது. மேலும் மத்திய/மாநில அரசு சட்டங் களின் கீழ் அமைக்கப்பெற்றுள்ள அல்லது அவைகளுக்குச் சொந்த மான அல்லது அவைகளின் கட்டுப்பாட்டில் உள்ள நிறுவனங் களில் பணிபுரியும் தொழிலாளர்கள் வைப்பு நிதிச் சட்டத்திற்கு இணையான பயன்களை அடையும் பட்சத்தில், இச்சட்டம் அவர் களுக்குப் பொருந்தாது.

இச்சட்டத்திற்கு உட்படாத தொழிற்சாலைகள்/நிறுவனங்கள் தமது பெரும்பான்மையான தொழிலாளர்களின் ஒப்புதலுடன் தாமாகவே முன்வந்து இச்சட்டத்தின் பயனைக் கோரலாம்.



1991 செப்டம்பர் 16]

### பங்கு கட்டணத் தொகை அளவு :

அகவிலைப்படி மற்றும் அடிப்படைச் சம்பளம் ஆகியவற்றில் 8⅓ விழுக்காட்டுத் தொகையே ஒவ்வொரு தொழிலாளரும் அவர் தம் வேலை அளிப்போரும், இத்திட்டத்தின்கீழ் செலுத்த வேண்டிய பங்கு கட்டண அளவாகும். 50 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களைக் கொண்ட சில குறிப்பிடப் பட்ட 98 தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிற்சாலைகள்/ தொழில் நிறுவனங்களை பொறுத்தவரை பங்கு கட்டணத் தொகை 10 சதவிகிதம் என 1—6—1989 முதல் உயர்த்தப் பட்டுள்ளது.

1—11—1990 முதல், ரூ. 3,500க்கு மேற்படாமல் மாதச் சம்பளம் பெறும் அனைத்துத் தொழிலாளர்களும், தாங்கள் எந்த ஒரு தொழிற்சாலை/நிறுவனத்தில் பணியில் சேர்ந்தனரோ அந்த நாள் முதற்கொண்டு வைப்பு நிதித் திட்டத்தின் கீழ் உறுப்பினர் ஆதல் வேண்டுமென்றும், ஏற்கெனவே வரையறுக்கப்பட்டுள்ள குறைந்த கால பணியைக் கணக்கில் கொண்டு அனைத்து தொழி லாளர்களிடமிருந்தும் அவர்களது பங்குத் தொகையை வசூலிக்க வேண்டுமென்றும் வகை செய்யப்பட்டுள்ளது.

### II. நிறுவனங்களையும்/சந்தாதரரர்களையும் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வருதல் (தொழிலாளர் வருங்கால வைப்புநிதித் திட்டம், 1952).

இம்மாநிலத்தில் 31—3—1991 முடிய இச்சட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்ட நிறுவனங்களும் கட்டணதாரர்களின் எண் ணிக்கையும் வருமாறு :—

| | | விலக்களிக் கப் பட்டவை. | விலக்களிக் கப் படாதவை. | மொத்தம் |
|---|---|---|---|---|
| நிறுவனங்களின் எண்ணிக்கை. | — | 453 | 22,287 | 22.740 |
| கட்டணதாரர் எண்ணிக்கை. | — | 4.47 | 16.66 | 21.15 |
| | | (இலட்சங் கள்). | (இலட்சங் கள்). | (இலட்சங் கள்). |

1990-91 ஆம் ஆண்டில் 1,276 நிறுவனங்கள் இச்சட்டத்தின் கீழ்கொண்டு வரப்பட்டுள்ளன :—

[1991 செப்டம்பர் 16

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதியின் உரிமைக் கோரிக்கைகள் தீர்க்கப்பட்ட விவரங்கள்.

1991 ஆம் ஆண்டில் (31—3—1991 முடிய) பெறப்பட்ட, தீர்க்கப்பட்ட, திருப்பப்பட்ட, நிலுவையில் உள்ள உரிமைக் கோரிக்கைகளின் (31—3—1991-ல்) விவரங்கள் வருமாறு :—

| | |
|---|---|
| (அ) 31—3—1990 அன்று நிலுவையிலிருந்த உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 9,535 |
| (ஆ) 1—4—1990 முதல் 31—3—1991 முடிய பெறப்பட்டவை. | 1,29,425 |
| (இ) தீர்க்கப்பட வேண்டிய உரிமைக் கோரிர்கைகளின எண்ணிக்கை | 1.38.960 |
| (ஈ) 1990-91 ஆம் ஆண்டில் தீர்க்கப்பட்டவை | 98,794 |
| (உ) குறைபாடுகளைச் சரி செய்வதற்காக திருப்பப்பட்டவை/மறுக்கப்பட்டவை | 25,267 |
| (ஊ) 31—3—1991 அன்று நிலுவையில் இருந்தவை .. .. | 14,899 |

1990-91 ஆம் ஆண்டு தீர்க்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் பகுப்பாய்வு வருமாறு :

| | நிகழ்வுகளின் எண்ணிக்கை. | வழங்கப்பட்ட தொகை. (ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|
| 1. இறப்பு .. .. .. | 3,544 | 398.70 |
| 2. பணிமுதிர் ஓய்வு .. .. | 7,129 | 1,756.03 |
| 3. நிரந்தர இயலாமையுறல் .. .. | 200 | 30.05 |
| 4. பணித் துறவு .. .. | 83,431 | 4,818.18 |
| 5. பணியிழப்பு .. .. .. | 2,544 | 333.90 |
| 6. பல்வகை .. .. .. | 1,946 | 163.05 |
| மொத்தம் .. | 98.794 | 7,949.91 |



1991 செப்டம்பர் 16]

31—3—1991 அன்று நிலுவையில் இருந்த உரிமைக் கோரிக்கைகளின் பகுப்பாய்வு கீழே தரப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| (1) 2 மாதங்களுக்கு குறைவாக நிலுவையில் உள்ள உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை .. .. .. .. | 14,397 |
| (2) 6. மாதங்களுக்கு குறைவாகவும் இரண்டு மாதங்களுக்கு அப்பாற்பட்டும் நிலுவையில் உள்ள உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை .. .. .. .. | 502 |
| மொத்தம் .. | 14,899 |

1990-91 ஆம் ஆண்டில் 14.68 இலட்சம் ஆண்டிறுதி கணக்கு ண்டு சீட்டுகள் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. 31—3—1991 இறுதியில் 3.02 இலட்சம் கணக்கு துண்டு சீட்டுகள் வழங்கப்பட உள்ளன.

1971 ஆம் ஆண்டு தொழிலாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம் :

1971 ஆம் ஆண்டு தொழிலாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டத்தின் விவரங்கள் கீழ்க்கண்டவாறு :—

1. 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி (பல்வகை விதித்துறைகள்) சட்டத்தின் கீழ் உள்ள தொழிலாளர்கள் அகால மரணமடையும் போது அவர்களின் குடும்பங்கள் நீண்ட காலப் பண உதவி பெறும் பொருட்டு 1971 ஆம் ஆண்டு தொழிலாளர் குடும்ப நலத் திட்டத்தை அரசு கொண்டு வந்துள்ளது.

2. 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்புநிதி (பல்வகை விதித்துறைகள்) சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட எல்லா தொழிற்சாலைகளிலும்/நிறுவனங்களிலும் 1-3-1971 முதல் தொழிலாளர் குடும்ப நலத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

3. 1971 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முதல் நாள் அல்லது அதற்குப் பின் வருங்கால வைப்பு நிதியில் உறுப்பினராக எல்லா தொழிலாளர்களும் இத் திட்டத்தில் கட்டாயம் உறுப்பினர் ஆக வேண்டும். 1—3—1971-க்கும் முன்னர் வருங்கால வைப்பு நிதியில் உறுப்பினர் ஆனவர்கள் இத்திட்டத்தில் சேர்வது குறித்து அவர்களின் முடிவுக்கே விடப்பட்டது. இத்திட்டத்தில் இதுவரை உறுப்பினர் ஆகாதவர்கள் தற்பொழுது சேர விரும்பினால்,

மார்ச் 1971 முதல் இன்று வரைக்கான பங்கு தொகையுடன் கூடிய வட்டித் தொகையையும் செலுத்தி எப்பொழுது வேண்டுமானாலும் உறுப்பினராகலாம்.

4. தொழிலாளர் குடும்ப ஓய்வூதிய நிதிக்கு தனியாக பங்குக் கட்டணம் எதுவும் செலுத்த வேண்டியதில்லை. வருங்கால வைப்பு நிதிக்கு தொழிலாளரும் வேலையளிப்பவரும் செலுத்தும் பங்கு கட்டணத்திலிருந்து தொழிலாளர் சம்பளத்தில் 1 1/6 சமமான தொகையை தனியே எடுத்து தொழிலாளரின் குடும்ப ஓய்வூதிய நிதியாக சேர்க்கப்படுகிறது. வேலையளிப்பவர்கள் செலுத்தும் பங்குக் கட்டண வீதத் தொகைக்கு சமமான தொகை குடும்ப நல ஓய்வூதிய நிதிக்கு தமது பங்காக மைய அரசும் செலுத்துகிறது.

5. இத்திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் பயன்கள் :

இத்திட்டத்தில் 4 வகையான பயன்கள் அளிக்கப்படுகின்றன. அவையாவன :

(1) மாதந்தோறும் குடும்ப ஓய்வூதியம்.

(2) வாழ்க்கை காப்பீட்டு பயன்.

(3) ஓய்வூதியப் பயனும் திரும்பப் பெறும் பயனும் (Retirement *cum*-withdrawal benefit) :

(4) கட்டணதாரரின் பங்குக் கட்டணத் தொகையை திரும்பத் தருதல்.

6. மாதாந்திர குடும்ப ஓய்வூதியம் :

(அ) தகுதி (Eligibility) :

(1) கணக்கிற்குட்பட்ட பணிக்காலத்தில் இறப்பு நிகழ்ந்திருக்க வேண்டும்.

(2) உறுப்பினர் இறந்த நாளில் 60 வயதை அடைந்திருக்க கூடாது.

(3) 3 தினங்களுக்கு குறைவில்லாமல் குடும்ப ஓய்வூதிய நிதிக்கு உறுப்பினர் பங்குக் கட்டணத்தை செலுத்தியிருக்க வேண்டும்.

(4) குடும்பத்தில் ஏதாவதொரு தகுதியுள்ள உறுப்பினர் உயிரோடு இருக்க வேண்டும்.



(ஆ) குடும்ப ஓய்வூதிய அளவு :

கீழே குறிப்பிட்டுள்ளவாறு மாதந்திர குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படும் :—

(1) வழக்கமான குடும்ப ஓய்வூதியம் :

அட்டவணை

| குடும்ப ஓய்வூதிய நிதிக்கு பங்கு கட்டணம் செலுத்த அடிப்படையான உறுப்பினரின் மாதாந்திர சம்பளம். | குடும்ப ஓய்வூதியத்தின் மாதாந்திர அளவு. |
|---|---|
| (1) | (2) |
| ரூ. 300 வரை | ரூ. 225 (மாறாதது). |
| ரூ. 300-க்கு மேல் ரூ. 650 வரை | ரூ. 275 (மாறாதது). |
| ரூ. 650-க்கு மேல் ரூ. 1,200 வரை | ரூ. 450-க்கு மிகாததும் ரூ. 300-க்கு குறைவுறாததுமான சம்பளத்தில் 40 விழுக்காடு. |
| ரூ. 1,200-க்கு மேல் ரூ. 1,600 வரை. | ரூ. 510-க்கு மிகாமலும் ரூ. 450-க்கு குறையாததுமான சம்பளத்தில் 35 விழுக்காடு. |
| ரூ. 1,600-க்கு மேல் | ரூ. 750-க்கு மிகாமலும் ரூ. 510-க்கு குறையாததுமான சம்பளத்தில் 30 விழுக்காடு. |

(2) அதிகரிக்கப்பட்ட குடும்ப ஓய்வூதியம் :

உறுப்பினர் இறப்பதற்கு முன் 7 ஆண்டுகளுக்கு குறையாமல் குடும்ப ஓய்வூதிய நிதிக்கு தம் பங்குக் கட்டணத்தை செலுத்தி இருந்தால் அவரது சார்பாளர் அதிகரிக்கப்பட்ட ஓய்வூதியத்தை கீழ்க்கண்டவற்றுள் எது முந்தியதோ அது வரை பெறுவார்.

(அ) உறுப்பினர் இறந்த நாளிலிருந்து ஏழாண்டுகள் அல்லது

(ஆ) உறுப்பினர் உயிரோடிருந்தால் எந்த நாளில் தாம் 60 வயதை எய்திருப்பாரோ அந்த நாள் வரை.

மேலே குறிப்பிட்டுள்ள குடும்ப ஓய்வூதிய அளவிற்கு கூடுதலாக, சம்பளத்தில் 20 விழுக்காடு அதிகரிக்கப்பட்ட ஓய்வூதியம் பெறுவார். எனினும் இத் தொகை குடும்ப ஓய்வூதியம் போல் இரு மடங்குகளுக்கு மிகாமல் இருக்கும்.

7. காப்புறுதித் திட்டப் பயன்கள் :

(அ) இத்திட்டம் பொருந்துவது பற்றி :

(1) கணக்கில் இடப்படும் பணிக் காலத்தில் இறப்பு நிகழ்ந்திருக்க வேண்டும்.

(2) இறப்பு நிகழும் நாளில் 60 வயது அடைந்தவராக இருத்தல் கூடாது.

(3) குடும்ப ஓய்வூதிய நிதிக்கு குறைந்த பட்சம் மூன்று மாதத்திற்கு குறையாமல் பங்குத் தொகையை செலுத்தியிருக்க வேண்டும்.

(ஆ) வழங்கப்படும் தொகை :

(1) ஒரே தவணையில் ரூ. 5,000 மொத்தத் தொகையாக வழங்கப்படும்.

(இ) பயன் பெறும் நபர் :

(1) மாதாந்திர குடும்ப நல ஓய்வூதியம் வழங்குவதற்காக முறையே குறிப்பிடப்பட்டுள்ள குடும்ப உறுப்பினர்கள்.

(2) இறந்த உறுப்பினர், குடும்பம் இல்லாதவராக இருந்தால் அவருடைய வருங்கால வைப்பு நிதி தொகையை பெற உரிமை பெற்றவர்களுக்கு வழங்கப்படும்.

8. ஓய்வு கால மற்றும் திரும்பப் பெறும் பயன்கள் :

(அ) உறுப்பினர் ஆவதற்கான தகுதி :

(1) 60 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும் அல்லது

(2) 60 வயது அடைவதற்கு முன்னர் இறப்பைத் தவிர வேறு காரணங்களுக்காக குடும்ப ஓய்வூதிய திட்டத்தின் உறுப்பினராக இடை நிறுத்தம் செய்யப்பட்டிருந்து அவர் ஓராண்டுக்கு குறையாமல் குடும்ப ஓய்வூதிய பங்குத் தொகை செலுத்தியிருக்க வேண்டும்.





(ஆ) வழங்கப்படும் தொகை :

ஒருவர் பெறப்பட்ட கடைசி மாத சம்பளம், மற்றும் குடும்ப ஓய்வூதிய திட்டத்திற்காக எத்தனை முழு ஆண்டுகள் அவர் பங்குத் தொகை செலுத்தியுள்ளார் என்பதை கணக்கில் கொண்டு ரூ. 110 முதல் ரூ. 19,825 வரை பெறுவதற்கு தகுதியுடையவராவார். குடும்ப ஓய்வூதிய திட்டத்தின் கீழ் ஒரு நபர் ஓராண்டு காலம் முடிவதற்கு முன்பாகவே இடை. நிறுத்தம் செய்யப்பட்டிருந்தால் அவர் செலுத்திய குடும்ப ஓய்வூதிய பங்குத் தொகை 8 1/2 சதவீத வட்டியுடன் திருப்பித் தரப்படும்.

9. உறுப்பினர்களின் பங்குத் தொகைகள் தீர்வு செய்தல் :

(அ) தகுதி :

இறப்பதற்கு முன்பாக ஒருவர் குறைந்தது மூன்று மாத கால அளவிற்குள் குடும்ப ஓய்வு ஊதிய நிதிக்கு பங்குத் தொகை செலுத்தியிருக்க வேண்டும்.

(ஆ) வழங்கப்படும் தொகை :

குடும்ப ஓய்வு ஊதிய நிதியில் உறுப்பினர் தாம் செலுத்திய பங்குத் தொகையுடன் 8 1/2 சதவிகித வட்டியுடன் திருப்பித் தரப்படும்.

தீர்க்கப்பட வேண்டிய உரிமைக் கோரிக்கைகள் (மாதாந்திர குடும்ப ஓய்வு ஊதியம் தவிர மற்ற எல்லாப் பயன்களும்).

1990–91 ஆம் ஆண்டில், 1971 ஆம் ஆண்டு குடும்ப ஓய்வு ஊதிய திட்டத்தின்கீழ் 89,377 உரிமைக் கோரிக்கைகளுக்காக ரூ. 513.94 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

தீர்க்கப்பட்ட மாதாந்திர குடும்ப ஓய்வு ஊதிய உரிமைக் கோரிக்கைகள் விவரம் வருமாறு :

1990–91 ஆம் ஆண்டில், 2,172 உரிமை கோரிக்கைகளுக்காக, ரூ. 397.80 இலட்சம் மாத குடும்ப நல ஓய்வு ஊதியம் வழங்கப்பட்டுள்ளது.

31–3–1991 அன்று உள்ளபடி தமிழ்நாடு மாநில முழுவதுமாக 13,486 குடும்பங்களுக்கு மாத குடும்ப ஓய்வு ஊதியம் வழங்கப்பட்டுள்ளது.

டி.9 53-298—48

[1991 செப்டம்பர் 16

**11. 1976 ஆம் ஆண்டு தொழிலாளர் வைப்பீட்டுடன் இணைந்த காப்புறுதித் திட்டம் :**

அகால மரணமடையும் வருங்கால வைப்பு நிதி உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு கூடுதல் பாதுகாப்பு வழங்க வேண்டுமென்ற நோக்கத்தோடு 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி (பல்வகை விதித் துறைகள்) சட்டத்தின் கீழ் 1976 ஆம் ஆண்டு தொழிலாளர் வைப்பீட்டுடன் இணைந்த காப்புறுதித் திட்டம் வடிவமைக்கப்பட்டது.

2. இத்திட்டம் பொருந்துவது பற்றி :

1976 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் முதல் நாளிலிருந்து தொழிலாளர் வைப்பீட்டுடன் இணைந்த காப்புறுதித் திட்டம் செயல்பாட்டுக்கு வந்தது. 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி (பல்வகை விதித் துறைகள்) சட்டம் பொருந்தக்கூடிய எல்லா தொழிற்சாலைகளுக்கும் தொழில் நிறுவனங்களுக்கும் இத்திட்டம் பொருந்தும்.

3. உறுப்பினராவதற்கு தகுதி :

வருங்கால வைப்பு நிதியில் உறுப்பினராயுள்ள அனைவரும் 1952 ஆம் ஆண்டு வருங்கால வைப்பு நிதி (பல்வகை விதித் துறைகள்) சட்டப் பிரிவு 17-ன் கீழ் விதி விலக்களிக்கப்பட்ட வருங்கால வைப்பு நிதி உறுப்பினர்களும் இத்திட்டத்தின் கீழ் கொணரப்படுகின்றனர்.

4. பங்குக் கட்டண அளவு :

தொழிலாளர் இத்திட்டத்திற்கு பங்குக் கட்டணம் செலுத்துவதில்லை. ஆயினும் வேலையளிப்போரும் மைய அரசும் தொழிலாளர் சம்பளத்தில் முறையே 0.5 சதவிகிதம் மற்றும் 0.25 சதவிகிதம் என்றளவில் இக்காப்பிட்டுத் திட்டத்திற்கு பங்குக் கட்டணம் செலுத்துகிறார்கள்.

5. பயன்கள் :

பணியில் இருக்கும்போது இறக்க நேரிடும் வருங்கால வைப்பு நிதி உறுப்பினரின் வருங்கால வைப்பு நிதியைப் பெறுவோருக்கு இறப்பிற்கு முந்தைய பன்னிரண்டு மாதங்கள் அல்லது அவர் உறுப்பினராக இருந்த காலம் இவற்றில் எதில் குறைவானதோ அக்கால அளவில் அவரின் வருங்கால வைப்பு நிதி கணக்கின் இருப்பிலுள்ள சராசரி தொகைக்கு சமமாக அல்லது ரூ. 25,000-க்கு மிகாமல் கூடுதலாக காப்புறுதிப் பயன் தொகை (Assurance benefit) வழங்கப்படுகிறது.



1991 செப்டம்பர் 16]

6. இத்திட்டத்தில் பயன் பெறுவதற்கான முன் தேவைகள் :

1. இத்திட்டம் செயல்படுத்தப்பட்ட 1— 8— 1976 க்குப் பின்னர் இறப்பு நிகழ்ந்திருக்க வேண்டும்.

2. தொழிற்சாலை— தொழில் நிறுவனத்தின் பணியிலிருக்கும்போது இறப்பு நிகழ்ந்திருக்க வேண்டும்.

3. உறுப்பினரின் இறப்பிற்கு முந்தைய பன்னிரண்டு மாதங்கள் அல்லது அவரது உறுப்பினர் காலம் முழுவதுமான இவற்றில் எது குறைவானதோ அக்கால அளவில் அவரது கணக்கிலுள்ள சராசரி இருப்புத் தொகை ரூ. 500-க்கு குறையாமல் இருக்க வேண்டும்.

1976 ஆம் ஆண்டு தொழிலாளர் வைப்பீட்டுடன் இணைந்த காப்புறுதித் திட்டத்தின் கீழ், 1990–91 ஆம் ஆண்டில் 1,537 உரிமைக் கோரிக்கைகளுக்காக ரூ. 90.61 லட்சம் வழங்கப்பட்டுள்ளது.

[1991 செப்டம்பர் 16

## அத்தியாயம் IV

### தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம்.

இம்மாநிலத்தில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம்
1955 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்
காகும் செலவுத் தொகையை புதுதில்லி, தொழிலாளர் அரசு
ஈட்டுறுதிக் கழகமும் மாநில அரசும் ஏற்றுக்கொள்ளப்பட்ட
7 : 1 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. இத்
திட்டம் மத்திய அரசு தொழிலாளர் நலத் துறையின்கீழ்
இயங்கும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் மூலம்
நிர்வகிக்கப்படுகிறது. இக்கழகத்தினால் நிர்ணயிக்கப்பட்ட
தொழிலாளர்கள் மற்றும் முதலாளிகளிடமிருந்து பெறப்படும்
பங்குத் தொகைகள் மூலம் இத்திட்டத்திற்கு வருவாய்
கிடைக்கிறது.

இத்திட்டம் மின்சக்தியைப் பயன்படுத்தி 10-க்கு மேற்
பட்ட பணியாளர்களைக் கொண்ட தொழிற்சாலைகள்
மற்றும் மின்சக்தியைப் பயன்படுத்தாமல் 20-ம் அதற்கு மேற்
பட்ட பணியாளர்களைக் கொண்ட தொழிற்சாலைகளுக்குப்
பொருந்தும். மாத ஊதியம் ரூ. 1,600-க்கு குறைவாகப்
பெறும் ஊழியர்கள் இத்திட்டத்தின்கீழ் பயன்பெறுவார்கள்.
இத்திட்டம் தமிழ்நாட்டிலுள்ள எல்லா மாவட்டங்களிலும்
விரிவாக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் பின்வரும் பயன்கள் தொழிலாளர்
களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் வழங்கப்படுகிறது :

| | |
|---|---|
| 1. மருத்துவ உதவி .. .. | மருத்துவப் பொருட்களும் சிகிச்சையுமாக அளித்தல். |
| 2. உடல் நலமின்மைக்கான உதவி<br>3. நீடித்த உடல் நலமின்மைக்கான உதவி.<br>4. பேறுகால உதவி.<br>5. தற்காலிகமாக ஏலாமையுற்றோருக்கு உதவி.<br>6. நிரந்தரமாக ஏலாமையுற்றோருக்கு உதவி.<br>7. சார்ந்துள்ளவர்கள் நல உதவி.<br>8. இறுதிச் சடங்குக்குரிய செலவுத் தொகை.<br>9. உடல் நலமின்மைக்கான கூடுதல் உதவி. | பணமாக அளித்தல். |



1991 செப்டம்பர் 16]

இத்திட்டத்தின்கீழ் மருத்துவ வசதி அளிக்கும் பொறுப்பு
தமிழ்நாடு அரசின் சட்டக கடமையாகும்.

இம்மாநிலத்தில் கீழ்க்கண்ட 6 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி
மருத்துவமனைகள் அவற்றிற்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள
படுக்கை எண்ணிக்கையுடன் செயல்பட்டு வருகின்றன :—

| | |
|---|---|
| 1. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை, அயனபுரம், சென்னை-23. | 616 |
| 2. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை, கோவை. | 540 |
| 3. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை, மதுரை. | 209 |
| 4. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை, வேலூர், வடாற்காடு மாவட்டம். | 50 |
| 5. தொழிலாவர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை, சிவகாசி, காமராசர் மாவட்டம். | 50 |
| 6. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை, சேலம். | 50 |

சென்னை கே. கே. நகரிலுள்ள தொழிலாளர் அரசு
ஈட்டுறுதி மருத்துவமனையில் ஒரு வட்டார தொழிற்சார் நோய்
நல மையம் அமைப்பதற்காக இம்மருத்துவமனையின்
நிர்வகிப்பை தொழிலாளா அரசு ஈட்டுறுதிக் கழகத்திடம்
1-4-1991 முதல் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவையன்றி 140 நிலையான தொழிலாளர் அரசு ஈட்டுறுதி
மருந்தகங்களும் 6 நடமாடும் மருந்தகங்களும் மற்றும் 2
பயன்பாட்டு மருந்தகங்களும் செயல்பட்டு வருகின்றன.

146 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி நிலையான மற்றும்
நடமாடும் மருந்தகங்களில் 50 மருந்தகங்கள் ஈட்டுறுதிக் கழகத்
தினால் கட்டப்பட்ட கட்டிடங்களில் இயங்குகின்றன. இரண்டு
தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் தொழிலாளர்
அரசு ஈட்டுறுதிக் கழகத்திற்கு சொந்தமான நிலத்தில் மாநில
அரசினால் கட்டப்பட்ட கட்டிடங்களிலும் மற்றும் இரண்டு
மருந்தகங்கள் மாநிலத்திற்குச் சொந்தமான கட்டிடங்களிலும்
இயங்குகின்றன.

இத்திட்டத்தின்மூலம் காப்புறுதி செய்துகொண்டவர்களின் எண்ணிக்கை தொடர்பான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | |
|---|---|
| (அ) இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை | 6,40,000 |
| (ஆ) ஈட்டுறுதி செய்து கொண்டவர்களின் மொத்த எண்ணிக்கை .. | 7,20,000 |
| (இ) இதில் அடங்கிய குடும்பங்களின (ஈட்டுறுதி செய்து கொண்ட தொழிலாளர்கள்) எண்ணிக்கை .. | 7,20,000 |
| (ஈ) பயனடைவோரின் மொத்த எண்ணிக்கை | 27,93,600 |

இம்மாநிலத்தில் இத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் உள்ள ஈட்டுறுதித் தொழிலாளர்களின் குடும்பத்தினரும் இத்திட்டத்தின் முழு மருத்துவப் பயன்களை பெற தகுதியுள்ளவர்களாவர்.

இத்திட்டத்தில் மருத்துவப் பயன்களுக்கான மொத்தச் செலவின் மீது தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் ஒவ்வொரு ஆண்டிற்கான உச்சவரம்பை நிர்ணயிக்கிறது. ஒவ்வொரு ஈட்டுறுதி தொழிலாளர் குடும்பத்திற்கும் ஆண்டொன்றுக்கு ரூ. 220 என 1-4-1990 முதல் இவ்வுச்சவரம்பு வீதம் உயர்த்தப்பட்டுள்ளது. இதைத் தவிர இத்திட்டத்தின்கீழ் மருந்துகளுக்காக ஒவ்வொரு ஆண்டிற்கு ஒரு ஈட்டுறுதி நபருக்கு ரூ. 40-க்கு மேலும் ஆனால் ரூ. 90-க்கும் கீழும் ஆகும் செலவானது மேற்படி உச்சவரம்புத் தொகைக்கு மேல் பகிர்ந்துக் கொள்வதாகும்.

மேற்கொண்டுள்ள உச்சவரம்பின்மீது 5 சதவிகிதம் ஒட்டு மொத்த உயர்வு 1-4-1991 முதல் மூன்று ஆண்டிற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் 1-4-1990 முதல் இத்திட்டத்தை புதிய பகுதிகளில் நடைமுறைப்படுத்துவதற்காகும் முழு செலவுத் தொகையும் மூன்றாண்டுகளுக்கு ஈட்டுறுதிக் கழகம் ஏற்றுக் கொள்ள இசைவு தந்துள்ளது.

தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகத்தின் கட்டிடங்களுக்கான வாடகையை 1-4-1990 முதல் உச்சவரம்புக்கு மேல் ஒப்புக்கொள்ளப்பட்ட விகிதத்தில் பகிர்ந்து கொள்ளப்படுகிறது.

உச்சவரம்பிற்குமேல் ஏற்படக்கூடிய செலவினத் தொகையை மாநில அரசே முழுவதுமாக ஏற்றுக் கொள்ளவேண்டும்.



வளர்ச்சித் திட்டங்கள் :

இந்த ஆய்வாண்டில் ஒரு மருத்துவ அலுவலர் கொண்ட தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் ஒன்று வீதம் கீழ்க்கண்ட இடங்களில் தொடங்கப்பெற்று, சில புதிய பகுதிகள் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

| வரிசை எண் மற்றும் பகுதிகளின் பெயர்கள். | இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட நாள். |
|---|---|
| (1) | (2) |
| 1 மேல் விசாரம், வாலாஜா வட்டம், வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம். | 16-1-1991 |
| 2 சங்கரன்கோயில், திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம். | 16-3-1991 |
| 3 தாராபுரம், பெரியார் மாவட்டம். | 16-1-1991 |

2-1-1991 முதல் ஒரு மருத்துவர் கொண்ட தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் ஒன்று திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள மலைக்கோவிலூரில் புதிதாகத் திறக்கப்பட்டுள்ளது. இதனால் ஏற்கெனவே ஈட்டுறுதித் திட்டத்தில் அடங்கிய தொழிலாளர்கள், மலைக்கோயிலூரிலிருந்து 25 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள கரூர் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்திற்கு இனி மருத்துவச் சிகிச்சைக்காகச் செல்ல வேண்டிய தேவையில்லை.

1991-92-ஆம் நிதி ஆண்டில் கீழ்க்கண்ட பகுதிகள் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட உள்ளன :—

(1) கோயம்புத்தூர் மாவட்டம் பல்லடம் வட்டத்திலடங்கிய பீடம்பள்ளி, பட்டணம், பாப்பம்பட்டி மற்றும் கலங்கல் வருவாய் கிராமங்கள்.

(2) புதுக்கோட்டை மாவட்டத்தில் முள்ளூர் மற்றும் திருவேங்கைவாசல் வருவாய் கிராமங்கள்.

(3) மதுரை மாவட்டத்தில் அவனியாபுரம்.

(4) காமராஜர் மாவட்டம், இராசபாளையம் வட்டத்தைச் சார்ந்த மேலராஜக்குலராமன், அய்யன்குளம் கொண்டான் மற்றும் மேல்பட்டம் கர்சல்குளம் வருவாய் கிராமங்கள்.

(5) செங்கல்பட்டு-எம். ஜி. ஆர். மாவட்டத்தில் கும்மிடிப்பூண்டி பகுதி.

## அத்தியாயம் V.

### வேலை வாய்ப்புப் பணிகள் :

போருக்குப்பின் நடந்த படைக்கலைப்பின் போது இந்தியாவில் வேலை வாய்ப்புப் பணிகள் நடைமுறைக்கு வந்தன. முப்படைகளிலிருந்து விடுவிக்கப்பட்ட போர் வீரர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காகவும், வேலைவாய்ப்பு அளிப்பதற்காகவும் தனியான ஒரு துறை தேவையென உணரப்பட்டு, வேலை வாய்ப்பு அலுவலகங்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் படிப்படியாக தோற்றுவிக்கப்பட்டன 1946-ஆம் ஆண்டின் இறுதி வரை படைக் கலைப்பு செய்யப்பட்ட போர் வீரர்களுக்கு மட்டுமே வேலை வாய்ப்புப் பணிகள் ஆற்றப்பட்டன. பின்னர் இப்பணிகள் விரிவு படுத்தப்பட்டு 1948-இல் எல்லா விதமான மனுதாரர்களுக்கும் வேலை வாய்ப்புப் பணிகள் ஆற்றப்பட்டன. இந்திய அரசிடமிருந்து வேலை வாய்ப்புத் துறையில் அலுவலகங்களின் நிர்வாக கட்டுப்பாடு மாநில அரசுக்கு 1—11—1956 முதல் மாற்றப்பட்டது. இம்மாற்றலுக்குப் பிறகு, தமிழக வேலை வாய்ப்பு அலுவலகங்களின் பராமரிப்பு தொழிலாளர் நல ஆணையரின் கட்டுப்பாட்டில் இயங்கி வந்தது. 1963 ஆம் ஆண்டு தொழில் துறை கட்டுப்பாட்டில் இயங்கி வந்த தொழில் பயிற்சி நிலையங்களும், வேலை வாய்ப்பு அலுவலகங்களும், ஒன்றாக இணைக்கப்பட்டு புதிய "வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை" என்ற துறை உருவாக்கப்பட்டு ஒரே இயக்குநரின் கீழ் கொண்டு வரப்பட்டது.

### 1.2. வேலை வாய்ப்பு அலுவலகங்கள் :

இம்மாநிலத்தின் பல்வகைப்பட்ட வேலை தேடுவோரின தேவைகளை கவனிக்க, வேலை வாய்ப்பளிக்க கீழ்க்கண்ட அலுவலகங்கள் செயல்படுகின்றன :—

| | எண்ணிக்கை. |
|---|---|
| வேலை வாய்ப்பு அலுவலகங்கள் | 42 |
| துணை வேலை வாய்ப்பு அலுவலகங்கள் | 5 |
| சிறப்பு வேலை வாய்ப்பு அலுவலகங்கள் | 6 |



| | |
|---|---|
| தொழில் நுட்ப பணியாளர்களுக்கென வேலை வாய்ப்பகங்கள் | 4 |
| உடல் ஊனமுற்றோருக்கான அலுவலகம் | 1 |
| தொழில் சார்ந்த செயல் வேலைவாய்ப்பு அலுவலகம் | 1 |
| சேலம், கோயம்புத்தூர் சுயவேலைவாய்ப்பக் பிரிவுகள் | 2 |
| பல்கலைக்கழக வேலைவாய்ப்புத் தகவல் மற்றும் வழிகாட்டு நிலையங்கள் (சென்னை, மதுரை, அண்ணாமலை நகர் முதலிய இடங்கள்). | 3 |
| ஆதி திராவிட மற்றும் பழங்குடியினருக்கான சிறப்பு மற்றும் வழிகாட்டி பயிற்சி நிலையங்கள் (திருச்சி, கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் வேலூர்.) | 4 |

இந்நிலையங்கள் ஆதி திராவிடர் பழங்குடியினர் மாணவர்களுக்கு பல்வேறு போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்வதற்கேற்ப சிறப்புப் பயிற்சி வகுப்புகளை நடத்துகின்றன. வேலை வாய்ப்பு அலுவலகங்களின் பணிகளைக் கண்காணிப்பதற்காக 4 மண்டலத் துணை இயக்குநர் அலுவலகங்களும் இயங்கி வருகின்றன.

வேலை வாய்ப்பு அலுவலகங்கள் ஆற்றிய முக்கிய பணிகள் பற்றிய விவரங்கள் கீழ் வருமாறு :

| | 1-1-1988 முதல் 31-12-1988 | 1-1-1989 முதல் 31-12-1989 | 1-1-1990 முதல் 31-12-1990 | 1-1-1991 முதல் 31-3-1991 |
|---|---|---|---|---|
| 1. பதிவு செய்தோர் .. | 5,27,036 | 6,74,130 | 6,49,985 | 94,984 |
| 2. அறிவிக்கப்பட்ட காலியிடங்கள் | 62,686 | 67,969 | 43,165 | 11,717 |
| 3. பணியில் அமர்த்தப்பட்டோர் | 54,388 | 43,302 | 45,753 | 10,367 |
| 4. வேலை வாய்ப்பு அலுவலகங்களை உபயோகித்த வேலையளிப்போரின் எண்ணிக்கை. | 19,202 | 19,382 | 16,302 | 4,199 |
| 5. உயிர்ப் பதிவேட்டில் காத்திருப்போர். | 26,07,092 | 29,92,394 | 32,36,453 | 32,44,202 |



தொழில் மற்றும் நிர்வாக வேலை வாய்ப்பு அலுவலகம், சென்னை.

இந்த அலுவலகம் உயர்ந்த தொழில் அனுபவம், அறிவியல், பொறியியல் மற்றும் நிர்வாக மேற்பார்வை பணிக் கல்வி தகுதி உடையவர்களின் தேவைகளை கவனிக்கிறது. அரசுத் துறை, தனியார் துறையைச் சேர்ந்த முதன்மையான தொழில் அதிபர்களுடன் தொடர்பு கொண்டு தகுதியுள்ள விண்ணப்பதாரர்களை தகுந்த வேலையில் அமர்த்த இந்த அலுவலகம் நடவடிக்கை எடுத்து வருகிறது :

| | 1-1-1988 முதல் 31-12-1988 | 1-1-1989 முதல் 31-12-1989 | 1-1-1990 முதல் 31-12-1990 | 1-1-1991 முதல் 31-3-1991 |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 பதிவு செய்தோர் | 23,452 | 25,193 | 16,914 | 4,132 |
| 2 வேலையில் அமர்த்தப்பட்டோர் | 2,373 | 2,671 | 2,074 | 996 |
| 3 உயிர்ப்பதிவேட்டில் காத்திருப்போர். | 69,527 | 82,236 | 1,01,168 | 1,02,165 |

உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம்.

உடல் ஊனமுற்ற விண்ணப்பதாரர்களை பதிவு செய்து அவர்களை வேலையில் அமர்த்தும் நோக்குடன் சென்னையில் சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம் ஒன்றும், மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, சேலம், தஞ்சாவூர், நாகர்கோவில், காஞ்சிபுரம், திருநெல்வேலி மற்றும் கடலூரில் உள்ள மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் உடல் ஊனமுற்றோருக்கான ஒன்பது தனிப் பிரிவுகளும் இயங்கி வருகின்றன. இவ்வலுவலகங்கள் அரசுத் துறை, தனியார்

[illegible] துறையைச் சேர்ந்த தொழில் அதிபர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு எல்லாவித [illegible] ஊனமுற்றோருக்கும் வேலைவாய்ப்பு அளித்து வருகின்றன. இவ்வலுவலகம் ஆற்றிய பணிகளின் விவரம் வருமாறு.

| | 1-1-1988 முதல் 31-12-1988 வரை. | | | 1-1-1989 முதல் 31-12-1989 வரை. | | |
|---|---|---|---|---|---|---|
| | பதிவு செய்தோர். | வேலையில் அமர்த்தப் பட்டோர். | உயிர்ப் பதிவேட்டில் உள்ளோர். | பதிவு செய்தோர். | வேலையில் அமர்த்தப் பட்டோர். | உயிர்ப் பதிவேட்டில் உள்ளோர். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| பார்வையற்றோர் | 270 | 13 | 2,284 | 678 | 18 | 1,889 |
| காதுகேளாதோர் | 279 | 30 | 1,794 | 611 | 34 | 2,332 |
| கை, கால் ஊனமுற்றோர் | 4,696 | 1,257 | 26,119 | 5,778 | 1,072 | 28,922 |
| மொத்தம் | 5,245 | 1,300 | 30,197 | 7,067 | 1,124 | 34,143 |



| | 1-1-1990 முதல் 31-12-1990 வரை. | | | 1-1-1991 முதல் 31-3-1991 வரை. | | |
|---|---|---|---|---|---|---|
| | பதிவு செய்தோர். | வேலையில் அமர்த்தப் பட்டோர். | உயிர்ப் பதிவேட்டில் உள்ளோர். | பதிவு செய்தோர். | வேலையில் அமர்த்தப் பட்டோர். | உயிர்ப் பதிவேட்டில் உள்ளோர். |
| (1) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| பார்வையற்றோர் | 446 | 27 | 3,112 | 75 | 15 | 3,167 |
| காதுகேளாதோர் | 376 | 71 | 2,479 | 126 | 8 | 2,597 |
| கை, கால் ஊனமுற்றோர் | 4,746 | 919 | 31,868 | 858 | 357 | 31,449 |
| மொத்தம் | 5,568 | 1,017 | 37,459 | 1,059 | 380 | 37,213 |

[1991 செப்டம்பர் 16

1.5. தொழில் நுட்ப மனுதாரர்களுக்காக நான்கு மாவட்ட
வேலைவாய்ப்பு அலுவலகங்கள் சென்னை, திருச்சி, மதுரை
மற்றும் கோயம்புத்தூரில் இயங்கி வருகின்றன. இவ்வலுவலகங்
கள் தொழில் நுட்பத் தகுதி பெற்றோரையும் தொழில் பயிற்சி
பள்ளி (ஐ.டி.ஐ.)-யில் பயிற்சி பெற்ற கைவினைஞர்களையும் பதிவு
செய்து பொதுத்துறையிலும் தனியார் துறையிலும் அவர்களை
தகுந்த பணியில் அமர்த்தும் பணியினை செய்து வருகின்றன.

1.6. வேலை நிலவரத் தகவல் திட்டம்:

இத் திட்டத்தின் கீழ் 25 அல்லது அதற்கு மேற்பட்ட
பணியாளர்கள் உள்ள (வேளாண்மை நீங்கலாக) எல்லா தனியார்
துறை நிறுவனங்களிலிருந்தும் அனைத்துப் பொதுத் துறை
நிறுவனங்களிலிருந்தும் காலாண்டுக்கொரு முறை வேலை நிலவரத்
தகவல் சட்ட ரீதியாக திரட்டப்படுகிறது. இவ்விவரங்கள்
1959 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட கட்டாயக் காலியிட
அறிவிப்புச் சட்டத்தின்கீழ் திரட்டப்படுகின்றன. பத்து முதல் 24
பணியாளர்கள் பணியாற்றும் தனியார் துறையைச் சேர்ந்த
நிறுவனங்களிலிருந்தும் இத்தகவல் தாங்களாகவே முன்வந்து
அளிக்கும் வேலையளிப்போரிடம் இருந்து திரட்டப்படுகிறது. இவ்
வாறு தகவல் திரட்டும் பணி அமைப்பு ரீதியான தொழில் துறை
களில் மட்டும் (Organised sector) மேற்கொள்ளப்படுகிறது.
எல்லா பொதுத் துறை நிறுவனங்களும் மற்றும் 25 மற்றும்
அதற்கு மேற்பட்ட பணியாளர்களைக் கொண்ட தனியார் துறை
நிறுவனங்களும் ஏற்படும் காலியிடங்களை சம்பந்தப்பட்ட
வேலை வாய்ப்பு அலுவலகங்களுக்கு இச்சட்டத்தின் கீழ் தெரி
விக்க வேண்டும். இவையல்லாமல், ஒவ்வொரு காலாண்டும்
இந்த நிறுவனங்கள் வரையறுக்கப்பட்ட படிவத்தில் தங்கள்
நிறுவனத்தில் உள்ள மொத்தப் பணியாளர்களின் எண்ணிக்கை,
ஏற்பட்ட காலியிடங்கள், நிரப்பப்பட்டவை மற்றும் தகுந்த
ஆள் கிடைக்காததால் உள்ள பணிக்காலியிடங்கள் பற்றிய
விவரங்களை வேலை வாய்ப்பு அலுவலகத்திற்குத் தெரிவிக்க
வேண்டும். இவ்வாறு சேகரிக்கப்பட்ட விவரங்கள் மாநில மற்றும்
மத்திய அரசிற்கு திட்டங்கள் தீட்டுவதற்காக அனுப்பப்படு
கின்றன.

1.7. தொழில் நெறி வழி காட்டுதல் மற்றும் வேலை
வாய்ப்புத் தகவல்:

வேலை தேடுவோரிடையே தொழில் வேலை வாய்ப்பு பயிற்சி/
தொழில் பழக வசதிகள் குறித்த விவரங்களைப் பகிர்ந்தளிப்
பதற்காக வாழ்க்கைத் தொழில் வழி காட்டும் பிரிவுகள் 19
மாவட்டங்களில் இயங்கி வருகின்றன. இப்பிரிவுகள்
காலாண்டு தோறும் மாணவரும் வேலை தேடுவோரும் பயன
டைவதற்காக காலாண்டு வழி காட்டி செய்தி அறிக்கைகளைத்
தயாரித்து அளிக்கின்றன. வேலை தேடுவோர் பணியிடங்களை



1991 செப்டம்பர் 16]

தெரிந்தெடுக்க கையாள வேண்டிய முறைகளைப்பற்றி அறிந்து
கொள்வதற்காகப் பல்கலைக் கழகத்தொழில் தகவல் மற்றும்
வழிகாட்டும் நிலையம் மற்றும் வாழ்க்கைத் தொழில் வழிகாட்
டும் பிரிவுகளும் அவ்வப்போது வாழ்க்கைத் தொழில் சம்பந்தப்
பட்ட கண்காட்சிகளை நடத்தி வருகின்றன.

1.8. பழங்குடியினருக்கான சிறப்புத் தொழில் நெறி வழி
காட்டும் நிலையங்கள்:

பழங்குடி இனத்தவருக்கு தொழில் நெறி வழி காட்டும்
ஆலோசனைகளை வழங்கவும் தகுதியுள்ள பழங்குடி இனத்த
வரை வேலையில் அமர்த்துவதற்கு ஏற்ற வேலை வாய்ப்புகளை
கண்டறிவதற்கும் உதகமண்டலம் மற்றும் சங்கராபுரத்தில் பழங்
குடியினருக்கான சிறப்புத் தொழில் நெறி வழி காட்டும் நிலை
யங்கள் இரண்டு அமைந்துள்ளன.

1.9. வேலை வாய்ப்பற்றோர் நிவாரணத் திட்டம்:

வேலை வாய்ப்பற்றோருக்கு நிவாரணத் தொகை வழங்கும்
திட்டத்தை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்
படி வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிந்து உயிர்ப் பதி
வேட்டில் 5 ஆண்டுகளுக்கு மேலாக காத்திருக்கும் தெரிந்தெடுக்
கப்பட்ட 9 வகையினருக்கு வேலை வாய்ப்பற்றோர் நிவாரணத்
தொகை வழங்கப்படுகிறது. வேலை வாய்ப்பற்றோர் நிவாரணம்
3 ஆண்டு காலத்திற்கு வழங்கப்படுகிறது. பட்டதாரிகள்/
முதுநிலைப் பட்டதாரிகளுக்கு மாதம் ரூ. 100-ம், புதுமுகவகுப்பு/
ப்ளஸ் 2/பட்டப் படிப்புக்குக் கீழான கல்வித் தகுதி உடைய
வருக்கு மாதம் ரூ. 75-ம் பள்ளி இறுதி வகுப்பு தேர்ச்சி பெற்
றோருக்கு மாதம் ரூ. 50-ம் வழங்கப்படுகிறது. 31-3-1991
அன்றைய நிலவரப்படி, இத்திட்டம் துவங்கப்பட்ட நாள் முதற்
கொண்டு 4,24,971 மனுதாரர்கள் பயன் பெற்றுள்ளனர்.
ரூ. 53.19 கோடி வேலைவாய்ப்பற்றோர் நிவாரணமாக வழங்கப்
பட்டுள்ளது. இத் திட்டம் 1-7-1980 முதல் அமலாக்கப்
பட்டது. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலம் காலாண்டுக்
கொருமுறை இந் நிவாரணத் தொகை வழங்கப்படுகிறது.

30-11-1988 முதல் உயிர்ப் பதிவேட்டில் ஓராண்டுக்கு
மேல் காத்திருக்கும் பார்வையற்றோருக்குக் கீழ்க்கண்டவாறு
நிவாரணம் அளிக்கப்படுகிறது:—

| | | | பிரதி மாதம் ரூ. |
|---|---|---|---|
| பட்டதாரிகள் | .. | .. | 200 |
| புதுமுக வகுப்பு/ப்ளஸ் 2 | ... | .. | 150 |
| பள்ளி இறுதி வகுப்பு | .. | .. | 100 |

[1991 செப்டம்பர் 16

இவர்கள் 5 வருடம் வரை இந் நிவாரணம் பெற தகுதி
யுடையவர்கள். இத் திட்டம் துவக்கப்பட்ட நாள்முதல்
31-3-1991 வரை 1,434 பார்வையற்றோர் ரூ. 22,62,950
நிவாரணம் பெற்றுள்ளனர். இந்நிதியாண்டில் மட்டும்
ரூ. 13,36,789 நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

சுய வேலை வாய்ப்பு மேம்பாட்டுப் பிரிவுகள்:

வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ள மனு
தாரர்கள் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து கடன்
பெறுவதற்கு உதவி செய்வதன் மூலம் அவர்களிடையே சுய
தொழிலை ஊக்குவிப்பதற்கேற்ப வேலூரிலும் கோயம்புத்தூரி
லும் மைய அரசின் நிதி உதவியுடன் இரண்டு சுய தொழில்
வேலைவாய்ப்பு ஊக்கப் பிரிவுகள் இயங்கி வருகின்றன. இந்த
இரண்டு பிரிவுகளும் சேர்ந்து 4,157 மனுதாரர்களுக்கு உதவி
செய்துள்ளன. அதன் பயனாய் நாட்டுடைமையாக்கப்பட்ட
வங்கிகளால் மொத்தம் ரூ. 4.74 கோடி சுய தொழில் தொடங்கு
வதற்காக கடனாக வழங்கப்பட்டுள்ளது.

1.11. ஐ.டி.ஐ./ஐ.எஸ்.சி. சான்றிதழ் பெற்றோருக்கான சுய
வேலை வாய்ப்பு :

ஆறு தெரிந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் (கோயம்
புத்தூர், திருச்சி, சேலம், மதுரை, கடலூர் மற்றும் வேலூர்)
உள்ள ஐ.டி.ஐ./ஐ.எஸ்.சி., சான்றிதழ் பெற்ற மனுதாரர்
களைச் சுய வேலைவாய்ப்பில் ஈடுபடுத்தும் பொருட்டு நாட்
டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம், ரூ. 10,000-க்கு மேற்
படாமல் கடன் தொகை அளிக்கப்படுகிறது. இத்தொகையில்
கால் பங்கு அரசு மூலமாக மானியமாக வழங்கப்படுகிறது.
இத்திட்டம் 1987-88 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
இதுவரை 439 தொழில்நுட்பத் தகுதி பெற்ற மனுதாரர்
கள் ரூ. 34.48 இலட்சம் வரை கடன் தொகை பெற்றுள்
ளனர். இத்தொகையில் ரூ. 7.56 இலட்சம் அரசு மானிய
மாகும்.

வீட்டுச் சேவை மையங்களை நிறுவுதல் :

தொழில் கல்வித் தகுதி பெற்ற மனுதாரர்களைச் சுய
வேலை வாய்ப்பில் ஈடுபடுத்துவதற்கும், மக்களின் அன்றாட
வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் சென்னை
நகரில் 9 இடங்களில் வீட்டுச் சேவை மையங்கள் நிறுவப்
பட்டுள்ளன. ஒவ்வொரு வீட்டுச் சேவை மையத்திலும் ஒரு
மின்சாரப் பணியாளர், குழாய்ப் பணியாளர், தச்சுப் பணி
யாளர் ஆகியோர் பணியாற்றுகின்றனர். வீட்டுச் சேவை
மையம் அமைக்கப்பட்டுள்ள பகுதியில் உள்ள வீடுகளில் அவ்வப்
போது தேவைப்படும் பழுது பார்க்கும் பணி இப்பணியாளர்
களால் மேற்கொள்ளப்பட்டு, ஒரு நாளுக்கு ரூ. 25 முதல் ரூ.



1991 செப்டம்பர் 16]

35 வரை வருமானமாகப் பெறுகின்றனர். இது போன்று
வீட்டுச் சேவை மையங்கள் மதுரை, சேலம், கோயம்புத்தூர்,
திருச்சி, வேலூர், ஈரோடு மற்றும் தஞ்சாவூர் ஆகிய இடங்
களில் செயல்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் 69
தொழில் நுட்பப் பணியாளர்கள் பயன்பெற்றுள்ளனர்.

1.13. ஆதிதிராவிடர்/பழங்குடியினருக்கான சிறப்புப் பயிற்சி
வகுப்புகள் :

பல்வேறு தேர்வு முகமை நிறுவனங்களால் நடத்தப்
பெறும் போட்டித் தேர்வுகளில் ஆதி திராவிடர்/பழங்குடி
யினர் இனங்களைச் சேர்ந்த மனுதாரர்கள் போட்டியிட்டு,
தேர்ச்சி பெறுவதற்கு உதவும் வகையில் இந்தத் துறை
யானது ஆதிதிராவிடர்/பழங்குடி இனங்களைச் சார்ந்த
மனுதாரர்களுக்கான சிறப்புப் பயிற்சி வகுப்புகளை நடத்
தும் முனைப்புத் திட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளது.
பொறுப்பு அலுவலர் (Probationary Officer) எழுத்
தர் நிலை பதவிகளுக்கான வங்கிப் பணியாளர் தேர்வா
ணையம் நடத்திய தேர்வுகள், கீழ்நிலை எழுத்தர்/மேல்நிலை
எழுத்தர் பதவிகளுக்கான பணியாளர் தேர்வாணையம்
நடத்திய தேர்வுகள், உதவியாளர் நிலை பதவிகளுக்கான
மைய அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்திய தேர்வுகள்
மற்றும் குடிமைப் பணிகள் முதனிலைத் தேர்வுகள், இந்
திய பொது காப்பீட்டுக் கழகம் நடத்திய எழுத்தர் நிலைத்
தேர்வு, பணியாளர் தேர்வாணையத்தில் சுருக்கெழுத்தர்
தேர்வு, இந்திய ரிசர்வ் வங்கி நடத்திய எழுத்தர் நிலைத்
தேர்வு, தமிழ்நாட்டிலுள்ள பொறியியல் மற்றும் மருத்துவக்
கல்லூரிகளில் சேர்க்கைக்காக நடத்தப்பட்ட நுழைவுத் தேர்வு
ஆகியவற்றில் கலந்துகொண்ட ஆதி திராவிடர், பழங்குடி
இனங்களைச் சார்ந்த மனுதாரர்களுக்காக இத்தகைய
சிறப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. மேற் குறித்த
தேர்வுகளில் போட்டியிடுவதற்கான 1990-91 ஆம் ஆண்டு
6,020, ஆதி திராவிடர்/பழங்குடியினர் பயன் பெற்றனர்.
263 ஆதி திராவிடர்/பழங்குடியினர் இத்தேர்வுகளில் வெற்றி
பெற்று உள்ளனர்.

1.14. வேலைவாய்ப்புப் பணியை கம்ப்யூட்டர் மயமாக்குதல்:

வேலை தேடுவோருக்கும் வேலையளிப்போருக்கும் விரை
வாகச் செயல்படுத்துவதற்கும் தற்போது நடைமுறையில்
உள்ள மனுதாரர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையிலுள்ள
குறைகளைக் களையும் நோக்கில், வேலை வாய்ப்பு அலுவலகப்
பணிகளை கம்ப்யூட்டர் மயமாக்கும் திட்டம் தமிழ் நாட்
டில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கென அரசு
ரூ. 17.33 இலட்சம் ஒப்பளித்துள்ளது. இத்தொகையில்
ரூ. 3.68 இலட்சம் மத்திய அரசால் வழங்கப்படுகிறது.

டி2 532-98—50

இத்திட்டத்தின்கீழ் சென்னையில் உள்ள 2 வேலைவாய்ப்பு அலுவலகங்களும் கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளியில் உள்ள வேலை வாய்ப்பு அலுவலகங்களும் கொண்டு வ்ர்ப்பட்டுள்ளன. அரசாணை எண் 17, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 9-10-1990-ன் படி இத்திட்டத்திற்கென கூடுதலாக ரூ. 1.52 இலட்சம் அரசால் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது இந்நான்கு வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும் கம்ப்யூட்டர் மூலமாக தினமும் பதிவுதாரர்களைப் பதிவு செய்து எக்ஸ். 65 தயாரிக்கப்பட்டு அச்சுப் பதிவுகளை ( Pintouts ) எடுக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. கோவை, திருச்சி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தைப் பொறுத்தவரை மனுதாரர்கள் பற்றிய விவரங்களைப் பதிவு செய்யும் பணி முடிவுற்று குறைபாடுள்ள அச்சுப் பதிவுகளை எடுக்கும் பணி நடைபெற்று வருகிறது. இக்குறைபாடுள்ள அச்சுப் பதிவுகள் தற்போது திருத்தப்பட்டு வுருகின்றன. இவ்விதம் திருத்தப்பட்ட பிறகு இறுதி அச்சுப் பதிவுகள் தயாரிக்கப்படும். அவைகள் விநியோகத்திற்கு அனுப்பி வைக்கப்படும். அண்ணா நகர் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் திருத்தப்பட்ட இறுதி அச்சுப் பதிவுகள் ''ப்ளாபிகள்'' ( Flcppies ) என்ற பதிவுக் கருவிகளில் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன. அடையாறு மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் தினசரி புதுப்பித்தல், பணியமர்த்தல் பதிவு அட்டைகளை இவ்வலுவலகத்திலிருந்து மற்ற அலுவலகங்களுக்கு மாற்றுதல் ஆகிய பணிகள் கம்ப்யூட்டர் மூலம் செய்யப்பட்டு வருகின்றன. இதன் மூலம் அடிப்படை விவரங்களை, முழுமைப்படுத்தும் பணி சிறப்பாக அமையும். தற்போது சென்னை-20, அடையாறு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் முழுமையாக செயல்படுத்தப்படும் நிலையில் உள்ள இத் திட்டம் 5-8-1991 அன்று மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரால் துவக்கி வைக்கப்பட்டது. படிப்படியாக பிற மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும் இத்திட்டம் துவக்கப்படும்.

1.15 சிறப்புக் குழு அமைத்தல் :

1371 எண்ணும் 20-7-1989 நாளுமிட்ட தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையில் நிலை அரசாணையின் வாயிலாக அரசு வேலை வாய்ப்பு அலுவலகங்களின் செயல்பாடு குறித்து பொது மக்களிடமிருந்து பெறப்படும் கடுமையான புகார்களை விசாரிப்பதற்காக சிறப்புக் குழு ஒன்றை அமைத்துள்ளது. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்கத்தைச் சார்ந்த ஒரு துணை இயக்குநரும் ஒரு உதவி இயக்குநரும் அந்த சிறப்புக் குழுவில் பதவிக்கின்றனர். அவர்கள் தம் வாலாயப் பணிகளுட இ-



க்குழுவின் பணிகளையும் சேர்த்து கவனித்து வருகின்றனர். இந்தக் குழு அமைக்கப்பட்டு குறுகிய காலத்திற்துள்ளாக 27 உடனடி விசாரணைகள் நடத்தியுள்ளது. கடுமையானப் புகார்கள் பலவற்றில் தொடர்புடைய ஆவணங்களை ஆழ்ந்து ஆய்வு செய்துள்ளது. அதன் பயனாக அலுவலர்/பணியாளர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

1.16. வேலை வாய்ப்பு அலுவலகங்களுக்கு கட்டிடங்கள் கட்டுதல்.

1989-90 நிதியாண்டில் கடலூர், தஞ்சாவூர், மதுரை, கோவை மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் செயல்படும் வேலை வாய்ப்பு அலுவலகங்களுக்கென சொந்தக் கட்டிடங்களைக் கட்டுவதற்காக அரசு ரூ. 77.24 இலட்சம் ஒப்புதல் வழங்கியுள்ளது. இப்பணி நிறைவுறும் தறுவாயில் உள்ளது. மற்ற இடங்களில் உள்ள வேலை வாய்ப்பு அலுவலகங்களுக்குக் கட்டிடங்கள் கட்டும் பணி படிப்படியாக நிறைவேற்றப்படும்.

வேலை வாய்ப்பு அலுவலகங்களுக்கு 12 அறைகள் கொண்ட இரும்பு நிலைப் பேழைகள் வழங்குவதற்கென பகுதி 2 திட்டம் 1991-92 ஆம் ஆண்டில் ரூ. 1.00 இலட்சம் ஒதுக்கப்பட உள்ளது.

புதிய திட்டங்கள் :

கீழே குறிப்பிட்டுள்ள புதிய திட்டங்கள் 1991-92 ஆம் ஆண்டில் பகுதி-II திட்டங்களாக செயல்படுத்தப்படும்.

| திட்டங்கள். (1) | 1991-92-ல் செலவு (2) (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|
| 1. கோவை மற்றும் அரியலூர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களுக்கு மாநகராட்சி/முனிசிபல்/பஞ்சாயத்திலிருந்து குடிநீர் வினியோகம் நீட்டிப்பு செய்தல் | 2.00 |
| 2. அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் கைக்கருவிகள் மாற்றி புதுப்பித்தல் .. | 6.00 |
| 3. அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் வகுப்பறை மரச்சாமான்கள் கொள்முதல் செய்தல் .. .. | 5.00 |
| 4. ஆறு தொழிற்பயிற்சி நிலையங்களில் நிர்வாக அலுவலர் பதவிகள் தோற்றுவித்தல் | 34<br>1.— |
| மொத்தம் .. | 1 |

[1991 செப்டம்பர் 16

அத்தியாயம் VI.

கைவினைஞர் பயிற்சி திட்டம் :

தொழில் நுட்ப திறனை பெருக்கவும் மேம்பட்ட வேலை
வாய்ப்புகளை உருவாக்கவும் மற்றும் கல்வி கற்ற இளைஞர்கட்கு
சுய வேலை வாய்ப்புகளை உருவாக்கவும் கைவினைஞர் பயிற்சித்
திட்டம் செயலாக்கப்பட்டு வருகின்றது.

இத்திட்டம், தமிழ்நாட்டில் 47 அரசினர் தொழிற் பயிற்சி
நிலையங்களில் 16,263 பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளிக்க
செயல்பட்டு வருகின்றது. இவற்றில் மகளிருக்கென எட்டும்.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கென சிதம்பரத்தில்
ஒன்றும், மலைவாழ் மக்கட்கென சங்கராபுரத்தில் ஒன்றும் அடங்
கும். அனைத்து அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களிலும்
39 பொறியியல் தொழிற் பிரிவுகளிலும் 26 பொறியியல் அல்லாத
தொழில் பிரிவுகளிலும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது.
பிளாஸ்டிக் தொழிலின் பெருகிவரும் வேலைவாய்ப்பினை கருத்தில்
கொண்டு கிண்டி மற்றும் கோவை அரசினர் தொழில் பயிற்சி
நிலையங்களில் பிளாஸ்டிக் பதனிடுதல் செய்பவர் தொழிற்
பிரிவு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது அனைத்து
தொழிற் பயிற்சி நிலையங்களிலும் 15,000 மாணவர்களும்,
1,263 மகளிரும் பயிற்சி பெற்று வருகின்றனர். 1991–92
ஆம் ஆண்டில் உலக வங்கி திறன் மேம்பாட்டு திட்டத்
தின் கீழ் மகளிருக்கென மேலும் ஒரு தொழிற் பயிற்சி நிலை
யம் துவங்கப்பட உள்ளது.

அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களைத் தவிர மொத்தம்
13,800 இருக்கைகளைக் கொண்ட அங்கீகரிக்கப்பட்ட 200
தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் இம்மாநிலத்தில் செயல்
படுகின்றன. இவற்றில் வருடந்தோறும் ஐம்பது விழுக்காடுகள்
அரசிற்கு ஒதுக்கீடு செய்து தற்போது நடைமுறையிலுள்ள சாதி
சுழற்சி முறையின்படி இருக்கைகள் நிரப்பப்படல் வேண்டும். இது
தவிர தமிழ்நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட 175 தனியார் தொழிற்
பள்ளிகள் உள்ளன. இவற்றில் 52 தொழிற் பள்ளிகள், பணி
யாளர் சம்பளம் மற்றும் பயிற்சி ஆகியவைகளுக்கான செலவில்
எழுபத்தைந்து விழுக்காடுகள் அரசு மானியமாக பெற்று
வருகின்றன.

ஆண்டுதோறும் ஏறத்தாழ 10,000 பயிற்சியாளர்கள் அரசினர்
தொழிற் பயிற்சி நிலையங்களிலிருந்து வெற்றிகரமாக பயிற்சி
முடித்து வெளியேறுகின்றனர். இவர்களுக்கு பயிற்சி வசதிகள்
அமைந்துள்ள தொழிற் நிறுவனங்களில், 1961 ஆம் ஆண்டு
தொழிற் பழகுநர் சட்டத்தின்கீழ் தொழிற் பழகுநர் பயிற்சி
அளிக்கப்பட்டு வருகிறது. 31-3-1991 வரையில் பயிற்சி



1991 செப்டம்பர் 16]

வசதிகள் அமைந்துள்ள 1,900 தொழிற் நிறுவனங்கள் இச்
சட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. 1963 முதல்
மார்ச் 1991 வரை ஏறத்தாழ 91,256 பயிற்சி
யாளர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். தற்போது 12,512
தொழில் பழகுநர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். இத்
திட்டத்தினை செம்மையாக செயலாக்க இம்மாநிலத்தில்
பதினொன்று தொடர் அறிவுரை மையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் புதியவர்களுக்கு
பயிற்சியும் முன்னாள் பயிற்சியாளர்களுக்கு தொழிற் பழகுநர்
பயிற்சியும் அளிப்பதைத் தவிர தொழில் நிறுவனங்களில் பணி
புரியும் தொழிலாளர்கள் கருத்தியல் அறிவு பெற தொழிற்
பயிற்சி நிலையங்களில் மாலை நேர வகுப்புகள் நடத்தப்படு
கின்றன. பெருவாரியான தொழிற்சாலைகள் ஒருமுகப்படுத்தப்
பட்டுள்ள இடங்களான அம்பத்தூர், வட சென்னை, கிண்டி,
கோவை, மதுரை, திருச்சி, மேட்டூர் அணை மற்றும் ஓசூர்
ஆகிய இடங்களிலுள்ள 8 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்
களில் தொழிலாளருக்கான மாலை நேர வகுப்புகள் நடத்தப்
படுகின்றன. இத்திட்டம் தொழிற் நிறுவனங்களிடமிருந்து நல்ல
பலனையும் ஏற்பையும் பெற்றுள்ளது. 1975 முதல் 1990
வரையில் 9,223 தொழிலாளர்கள் இத்திட்டத்தின் கீழ்
பயனடைந்துள்ளனர்.

மேலும் அம்பத்தூர், கோவை மற்றும் ஓசூர் தொழிற் பயிற்சி
நிலையங்களில் வாழ்வியல் மேம்பாட்டுப் பயிற்சி திட்டம் செயல்
பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் தொழிலாளர்களின்
திறனை மேம்படுத்த நவீன கருவிகளையும் இயந்திரங்களையும்
இயக்க பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டம் தொழில் அதிபர்
களிடமிருந்து ஒருமித்த பாராட்டினை அடைந்துள்ளது. 1979
முதல் மார்ச் 1991 வரையில் 5,872 தொழிலாளர்கள் இத்
திட்டத்தின்கீழ் பயனடைந்துள்ளனர்.

இம்மாநிலத்தில் 32 அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில்
ஊரக வளர்ச்சி திட்டம் என்னும் மற்றுமொரு திட்டம் செயல்
படுத்தப்பட்டு வருகிறது. சமூகத்தில் பயன் பெற்றிராத மற்றும்
வறுமை கோட்டிற்குகீழ் உள்ள ஊரக இளைஞர்களுக்கு சுய
வேலை வாய்ப்பு அமைத்துக் கொள்வதற்கு அவசியமான
திறமையை அவர்கள் பெறச் செய்வதே இத்திட்டத்தின் நோக்க
மாகும். இத்திட்டத்தின் கீழ் 1979 ஆம் ஆண்டு முதல்
30-6-1991 வரையில் 22,168 ஊரக இளைஞர்கள் பயிற்சி
பெற்றுள்ளனர். தற்போது மோட்டார் ரீவைண்டிங், இரட்டை
சக்கர மோட்டார் மெக்கானிசம், வானொலி மற்றும் தொலைக்
காட்சி மெக்கானிசம் போன்ற பிரபலமான தொழிற் பிரிவு
களில் 795 ஊரக இளைஞர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

[1991 செப்டம்பர் 16

**திறன் மேம்பாட்டு திட்டம் :**

தற்போதுள்ள அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களை நவீனப்படுத்தவும் மற்றும் விரிவுபடுத்துவதற்காகவும் எட்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் உலக வங்கி நிதி உதவியுடன் திறன் மேம்பாட்டு திட்டத்தை மத்திய அரசின் மூலமாக ரூ. 2,174.41 இலட்சத்தில் செயல்படுத்த அரசு முடிவு செய் துள்ளது. இச்செலவில் ஐம்பது விழுக்காடுகள் மாநில அரசு ஏற்கும். திறன மேம்பாட்டு திட்டத்தின் கீழ், அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் கடந்த 15 முதல் 20 வருடங்களாக உள்ள வழக்கொழிந்த பழைய மற்றும் உபயோகமற்ற இயந்திரங்களும் தளவாடங்களும் நவீன இயந்திரங்கள் மற்றும் தளவாடங் களால் மாற்றியமைக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. இதுவரையில் அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் உள்ள பழுதான இயந்திரங்கள் வெளியில் தனியார் தொழிலகங்களில் பழுதுபார்க்கப்பட்டன. தற்போது 6 இயந்திர பராமரிப்பு மையங்களிலும் மாநில அளவில் அம்பத்தூர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் நிறுவப்பட்டுவரும் தொழிலகத்திலும் அம் மாதிரி பழுதுகள் சரிபார்க்கப்பட உள்ளன. சமூகத்தில் மகளிர் நிலையை மேம்படுத்துதல் எனும் அரசின் முக்கிய குறிக்கோளின் அடிப்படையில் 1991—92 ஆம் ஆண்டு மகளிருக்கென மதுரையில் ஒரு அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் துவங்கப்பட உள்ளது. வேலைவாய்ப்புகளை பெருக்க, ஹோட்டல் மற்றும் உணவர்க்க தொழில் நுட்ப (Catering) தொழில் பிரிவுகளைக் கொண்ட புதிய அடிப்படை பயிற்சி மையங்களை அம்பத்தூரிலும் தொழிற் பயிற்சி நிலையத்தில் அறிவியல் ரீதியாக வகுப்பறை போதனை முறையை மேம்படுத்தும் வகையில் நவீன ஒலி, ஒளி விளக்கப் படச் சாதனங்கள் அமைத்தலும் புதிய தொழிற் பிரிவுகளை அறிமுகப்படுத்தி அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களை விரிவாக்குதலும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

திறன் மேம்பாட்டு திட்டம் செயல்படுதல் தற்போது ஆரம்ப நிலையில் உள்ளது. இதனை துரிதப்படுத்த 1991-92 ஆம் ஆண்டில் ரூ. 501.06 இலட்சங்கள் (ரூ. 71.06 இலட்சம் வருவாய் கணக்கிலும் ரூ. 430.00 இலட்சங்கள் மூலதனச் செலவு கணக்கி லும்) நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. தற்போது செயல்படும் வேறு சில மாநில திட்டங்களுக்காக ரூ. 1,220.42 இலட்சங்கள் (ரூ. 1,214.27 இலட்சம் வருவாய் கணக்கிலும் ரூ. 6.15 இலட்சம் மூலதனச் செலவு கணக்கிலும்) 1991-92 ஆம் ஆண்டில் வரவு-செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.



1991 செப்டம்பர் 16]

## அத்தியாயம் VII

### அயல்நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனம்.

அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம், தமிழ்நாடு அரசு அமைத்துள்ள ஒரு நிறுவனம் ஆகும். இது மாநில அரசுக்குச் சொந்தமான ஒரு வரையறுக்கப்பட்ட நிறுவனமாக 30-11-1978 ஆம் நாளன்று இந்தியக் கம்பெனிகள் சட்டத்தின் கீழ் அமைக்கப் பட்டது. இந்நிறுவனம் அயல் நாடுகளில் வேலை வாங்கித் தரு வேன் என்று பணம் பறிக்கும் முக்கியமாக தனியார் முகவர் களின் ஏமாற்று வேலைகளிலிருந்து பாமர மக்களைக் காப்பாற் றும் பொருட்டு தொடங்கப்பட்டது.

இந்நிறுவனத்தின் அமைக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 50 இலட்சம் ஆகும் (ஒரு பங்கு ரூ. 1,000 வீதம் 5,000 பங்குகள்). இதனுடைய பங்குத் தொகை செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 20 இலட்சம் ஆகும்.

**அலுவல்கள்**

பின் வருபவை இந்நிறுவனத்தின் முதன்மையான அலுவல்கள் ஆகும் :—

(1) இந்தியாவில் வேலைவாய்ப்பைத் தேடிக்கொண்டிருப்ப வர்களுக்கு அயல்நாடுகளில் வேலை வாய்ப்பைத் தேடித் தருதல்.

(2) அயல் நாடுகளில் உள்ள இந்தியர்களிடமிருந்து சேமிப்பில் ஒரு பகுதியைத் திரட்டி இந்தியாவில் பயனுள்ள திட் டங்களைத் தொடங்க வழி வகுத்தல்.

(3) இந்தியாவிலும், அயல் நாட்டிலும் கூட்டாக தொழில் திட்டங்கள் அமைத்தல்.

(4) இந்தியாவில் தயாரிக்கப்படும் பொருள்களை அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய ஊக்குவித்தல்.

மேலே குறிப்பிட்டுள்ளபடி இந்நிறுவனம் மேற்கொண்டு கவனிக்க வேண்டிய பல்வேறு நோக்கங்கள் இருந்தபோதிலும், இது தற்போது இந்தியாவில் பயிற்சி பெற்று தேர்ச்சி பெற்றிருப் பவர்களுக்கு அயல்நாடுகளில் வேலை தேடி தரும் நோக்கத்தை மட்டும் கவனித்து வருகிறது.

அயல் நாடுகளில் வேலை வாய்ப்பை விரும்புவோர் தெரிவு செய்யப்பட்ட துறையில் குறைந்தது இரண்டு ஆண்டுகள் அனு பவம் இருப்பின் அவர்களை இந்நிறுவனம் பதிவு செய்துகொள் கிறது.

31—3—1991 ஆம் ஆண்டு முடிவுவரை, இந்நிறுவனம் 3,856
ஆட்களுக்கு பல்வேறு நாடுகளில் வேலைவாய்ப்பைத் தேடித்
தந்துள்ளது (காண்க இணைப்பு-15). 1990-91 ஆம் ஆண்டு முடிவு
வரை அந்நியச் செலாவணியாக ரூ. 6,16,809-ஐ இந்நிறுவனம்
ஈட்டியுள்ளது.

1990-91 ஆம் ஆண்டில் பம்பாயில் நடந்த குவெய்த்திலிருந்து
வெளியேற்றப்பட்டவர்களின் செயல்முறைத் திட்டத்தில் இந்
நிறுவனம் பங்கேற்று 10,522 நபர்களை தமிழகத்தில் உள்ள
அவரவர்கள் இல்லத்தை அடைவதற்கு உதவி புரிந்துள்ளது.
குவெய்த் மீது ஈராக் படையெடுப்பின்போது ஏற்பட்ட இழப்பீட்
டினை இக் குவெய்த் அகதிகள் நஷ்ட ஈடு பெறுவதற்கும் தற்
சமயம் இந்நிறுவனம் உதவிகள் புரிந்து வருகிறது.

இந்நிறுவனம் ‘ பயண முகமை ’ என்கின்ற தகுதியில்
1—4—1989 முதல் 1991 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் முடிய
658 ஆட்களுக்கு கடவுச் சீட்டு எடுத்துக்கொடுத்து இதன்மூலம்
ஆண்டு வருமானமாக ரூ. 20,000 ஈட்டியுள்ளது. தற்சமயம்
விமானப் பயணச்சீட்டு தொழிலிலும் ஒரு நிறுவனம் ஈடுபட்டு
இருந்தால் தான், பயண முகமையாக செயல்பட முடியும் என்கிற
மத்திய அரசின் குறிப்பீடு இருப்பதால், தற்சமயம் இந்நிறுவனம்
மேற்கண்ட பணியினை செயல்படுத்த முடியவில்லை. மேற்
கண்ட விதியை தளர்வு செய்ய மத்திய அரசை கோரி இருக்கிறது.





## அத்தியாயம் VIII

**கோரிக்கை எண். 61. பல்வகை மூலதனச் செலவு : (4,250 மூலதனச் செலவு மற்றும் ஏனைய சமூக நலப் பணிகள்—203 வேலைவாய்ப்பு).**

1991-92 ஆம் ஆண்டு திட்ட மதிப்பீட்டில் கீழ்க் குறிப்பிட்டுள்ள திட்டங்களை அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் செயல்படுத்த “ 4250 மூலதனச் செலவு—ஏனைய சமூக நலப் பணிகள்—203 வேலை வாய்ப்பு ” தலைப்பில் மாநில திட்டங்களுக்காக ரூ. 6.15 லட்சங்களும், மத்திய அரசு உதவியுடன் செயல்படும், திறன் மேம்பாட்டு திட்டத்தில் நிலைய கட்டிடங்கள் கட்டுவதற்காகவும், இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் கொள்முதல் செய்வதற்காகவும் ரூ. 430.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**1. தொழில்களை பல்திறப்படுத்துதல் :**

“ தொழில்களை பல்திறப்படுத்துதல் ” துணைத் தலைப்பின் கீழ் அம்பத்தூர், கிண்டி, புதுக்கோட்டை ஆகிய அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் கம்பியில்லாத் தந்தி இயக்குபவர் தொழிற் பிரிவிற்கு தேவையான தளவாடங்கள் கொள்முதல் செய்வதற்காக 1991-92 ஆம் ஆண்டு திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 65,000 பெரும் பணிகளுக்கென அடையாளத் தொகையாக ரூபாய் 1,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2. தொழிற் பயிற்சி நிலையங்களில் இல்லாத தளவாடங்களை கொள்முதல் செய்தல் :**

அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் தர நிர்ணயித்தின் படி முன்னர் வழங்கப்படாத தளவாடங்களை கொள்முதல் செய்வதற்காக ரூ. 21.00 இலட்சங்கள் 1986-87-ல் அனுமதி அளிக்கப்பட்டது. இத்தொகை படிப்படியாக செலவிடப்பட்டு வருகிறது. 1991-92 ஆம் ஆண்டில் மீதமுள்ள தளவாடங்கள் கொள்முதல் செய்வதற்காக ரூபாய் 4,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3. அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களின் வளர்ச்சி :**

1989—90-ல் கிண்டியிலுள்ள மகளிர் தொழிற் பயிற்சி நிலையத்திற்கு நிரந்தரக் கட்டிடம் கட்ட ரூ. 42.00 இலட்சங்கள் அனுமதி வழங்கப்பட்டது. இதற்காக 1991—92 ஆம் ஆண்டில் ரூ. 5.02 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் திருப்பூர், திண்டுக்கல் (மகளிர்) ராமநாதபுரம் மற்றும் தர்மபுரியில்

டி2 53-298—51

உள்ள அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் தளவாடங்கள் கொள்முதல் செய்வதற்காக ரூபாய் 20,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4. அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களை நவீனப் படுத்துதல் :

வாழ்வியல் மேம்பாட்டு பயிற்சி திட்டத்தின் கீழ் அம்பத்தூர் கோவை, ஓசூர் மற்றும் வேலூர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் தளவாடங்கள் கொள்முதல் செய்ய ரூபாய் 22,000 பெரும் பணிகளுக்கென அடையாள தொகையாக ரூபாய் 1,000, 1991–92 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கப்பட் டுள்ளது.

5. திறன் மேம்பாட்டு திட்டம் :

1991–92 ஆம் ஆண்டில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள திட்டங் களை செயல்படுத்த ரூ. 430.00 இலட்சங்கள் மூலதனச் செலவாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இச்செலவினம், மத்திய மற்றும் மாநில அரசுகளால் சரி பாதியாக ஏற்கப்படும்.

| திட்டங்களின் பெயர். | 1991-92-ல் திட்ட மதிப்பீடு. |
|---|---|
| (1) | (2) |
| | (ரூபாய் இலட்சங்களில்) |
| 1. தொழிற்பயிற்சி நிலையங்களில், பழைய இயந்திரங்களை மாற்றவும், ஏற்கனவே வழங்கப்படாத இயந்திரங்களை வழங்குதல் மூலம் நவீனப்படுத்துதல். | 220.00 |
| 2. மகளிருக்கென புதிய அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள் தோற்றுவித்தல். | 50.00 |
| 3. இயந்திர பராமரிப்பு மையங்களையும், மாநில அளவில் ஒரு தொழிலகமும் நிறுவுதல். | 25.00 |
| 4. சில தொழிற் பயிற்சி நிலையங்களில், இரண்டு புதிய தொழிற் பிரிவுகளை அறிமுகப்படுத்தி தொழிற் பயிற்சி நிலையங்களை விரிவுபடுத்துதல். | 50.00 |





| (1) | (2) |
|---|---|
| | (ரூபாய் இலட்சங்களில்) |
| 5. வாழ்வியல் மேம்பாட்டுத் திட்டத்தினை விரிவுபடுத்துதல். | 25.00 |
| 6. அறிவியல் ரீதியாக வகுப்பறை போதனா முறையை மேம்படுத்தும் வகையில் விளக்கப்பட சாதனங்கள் அமைத்தல். | 20.00 |
| 7. அடிப்படை பயிற்சி மையங்கள் மற்றும் தொடர் அறிவுரை மையங்களை. ஏற்படுத்துதல் | 40.00 |
| மொத்தம்] | 430.00 |

## இணைப்பு 1.

### தொழிற் தகராறுகள்.

| | விவரம். | 1989 [(1989 சனவரி முதல் நாளிலிருந்து 1989 டிசம்பர் 31-ம் நாள் வரை). | 1990 (1990 சனவரி முதல் நாளிலிருந்து 1990 டிசம்பர் 31-ம் நாள் வரை). |
|---|---|---|---|
| | (1) | (2) | (3) |
| (அ) | ஆண்டுத் தொடக்கத்தில் முடிவுறாமல் இருந்த புகார்கள் மற்றும் தகராறுகளின் எண்ணிக்கை | 1,484 | 1,897 |
| (ஆ) | இந்த ஆண்டில் வரப் பெற்ற புகார்கள் எழுந்த தொழிற் தகராறுகளின் எண்ணிக்கை | 9,626 | 11,098 |
| (இ) | முந்தைய ஆண்டுகளில் முடிவுறாதிருந்த புகார்கள், தகராறுகள் உட்பட புலன் விசாரணை செய்யப்பட்ட புகார்கள் தகராறுகளின் எண்ணிக்கை | 9,213 | 10,812 |
| (ஈ) | சமரச அலுவலர்களின் உதவியுடன் தீர்வு காணப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை | 5,177 | 6,192 |
| (உ) | தொழிலாளர்கள் நீதிமன்றங்கள் மற்றும் தொழில் நடுவர் நீதிமன்ற தீர்ப்பிற்கு விடப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை | 1,623 | 1,289 |
| (ஊ) | நடுவர் நீதிமன்றத் தீர்ப்பிற்கு விடப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை | 2 | 2 |
| (எ) | ஆண்டு இறுதியில் முடிவுறாமல் இருந்த தகராறுகளின் எண்ணிக்கை | 1,897 | 2,183 |



## இணைப்பு 2. (i)

1990 ஆம் ஆண்டில் நடந்த வேலை நிறுத்தங்களும், கதவடைப்புகளும் :

| விவரம். | 1—1—1989 முதல் 31—12—1989 வரை. | 1—1—1990 முதல் 31—12—1990 வரை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. கதவடைப்புகள் உட்பட வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை | 186 | 265 |
| 2. இழந்த உழைப்பு நாட்கள் | 23,16,925 | 25,65,078 |

## இணைப்பு 2 (ii)

1990 ஆம் ஆண்டில் நடந்த வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் ஆகியவை குறித்துத் தீர்வு காணப்பட்ட வழிமுறைகள் :

| | |
|---|---|
| 1. நேரடிப் பேச்சு வார்த்தை மூலமாக தீர்வு காணப்பட்டவை | 89 |
| 2. தாங்களாகவே முன் வந்து வேலை தொடங்கியவை | 11 |
| தொழிலாளர் நலத் துறை அலுவலர்களாலும், அரசாலும் தீர்த்து வைக்கப்பட்டவை | 147 |
| 4. மூடப்பட்டவை | 1 |
| 5. தீர்வு வழங்கப்பட்டவை | |
| 6. ஆண்டு இறுதியில் பேச்சு வார்த்தையில் இருந்தவை | 17 |

## இணைப்பு 2(iii)

**1. தொழில் வாரியாக ஏற்பட்ட வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் குறித்த விவரங்கள் :**

| தொடர் எண்ணும் தொழிலும். | வேலை நிறுத்தங்கள் கதவடைப்புகள் எண்ணிக்கை. | | ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை. | | இழந்த உழைப்பு நாட்கள். | |
|---|---|---|---|---|---|---|
| | 1989 | 1990 | 1989 | 1990 | 1989 | 1990 |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. துணி நெசவு | 90 | 159 | 25,039 | 96,265 | 8,48,478 | 12,02,773 |
| 2. பொறியியல் | 37 | 31 | 11,392 | 14,275 | 6,28,803 | 5,29,635 |
| 3. தோல் பதனிடும் தொழிற்சாலைகள் | ... | ... | .. | .. | — | ... |
| 4. புகையிலை பீடித் தொழில் | ... | 1 | .. | 2,000 | ... | 22,000 |
| 5. மலைத் தோட்டங்கள் | 4 | — | 1,179 | — | 3,826 | — |
| 6. ஏனையவை | 55 | 74 | 38,243 | 23,008 | 8,35,818 | 8,10,670 |
| மொத்தம் ... | 186 | 265 | 75,853 | 1,35,548 | 23,16,925 | 25,65,078 |



## இணைப்பு 3.

| தீர்ப்புகள் வழங்குதல். | | தீர்ப்புக்கு அனுப்பப் பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | | தீர்ப்புகள் வழங்கப் பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | |
|---|---|---|---|---|---|
| | | 1989 | 1990 | 1989 | 1990 |
| (1) | | (2) | (3) | (4) | (5) |
| (அ) | சென்னை, தொழில் நடுவர் மன்றம் | 137 | 112 | 118 | 60 |
| (ஆ) | தொழிலாளர் நீதிமன்றங்கள் | 2,637 | 2,531 | 1,175 | 1,256 |
| (இ) | நடுவர் தீர்ப்புக்கு அனுப்பப்பட்டவை | .. | ... | .. | — |
| (ஈ) | தொழிலாளர் நீதிமன்றங்கள் முன்பு 33-சி (2) ஆம் பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப் பங்களில் முடிவு செய்யப்பட்டவை, | 3,018 | 2,096 | 3,142 | 2,750 |

இணைப்பு 3—தொடர்ச்சி.

உ. தொழில் தகராறு சட்டத்தின் பிரிவு 25 (எம்)-ன் கீழ் (லே-ஆப்) பெறப்பட்ட விண்ணப்பங்கள்.

| விவரம். | சென்னை தொழிலாளர் இணை ஆணையர். | | மதுரை தொழிலாளர் இணை ஆணையர். | | கோவை தொழிலாளர் இணை ஆணையர். | |
|---|---|---|---|---|---|---|
| | 1989 | 1990 | 1989 | 1990 | 1989 | 1990 |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. முந்தைய ஆண்டின் நிலுவை. | .. | 1 | 1 | .. | .. | .. |
| 2. இந்த ஆண்டில் வரப்பெற்றவை. | 7 | 2 | .. | 1 | .. | 1 |
| 3. மொத்தம் .. | 7 | 3 | 1 | 1 | .. | 1 |
| 4. முடிவுற்றவை .. | 6 | 1 | 1 | 1 | .. | 1 |
| 5. ஆண்டு இறுதியில் நிலுவை. | 1 | 2 | .. | .. | .. | .. |

ஊ. தொழில்தகராறு சட்டத்தின்பிரிவு 25 (என்.)(ஆட்குறைப்பு) கீழ் பெறப்பட்ட விண்ணப்பங்கள்:



| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 1. முந்தைய ஆண்டின் நிலுவை. | .. | .. | .. | .. | .. | .. |
| 2. இந்த ஆண்டில் வரப்பெற்றவை. | 1 | 2 | .. | 2 | .. | 1 |
| 3. மொத்தம் .. | 1 | 2 | .. | 2 | .. | 1 |
| 4. முடிவுற்றவை .. | 1 | 2 | .. | 2 | .. | 1 |
| 5. ஆண்டு இறுதியில் நிலுவை. | .. | .. | .. | .. | .. | .. |

எ. தொழில் தகராறு சட்டத்தின் பிரிவு 25 (ஓ)-ன்கீழ் நிறுவனம் மூட அனுமதி சம்மந்தமானவை

| விபரம். | தொழிலாளர் துறை ஆணையர், சென்னை. | |
|---|---|---|
| | 1989 | 1990 |
| (1) | (2) | (3) |
| 1. பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 1 | 4 |
| 2. முடிவு பெற்றவை .. | 1 | 4 |

இணைப்பு 3—தொடர்ச்சி.

ஏ. தொழில் தகராறுகள் சட்டத்தின் 33-சி (1) ஆம் பிரிவின்கீழ் பாக்கித் தொகைகளை வசூலிப்பதற்காக அரசு ஆணை பிறப்பித்த விவரங்கள் :—

| ஆண்டு. | இனங்களின் எண்ணிக்கை. | தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | (ரூபாய்.) |
| 1989 .. .. .. .. .. .. .. | 44 | 5,79.942.00 |
| 1990 .. .. .. .. .. .. .. | 82 | 11,67,389.62 |



இணைப்பு 4.

1660 ஆம் ஆண்டில் பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின்கீழ் தொடரப்பட்ட வழக்குகள் முடிக்கப்பட்ட வழக்குகள், குறித்த விவரங்கள்.

| சட்டத்தின் பெயர். | ஆண்டு தொடக்கத்தில் முடிவு பெறாமல் இருந்தவை. | இந்த ஆண்டில் அனுமதிக்கப் பட்டவை. | முடிக்கப் பட்டவை. | தண்டனை அளிக்கப் பட்டவை. | விடுதலை பெறப் பட்டவை. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1936 ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்குதல் சட்டம் .. | 923 | 1,043 | 950 | 946 | 1 |
| 1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம் .. | 15,370 | 28,376 | 26,931 | 26,834 | 9 |
| 1948 ஆம் ஆண்டு குறைந்த பட்ச சம்பளச் சட்டம் .. | 1,463 | 2,321 | 2,408 | 2,392 | 1 |
| 1951 ஆம் ஆண்டு தோட்டத் தொழிலாளர் சட்டம் .. | 37 | 29 | 28 | 26 | 1 |
| 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவகங்கள் சட்டம் .. | 2,059 | 2,960 | 2,821 | 2,801 | 1 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை விடுமுறை நாட்கள்) சட்டம் .. .. | 3,463 | 5,289 | 5,263 | 5,241 | 1 |
| 1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர் சட்டம் .. | 416 | 360 | 505 | 496 | 3 |
| 1961 ஆம் ஆண்டு மகப்பேறு பயன் சட்டம் .. | 86 | 63 | 93 | 90 | .. |
| 1966 ஆம் ஆண்டு பீடி, சுருட்டு தொழிலாளர் (பணி நிலைமை) சட்டம் .. | 90 | 332 | 215 | 215 | .. |
| 1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதலும் நீக்குதலும) சட்டம் .. | 2 | 1 | .. | .. | .. |
| 1976 ஆம் ஆண்டு சம ஊதியச் சட்டம் .. | 8 | 42 | 44 | 39 | .. |
| 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு வாழ்க்கைப்படி வழங்குப் சட்டம் .. | 2 | 1 | 2 | 2 | .. |



இணைப்பு 4—தொடர்ச்சி.

| சட்டத்தின் பெயர். | தண்டிக்கப் பட்டவை. | திரும்பப் பெறப் பட்டவை. | தள்ளுபடி செய்யப் பட்டவை. | முடிவு பெறாமல் உள்ளவை. | பெறப் பட்ட அபராதத் தொகை. |
|---|---|---|---|---|---|
| (1) | (7) | (8) | (9) | (10) | (11) |
| | | | | | ரூபாய். |
| 1936 ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்குதல் சட்டம் .. | 3 | .. | .. | 1,016 | 1,11,045 |
| 1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம் .. | 52 | 36 | .. | 16,815 | 12,03,992 |
| 1948 ஆம் ஆண்டு குறைந்த பட்ச சம்பளச் சட்டம் .. | 6 | 9 | — | 1,376 | 3,12,017 |
| 1951 ஆம் ஆண்டு தோட்டத் தொழிலாளர் சட்டம் .. | — | 1 | — | 38 | 5,125 |
| 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவகங்கள் சட்டம் ... | 8 | 11 | — | 2,198 | 2,52,085 |
| 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை விடுமுறை நாட்கள்) சட்டம் ... ... | 14 | 7 | — | 3,489 | 1,95,175 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| 1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர் சட்டம் .. .. | 6 | .. | .. | 271 | 1,13,795 |
| 1961 ஆம் ஆண்டு மகப்பேறு பயன் சட்டம் .. .. | 1 | 2 | .. | 56 | 14,145 |
| 1966 ஆம் ஆண்டு பீடி, சுருட்டு தொழிலாளர் (பணி நிலைமை) சட்டம் .. .. | .. | .. | .. | 207 | 40,370 |
| 1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதலும் நீக்குதலும்) சட்டம் | .. | .. | .. | 3 | .. |
| 1976 ஆம் ஆண்டு சம ஊதியச் சட்டம் .. .. | .. | 5 | .. | 6 | 3,420 |
| 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு வாழ்க்கைப்படி வழங்கும் சட்டம் .. .. | .. | .. | .. | 1 | 100 |



## இணைப்பு 5.

தொழிலாளர் நலத் துறையினால் மேற்கொள்ளப்பட்ட தொழிலாளர் நலச் சட்டத்தின்கீழ் வரும் நிறுவனங்கள், தொழிலாளர்கள், வசூலிக்கப்பட்ட உரிமத் தொகை ஆகியவை பற்றிய விவரம்.

| ஆண்டு | நிறுவனங்களின் எண்ணிக்கை. | அமர்த்திக் கொள்ளப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை. | வசூலிக்கப்பட்ட உரிம பதிவுத் தொகை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | | ரூபாய். |
| (அ) அமைப்பு ரீதியான தொழில்கள்: | | | |
| 1. 1951 ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர் சட்டம் :— | | | |
| 1989 .. .. .. .. .. | 559 | 89,000 | 81,260.00 |
| 1990 .. .. .. .. | 548 | 93,364 | 1,65,270.00 |
| 2. 1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர் சட்டம். | | | |
| 1989 .. .. .. .. | 1,659 | 87,816 | 1,06,610.10 |
| 1990 .. .. .. .. | 1,688 | 92,456 | 1,28,240.20 |

இணைப்பு 5—தொடர்ச்சி

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| (ஆ) அமைப்பு ரீதியில்லாத தொழில்கள்: | | | |
| 1. 1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம்: | | | |
| 1989 .. .. .. .. .. | 3,23,364 | 3,08,035 | .. |
| 1990 .. .. .. .. .. | 3,13,608 | 3,06,085 | .. |
| 2. 1958 ஆம் ஆண்டு உணவு நிறுவனங்கள் சட்டம்: | | | |
| 1989 .. .. .. .. .. | 28,424 | 78,895 | 4,14,851.30 |
| 1990 .. .. .. .. .. | 27,862 | 82,586 | 4,16,013.75 |
| 3. 1966 ஆம் ஆண்டு பீடி, சுருட்டு தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டம்: | | | |
| 1989 | 1,394 | 11,366+ வீட்டிலிருந்து பணிபுரிவோர் 2½ லட்சம். | 47,279.50 |
| 1990 .. | 1,415 | 10,552+ வீட்டிலிருந்து பணிபுரிவோர் 2½ லட்சம். | 55,583.00 |
| (இ) ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், 1970. | ஒப்பந்தக்காரர்கள். 131 | 9,824 | 6,947.00 |
| | முதன்மை வேலையளிப்பவர்கள். 341 | .. | 5,383.00 |

## இணைப்பு 6.

பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் தொழிலாளர் நலத்துறை ஆய்வாளர்கள் ஆய்வு மேற்கொண்ட விவரம்.

| சட்டத்தின் பெயர். (1) | முறையான ஆய்வு. (2) | விடுமுறை ஆய்வு. (3) | சிறப்பு ஆய்வு. (4) | திடீர் ஆய்வு. (5) | இரவுநேர ஆய்வு. (6) | சோதனை ஆய்வு. (7) |
|---|---|---|---|---|---|---|
| 1936 ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்குதல் சட்டம் | 42,866 | 230 | 138 | 131 | — | — |
| 1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம் | 4,46,978 | 36,994 | 10,113 | 21,002 | 9,463 | — |
| 1948 ஆம் ஆண்டு குறைந்த பட்ச சம்பளச்சட்டம் | 1,60,046 | 81 | 158 | 301 | — | — |
| 1951 ஆம் ஆண்டு தோட்டத் தொழிலாளர் சட்டம் | 714 | 146 | 71 | 45 | — | — |
| 1955 ஆம் ஆண்டு உழைக்கும் பத்திரிக்கை தொழிலாளர்கள் (பணி நிலைமைகள் பல்வகை விதித் துறைகள்) சட்டம் | 28 | .. | .. | .. | .. | .. |
| 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டம் | 50,206 | 737 | 494 | 520 | 57 | — |
| 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை விடுமுறை நாட்கள்) சட்டம். | 1,84,314 | 1,768 | 1,738 | 910 | 77 | — |
| 1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர் சட்டம். | 5,395 | 106 | 532 | 172 | .. | 288 |
| 1961 ஆம் ஆண்டு மகப்பேறு பயன் சட்டம். | 7,430 | 74 | 17 | 24 | .. | .. |
| 1966 ஆம் ஆண்டு பீடி, சுருட்டு தொழிலாளர் (பணி நிலைமை) சட்டம். | 2,722 | 33 | 70 | 31 | .. | 1 |
| 1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதலும், நீக்குதலும்) சட்டம். | 85 | .. | .. | .. | .. | — |
| 1976 ஆம் ஆண்டு சமஊதியச் சட்டம். | 10,041 | .. | .. | .. | — | — |

## இணைப்பு 7.

(அ) பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் துறை அலுவலர்களால் முடிவு செய்யப் பட்ட வழக்குகள்.

| வரிசை எண்ணும் தொடர் எண்ணும் விவரங்களும். | 1958-ம் ஆண்டு தமிழ் நாடு உணவகங்கள் சட்டத்தின் கீழ் தொழிலாளர் அலுவலர் உதவி தொழிலாளர் ஆணையர்களால் (சமரசம்) முடிவு செய்யப்பட்டவை. | | 1972-ம் ஆண்டு பணிக் கொடை பட்டுவாடா சட்டத்தின் கீழ் உதவி தொழிலாளர் ஆணையர்களால் முடிவு செய்யப் பட்டவை. | | 1981-ம் ஆண்டு தமிழ் நாடு வாழ்க்கைப்படி வழங்கும் சட்டத்தின் கீழ் உதவி தொழிலாளர் ஆணையர்களால் முடிவு செய்யப் பட்டவை. | |
|---|---|---|---|---|---|---|
| | 1989 | 1990 | 1989 | 1990 | 1989 | 1990 |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. தொடக்கத்தில் முடிவுறாமல் இருந்த வழக்குகள் — | 9 | 14 | 596 | 582 | 203 | 241 |
| 2. இவ்வாண்டில் வரப்பெற்ற வழக்குகளின் எண்ணிக்கை — | 61 | 31 | 1,129 | 870 | 611 | 418 |
| வழக்குகளின் மொத்த எண்ணிக்கை — | 70 | 45 | 1,725 | 1,452 | 814 | 659 |
| 4. நடப்பாண்டில் முடிவு செய்யப் பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 56 | 38 | 1,143 | 827 | 573 | 485 |
| 5. ஆண்டு முடிவில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை | 14 | 7 | 582 | 625 | 241 | 174 |

இணைப்பு 7—(தொடர்ச்சி).

ஆ) தொழிலாளர் துணை ஆணையாளர்களால் முடிவு செய்யப்பட்ட வழக்குகள்.

| விவரங்கள் | 1923ஆம் ஆண்டு தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டம். 1989 | 1990 | 1936ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டம். 1989 | 1990 | 1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம். 1989 | 1990 |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| ஆண்டு தொடக்கத்தில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை | 421 | 580 | 883 | 358 | 42 | 46 |
| இவ்வாண்டில் வரப்பெற்ற வழக்குகளின் எண்ணிக்கை | 1,604 | 1,767 | 1,268 | 972 | 133 | 92 |
| வழக்குகளின் மொத்த எண்ணிக்கை | 2,025 | 2,347 | 2,151 | 1,330 | 175 | 138 |
| இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 1,445 | 1,669 | 1,793 | 1,049 | 129 | 98 |
| ஆண்டு முடிவில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை | 580 | 678 | 358 | 281 | 46 | — |



| விவரங்கள். | 1948 ஆம் ஆண்டு குறைந்தபட்ச சம்பளச் சட்டம். 1989 | 1990 | 1972 ஆம் ஆண்டு பணிக்கொடைச் சட்டம். 1989 | 1990 | 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு வாழ்க்கைப்படி வழங்கும் சட்டம். 1989 | 1980 |
|---|---|---|---|---|---|---|
| (1) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| 1. ஆண்டு தொடக்கத்தில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை | 126 | 7 | 24 | 53 | 12 | 15 |
| 2. இவ்வாண்டில் வரப்பெற்ற வழக்குகளின் எண்ணிக்கை | 69 | 39 | 244 | 108 | 54 | 84 |
| 3. வழக்குகளின் மொத்த எண்ணிக்கை | 195 | 46 | 268 | 161 | 66 | 99 |
| 4. இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 188 | 38 | 215 | 140 | 51 | 83 |
| 5. ஆண்டு முடிவில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை | 7 | 8 | 53 | 21 | 15 | 16 |

## இணைப்பு 7—(தொடர்ச்சி.)

(இ) 1976 ஆம் ஆண்டு எடை அளவு சட்டத்தின் அமுலாக்கம்.

1. உரிமம் அளித்தல் (1990)—

| உற்பத்தியாளர். | விற்பனையாளர். | பழுதுபார்ப்போர். | வசூலிக்கப்பட்ட தொகை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) ரூபாய். |
| 207 | 725 | 417 | 1,35,395-00 |

2. அமுலாக்கம்—

| | |
|---|---|
| தொடுக்கப்பட்ட வழக்கு | 810 |
| தண்டனை அளிக்கப்பட்டவை | 2,078 (முந்தைய நிலுவையில் இருந்தவைகள் உட்பட) |
| வசூலிக்கப்பட்ட அபராதத் தொகை | ரூ. 2,18,330 |

3. குற்றத்தை ஈடு செய்தல்—

| | |
|---|---|
| ஈடு செய்யப்பட்ட வழக்குகள் எண்ணிக்கை. | 17,344 |
| வசூலிக்கப்பட்ட அபராதத் தொகை. | ரூ. 17,40,365 |
| எடை அளவுகளைச் சரி பார்த்தல் மற்றும் மீளச் சரி பார்த்தலுக்காக வசூலிக்கப் பட்ட முத்திரைக் கட்டணம் | ரூ. 1,55,97,000 |



## இணைப்பு 8.

1990-ல் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் செயல்படுத்திய நலத் திட்டங்களின் விவரங்கள் :

| விவரம். | 1939—90 | 1990—91 |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. தொழிலாளர் நல மையங்கள் (தையல் பயிற்சி நிலையம் உட்பட) : | | |
| (அ) மொத்த மையங்கள் | 62 | 62 |
| (ஆ) மொத்த பயிற்சியாளர்கள் | 2.198 | 2,338 |
| 2. குழந்தைகள் காப்பகங்கள் : | | |
| (அ) மொத்த காப்பகங்கள் | 52 | 52 |
| (ஆ) பயனுற்ற குழந்தைகள் | 2,117 | 1,989 |
| 3. குழந்தைகள் காப்பகம்—மகளிர் மன்றம் மூலமாக நடத்தப்படுவது. | 1 | .. |
| 4. படிப்பகங்கள் : | | |
| மொத்த படிப்பகங்கள் | 10 | 10 |

## இணைப்பு 9.

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் செயல்படுத்திய ஏனைய திட்டங்கள்.

| விவரம். | பயன் பெற்றவர்கள் எண்ணிக்கை. | | ஒப்புதல் அளித்த தொகை. | |
|---|---|---|---|---|
| | 1989-90. | 1990-91. | 1989-90. | 1990-91. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | ரூ. பை. | ரூ. பை. |
| 1. தொழிலாளர்களுக்கு மூக்குக் கண்ணாடிக்கான செலவுத் தொகையைக் கொடுத்தல். | 3,520 | 3,774 | 2,11,200.00 | 2,49,000.00 |
| 2. தொழிலாளர் குழந்தைகளுக்கு தட்டச்சு/சுருக்கெழுத்துப் படிக்க கட்டணங்கள் ஈடு செய்தல். | 924 | 901 | 1,02,482.00 | 69,809.00 |
| பாட நூல் உதவித் தொகை .. | 7,630 | 5,560 | 3,92,977.50 | 2,33,819.50 |
| ஈமச் சடங்கிற்குரிய செலவுகள் .. | 724 | 694 | 2,17,200.00 | 2,07,600.00 |
| உடல் ஊனமுற்றவர்களுக்குச் செயற்கை உறுப்பு வழங்குதல். | 11 | 2 | 7,588.00 | 475.00 |
| காது கேட்கும் கருவி வழங்குதல் .. | 8 | 38 | 7,060.00 | 17,610.00 |
| ஊனமுற்றவர்களுக்கு மூன்று சக்கர வண்டி வழங்குதல். | 2 | 6 | 2,510.00 | 10,960.00 |



## இணைப்பு 10.

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் வழங்கிய உதவித் தொகை.

| விவரம். | பயன் பெற்றவர்கள் எண்ணிக்கை. | | ஒப்புதல் அளித்த தொகை. | |
|---|---|---|---|---|
| | 1989-90 | 1990-91 | 1989-90. | 1990-91. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | ரூ. | ரூ. |
| 1. பொறியியல் பட்டப்படிப்பு .. | 136 | 145 | 1,36,000 | 1,74,000 |
| 2. பொறியியல் பட்டயப் படிப்பு .. | 284 | 233 | 1,70,400 | 1,67,340 |
| 3. மருத்துவப் பட்டப் படிப்பு .. | 82 | 70 | 82,000 | 83,400 |
| 4. மருத்துவப் பட்டயப் படிப்பு .. | 23 | 9 | 13,800 | 6,440 |
| 5. சட்டப பட்டப் படிப்பு .. | 19 | 15 | 19,000 | 17,400 |
| 6. வேளாண்மை பட்டப் படிப்பு .. | 14 | 7 | 14,000 | 7,600 |
| 7. தொழிற் பயிற்சி கல்வி .. | 148 | 115 | 44,400 | 41,170 |
| 8 மேல்நிலைக் கல்வி .. | 99 | 77 | 49,500 | 45,950 |

## இணைப்பு 11.

தொழிற்சாலைகள், தொழிலாளர்கள், வசூலிக்கப்பட்ட உரிமத் தொகை ஆகியவை பற்றிய விவரம்.

| சட்டத்தின் பெயர். | ஆண்டு. | தொழிற் சாலைகள் எண்ணிக்கை. | அமர்த்திக் கொடுக்கப்பட்ட தொழிலாளர்கள் எண்ணிக்கை. (உத்தேசமாக.) | வசூலிக்கப்பட்ட உரிமத் தொகை (ரூபாய்). |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1948 ஆம் ஆண்டு தொழிற் சாலைகள் சட்டம். | 1989 | 15,625 | 8,40,086 | 1,19,28,311.00 |
| | 1990 | 16,710 | 8,67,726 | 1,31,21,805.00 |



## இணைப்பு 12.

1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட ஆய்வுகள் விபரம்.

| சட்டத்தின் பெயர். | வழக்கமான ஆய்வுகள். | திருமுறை ஆய்வுகள். | தனி ஆய்வுகள். | இரவு ஆய்வுகள். | இரவு ஆய்வுகள். | பதிவு பெறாத தொழிற் சாலைகள் ஆய்வுகள். | தணிக்கை ஆய்வுகள். |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1948 ஆம் ஆண்டு தொழிற் சாலைகள் சட்டம். | 28,841 | 1,130 | 3,431 | 468 | 859 | 3,669 | 2,994 |

இணைப்பு—13.

ஏனைய சட்டங்களின் கீழ் ஆய்வு செய்யப்பட்ட விபரங்கள்.

| வரிசை எண். | சட்டத்தின் பெயர். | தொழிற் சாலைகளின் எண்ணிக்கை. | தொழிலாளர் களின் எண்ணிக்கை. | ஆய்வு செய்த மொத்த எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | 1936-ம் ஆண்டு ஊதியம் வழங்கும் சட்டம். | 16,710 | 8,64,029 | 25,650 |
| 2. | 1958-ம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறை சட்டம்). | 16,626 | 8,64,029 | 25,092 |
| 3. | 1948-ம் ஆண்டு குறைந்தபட்ச ஊதியச் சட்டம். | 9,490 | 4,22,688 | 14,694 |
| 4. | 1961-ம் ஆண்டு மகப்பேறு பயன் சட்டம். | 6,010 | 1,58,045 | 9,027 |
| 5. | 1970-ம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர்கள் (முறைப்படுத்துதல்/நீக்குதல்) சட்டம். | 661 | 44,173 | 1,0[illegible]2 |
| 6. | 1981-ம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர் நிரந்தரப் படுத்துதல்) சட்டம். | 9,938 | 4,82,634 | 12,999 |
| 7. | 1976-ம் ஆண்டு சம ஊதியச் சட்டம் | 7,586 | 2,12,550 | 10,814 |
| 8. | 1972-ம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர்கள் நலநிதிச் சட்டம். | 16,710 | 8,67,726 | 27,146 |

## இணைப்பு—14.

பல்வேறு தொழிற்சாலைச் சட்டங்களின் கீழ் தொடரப்பட்ட வழக்குகள், முடிக்கப்பட்ட வழக்குகள் பற்றிய விவரங்கள்.

| | சட்டத்தின் பெயர். | ஆண்டு தொடக்கத்தில் முடிவு பெறாமல் இருந்தவை. | இந்த ஆண்டில் அனுமதிக்கப் பட்டவை. | மொத்தம். | முடிக்கப் பட்டவை. | தண்டனை அளிக்கப் பட்டவை. |
|---|---|---|---|---|---|---|
| | (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | 1948-ம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம். | 3,624 | 2,394 | 6,018 | 2,689 | 2,396 |
| 2. | 1970-ம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர்கள்(முறைப் படுத்துதல்/நீக்குதல்) சட்டம். | 78 | 74 | 152 | 68 | 58 |
| 3. | 1958-ம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசீய மற்றும் பண்டிகை விடுமுறை) சட்டம். | 275 | 72 | 347 | 113 | 109 |
| 4. | 1936-ம் ஆண்டு ஊதியங்கள் வழங்கும் சட்டம். | 276 | 107 | 383 | 136 | 130 |
| 5. | 1948-ம் ஆண்டு குறைந்த பட்ச ஊதியச் சட்டம். | 703 | 163 | 866 | 282 | 269 |
| 6. | 1961-ம் ஆண்டு மகப்பேறு பயன் சட்டம். | 19 | 13 | 32 | 15 | 14 |
| 7. | 1972-ம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நலநிதிச் சட்டம். | 4 | .. | 4 | .. | .. |
| 8. | 1981-ம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர் நிரந்தரப் படுத்துதல்) சட்டம். | 6 | 6 | 12 | 1 | .. |
| 9. | 1981-ம் ஆண்டு தமிழ்நாடு வாழ்க்கைப் படி வழங்கும் சட்டம். | 9 | .. | 9 | 3 | 3 |
| 10. | 1986-ம் ஆண்டு குழந்தை தொழிலாளர்கள்(முறைப் படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம். | 5 | 5 | 10 | 8 | .. |
| 11. | 1972-ம் ஆண்டு பணிக்கொடை வழங்கும் சட்டம். | 6 | .. | 6 | ... | .. |

## இணைப்பு—14—தொடர்ச்சி.

**பல்வேறு தொழிற்சாலைச் சட்டங்களின்கீழ் தொடரப்பட்ட வழக்குகள் முடிக்கப்பட்ட வழக்குகள் பற்றிய விவரங்கள்—தொடர்ச்சி**

| | சட்டத்தின் பெயர். | விடுதலை செய்யப் பட்டவை. | தண்டிக் கப் பட்டவை. | திரும்பப் பெறப் பட்டவை. | தள்ளி விடப் பட்டவை. | ஆண்டு இறுதி யில் முடிவு பெறாமல் உள்ளவை. | பெறப் பட்ட அபராதத் தொகை. |
|---|---|---|---|---|---|---|---|
| | (1) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) ரூ. |
| 1. | 1948-ம் ஆண்டு தொழிற் சாலைகள் சட்டம். | 62 | 23 | 204 | 4 | 3,329 | 10,60,564 |
| 2. | 1970-ம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர்கள் (முறைப் படுத்துதல்/நீக்குதல் சட்டம். | — | — | 10 | ... | 84 | 8,793 |
| 3. | 1958-ம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசீய மற்றும் பண்டிகை விடுமுறை) சட்டம். | ... | — | 4 | ... | 234 | 6,012 |
| 4. | 1936-ம் ஆண்டு ஊதியங்கள் வழங்கும் சட்டம். | 2 | — | 4 | — | 247 | 13,425 |
| 5. | 1948-ம் ஆண்டு குறைந்த பட்ச ஊதியச் சட்டம். | 1 | — | 12 | — | 584 | 33,545 |
| 6. | 1961-ம் ஆண்டு மகப்பேறு பயன் சட்டம். | 1 .. | — | — | ... | 17 | 1,35 |
| 7. | 1972-ம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நலநிதிச் சட்டம். | — | — | — | .. | 4 | — |
| 8. | 1981-ம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர் நிரந்தரப் படுத்துதல்) சட்டம். | — | — | 1 | — | 11 | ... |
| 9. | 1981-ம் ஆண்டு தமிழ்நாடு வாழ்க்கை படி வழங்கும் சட்டம். | — | — | — | — | 6 | 1,000 |
| 10. | 1986-ம் ஆண்டு குழந்தை தொழிலாளர்கள் (முறைப் படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம். | 6 | — | 2 | ... | 2 | ... |
| 11. | 1972-ம் ஆண்டு பணிக்கொடை வழங்கும் சட்டம். | — | — | — | — | 6 | .. |

## இணைப்பு 15

அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் (இது ஒரு அரசு நிறுவனமாகும்), சென்னை-34.

ஆட்கள் அனுப்பப்பட்ட விவரம் (நாடுகள் வாரியாக).

| வரிசை எண். | ஆண்டு. | போட்ஸ் வானா. | அமெரிக்கா. | ஐ.அ.கு. | லிபியா. | ஓமன். | ஈராக். | தெற்கு ஏமன். | ஜோர்டான். | சவுதி அரேபியா. | கட்டார். | குவைத். | இரான். | சிங்கப்பூர். | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) | (15) | (16) |
| 1. | 1979—80 | .. | .. | 36 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 36 |
| 2. | 1980—81 | .. | .. | .. | .. | .. | 70 | .. | .. | .. | .. | .. | .. | .. | 70 |
| 3. | 1981—82 | .. | .. | .. | 31 | .. | 286 | .. | .. | .. | .. | .. | .. | .. | 317 |
| 4. | 1982—83 | .. | .. | .. | .. | .. | 133 | 80 | .. | .. | .. | .. | .. | .. | 213 |
| 5. | 1983—84 | .. | .. | .. | .. | 32 | 150 | 172 | .. | .. | .. | .. | .. | .. | 354 |
| 6. | 1984—85 | .. | .. | .. | 72 | 27 | 90 | .. | .. | 243 | .. | .. | .. | .. | 432 |
| 7. | 1985—86 | .. | .. | 221 | 431 | .. | 8 | 110 | 35 | 700 | .. | .. | .. | .. | 1,505 |
| 8. | 1986—87 | .. | .. | 6 | .. | 1 | .. | 22 | .. | 75 | .. | .. | .. | .. | 104 |
| 9 | 1987—88 | .. | .. | 32 | 4 | 4 | 1 | .. | .. | 124 | 2 | 45 | .. | .. | 218 |
| 10. | 1988—89 | .. | .. | 1 | 41 | 2 | 30 | .. | .. | 120 | .. | 67 | 46 | 2 | 309 |
| 11. | 1989—90 | .. | 1 | 15 | 21 | 1 | 1 | .. | .. | 57 | .. | 16 | .. | 4 | 116 |
| 12. | 1990—91 | 1 | 11 | 2 | 4 | 1 | .. | 1 | .. | 143 | .. | 25 | .. | .. | 186 |
| மொத்தம். | | 1 | 12 | 313 | 604 | 68 | 769 | 385 | 35 | 1,462 | 2 | 153 | 46 | 6 | 3,856 |

பணி வாரியாக அனுப்பப்பட்டவர்கள்.—மருத்துவர்கள், செவிலியர்கள், எக்ஸ்ரே எடுப்பவர்கள், மெடிக்கல் ஆட்கள் கட்டிடக் கலை வல்லுநர்கள், மருந்தாளர்கள், தோட்ட வேலை செய்பவர்கள், டெக்னிஷியன், உதவியாளர்கள் திறமை யாளர்கள் மற்றும் இதர பணியாளர்கள்.



161492
V211,31 N91
D
N91.7.1